தமிழரசு
1-4-1990 ரூ.1

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை, அவரது இல்லத்தில், மாண்புமிகு மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பஸ்வான் அவர்கள் சந்தித்து உரையாடினார்.

இந்த இதழில் ...

இந்திய அரசின் கொள்கைத் திட்டங்கள்	... 2
தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை - 1990-91 (முழு விவரம்)	... 3
மதுரை மாவட்டத்தில் வனத்துறைப் பணிகள்	... 17
தானிய சேமிப்பு	... 19
நிறைந்த நெஞ்சம் (இலக்கிய விருந்து)	... 24
மாணவர் பக்கம்	... 31
தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை: பத்திரிகைகள் பாராட்டுகின்றன	... 41
தொழிலதிபர்களுக்கு விருது வழங்கு விழா	... 43
ஊனமுற்றோர் உலக நாள் விழா	... 46

Verified



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

பங்குனி - 18

மலர்:20 இதழ்:19

1-4-1990

இந்திய அரசின் கொள்கைத் திட்டங்கள்

...ிராமப்புற இளைஞர்களின் ...லன் பேண

★ சமுதாய வளர்ச்சியில் ...ிளைஞர்களின் பங்கு மிக முக்கியத் ...ுவம் வாய்ந்ததாகும். கிராமப்புற ...ிளைஞர்களின் தேவைகளை ...ணர்ந்து கல்வியின் தரத்தை மேம் ...டுத்திட, மத்திய அரசு முழுவேகத் ...ில் ஈடுபடும். சிவில் சர்வீஸ் தேர்வு ...ளை எழுதிட இளைஞர்களுக்கு ...துவரை இருந்துவந்த வயது வரம்பு ...6 என்பதை 28 ஆக உயர்த்திட ...ரசு முடிவு செய்துள்ளது. இந்தச் ...லுகையால், கிராமப்புற இளைஞர்கள் ...பரிதும் பயனடைவர்.

...ிவசாயக் கடன் தள்ளுபடி

★ விவசாயத்தின். வளர்ச்சிக்கு ...க்கியக் காரணமாகத் திகழ்பவர்கள். ...ிவசாயப் பெருங்குடி மக்கள், ...ிவசாயத் தொழிலாளர்கள். இந்த ...ிவசாயத் தொழிலாளர்களின் ...லன்களைப் பாதுகாப்பதில் மத்திய ...ரசு தனிக்கவனம் செலுத்தும். ...முதாயத்தில் பலவீனமானவர்களாகக் கருதப்படும் அந்த விவசாயத் தொழிலாளர்களைப் பல்வேறு கொடுமைகளிலிருந்தும், ஆதிக்கத் திலிருந்தும் விடுவித்திட அரசு பாடுபடும். சிறு விவசாயிகள், நில மற்ற விவசாயத் தொழிலாளர்கள், நெசவாளர்கள் ஆகியோருக்கு ரூ 10 ஆயிரம் வரை விவசாயக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும். இதுபற்றிய முழுத்தகவல்கள் அடங் கிய விவரங்கள் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிக்கப்படும்.

தேசிய பெண்கள் கமிஷன்

★ இந்திய சமூகத்தில், பெண்கள் பெரும்பாலோர் உரிமையிழந்தவர் களாக நடத்தப்படுகின்றனர். அவர் களுக்குச் சமத்துவம் அளிக்க வேண்டு மென அரசியல் சட்டத்தில் உத்திர வாதம் அளிக்கப்பட்டிருந்தாலும், தொடர்ந்து பெண்கள் சமுதாயம் ஒதுக்கி வைக்கப்படுகின்றது. பெண் களின் மதிப்பும், அன்றாட வாழ்க் கையில் சட்டத்தின் முன் சமம் என்பதும், நிரந்தரமாக உருவாக்கிட 'தேசியப் பெண்கள் கமிஷன்' ஒன்றை அமைத்திட - அதன் மூலம் தீர்வு காண மத்திய அரசு திட்ட மிட்டுள்ளது.

கிராமத்தொழில்கள் வளர

★ கிராமப்புறங்களில் தொழில் வளத்தைப் பெருக்கிட அரசு முழுக் கவனம் செலுத்தும். நாட்டின் பின் தங்கிய கிராமப்புறங்களில் தொழிற் சாலைகள் தொடங்கப்படும். இந்த வட்டாரங்களில் கிடைக்கும் மூலப் பொருள்களைக் கொண்டும், மனித உழைப்பைக் கொண்டும் இலாபம் தரக்கூடிய தொழில்களை நிறுவிட அரசு முன்வரும். இதன் மூலமாகப் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் படும். இதற்காகச் 'சிறுதொழில் மற்றும் அக்ரோ கிராமத்தொழில் துறை' என்கிற புதியதோர் அமைப்பை அரசு உருவாக்கும்.

மத்திய-மாநில உறவு

★ தேசிய கட்டமைப்பை வலி மைப்படுத்தும் பணியில் மத்திய-மாநில அரசுகள் ஒத்துழைப்பு, நல் லெண்ணம், நல்லிணக்க அடிப் படையில் கூட்டாகப் பாடுபட வேண்டும் என்பதற்கு நாம் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம் மத்திய - மாநில சுமுக நல்லுறவுக்கு மாநிலங்களுக்கிடையிலான கவுன்சில் அமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது. இந்தக் கவுன்சிலின் முதலாவது கூட்டம் விரைவில் நடக்கவிருக்கிறது

தேசிய பாதுகாப்பு கவுன்சில்

★ தேசிய அளவிலான பாது காப்புக் கவுன்சில் ஒன்றை நிறுவ மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. இது நமது தேசப்பாதுகாப்பு நலன் களைக் கவனித்துக் கொள்ளும்.

உயர்நிலை நீதித்துறை அமைப்பு

★ உச்ச நீதிமன்றம், உயர்நீதி மன்றம் ஆகியவற்றின் நீதிபதிகள் நியமனம், நீதிபதிகள் இடமாற்றம் ஆகிய பணிகளைக் கவனிக்க உயர் நிலை நீதித்துறை அமைப்பு ஒன்றை உருவாக்கவும் ஒரு மசோதா விரைவில் கொண்டுவரப்படவுள்ளது.

(—12.3.1990 அன்று பாராளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

மு. கருணாநிதி
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009

நாள் 15.3.90.

உலக ஊனமுற்றோர் நாள்

ஊனமுற்றோரும் சமுதாயத்தில் ஓர் அங்கம். 'பொறியின்மை பழியன்று', ஆள்வினை உடைய மாந்தர் அனைவரும் ஆற்றல் படைத்தவர்கள். அவர்களுக்கு உரிய வாய்ப்புகளை அளித்தல் நமது கடமை. முன்பு கழக ஆட்சி இருந்த பொழுது தான் 1974-ஆம் ஆண்டில் ஊனமுற்றோருக்கான தொழிற் பயிற்சிக்கூடம் முட்டுக்காட்டில் தொடங்கப்பட்டது.

எனது ஐம்பத்தியோராவது பிறந்த நாள் விழா நிகழ்ச்சி ஊனமுற்றோருக்கு உதவிடும் நாளாகக் கொண்டாடப்பட்டது. கடந்த ஆண்டில் கழக அரசு பொறுப்பு ஏற்கும் முன்பு ஊனமுற்றோருக்கு அரசு செலவிடும் தொகை ஆண்டுக்கு 'ஏறத்தாழ' 250 இலட்சம் ரூபாயாக இருந்தது. ஆனால், கடந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 420 இலட்சம் ரூபாய் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக ஒதுக்கப்பட்டது. அண்மையில் பார்வையற்ற வேலையில்லாதார்க்கு அளிக்கும் உதவித் தொகையை இரட்டிப்பாக்கியது நமது அரசு. ஊனமுற்றோருக்கு உதவுவது நம் அனைவருடைய கடமையாகும்.

"உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு" என்பது வள்ளுவர்

வாய்மொழி. உறுப்புகள் ஒத்திருந்தால் மட்டும் மக்கள் அல்லர். பண்பு உடையவராய் இருத்தல் வேண்டும். அந்தப் பண்புடையாரை ஊனமுற்றோர் என்று ஒதுக்குதல் அறிவுடைமை அல்ல. எனவே ஊனமுற்றோருக்கு உதவுதல் நல்ல உள்ளம் படைத்த அனைவரது கடமை! அதனை அனைவரும் செய்வோம் என்று ஊனமுற்றோர் உலக நாளில் உறுதி ஏற்போம்.

(மு. கருணாநிதி)



நீண்டகாலத் தேவைகளை நிறைவு செய்வோம்...

முதல்வர் கலைஞர்

1990-91-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவை முன் வைத்து 1990-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 17-ஆம் நாளன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தொல்லைகள் தீர வேண்டின்
சுதந்திரம் வேண்டும்; மக்கள்
எல்லோரும் ஒன்றே என்னும்
எண்ணமிங் கோங்க வேண்டும்.
பல்லரும் தொழில்கள் செய்தும்
பசியினால் வாடும் மக்கள்
அல்லாது தெய்வம் இல்லை
என்பதை அறிய வேண்டும்.
கல்வியில் பெருக்கம் வேண்டும்.
கலைகளில் புதுமை வேண்டும்.
சொல்லிலே உண்மை வேண்டும்.
சோர்விலா உள்ளம் வேண்டும்.
கல்லினுள் தேரை போல
உலகினை எட்டிக் காணாப்
புல்லிய நிலையை ஞானத்
தீயினாற் புகைத்தல் வேண்டும்."

எனத் தேன் தமிழ்க் கவிதையில் மனித நேய மருந்தினைக் கலந்து தந்த தென்னாட்டுக் காந்தி அறிஞர் அண்ணா அவர்கள் நீடு துயில் கொண்டுள்ள திக்கு நோக்கித் தொழுது, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஒப்புதலுக்காக, 1989-90ஆம் ஆண்டுக்குரிய திருத்த மதிப்பீடுகளையும், 1990-91ஆம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இந்தப் பேரவையின் முன் வைக்கிறேன்.

2. தமிழ்நாட்டின் இன்றைய சமுதாயப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்யவும், பல நடவடிக்கைகளையும் சட்டங்களையும் திட்டங்களையும் அயராது ஆர்வமுடன் வகுத்து, இடர்பல கடந்து புயல் நடுவே அகல் விளக்கினை அணையாது காப்பது போல, இந்த ஆட்சியின் மாட்சியைக் காத்திடுவதில் கண்ணும் கருத்துமாகக் கடமையாற்றுகிறோம்.

3. கடந்த ஓராண்டு காலத்தில் இந்தியத் திருநாட்டின் அரசியல் வரலாற்றில் மகத்தான திருப்பங்கள் உருவாகியுள்ளன. நாடாளுமன்றத் தேர்தல்—அதைத் தொடர்ந்து பல மாநிலங்களின் சட்டப் பேரவைத் தேர்தல்—அதன் விளைவாக மத்தியிலும் பெரும்பாலான மாநிலங்களிலும் பல ஆண்டுகளாக ஒரே கட்சி ஆட்சியிலிருந்த நிலை மாறிப் பல கட்சிகள் தனியாகவும் கூட்டணியாகவும் அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளன.

4. இந்தச் சூழ்நிலையில், பல்வேறு இனம், மொழி, கலை, கலாச்சாரம் கொண்ட இந்தியாவின் ஒற்றுமையைக் காப்பாற்றவும், நாடு வலிமை பெறவும், நலிவு நீங்கிய நல்வாழ்வு பொதுவில் அனைவர்க்கும் அமைந்திடவும், மாநில சுயாட்சியுடன் கூடிய முழுமையான கூட்டாட்சி முறைதான் சரியான தீர்வாக இருக்க முடியும் என்ற நமது கொள்கை, 1974ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில் இதே அரசின் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டு நிறைவேறியுள்ளதை நினைவுகூர்ந்து, அந்தக் கொள்கைக்கு இன்று நாடு முழுவதும் நல்லாதரவு பெருகியுள்ளது என்பதைப் பார்க்கும் போது இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது.

5. மத்தியில் மலர்ந்துள்ள தேசிய முன்னணி அரசும் முழுமையான கூட்டாட்சிக்குத் தனது ஆதரவை உறுதிப் படுத்துவதற்கு அடையாளமாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 263ஆம் பிரிவின் கீழ் மாநிலங்களுக்கிடையேயான குழு ஒன்றை அமைக்க முடிவெடுத்துள்ளது. அந்தக் குழு போதுமான அதிகாரங்களுடன் விரைவில் செயல்படத் தொடங்கி, அதன் மூலமும் முழுமையான கூட்டாட்சித் தத்துவம் முகிழ்த்திட வழி காணப்படும் என்று நம்புகிறோம்.

6. அண்மையில் நாடாளுமன்றத்தில் முந்தைய மத்திய அரசினால் அமைக்கப்பட்ட 9-வது நிதிக் குழுவின் அறிக்கையும் அதன்மேல் மத்திய அரசு எடுத்துள்ள முடிவுகளும் வைக்கப்பட்டுள்ளன. 9-வது நிதிக்குழுவின் பரிந்துரைகள் நமக்குப் பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளன. குறிப்பாக, மத்திய அரசின் ஆயத் தீர்வைகளில் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கு 45 சதவீத அளவிலேயே தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், இதில் தமிழ்நாடு உள்ளிட்ட எல்லா மாநிலங்களுக்கும் கிடைக்கக் கூடிய பங்கு 40 சதவீதத்திலிருந்து 37.575 சதவீதமாகக் குறைக்கப்பட்டு, எஞ்சிய 7.425 சதவீதம் பற்றாக்குறை ஏற்படும் ஒருசில மாநிலங்களுக்கே கொடுக்கப்பட இருக்கிறது. மேலும், திட்டச் செலவுகளுக்காக மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் மானியங்களின் பெரும் பகுதி, ஒருசில மாநிலங்களுக்கு பெரும் பயனை அளிக்கக் கூடிய வகையில், பல ஆண்டுகளாக திட்டக்குழு கடைப்பிடித்து வரும் காட்கில் வழிமுறைகளுக்குப் (Gadgil's formula) புறம்பாக, நிதிக் குழுவே பகிர்ந்தளிக்க முற்பட்டுள்ளது.

7. ஒன்பதாவது நிதிக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும் முன்னரே, நான இந்த அறிக்கை மத்திய மாநில நிதி உறவுகளைப் பெருமளவில் பாதிக்கும் என்றும், அந்தப் பரிந்துரைகளை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். அந்தக் கடிதத்தில் மத்திய அரசின் ஆயத்தீர்வைகளில் மொத்தமாக மாநிலங்களுக்குக் கொடுக்கப்படும் பங்கை 45 சதவீதம் என்பதிலிருந்து 50 சதவீதமாக உயர்த்தி, அதில் எல்லா மாநிலங்களுக்கும் 42.5 சதவீதமாகவும் எஞ்சிய 7.5 சதவீதத்தை பற்றாக்குறை மாநிலங்களுக்கும் கொடுக்கலாம் என்ற கருத்தை எடுத்து வைத்துள்ளேன். 9-வது நிதிக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பிறகும் இந்தப் பரிந்துரையை மீண்டும் வலியுறுத்திப் பிரதமருக்கும் மத்திய நிதியமைச்சருக்கும் கடிதம் எழுதியுள்ளேன்.

நிதி நிலைமை

8. தொடர்ந்து பலமுறை வலியுறுத்திக் கேட்டும்கூட, 1989–90ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் இருந்த ரூ. 91.36 கோடி பற்றாக் குறைப் பள்ளத்தை நிரப்புவதற்கு நடப்பு நிதி ஆண்டில் மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவி எதுவும் கிட்டவில்லை. எனினும், நாம் சோர்ந்திடாமல் எடுத்த நடவடிக்கைகள், நிதி வாயில்களை ஓரளவு பெருக்கி, புதிய நலத் திட்டங்கள் பூத்துக் குலுங்கிடவும்—அலுவலர்களின் நலன்கள் அக்கறையுடன் கவனிக்கப் படவும்—ஆண்டுக்கான திட்டச் செலவு உயர்ந்திடவுமான கூடுதல் பொறுப்பைச் சமாளிக்கத் துணை நின்றன.

9. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை ரூபாய் 133.40 கோடி செலவில் நடப்பு ஆண்டில் நிறைவேற்றியுள்ளோம். நடப்பு ஆண்டின் திட்டச் செலவு ரூ. 1377 கோடி என்பது, 1988-89ஆம் ஆண்டின் திட்டச் செலவைவிட ரூ. 81 கோடி அதிகமாகும். மாநில அரசு அலுவலர்கள் 11 லட்சம் பேருக்கு மத்திய அரசு அலுவலர்க்கு நிகரான ஊதிய விகிதங்களும் ஓய்வூதியங்களும் அளிக்கப்பட்டதில், மொத்தக் கூடுதல் செலவு ரூ. 430 கோடி ஆகும். பொது விநியோகம்—சத்துணவுத் திட்டம்—இலவச அரிசி வழங்குதல் ஆகியவற்றுக்கு மானியத் தொகையாக ரூ. 400 கோடி இழப்பினை ஏற்க வேண்டியதாயிற்று. இந்த இழப்புத் தொகையை ஓரளவாவது குறைக்கத்தான், மார்ச் 1ஆம் நாள் முதல் அரிசி விலைகளில் மாறுதல் செய்தே தீர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அண்டை மாநிலங்களுடன் ஒப்பிடும்போது இந்த விலை குறைவானதுதான்.

10. பாலையில் ஒரு பசுஞ்சோலை போல, மதுவிலக்குச் சட்டத் தொடர்பான கடந்த கால ஆயத் தீர்வைக் குறைபாடுகளைக் களைவதற்கு நாம் எடுத்த நடவடிக்கைகளினால், கூடுதலாக ரூ. 100 கோடி கிடைக்குமென நான் அறிவித்திருந்ததற்கு மாறாக, ரூ. 134 கோடி கிடைக்குமென்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. கள்ளச் சாராயத்தினால் தொடர்ந்து பல ஆண்டுகளாகத் துயர் மிகுந்த நிகழ்ச்சிகள் நமதுள்ளத்தைத் துளைப்பதாலும்—வேலியே பயிரை மேய்வது போலச் சமூக விரோதிகளுக்கு எதிர்பாராத இடங்களிலேயிருந்து கை குலுக்கல் கிடைப்பதாலும்—அந்தத் தீங்குகளைக் களைந்தெறியும் நோக்கத்துடன் இந்தியா முழுமையும் உள்ள நிலையை எண்ணிப் பார்த்து, மலிவு மதுவைப் பொதுத் துறையில் உற்பத்தி செய்திட அண்மையில் இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதனால், வரும் ஆண்டில் ரூ. 180 கோடி கூடுதல் வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

12. இத்தனை முயற்சிகளுக்குப் பிறகும்கூட, வரும் நிதி ஆண்டின் இறுதியில் நமது நிதி நிலை முழுமையான ஆறுதல் பெற முடியாததாகவே இருக்கும். இந்தச் சூழ்நிலையை மறவாமல், மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆய்வு செய்து ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டுத் திட்டம்

13. நடப்பு ஆண்டின் திட்ட ஒதுக்கீடு ரூ. 1360 கோடி என வரையறுக்கப்பட்ட போதிலும், நடைமுறையில் திட்டப் பணிகளுக்கான செலவு ரூ. 1377 கோடிக்குக் குறையாமல் அமையும்.



14. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு முதற்கண் ஏற்பளிப்புச் செலவு ரூ. 5750 கோடி எனினும், அத்திட்டக் காலச் செலவு ரூ. 6225 கோடி ஆக இருக்கும். எட்டாவது திட்டத்தில் மாநிலங்களுக்குரிய ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடுகளை மத்திய திட்டக் குழு இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லை. இருந்த போதிலும், வரும் ஆண்டுத் திட்டத்திற்காக தமிழ்நாட்டுக்கு ரூ. 1450 கோடி ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் தந்துள்ளது. வரும் ஆண்டு அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாக அமைவதால், திட்ட ஒதுக்கீட்டில் நடப்பு ஆண்டு இறுதிவரை செய்து முடிக்கப்பெறும் வளர்ச்சிப் பணிகள் மீதான செலவினங்கள் சேர மாட்டா. இந்தச் செலவினங்கள் திட்டத்தில் சேராப் பணி (Non–Plan) எனும் தலைப்புக்கு மாற்றப் படும். இவ்வாறு மாற்றப்படும் மொத்த ஒதுக்கீடு சுமார் ரூ. 150 கோடியாகும். இந்த அடிப்படையில் ஒப்பு நோக்குமிடத்து, நடப்பு ஆண்டின் திட்டத் தொடர்பான பணிகளுக்கு ரூ. 1377 கோடி என இருக்க, வரும் ஆண்டின் திட்ட ஒதுக்கீடு ரூ. 1450 கோடியும், ரூ. 150 கோடியுமாகச் சேர்ந்து ரூ. 1600 கோடியாகத் திகழ்கிறது.

15. வல்லுநர்கள் கொண்ட நமது மாநிலத் திட்டக் குழு தமிழகத்தின் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரையறுத்து வடிவமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. இன்றைய நிலையில் எதிர் நோக்கக் கூடிய நிதி ஆதாரங்களை அடித் தளமாகக் கொண்டு, 1990–95 கால கட்டத்தில் எட்டாவது திட்டச் செலவாக, மொத்தம் ரூ. 8500 கோடியிலிருந்து சுமார் ரூ. 9000 கோடி அளவுக்கு வகை காண எண்ணியுள்ளோம். இந்தக் குறிக்கோளை எய்திட, வரத்து வாயில்களை வலிமைப்படுத்தி முன்னுரிமைப் பட்டியலுக்கு இணங்கச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியமாகும்.

புதிய—மக்கள் நலத் திட்டங்கள்

16. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் நடப்பு ஆண்டில் பல புதிய மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியதின் காரணமாகப் பெரும்பாலான மக்கள் பயனடைந்துள்ளனர்.

17. இந்த நிதி நிலை ஆண்டின் 11 மாதங்களில், அதாவது, பிப்ரவரித் திங்கள் முடிய—

* 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசி வீதம் ஐந்து முறை வழங்கியதில் ரூ. 38.12 கோடி செலவு.

* இலவசமாக வேட்டி, சேலைகள் 83 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ரூ. 42.25 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளது.

* முதியோர் உதவித் தொகையும், உடல் ஊனமுற்றோர், விதவைகள், ஆதரவற்ற மகளிர் ஆகியோர்க்கு வழங்கும் உதவித் தொகைகளும் மாதம் ஒன்றுக்கு ரூ. 35 என்பதிலிருந்து ரூ. 50 ஆக உயர்த்தப்பட்டு, எண்ணிக்கை வரம்பும் நீக்கப்பட்டதால், கூடுதலாக ஆகும் செலவு ரூ. 9.14 கோடியாகும். இதனால், 4.64 லட்சம் பேர் பயனடைகின்றனர்.

* ஏழைப் பெண்கள் திருமண உதவி ஐயாயிரம் ரூபாய் வழங்கும் ஏற்றமிகு திட்டத்தின்கீழ் 11338 பெண்கள் பயன் பெற்றுள்ளனர். இதற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூ. 5.59 கோடியாகும்.

* கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ. 200 வீதம், மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் 97472 மகளிர் பயனடைந்துள்ளனர். இதற்கு ஆகியுள்ள செலவு ரூ. 1.95 கோடி.

* குடும்பத் தலைவர்களை இழந்துவாடும் வறிய குடும்பங்களுக்கு ரூ. 2000 நிதி வழங்கும் திட்டத்தின் பயனை, 10517 குடும்பங்கள் பெற்றுள்ளன. இதற்குச் செலவு ரூ. 2.10 கோடி.

* விபத்துக்களில் உயிரிழக்கும் அனைத்து வகைத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு ரூ. 10000 நிதியளிக்கும் விபத்து நிவாரண திட்டத்தின்படி, 235 பாட்டாளிக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

* சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, டாக்சி ஓட்டுநர்கள், தங்களின் சொந்தத்திற்கு வண்டிகளை உரிமையாக்கிக் கொள்ள உதவியளிக்கும் திட்டத்தின்கீழ், 5287 பேருக்கு ரூ. 11.26 கோடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 88.40 லட்சம் மூலதன மானியமாகவும்—ரூ. 18.30 லட்சம் வட்டிக்கான மானியமாகவும் தரப்பட்டுள்ளது.

* ஆதி திராவிடர், பழங்குடியினர், மிகப் பிற்படுத்தப்பட்டவர், சீர் மரபினர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரையில் இலவசக் கல்வியளிக்கும் வகையில், 26789 மாணவர்களுக்கு ரூ. 79.54 இலட்சம் செலவில் உதவியளிக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை

18. வேளாண்மைக்கும் அதனைச் சார்ந்த திட்டப் பணிகளுக்காகவும் நடப்பு ஆண்டில் ரூ. 145.98 கோடி ஒதுக்கப்பட்ட தொகை, வரும் ஆண்டுக்கு ரூ. 160.29 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

19. அரிசி உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறவில்லையென்பதைக் கருத்திற்கொண்டு உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கான நடவடிக்கைக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. இதற்கெனப் பல சிறப்புத் திட்டங்கள் வகுக்கப்பட்டு, செங்கை-அண்ணா, வட ஆற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவரையர், தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை, மதுரை, நெல்லை-கட்டபொம்மன் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

20. சான்றளிக்கப்பட்ட நெல் வித்து வழங்கும் திட்டம் இப்போது பயிரிடப்படும் பரப்பில் 14 விழுக்காடு பயனளிக்கிறது. இது 20 விழுக்காடு அளவுக்கு உயர்த்தப்படும். இதற்கென ரூ. 8.28 கோடி ஒதுக்கீடு செய்யப் படுகிறது. வழங்கிடும் வித்துக்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் கிராமப் பகுதிகளில் தயக்கமின்றிப் புழங்கிட, இதற்கென ஏற்கனவே உள்ள 783 விரிவாக்க நிலையங்களுடன், மேலும் 100 நிலையங்களை நிறுவிட ரூ. 35.23 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

21. வேளாண்மை விரிவாக்கப் பணிகளைச் சீரமைத்தல், சிறந்த விதை உற்பத்தி வசதிகளைப் படைத்தல், கால்நடைத் தீவன மேம்பாடு காணுதல், நீர்வரத்துப் பகுதிப் பாசன நிர்வாகத் திட்டங்களைத் தீட்டுதல், சிற்றூர்ச் சாலைகள் அமைத்தல் போன்ற வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்றை உலக வங்கியின் உதவியுடன் சுமார் ரூ. 170 கோடி செலவில் தொடங்க இருக்கிறோம்.

22. '' டேனிடா '' நிறுவனம் அளிக்கும் நிதி உதவியுடன் புன்செய்ப் பயிர்த் திட்டமொன்றும் ரூ. 6.25 கோடி செலவில் சிதம்பரனார், நெல்லை-கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் 44,000 ஏக்கரில் நிறைவேற்றப் படும். அத்துடன், வரும் ஆண்டு ரூ. 1.5 கோடி செலவில் மாநில முழுதும் புதிய ஒருங்கிணைந்த புன்செய்ப் பயிர்த் திட்டமொன்று செயல்படுத்தப் படும். இதன்படி, 300 இடங்களில் ஒவ்வோர் இடத்திலும் 250 ஏக்கர் பரப்பு வீதம், மொத்தத்தில், 75,000 ஏக்கர் பரப்பில் புன்செய் வேளாண்மை மேம்படுத்தப்படும்.

23. விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 180 இல் இருந்து ரூபாய் 25 உயர்த்தி ரூபாய் 205 ஆக வழங்கப்படுவதுடன், உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூ. 35-ம் சேர்த்தளிக்கப்படுகிறது. கரும்பு விவசாயிகளுக்கும் டன் ஒன்றுக்கு ரூ. 30 விலை உயர்த்தித் தரப்படுகிறது. விவசாயிகள் பயன்படுத்தும் 3 குதிரைத் திறன் மற்றும் 5 குதிரைத் திறன் உடைய விசையேற்றங்களில் (Pump sets) விற்பனை வரிக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசின் வருவாய் இழப்பு ரூ. 4 கோடி.

24. விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளித்த வகையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குச் சேர வேண்டிய நிலுவை ரூ. 67 கோடியுடன் சிறு விவசாயிகளின் கடன் நிவாரணத் தொகை ரூ. 39 கோடியும் இணைந்து, ரூ. 106 கோடிக்கான பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

25. ஐந்து குதிரைத் திறனுக்கு குறைவான விவசாய மின் விசை ஏற்றங்களுக்கான மின் கட்டணம் ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 75 என இருந்தது, ரூ. 50 என கடந்த அக்டோபர் மாதத்தில் குறைக்கப்பட்டது. இதனால் ஒன்பது இலட்சம் விவசாயிகளுக்கு நன்மை. அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு வருவாய் இழப்பு ரூ. 10கோடி.

26. இப்போது ஏழரை மற்றும் பத்து குதிரைத்திறன் வரையில் உள்ள கட்டணமான ஒரு குதிரைத் திறனுக்கு ரூ. 75 என்பது ரூ. 50 ஆக குறைக்கப்படும். இதனால், மேலும் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 3 கோடி கூடுதல் இழப்பு ஏற்படும். மேலும் சுமார் ஒன்றரை லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள்.

காட்டு வளம்

27. மழை வளம் தருவதற்கு மட்டுமல்ல—பல்வகைத் தரு வளத்தினால் மாநில நிதி நலம் காப்பதிலும், காட்டு வளத்திற்கு உரிய பங்கு உண்டு. அந்த வளம் கொழித்துச் செழித்திட, கோவையில் '' மாநிலக் காடு வளர்ப்பு – வன விலங்கு ஆராய்ச்சி நிறுவனம் '' ஒன்றை ஆரம்பித்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு ஆராய்ச்சிப் பணிகளை ஆற்றிடும். வனத் துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கும்.

நலிவு போக்கும் வரவு-செலவுத்திட்டம்

பல்வேறு நலப்பணித் திட்டங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த நிதிநிலை அறிக்கை இருப்போர்- இல்லாதோர் என எல்லோரையும் சமநோக்கோடு பாவித்து, தயார் செய்யப் பட்டுள்ளது.

இஸ்லாமியர்களின் நீண்ட காலக் கோரிக்கையான சிறுபான்மையோர் நலக்குழு அமைக்கப் பட்டிருப்பது வரவேற்கப்படத்தக்கது.

சென்னையில் ஹஜ் பயணிகள் இல்லம் அமைப்பதற்கான திட்டம் கடந்த 15 ஆண்டுகளாகக் கிடப்பில் போடப்பட்டு இருக்கின்ற நிலையில், ஆட்சிப் பொறுப்பேற்ற ஓராண்டுக்குள் அந்தத் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்திருப்பதை இஸ்லாமியச் சமுதாயத்தின் சார்பில் மிகுந்த மனநிறைவோடு வரவேற்கிறேன். இதற்காகக் கலைஞர் அரசைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. எம்.ஏ. லத்தீப், எம்.எல்.ஏ.
பொதுச்செயலாளர், தமிழ்நாடு முஸ்லீம் லீக்.

அனைத்துப் பொருட்களுக்கும் ஒருமுனை விற்பனை வரி விதிக்க வேண்டும் என்று 30 ஆண்டுகளாக வியாபாரிகள் கோரி வந்தனர். இந்த நீண்டகாலக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் ஏற்று, தற்போது தாக்கல் செய்துள்ள பட்ஜெட் உரையில் குறிப்பிட்டுள்ளார்

—திரு. அரக்கோணம் இராஜகோபால்
காங்கிரஸ் தலைவர்

28. சமூகக் காடுகள் திட்டத்தின் இரண்டாவது கட்டப் பணிகளுக்கென வரவு-செலவு திட்டத்தில் ரூ. 16.13 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு சுவீடன் பன்னாட்டு வளர்ச்சி நிறுவனம் நிதி உதவி தருகிறது. 35000 ஏக்கர் பரப்புள்ள சமூகக் காடுகள் இத்திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் கொண்டுவரப்படும்.

29. நீலகிரி, பழநி மலைப்பகுதிகளில் அழிந்துவரும் காடுகளை மீண்டும் உருவாக்கி வளர்த்திட, ரூ. 120 கோடி செலவில் விரிவான திட்ட அறிக்கை ஒன்றினைத் தயாரித்துள்ளோம். இந்த முயற்சிக்கு மத்திய அரசின் இசைவு கிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

கால்நடைச் செல்வம்

30. கால்நடைச் செல்வம் பெருகிட—அது வலிவும் பொலிவும் மிக்கதாகத் தழைத்திட—ஆசியாவிலேயே முதன் முதலாக '' தமிழ்நாடு கால் நடை மருத்துவம்—அறிவியல் பல்கலைக் கழகம் '' எனும் தனிப் பல்கலைக் கழகத்தை நடப்பு ஆண்டில் சென்னையில் தொடங்கியுள்ளோம். இப் பல்கலைக் கழகத்துக்கு வரும் ஆண்டு திட்ட ஒதுக்கீடாக ரூ. 3.91 கோடி அளிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடைக் கல்லூரியை மேம்படுத்தும் பணிகளும் விரைவுபடுத்தப்படும்.

31. வரவு–செலவு திட்டத்தில் ரூ. 1.22 கோடி ஒதுக்கப்பட்டுள்ள செம்மறியாடு மேம்பாட்டுத் திட்டம், ஐரோப்பிய பொருளாதார நிதிக் குழுவின் உதவியுடன் மொத்தம் ரூ. 13.67 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு, செங்கை–அண்ணா, வட ஆற்காடு–அம்பேத்கார், சேலம், தருமபுரி, தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

32. கால்நடைத் தீவன மேம்பாட்டுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் கால்நடை வளர்ப்புத் திட்டமொன்று, ரூ. 4.4 கோடி செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வரும் ஆண்டில் புதிதாகப் பத்து கால்நடை மருந்தகங்கள் நிறுவப்படும்.

33. தேசிய பால் வள வாரியத்தின் நிதி உதவியுடன் ரூ. 68.19 கோடி செலவில், 13 மாவட்டங்களில் பெரிய பால் பண்ணைத் திட்டமொன்றைத் தொடங்கிட இருக்கிறோம். தற்போதுள்ள, பால் பண்ணைகளில் பால் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுவதுடன், செங்கை-அண்ணா, தென் ஆற்காடு, திருச்சி ஆகிய மாவட்டங்களில் புதிய பால் பண்ணைகள் அமைக்கப்படும். பால் உற்பத்தியின் அளவு நாள் ஒன்றுக்கு 12.5 லட்சம் லிட்டர் என்பதிலிருந்து, திட்ட கால முடிவில் நாள் ஒன்றுக்கு 27.6 லட்சம் லிட்டர் என்ற சாதனை நிகழ்த்தப்படும்.

மீனளம்

34. தமிழ்நாட்டில் சுமார் 37000 ஏக்கர் உவர் நீர்நிலைப் பகுதிகளை பயன்படுத்தி இறால் வளர்ப்பை மேம்படுத்துவதற்கு வாய்ப்புகள் உள்ளன. வரும் ஆண்டில் சுமார் 5000 ஏக்கரில் இறால் வளர்ப்புப் பணி மேற்கொள்ளப்படும். சின்னமுட்டத்தில் மீன்பிடி துறைமுகம் வரும் ஆண்டில் ரூ. 6.84 கோடி செலவில் அமைக்கப்படும். தொண்டியில் படகுத் துறை இம்மாதம் முதல் செயல்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி வடிமுனைப் பகுதியில் நிலத்தில் நீர்த் தேக்க அளவை உயர்த்தி மீன் உற்பத்தித் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும் (Farm Pond Scheme).

35. மீனவக் குடும்பங்களுக்கு நடப்பாண்டில் 3000 வீடுகளும், வரும் ஆண்டில் மேலும் 3000 வீடுகளும் கட்டி முடிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்படும்.

பட்டுப் புழு வளர்ப்பு

36. உலக வங்கியின் நிதி உதவியுடன் பத்து மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்ற பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், நடப்பு ஆண்டில் 14000 பேருக்குக் கூடுதல் வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூபாய் 3.65 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புற வளர்ச்சி

37. 1958ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட திருத்தங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். இத்திருத்தங்களின் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகளுக்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடைபெறுதல், ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் குறிப்பிட்ட திட்டப் பணிகளை ஒப்படைத்தல், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் ஆகியவற்றின் நிதிநிலை மேம்படுத்தும்பொருட்டு வல்லுநர் ஆய்வுக் குழு ஒன்றை அமைத்தல் ஆகியவற்றுக்கு வகை செய்துள்ளோம். முன்னாள் சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களைத் தலைவராகக் கொண்ட வல்லுநர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழு ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள் நிதியாதாரங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து அவற்றை வலுப்படுத்துவதற்கு பரிந்துரைகளைச் செய்யும்.

38. மேலும், தமிழ்நாடு 1958ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின்படி வேளாண்மை—அதைச் சார்ந்த பணிகள், சிறு ஏரிப் பாசனம், எழுத்தறிவு இயக்கத் திட்டங்கள், தொடக்க, இடைநிலைக் கல்வி, சிலவகைப் பொதுச் சுகாதாரத் திட்டங்கள், சமூக நலத் திட்டங்கள், குடிநீர் வழங்கும் திட்டங்கள், கிராமப்புற வீட்டு வசதித் திட்டம் போன்ற பணிகளைச் செயற் படுத்துவது குறித்து ஊராட்சி ஒன்றியங்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்யலாம் என அரசு தற்போது முடிவு செய்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும், சம்பந்தப்பட்ட அரசு அலுவலர் களும் அடிக்கடி கலந்து ஆலோசனை செய்வது அத்திட்டங்களை முழுப் பயனுள்ள வகையில் செயற்படுத்த உதவும் என்று நம்புகிறோம்.

39. கிராமப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், சாலைகள், பள்ளிக் கட்டிடங்கள், சுகாதாரத் துணை நிலையங்கள், குழந்தை நல நிலையங்கள், சிறு பாசன வாயில்களைப் பேணுதல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்காகப் பல்வேறு கணக்குத் தலைப்புகளின்கீழ் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப் பட்டுள்ளன. நமது மாநிலத் திட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இப்பொழுது உள்ள வசதிகளைக் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டு, அதன்மூலம் குறைபாடுகளைக் கண்டறிந்து, அடுத்த ஐந்தாண்டுகளில் திட்டமிட்ட முறையில் கூடுதல் வசதிகளை ரூ. 250 கோடிக்கு மேல் செலவிட்டு உருவாக்க முடிவெடுத்துள்ளோம். இப்புதிய திட்டத்திற்காக வரும் ஆண்டில் ரூ. 50 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். இத்தொகையில் அரசு ரூ. 25 கோடி வழங்கும். எஞ்சிய தொகையை ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் நிதி நிலைகேற்ப வழங்கும். இத்திட்டங்களை நிறைவேற்ற ஊராட்சி ஒன்றியங்கள் நேரடியாகப் பொறுப்பேற்கும்.

பாசனம்

40. "நீரின்றி அமையாது உலகு" எனும் வாசகத்தை நெஞ்சில் நிறுத்திப் பாசன வசதிக்கான திட்டங்களுக்கு கடந்த காலந்தொட்டு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.



* வரும் ஆண்டில் செங்கோட்டை வட்டத்தில் 38 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் 6000 ஏக்கர் நிலம் பயன்பெறக் கூடிய அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

* ரூபாய் 21 கோடி மதிப்பீட்டுச் செலவில் 6500 ஏக்கர் நிலம் பயன்பெறக் கூடிய பழனி வட்டம் நங்கஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

* வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் 7000 ஏக்கர் பயன்பெறக் கூடியதும் ரூ. 19.5 கோடி மதிப்பீட்டுச் செலவு ஆகக் கூடியதுமான மோர்தானா திட்டப் பணி மேற்கொள்ளப்படும்.

* பெரியாறு வைகைப் பாசன நவீனப்படுத்தும் திட்டம் இரண்டாவது கட்டப் பணி இன்னும் இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்தப்படும். இதன்கீழ், ரூ. 25 கோடி செலவில் கூடுதல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிலக்கோட்டை மற்றும் பெரியகுளம் வட்டங்களில் மேலும் 4000 ஏக்கர் பரப்புள்ள நிலம் பயன்பெறும்.

* ஐரோப்பிய பொருளாதாரக் குழுவின் உதவியுடன் செயற்படுத்தப்படும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கு இந்த வரவு–செலவு திட்டத்தில் ரூ. 7.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* தஞ்சை மாவட்டத்தில் "காவிரி மேட்டூர் பாசனத் திட்டப்பகுதி"யில் நீர்வளம் எய்திட ஒருங்கிணைந்த ஆழ் துளைக் கிணறுகளை அமைக்கவும், ஏரிகளை நவீனப் படுத்தவுமான திட்டத்துக்கு, முதல் கட்டமாக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கப்படும்.

* மொத்தம் ரூ. 52.7 கோடி செலவில் சுமார் 3.75 லட்சம் ஏக்கர் பரப்பிற்குப் பயன் தரக்கூடிய தேசிய நீர் நிர்வாகத் திட்டத்திற்கு ரூ. 12 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்தினால், சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளத் தாக்கு, அமராவதி பள்ளத்தாக்கு ஆகிய பகுதி களின் மக்கள் வளம் பெருக்கி உளம் மகிழ்வர்.

41. திரு. ஆர். திருமலை தலைமையில் பாசன நீர் ஆதாரங்கள் குறித்த நிலைக் குழு, நடப்பு ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இந்தக் குழு, பழைய மற்றும் புதிய பாசன ஏற்பாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு—பெரியார், நெல்லை — கட்டபொம்மன், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் 10 பெரும் திட்டங்கள் பற்றியும், அவற்றால் கிடைக்கும் பலன்களை மேம்படுத்தும் வழிவகை பற்றியும் அரசுக்குப் பரிந்துரைகளை அளித்துள்ளது.

மின்சக்தி

42. அனலில், புனலில், அணுவில், கதிரொளியில், காற்றசைவில், கடல் அலையில் உற்பத்தியாகி, உலகை இயக்கும் பெரும் சக்தியாய் உள்ள மின் சக்தியைப் பெருக்குவதில் இந்த அரசு மிகுந்த ஆர்வங்கொண்டு, மேற்சொன்ன எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திட முனைந்துள்ளது.

43. வரும் ஆண்டு மின்சக்தித் துறைக்கென ரூ. 455 கோடி திட்ட ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இடையூறுகளைக் களைந்து கடந்த ஜூலைத் திங்கள் முதல் நாளில் தொடங்கப் பட்ட வட சென்னை அனல் மின் நிலையத்தின் 420 மெகாவாட் திறன் கொண்ட முதலிரண்டு பிரிவுகளில் பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. மேலும், 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றாவது பிரிவை அமைப்பதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியின் உதவி உறுதி செய்யப்பட இருக்கிறது. இந்த மின் நிலையம் இறுதியாக 2050 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறனுடையதாக விளங்கும்.

44. 1991 ஆம் ஆண்டில் கூடுதலாக 420 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டப் பணிக்கு ரூ. 135 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

45. ஜப்பான் நாட்டு உதவியுடன் ஒருங்கிணைந்த எரிவாயு மின் உற்பத்தித் திட்டம் ஒன்றை பேசின் பிரிட்ஜ் நிலையத்தில் அமைக்கும் பணி வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும். இது 120 மெகாவாட் உற்பத்தித்திறன் கொண்டதாக இருக்கும். காவிரி ஆற்றுப் படுகையில் உள்ள எரிவாயுவைக் கொண்டு கூடுதலாக 300 மெகாவாட் உற்பத்தித் திறன் பெற திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

46. திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டான் பகுதியில் உள்ள லிக்னைட் படிவங்களைக் கொண்டு மின் உற்பத்தி செய்திட நெய்வேலி நான்காவது சுரங்கத்தைத் தொடங்கவும் மத்திய அரசைக் கேட்டு வருகிறோம்.



47. மின்சாரத்தை எடுத்துச் செல்லவும், வழங்கவும் வரும் ஆண்டின் திட்டச் செலவில் ரூ. 155 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால், 40000 விவசாய விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு தரவும்—40000 குடிசை வீடுகளுக்கு இலவச மின் இணைப்பு தரவும் முடியும்.

48. வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு, நிலக்கரி, கலிங்கா நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து கொண்டு வர வேண்டும். இதனை ரயில் மற்றும் கப்பல் போக்குவரத்து மூலமாக எடுத்து வர வேண்டும். எனவே, வடசென்னையில் உள்ள எண்ணூரில் துறைமுகம் ஏற்படுத்துவது அவசியமாகும். இதற்கென சென்னைத் துறைமுகம் ரூ. 288 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளது. இதற்கு உடனே அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசின் முன் வைத்துள்ளோம்.

தொழில்கள்

49. தமிழ்நாட்டைத் தொழில் மயமாக்கிட நமது அரசு உறுதி பூண்டுள்ளது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு எடுக்கப் பட்டுள்ள முக்கியமான நடவடிக்கைகள் ஆளுநர் உரையில் எடுத்துக் காட்டப்பட்டவை.

50. கூட்டுத் துறை மற்றும் தனியார் துறையில் தொழில் வளர்ச்சிக்கென எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் கூடவே, மாநில அரசின் பொதுத் துறை நிறுவனங்களைச் சீரமைத்துச் செம்மைப்படுத்த உரிய முயற்சிகளும் எடுக்கப் பட்டுள்ளன.

51. நிர்வாகச் சீர்கேட்டின் காரணத்தால் உரிய வருவாயைப் பெறாமல் இயங்கிக் கொண்டிருந்த தமிழ்நாடு கனிம வளர்ச்சி நிறுவனம், இந்த ஆண்டில் 4 கோடி ரூபாய் லாபம் ஈட்டும் நிலைக்குச் சீர் செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 4.35 கோடி முதலீட்டுடன் புதிதாக கிரானைட் ஓடு தயாரிப்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவவும் இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

52. தமிழ்நாடு பத்திரிகை அச்சுத் தாள்கள்—காகித நிறுவனம் 1988–89 வரையில் தொடர்ந்து இழப்பில் இயங்கியதனால் மொத்த நட்டம் ரூ. 49.95 கோடி அளவிற்குச் சென்றது. இந்த நிறுவனம், நடப்பாண்டில் ஏறத்தாழ ரூ. 28 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. இது ஓர் அரும் சாதனையாகும்.

53. வி.சி.பி.,வி.சி.ஆர். தயாரிப்புத் திட்டத்தையும் இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் நிறுவனத்தின் விரிவுத் திட்டத்தையும் தமிழ் நாட்டில் அமைக்க வேண்டுமென்றும், சேலம் உருட்டு ஆலையை, ஒருங்கிணைந்த உருக்கு ஆலைத் தொகுதியாக அமைக்க வேண்டுமென்றும் மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம்.

54. இம்மாநிலத்தில் பல்வேறு பெட்ரோலிய ரசாயன பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஏதுவாக, தென்னகத்திற்கான எரிவாயு இணைப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளோம்.

55. ஏற்றுமதி செய்யும் நோக்கத்துடன், மணலியில் நாப்தா தொழிற்சாலை (Naphtha Cracker) ஒன்றை அமைப்பதற்கு மத்திய அரசிடம் தொடர்ந்து கேட்டு வருகிறோம். இந்தத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு ரூ. 1800 கோடி முதலீடு செய்ய வேண்டியிருக்கும் என்று மதிப்பிடப் பட்டு இருக்கிறது. மணலியில் அமையவிருக்கும் நேஷனல் ஆரோமேடிக் தொழிற்சாலைக்கு விரைந்து இசைவளிக்குமாறும் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டுள்ளோம். இதற்கு சுமார் ரூ. 1356 கோடி முதலீடு தேவைப்படும். இந்தப் பெருமளவிலான முதலீட்டுத் திட்டங்கள் அனைத்தும், பல துணைத் தொழில் நிறுவனங்கள் தோன்றுவதற்கு வழி வகுக்கும். குறிப்பிடத்தக்க அளவிற்குக் கூடுதல் வேலைவாய்ப்பைத் தோற்றுவிப்பதுடன், நமது மாநிலத்தின் வருவாயையும் பெருக்கும்.

56. கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை—சிப்காட் நடத்தும் தொழில் வளாகங்களிலும் ஏற்கெனவே இவ்வரசு அறிவித்துள்ள 105 வட்டங்களில் மிகவும் பின்தங்கிய சில வட்டங்களிலும் புதிதாக ஏற்படுத்தக்கூடிய தொழில்களுக்கு, மூலதனச் செலவு அளவுக்கு ஐந்து ஆண்டுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்படும். இதற்கான விவரங்கள் தொழில் மானியத்தில் அறிவிக்கப்படும்.

சிறு தொழில் வளர்ச்சி

57. ஜனவரித் திங்களில் சிறு தொழில் அதிபர்களுடன் விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளேன். அவர்களும் பல கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவைகளை கவனத்துடன் ஆய்வு செய்து சிறு தொழில் வளர்ச்சிக்கென சில முடிவுகள் அறிவிக்க விரும்புகின்றேன்.

58. சுற்றுப்புற சூழல் பாதிக்காமல் இருப்பதற்கு மாசு கட்டுப்பாடு நிறுவனத்திடம் சிறு தொழில்களும் சான்றிதழ் பெறவேண்டிய நிலையில் உள்ளன. இதனால் தாமதங்களும், கட்ட வேண்டிய மேல் வரியின் பளுவும் அதிகமாக இருப்பதாக ஒரு குறைபாடு சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இதனைக் களையும் பொருட்டு, விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ள சுமார் 40 தொழில்கள் போக, மேலும் சுமார் 60 தொழில்களுக்கு விலக்கு அளிக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

59. விற்பனை வரி ஒத்தி வைப்பு (sales-tax deferral) புதிய சிறு தொழில்களை ஊக்குவிக்கும் ஒரு திட்டமாகும். இதனை செயல்படுத்துவதில் கால தாமதம் ஏற்படுகின்றது என்று முறையிடப் பட்டுள்ளது. இதனைக் களையும் பொருட்டு, மாவட்ட அளவில் உள்ள வணிக வரி அதிகாரிகளுக்கு ஒத்திவைப்பு ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்படும்.

60. புதிய சிறு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்றால் பல துறைகளிடம் சான்றிதழ்கள் பெறவேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. இதில் தாமதம் தவிர்க்க வேண்டுமென்ற நோக்கத்துடன், இனிமேல் அனைத்துச் சான்றிதழ்களையும் குறிப்பிட்ட 30 நாட்களில் வழங்க வேண்டுமென்ற முறை பின்பற்றப்படும்.

61. தொழில் மையங்களில் விற்கப்படும் தொழில் மனைகளுக்கு முத்திரைத்தாள் வரி விலக்கு முழுமையாக அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஆணைகளும் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சுற்றுப்புறச் சூழல்

62. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். நீண்ட நாட்களாக தோல் பதனிடும் தொழிற்சாலைகள் வெளியேற்றும் கழிவு நீரினால் பொதுமக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படுகின்றது. இதற்கு ஒரு தீர்வு காண வேண்டும் என்ற முயற்சியில் தற்போது வெற்றி கண்டு உள்ளோம். கழிவு நீர் கூட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் ரூ. 15.76 கோடி செலவில் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, ராணிப்பேட்டை, திண்டுக்கல் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஏற்படுத்தப் படும். இதில், மத்திய அரசு மற்றும் மாநில அரசின் பங்கு தனித்தனியாக ரூ. 3.69 கோடி மானியமாக அமையும்.

63. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து (HUDCO) மானியம் மற்றும் கடன் வசதி பெற்று, 21 நகராட்சிகளில் ரூ. 29 கோடி செலவில் 1.07 லட்சம் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் தண்ணீர் வசதியுடன் உள்ள (பிளஷ் அவுட்) கழிப்பிடங்கள் கட்டப்படும்.

64. சென்னை மாநகராட்சியில் உள்ள கூவம், அடையாறு மற்றும் இதர நீர் வழிகளைச் சுத்திகரிக்கும் முறைகளைப் பற்றி இங்கிலாந்து நாட்டு வல்லுநர் குழு அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் ஒருங்கிணைந்த சுத்திகரிப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும்.

கைத்தறி

65. நடப்பு நிதி ஆண்டில் கோ-ஆப் டெக்ஸ் நிறுவனத்திற்கும், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ரூ. 26.38 கோடி தள்ளுபடித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. மேலும், வழக்கமாகக் கொடுக்கப்படும் 20 சதவீதம் தள்ளுபடி, இந்த ஆண்டில் 90 நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதற்காக, வரும் ஆண்டிற்குத் தள்ளுபடித் தொகையாக ரூ. 27 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கு அதிக நன்மை பயக்கும் வகையில், தள்ளுபடித் தொகை வழங்கும் திட்டம் சீராகச் செயல்படுத்தப்படும். வரும் ஆண்டில் ரூ. 1.5 கோடி செலவில் கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

66. மாநில அளவிலான கைத்தறி ஆலோசனைக் குழு நடப்பாண்டில் அமைக்கப்பட்டுள்ளது. கைத்தறி நெசவாளர்கள் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 1.48 லட்சம் நெசவாளர்கள் தற்போது உள்ளனர். தற்போது இந்தத் திட்டம், நெசவாளர்களுக்கு கூடுதல் காப்புறுதித் தொகையாக ரூ. 3000 மட்டுமே கொடுக்க வகை செய்கிறது. இத் தொகை வரும் ஆண்டில் ரூ. 10000 ஆக உயர்த்தப்படும். இதனால் ஏற்படும் கூடுதல் செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30.45 லட்சம் ஆகும்.

67. வரும் ஆண்டில் வீட்டு வசதி-நகர்ப் பகுதி வளர்ச்சி வாரியத்தின் நிதி உதவியுடன், ரூ. 5 கோடி மொத்தச் செலவில், நெசவாளர்களுக்கு 2000 தறிக் கூடத்துடன் அமைந்த வீடு கட்டும் பணி மேற்கொள்ளப்படும். விசைத்தறி நிதி இயங்கச் செய்யப்படும். அந்நிதி, மொத்தம் ரூ. 25 லட்சம் செலவில் விசைத்தறிகளுக்கான பணி வசதி நிலையங்கள் (service centres) இரண்டினை அமைக்கப் பயன்படுத்தப்படும்.

68. இம்மாநிலத்தில் தற்போது மொத்தம் 18 கூட்டுறவு நூற்பாலைகள் இருக்கின்றன. 1988-89ஆம் ஆண்டில், ஒரு நூற்பாலை தவிர அனைத்தும் நட்டத்தில் இயங்கி வந்தன. இந்த அரசு ஏற்பட்ட பிறகு, நடப்பாண்டில் இரண்டு நூற்பாலைகளைத் தவிர மற்ற அனைத்தும் இலாபத்தில் இயங்கத் தொடங்கியிருக்கின்றன. இருப்பினும், குவிந்துள்ள நட்டத்தால் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணவும், நவீனப்படுத்தும் தேவையை நிறைவேற்றவும் வேண்டியுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடன் ரூ. 31 கோடி மொத்தச் செலவில், 12 ஆலைகளில், "முழுமையாக நவீனமயமாக்கும் திட்டம்" மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.

சாலைகள்-போக்குவரத்து

69. கொடிக் கம்பங்கள்போல நிமிர்ந்து நீண்டும், வானவில்லைப்போல வளைந்தும், நகர்ப்புறங்களை இணைக்கும் நெடுஞ்சாலைகளையும், பெருஞ்சாலைகளையும் கண்டு, சேற்றிலும் சகதியிலும் கால் நுழைய நடந்து கொண்டிருந்த கிராமப்புறத்து மக்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவதைத் தவிர்த்திட, அவர்களுக்கும் நல்ல போக்குவரத்து சாலை வசதிகளைத் தருவதற்காக, 1972ஆம் ஆண்டிலேயே இந்த அரசு பொறுப்பிலேயிருந்த போது 1500-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்கள் அனைத்தையும் முக்கிய சாலைகளுடன் இணைக்கிற வலிவான சாலைகளை அமைக்கும் முயற்சி முதல் கட்டமாக தொடங்கப்பட்டது. இடையில் தயக்கமுற்ற இந்தப் பணி வரும் ஆண்டில் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, தொடர்ந்து அடுத்த கட்டமாக 1000 பேருக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட கிராமங்களுக்கான இணைப்புச் சாலைகளை அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்படும். இதற்காக வரும் ஆண்டில் ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இஃதன்னியில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை மேம்படுத்தும் புதிய திட்டத்திற்காக ரூ. 10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

70. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ,நகர் மன்றப் பகுதிகளில் சாலைகள் அமைக்க ரூ. 12.91 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

71. கிழக்குக் கடற்கரைச் சாலையின் முதல் கட்டமாக சென்னையிலிருந்து கடலூர் வரை செல்லும் சாலைப் பணி ரூ. 53 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு வரும் ஆண்டில் ரூ. 5.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

72. பல்வேறு இடங்களில் 100 சிறிய பாலங்களைக் கட்டுவதற்காக ஒரு புதிய திட்டம் ரூ. 5 கோடி செலவில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

73. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் புதிய சாலை மேம்பாட்டு வேலைகள் ரூ. 27.71 கோடி செலவில் ஆரம்பமாகும். மேலும், இம்மாநகரின் போக்குவரத்துப் பிரச்சினை எதிர்காலத்தில் மிகவும் சிக்கலாகிவிடாமல் தடுத்திட முன் எச்சரிக்கையாக ஒரு விரிவான ஆய்வு மேற் கொள்ளப்பட்டுள்ளது.

74. குறிப்பாக, நடப்பு ஆண்டில் சாலை களுக்கென ஒதுக்கப்பட்டது ரூ. 146 கோடி யாக இருக்க, வரும் ஆண்டில் அது ரூ. 187 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சாலைகளைப் பழுது பார்த்துப் பராமரிக்க, நடப்பு ஆண்டில் ரூ. 62.65 கோடி என ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, வரும் ஆண்டில் ரூ. 80.27 கோடியாக அத்தொகை பெருகியுள்ளது.

75. சென்னையில் விரைவு ரயில் போக்கு வரத்துத் திட்டத்திற்கும் கரூர் – திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டத்திற்கும் போதுமான நிதி ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று ரயில்வே அமைச்சருக்குக் கடிதம் எழுதி இருந்தேன். தற்போது ரயில்வே நிதிநிலை அறிக்கையில் சென்னை விரைவு ரயில் போக்குவரத்து திட்டத்திற்கு நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 9.80 கோடியாக இருக்க, வரும் ஆண்டில் ரூ. 14 கோடியாக உயர்த்தி ஒதுக்கப் பட்டுள்ளது. கரூர்-திண்டுக்கல் அகல ரயில் பாதைத் திட்டத்திற்கு நடப்பாண்டில் ஒதுக்கப்பட்ட ரூ. 4 கோடியை வரும் ஆண்டில் ரூ. 13 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. நம்முடைய முறையீட்டிற்கு இணங்க ஓரளவு கூடுதல் ஒதுக்கீடு அளித்திருந்தாலும், இந்த இரண்டு திட்டங்களும் இன்னும் விரைவாக செயல் படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையைத் தொடர்ந்து வலியுறுத்தி வருவோம்.

76. சென்னையிலிருந்து கடலூர் வரை கடலோர மார்க்கமாக (Hover craft/S.E.S. ferry) சீர்பயணப் படகுப் போக்குவரத்து தொடங்க விரைவில் முயற்சிகள் தொடரும்.

கல்வி

77. கல்வித் துறைக்குத் தலையாய முன்னுரிமை அளித்து, வரும் ஆண்டிற்கு ரூ. 1050 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்தில் 6 முதல் 11 வயதுள்ள அனைத்துக் குழந்தைகளும் பள்ளிப் படிப்புக்காக பதிவு செய்யப்பட்டிருந்தாலும், ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 439 குடியிருப்புகளுக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்குள் ஆரம்பப் பள்ளிக்கூடம் கூட இல்லாத நிலை இன்னும் நிலவுகிறது. இந்தக் குடியிருப்புகள் அனைத்திலும், வரும் ஆண்டில் புதிய ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படும். 11 வயதிலிருந்து 14 வயது வரையில் உள்ள சிறுவர்களுக்கான மொத்த எண்ணிக்கையில் 80 சதவீதத்தினர் பள்ளிப் படிப்புக்காக பதிவு செய்துள்ளனர். இருப்பினும், இடைநிலைப் பள்ளி களுக்குப் போதுமான ஆசிரியர்களும் வசதிகளும் இல்லை. ஆகவே வரும் ஆண்டில் கூடுதலாக 1200 இடை நிலை ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு வகை செய்துள்ளோம். இந்த ஆசிரியர்கள் மாதத்திற்கு ரூ. 800 எனத் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்படுவார்கள். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் ஊதிய விகிதங்களில் முறைப் படுத்தப்பட்டு நியமிக்கப்படுவார்கள்.

78. 1990ஆம் ஆண்டு சிறுமியர் ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மனதில் கொண்டு சிறுமியர்களைப் பள்ளிப் படிப்பிற்கு பதிவு செய்வதற்காகவும், அவர்கள் பள்ளியிலிருந்து விலகும் நிலையைத் தவிர்க்கவும், தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படும். ஆரம்பப் பள்ளிக் கட்டிடங்களைச் சரிவரப் பராமரிக்கவும் பழுது பார்க்கவும் நிதி நிலை அறிக்கையில் ரூ. 3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆசிரியர் களுக்கான பயிற்சி நல்லமுறையில் அமைய வேண்டும் என்ற நோக்கத்தில், எஞ்சியுள்ள ஏழு மாவட்டங்களில், மாவட்டக் கல்விப் பயிற்சி நிலையங்கள் நிறுவப்படும். ஆசிரியர் பயிற்சியை செம்மையாக நடத்துவதற்கும் நல்ல முறையில் கண்காணிக்கவும் ஒரு இயக்ககம் ஏற்படுத்தப்படும்.

79. தொழில் பயிற்சி நிலையங்களின் மேம்பாட்டிற்கென ரூ. 3.24 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், மகளிருக்காக மூன்று புதிய தொழில் பயிற்சி நிலையங்கள் சேலம், கோவை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் நிறுவப்படுவதுடன், பிற பயிற்சி நிலையங்களிலுள்ள வசதிகளும் மேம்படுத்தப் படும்.

'பட்ஜெட்' என்னும் பெயர் எப்படி வந்தது?

நம் அரசியலமைப்பில் எந்த இடத்திலும் 'பட்ஜெட்' என்னும் சொல் பயன்படுத்தப் படவில்லை. முன்னொரு காலத்தில் இங்கிலாந்தின் நிதி அமைச்சர், ஆண்டு நிதிச் செயற் குறிப்புகளை ஒரு தோல் பையில் எடுத்துக்கொண்டு மக்கள் அவைக்குச் சென்றார். அந்தோல் பைக்குப் 'பட்ஜெட்' என்று பெயர். அந்தப் பைக்கு உரிய பெயர், நாளடைவில் அதன் உள்ளே இருந்த ஆவணங் களுக்கு ஆகு பெயராகியது. இந்திய அரசிய லமைப்பில் இதற்கு 'ஆண்டு நிதி நிலை அறிக்கை' என்னும் பெயரே கொடுக்கப் பட்டுள்ளது.

80. 1989–90ஆம் ஆண்டில் இந்த அரசு, 16000 கல்லூரி ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில், ரூ. 57.38 கோடி செலவில் அவர் களுக்குப் பல்கலைக் கழக மானியக் குழுவின் ஊதிய விகிதங்களை வழங்கியது. பொறியியல் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக் கல்வி நிலையங் களிலும் பணியாற்றும் 4000-க்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்கு ரூ. 19.45 கோடி செலவில் அனைத்திந்திய தொழிற்கல்வி மன்றத்தின் ஊதிய விகிதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

81. மதுரைக்குத் தென் பகுதியில் உள்ள கல்லூரிகளை இணைத்து ஒரு பல்கலைக் கழகம் திருநெல்வேலி நகரில் அமைய இருக்கிறது என்பதுடன், அந்தப் பல்கலைக் கழகம் "நீராருங் கடலுடுத்த" எனத் தொடங்கும் தமிழ்த் தாய் வாழ்த்தினை வழங்கிய மாமேதையின் நினைவாக "மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்" என்ற பெயரில் அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் வளர்ச்சியும் பண்பாடும்

82. கடந்த நிதிநிலை அறிக்கையில் கூறியதற் கொப்ப முன்பு கழக அரசால் தொடங்கி இடையில் நிறுத்தப்பட்டிருந்த '' அகர முதலி '' திட்டம் மீண்டும் புதிய இயக்ககமாகத் தோற்றுவிக்கப்பட்டு உயிர் எழுத்துக்களின் தொகுப்புப் பணி முடிந்துள்ளது.

83. தமிழ்நாட்டு வரலாற்று வரைவுத் திட்டம் ஏற்கனவே கழக அரசால் தொடங்கப் பட்டு இடையில் நிறுத்தப்பட்டிருந்தது, மீண்டும் நடப்பாண்டில் தொடரப்பட்டு பிற்காலப் பாண்டியர், பல்லவர் தொகுப்பு முடிந்து அச்சுக்குத் தரப்பட்டுள்ளது.

84. நற்றிணை, பரிபாடல், கம்ப ராமாயணம் ஆகிய இலக்கியங்களின் ஆங்கில மொழியாக்கம் கவிதை நடையிலேயே தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.

85. தமிழர் பண்பாடு, வரலாறு, இவற்றினை மேலும் அறிவதற்கு ஏற்றவகையில் பூம்புகார் கடல் அகழாய்வு, கோவாவில் உள்ள தேசிய ஆழ்கடல் ஆய்வு நிறுவனத்தின் ஒத்துழைப்போடு, மூன்றாண்டுத் திட்டமாக செயற்படுத்த, வரும் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

86. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதற் கொப்ப உலகத்தின் பல பகுதிகளில் தமிழ் மொழி பேசுவோர் பரந்து காணப்பட்டாலும் தமிழை அவர்கள் சிறப்பான முறையில் பயிலுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களின் ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் தமிழில் பாட நூல்கள் — எளிய தமிழ் அகராதி — எளிய தமிழ் இலக்கணம் ஆகியவற்றைத் தமிழ் வல்லுநர்கள் ஒத்துழைப்புடன் வெளியிடுவதற்கும் — தொன்மையான தமிழ் மொழி, தற்காலச் சமூகவியல், அறிவியல் வளர்ச்சி ஆகியவைகளுக்கேற்ப வளம் பெறுவதற்குரிய வழிநிலைகள் மேற்கொள்ளப்பட்டு — உலகப் புகழ் பெற்ற நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்து மலிவு விலையில் வெளியிடுவதற்கும்— சென்னையில் அமைந்துள்ள வள்ளுவர் கோட்டத்தை தமிழ் இலக்கியம், கலை, மரபு, பண்பாட்டுக் கூறுகளை வளர்க்கும் பணிகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கும் — அரசுக்கு கருத்துக்களைக் கூறி செயல்பட தமிழ் வல்லுநர்களைக் கொண்ட தமிழ் இயக்கக் குழு ஒன்று அமைக்கப்படும்.

87. நீண்ட காலக் கனவு நிறைவேறும் வகையில் நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம்புரியும் குமரி முனையில் உலகப் பொதுமறை தந்த வள்ளுவர்க்கு குறளின் அதிகாரங்களைக் குறிக்கும் வண்ணம் 133 அடி உயரமுள்ள மாபெரும் சிலையொன்று அமைக்கும் பணி இந்த ஆண்டு தொடங்கப்படும் என்பதை உவகை பொங்கிடத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாவேந்தர்—அம்பேத்கார் நூற்றாண்டு விழாக்கள்

88. இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர் என முரசு கொட்டி — பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியில் வா என, இளைய தலைமுறைக்கு அழைப்பு விடுத்து — எழுச்சியுற்ற பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என மகளிர் மாண்புரைத்து —காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அவன் காணத் தகுந்தது வறுமையா ? எனப் பொங்கியெழுந்து—புதியதோர் உலகு செய்வோம் எனப் புரட்சிக்குரல் ஒலித்து — நம்மிடையே சிங்கமெனச் செம்மாந்து உலவிய பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழா இந்த ஆண்டு தொடங்குகிறது. அஃதே போல் அரசியல் மேதை —அறிஞர் பெருந்தகை — அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட மக்களின் அடிமை விலங்கு உடைத்தெறிய ஆர்த்தெழுந்த ஆற்றலாளர் அண்ணல் அம்பேத்காரின் நூற்றாண்டு விழாவும் இந்த ஆண்டிலேதான் வருகிறது. இந்த இரு பெருந்தகையாளர்களின் எண்ணங்களுக்குச் செயல் வடிவம் தரும் வண்ணம் இருவரின் நூற்றாண்டு விழாக்களையும் நமது அரசு சிறப்புடன் நடத்திடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி யுடன் வரவேற்பார்கள்.

மக்கள் நல்வாழ்வு

89. கிராமப்புற சுகாதாரக் காப்புப் பணிகளுக்காக, 30000 மக்கள் தொகைக்கு ஒரு தொடக்க சுகாதார நிலையம் என்றும், 5000 மக்கள் தொகைக்கு ஒரு துணை நிலையம் என்றும், மாநிலம் முழுவதும் 9946 சுகாதார நிலையங்கள் அமைந்துள்ளன. இந்த சுகாதார நிலையங்களில் உரிய மருத்துவர்கள் மற்றும் பணியாளர்களை முழு அளவில் நியமிக்கவும் அவற்றிற்குக் கட்டிடங்கள், சாதனங்கள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

90. சென்னை மாநகரில் உலக வங்கியின் உதவியுடன் குடும்ப நலத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வந்துள்ளோம். தமிழ்நாட்டில் உள்ள எல்லா நகர்ப்பகுதிகளுக்கும் இத்திட்டம் படிப்படியாக விரிவு படுத்தப்படும். இதற்கு மொத்தம் ரூ. 60.71 கோடி செலவிடப்படும். இத்திட்டத்தின் மூலம், நகரங்களில், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடும்ப நலம், சுகாதாரக் காப்பு அளிக்கப்படும்.

91. தமிழ்நாடு அரசு மருத்துவவியல் ஆராய்ச்சி நிறுவனம் (தாமரை), மருத்துவ

112. ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களுக்குத் தக்க பயிற்சியும், வேலை வாய்ப்புக்கு மானியமும் சிறு தொழில்கள் தொடங்க நிதி உதவியும் உள்ளடங்கிய ரூ. 25 கோடிக்கான சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இத் திட்டத்தினால் சுமார் ஒரு இலட்சம் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் பயன் பெறுவார்கள்.

113. ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் பெரும் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் 42000 வீடுகள் கட்டி முடிக்கப்படும். வரும் ஆண்டில் 47000 இலவச வீடுகள் ரூ. 56 கோடி செலவில் கட்டித் தரும் பணி மேற்கொள்ளப்படும்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்

114. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், சீர் மரபினருக்கும் கல்வி, வேலை வாய்ப்புகள் பெறுவதில் சிறப்பு இட ஒதுக்கீடாக 20 விழுக்காடு இவ்வரசு அளித்துள்ளதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவார்கள். இப்புதிய கொள்கை மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் சீர் மரபினருக்கும் கணிசமான அளவுக்குப் பயன் தந்துள்ளது என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 1989ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் 187 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆவர். ஆனால், அதற்கு முந்தைய ஆண்டில் இவ்விரு வகுப்பினரிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 68 மட்டுமேயாகும். இதுபோல, 1989-ல் பொறியியல் கல்லூரிகளில் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் 685 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆவர். அதற்கு முந்தைய ஆண்டில் இவ்விரு வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 354 மட்டுமேயாகும். மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலனுக்காகத் தனி இயக்குநர் அலுவலகம் ஒன்று நடப்பாண்டில் ஏற்படுத்தப்பட்டு, இவர்கள் நலனுக்காகப் பல திட்டங்களை வகுத்துச் செயல்பட்டுவருகிறது.

115. வரும் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலனுக்காக மொத்த ஒதுக்கீட்டினை ரூ. 30.70 கோடியாக குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்த்தியுள்ளோம். 1989-90ஆம் ஆண்டில் செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடான ரூ. 19.57 கோடியுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இது கணிசமான உயர்வாகும். வரும் ஆண்டில் 50 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். இந்த மாணவர் இல்லங்களில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோரைச் சேர்ந்த மாணவர்களுக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படும். புதிதாக 40 மாணவர் இல்லங்களுக்கு கட்டிடங்கள் ரூ. 4 கோடி செலவில் கட்டி முடிக்கப்படும்.

116. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோரைச் சேர்ந்த குடும்பங்களுக்கு வீட்டுமனை கையகப்படுத்தி இலவசமாக வழங்குவதற்காக புதியதோர் திட்டத்திற்கு முதற் கட்டமாக ரூபாய் ஒரு கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.



சிறுபான்மையோர் பாதுகாப்பு—நலன்

117. இவ்வரசு மதம் மற்றும் மொழிச் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்காக திரு. அப்துல் ஜபார் தலைமையில் பேராசிரியர் மரியநல்லுவை துணைத்தலைவராகக் கொண்டு மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஒன்று அமைத்துள்ளது. மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்களுக்கு, பிற்படுத்தப்பட்டோருக்கு நிகராக அனைத்து சலுகைகளும் இவ்வரசு முன்பே 1975-ஆம் ஆண்டில் வழங்கியுள்ளது. மேலும் அவர்களுக்கு ஆதி திராவிடர்களுக்கு இணையாக சலுகைகள் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை மத்திய அரசுக்கு இவ்வரசு பரிந்துரை செய்துள்ளது.

118. சென்னையிலிருந்து நேரடியாக ஹஜ் செல்லக் கூடிய வசதிகள் ஏற்பட்ட பின்பு சென்னையில் ஹஜ் செல்லும் பயணிகள் தங்கும் வசதிக்கான தேவைகள் அதிகரித்துள்ளன. இதனையொட்டி, வரும் ஆண்டில் ஹஜ் பயணியர்கள் தங்குவதற்கு ஏற்ப ஒரு பயணியர் இல்லம் சென்னையில் அமைக்கப்படும்.

வேலை வாய்ப்பு

119. ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது. நடப்பாண்டில், இத்திட்டத்தின்கீழ் 847 இலட்சம் மனித நாட்களுக்கான வேலைவாய்ப்பு ரூ. 186.49 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டது. மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இரண்டு இலட்சம் நபர்களுக்கு சுயவேலை வாய்ப்புக்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

120. கடந்த வரவு—செலவுத் திட்ட உரையில், கிராமப் பகுதிகளில் வாழும் வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றை நான் அறிவித்திருந்தேன். இத் திட்டத்தின் கீழ், 10 வது வரை படித்த 25000 பேர், மக்கள் நலப் பணியாளர்களாக தெரிந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி பெறத் தொடங்குகிறார்கள். இந்த மக்கள் நலப் பணியாளர்களில் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 மதிப்பூதியம் வழங்கப்படும். இவர்கள் கிராமங்களில் பல்வேறு ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

121. இதேபோல், நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளில் பன்னிரண்டாவது வகுப்பு (பிளஸ் 2) தேர்வு பெற்ற 10000 பேர், மக்கள் நலப் பணியாளர்களாக வரும் ஆண்டில் நியமிக்கப்படுவார்கள்.

(தொடர்ச்சி 33-ஆம் பக்கம்)



மதுரை மாவட்டத்தில்

வனத்துறைப்பணிகள்

மதுரை மாவட்டத்தில் மதுரைக் கோட்டம், தேனிக் கோட்டம் என இரண்டு வனக் கோட்டங்கள் உள்ளன. மதுரைக் கோட்டத்தில், மதுரை சோழவந்தான், உசிலம்பட்டி, கண்டமனூர் என 4 பிராந்தியச் சரகங்கள் உள்ளன; தேனிக் கோட்டத்தில் போடிநாயக்கனூர், கம்பம், கடலூர், மேகமலை என 4 பிராந்திய சரகங்கள் உள்ளன.

மதுரை மாவட்டத்தில் உள்ள மொத்த வன நிலங்களின் பரப்பு 1,28,740 எக்டேர் ஆகும். மதுரைக் கோட்டத்தில் சிறுமலையில் உள்ள பாதுகாக்கப்பட்ட காடுகளில் மட்டும் அடர்ந்த காடுகளைக் காணலாம். மற்ற இடங்களில் முட்புதர்கள்தான் காணப்படுகின்றன. தேனிக் கோட்டத்தில் தேக்கு, தோதகத்தி மரங்களும், பல்வேறு சாதி மரங்களும் விளைந்துள்ள அடர்ந்த காடுகள் உள்ளன.

சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்தவும், மரமற்ற பகுதிகளில் மரம் வளர்க்கவும் திட்டப்பணிகள் இந்த மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இத்திட்டங்களின் மூலம், கூழ்மரத் தோட்டம், விறகு மரத் தோட்டம் உருவாக்குதல், சிறுவனப் பொருட்கள் உற்பத்தி செய்தல், தரம் நிறைந்த காடுகளில் மறு உற்பத்தி செய்தல், வன ஒருங்கிணைப்பு செய்தல், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சிப் பணிகள், கட்டடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

கூழ்மரத் தோட்டம்

காகிதம் தயாரிப்பதற்குத் தேவையான யூகலிப்டஸ் மரங்கள், உடை மரம் போன்ற மரங்களை வளர்த்துத் தொழில் வளத்தை மேம்படுத்துவதற்கு இந்தத் திட்டம் வழி வகுக்கிறது. இந்த நிதி ஆண்டில் ரூ. 2.48 இலட்சம்

செலவில், 2 எக்டேர் நிலத்தை மேம்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

விறகு மரத்தோட்டம்.

பெரிய நகரங்களிலும் பெரிய சிற்றூர்களிலும் வாழ்ந்து வரும் பொது மக்களின் எரிபொருள் தேவையை விறகு மரங்கள் நிறைவேற்றுவதால், நகரங்களின் அருகில் உள்ள காடுகளில் விறகு வழங்குவதற்குரிய மரங்களை வளர்க்கும் திட்டத்தை இந்த ஆண்டு 5 எக்டேரில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 1.62 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறுவனப் பொருட்கள்

மக்களின் தேவையான புளி, இலவம் பஞ்சு போன்றவற்றை ஈடு கட்ட, அதற்குரிய மரங்களை நடும் வேலை நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு 200 எக்டேரில் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ. 5.76 இலட்சம் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தரம் நிறைந்த காடுகளில் மறு உற்பத்தி

அடர்ந்த காடுகளிலிருந்து மரங்களைத் தாறுமாறாக வெட்டுவதால் அந்தப் பகுதிகள் சேதம் அடைகின்றன. அத்தகைய பகுதிகளில், சிறந்த மரவகைகளை நட்டுப் பேணி, வனச் சூழல் பண்ணைகள் உருவாக்கப்படுகின்றன. பொதுமக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு, மர வளர்ப்பு ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு இத்திட்டம் பயன்படுகின்றது. இதற்காக ரூ. 15 ஆயிரம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வன ஒருங்கிணைப்பு

பொதுவாக நிலங்களின் மீது மக்களுக்கு மோகம் இருப்பதால், சமூக விரோதிகள், நிலங்களை அவ்வப்போது ஆக்கிரமிப்பு செய்து வருகிறார்கள். இந்த ஆக்கிரமிப்பு ஏற்படாமல் பாதுகாப்பதற்காக சிமெண்ட் காங்கிரீட் தளத்துடன் கூடிய எல்லைத் தூண்கள் நடப்பட்டு வருகின்றன. இந்த நிதி ஆண்டில் இம் மாவட்டத்தில் ரூ. 1.60 இலட்சம் செலவில், காங்கிரீட் தூண்கள் நிறுவப்பட உள்ளன.

மேற்குத் தொடர்ச்சி மலை விரிவாக்கத் திட்டம்

உயிரினங்களின் தலையீடுகளினால் மேற்குத் தொடர்ச்சி மலை மிகுந்த மாறுதல் அடைந்து வருகிறது. சுற்றுச் சூழல் சரியான முறையில் பாதுகாக்கப் படாததால் இந்நிலை உருவாகிறது. இதனால் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியம் ஆகிறது.

எனவே, சுற்றுச் சூழலை மேம்படுத்துதல், மரம் குறைந்த காடுகளுக்கும், தரமிழந்த காடுகளுக்கும் புத்துயிர் அளித்து உயிரின உரத்தை மேம்படுத்துதல், புதுவகை நாற்றங்கால் உருவாக்குவதில் தொழில் நுட்பத்தை ஏற்படுத்துதல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது.

மண் அரிப்பு ஏற்படுகின்ற சமயத்தில் அதனைத் - தடுத்து நிறுத்தும் வகையில் சிறுசிறு தடுப்பறைகள் ஆங்காங்கு கட்டப்பட்டு வருகின்றன. பக்கத்தில் உள்ள நிலங்களில் தண்ணீர் மட்டம் உயருவதற்கும், வனங்களில் உள்ள உயிரினங்கள், மேய்ச்சலுக்கு வருகின்ற கால்நடைகள் ஆகியவற்றில் தண்ணீர்த் தேவையைத் தீர்ப்பதற்காகவும் கழிவுநீர்க் குட்டைகள் உருவாக்கப்படுகின்றன. தகுந்த மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மலையடிவாரத்தைச் சுற்றிலும் கற்றாழைகளும் நடப்பட்டு வருகின்றன. _ நமது செய்தியாளர்

பார்த்தோம் படித்தோம்

'தமிழரசு' (1.3.90) இதழ் கண்டோம்; அட்டையில் இருந்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா படம் - அவரைப் பற்றிய கட்டுரை எல்லாமே பிரமாதம்.

—எஸ். நாராயணன்,
பம்பாய்

ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டம் பற்றி எங்களுக்குத் தெரியும்; ஆனால், அன்னை நாகம்மையார் பற்றி இவ்வளவு விஷயங்களா? அடேயப்பா! முதலமைச்சர் கலைஞர், பொருத்தமாகத்தான் பெயரிட்டிருக்கிறார்.

எஸ்.எம். லட்சுமி,
பி.மாலினி
தஞ்சாவூர்.

விவசாயக் கட்டுரை போடுவது போல், 'தமிழரசில்' விளையாட்டுத் துறைக் கட்டுரையும் வெளியிட்டால் நல்லது.

—சி.கே. குமரேசன்,
கோயம்புத்தூர்.

பத்திரிகைகளுக்கு விளம்பரம் அவசியம்தான்; ஆனால், 'தோட்டத்தில் பாதி, கிணறு' என்பது போல் இத்தனைப் பக்கங்கள் விளம்பரம் அவசியம்தானா? யோசிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

—த.கோவிந்தராசுலு,
ஜி.சுப்புக்கண்ணு,
ஆளடிக்குழுளை

பெரியாறு அணை பற்றிய கட்டுரை ஏராளமான செய்திகளைக் கொண்டு கோடையில் குளிர்ச்சி யூட்டும் வகையில் இருந்தது.

—பி.மீனாட்சி சுந்தரம்,
கடையநல்லூர்.

'பற்களைப் பாதுகாப்போம்' என்ற கட்டுரை பல புதிய செய்திகளைக் கொண்டுள்ளது.

பற்களைப் பிரஷ் கொண்டு துலக்க வேண்டும், தேய்க்கக் கூடாது என்ற கருத்து புதுமையானது. சென்னை அரசு பல் மருத்துவமனை பற்றிய புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளக் கட்டுரை உதவியது.

—ஆர். ஜெயந்தி
முதல்வர் (பொறுப்பு)
எஸ்.பி.ஜி. ஆசிரியர்
பயிற்சிப் பள்ளி,
மேட்டுப்பாளையம்.

'நூல் நயம்' பகுதி உண்மையிலேயே நயமான பகுதி; நியாயமான பகுதியுங்கூட

— முருகேசபாண்டியன்,
கரப்பாடி

தானிய சேமிப்பு

ப. பார்த்தசாரதி
மேலாளர்,
தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்

நமது நாட்டில் ஏறக்குறைய 70 விழுக்காடு மக்கள் உழவுத் தொழிலைச் சார்ந்துள்ளார்கள். அவர்கள் பாடுபட்டு விளைவித்த தானியங்களில் சுமார் பத்தில் ஒரு பகுதியை எலிகள், புழுப்பூச்சிகள் போன்ற தானிய எதிரிகள் உண்டு விடுகின்றன என்பது ஆய்வாளர் கணிப்பு. இத்தகைய இழப்பு தனி மனிதர்களாகிய விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், நாட்டிற்கே ஏற்படும் பேரிழப்பாகும்.

பெரும்பாலான விவசாயிகளும் மற்றவர்களும் சேமிப்பின்போது தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதில்லை.

நல்ல விதைகளைத் தேர்ந்தெடுத்து, முறையான விவசாயம் செய்து, களைகளை நீக்கி, தேவையான ஊட்டச்சத்துக்களைக் கொடுத்து, பூச்சி புழுக்களால் விளையக்கூடிய சேதங்களைப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தி, வளம் மிகுந்த பயிர் கண்டு, நல்ல மகசூல் பெற்று விட்டால் மட்டும் போதாது. அறுவடைக்குப்பின் முறையற்ற சேமிப்பால், இழப்பு ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய கடமையையும் நாம் மறக்கக் கூடாது. "கதிரடிக்கும் களங்களில் 1.68 சதவீதமும், போக்குவரத்தில் 0.15 சதவீதமும் பக்குவப்படுத்தும்போது 0.92 சதவீதமும் சேதம் அடைகின்றன. புழு, பூச்சிகளால் 2.55 சதவீதமும், எலிகளால் 2.50 சதவீதமும், பறவைகளால் 0.85 சதவீதமும் ஈரத்தால் 0.68 சதவீதமும் சேதம் அடைகின்றன" என்று மைய அரசு நியமித்த டாக்டர் பான்சே குழு சேதம் பற்றிய விவரங்களைத் தெரிவிக்கிறது.

திரு. பி.எம். தாமஸ் என்ற மத்திய சேமிப்புக்கிடங்கு நிறுவனத்தின் முன்னாள் சேமிப்பு நிபுணர் நாட்டின் மொத்த உணவு உற்பத்தியில் 20 விழுக்காடு அளவு வரை முறையற்ற சேமிப்பின்போது பூச்சிகள், புழுக்கள், எலிகள், பறவைகள் மற்றும் நுண் கிருமிகளால் சேதமடைகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தானியச் சேமிப்பு

ஆண்டு முழுவதும் தேவைப்படும் பல உணவு தானியங்கள் குறிப்பிட்ட பருவ காலங்களில்தான் விளைகின்றன. பஞ்ச காலங்களில் தேவை அதிகரிக்கிறது. உபரி விளைச்சலைப் பாதுகாக்க வேண்டியுள்ளது. விலைவாசிகளைச் சீரமைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இவற்றால் தானிய சேமிப்பு இன்றியமையாத ஒன்றாகி விட்டது. எனவே, உற்பத்தி செய்யப்படும் இடங்கள், கொள்முதல் மற்றும் பதப்படுத்தப்படும் இடங்கள், வினியோக மையங்கள் போன்ற மையங்களில் சேமிப்புக் கிடங்குகள் செயல்பட்டாக வேண்டும்.

முறையான சேமிப்பின் அவசியம்

விவசாய விளைபொருள்கள் எல்லாம் உயிரோட்டம் கொண்ட காரணத்தால் நிலை மாறக்கூடிய தன்மையுடையவை. அவைகள் உயிரியல் ரீதியிலும், இரசாயன நிலையிலும் இயக்கம் கொண்டவை. தட்ப வெப்ப நிலை பருவ கால மற்றும் ஈரம் போன்றவைகளினால் தன் நிலை மாறுபடும் தன்மை கொண்டவை. உயிரினங்களுக்கெல்லாம் அவைகள் உணவாவதோடு மட்டுமன்றி பூஞ்சக் காளான் போன்ற நுண்கிருமிகள், புழுப்பூச்சிகள், எலிகள் போன்றவைகளினாலும் தாக்கப்படுகின்றன.

ஆராய்ச்சி மற்றும் மருத்துவக் கல்வித் துறையில் ஒரு உயர் சிறப்பு மையத்தை நிறுவ வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டதென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இதற்கென ரூ. 115 கோடி செலவில் பெருந்திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், பல கட்டங்களில் படிப்படியாக நிறைவேற்றப்படும்.

92. மருத்துவக் கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் தரத்தை உயர்த்துவதற்கு டாக்டர் பி. ராமமூர்த்தி தலைமையில் அமைந்த வல்லுநர் குழு பல முக்கியமான பரிந்துரைகளை அளித்துள்ளது. இவை ஆராயப்பட்டு, எடுக்கப்பட்டுள்ள முடிவுகள் சிலவற்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். பட்டப் படிப்பை முடித்துப் பணியாற்றக் கூடிய மருத்துவர்களுக்குத் தொடர் கல்வி (Continuing Medical Education) வழங்க வேண்டுமென்ற பரிந்துரை ஏற்கப்பட்டுள்ளது. மேல் நாடுகளில் மருத்துவத் துறையில் நடைபெறும் முன்னேற்றங்களைக் கண்டறிந்து வருவது, எளிதாக்க வேண்டுமென்ற பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

93. இரத்த சேமிப்பு நிலையங்களை ஆய்வு செய்யத் தனிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் இந்த நிலையங்களைச் சீர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

94. கண்புரை சிகிச்சை (Cataract) அளிக்கும் திட்டத்தை குறிப்பிட்ட கால அளவில் செயல்படுத்த வேண்டுமென்ற பரிந்துரையைப் பின்பற்றி நான்கு மாவட்டங்களில் இந்த நோய் இல்லாமல் ஒரு நிலை ஏற்படுத்தும் செயல் திட்டம் நடைபெற்று வருகின்றது. நகர்ப் புறங்களில் குடிசை வாழ் மக்கள் நலனுக்காக பல்வேறு சுகாதார திட்டங்கள் ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்தப்படும்.

95. மாவட்டங்களில் மருத்துவம் மற்றும் சுகாதார திட்டங்கள் செம்மையாக ஒருங்கிணைந்த முறையில் செயல்படுத்த ஒரு இணை இயக்குநர் பதவி அமைக்க வேண்டுமென்ற பரிந்துரையை ஏற்றுக் கொண்டு இதனை வரும் ஆண்டில் செயல்படுத்துவோம். மாவட்டத் தலைமை மருத்துவமனை மற்றும் வட்ட அளவில் உள்ள மருத்துவமனைகளை மேம்படுத்தச் சிறப்புத் திட்டம் வகுக்க வேண்டுமென்ற பரிந்துரையின் அடிப்படையில், வரும் ஆண்டில் புதிய திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

96. டாக்டர் எம். நடராசன் குழு பரிந்துரைத்த " விபத்து அவசர சிகிச்சை " என்னும் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, ரூ. 5.56 கோடி செலவில் இதனைச் செயல்படுத்துவது நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களில் இணைக்கப்பட்டுள்ளது.

97. சேலத்தில் அமைந்திருக்கவேண்டிய மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியைச் சார்ந்த மாணவர்கள் தற்போது இதர மருத்துவக் கல்லூரிகளில் பயின்று வருகிறார்கள். இதனைச் சேலத்திற்கு மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வந்துள்ளது. இதனை ஏற்றுக்கொண்டு, வரும் ஆண்டிலிருந்து இக்கல்லூரி சேலத்திலிருந்தே செயல்பட நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிநீர்

98. அடிப்படைத் தேவைகளில் ஒன்றான குடிநீர் வசதியை அளிப்பதற்கு இந்த அரசு அக்கறை காட்டி வருகிறது. குடிநீர் வசதி இல்லாத கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை 10323 எனக் கண்டு, நடப்பு ஆண்டில் எடுத்த முயற்சியின் காரணமாக, 5905 கிராமங்களுக்கும் குக்கிராமங்களுக்கும் அந்த வசதியை அளித்துள்ளோம். எஞ்சியுள்ள 4418 இடங்களுக்கும் வரும் மே திங்கள் இறுதிக்குள் குடிநீர் வசதி அளிக்கப்பட்டு விடும். இதற்கென ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

99. அண்மையில் ஆந்திர மாநில முதல்வருடன் தெலுங்கு-கங்கைத் திட்டப் பணியின் முன்னேற்றம் குறித்துக் கலந்து பேசியுள்ளேன். 1993ஆம் ஆண்டு தொடக்கத்தில் சென்னை மாநகருக்கு இத்திட்டத்தின் மூலம் சுமார் 12000 மில்லியன் கன அடி குடிநீர் வழங்குவதற்கு அனைத்துப் பணிகளும் முடுக்கி விடப்படுமென ஆந்திர முதல்வர் உறுதி அளித்துள்ளார். நடப்பு ஆண்டில் நமது பங்காக ஆந்திர மாநில அரசுக்கு ரூ. 45 கோடி கொடுத்துள்ளோம். வரும் ஆண்டில் மேலும் ரூ. 45 கோடி கொடுப்பதற்கு வரவு-செலவு திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் தெலுங்கு கங்கைத் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகிக்கும் பணிக்கான உதவியாக ரூ. 505 கோடி கேட்டு—உலக வங்கி, மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம், ஏனைய நிதி உதவி தரும் நிறுவனங்களை அணுகியுள்ளோம்.

100. இடைக்காலத்தில் சென்னை மாநகருக்கு வடக்கேயுள்ள குடிநீர்க் கிணறுகளில் உள்ள நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர வடிகால் வாரியத்திற்கு ரூ. 30 கோடி வழங்க வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

101. சென்னை மாநகருக்கு மட்டுமல்லாமல் மற்றும் சில பெரிய நகரங்களுக்குக் குடிநீர் வழங்க, உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வழங்கல்—துப்புரவுத் திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அண்மையில் தலைமைச் செயலரின் தலைமையில் அதிகாரிகளின் குழு அமெரிக்கா சென்று இத்திட்டத்தை மாற்றியமைப்பது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளது. இம்முயற்சியின்பலனாக இத்திட்டம் சுமார் ரூ. 300 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் முன்பிருந்தபடி மதுரை, கோவை, சேலம் ஆகிய நகரங்களுக்குக் குடிநீர் வழங்குவதுடன், மாற்றியமைக்கப்பட்ட வடிவில் கூடுதலாக பொள்ளாச்சி, மணப்பாறை, சங்கரநயினார்கோவில், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் ஆகிய ஆறு நகரங்களுக்கும் குடிநீர் வழங்கும்.

வீட்டு வசதி

102. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நடப்பு ஆண்டில் ரூ. 97 கோடி செலவில் 18800 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. வரும் ஆண்டில் இந்த வாரியம் ரூபாய் 117 கோடி செலவில் 20800 வீடுகளைக் கட்டும் பணியை மேற்கொள்ளும்.

103. வரும் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் பணிகளைக் கணிசமாக விரிவுபடுத்துவதற்கு வகை செய்துள்ளோம். சென்னை மாநகரில் இந்த வாரியம் ஆயிரம் குடியிருப்புகள் கட்டி வருகின்றது. வரும் ஆண்டில் குடிசை பகுதிகளில் வாழ்பவர்களுக்காக 12000 அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டித்தரும் பணி எடுத்துக் கொள்ளப்படும். இப் பணி வீட்டு வசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகத்தின் (HUDCO) உதவியுடன் ரூ. 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் 12 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகின்ற வகையில் குடிசைப் பகுதி சீரமைப்புத் திட்டம் (Slum Improvement Scheme) தொடர்ந்து செயல்படும்.

104. வீடுகளைத் தரம் உயர்த்தும் புதிய திட்டம் (Shelter Upgradation Programme) ஒன்றுக்கு மத்திய அரசு நிதி உதவி அளிக்கிறது. இத்திட்டத்தின் மூலம் குடும்பம் ஒன்றுக்கு வீடு சீரமைப்புப் பணிகளுக்கு ரூ. 4000 நிதி உதவி அளிக்கப்படும். இத்தொகையில் ரூ. 1000 மானிய உதவியும் அடங்கும். இத்திட்டத்தின்கீழ், நகரப் பகுதிகளில் வரும் ஆண்டில் ஒரு இலட்சம் வீடுகள் பயனடையும்.

நகர்ப்பகுதி வளர்ச்சி

105. ஒப்புநோக்குமிடத்து, கிராமப் பகுதிகளைவிட நகரப்பகுதிகள் பகட்டாகத் தோன்றினும், அங்கேயும் ஆயிரம் பிரச்சினைகள் முட்டி மோதிக் கொண்டு கிடக்கின்றன என்பதை எளிதில் உணரலாம். நகரங்களில் பல்வேறு நெருக்கடிகளைத் தவிர்க்க, தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டம் ரூ. 632.55 கோடி அளவில் உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் சென்னை, சேலம், தூத்துக்குடி, திருநெல்வேலி, ஈரோடு, கோவை, திருச்சி, மதுரை, திருப்பூர், வேலூர் ஆகிய நகரங்களும் அவற்றைச் சேர்ந்த புறநகர்ப் பகுதிகளும் பயனடைகின்றன. வரும் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ. 90.45 கோடி செலவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 20000 குடும்பங்கள் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணியினால் பயன்பெறும். 11000 மனைகள் வசதி வாய்ந்த சூழலுடன் அமைக்கப்படும்.

106. சென்னை ராயபுரத்தில் இருப்புப் பாதை மீது மேம்பாலப் பணி ரூ. 13.2 கோடி செலவில் எடுத்துக் கொள்ளப்படும். இதனால், அந்தப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஓரளவு குறையும்.

107. மாநிலத்தில் உள்ள பல நகராட்சிகள், சிறிய, நடுத்தரத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். அண்மையில் நகர்ப்புற இன்றியமையாத அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகம் ஒன்றை இவ்வரசு ஏற்படுத்தியுள்ளது. வீட்டுவசதி நகர்ப்பகுதி வளர்ச்சிக் கழகம் (HUDCO) என்ற நிறுவனத்திடம் இருந்து மேலும் நிதி ஆதாரங்களைத் திரட்டி, நகராட்சிகளில் வளர்ச்சிப் பணிகளையும் திட்டங்களையும் நிறைவேற்றும். நகர—நாட்டுப்புற திட்ட நிதியை வலுப்படுத்தும் பொருட்டு, அந்த நிதிக்கு அரசு நீண்ட காலக் கடனாக வழங்கியிருந்த ரூபாய் 30 கோடியை மூலதன மானியமாக மாற்றித் தர முடிவு செய்துள்ளது. இதனால், சிறிய நகராட்சிகளும் பேரூராட்சிகளும் பலவகையான மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்ற இயலும்.

சத்துணவு

108. சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் 60 இலட்சம் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை ஒரு முட்டை வழங்குவதன் மூலமும், வைட்டமின் ' ஏ ' சொட்டு மருந்து கொடுக்கப்படுவதன் மூலமும் இத்திட்டம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கென நடப்பாண்டில் ரூ. 173 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. வரும் ஆண்டில் இதனை ரூ. 195 கோடியாக உயர்த்தியுள்ளோம்.

109. சத்துணவுத் திட்டம இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆறு மாதத்திலிருந்து மூன்று வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து திட்டம் பத்து மாவட்டங்களின் தனி மையங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விரு திட்டங்களையும் இணைத்து ஒரே மையத்தில் ஆறு மாதங்களுக்கு மேல் மூன்று வயது வரை உள்ள குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தும் மூன்று வயதிலிருந்து ஆறு வயது வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு சத்துணவும் கிடைக்கும் வகையில் புதிய ஒருங்கிணைந்த திட்டம் செயல்படுத்தப்படும். உலக வங்கி உதவியுடன் செயல்படுத்த இருக்கும் இந்தப் புதிய திட்டத்திற்கு, வரும் ஐந்தாண்டுகளில் கூடுதல் செலவு ரூ. 350 கோடியாகும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நலன்

110. ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடி மக்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்புகளில் ஊக்குவிப்பும் வசதிகளும் செய்து கொடுப்பதன் மூலம், சமூக, பொருளாதார துறையில் அவர்களை முன்னேற்றும் முயற்சி தொடர்கிறது.

111. வரவு-செலவுத் திட்டத்தில் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள் நலனுக்காக ரூ. 90.53 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர், பழங்குடி மாணவர்களுக்காகப் புதிதாக 40 மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும். வரும் ஆண்டில் ஆதி திராவிடர்கள், வீட்டு மனைகளுக்கான ஒதுக்கீடு ரூ. 2.5 கோடியாக உயர்த்தப்பட்டு, அவர்களுக்கு 40000 இலவச வீட்டுமனைகள் அளிக்கப்படும்.

உணவு தானியங்களைப் பாதுகாக்கும் முறைகள், அவைகளின் ஈரப்பதம், சுற்றுப்புற தட்ப வெப்ப நிலை மற்றும் காற்றுத் தன்மையைப் பொருத்ததாகும். முறையான (விஞ்ஞான ரீதியிலான) சேமிப்பு இல்லையெனில் சேமிப்பின்போது ஏற்படும் இழப்பைக் குறைக்க இயலாது.

மரபு நிலை கிடங்குகள்
(கன்வென்ஷனல் வேர் ஹவுஸ்

இந்தக் கிடங்குகளில் 15 விழுக்காட்டிற்குக் குறைவான ஈரப்பதம் உள்ள சரக்குகளைத்தான் வைக்க வேண்டும். அப்பொழுதுதான் பாக்டீரியா, ஃபங்கஸ் போன்ற நுண் கிருமிகள் இலைகளைத் தாக்கா. ஆனால் இந்த மரபு நிலைக் கிடங்குகளின் சூழ்நிலையில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் மூட்டைகளில் புழுப்பூச்சிகள், எலிகள் போன்றவைகளின் தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். ஆகவே விஞ்ஞான சேமிப்பு முறைகள் கீழ்க்கண்டவாறு செயல்படுத்தபடுகின்றன.

சரக்குகளைக் கிடங்கில் வைக்குமுன் பரிசீலித்தல்

சரக்குகள் இருப்பு வைப்பதற்கேற்ற ஈரப்பதத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா, பூச்சிபுழுக்கள் இல்லாமல் இருக்கின்றனவா என்று பார்க்கவும், சேமிக்கும் சரக்குகளின் தரத்தை நிர்ணயம் செய்யவும் இந்தப் பரிசீலனை அவசியம் தேவை.

எடை போடுதல் மற்றும் அடுக்குதல்

எல்லா மூட்டைகளும் ஒரே எடையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தால், 100 மூட்டைகளுக்கு 10 என்ற அளவில் எடை சோதனை செய்தும், வித்தியாச எடை கொண்ட மூட்டைகள் எனின் எல்லா மூட்டைகளும் எடை போடப்படுகின்றன. பின்னர் மூட்டைகள் குறுக்கு நெடுக்கு அல்லது கட்டட அடுக்கு முறைகளில் அடுக்கப்பெறுகின்றன. ஒவ்வொரு ஸ்டாக்கின் உயரம் அந்தந்த தானியத்தைப் பொறுத்தது. உதாரணமாக நெல்லுக்கு 16 மூட்டைகள், கோதுமைக்கு 18 மூட்டைகள், மிளகாய் வத்தலுக்கு 12 மூட்டைகள் உயரத்துக்கு மேற்படாமல் அடுக்க வேண்டும்.

மருத்துவக் கல்லூரிகளில் ‘செமஸ்டர்’ முறையைத் தொடர்ந்து அமல்படுத்த முடிவு

ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும் அறிவித்தபடி, மருத்துவக் கல்லூரிகளில் ‘செமஸ்டர்’ முறையைத் தொடர்ந்து அமல்படுத்துவது என்று 8.3.90 அன்று நடைபெற்ற, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல் கலைக் கழகப் பாடத்திட்டக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மூட்டைகளை ஒரு போதும் தரையில் அப்படியே அடுக்கக் கூடாது. பாலிதீன் தாள் இடையில் வைக்கப்பட்ட இரு மூங்கில் பாய் அல்லது மரக்கிரேட்டுகளின் மீதோதான் மூட்டைகளை அடுக்க வேண்டும். அப்போதுதான் தரை ஈரம் அடி மூட்டைகளைப் பாதிக்காது.

புழுபூச்சிகளிடமிருந்து பாதுகாத்தல்

தானியங்களில் புழு பூச்சிகள் அண்டாமலிருக்கத் தடுப்பு முறையாக மாலதியான் 50 சதம் மற்றும் டீடீவி பி தெளிப்பு மருந்தை 15 நாட்களுக்கு ஒருமுறை மாற்றி மாற்றித் தெளித்தல் வேண்டும். அப்படியும் உயிரோடு பூச்சிகள் தோன்றுமாயின் அலுமினியம் பாஸ்பைடு, மிதைல் புரோமைடு (எம்.பி.ஆர்) அல்லது ஈதிலின் டைபுரோமைடு (ஈ.டி.பி) உபயோகித்து புகை மூட்டான் செய்து அவைகளை ஒழிக்க வேண்டும். புராதனக் குறிப்பேடுகளைப் பாதுகாக்க எம்.பி.ஆர்., ஈ.டி.பி. கலவை கொண்ட புகை மூட்டான் சிறந்தது.

முன்னேறிய வெளிநாடுகளில் மாற்றுவகைச் சேமிப்பு முறைகள்

சைலோ சேமிப்பு

அமெரிக்கா, ஜப்பான் போன்ற பெருமளவு முன்னேறிய நாடுகளில் சைலோ எனப்படும் பெரிய கான்கிரீட்டினாலான - தானியங்களுக்குத் தேவையான தட்ப வெப்ப நிலைகள் உறுதி செய்யப்பட்ட பெரிய கிடங்குகளில் சேமிப்பதால், பூச்சிபுழுக்கள், எலி, பறவை போன்ற எந்தத் தொல்லையும் தானியங்களை அண்டாவண்ணம் இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் அவைகளின் தன்மை கெடாமல் பாதுகாக்க முடிகிறது.

ஏ.சி. கிடங்குகள்:

இவை 15 முதல் 20 சென்டிகிரேடு வெப்ப நிலை கொடுக்கும் குளிர்பதனக் கிடங்குகள், ஜப்பானில் குறிப்பாக அரிசி சேமித்து வைக்க இவை செயல்படுகின்றன. இம்முறையில் மருந்து அடிப்பது அறவே தேவையில்லை. சேமிப்பின் போது எடை குறைவும் ஏற்படுவதில்லை.

நீருக்குள் சேமிப்பு

ஜப்பானில், நெல் மற்றும் அரிசியை மூன்று தாள்கள் கொண்ட பாலிதீன் போன்ற பைகளில் ஈரம் புகாமல் அடைக்கப்பட்டு, கிணறு அல்லது குளங்களில் அமிழ்த்தப்பட்டு, ஓராண்டு வரை சேமித்த பிறகு தானியங்களை வெளியே எடுத்துப் பார்த்த போது அவைகள் எடை குறையாமல் இருந்ததோடு, விட்டமின் சத்துக்களும் அப்படியே தானியங்களில் நிலை பெற்று இருந்தது கண்டறியப்பட்டது. ஆனால் இத்தகைய பைகள் ஈரம் புகாவண்ணம் நீண்ட நாட்கள் வைத்திருப்பது கடினமாகத் தோன்றியதால், இந்த முறை இப்போது பிரபலமாகவில்லை.

கரியமில வாயு கொண்டு சேமிப்பு

சீனாவில் அரிசியைப் பிளாஸ்டிக் பைகளில் அடைத்து, மேற்படி பைகளில் கரியமில வாயுவை பீச்ச வைத்து காற்று புகாமல் மூடிவிட்ட போது கரியமில வாயு அரிசி மணிகளில் உறிஞ்சிக் கொள்ள பைகளின் உள்ளே காற்றில்லாத நிலை ஏற்பட்டு உள்ளே இருந்த தானியங்கள் ஓராண்டு வரை கெடாமல் இருந்தன.

ஜப்பானில் சேமிப்பின்போது தானியங்களில் ஏற்படும் இழப்பு பெருமளவு புதிய வார்ப்பு உத்திகளைக் கொண்டு தவிர்க்கப்படுகிறது. மேலும் அங்கு ஓட்டல்களில் சாப்பாட்டுத்தட்டில் மிஞ்சிப் போகும் உணவுப் பொருட்களையெல்லாம் சேகரித்து, அதிலிருந்து கோழித் தீவனம் தயார் செய்யவும் ஆரம்பித்து விட்டார்கள் என்பது இன்றைய செய்தி.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நோக்கங்கள்

1. விவசாயிகள், வினியோகிப்பவர்கள் மற்றும் ஏனையோர் வணிகத்துறை வங்கிகளில் கடன் உதவி பெறும் வகையில் சேமிப்புக் கிடங்கு செலாவணி இரசீதுகளைத் தோற்றுவித்தல்.

2. அறிவியல் முறைச் சேமிப்பினால் சேமிப்பின்போது ஏற்படும் விரயம் மற்றும் இழப்பைக் குறைத்து, நாட்டின் மொத்த வருவாய் - பங்கைக் கூட்டுதல்.

3. சீரான தர நிர்ணயங்களையும் லாவணி வகைச்சேமிப்புக்கிடங்கு இரசீதையும் கொணர்ந்து முறையான வணிகத்திற்கு வழி வகுத்தல்.

4. நவீன சேமிப்புக் கிடங்குகளை நடத்தத் தேவையான நபர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

5. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு விலைவாசி சீர் அமைப்பு மற்றும் கட்டுப்படுத்தல் பணிகளில் உதவுதல்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் நாட்டுப்பற்றில் அக்கரை

மாண்புமிகு உணவு-கூட்டுறவு அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் சென்னை, கோட்டூர்புரம் பகுதியில் தமிழ்நாடு நுகர்பொருள் கழகத்தின் சில்லரை அங்காடியைச் சோதனையிட்டார். (13.3.90)

கொண்டு மேலும் இரண்டு வகை விரிவாக்கப்பணிச் சேவைகளையும் செய்து வருகிறது.

அ) விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பின் நிகழ் தொழில் நுட்பம் பற்றிய பயிற்சி

இப்பயிற்சியின் நோக்கம்:

1) முறையான சேமிப்பினால் மற்றும் பொது சேமிப்புக் கிடங்குகளில் சேமிப்பதனால் கிடைக்கும் நலன்களையும் மற்றும் பலன்களையும் விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்.

2) சேமிப்புக் கிடங்குகளில் இருப்பு வைத்து சரக்குகளின் பேரில் கிடங்கு இரசீது மூலம் பாங்குகளில் கடன் வசதி பெற விவசாயிகளுக்கு உதவுதல்.

3) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கின் பூச்சி புழு ஒழிப்புப் பணியை விவசாயிகளின் சொந்த சேமிப்பு அறைகளிலேயே செய்யும் விரிவாக்கப்பணி:

ஆ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் பூச்சி புழு ஒழிப்பு விரிவாக்கப் பணிச்சேவை

தமிழக அரசு 1988-ஆம் ஆண்டில் பிறப்பித்த ஆணைப்படி நமது மாநிலத்தின் சுகாதார நலத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், பொது மற்றும் தனியார்துறை நிறுவனங்கள், உணவுப் பொருள் பதம் செய்யும் கூடங்கள், கால் நடைத் தீவன உற்பத்தி நிலையங்கள், திரைஅரங்குகள், உணவுக் கூடங்கள், சுற்றுலா விடுதிகள், தொழிற்சாலை உணவு அறைகள், பல்பொருள் விற்பனை அங்காடிகள், வாசக சாலைகள், சொற்பொழிவு அரங்குகள், சுருங்கச் சொன்னால் எங்கெங்கு பூச்சிபுழு ஆதிக்கம் உள்ளதோ அங்கெல்லாம் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன “பூச்சி ஒழிப்புப் பிரிவு” நேரடியாகச் சென்று நாட்டுக்குத் தேவை என்ற இந்த நல்லதொரு பணியைச் சிறப்பாக செய்து வருகிறது.

கழிவுநீர்க் குழாய் குப்பை கொட்டுவதற்கு அல்ல; கழிவுநீருக்காக



டிஐபிஆர்/2818/எம்எஸ்/89.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்

கோழிப்பண்ணைகளில் எலித் தொல்லையைத் தடுக்கும் முறைகள்

பெரும்பாலான பண்ணையாளர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

கோழிப்பண்ணைக் கட்டடங்கள் எலிகளுக்கு வசதியான இருப்பிடமாகத் திகழ்கின்றன. எலிகள் மட்டுமின்றி. பெருச்சாளிகள் மற்றும் கீரி, அணில் முதலியனவும் பண்ணையாளருக்குப் பல்வேறு வகைகளிலும் பொருளாதார நட்டத்தை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாக இவை கோழிகளுக்குக் கொடுக்கப்படும் தீனியையே தின்று உயிர் வாழ்கின்றன. இரண்டு எலிகள் ஒரு ஆண்டிற்குள் 25 கிலோ அளவு கோழித் தீனியை தின்றுவிடக்கூடியவை. மேலும் தீனியை இரைத்தும், புளுக்கை, சிறுநீர் ஆகியவை கலப்பதனாலும் இதுபோன்று பல மடங்கு தீனியை நாசப்படுத்துகின்றன.

இரவில் பண்ணையாளர் ஒரு எலியைக் கண்ணுற்றால், குறைந்தது அதுபோன்று 10 மடங்கு எலிகள் மறைவிடத்தில் இருக்கக்கூடும். ஒரு ஜதை எலிகள் ஒரு ஆண்டில் 50 குட்டிகள் போடும். அவை திரும்பவும் இனப்பெருக்கம் செய்வதால், ஒரு ஆண்டு முடிவதற்குள் இரண்டு எலிகள் 1,250 எலிகள் ஆக பெருகக் கூடிய வாய்ப்புண்டு.

இவை கோழிகளைப் பாதிக்கக் கூடிய பல்வேறு ஒட்டுண்ணிகளை உடலில் கொண்டிருக்கலாம். மேலும் எலி வகையறாக்கள் பல்வேறு வகை நோய்க்கிருமிகளையும் ஒரு அறையிலிருந்து மற்றொரு அறை, கட்டடம் அல்லது பண்ணைக்குள் எடுத்துச் சென்று கோழி நோய்கள் பரவக் காரணமாகின்றன.

கோழி முட்டைகள், கோழித் தீனி மூட்டைகள், முட்டைத் தட்டுகள், திரைச் சீலைகள், மின்சாரக் கம்பிகள், கோழிப் பண்ணைக் கட்டடங்களின் தரை, கூரை, பக்கவாட்டுச் சுவர், கம்பி வலை ஆகியவற்றைக் கடித்தும், வளை பறித்தும் இவை சேதப்படுத்துகின்றன. வலுவிழந்த மற்றும் மிக இளம் குஞ்சுகளை இவை கடித்து, காயப்படுத்தி, கொன்று விடவும் கூடும்.

இரவு நேரங்களில் எலி வகையறாக்கள் அடிக்கடி இங்கும், அங்குமாக ஓடி கோழிகளைப் பயமுறுத்தி அலைக்கழிக்கின்றன. கோழிகள் இவ்வாறு அடிக்கடி சீண்டப்படுவதால் அவற்றின் வளர்ச்சி வேகம், முட்டை உற்பத்தித் திறன், தீனி மாற்றும் திறன் ஆகியவை குறைந்து வருமான இழப்பு ஏற்படுகிறது.

டாக்டர் வி. சுந்தரராசு,
டாக்டர் தே. நரஹரி மற்றும்
டாக்டர் க. சுந்தரேசன்
கோழியின அறிவியல் துறை,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை.

மேற்கூறிய காரணங்களினால் பண்ணையாளர்கள் எலித்தொல்லையைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சரிவரக் கையாண்டு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

எலித் தொல்லையைத் தவிர்க்க, பண்ணைக் கட்டடங்களைக் கட்டும் போதே முறையான தடுப்புக்களுடன் அமைக்க வேண்டும். கான்கிரீட்டிலான தரை, நிலமட்டத்தில் வெளிப்புறமாய் ஒரு அடி அகலச்சுற்றுச் சுவர்த் தடுப்பு, நிலையான கூரை மற்றும் கம்பி வலைகளைப் பொருத்தி, கட்டடங்களைக் கட்ட வேண்டும்.

கோழி வளர்ப்புக் கட்டடங்களின் வெளிப்புறக் கதவுகளை எப்பொழுதும் எலி வகையறாக்கள் நுழைந்து விடாத வண்ணம் மூடியே வைக்க வேண்டும். பண்ணைகளில் தரை, பக்கவாட்டுச் சுவர்களில் ஏற்படும் வெடிப்பு, வளைப் பகுதிகளையும், கூரை மற்றும் பக்கவாட்டு வலைப் பகுதிகளில் ஏற்படும் ஓட்டைகளையும் அவ்வப்போது அடைத்து விட வேண்டும். கோணிப்பைகள், எரு மூட்டைகள் ஆகியவற்றைச் சுவர்களைச் சுற்றி அடைத்து நிறுத்தக் கூடாது. சிறந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட கோழிகளை உடனுக்குடன், அப்புறப்படுத்திவிட வேண்டும். பண்ணைப் பகுதியையும், சுற்றுப்புறங்களையும் எப்பொழுதும் சுத்தமாக வைத்திருப்பதன் மூலமே எலித் தொல்லையைப் பெருமளவு குறைக்கலாம். அவ்வப்பொழுது எலிப் பொறிகளைப் பல்வேறு இடங்களில் வைத்து எலிகளைப்பிடித்துஒழிக்கலாம்.

எலிப் பாசாணம் மருந்துகளைக் கவனமாக உபயோகித்தும் எலிகளை ஒழிக்கலாம். ரோடாப்ரின் (0.5 சதம் வார்பாரின்), புரோமோடியோலோன் 0.005 சதம், ரேட்-ஓ-கில் 0.25 சதம், சிங்க் பாசுபைடு 1 சதம் அல்லது இவை போன்ற வேறு எலிப்பாசாண மருந்துகளைப் போதுமான அளவில், எவ்விதத்திலும் கோழிகள் உள்ள பகுதிக்குச் சென்று விடாதவாறு, வெவ்வேறு இடங்களில் வைத்து எலிகளைக் கொன்று விடலாம்.

கோழித்தீனி சேமிப்பு அறைகளிலும், எலி வளைகளிலும் அவ்வப்பொழுது அலுமினியம் பாசுபைடு மாத்திரைகளை உபயோகித்து புகை மூட்டம் காட்டி எலியைக் கொல்லலாம்.

தொழிலாளிகளை ஊக்குவித்து முடிந்தவரை எலிகளைப் பிடித்துக் கொன்று விடச் செய்யலாம். ஊக்கத் தொகையாகப் பிடிபட்ட எலி ஒன்றுக்கு இவ்வளவு என தொழிலாளிக்குக் கொடுத்து ஊக்குவிக்கலாம்.

எலி பிடிப்பதில் பயிற்சி உள்ளவர்களை அவ்வப்போது தருவித்து (ஆறு மாதத்திற்கொரு முறை) எலிகளைப் பிடித்துச் செல்ல தக்க ஏற்பாடு செய்யலாம்.

நிறைந்த நெஞ்சம்

—டாக்டர் மு. வரதராசனார்

இலக்கிய விருந்து

நங்கை ஒருத்தி நம்பி ஒருவனிடம் காதல் கொண்டாள். அவனுடைய அழகை மட்டும் கண்டு போற்றிக் காதல் கொள்ளவில்லை. அவனுடைய உள்ளப் பண்பையும் ஒருவாறு உணர்ந்து நம்பிக்கை கொண்ட பிறகே காதல் கொண்டாள். அவனும் அவ்வாறே அவளு டைய அழகையும் பண்பையும் உணர்ந்து போற்றியே காதல் கொண்டான். இருவர் காதலும் வளர்ந்து வந்தன. இந்த வளர்ச்சிக் குத் தோழி ஒருத்தி துணையாக இருந்தாள். அந்தத் தோழி வாழ்க்கைப் பொறுப்பை நன்கு உணர்ந்தவள். ஆதலால் தக்க அறிவுரை களைக் கூறியும் நெறிகளை உணர்த்தியும் அவ்வப்போது இருவர் நெஞ்சத்தையும் பண் படுத்தி வந்தாள்.

உலகம் பொல்லாதது. இளைஞர் இருவரின் மனம் இயைந்த வாழ்க்கைக்கு அன்பு மட்டும் போதாது என்று, உலகம் எத் தனையோ விதிகளை வகுத்திருக்கின்றது. அந்த விதிகளில் சில, காதலின் வளர்ச்சிக்கே தடையாகவும் உள்ளன. ஒருசில விதிகள், வளர்ந்த காதலையும் முறிக்க வல்லனவாக உள்ளன.

நம்பியும் நங்கையும் கொண்ட காதலுக்கு உலகம் பெருந்தடை ஒன்றையும் ஏற்படுத்த வில்லை. ஆயினும் பெற்றோரின் உடன் பாடு என்ற ஒன்றும், திருமணம் என்ற மற்றொன்றும் அவர்களின் வாழ்க்கைக்குத் தேவையாக இருந்தன.

தோழி படிப்படியே இந்த இரண்டையும் பெறுமாறு நம்பியைத் தூண்ட முயன்றாள். பெற்றோரை அணுகிச் சென்று பெண் கேட்குமாறு வேண்டுதல் அவ்வளவு பெரிய செயல் அன்று. நம்பி எவ்வளவோ தயங் கினான். இடையிடையே அவனுக்கு உலகக் கடமைகள் வேறு வந்து சேர்ந்தன. அவற்றைச் செய்து முடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது, வழக்கம்போல் காதலியைத் தேடிச் செல்ல முடியாமற் போயிற்று.

நம்பி வராமல் நின்று விட்ட நாட்களில் நங்கையின் உள்ளம் வாடி வருந்தியது. அவன் வராமல் ஏமாற்றினான் என்ற காரணத்தால் வருந்தவில்லை; அவன்மேல் குற்றம் சுமத்தி வருந்தவில்லை. அவன் வருவதற்கு என்ன இடையூறு நேர்ந்ததோ என்று அவளுடைய அன்பு நெஞ்சம் வருந் தியது. 'பொல்லாத மலைவழியில் அஞ் சாமல் வருதலை மேற்கொண்ட அவருக்கு அவ்வழியில் எந்த விலங்கு என்ன இடர் செய்ததோ?' என்று துயருற்று வருந்தினாள். தூய அன்பு நிறைந்த நெஞ்சம் ஆகையினால் அவன் மேல் குற்றம் காணமுடியாமல் விலங்கு களாலும் மற்றவற்றாலும் நேரும் துன்பங் களையே நினைந்து துயருற்றாள். ஆகையால் ஒரு சில நாள் கழித்து அவன் வரக் கண்ட போது, ஒரு நொடிப் பொழுதில் அத்தனை துயரமும் பறந்துபோக, மகிழ்ச்சிக் கடலுள் திளைத்தது அவளுடைய நெஞ்சம். வராமல் நின்றதற்காகப் பிணங்கி வெறுப்பதற்கு மாறாக, வந்த பெரு நிகழ்ச்சிக்காக அவள் பேருவகை எய்தினாள்.

அனுபவ அறிவும் கடமை உணர்ச்சியும் மிக்க தோழிக்கோ வேறு வகையில் மனம் சென்றது. இவ்வாறு சில நாள் விட்டு விட்டு வந்து போக அவன் பழகிவிட்டால், படிப் படியே அவனுடைய உள்ளத்தில் கடமை யுணர்ச்சி குன்றிவிடுமே என வருந்தினாள். பழக்கத்தால் எதுவும் இயல்பாகிவிடும்; ஆகையால் களவொழுக்கத்தில் சில நாட் களுக்கு இடையே பெறும் சிறு மகிழ்ச்சியின் அளவில் இவர்களின் மனம் அமைதியடைந் தால், திருமண முயற்சி என்ன ஆவது என்று கவலையுற்றாள்.

ஆகையால், ஒரு சிறு நடிப்பை மேற் கொண்டாள்; பொய்யாக நடித்து அவர்கள் இருவரின் நெஞ்சையும் கலக்க முயன்றாள்; அவ்வாறு கலக்குவதன் வாயிலாக அவர் களுக்குக் கடமையுணர்ச்சியையும் வாழ்க்கைப் பொறுப்பையும் உணர்த்த முனைந்தாள்.

ஒருநாள் தொலைவில் நம்பி வந்து கொண்டிருந்ததைத் தோழி கண்டபோது, நங்கையை வேறு திசையைக் காணுமாறு செய்து சிலவகைப் பேச்சுகளில் அவளுடைய கருத்தைச் செலுத்தினாள். அதனால் தன் காதலன் வந்துகொண்டிருந்ததை நங்கை

அப்போது அந்தப் பெண்ணும் தொலைவில் நின்று, ''உண்ணமாட்டேன், மாட்டேன்'' என்று மறுத்துச் சொல்வாள்.

இப்படி அந்தக் குடும்பத்தில் அந்தச் சிறு பெண் செல்லமாக வளர்ந்து வந்தாள். அது ஒரு காலம்.

* * *

அவளே ஒரு குடும்பத்துத் தலைவியாக வாழும் காலம் வந்துவிட்டது. அந்த வாழ்க்கையோ காதலால் பிணிக்கப்பட்ட வாழ்க்கை. காதலனும், காதலியுமாக அவர்கள் நடத்திய வாழ்க்கையின் தொடக்கத்தில் ஒரு சிறு குறைவும் இல்லை. குடும்பத்தின் செல்வ வளமும் இருந்தது. ஆனால் வரவுக்குமேல் செலவு செய்யும் குடும்பமாக இருந்தது. செலவும் வீண் செலவு அன்று. அன்பும் அறமும் நிறைந்த வாழ்க்கை ஆகையால், இரக்கமும், ஈகையும் செல்வத்தை விழுங்கி விட்டன. பிறர்க்கு உதவி உதவிப் பண்பட்ட மனம் உடையவர்களுக்குச் சிக்கனம் தெரியாது என்றுதான் சொல்ல வேண்டும். வறுமை நெருங்கி வந்த காலத்திலும் ஈகையைக் கைவிட முடியாமல் வருந்தினார்கள்.

வறுமையும் அடர்ந்துவிட்டது. அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்ற கவலையும் தோன்றிவிட்டது. வேளை தவறாமல் உண்ணும் நிலைமை மாறி, கிடைத்த போது உண்டு பசிதீர்ந்து கிடைக்காதபோது வெறும் வயிற்றோடு வாடிக் கிடந்தார்கள். இப்படி அவளும் அவளுடைய கணவனும் செல்வம் இழந்து வறுமையால் வாடியதைப் பற்றி அவளுடைய தாய் கேள்விப்பட்டாள். மகளைக் காண வேண்டும் என்று புறப்பட்டு வந்தாள்.

வந்தபின், நிலைமையைக் கண்டாள்; தன் மகள் தேனும் பாலும் உண்ணாமல் ஓட்டம் காட்டிய நிலைமையை நினைந்து உருகினாள். ''இப்பொழுதும், அந்தச் செல்வ வாழ்வைத் தாய்வீட்டில் பெற்று இன்பமாக வாழலாமே! இவளுடைய தந்தை இன்னும் வளமாக வாழும் போது, இவள் ஏன் இப்படி வறுமையால் வாடவேண்டும்?'' என்று எண்ணினாள்.

பெற்ற தாய், வளர்த்த தாயார் ஆகிய எல்லாருடைய கட்டளையையும் மீறி உரிமையோடு வளர்ந்தவள், இன்று கணவனுடைய அன்புக்குக் கட்டுப்பட்டுக் கிடந்தது தாய்க்கும் பெரிய வியப்பாகத் தோன்றியது. தன் தந்தையின் செல்வத்தை நுகரும் உரிமை தனக்கு இருந்தும், அதைப் பொருட்படுத்தாமல், நினைத்தும் பார்க்காமல், கணவனுடைய மானத்தையே தன் மானமாகக் கருதிப் பட்டினி கிடந்து மெலிந்த மகளுடைய வாழ்க்கை அந்தத் தாய்க்கு மிகப் பெரிய வியப்பாக இருந்தது. ''இத்தகைய அறிவை இவள் எவ்வாறு பெற்றாள்? இத்தகைய ஒழுக்கத்தை இவள் எவ்வாறு உணர்ந்தாள்? குழந்தையாக இருந்து மெல்லியளாக வளர்ந்த இந்தச் சிறு பெண் இத்தகைய உறுதியும் வல்லமையும் பெற்று விட்டாளே!'' என்று அந்தத் தாய் மனம் எண்ணி வியந்தது.

எல்லாம் காதலின் ஆற்றல் என்பது அந்தத் தாய்க்குத் தெரியும். தெரிந்தாலும் வியப்படையாமல் இருக்க முடியவில்லை. தன் வீட்டில் அறியாக் குழந்தையாக வளர்ந்த சிறு பெண்ணையே அவள் கண்டுவந்தாள். இன்று அவள் கண்ட காட்சியோ, ஒரு குடும்பத் தலைவி நடத்தும் வாழ்க்கை அன்றோ? அறிவும், ஒழுக்கமும், ஆற்றலும் நிறைந்த வாழ்க்கை அன்றோ?

'பிரசம் கலந்த
வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து
ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும்
பூந்தலைச் சிறுகோல்
உண்என் றோக்குபு
பிழைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு
ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தல்
செம்முது செவிலியர்
பரிமெலிந் தொழியப்
பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும்
சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும்
யாண்டுஉணர்ந் தனள்கொல்
கொண்ட கொழுநன்
குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை
கொழுஞ்சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல்
போலப்
பொழுதுமறுத் துண்ணும்
சிறுமது கையளே'

(நற்றிணை 110)

—'நடை வண்டி' என்னும் நூலிலிருந்து



நிலைத்திணைப் பாட்டு

ஆசிரியர்: பாவலர் தமிழியக்கன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ.9 பக்கம்: 60

அறிவியலை அன்னைத் தமிழின் வாயிலாகவே கல்லூரிகளில் போதிக்க முடியும் என்பது மெய்ப்பிக்கப்பட்டு வரும் நாள் இது. அதனால் அறிவியல் நூல்கள் தமிழில் மலர்வது இயல்பு.

இந்நூல், அறிவியலின் ஒரு துறையான தாவர இயல் குறித்துக் கவிதை வடிவில் உருவாக்கப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

எளிய சொற்களின் கலவையால் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

தாவரங்களைப் பற்றிக் கூறும் போது, மனித இனத்திற்குத் தேவையான சில குறிக்கோள்களையும் சமூக உணர்வுடன் தெரிவித்திருக்கிறார் நூலாசிரியர். சான்றுக்கு ஒன்று.

''வேராய் வாழ வேண்டும் - நாம்
வியக்க வாழ வேண்டும்
வீறாய் மொழியை, நாட்டை - காத்து
விழைய வாழ வேண்டும்''.

- எஸ்.எஸ். சுந்தரம்

நேரு காவியம்

ஆசிரியர்: கோ. செல்வம்
கிடைக்குமிடம்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,
சென்னை-2

விலை: ரூ.20 பக்கம்: 204

சுதந்தர இந்தியாவின் முதல் பிரதமராக ஒளிவீசித் திகழ்ந்த பண்டித ஜவஹர்லால் நேருவின் வாழ்க்கையை - காவிய வடிவில் வழங்கியிருக்கிறார் நூலாசிரியர்.

அறுசீர், எண் சீர், கண்ணிகள். இப்படிப் பல்வேறு வகையான யாப்புகளைப் பயன்படுத்தியுள்ளார். மரபு வழிக் கவிதை நூல் இது. இனிய, எளிய நடையில் இக்காவியத்தை அமைத்திருப்பது பாராட்டுக்குரியது.

இந்நூலில் இடம்பெற்றுள்ள 'அல்லியும் ரோஜாவும்' என்னும் சிறுகாவியமும் நேருவைக் குறித்ததாகவே அமைந்துள்ளது. நேரு பயன்படுத்தி வந்த ரோஜாப்பூவிற்கு - 'நேருப்பூ' என்று புதுப்பெயர் சூட்டியிருக்கும் நூலாசிரியரின் கருத்து பாராட்டுக்குரியது. கவிதை எளிமையாக உள்ளது எனினும், இன்னும் சற்றுச் செறிவுமிகுந்த சொற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தால் காவியத்தின் சுவை மேலும் பரிமளித்திருக்கும்.

—தமிழ்ப்பித்தன்

முதல் தமிழ் நாவலாசிரியர் நீதிபதி வேதநாயகனார்

ஆசிரியர்: டாக்டர் மா. சேசையா
வெளியீடு: வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு,
சென்னை-600 017

விலை: ரூ.12 பக்கம்: 142

முதல் தமிழ் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் எழுதிய மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளையின் வாழ்க்கை வரலாற்றை மிக அழகாக, தெளிவாக எடுத்தியம்புகிறது இந்நூல்.

முதல் இந்திய நீதிபதியாகப் பதவி ஏற்று இந்திய நாட்டுக்குப் பெருமை தேடித் தந்த வேதநாயகர் ஒரு நகைச்சுவை நாயகர் என்பதை நூலினிடையே சுவைபடக் கூறுகிறார் நூலாசிரியர்.

பெண் கல்வி வேண்டிப் பெரிதும் உழைத்தார். 'பெண்மதி மாலை' என்னும் அரிய நூலை எழுதினார். அதில் பெண்களுக்குப் புத்திமதிகள் கூறினார். அந்தப் பாடல்களெல்லாம் படித்து மகிழ்தற்குரியன.

வேதநாயகனாரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வார்க்கு இந்நூல் பெரிதும் உதவும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இக்கால இளைஞர்கள் முதல், பெரியவர்கள் வரை படித்துப் பயன்பெற வேண்டிய நூல்.

—பி.வி. கிரி

சரித்திரம் படைத்த சான்றோர் கதைகள்

ஆசிரியர்: மயிலைத் தொண்டன்
வெளியீடு: மயிலவன் பதிப்பகம்
17 கங்கையம்மன் கோவில் தெரு,
வடபழனி, சென்னை-600 026

விலை: 7.50 பக்கம்:80

எட்டுத்தலைவர்களின் வாழ்க்கை வரலாறு சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. சிறுவர்களும் படித்துப் புரிந்து கொள்ளும் அளவுக்கு எளிமையாக எழுதப்பட்டுள்ள இந்நூலில் தலைவர்களின் வாழ்க்கையில் நடைபெற்ற மிக முக்கிய சம்பவங்களையும் நினைவுகூர்ந்திருப்பது சிறப்பு.

—என். குமாரசாமி

பிரபஞ்சம்: ஓர் அறிமுகம்

ஆசிரியர்: வா. நா. சாமி,
வெளியீடு: முத்துமணி பதிப்பகம்,
8 முத்துகிருஷ்ணன் தெரு,
த.பெ. எண்: 6134
பாண்டிபஜார்,
தியாகராய நகர்,
சென்னை-600 017

விலை: ரூ.15.00 பக்கம்: 135

'இந்தப் பிரபஞ்சம் அல்லது பேரண்டம் (universe) என்பது என்ன?' என்கிற வினாவுடன் தொடங்குகிறது இந்த அறிவியல் நூல். 'நட்சத்திர மண்டலங்கள்' என்ற முதல் அத்தியாயத்திலிருந்து 'சந்திரன்' என்பது வரை, பயன்மிகுந்த கருத்துகளைத் தெரிவிக்கும் 16 அத்தியாங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

நூலாசிரியர் மிக முக்கியச் செய்திகளைத் தகுந்த படங்களுடன் விளக்கியிருக்கிறார்.

பிரபஞ்சத்தின் சுருக்கமான வரலாறாகத் திகழும் இந்த நூல், மிக எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருப்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும். அறிவியல் நூல்களைப் படிக்கின்ற ஆர்வம் இளைஞருலகில் பரவிவரும் இந்நாளில் இப்படிப்பட்ட நூல்கள் மிகுந்த பயன் உண்டாக்கும் என்பது திண்ணம்.

—இந்திரன்

பாரதியும் புரட்சி இயக்கமும்

ஆசிரியர்: தொ.மு.சி. ரகுநாதன்,
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41 பி. சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரூ.12 பக்கம்:103

கல்கி அறக்கட்டளைக்காக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் ஆற்றிய மூன்று நினைவுச் சொற்பொழிவுகளை நூலாக வெளியிட்டுள்ளார்கள்.

பாரதியின் புரட்சிக் கருத்துக்கள், அவரது தீவிர எதிர்ப்புகள் ஆகியவை இந்நூலில் பல கோணங்களில் படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

நாம் அறிந்திராத பல உண்மைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

1905-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில், திலகர் பம்பாயிலிருந்த ரஷ்யக் கான்சலிடம் இந்திய மாணவர்கள் சிலருக்கு ரஷ்ய அகாடமியில் ராணுவப் பயிற்சி அளிக்கக் கேட்டுக் கொண்டார்.

'ரஷ்ய அயல்துறை அமைச்சகம் மாதவராவ் என்பவருக்கு ஸ்விட்சர்லாந்து ராணுவ அகாடமியில் ராணுவப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்து கொடுத்தது' என்பன போன்ற ஆதாரப்பூர்வமான விவரங்கள் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

சாதிகள் இல்லையடி பாப்பா

ஆசிரியர்: ஹம்ஸா தனகோபால்
வெளியீடு: தேன்மழைப் பதிப்பகம்
34, கொத்தவால் தெரு,
ஆலந்தூர், சென்னை-600 016.

விலை: 30 பக்கம்:276

அரிசனச் சேரி, குடியானவத் தெரு, பார்ப்பனக் குடியிருப்பு ஆகிய மூன்று தெருக்களிலும் உள்ளவர்களிடையே நிகழும் காதல், மோதல்களை விளக்குகிறது கதை.

கிராமங்களுக்கே உரிய சம்பவங்கள், மாவட்டச் சூழல், வாழ்க்கை முறைக்கேற்ற உரையாடல்கள் என்று கதை எளிமையாக, இனிமையாகச் செல்கிறது.

சாதிப் பிரச்சனைதான் கதையின் கரு என்றாலும் புதுமையான முடிவைக் கொண்டிருக்கும் கதை.

புத்தகம் வாங்குவீர்!

பெண்மணிகள் காஞ்சி கருடசேவைக்குச் சென்றால் சேலை வாங்காமல் வருகிறார்களா? திருவண்ணாமலை தீபத்துக்குச் சென்றால் ஏதாகிலும் சாமான்கள் வாங்காமல் வருகிறார்களா? ஆருத்ரா தரிசனத்துக்குச் சென்றால் சாமான்கள் வாங்காமலா வருகிறார்கள்? அந்தச் செலவுகளையெல்லாம் சுருக்கி, புத்தகம் வாங்குவதில் செலவிட வேண்டும்.

பேரறிஞர் அண்ணா

ஓலை ரகசியம்

ஆசிரியர்: பி.வி. கிரி
வெளியீடு: பொன்மலர் பதிப்பகம்
எண் 1, ஈ பிளாக்
மூன்றாவது மாடி ஜெமினி பார்சன் அபார்ட்மென்ட்ஸ்
சென்னை-600 006

விலை ரூ.18/- பக்கம்: 175

சின்னச் சின்ன எளிமையான வாக்கிய அமைப்புடன், சிறுவர்களுக்கு எளிதில் புரியும் வண்ணம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

சிறுவர்களின் எதிர்பார்ப்புகளுக்கேற்ப மாய, மந்திர, பயங்கரச் சம்பவங்கள் பின்னப்பட்டு கதை செல்கிறது. அடுத்து என்ன நிகழுமோ என்று படிப்பவரின் ஆவலைத் தூண்டும் வண்ணம் கதை சொல்லப்பட்டிருக்கிறது.

வெல்லத்துக்குள் மருந்தாக இக்கதையின் நெடுகிலும் மறைமுகமாக நீதிகள் புகட்டப்பட்டிருக்கின்றன. சிறுவர்களுக்கு எப்படிக் கதை சொல்லவேண்டுமென்பதற்கு உதாரணமாகத் திகழ்கிறது இந்நூல்.

21-ஆம் நூற்றாண்டில் வேளாண்மை

ஆசிரியர்: சௌபாக்கியராமானுஜம்
வெளியீடு: சோலைத் தேனீ
பாரதிசோலை டிரஸ்ட்
காட்பாடி-632 007

விலை: ரூ.10 பக்கம்:110

இருபதாம் நூற்றாண்டான இன்று, அறிவியல் வேகமாக வளர்ந்து வருகிறது. அதன் பயனாகப் பல்வேறு துறைகள் பாங்காய் வளர்ந்து வருகின்றன. அவற்றுள் முக்கிய இடத்தைப் பெறுகின்றது வேளாண்மை.

அறிவியலின் துணை கொண்டு, வேளாண்மை முன்னேறிக்கொண்டு வருவது உண்மைதான். ஆனால், மக்கட் தொகைப் பெருக்கம், தேவைகள் அதிகரிப்பு முதலானவற்றைக் கருத்தில் கொண்டு பார்த்தால், 21-ஆம் நூற்றாண்டில் வேளாண்மை எப்படி இருக்கும் என்பதை இப்போதே கணிக்க வேண்டியுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு நூலாசிரியர் இந்நூலில் உள்ள கட்டுரைகள் வாயிலாக, தீர்க்கதரிசனத்தோடு ஆராய்ந்து தம் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். சிந்தனைக்குரிய நூல்.

—குமார்

வங்கக் கடலில் புயல் வருவது எப்படி?

-செல்வி ஏ. லதா

"வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் காரணமாக, சென்னையிலும் தமிழ்நாட்டின் பிற பகுதியிலும் பரவலாக மழை பெய்யும்....." என்று வானிலை அறிக்கையைப் படித்திருக்கிறோமல்லவா?

அப்படியானால், இந்தப் புயல் எப்படி உருவாகிறது?

இந்தியா ஒரு தீபகற்பம். கிழக்கிலே வங்காள விரிகுடாவாலும், மேற்கிலே அரபிக் கடலாலும், தெற்கிலே இந்தியப் பெருங்கடலாலும் சூழப்பட்ட தீபகற்பம். இருப்பினும், ஏன் வங்காள விரிகுடா மட்டுமே பலத்த சுழற்காற்றுக்கும் புயற் காற்றுக்கும் (Cyclone) வயப்படுகிறது?

பூகோள ரீதியில் இந்திய உபகண்டம் அதி வெப்பப் பிரதேசத்தில் உள்ளது. அதி உஷ்ண மண்டலத்தில் சுழற்காற்று (Tropical cyclone) எப்படி ஏற்படுகிறது என்பதை அறிந்து கொள்வது சுவையான ஒன்றாகும்.

வானவெளியிலே வீசும் காற்றிலே நீராவி உள்ளது. அந்த நீராவி குளிரடைந்து மழையாகப் பெய்கிறது. பெய்யும் மழையில் நீராவிக்குள் உறைந்திருந்த வெப்பச் சக்தி (Latent heat energy) வெளியேற்றப்படுகிறது. சுழற்காற்றினை இயங்க வைப்பது இவ்வுள்ளுறை சக்தியே. ஆகையால் சுழற்காற்றினைச் சுழல வைப்பது அந்தக் காற்றிலே உள்ள நீராவியின் ஈரத் தன்மைதான்.

ஈரத் தன்மையின் அளவும் ஒரு வரையறைக்குட்பட்டதே. இதனைக் கட்டுப்படுத்துவது கடலின் மேல் மட்டத்தில் உள்ள உஷ்ண நிலையாகும். (Sea surface Temperature) கடல் மேல் மட்டத்தில் 28°C-ம் அதற்கு மேலும் உஷ்ணநிலை இருப்பின், அப்பகுதி சுழற்காற்றின் பிடியில் எளிதில் சிக்கி விடும்.

இதுவல்லாமல் சுழற்காற்று உண்டாவதற்கு வேறு சில காரணங்களும் உள்ளன.

இந்தியத் துணைக் கண்டத்தைச் சுற்றி அரபிக் கடலும், பெருங்கடலும், விரிகுடாவும் இருந்தாலும், வங்காள விரிகுடாவில் மட்டுமே வருடத்தில் 90 சத விகித நாட்களில் மேல்மட்ட உஷ்ணநிலை 28°C-க்கு மேல் காணப்படுகிறது. ஆகையால் இப்பகுதி மட்டுமே சுழற்காற்றின் வயப்படுகிறது.

விஞ்ஞான ரீதியில் இன்னும் விளக்கம் தரப்படாத ஏதோ சில காரணங்களினால், கோடைக் காலத்தில் தோன்றும் பருவக்காற்றினால் (Monsoon), அரபிக்கடலும், இந்தியப் பெருங்கடலும் ஜூலை மாத இறுதிக்குள் குளிர்ச்சி அடைந்து விடுகின்றன. எனவே கடலின் மேல்மட்ட உஷ்ணநிலை 28 சென்டிகிரேடை விடக் குறைந்து விடுகிறது.

அதனால்தான் வங்காள விரிகுடாவில் மட்டும் சுழற்காற்றும், புயற்காற்றும் வீசுகின்றன.

-நன்றி: 'செய்தி மடல்'

அறிவுச் சுடர்

பனிக்கட்டியும் சாதாரண உப்பும் கலந்த கலவைக்குப் பெயர் என்ன?
-உறைக்கலவை.

காற்று எம்முறைப்படி திரவமாக்கப் படுகிறது?
-லிண்டே முறைப்படி.

நிறமாலையில் காணப்படும் 7 நிறங்கள் யாவை?
-மேலிருந்து கீழாக, சிவப்பு, ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், கருநீலம், ஊதா ஆகியனவாகும்.

சுவாமி விவேகானந்தர் சமயச்சொற்பொழிவாற்றிப் புகழ் பெற்ற அமெரிக்க நகரம் எது?
-சிகாக்கோ.

மின்சார வேலைகளைச் செய்யும் பொழுது ரப்பர் உறை அணிந்து கொள்வது ஏன்?
-ரப்பர் மின்சாரத்தைக் கடத்தாது. எனவே, ரப்பர் உறையைப் பயன் படுத்துகின்றனர்.

இறந்த தாவர பிராணி உடல்களின் மீது வளரும் பாக்டீரியா எவ்வாறு அழைக்கப்படுகிறது?
-சாறுண்ணிகள்.

அதிமதுரம் எந்நோய்களைக் கட்டுப் படுத்தப் பயன்படுகிறது?
-இருமல், தொண்டை ரணம், இழுப்பு.

மண்ணில் வாழும் முக்கிய உயிரினங்கள் யாவை?
-மண்புழு, பாக்டீரியா.

மண்ணின் மணத்தை எப்போது நாம் உணர்கிறோம்?
-மழை பெய்து ஓய்ந்தபின்.

மஞ்சள்காமாலையைக் குணப்படுத்த உதவும் தாவரம் எது?
-கீழாநெல்லி.

கோழிப்பண்ணை நிறுவ எக்காலம் சிறந்தது?
-இளவேனிற்காலம்.

உணராமல் தோழியுடன் பேசிக்கொண்டிருந்தாள். நம்பியும் மெல்ல வந்து அங்கிருந்த ஒரு வேலிப் பக்கமாக நின்றான். அவனைக் கண்டும் காணாதவள் போல் நடித்தாள் தோழி. காணாதவள் போலவே நங்கையுடன் பேசும் பேச்சில் ஈடுபட்டிருந்தாள். அந்தப் பேச்சின் இடையே, நம்பியின் பண்பும் உறவும் பற்றியே சொல்லத் தொடங்கினாள். அதைக் கேட்ட நம்பி, தன்னைப் பற்றி அவர்கள் தங்களுக்குள் என்ன பேசுகின்றார்கள் என்று அறியும் வேட்கையுடன் அமைதியாக நின்று கேட்கத் தொடங்கினான்

தோழியின் நடிப்புத் திறம்பட அமைந்தது 'நங்கை! நீ அவனை நம்பிக் காதல் கொண்டாயே! என்ன பேதை நீ! ஒருகால் அவன் உன்னைக் கைவிட்டுச் சென்றால், உன்னை மறந்து வாழத் தொடங்கினால், உன் வாழ்க்கை என்ன ஆவது? ஆய்ந்து உணராமலே அவனை நம்பிவிட்டாயே! உன் எதிர்காலம் என்ன ஆவது? உனக்காக நான் மிக மிக வருந்துகிறேன். நீ அவனிடம் கொண்ட காதல் என்ன ஆகுமோ? அவன் நல்லவன, நம்பிக்கையானவன. கைவிட மாட்டான் என்பன நமககு எப்படித் தெரியும்? உண்மையான அன்பு உடையவனாக இருந்தால், அவன் இப்படிச சில நாள் வராமல நின்றுவிடுவானா? உன்னை மறநது ஊரில் நின்றுவிடும் அந்த அளவிற்குக் கல்நெஞ்சம் அவனுக்கு இருக்கக் கண்டும், நீ அவனை நமபுகிறாயே'' என்றாள்.

இதைக் கேட்ட நங்கையின் உள்ளம் வருந்தியது. அவள் பெருமூச்சு விட்டாள். வேண்டும் என்றே தோழி அவளை வேறு திசையில் திரும்ப வைத்துப் பேச்சில் ஈடுபடுத்தியிருப்பதால் தன் காதலன் வந்து நிற்பதையும் அவளால் கண்டு உணர முடியவில்லை. பெருமூச்சு விட்டுத் தோழியை நோக்கினாள். ''என்ன தோழி! நீயா எங்கள் காதலைப் பற்றி ஐயுறுகிறாய்? எனக்கு இத்தகைய ஐயம எள்ளளவும் இல்லை. நான் உறுதியாக நம்புகிறேன். அவர் என்னை ஒருக்காலும் கைவிடவே மாட்டார்'' என்றாள். சிறிது பொறுத்து, ''எங்கள் உறவு மிக உயர்ந்தது; உயர்ந்த இந்த வானத்தைவிட உயாநதது; எங்கள் உறவு அளந்து காண



முடியாதது; கடல் நீரினும் அளவற்றது'' என்றாள்.

'நிலத்தினும் பெரிதே
வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள
வின்றே ...
.... நாடனொடு நட்பே.'

இவ்வாறு பேசி நங்கையைப் பேசச் செய்த இந்த நடிப்பினால் அவர்களின் உள்ளத்தில் தோழி விளைத்த நன்மைகள் போற்றத் தக்கவை. அவையாவன:-

1) தான் வராமல் நிற்கும் நாட்களில் தோழியும் தலைவியும் அதைக் குறித்து வருந்துவதை, நம்பி நேரில் கண்டு உணருமாறு செய்தாள். வேலிப் பக்கத்தே நின்ற அவன் அவர்களின் பேச்சைக் கேட்டு உணர்ந்தான்.

2) தன் காதலுக்கு உதவியாகத் துணை செய்த தோழியே இவ்வாறு ஐயுற்றுப் பேசுவதை எண்ணி, அவனுடைய நெஞ்சம் வருந்தியது. அன்பை வளர்த்த தோழியே ஐயுறுமளவிற்குத் தான் செய்த தவறு என்ன என்று எண்ணிப் பார்த்தான். திருமண முயற்சியை விரைந்து செய்யாமல் வேறு கடமைகளில் ஈடுபட்டு நாட்களைக் கழித்தமையே காரணம் என்று தன் குற்றம் உணர்ந்தான்.

3) காதலனைக் கண்டு மகிழ்ந்து உடனே தன் பொறுப்பை மறக்கும் தலைவியின் இயல்பும் மாறத் தொடங்கியது. 'இவ்வளவு சிறந்த அன்புடைய அவர் நம்மைவிட்டுப் பிரிந்து மறந்திருக்கக் காரணம் எதுவோ? ஏன் இன்னும் மணந்துகொள்ளாமல் காலம் கடத்துகிறார்?' என்று அவளும் எண்ணிப் பார்க்கத் தொடங்கினாள்.

4) காதலன் எதிரே சில சொற்கள் சொல்லவும் நாணும் இயல்புடைய நங்கையின் வாயிலிருந்து பல சொற்கள் பிறந்ததை இன்று அவனே மறைந்திருந்து கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தச் சொற்களும், வேறு யாரையோ குறித்துக் கூறிய சொற்கள் அல்ல. தான் கொண்ட காதலின் பெருமையும் உயர்வும் அளவும் குறித்துக் காதலியே பாராட்டிய பாராட்டுச் சொற்கள். அவற்றை மறைந்திருந்து கேட்டு மகிழும் பேறு அவனுக்குக் கிடைத்தது. தோழியின் குற்றச்சாட்டைக் கேட்டு வருந்திய அவனுடைய நெஞ்சம், இந்த இனிய பாராட்டு மொழிகளைக் கேட்டுக் குழைந்தது. 'நம்மிடம் இத்தகைய பேரன்புகொண்டு தோழியின் சொல்லையும் மறுத்துப் பேசிப் பாராட்டும் அழகியை எந்தக் காரணத்தாலும் கைவிடக் கூடாது. இந்தப் பரந்த, பெரிய உலகத்தில் நம்மிடம் இவ்வளவு பேரன்பு கொண்டவர் வேறு யாரும் இல்லை. இவளே நம் ஆவித் துணை' என்ற நன்றியுணர்வு மிகுந்த நல்லெண்ணங்கள் நம்பியின் உள்ளத்தில் வளர்ந்தன. திருமண முயற்சியே இனி முதல் கடமை என்று உறுதி பூண்டது அவனுடைய திருந்திய நெஞ்சம்.

இவ்வளவு மாறுதல்களையும் ஏற்படுத்தக் காரணமாக இருந்தது தோழியின் திறமையான நடிப்பே ஆகும்.

தேவகுலத்தார் என்ற புலவர் இந்த நடிப்பின் விளைவாக நங்கையின் மறுமொழியை ஒரு சொல்லோவியமாக்கிக் காட்டுகிறார். மறுமொழி கூறும் நங்கையின் நெஞ்சம், நிறைந்த நெஞ்சமாக விளங்குவதை அந்த ஓவியத்தின் பின்னணியில் அமைத்துப் புலப்படுத்துகிறார்.

ஓவியத்தின் பின்னணியானது நம்பியின் மலைநாடு, அந்த மலையின் வளம், அதில் உள்ள பெரிய பெரிய தேன்கூடுகளால் தெளிவாக அறியக் கிடக்கிறது. மலையிலே பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பூத்துப் பொலிவது கரிய கிளைகளை உடைய குறிஞ்சி மரம். குறிஞ்சி மலர்கள், பெரியவை; நிரம்பத் தேன் உள்ளவை. அவற்றின் தேனைக் கொணர்ந்து தேன்கூடு கட்டுபவை பெருந்தேன் என்னும் தேனீக்கள். உயர்ந்த மலையில் உயர்ந்த உச்சியில் பெருந்தேன் காணப்படும். பின்னணியாக அமைந்த இந்த ஓவியத்திலும் உயர்ந்த நிலை காணப்படுகிறது: அளத்தற்கரிய தன்மையும் உள்ளது. காதலின் உணர்வும் பெருமையும் பேரளவும் குறித்துப் பேசி பெருமிதம் எய்தும் நங்கையின் உள்ளம் போலவே, இந்த மலைவளம் காட்டும் குறிஞ்சித் தேனும் உள்ளது. காதலுறவை நினைத்த நங்கையின் உள்ளத்தில் இனிமை ஊற்றெடுத்தது என்பதை, இந்தத் தேன் பற்றிய ஓவியம் புலப்படுத்துகிறது. நங்கையின் மறுமொழி எவ்வாறு உள்ளதோ, அவ்வாறே அவளுடைய நெஞ்சமும் உள்ளது. எங்கும் உயர்வு, எங்கும் பெருமை, எங்கும் பேரளவு! காட்சி, கருத்து எவற்றிலும் பேரினிமையே! நிறைந்த நெஞ்சம் காணும் இனிமை நிரம்பிய காட்சி இது.

நிலத்தினும் பெரிதே
வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள
வின்றே; சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்
பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும்
நாடனொடு நட்பே.

(குறுந்தொகை 3)

அன்பின் ஆற்றல்

பாலோடு தேன் கலந்து குடிப்பதில் ஒரு தனிச்சுவை உண்டு. பண்டைத் தமிழர் கண்ட பல்வேறு சுவைகளுள் அதுவும் ஒன்று.

ஏழை வீட்டுச் சிறுவர்களுக்கு உப்பில்லாக் கஞ்சி கிடைப்பதே அருமை. அவர்களுக்குத் தேனும் பாலும் கலந்து கிடைத்தால் எவ்வளவோ மகிழ்ச்சியோடு பருகுவார்கள்; பருகிக் கூத்தாடுவார்கள். ஆனால், செல்வக் குடும்பத்தில் பிறந்து வளரும் சிறுவர்களுக்கோ அதைப் பருகும் வேட்கையே எழுவதில்லை. பெற்றோர் 'வற்புறுத்துவதற்காகப் பருகுவார்கள். ஏழை வீட்டுத் தாய், ''பிள்ளைகளின் தொல்லையைப் பொறுக்க முடியவில்லை. வயிற்றைக் கட்டி, வாயைக் கட்டி எடுத்துவைத்துக் கொடுத்தாலும் போதாது என்று அலைகின்றார்களே'' என்று பக்கத்து வீட்டாரிடம் முறையிடுவாள். ஆனால், செல்வக் குடும்பத்துத் தாயோ, வைத்தியரிடம் தான் முறையிடுவாள்; ''பிள்ளைகளுக்குப் பசி எடுக்கும்படியாக மருந்து கொடுக்கக் கூடாதா? வேளைக்குச் சாப்பிடமாட்டேன் என்கிறார்களே; வேண்டி அழைத்தாலும் வருவதில்லையே; வற்புறுத்தி ஊட்டினாலும் உண்பதில்லையே'' என்பாள்.

இப்படிப்பட்ட செல்வக் குடும்பம் ஒன்று. அந்தக் குடும்பத்தில் சீரும் சிறப்புமாக ஒரு பெண் வளர்ந்து வந்தாள். அவள் விளையாட்டில் ஈடுபட்டுப் பசி இல்லாமல் காலம் கழித்தாலும், அவளுடைய வளர்ப்புத் தாய்மார் (செவிலித் தாய்மார்) மறந்து விட்டுவிடுவதில்லை. பாலும் தேனும் கலந்து கிண்ணத்தில் எடுத்துச் சொல்லியும் மகள் கேட்கவில்லையே என்று வருந்துவார்கள். பயப்படுத்தியாவது பார்க்கலாம் என்று முயல்வார்கள். ஒரு கையில் கிண்ணத்தை வைத்துக் கொண்டு மற்றொரு கையில் சிறிய கோல் எடுத்து, ''உண்ண வேண்டும்; இல்லையானால் அடி விழும்'' என்று கோலை ஓச்சுவார்கள். இவ்வளவுக்கும் அவள் அஞ்சுவதும் இல்லை; உண்பதும் இல்லை; கால் சிலம்பு ஒலிக்க ஒலிக்க ஓடுவாள். செவிலித் தாய்மார் பின் தொடர்ந்து செல்வார்கள். அவள் இளங்கன்று; ஆகையால் விரைந்து ஓடிவிடுவாள். முதுமையால் தளர்ந்த செவிலித்தாய்மாரோ அவளுடைய ஓட்டத்தைப் பிடிக்க முடியாமல் நின்றுவிடுவார்கள்.

நன்மையே செய்வோம்!
நன்மையே பெறுவோம்

-கவிஞர் தமிழ்முடி

அப்பா, அம்மா சொல்லைக் கேட்டால்
ஆக்கம் பெருகுமே
தப்பில் லாமல பணியைச் செய்தால்
வாழ்க்கை உயருமே!

அடுத்த மனிதர்க்(கு) உதவி செய்தால்
அகிலம் புகழுமே!
அடித்த பேர்க்கும் அருள் பொழிந்தால்
அன்பு நிறையுமே!

வெள்ளம் வருமுன் அணை அமைத்தால்
நன்மை சேருமே!
உள்ளன வற்றைப் பகிர்ந் தளித்தால்
உவகை கூடுமே



தண்ணீர் ஊற்றின் செடிகளெலாம்
தழைத்து ஓங்குமே!
வெந்நீர் ஊற்றின் நட்ட செடியும்
பட்டுப் போகுமே!

பிறர்க்கு நன்மை செய்துவாழ்ந்தால்
நமக்கும் நன்மையே!
பிறரின் இன்பம் பேணிவந்தால்
நமக்கும் இன்பமே!

அமுத மொழிகள்



ஒரு நூல் முழுவதையும்படிப்பதைவிட,ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலாகும்

-மெக்கெலே

படி, நன்றாகப் படி, மிக நன்றாகப் படி.

-லெனின்

அவாவை விட்டவர்க்குத் துன்பமில்லை. அவா உண்டானால், துன்பம் மேலும் மேலும் வரும்

-குறள்.

பூண்டின் பெருமை

வெள்ளைப் பூண்டு அபூர்வ மருத்துவ சக்தி படைத்தது. வெள்ளைப பூண்டு ஒரு சிறந்த கிருமிநாசினி என்பதை அண்மையில் ரஷ்ய விஞ் ஞானிகள் வெளிப்படுத்தி உள்ள னர். சக்தி வாய்ந்த பெனிஸிலின் மருந்துக்கும்கூட கட்டுப்படாத கிருமி களையும், வைரஸ்களையும் அழித் தொழிக்கும் ஆற்றல் வெள்ளைப் பூண்டுக்கு உண்டு என்பதை அவர்கள் தமது ஆராய்ச்சியில் மெய்ப்பித்துள்ளாராம். எந்த உடல் உறுப்பும் வெள்ளைப் பூண்டால் பாதகமடைவதில்லை.

முக்கிய சத்துக்கள்

இதில் சல்பர் (Sulphur), சல்பர் ஆப் ஆல்யி (Sulphur of Allye) என இரண்டு வித சத்துக்கள உள்ளன. இச்சத்துக்கள் இருப்பதால் தான் வெள்ளைப் பூண்டு சிறந்த கிருமி நாசினியாக விளங்குகிறது.

மருத்துவ குணங்கள்

வியர்வையைப் பெருக்கும். உடற் சக்தியை அதிகப்படுத்தும். சிறுநீர் தாராளமாகப் பிரிய வகை செய் யும். சிறுநீர்ப்பை. ஈரல் முதலியவற் றின் வேலையைத் தூண்டிவிடும். தாயப்பாலை விருத்தி செய்யும். சளியைக் கரைத்து சுவாசத் தடையை நீக்கும். சீரண சக்தியை அபிவிருத்தி செய்யும். இரத்தக் கொதிப்பைத் தணிக்கும்.

கண்டமாலைக்கு வெள்ளைப் பூண்டை உட்கொள்ளலாம் என்றும், அதன் களிம்பைக்கட்டிகளின் மேலே தடவிக் கட்டுப் போடலாம் என்றும் பிரிட்டிஷ் மூலிகை ஆராய்ச்சி யாளர் ஆண்ட் ரெவியன்னி ஹெட் பீல்ட் (Andrey wynne Hat Filed) தெரிவித்துள்ளார்.இதர தோல் நோய்களுக்கும் இந்தச் சிகிச்சை முறையைப் பின்பற்றலாம் என்று கூறியுள்ளார்.

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களுக்கு மதிப்பூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 400 வழங்கப்படும். இந்தப் பத்தாயிரம் பேரில், 50 விழுக்காடு பெண்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

மகளிர் நலன்

122. மகளிர் நல மறு மலர்ச்சிக்காக நடப்பு ஆண்டில் நம் அரசு பல முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மகளிருக்கென : அரசுப் பணிகள் உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவ னங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பில் 30 விழுக்காடு ஒதுக்கப்பட்டுள்ளதும், உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்படும் இடங்களில் 30 விழுக்காடு மகளிருக்கென ஒதுக்கப்பட்டுள்ளதும், 1956ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்குச் சொத்தில் சம உரிமை அளிக் கப்பட்டுள்ளதும், மிகவும் வறியவர்களாகவும், ஏழை நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு கல்லூரிப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி, ஏழைப் பெண்களுக்கு 5,000 ரூபாய் திருமண உதவி, மகப்பேறு நிதி உதவி, கலப்புத் திருமணத் தம்பதிகளை ஊக்குவிக்க நிதி உதவி, விதவை மறுமணத்தை ஊக்கப்படுத்தும் வகையில் நிதி உதவி போன்ற திட்டங்களும் இவற்றில் அடங்கும்.

123. அனைத்து நாடுகள் வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் ரூ. 45.8 கோடி செலவில், மகளிர் மேம்பாட்டுக்காக விவசாயம், பட்டுப்பூச்சி வளர்ப்ப. மற்றும் சிறு தொழில்கள் அடங்கிய தொகுப்புத் திட்டம் ஒன்றை நடப் பாண்டில் மேற்கொண்டுள்ளோம். இத்திட்டத் தின் மூலம் ஐந்தாண்டுகளில் சேலம், தர்மபுரி, தென்ஆற்காடு மாவட்டங்களில் ஏறத்தாழ 40 ஆயிரம் பெண்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். வரும் ஆண்டுகளில் இதில் விளையும் அனுபவத்தின் அடிப்படையில், இத் திட்டத்தை மேலும் பல மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த எண்ணியுள்ளோம்.

124. இந்த நேரத்தில் ஒரு பயங்கர வேதனையை வெளியிடவும், அரசு அதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்ற செய்தியைக் கூறவும் என் மனம் கலங்கு கிறது. சிறுமியர் ஆண்டென இந்த ஆண்டைக் கொண்டாடுகிறோம். தாயைப் போற்றும் இத்தமிழ் நிலத்தில் ஒரு சில மாவட்டங்களில் பிறக்கும் குழந்தை பெண்ணாக இருந்தால் அதனை உடனே கொன்று விடும் கொடுமை நடைபெறுவதாகச் செய்திகள் வருகின்றன. அந்தக் கொலைகளைச் செய்வோர், அதற்கு உடந்தை யாக இருப்போர் கடுமையான முறையில் தண்டிக் கப்பட, அரசு உடனடி நடவடிக்கை எடுக்கு மென்பதுடன், அப்பகுதி பெண் குழந்தைகளை வளர்த்துக் காத்திட அரசு ஏற்பாடுகளைச் செய்யும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலன்

125. தொழிலாளர் நலனுக்காக இவ்வரசு பல முயற்சிகளை எடுத்து வருகின்றது. மூடப் பட்டிருந்த நூற்பு ஆலைகளில் 9 ஆலைகள் கடந்த ஆண்டு திறக்கப்பட்டன. மேலும் 6 நூற்பு ஆலைகளை திறந்து இவ்வரசு எடுத்து நடத்தும் எண்ணத்தை முன்பிருந்த மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இதில் 4 ஆலைகளை சீர்படுத்துவதற்கு தொழிலியல் மற்றும் நிதியியல் கட்டமைப்பு வாரியத்தின் (B.I.F.R.) மூலம் பரிசீலனை நடத்தப்படுகிறது. மீதம் உள்ள 2 ஆலைகளைப் பொறுத்தவரை, விவரமான ஆய்வு அறிக்கை பெற்று மத்திய அரசு முடிவு எடுக்கும். இதனை துரிதப்படுத்த முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்வோம்.

126. மூடிக்கிடந்திருந்த மெட்டல் பாக்ஸ் நிறுவனம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சிக்கலான நிலையில் இருந்த ஸ்டேண்டர்டு மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்தை சுமுகமான முறையில் பேச்சு வார்த்தை நடத்தி ஜூன் திங்களில் மீண்டும் செயல்பட உறுதியான நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

127. தொழிலாளரின் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்ட இவ்வரசு, மூடப்பட்ட ஆலை களில் பணியாற்றிய 16957 தொழிலாளர்களுக்கு இதுவரை ரூ. 63.91 லட்சம் உதவித் தொகையாக வழங்கி உள்ளது.

128. நடப்பாண்டில் வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்கள், பீடித் தொழில், நெசவு, தனியார் மருத்துவ மனைகள் போன்ற அமைப்பற்ற தொழில்களில் பணியாற்றக் கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திரைப்படத் தொழிலி லுள்ள ஊழியர்களின் நலனைக் கருதி விவரமான பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு, ஒரு சுமுகமான நிலை உருவாக்கப்பட்டது.

அரசுப் பணியாளர்கள் நலன்

129. இந்த அரசு கடந்த வரவு-செலவுத் திட்ட உரையில் வாக்குறுதி அளித்தவாறு, மாநில அரசின் அலுவலர்களுக்கு மத்திய அரசு ஊதிய விகிதங்களை அளித்ததைத் தொடர்ந்து வரப்பெற்ற பல முறையீடுகள்/சார்புரைகள் விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு இறுதி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இவை, பலவகை யினருக்கு ஊதிய விகிதங்களைத் தாராளமாக்கு வதாகவே இருந்தன.

130. அரசுப் பணியாளர்கள் தேர்வுநிலை பதவித் தகுதி, சிறப்பு நிலைப் பதவித் தகுதி ஆகியவை தொடர்ந்து அளிக்கவேண்டுமென்று மிகவும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளனர். தேர்வு நிலைப் பதவித் தரமும், சிறப்பு நிலைப் பதவித் தரமும் முதன்முதலில் 1970-ல் இந்த அரசால் கொண்டு வரப்பட்டது. இத்தகைய பதவித் தரங்கள் மத்திய அரசு ஊதிய விகிதங் களில் இல்லை. எனினும், மாநில அரசு அலுவலர் களின் கோரிக்கையை அனுதாபத்துடன் பரிசீலித்து, முதுநிலை அளவில் உள்ள பணியாளர்களுக்கு நலன் அளிக்கும் வகையில் இவ்விரு வகைப் பதவித் தகுதி களையும் மீண்டும் ஏற்படுத்த முடிவு செய்துள்ளோம். இதற்கு ஆண்டு ஒன்றிற்குக் கூடுதலாக ரூ. 10 கோடி செலவாகும். ரூ. 2500-ஐ விடக் குறைவான

தொடக்கச் சம்பளம் பெறும் சம்பள விகிதங்களில் உள்ள அனைத்து வகைப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும்.

131 மானிய உதவிபெறும் பள்ளி நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் ஆசிரிய ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மாதம் ரூ. 15 வீதம் மருத்துவப் படி வழங்க வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்துள்ளார்கள். இந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு, 1990-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம நாள முதல் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கையின் மூலம் 1.25 இலட்சம் ஆசிரியர்களும் ஆசிரியர் ஓய்வூதியம் பெறுபவர்களும் பயன் பெறுவார்கள். இதற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2.25 கோடி செலவு ஏற்படும்.

பேருந்துப் போக்குவரத்திற்குத் தேசியமயத் திட்டம்

132. கழக அரசு 1973-ஆம் ஆண்டு பயணிப் பேருந்துகள்—ஒப்பந்தப் பேருந்துகள் கையகப் படுத்தும் சட்டம் ஒன்றினை இயற்றி, மாவட்ட வாரியாகப் படிப்படியாக தனியார் போக்குவரத்தை அரசுடைமை ஆக்கிட [illegible]ந்து, முதற்கண் [illegible] மாவட்டத்தில் பயணிப் பேருந்து போக்குவரத்தை 1973-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அரசுடைமை ஆக்கியது. [illegible] தேசிய உடைமைச் [illegible] எதிர்த்து [illegible] மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, உச்ச நீதிமன்றம் வரை வழக்கு சென்று இறுதியாக 1983-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 31-ஆம் தேதி—கழக அரசு கொண்டு வந்த [illegible] தேசிய மயச் சட்டம் செல்லத் தக்கதென்று [illegible] தீர்ப்பு வழங்கியது. ஆனால் அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இடைக்காலத்தில் [illegible] நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. [illegible], 1973-ஆம் ஆண்டு கழக அரசு [illegible] வந்த தேசிய மயச் சட்டம் [illegible] பல திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

133. [illegible] பொறுப்பேற்றதும் 1989-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 29-ஆம் [illegible] அமைச்சரவைக் கூட்டத்தில் [illegible]—உச்ச நீதிமன்றத் [illegible] பேருந்துகளை [illegible] ஆக்கும் சட்டத்தை [illegible] பேருந்துகள் இயக்கப் [illegible] தொடங்கி, படிப்படியாக [illegible] மாவட்டங்களுக்கு [illegible] காலத்திற்குள் [illegible] திட்டத்தை நிறைவு [illegible] அதை [illegible] கோரி [illegible] 1989-ஆம் ஆண்டு ஜூலைத் [illegible] 28-ஆம் [illegible] இந்நாள் [illegible] வராத [illegible], 1989-ஆம் ஆண்டு [illegible] அமைச்சரவைக் [illegible] இந்தக் [illegible] தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாகம்

134. நிர்வாக வசதிக்காக் மாவட்டங்களையோ வட்டங்களையோ பிரிப்பதற்கு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணி முடிவுறும் வரையில் முயற்சிகள் மேற்கொள்ள முடியாத நிலையில் தடை இருக்கிற காரணத்தால், அதுவரையில் இடைக்காலத்தில் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்கள் இருவராகவும் அதேபோல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலர்கள் இருவராகவும் நிர்வாக வசதிக்காகப் பணிபுரிவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

135. ஆளுநர் உரையில் அறிவித்துள்ளபடி, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட லோக்பால் சட்ட முன்வடிவு அடிப்படையில் இந்தக் கூட்டத் தொடரில் முதலமைச்சர், அமைச்சர்கள் உட்பட பதவி வகிப்பவர்களுக்கு எதிரான தவறான நடத்தை குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க வகை செய்யும் சட்டம் கொண்டு வரப்படும்.

நிலச் சீர்திருத்தங்கள்

136. கழக அரசு 1971 ஆம் ஆண்டு நில உச்சவரம்பு 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் எனச் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியதைத் தொடர்ந்து தஞ்சாவூர் மாவட்டத்தில் வடபாதிமங்கலம் பகுதியில் சுமார் 4051 ஏக்கர் நிலம் நில உச்சவரம்புச் சட்டத்தின் அடிப்படையில் எடுத்துக் கொள்ளப்பட்டு தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. ஆனால், இந்த நிறுவனம் பிறகு சரியான முறையில் செயல்படாததால் மூடப்பட்டது. அதன் பின்பு அந்த விளைச்சல் நிலங்கள் தரிசாக விடப்பட்டன. மேலும், இந் நிலங்களை வங்கிகளின் உதவியுடன் அதிக சந்தை விலையான ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 10000 என்ற மதிப்பில் வழங்கிட 1988-ல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் திட்டமிடப்பட்டது. இந்த அரசு அந்த விலையைக் குறைத்து ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3600 என்ற விலையில் மேற்சொன்ன நிலங்களில் பயிரிடத் தகுதியான 3651 ஏக்கர் நிலங்களை, அந்த பகுதியைச் சேர்ந்த நிலமற்ற ஆதிதிராவிட, பிற்படுத்தப்பட்ட ஏழை விவசாயிகள் 4803 பேருக்கு ஏப்ரல் திங்களில் பட்டா வழங்கிட இருக்கிறது.

137. தேர்தல் அறிக்கையில் பெருந் தலைவர் காமராசர் ஆட்சியிலும், கழக ஆட்சியிலும் நிறைவேற்றப்பட்ட நில உச்சவரம்பு சட்டத்தை மீறி பினாமி நிலம் வைத்திருப்போரிடமிருந்து அந்த நிலத்தைக் கைப்பற்றி நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கும் பினாமி நில ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவித்திருந்தோம். முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா நில உச்ச வரம்பு கட்டுவதற்கான முதல் சட்டமாக 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் நாள் எனத் தேதியிட்ட, தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (உச்ச வரம்பு) சட்டம் 1961, அமுல்படுத்தப்பட்டது. உச்சவரம்பு சட்டத்தை எதிர்நோக்கி, அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் உச்சவரம்புக்கு உட்படக்கூடிய பெரு நிலக்காரர்கள் பலர் தங்களது நிலங்களைப் பல்வேறு அறக்கட்டளைகளுக்கும் நபர்களுக்கும் பினாமியாக மாற்றியுள்ளார்கள் என்பதும், ஆனால், பெருமளவுக்கு அந்த நிலங்கள் அவர்களுடைய அனுபவத்திலேயே தொடர்ந்து இருக்கின்றன என்பதும் உண்மையான நிலையாகும். இந்தச் சூழ்நிலையில், 1958-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் முதல் 1960-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ஆம் நாள் வரை பினாமியாக மாற்றப் பட்ட நிலங்களின் விவரங்களை ஆராய்ந்து, இப் புதிய சட்டத்திற்கு புறம்பான மாற்றங்கள் செல்லாதென்று அறிவித்து, சம்பந்தப்பட்ட நிலங்கள் அரசால் முறைப்படி எடுத்துக் கொள்ளப்பட்டு அந்த நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க ஒரு புதிய நிலச் சீர்திருத்த சட்டத்தை இந்தப் பேரவைக் கூட்டத்தொடரில் கொண்டுவர முடிவெடுத்துள்ளோம்.

வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்

138. நடப்பு ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கும்போது 1989-90-ஆம் ஆண்டு இறுதியில் ரூ. 325.07 கோடி பற்றாக்குறையாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. தற்போது திருத்திய மதிப்பீடுகளின் அடிப்படையில் வருவாய்க் கணக்கில் ரூ.4044.24 கோடி வருவாயும், ரூ.4562.80 கோடி செலவாகவும் மதிப்பிடப்பட்டு, வருவாய்க் கணக்கில் ரூ. 518.56 கோடி அளவிற்குப் பற்றாக் குறை உள்ளது. மூலதனச் செலவுகள் மற்றும் இதர கணக்குகளின் விளைவுகளையும் எடுத்துக் கொண்டு, நடப்பு ஆண்டின் இறுதியில் மொத்தப் பற்றாக்குறை ரூ.160.74 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டதனாலும் வேறு சில நிதி ஆதாரங்களை திரட்டும் நடவடிக்கைகளினாலும் இறுதிப் பற்றாக்குறை ரூ. 325.07 கோடி இல்லாமல், ரூ. 160.74 கோடி அளவுக்குக் குறைக்கப்படும் என்று தற்போது எதிர்பார்க்கிறோம். இதற்கு காரணம், அரசு கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டவும், வரி வசூலை செம்மைப்படுத்தவும், செலவுகளைக் கட்டுப் படுத்தவும் எடுத்துக் கொண்ட பல்வேறு முயற்சிகளேயாகும்.

139. வரும் ஆண்டுக்கான, அதாவது 1990-91 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகளின்படி, வருவாய்க் கணக்கில் ரூ.4397.46 கோடி வருவாயும், ரூ.4814.09 கோடி செலவும் மதிப்பிடப்பட்டு, வருவாய்க் கணக்கில் ரூ.416.63 கோடி பற்றாக்குறையாக அமைகிறது. இதர கணக்குகளையும் சேர்த்து நோக்கும்போது, 1990-91-ல் மட்டுமே ரூ. 349.36 கோடி துண்டு விழும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவும், நடப்பு ஆண்டின் இறுதியில் இருக்கும் ரூ. 160.74 கோடி பற்றாக்குறையும் சேர்ந்து, 1990-91 முடிவில் ரூ. 510.10 கோடி மொத்த பற்றாக்குறையாக இருக்கும். அண்மையில் மதுவிலக்கு ஏற்பாடுகளிலும், ஆயத்தீர்வையிலும் நாம் எடுத்துள்ள முடிவுகளின் காரணமாக கூடுதல் வருவாயாக ரூ. 180 கோடி கிட்டும் என்று எதிர்பார்ப்பதால், அந்த அளவுக்கு மொத்தப் பற்றாக்குறை ஈடுசெய்யப்பட்டு, ரூ. 330.10 கோடியளவுக்குக் கொண்டு வரப்படும். இந்த அளவுக்கு நிற்கும் பற்றாக்குறையைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

140. அண்மையில் மத்தியத் திட்டக் குழுவுடன் நடந்த பேச்சு வார்த்தைகளில், வரும் ஆண்டில் திட்டப் பணிகளுக்காகத் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகையை அதிகரிக்க வேண்டுமென்றும், பொதுக் கடன்கள் மூலமாக நமது அரசும், அரசு நிறுவனங்களும் எழுப்பக் கூடிய தொகைகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளோம். வரும் ஆண்டிலாவது, மாநிலங்களின் நிதி ஆதாரங்களை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய அரசு சரக்குகள் அனுப்புவதன் மீதான வரியைக் (Consignment Tax) கொண்டு வரும் என்று நம்புகிறோம். வழக்கமாக ஏற்படும் வளர்ச்சியின் காரணமாக, மத்திய வரிகளிலிருந்து நமக்குப் பங்காக கிடைக்கும் வரவினங்களும் ஓரளவுக்கு அதிகரிக்கலாம். அரசுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிப்பதிலும், அரசின் செலவுகளைக் கட்டுப் படுத்துவதிலும் தொடர்ந்து கண்டிப்பாக இருப்போம். இவ்வகையான பல்வேறு நடவடிக்கைகளின் மூலமாக பற்றாக்குறை கூடுமான அளவுக்கு ஈடு செய்யப் பட்டாலும், வரும் ஆண்டின் இறுதியில் நிகரமாகத் தென்படும் பற்றாக்குறையின் அளவு கவலையளிக்கும் ஒன்றாகவே இருக்கும். அதனை உரிய முறைகளில் சரிக்கட்டும் பொறுப்பு தவிர்க்க முடியாததாகும்.

141. கூடுதல் நிதியாதாரங்களைத் திரட்டும் முயற்சிகளில், சாதாரண மக்களின் மீது சுமை விழக் கூடாது, அவர்களுக்கு இயன்ற அளவுக்கு சலுகைகளும் கொடுக்கப்பட வேண்டுமென்பதே நமது கொள்கையாகும். அத்துடன், விற்பனை வரி கொடுக்கும் இலட்சக் கணக்கான வணிகர்களின் நலத்தையும் கருத்தில் கொண்டு சில முக்கியமான சீர்திருத்தங்களைக் கொண்டுவர முடிவு எடுத்துள்ளோம்.

வரிகள்

142. தமிழ் நாட்டின் விற்பனை வரி அமைப்பில் 193 பொருட்கள் ஒரு முனை வரிக்கும், ஏனைய வரி விதிக்கக்கூடிய பொருட்கள் ஒவ்வொரு கட்டத்திலும் 5 சதவீத பலமுனை வரிக்கும் உட்பட்டு இருக்கின்றன. வியாபாரிகள் ஒரு முனை வரி முறையையே விரும்புகின்றனர். இதற்கிணங்க, நமது அரசும் அவ்வப்போது பொருட்களைப் பலமுனை வரியிலிருந்து ஒரு முனை வரிக்கு மாற்றி வந்துள்ளது.

143. வரும் ஆண்டிலிருந்து, விற்பனை வரி அமைப்பில் ஒரு அடிப்படைச் சீர்திருத்தமாக, இனி எல்லா பொருட்கள் மீதும் ஒரு முனை வரியே விதிக்கப்படுமென்றும், பலமுனை வரி ஏற்பாடு அறவே நீக்கப்படுமென்றும் முடிவு

செய்துள்ளோம். பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்களின் மீது பொதுவாக இரண்டு கட்டங்களில் வரி விதிக்கப்படுவதால், அவை 10 சதவீத வரிச் சுமையைத் தாங்க வேண்டியிருக்கிறது. எனவே, குறிப்பிட்ட ஒரு முனை வரி விகிதங்களுக்கும், வரி விலக்குக்கும் உட்படாத எஞ்சிய எல்லாப் பொருட்களுக்கும், அதாவது தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்கள் அனைத்துக்கும், இனி ஒரு முனையில் 8 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படும். பலமுனை வரி முறையில் தற்போது ஆண்டொன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் மொத்த விற்பனை அளவுக்கு வரி விலக்கு அளிக்கப்படுகிறது. இந்தச் சலுகை மேலே கூறப்பட்ட எஞ்சிய பொருட்களுக்குத் தொடரும். இந்த மாறுதலினால் நுகர்வோருக்கு வரிப்பளுவும், வணிகர்களுக்கு சிரமமும் குறையும்.

144. தற்போது பலமுனை வரிக்கு உட்பட்ட பொருட்களின் தயாரிப்பாளர்களுக்கு மூலப் பொருள் கொள்முதலில் வரிச் சலுகை ஏதும் அளிக்கப்படுவதில்லை. அனைத்துப் பொருட்களையும் ஒருமுனை வரியாக மாற்றும்பொழுது இவர்களுக்கும் மூலப் பொருட்கள் மீதான சலுகை வரி கிடைப்பதற்கு வகை செய்யப் பட்டுள்ளது.

145. தற்போது பல முனை வரிக்குட்பட்ட குறிப்பிட்ட சில பொருட்களுக்கு இனிமேல் விதிக்க இருக்கின்ற ஒரு முனை வரி பின்வருமாறு அமையும் :

வரிசை என்.	பொருட்களின் பெயர்.	வரி விகிதம்.
1	அலுமினியப் பாத்திரங்கள் ..	4
2	பித்தளை, செம்புப் பாத்திரங்கள்.	5
3	ரொட்டி, பிஸ்கட் போன்றவை (டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதது).	5
4	தங்கம், வெள்ளியினால் செய்த அணிகலன்கள், பொருட்கள்.	4
5	காலணிகள் (டிரேட் மார்க் சட்டத்தில் பதிவு பெறாதது).	5
6	ஏலக்காய்	3

146. பின்வரும் பொருட்களுக்கு வரிச் சலுகைகள் அளிக்கப்படும்.

* நேரடியாக மக்கள் நுகரும் கரும்புக்கும், குறிப்பிட்ட நாட்டு மருந்துகள் 10-க்கு (வாய் விளங்கம், பூமாங் கிழங்கு, நெருஞ்சி, தாதரிப்பூ, அதிவிடயம், மாச்சக்காய், மதனகாமப்பூ, வெள்ளி லோத்திரம், திலவாகை, சாரணவேர்) விற்பனை வரி அறவே அகற்றப்படும்.

* மிளகாய், புளி, மிளகு, வெல்லம், மஞ்சள், மல்லி, சீரகம், சீயக்காய் ஆகிய அத்தியாவசியப் பொருட்களுக்கு தற்போது விதிக்கப்படும் 8 சதவீத வரி 6 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* கால்நடைகளால் இழுக்கப்படும் மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் போன்ற வண்டிகளின் டயர்களுக்கும், டியூப்களுக்கும் தற்போது விதிக்கப்படுகின்ற 8 சதவீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

* டிராக்டர்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் மீது தற்போது விதிக்கப்படுகின்ற 9 சதவீத வரி 4 சதவீதமாக குறைக்கப்படும்.

* கைப் பம்புகளுக்குத் தற்போது உள்ள 8 சதவீத வரி 4 சதவீதமாக குறைக்கப்படும்.

* செங்கற்கள் மீது தற்போது விதிக்கப் படும் 8 சதவீத வரி 4 சதவீதமாகவும், சாதாரண ஓடுகள் மீது தற்போது விதிக்கப்படும் 5 சதவீத வரி 4 சதவீதமாகவும் குறைக்கப்படும்.

* ரப்பர் கலந்த நார்ப் பொருட்களுக்கு வரி 5 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

147. தற்போது தேங்காய் கொப்பரைக்கு உள்ள வரி 3 சதவீதமாகவும், எண்ணெய் தயாரிக்கும் வணிகர்களுக்கு விற்கப்படும் தேங்காயின் மீதான வரி 5 சதவீதமாகவும் உள்ளது. இவை இரண்டும் இனிமேல் 4 சதவீத வரிக்கு கொண்டு வரப்படும். மக்கள் நேரிடையாக வாங்கும் தேங்காய்க்கு வரிவிலக்கு தொடரும்.

148. அண்டை மாநிலங்களில் இருக்கும் வரி விகிதங்களை ஒப்பிட்டுப் பார்த்தும், சாதாரண மக்களைப் பாதிக்காதவாறு நிதியாதாரங்களைப் பெருக்க வேண்டியிருப்பதாலும், ஒரு சில பொருட்களுக்கு ஓரளவுக்கு வரிகளை உயர்த்த முடிவு செய்துள்ளோம். அவை பின்வருமாறு :

* பெட்ரோலியப் பொருட்களுக்கு (Petroleum Products) தற்போது விதிக்கப்பட்டு வரும் கொள்முதல் வரி 4 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக உயர்த்தப்படும். இதனால் மாநிலத்துக்குள் இந்தப் பொருட்களைப் பயன் படுத்துவோருக்கு பாதிப்பு இராது. பெட்ரோல் மற்றும் டீசல் மீது உள்ள விற்பனை வரியில் எவ்விதமான மாறுதலும் இல்லை.

* கோதுமையிலிருந்து உற்பத்தி செய்யப் படும் ஆட்டா, ரவா, மைதா, கஞ்ஜி போன்ற பொருட்களுக்கு 2 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக வரி உயர்த்தப்படும். கோதுமைக்கு உள்ள வரி விலக்கு தொடரும்.

* மெத்தை போன்றவை தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பருத்திக் கழிவிற்கும், இயந்திரங்கள் துடைப்பதற்கு உபயோகப் படுத்தப்படும் பருத்தி நூல் கழிவு (cotton waste and cotton yarn waste) ஆகியவை மேல் இருக்கும் வரி 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதமாக உயர்த்தப்படும்.

* பச்சைத் தோல்களின் (Raw hides and skins) மீது தற்போது 2 சதவீத வரி

விதிக்கப்படுகிறது. ஆனால், பதனிடப்பட்ட தோல்களுக்கும் (Dressed hides and skins) ஒரு சதவீதமே விதிக்கப்படுகின்றது. இதனால், வரி விதிக்கப்படும் முறைகளில் சங்கடங்களும் சர்ச்சைகளும் ஏற்படுகின்றன. இவற்றைத் தவிர்க்க இரண்டு வகைத் தோல்களுக்கும் 2 சதவீத வரி விதிக்கப்படும்.

* புதிதாக விற்பனைக்கு வரவிருக்கும் உள்நாட்டு மலிவு மதுவின் (country liquor) மீது 25 சதவீத ஒருமுனை வரி விதிக்கப்படும்.

* மின்னணு டெலிபிரிண்டர்கள் மற்றும் அதன் பாகங்களின் மீது விதிக்கப்படும் 15 சதவீத வரி 10 சதவீதமாகக் குறைக்கப்படும். ஏனைய எல்லா மின்னணு பொருட்களுக்கும் ஒரே சீராக 4 சதவீதவரி விதிக்கப்படும். அவ்வாறே தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு விதிக்கப்படும் வரியும் 4 சதவீதமாக இருக்கும்.

149. கடந்த சட்டசபைக் கூட்டத்தில் பல உறுப்பினர்கள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி அமைப்புகளின் நிதி ஆதாரங்கள் கவலைக்கிடமாக உள்ளனவென்றும் இந்த நிலையைச் சமாளிக்க வழிவகைகள் செய்வது அவசியமும் அவசரமும் ஆகுமென்றும் எடுத்துக் கூறினர். இந்த நோக்கத்துடன், ஓரளவுக்கு விற்பனை வரியின் மீது விதிக்கப்படும் மேல்வரியை (surcharge) உயர்த்த முன் வந்துள்ளோம். தற்போது மதுரை, கோவை மாநகராட்சி எல்லைகளுக்குள்ளும், சிறப்பு நிலை நகராட்சி எல்லைகளுக்குள்ளும் விதிக்கப்படும் 10 சதவீத மேல்வரி (surcharge) 12 சதவீதமாக உயர்த்தப்படும். ஏனைய நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், நகரியங்களிலும் விதிக்கப்படும் 8 சதவீத மேல்வரி 10 சதவீதமாக உயர்த்தப்படும். ஊராட்சிகளில் விதிக்கப்பட்டுவரும் 8 சதவீத மேல்வரியில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. சென்னை மாநகராட்சியைத் தவிர மற்ற மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்களில் விதிக்கப்படும் மேல் வரியிலிருந்து கிட்டும் வருவாயை இதுவரை அரசே அனுபவித்து வந்துள்ளது. இனி, இந்த மேல் வரி வருவாயில் 20 சதவீதம் மேற்கண்ட அமைப்புகளுக்கு மக்கள் தொகை அடிப்படையில் மானியமாக வழங்கப்படும்.

150. சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில், தற்போது 10 சதவீதம் மேல்வரி விதிக்கப்பட்டு வருகிறது. இந்த மேல்வரி 15 சதவீதமாக உயர்த்தப்படும். மேல்வரி வருவாயில் தற்போது 32.5 சதவீதம் மானியமாக சென்னை மாநகராட்சிக்கு கொடுக்கப்படுகிறது. இனி இந்தத் தொகை 50 சதவீதம் மானியமாக வழங்கப்படும். இதனால் சென்னை மாநகராட்சிக்கு வரும் ஆண்டில் கூடுதலாக ரூபாய் 12.5 கோடி கிடைக்க வழிவகை செய்துள்ளோம்.

151. கூடுதல் விற்பனை வரி, வரி விதிப்பிற் குள்ளடங்கிய ஆண்டு விற்பனை அளவு ஒரு கோடிக்கு மேலாக இருந்தால், 2 சதவீதமாக இருக்கிறது. இனியும் 5 கோடி விற்பனை அளவு வரை இந்த வரி விகிதத்தில் மாறுதல் எதுவும் இருக்காது. ரூபாய் 5 கோடிக்கு மேல் 10 கோடி விற்பனை அளவு வரை கூடுதல் விற்பனை வரி விகிதம் 2.25 சதவீதமாகவும், ரூபாய் 10 கோடிக்கு மேல் உள்ள விற்பனை அளவுக்கு 2.5 சதவீதமாகவும் உயர்த்தப்படும். ஒரு சில பெரிய நிறுவனங்கள் மட்டுமே இந்தப் புதிய வரி விகிதங்களின் கீழ் கொண்டுவரப்படும் என்பதும், இந்த வரியினால் நுகர்வோர் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

152. தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளவாறு வணிகர் நல வாரியத்தை அமைத்துள்ளோம். வரி விதிப்பு முறைகளினால் சிறு வியாபாரிகளுக்கு ஏற்படும் தொல்லைகளை நீக்கிடச் சில மாறுதல்களைக் கொண்டுவர முற்பட்டுள்ளோம். ஆண்டுக்கு ரூபாய் 5 இலட்சமும் அதற்குக் கீழும் உள்ள மொத்த விற்பனை அளவுக்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, “முடிவுற்றதாகக் கருதப்படும் வரி விதிப்பு” முறை (Deemed assessments) கடைப்பிடிக்கப்படும். இந்த வரையறையில் அடங்கிய வியாபாரிகள் விரிவான கணக்குகளைக் கொடுக்க வேண்டிய அவசியம் நீக்கப்பட்டு அவர்களாலேயே படிவத்தில் கொடுக்கப்படும் விற்பனை வரித் தொகையை விற்பனை வரி நிர்வாகம் தணிக்கை செய்யாமல் ஏற்றுக்கொள்ளும். இவ்வாறு கொடுக்கப்படும் மதிப்பீடுகளின் உண்மை நிலை அறிய, 5 அல்லது 10 சதவீதம் அளவுக்கு மட்டுமே இங்கொன்றும் அங்கொன்றுமான மாதிரி அடிப்படையில் (Random sample) விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். இந்த மாற்றத்தினால் 40,000 வியாபாரிகள் பயன் பெறுவார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த புதிய முறையை வரவேற்று அதைச் செயல் படுத்துவதில் வணிகப் பெருமக்கள் அரசுக்கு முழு ஆதரவை அளிப்பார்கள் என நம்புகிறேன்.

153. தமிழ்நாட்டிலுள்ள சொத்துக்களின் உரிமம் மாற்றும்பொழுது சட்டப்படி முத்திரைத் தாள் வரி கட்ட வேண்டிய நிலை இருக்கின்றது. இம்மாநிலத்திற்குச் சேர வேண்டிய இவ்வரியைக் கட்டாமல் இருக்கச் சிலர் இதர மாநிலங்களில், தமிழ்நாட்டில் ஏற்படும் சொத்து மாற்றங்களைப் பதிவு செய்து முத்திரைத் தாள் வரியை அந்த மாநிலத்தில் கட்டி வருகின்றார்கள். இதனைத் தவிர்க்கும் பொருட்டு, இந்திய முத்திரைச் சட்டத்திற்கு சட்டத்திருத்தம் மூலம் முத்திரைத் தாள் வரி ஒன்றை இக்கூட்டத்தொடரில் கொண்டு வர இருக்கின்றோம். இந்தத் திருத்தத்தினால் தமிழ் நாட்டிலுள்ள சொத்து மாற்றங்கள் பிற மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டால், அத்தகைய பதிவு பத்திரங்களின் நகல் தமிழ் நாட்டில் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றும், அப்போது நம்முடைய மாநிலத்தின் வரி விகிதத்திற்கும் பதிவு செய்யப்பட்ட மாநிலத்தில் கொடுக்கப்பட்ட வரிக்கும் உள்ள வித்தியாசம் கட்டப்பட வேண்டுமென்றும் முறை ஏற்படுத்தப் படும். இதனால் வரி ஏய்ப்புக்குத் தற்போதுள்ள வாய்ப்பு அகற்றப்படும்.

154. இந்த நிதி நிலை அறிக்கையில் புது சாலைகளும், பாலங்களும் அமைக்கவும்,

TNPSC

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

விளம்பர எண்: 9/90

தேர்வாணைய விளம்பர எண். 20-இல் தமிழ்நாடு பொதுப்பணியில் இயக்கூர்திகள் பராமரிப்புத் துறையில உந்தூர்தி பொறியாளர் பதவியில் இரண்டு காலியிடங்களுக்கு விண்ணப்பங்களை வரவேற்கும் அறிவிக்கைகளில் கீழ்க்கண்டபடிபணியிடப்பகிர்வீடு ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

பகிரங்கப் போட்டி	- 1	(இரண்டு காலியிடங்களும் பெண்களுக்கு
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	- 1	ஒதுக்கப்பட்டுள்ளன).

எல்லா பதவிகளுக்கான ஒதுக்கீட்டில் புதிய சுழற்சி முறை துவக்கப்படுவதால், இப்பதவியில் உள்ள காலியிடங்கள் கீழ்க்கண்டபடி பணியிடப் பகிர்வீடு செய்யப்படும் என இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது:-

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர்	- 1
பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்	- 1

ஏற்கெனவே அறிவிப்பு செய்யப்பட்ட மற்ற நிபந்தனைகளில் இப்பதவிக்குரிய சம்பளத்தைத் தவிர மாறுதல் ஏதும் இல்லை. இப்பதவிக்குரிய சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2,200-75-2,800-100-4,000 ஆகும். முன்பு வெளியான பணியிடப்பகிர்வீட்டின் அடிப்படையில் விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதில்லை.

இப்பதவிக்குப் புதிய பணியிடப் பகிர்வீட்டின்படி (அதாவது ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் - 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 1) நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 16.4.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

இப்பதவிக்குக் குறிப்பிட்டுள்ள வயது மற்றும் தகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

வயது : 1.7.1989 அன்று 35-க்குக் குறைவாக.

தகுதி : Candidates should possess the following or equivalent qualifications on the dates of their applications:-

I (a) A degree in Automobile or Mechanical Engineering.

OR

(b) A Post Diploma in Automobile Engineering or Licentiate or Diploma in Automobile or Mechanical Engineering awarded by the State Board of Technical Education and Training, Tamil Nadu.

AND

II Experience for a period of not less than five years in the administration of an office and the mangement of Workshops connected with the maintenance and upkeep of Motor Vehicles.

EXPLANATIONS: 'Workshop' shall mean any workshop under the control of the Government/Public/Private organisation and registered under the Factories Act, 1948 (Central Act LXIII of 1948).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப்பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர என் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அதற்கு பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணையுடனும், அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (STate Bank of India) ஏதாவது ஒரு கிளையில், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.3.1990 அன்றோ அதற்கு பிறகோ வாங்கப்பட்ட சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க ரூபாய் 10/-க்கான கேட்புக் காசோலை (Demand Draft) -புடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழிபெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

டி.ஐபி.ஆர்/630/எம்எஸ்/90

தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை :

பத்திரிகைகள் பாராட்டுகின்றன!

தினமணி

இல்லத்தரசிகளுக்கும், விவசாயிகளுக்கும் மகிழ்ச்சியளிக்கும் பட்ஜெட்

விற்பனை வரி விதிப்பு முறையில் அடிப்படை மாறுதல் செய்யப்பட்டிருப்பது மிக முக்கியமான விஷயமாகக் கருதப்படும். இனி பலமுனை விற்பனை வரி நீக்கப்பட்டு, ஒருமுனை விற்பனை வரி விதிக்கப்படும். தற்சமயம் பலமுனை விற்பனை வரிக்கு உள்பட்ட பொருள்கள் அனைத்துக்கும் இனி ஒரு முனையில் எட்டு சத வரி விதிக்கப்படும் என்றும், இதனால் நுகர்வோருக்கு வரிப் பளுவும், வணிகர்களுக்கு வரிச் சுமையும் குறையும் என்றும் பட்ஜெட் கூறுகிறது. இந்தச் சீர்திருத்தத்தை வணிகர் சங்கங்கள் வரவேற்றுள்ளன.

பலமுனை வரிவிதிப்பால் வரிச்சுமை ஏற்படுவது மட்டுமின்றி, அதிகாரிகளின் துன்புறுத்தலுக்கும் உள்படுவதாக வியாபாரிகள் பலமுறை முறையிட்டிருக்கிறார்கள். அந்தக் குறை இனி நீங்கும். மற்றும் பலமுனை வரி விதிப்பால் நுகர்வோரும் பாதிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு முறையும் விலை ஏற்றம் செய்யப்படுவதே அதற்குக் காரணம். இனி இத்தகைய பாதிப்பு இராது. மற்றும் வரி விதிப்பு நடைமுறை எளிதாக்கப்படும். ஆகவே இந்தச் சீர்திருத்தம் பரவலாக வரவேற்கப்படும்.

வரிச் சலுகைகளைப் பொறுத்தவரை இல்லத்தரசிகளுக்கும், விவசாயிகளுக்கும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் பட்ஜெட் பிரேரணைகள் சில அமைந்துள்ளன. மிளகாய், வெல்லம், புளி, மிளகு, மஞ்சள், மல்லி, சீரகம், சீயக்காய் ஆகிய அவசியப் பொருள்களுக்கு விற்பனை வரி இரண்டு சதம் குறைக்கப்படுகிறது. கரும்பு மற்றும் பத்து நாட்டு மருந்துகள் மீது வரி அறவே நீக்கப்படுகிறது.

ஒன்றரை லட்சம் விவசாயிகள் பயனடையும் வகையில் பம்புசெட்டுகளுக்கு மின்சாரக் கட்டணம் குறைக்கப்படுகிறது. டிராக்டர் பாகங்கள் மீதான விற்பனை வரி ஒன்பது சதத்திலிருந்து நான்கு சதமாக வெட்டப்படுகிறது. மாட்டு வண்டிகளின் டயர்கள் மீது வரி பாதியாகக் குறைக்கப்படுகிறது. இவை விவசாயிகளுக்குப் பயனளிக்கும் சலுகைகள்; செங்கல்கள், ஓடுகள் மீது வரி வெட்டு, வீடு கட்டுபவர்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

கடலூர், புதுக்கோட்டை, மானாமதுரை மற்றும் பிற்பட்ட வட்டங்களில் நிறுவப்படும் தொழிற்சாலைகளில் முதலீடுகளுக்கு ஐந்து ஆண்டுக்காலத்துக்கு விற்பனை வரியிலிருந்து முழு விலக்களிக்கப்படும் என்ற அறிவிப்பு தொழில்துறைக்கு ஊக்கமளிக்கும்.

—'தினமணி'
19.3.90

மக்கள் குரல்

முற்போக்கான தமிழக வரவு-செலவுத் திட்டம்

வரிவிதிப்பிலும், திட்டங்களிலும் "புதுமையை" நிறையவே முதல்வர் செய்துள்ளார்.

ஜனரஞ்சகமான மலிவுத் திட்டங்கள் என்று ஜனாதிபதி ஆட்சியின்போது கூட எம்.ஜி.ஆர். ஆட்சியின் சில திட்டங்கள் காங்கிரஸ் மேடைகளில் தாக்கப்பட்டன.

தமது பட்ஜெட்டில், மேலும் மக்கள் நலத் திட்டங்களை முதல்வர் கருணாநிதி சேர்த்திருக்கிறாரே தவிர, எதையும் கைவிடவில்லை.

பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லை, தமிழக வரிவிதிப்பு இனங்களில்.

தமிழக அரசு மக்கள் நலத் திட்டங்கள் எதையும் கைவிடவில்லை! சொல்லப்போனால், மேலும் புதிய திட்டங்களைப் பட்ஜெட்டில் முதல்வர் அறிவித்துள்ளார்! ஏழை, எளிய மக்கள் வாங்கும் பண்டங்களின் விலைகளும் குறைக்கப்பட்டுள்ளன.

சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் 85 லட்சம் குழந்தைகளுக்கு இரண்டு வாரங்

சாலைகளைப் பராமரிக்கவும் கணிசமான அளவுக்கு ஒதுக்கீடுகள் உயர்த்தப்பட்டுள்ளன. இந்தப் பின்னணியில், சாலைகளை உபயோகிக்கும் சரக்கு வாகனங்களுக்கும் (Goods vehicles), ஊர்திகளுக்கும் போடப்படும் வரிகள் ஓரளவுக்கு உயர்த்துவது தேவையும் நியாயமுமாகிறது.

155. தற்போது சரக்கு வாகனங்களின் மீதான வரிகள், வாடகைக்கு ஓடும் வாகனங்கள், ஏனைய வாகனங்கள் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டு விதிக்கப்படுகின்றன. புதிதாகக் கொண்டுவரப்பட்ட 1988ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்திலும், தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் விதிகள் 1989 அடிப்படையிலும், இவ்விரண்டு பிரிவுகளும் இணைக்கப்பட்டு, வாகனங்களுடைய கனத்தின் அடிப்படையில் வகை செய்யப்படுகின்றது. இதனை ஒட்டி வரி விகிதங்களையும் முறைப்படுத்தி ஓரளவுக்கு உயர்த்தியுள்ளோம்.

பின்வரும் அட்டவணையில் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன :

வரிசை எண்.	ஊர்திகளின் வகைகள்.	தற்போதைய காலாண்டு வரி.	உயர்த்தக் கருதியுள்ள காலாண்டு வரி.
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
1.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 3,000 கிலோ கிராம் எடைக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	450	மாற்றம் இல்லை.
2.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 3,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 5,500 கிலோ கிராமுக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	700	750
3.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 5,500 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 9,000 கிலோ கிராமுக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	1,020 / 1,100	1,150
4.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 9,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 12,000 கிலோ கிராமுக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	1,300	1,490
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
5.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 12,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 13,000 கிலோ கிராமுக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	1,400	1,590
6.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 13,000 கிலோ கிராமுக்கு மேற்பட்டு, ஆனால், 15,000 கிலோ கிராமுக்கு மேற்படாத சரக்கு ஏற்றும் வண்டிகள்.	1,600	1,840
7.	எடை ஏற்றப்பட்டுள்ள நிலையில் 15,000 கிலோ கிராமுக்கு மேற்படுகிற சரக்கு ஏற்றும் வண்டிகள்.	1,600 + 15,000 கிலோ கிராம் எடைக்கு மேற்படுகையில் அதனுடன் கூடிய 250 கிலோ கிராம் அல்லது பகுதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 50.	1,840 + 15,000 கிலோ கிராம் எடைக்கு மேற்படுகையில் அதனுடன் கூடிய 250 கிலோ கிராம் அல்லது பகுதி ஒவ்வொன்றுக்கும் ரூ. 50.

156. பேருந்துகளைப் பொறுத்த வரையில் காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு போடப்படும் வரி பின்வருமாறு மாற்றப்படும்.

வரிசை எண்.	ஊர்திகளின் வகைகள்.	தற்போதைய காலாண்டு வரி இருக்கை ஒன்றுக்கு.	உயர்த்தக் கருதியுள்ள காலாண்டு வரி இருக்கை ஒன்றுக்கு.
(1)	(2)	(3)	(4)
		ரூ.	ரூ.
1.	சென்னையைத் தவிர்த்து மற்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கும் நகரப் பேருந்துகள்.	200	230
2.	விரைவுப் பேருந்துகள்.	220 + மேல்வரி ரூ. 40.	250 + மேல்வரி ரூ. 40.
3.	விரைவுப் பேருந்துகள் அல்லாத பிற பேருந்துகள்	245 + மேல்வரி ரூ. 35.	275 + மேல்வரி ரூ. 35.

157. பயணிகளின் இருக்கைகள் அடிப்படையில் விதிக்கப்படுகின்ற, ''ஆம்னி பஸ்'' என்று அழைக்கப்படும் ஒப்பந்த ஊர்திகள் மீது வரி, காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 500-லிருந்து ரூ. 2,000 என்று மாற்றியமைக்கப்படும்.

158. தனியார் தொழில் வாகனங்களுக்கு (Private Service Vehicles) தற்போது காலாண்டுக்கு வாகனம் ஒன்றுக்கு ரூ. 150 ஆக வரி விதிக்கப்பட்டு வருகிறது. இது காலாண்டுக்கு இருக்கை ஒன்றுக்கு ரூ. 50 ஆக மாற்றப்படும். இந்த வரி மாற்றம் கல்வி நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களுக்குப் பொருந்தாது.

159. மோட்டார் வாகனங்களை ஒட்டிய மேற்கூறிய வரி மாற்றங்கள் 1990ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1ஆம் நாள் முதல் அமுல் படுத்தப்படும்.

160. வரும் 1990-91ஆம் ஆண்டு இறுதி பற்றாக்குறை, நிதி நிலை அறிக்கையின் மதிப்பீடுகளின்படி ரூ. 510.10 கோடி அளவுக்கு இருக்கும் என்று, இந்த உரையில் வேறு பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். அண்மையில் மது விலக்குக் கொள்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றங்களினால் ரூபாய் 180 கோடி அளவுக்கும், இந்த நிதி நிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மாற்றங்களினால் நிகரமாக ரூபாய் 62 கோடி அளவுக்கும், இந்தப் பற்றாக்குறை குறைக்கப்பட்டு, 1990-91ஆம் ஆண்டு இறுதியில் நிகரமாக ரூபாய் 268.10 கோடியாக் இருக்கும். நான் முன்னரேயே விளக்கியுள்ளபடி, இந்தப் பற்றாக்குறை பெருமளவுக்கு மத்திய அரசு விதிக்கும் வரிகளிலிருந்து நமக்குச் சேரும் தொகைகளில் ஏற்படக்கூடிய முன்னேற்றத்தின் மூலமாகவும், திட்டச் செலவுக்காக மத்திய அரசு கொடுக்கும் உதவித் தொகைகளை உயர்த்தப்படுவதின் மூலமாகவும், வெளி மாநிலங்களுக்குச் சரக்குகள் அனுப்புவதின் மீதான வரியினால் கிடைக்கக்கூடிய தொகைகளாலும் சரிக்கட்டப்பட வேண்டியதாக இருக்கிறது. மேலும், கூடுமான அளவுக்கு, இதனைச் சரிக்கட்ட நாம், செம்மையாக வரி வசூல் முறைகளையும் சிக்கனத்தையும் கடைப் பிடிக்கவேண்டும். தமிழ்நாட்டின் நியாயமான கோரிக்கைகளை மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்துவோம். அதே நேரத்தில் நாமும் பற்றாக்குறையை ஈடு செய்ய உரிய முறைகளை மேற்கொள்ளுவோம்.

161. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து எனும் அறிவுரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒரு அரசுக்கும், அந்த அரசினால் பரிபாலிக்கப்படும் மக்களுக்கும் பொருந்தாது என்பதே என் கருத்து. ஏனெனில், இன்னும் எத்தனையோ திட்டங்கள், நலப் பணிகள் மக்களுக்குத் தேவைப்படுகின்றன. அத்தனை நிறைவேற்றத் துடிக்கும் நமக்கு நிதிநிலை போதுமானதாக இல்லாதபோது ''போதுமென்ற மன உபதேசம்'' ஆளுவோருக்கும் ஆளுவோரைத் தேர்ந்தெடுத்தோருக்கும் ஏற்புடையதாக இருக்க முடியாதல்லவா?

162. என்னுடைய [illegible] ஆண்டு நிதிநிலை அறிக்கையில் நான் கூறியது போலவே [illegible] சுருங்கிய காலத்துள் [illegible] கடமையுணர்ந்தோர் நற்செயல்களை [illegible] நயங்கொள்ளார் எனும் வள்ளுவர் வாக்கை மனத்தில் பதித்துக் கொண்டு மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் உறுதிப்பாட்டுடன் இந்த அரசு செயல்படுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கையினைத் தயாரிக்க என்னுடன் ஒத்துழைத்து உறுதுணையாக இருந்த நிதித் துறை செயலாளர் [illegible] நாராயணன் அவர்களுக்கும் மற்றும் அரசு அதிகாரிகளுக்கும் நன்றியினைக் கூறி இந்த 1990-91ஆம் ஆண்டுக்கான நிதிநிலை திட்ட மதிப்பீடுகளை அவையினர் ஏற்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

சென்னை,
திருவள்ளுவர் ஆண்டு 2021
பங்குனி, 3ஆம் நாள்
1990ஆம் ஆண்டு
மார்ச் 17 ஆம் நாள்.

மு. கருணாநிதி,
முதலமைச்சர்.

தமிழக அரசின் வரவு செலவுத் திட்டம்: பல்வேறு சங்கங்களின் பாராட்டுகள்

தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்டம் விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கத்தக்க வகையில் உள்ளது.

—**திரு. கே.பி.டி. கணேசன்**
செயலர், வேளாண்மைப் பட்டதாரிகள் சங்கம்

தமிழக அரசு பலமுனை வரிவிதிப்பை ரத்து செய்து ஒருமுனைவரி விதிப்பு முறை கொண்டு வந்துள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கது.

—**திரு. நல்லி குப்புசாமி**
தலைவர், தமிழ் வர்த்தக சபை

தமிழ்நாடு வர்த்தகக் கழகத்தின் நீண்டநாள் கோரிக்கைகளில் ஒன்றான அனைத்துப் பொருட்களுக்கும் ஒருமுனை வரி கோரிக்கையை நிறைவேற்றியதன் மூலம் புதிய வரலாறு படைத்துள்ள தமிழக முதல்வர் தமிழக வர்த்தகப் பெருமக்களின் நெஞ்சங்களில் இமயமாக உயர்ந்து நிற்கிறார்.

—**திரு. எஸ். தனபாலன்,**
செயலர், தமிழ்நாடு வர்த்தகக் கழகம்

இப்பொழுது எங்களது குறைகள் நூற்றுக்கு 90 சதவீதம் நீங்கி விட்டன. ஆகவே இந்த பட்ஜெட்டை வரவேற்கிறோம். பாராட்டுகிறோம்.

—**திரு. ஏ. அருணாசலம்** (தலைவர்)
திரு. சி. நவமணி (பொதுச் செயலாளர்)
தமிழக அனைத்து வணிகர்கள் சங்கம்

வன்னியர் உள்ளிட்ட மிகப் பிற்படுத்தப் பட்டோர், சீர் மரபினர், ஆதி திராவிடர், மீனவர், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், நெசவாளர்கள், வியாபாரிகள், மகளிர், வேலை வாய்ப்பற்ற இளைஞர், ஏழை, எளிய மக்களின் நலவாழ்வுக்கு அறிவிக்கப்பட்டுள்ள புதிய நலத்திட்டங்கள் அனைத்துத் தரப்பினரையும் பூரிப்படைய வைத்துள்ளன.

—**திரு. சாம்பசிவம்**
தலைவர், வன்னியர் மாணவர் நலக் கழகம்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவப் படி ரூ.15 வழங்கியுள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்று நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

—**திரு. அப்பாசாமி,**
பொதுச் செயலாளர்,
தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம்

படித்து வேலை வாய்ப்பற்றோருக்கு, பேரூராட்சி, நகராட்சிகளில் வேலை, பெண்களுக்குத் தொழிற்பயிற்சி நிலையம், ஓராசிரியர் பள்ளி, நெசவாளர்களுக்குத் தறியுடன் கூடிய வீடு, நாட்டு மருந்துகளுக்கு வரிச் சலுகை, மிகவும் பிற்படுத்தப் பட்டோருக்கு இலவச வீடு வழங்க ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு போன்ற திட்டங்கள் மிகச் சிறந்த முறையில் பட்ஜெட்டில் உருவாக்கித் தரப்பட்டுள்ளன. மொத்தத்தில் இது கலைஞர் உருவாக்கிய ஒரு கலைப் பெட்டகம்.

—**திரு. ப. தனசேகர்,**
துணைச் செயலர்,
தமிழ்நாடு மருத்துவர், சவரத் தொழிலாளர் சங்கம்,
செங்கை-அண்ணா மாவட்டம்

தமிழக பட்ஜெட்டில் பழங்குடியினரின் நலத்திற்காக ஒதுக்கியுள்ள தொகைக்கும், ஏற்படுத்தப் பட்டுள்ள நலன்களுக்கும் நாங்கள் என்றும் நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

—**திரு. என். பாபு** (தலைவர்)
தமிழகப் பழங்குடியினர் நல உரிமைச் சங்கம்

தமிழ்நாட்டில் பிற்பட்ட பகுதிகளில் புதிதாகத் தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு விற்பனை வரிச் சலுகை அளித்துள்ளதை வரவேற்கிறேன்.

—**திரு. அசோக் கும்பட்**
தலைவர்,
தென் மாநில வரி செலுத்துவோர் சங்கம்

களுக்கு ஒரு முறை முட்டையும், வைட்டமின்-ஏ சொட்டு மருந்தும் தொடர்ந்து தரப்படுகிறது. சென்ற ஆண்டு சத்துணவுத் திட்டச் செலவு ரூ.173 கோடி என்றால், இந்த ஆண்டு அதற்கான ஒதுக்கீடு ரூ.195 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது!

இதைத் தவிர ஊட்டச்சத்துத் திட்டம், சத்துணவுத் திட்டம் இரண்டும் இணையப் பெற்ற புதிய ஒருங்கிணைப்புத் திட்டம், மூன்று வயது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டம் உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்படுகிறது.

பலமுனை விற்பனை வரியை நீக்க வேண்டும் என்பது வர்த்தக சமூகத்தின் நீண்டநாள் கோரிக்கை மட்டும் அல்ல, அதை நீக்குவது வரி ஏய்ப்பைத் தடுக்கும் என்றும் "நிபுணர்-கருத்து" வந்துள்ளது. இதைத் தமிழக முதல்வர் ஏற்றிருப்பதை வணிக சமுதாயம் வாழ்த்தும். வணிக நல வாரியம் இந்தச் சமூகத்திற்கு இன்னுமோர் சலுகை!

முதல்வரின் முற்போக்கான அறிவிப்பு ஒன்று நிலச்சீர்திருத்தம் பற்றியது.

விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கடன் நிவாரணம் சுமார் ரூ.106 கோடியாக இப்போது தரப்பட்டுள்ளது. உணவு தானிய உற்பத்திக்கு மானியம் அகில இந்திய ரீதியில் ஏற்கப்பட்டதாகும். சிறு விவசாயிகளுக்குச் சலுகை விலையில் மின்சாரம் தனியாகவே தரப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில், மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் வகையில், அரிசி விலை உயர்வு தவிர்க்க முடியாத துயரமே முதல்வருக்கு!

முதல்வர் திரு. கருணாநிதி கவனமாகவும், விளைவுகளைச் சீர்தூக்கிப் பார்த்தும் பட்ஜெட்டைத் தயாரித்துள்ளார்.

முற்போக்கான தமிழக வரவு-செலவுத் திட்டத்தையும், அதன் இலக்குகள், நோக்கங்கள் இரண்டையும் வாழ்த்தி வரவேற்கிறேன்.

– டி.ஆர்.ஆர்

'மக்கள் குரல்'

18.3.90

THE ECONOMIC TIMES

BANGALORE THURSDAY MARCH 22 1990

தி.மு.க. தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிடத் தீர்மானமாக இருந்தாலும், மாநில அரசு ஊழியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பள விகிதத்தைக் கொடுத்ததாலும் ஏற்பட்ட புதிய செலவினங்கள் இருந்தும்கூட, நடப்பு ஆண்டின் இறுதிப் பற்றாக்குறையை 160.74 கோடி ரூபாயிலிருந்து 325.07 கோடி ரூபாயாகக் குறைத்தது, சாதாரண மான சாதனையல்ல.

ஆயத்துறை நிர்வாகத்தில் காணப்பட்ட ஓட்டைகளையெல்லாம் அடைத்ததால், அரசுக்கு 134 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டியது. ஆயத்துறை நிர்வாகத்தில் மேற்கொண்ட இந்த ஒரே ஒரு நடவடிக்கை, சிறந்த, செம்மையான நிதி நிர்வாகச் சாதுரியமாகும்.

இதுதான் நடப்பு ஆண்டின் நிதிப் பற்றாக்குறையைக் குறைத்திடப் பெரிதும் காரணமாக இருந்தது. நிதி ஆதாரங்களைத் திரட்டிப் பெருக்குவதற்கு இது ஒரு சரியான பின்னணியாகும்.

விவசாய பம்ப் செட்டுகளுக்கு மேலும் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் அரசின் ஊரக வளர்ச்சி குறித்த அக்கறையினைத் தெளிவாக எடுத்துக் காட்டும்.

—'எக்னாமிக் டைம்ஸ்'

—22.3.90

தொழிலதிபர்களுக்கு விருது வழங்கு விழா!

சிறந்த சிறுதொழில் முனைவோருக்கான தமிழக அரசின் பரிசுகள் - சிறிய நடுத்தர மற்றும் பெரிய தொழிலகங்களுக்கு ஏற்றுமதி விருதுகள் வழங்கும் விழா, 17.3.90 அன்று சென்னையில் - தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் கூட்ட அரங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்று, 1987 ஆம் ஆண்டிற்கான அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களும் மற்றும் அரசு உயர்அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்த இந்த விழாவில் தமிழ்நாடு சிறுதொழில் சங்கத் தலைவர் திரு. எஸ். இராஜகோபால், இந்திய ஏற்றுமதி நிறுவனக் குழுமத்தின் மண்டலத் தலைவர் திரு. ஏ. வெள்ளையன், தொழில் துறைச் செயலர் திரு. பி.வி. வெங்கட கிருஷ்ணன் இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தமிழக அரசு தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

"தொழில் வளத்தைப் பெருக்க வேண்டும்; அதேநேரத்தில், இருக்கிற சலுகை எதையும் குறைக்கவோ, எடுக்கவோ கூடாது என்ற வகையில் திட்டமிட்டுச் செயல்பட்டு வருபவர் நம்முடைய முதல்வர் அவர்கள். இதனால், தமிழகம் தொழில் மயமாகி வருவதைக் காண்கிறோம். தமிழ்நாட்டில் சிறுதொழில் வளம்

சிறந்த சிறுதொழில் முனைவோருக்கான தமிழக அரசின் மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகளையும் - 1986 ஆம் ஆண்டிற்கான சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழிலகங்களுக்கு ஏற்றுமதி விருதுகளையும் வழங்கினார்.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திரு. ஜே.எஸ். சீய்ம் இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன்

வ.உ.சி. பேத்திக்கு ஓய்வு ஊதியம்

'செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன், மறைந்த வ.உ. சிதம்பரனாரின் பேத்தி எஸ். சேதுலட்சுமி, தனது குடும்பம் பொருளாதார ரீதியில் மிகவும் சிரமப்படுவதாகவும், தன்னுடைய தாய்க்கு மாதாமாதம் அளிக்கப்பட்டு வந்த விடுதலைப் போராட்ட வீரருக்கான ஓய்வூதியத் தொகை ரூ.350—ஐ, தனது தாய் மறைந்து விட்டதால் அந்தத் தொகையைத் தனக்குத் தொடர்ந்து அளிக்குமாறும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வு ஊதிய விதிகளின்படி, இக்கோரிக்கையை ஏற்க இயலாது எனினும், கருணை அடிப்படையில் எஸ். சேதுலட்சுமிக்கு விடுதலைப் போராட்ட வீரருக்கான தொடர் ஓய்வூதியத்தை வழங்கிட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பெற்று வருகிறது. மொத்தத்தில், தமிழகத்தில் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் சிறுதொழில்கள் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. சில சிறுதொழில்கள், சரியான நிர்வாகத் திறமின்மையால் நசிந்து வரும் நிலையிருக்கிறது; இந்த நிலை மாறவேண்டும். தொழில் அதிபர்களிடையே போட்டி மனப்பான்மை இருந்தால்தான் தயாரிப்புகளில் தரமேன்மை ஏற்படும்."

மாண்புமிகு சமூகநலத்துறை மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தமது தலைமையுரையில் "இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால், இதே அரங்கில்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிலதிபர்களைச் சந்தித்து நான்கு மணி நேரத்திற்கு மேல் கலந்து பேசினார்; அப்போது தரப்பட்ட 49 கோரிக்கைகளையும் மிகக் கவனமாகப் பரிசீலித்தார். சட்டமன்றத்தில் இன்று வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை எந்த ஒரு தொழிலும் பாதிக்கப்படாத அளவில் இருப்பதாக நீங்களெல்லாம் இங்கே பாராட்டினீர்கள். நலிந்துபோயிருக்கும் தொழில்துறை நலம்பெற, கடந்த ஓராண்டுக் காலமாக அவர் எடுத்து வரும் இணையற்ற முயற்சிகளை நீங்களெல்லாம் அறிவீர்கள்" என்று குறிப்பிட்டார்.

தமிழக அரசின் சார்பில் 1986-87-ஆம் ஆண்டிற்கான சிறந்த சிறுதொழில் மற்றும் ஏற்றுமதியில் முதன்மை வகிக்கும் தொழிலதிபர்களுக்குப் பரிசுகள் மற்றும் விருதுகள் வழங்கிச் சிறப்புரையாற்றுகையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"எல்லாத் தொழில் அதிபர்களையும் நெருங்கி, அவர்களோடு கலந்து பேசி அவர்களுடைய கருத்துக்களை உணர்ந்து, தமிழகம் - இங்கே தலைமைச் செயலர் ராஜேந்திரன் குறிப்பிட்டதைப்போல 'தொழில் மயமாக ஆக வேண்டும்' என்பதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கின்றது.

நீங்கள் தொகுத்துத் தந்த கருத்துக்களையெல்லாம் இந்த அரசு ஆராய்ந்து பார்த்த காரணத்தினாலேதான் இன்று காலையிலே தமிழக மக்களுக்காக தமிழக சட்டப் பேரவையிலே வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு சலுகைகள், அறிவிப்புகள் எல்லாம் வெளியிடப்பட்டுள்ளன. அவைகள் போதுமானவைகள் என்று நான் சொல்ல மாட்டேன். நீங்களும் மேலும் பல கோரிக்கைகளை இங்கே எடுத்து வைத்திருக்கிறீர்கள். எல்லா கோரிக்கைகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிவிட்டால், பிறகு ஆண்டு வரவு செலவுத்திட்டம் படிக்கின்ற வாய்ப்பே இல்லாமல் போய்விடும். எனவேதான் அவ்வப்போது புதிது புதிதாக ஏற்படுகின்ற கோரிக்கைகள், அவைகள் மீது அரசு தனிப்பட்ட முறையில் பொறுப்போடு செலுத்த வேண்டிய கவனம், இவைகளை இந்த அரசைப் பொறுத்தவரையில் தவறாமல் செலுத்தும் என்ற உறுதியையும் நான் உங்களுக்கு வழங்கிடக் கடமைப்பட்டிருக்கிறேன்."

"இங்கே பேசிய வெள்ளையன் அவர்கள் உரையாற்றிய நேரத்தில் 'இந்த வைரத் தொழிலைப் பற்றி அவைகளைப் பட்டை தீட்டுகின்ற அல்லது வெட்டுகின்ற - அதற்கான ஏற்றுமதி நடைபெற வேண்டும்; அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபட வேண்டும்; அதற்கு வழிவகை செய்ய வேண்டும்' என்று சுட்டிக்காட்டினார். அவர் குறிப்பிட்டது இயற்கை வைரத்தைப் பற்றியது. அதற்கான ஒரு முயற்சி மாமல்லபுரத்தில் உருவாக்குவதற்கு இந்த அரசு வகை செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மற்றொன்றையும் குறிப்பிட்டாக வேண்டும். திருச்சி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வைர[illegible] தொழிலைப்பற்றி. அங்குள்ள வைர[illegible] இயற்கை வைரம் அல்ல. செயற்[illegible] வைரம். அண்மையில்தான் கடந்[illegible] ஓரிருதிங்களுக்குமுன்பு நான் திருச்[illegible] மாவட்டத்திற்குச் சென்று அந்[illegible] செயற்கை வைரத் தொழிற்சாலையி[illegible] ஈடுபட்டிருக்கின்ற ஏறத்தாழ முப்[illegible] தாயிரத்திற்கும் மேற்பட்ட கிராம[illegible] புறத்து மக்கள் பயன் அடைகின்[illegible] அந்தத் தொழிலுக்கான பயிற்[illegible] முகாமைத் தொடங்கி வைத்தேன். அந்தப்பயிற்சியில் அவர்கள் முழுமை[illegible] பெறுவார்களேயானால் அவர்க[illegible] அதிக வருவாயை ஒவ்வொரு நாளு[illegible] பெற முடியும். அப்படிப் பெறு[illegible] குடும்பங்கள் நலவாழ்வைப் பெருக்கி[illegible] கொள்ள முடியும் என்ற அந்தக்கரு[illegible] தின் அடிப்படையில் இந்தப் பயிற்[illegible] அங்கே தொடங்கப்பட்டிருக்கிறது.

அந்தச்செயற்கை வைரம் என்[illegible] பெயரை உச்சரிக்கின்ற நேரத்தி[illegible] நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்லி[illegible] கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுவாக சலுகைகளைக் கே[illegible] கின்ற நேரத்தில் வரியைக் குறைக்[illegible] வேண்டும் என்பது ஒரு சலுகை; சி[illegible] பொருட்களுக்கு வரியை அறவே ரத்து செய்ய வேண்டும் என்பது ஒ[illegible] சலுகை.

நான் இந்த நிகழ்ச்சியில் ஒன்றை[illegible] சொல்லி ஆக வேண்டும். எதி[illegible] காலத்திலாவது நீங்களும் நாளு[illegible] சேர்ந்து ஒரு நல்ல வழியை அதற்[illegible] காண வேண்டும் என்பதற்காக நா[illegible] அதைச் சொல்ல வேண்டியதை ஒரு கடமையாகக்கருதுகிறேன்.

திருச்சி - புதுக்கோட்டை மாவட்டங்களில் கிடைக்கின்ற செயற்கை

வைரங்களுக்கு விற்பனை வரியை அறவே ரத்து செய்ய வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வந்தது. அந்த கோரிக்கை அமைப்பு [illegible]தியாக வந்த[illegible] வந்தபிறகு [illegible] நான் தலைமைச் செயலாளர், எனது [illegible]ய ஆலோசகர், நிதித்துறைச் செய[illegible]ர் இவர்களிடத்தில் அதை[illegible] ஆய்வு நடத்துமாறு சொன்[illegible] அவர்களும் என்னுடைய கருத்தை அறிந்து ஆய்வு நடத்தி வரவு செலவுத் திட்டத்தில் அந்த செயற்கை வைரத்திற்குரிய வரிவிலக்கு த[illegible] [illegible]என்ற கருத்தை [illegible]கள்.

[illegible] தற்கு இரண்[illegible] நா[illegible] நான் ஒ[illegible] செய்தியைக் கேள்[illegible]டதால், அந்த சலுகையை [illegible] என்று அவ[illegible] [illegible] அதை [illegible] [illegible] ச் சொ[illegible] [illegible] அதற்கு இ[illegible] [illegible] இந்த வரி[illegible] [illegible] கள் எங்[illegible] [illegible] பத்து [illegible] ரூபாய் தனியா[illegible] [illegible]றோம் என்று ஒரு செய்தி [illegible]ந்தது. அந்த செய்தி [illegible]டன் அப்படியானால் இந்த வ[illegible]விலக்கு தேவையில்லை - வேண்ட[illegible] என்று நானே அவர்களிடத்திலே [illegible]சால்லி, அதை நீக்கிவிடுமாறு சொல்லிவிட்டேன்.

இதைச் சொல்லக் காரணம், ஒரு பத்து லட்சமோ, இருபது லட்சமோ, ஒரு கோடியோ, இரண்டு கோடியோ ஒரு வரியை அறவே ரத்து செய்ய வேண்டும் என்று கொடுக்க நீங்களோ, உங்களது குழுவோ ஒப்புக் கொள்ளுமேயானால் எங்களிடத்திலே அல்ல. அல்லது யாரும் இடைத்தரகரிடத்திலே அல்ல. இந்த வரியை ரத்து செய்ய இவ்வளவு ரூபாய் கொடுக்கப்போகிறோம் என்று முன்கூட்டி அறிவித்து அந்தத் தொகைக்கு அந்த வட்டாரத்திலே ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டுங்கள்; அந்த வட்டாரத்திலே ஒரு மருத்துவ மனையை அமையுங்கள். ஒரு அனாதை இல்லம் உருவாக உதவி செய்யுங்கள். அப்படிச் செய்கிறோம் என்று உறுதி அளித்து, நாங்களும் அந்த வரியை ரத்து செய்ய முடியும் என்கின்ற சூழ்நிலையை ஆராய்ந்து செயல்படுவோமேயானால், அதுதான் ஒரு நல்ல ஜனநாயக - ஊழலற்ற ஆட்சியை உங்களாலும், எங்களாலும் சேர்ந்து தர முடியும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பத்து லட்ச ரூபாய் விவகாரத்தால் பல பேருக்குக் கிடைக்க வேண்டிய வரிச்சலுகை இன்றைக்குக் கிடைக்காமல போய் விட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால், ஒவ்வொரு சிறு தொழில் அதிபர்களும்கூட தாங்கள் விரும்புகின்ற ஒரு தொழிலை நடத்துவதற்கு அதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற நேரத்தில் இப்படிப்பட்ட பேச்சுக்கள் அமைச்சருக்கும் தெரியாமல், எங்களுக்கும் தெரியாமல் இடையிலே உள்ளவர்களால் நடைபெறுகிற காரணத்தால், ஏற்படுகின்ற இடையூறுகளில் இதுவும் ஒன்று என்பதாக இதைச் சொல்லுகின்றேன்.

எனவே, தமிழ்நாட்[illegible] நீங்களும் நாங்களும் இணைந்து [illegible] களுடைய சங்கடங்களை [illegible] தெரிவித்து - தனியாக [illegible] போன்ற பொது இடங்களில் தெரிவித்து, அ[illegible] [illegible] வேண்டிய சலுகைகளைப் பெற்று, தொழில்களை வளர்ப்பதற்கு நாம் பாடுபடுவோம் [illegible] [illegible]யாற்றுவோம்.

—இவ்வாறு மாண்புமி[illegible] முதல்வர் அவர்கள் பேசினார்.

விழா[illegible] [illegible] வணிகத்துறைக் கூடுதல் [illegible] திரு சான்வத[illegible] [illegible] கூறினார்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி. எல். ராஜேந்திரன்

அந்நியச் செலாவணியை அள்ளித்தரும் இறால்கள்

கடல்நீர் எங்கள் தாயகம்
கழிமுகம் எங்கள் பிறப்பிடம்
"கடல் இறால்" எனப்படுவோம்-நாங்கள்
உவர்நீரில் நிலைத்திடுவோம்.

நாவுக்குச் சுவை ஈந்திடுவோம்
நாளெல்லாம் இனிமை சேர்த்திடுவோம்
நான்குமாத வளர்ப்பினிலே
நாட்டுவளம் கூட்டிடுவோம்!

செயற்கை முறைப் பொரிப்பாலே,
செழித்துக் கொழித்து நிரம்பிடுவோம்
இறால்'விதை' இல்லை எனும்தொல்லை
இனி'இல்லை' இந்த நாளிலே!

வெளி நாட்டுச் சந்தையிலே-நாங்கள்
விலைபோகும் செல்வம் ஆவோம்
அந்நியச் செலாவணியை-நாட்டுக்கு
அள்ளி வாரி வழங்கிடுவோம்.

உவர்நீர் பண்ணை யமைத்திடுவீர்-எம்மை
உங்கள் உடமை யாக்கிடுவீர்
உங்கள் விந்தை நிறைந்திடவே-நாங்கள்
உவப்பாய் வெள்ளி ஈந்திடுவோம்.

- இர. பால்திலக்,
மீன்துறை உதவி இயக்குநர்
(விரிவாக்கம்): கோவை-2.

WITH
BEST
COMPLIMENTS
FROM

TAMIL NADU AGRO SERVICE CENTRE

6 Panchayat Office Road, Denkanikotta 635 107

Branches at 1) Kakkadasam 2) Anniyalam

Suppliers of: All kinds of fertilisers, pesticides and seeds.

Sister Concern: M/s. Seetha Enterprises, 4 Panchayat Office Road, Denkanikotta

Dealers in: All kinds of engine spare parts fuel pump shares and pipe fittings

Suppliers of all kinds of slow speed oil engines and pumpsets.

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 7 மற்றும் 8-ஆம் நாட்களில், தமிழ்நாடு பொறியியல் பணியில், பொதுப்பணித் துறையில் இளநிலை பொறியாளர் (மின்னியல்) பதவிக்கு நேரடி நியமனத்திற்காக நடத்தப் பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு முடிவின் அடிப்படையில், தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவு எண்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு, சென்னை-600 002, அண்ணா சாலை, அரசினர் தோட்டத்திலுள்ள தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விபர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறார்கள்.

8	12	19	29	30	35	46	68
69	75	77	80	91	102	104	128
138	141	147	150	172	173	177	

செயலாளர்

DIPR/652/MS/90/IM

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்

ங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

கடைசி அட்டை சொல்லும் செய்தி

ஊனமுற்றோர் உலகநாள் விழா

தமிழக அரசு சமூகநலத்துறை சார்பில், ஊனமுற்றோர் உலக நாள் விழா 18-3-90 அன்று சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது.

மாண்புமிகு சமூகநலம்-ஊரகத் தொழில்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு, ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். இந்த விழாவிற்குத் தமிழக அரசு சமூக நலத்துறைச் செயலாளர் திரு. இரா. கிருபாகரன், இ.ஆ.ப., தலைமை தாங்கினார். சமூக நலத் துறை இயக்குநர் திரு. இரா. வரதராஜுலு, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார்.

உடல் ஊனமுற்றோருக்கான தொண்டில்- சிறப்பாகப் பணிபுரிந்த பள்ளிகள், ஆசிரியர்கள், நிறுவனங்களுக்குப் பரிசுகள், நிம்கர் விருதுகளை வழங்கி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் உரையாற்றினார்.

'ஊனமுற்றோர் கோரிக்கைகளை ஏற்று, அரசு செயல்படுத்தி வருவதாகவும், இளமையிலேயே ஏற்படும் பார்வைக் குறைவைத் தடுப்பதற்காகவே, பள்ளிகளில் படிக்கும் சிறுவர்களுக்கு வைட்டமின் 'ஏ' மாத்திரைகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அப்போது அவர் குறிப்பிட்டார்.

ஊனமுற்றோருக்குச் சக்கர நாற்காலி, மூன்று சக்கர சைக்கிள், காது கேட்கும் கருவி ஆகியவற்றை மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு வழங்கிச் சிறப்புரையாற்றினார். 'ஊனமுற்றோர், மற்றவர்கள் அனுதாபத்தை விட- தமது அறிவை, ஆற்றலை, திறமையை இந்தச் சமுதாயம் அங்கீகரிக்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள். அந்தக் கவலையைத் தீர்க்க, அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு அனைவரும் துணை நிற்க வேண்டும்' என்று தமது பேச்சின்போது அவர் தெரிவித்தார்.

திரு. மு.க. ஸ்டாலின் எம்.எல்.ஏ., பத்தாவது மற்றும் + 2 வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெற்றிருந்த ஊனமுற்ற மாணவமாணவியருக்கு - அடையாறு ரோட்டரி கிளப் சார்பில் ரொக்கப் பரிசுகளை வழங்கினார். அவர் தம்முடைய வாழ்த்துரையில்- உடல் ஊனமுற்றவர்களின் நலனுக்காகத் தமிழ்நாடு அரசு அறிவித்துச் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்கள் பற்றி விவரித்தார். 1989-90-ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்காக நாலரைக் கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

விழா முடிவில், சமூக நலத்துறை சிறப்புச் செயலர் திரு. எஸ்.ஆர். கருப்பண்ணன் இ.ஆ.ப. நன்றி கூறினார்.

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள், 16.3.90 அன்று, ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டியை சென்னையில் உள்ள இராசரத்தினம் விளையாட்டரங்கில் துவக்கி வைத்தார்.



செங்கை அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த மறைமலை நகரில் 'மிக்குனி கார்ப்பரேசன்' நிறுவியுள்ள கார் உதிரி பாகத் தயாரிப்புத் தொழிற்சாலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார் (21-3-90).

படமும் செய்தியும்

மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பழைய வண்ணாரப் பேட்டையில் கிளை நூலகக் கட்டடத்தைத் திறந்து வைத்தார் (22-3-1990).

தமிழரசு
16-4-1990 ரூ.1

சென்னையில் நடைபெற்ற ஊனமுற்றோர் உலகநாள் விழாவில் மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், ஊனமுற்றோருக்குக் கருவிகள் மற்றும் உதவிகளை வழங்கினார். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் விருதுகளை வழங்கினார். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உடன் உள்ளார் (18.3.1990).



இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி நிறைவு விழாவில், சுற்றுலாத் துறையின் சிறந்த அரங்கிற்கான பரிசினை, மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு முரசொலிமாறன் அவர்களிடமிருந்து சுற்றுலாத் துறைச்செயலர் திருமதி ஜெயந்தி பெறுகிறார். மாண்புமிகு தமிழக சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி, திரு வை. கோபால்சாமி, எம்.பி., திரு எம். அப்துல் லத்தீப், எம்.எல்.ஏ. ஆகியோர் உடன் உள்ளனர். (31.3.90)

டாக்டர் அம்பேத்கார்

தோற்றம்: 14.4.1891 மறைவு: 6.12.1956

இந்த இதழில் ...

மாநிலத்துக்கு ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டும்
— முதல்வர் கலைஞர் ... 3

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும்
— டாக்டர் சா. பெருமாள் ... 6

சமுதாயச் சிற்பி
— கவிஞர் குடியரசு ... 8

ஆதிதிராவிடர் நலம் காண அளவற்ற நற்பணிகள்
— மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு. டாக்டர் எ. இராமகிருஷ்ணன் ... 9

டாக்டர் அம்பேத்கார்
— ஆ. முத்துசாமி ... 12

பட்டுக்கோட்டையும் பாடல்களும்
— ப. ஜீவானந்தம் ... 16

சென்னைத் தொலைக்காட்சி நிலைய விழா ... 17

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021
சித்திரை திங்கள் - 3
மலர்:20 16-4-1990 இதழ்:20

சுற்றுலாப் பொருட்காட்சி நிறைவு விழா ... 19

தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி
— மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் ... 21

அம்பேத்கார் அமுத மொழிகள் ... 47

இந்த இதழுடன் இலவச இணைப்பு

நிதிநிலை அறிக்கை மீதான சட்டமன்ற விவாதங்களுக்கு
மாண்புமிகு முதல்வர் கலைஞர் அளித்த பதிலுரை.

நாயகக் காவலர் நேரு, அந்த விழாவைக் கொண்டாடி வருகின்ற இந்த நேரத்தில் ஜீவரத்தினம் அவர்களே இங்கே குறிப்பிட்டார். நேருவினால் மாமனிதர் என்று போற்றப்பட்டவர் அம்பேத்கார் என்று! இன்னொன்றும் சொன்னார். 'யார் யார் சுதந்திரம் வேண்டாமென்று சொன்னார்களோ அந்த அம்பேத்காரை, அந்த ஆர்.கே. சண்முகம் செட்டியை. தன்னுடைய அமைச்சரவையிலே இணைத்துக் கொண்டவர் நேரு' என்று ஜீவரத்தினம் இங்கே எடுத்துச் சொன்னார்.

சுதந்திரத்தை யாரும் தேவையில்லை என்று கூறியது கிடையாது. வருகின்ற சுதந்திரம் பெயரளவிலே இருத்தல் ஆகாது. சுதந்திரத்தின் பெயரால் மற்றொரு அடிமைத்தனம் மக்களுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் அன்றைக்கு அம்பேத்கார் போன்றவர்கள், பெரியார் போன்றவர்கள், நீதிக் கட்சியை நடத்தியவர்கள், திராவிட இயக்கத்தை நடத்தியவர்கள், குரல் கொடுத்தார்களேயல்லாமல், பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க வேண்டுமென்ற நிலையிலிருந்து பிறழாத காரணத்தினாலேதான் சுதந்திரம் பெற்ற திருநாளை இன்ப நாளாகக் கொண்டாட வேண்டுமென்று எங்களையெல்லாம் தயாரித்த தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

எனவே, சுதந்திரம் கிடைக்க வேண்டும். அது யாருக்குக் கிடைக்க வேண்டும். விரல் விட்டு எண்ணக்கூடிய சில சீமான்கள், கோமான்கள், மிட்டாமிராசுகள், குட்டிக் குபேரர்கள் அவர்களுக்கல்ல சுதந்திரம். அவர்கள் மேனாமினுக்கிகளாக வாழ அல்ல, சுதந்திரம்.

இந்த நாட்டிலே நாயோடு போரிடுகிறார்களே சோற்றுக்கு, அவர்களுக்குத் தேவை சுதந்திரம். நடை பாதையிலே படுத்து உறங்குகிறானே- அங்கேயே தன்னுடைய காதல் களியாட்டங்களைக் கூட நடத்துகின்ற நிலைமைக்கு ஆளாகின்றானே- அங்கேயே அவனுடைய மனைவிக்குப் பிரசவம் பார்க்கிறானே, அந்த ஏழை மனிதனுக்குத் தேவை சுதந்திரம். இன்னமும் தொட்டால் தீட்டு, அருகில் வராதே, ஆலயத்தில் நுழையாதே, அர்ச்சகராக இருக்க உனக்கு என்ன தகுதி என்று கேட்கப்படுகின்றதே கேள்வி, அந்தக் கேள்வி இருக்கிற வரையில் இந்தியா சுதந்திரம் பெற்று விட்டதாக என்னால் நம்ப இயலாது.

எனவேதான் சுதந்திரம் என்றால் முழுமையானதாக, பரிபூர்ணத்துவம் வாய்ந்ததாக இருந்திட வேண்டுமென்று விரும்பியவர்களிலே ஒருவர் தான் இன்றைக்கு இந்த மாவட்டத்தினுடைய பெயராக மிளிர்கின்ற- புரட்சித் தலைவன் அம்பேத்கார்.

சோவியத் நாட்டிலே ஒரு புரட்சித் தலைவன் தோன்றினான் - மாவீரன் லெனின்! அதைப் போல் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தோன்றிய புரட்சித் தலைவர்தான் அம்பேத்கார். இன்றைக்கு இந்திய பூபாகத்தில்

அடுத்த இதழ்

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டுச் சிறப்பிதழாக மலர்கிறது.

அம்பேத்கார் பெயர் தமிழகத்திலே உச்சரிக்கப்படுவதைப்போல வடபுலத்திலே உச்சரிக்கப்படுவதில்லை. இந்த நேரத்திலே நான் வேலூர் கோட்டை வெளி மைதானத்திலே இருந்து— தமிழகத்தின் முதல் அமைச்சர் என்கின்ற முறையிலே அல்ல- நானும் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்கின்ற முறையில், நான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய சம்பந்தி என்ற முறையில்- அந்த வகையிலே நானும் அம்பேத்காரும் உறவினர்கள் என்ற நிலையில், அந்த அறிஞனுக்கு அவன் பிறந்த மாநிலத்திலே மாத்திரமல்லாமல் இன்றைக்கு எப்படி தமிழகத்திலே ஒரு மாவட்டம் அந்தப் புனிதன் பெயரால் தொடங்கப்படுகிறதோ- அதைப் போல் 1991-ம் ஆண்டு அம்பேத்கார் நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடுகிற நேரத்தில் இந்தியாவிலே உள்ள ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டுமென்ற விருப்பத்தைக் கோட்டை வெளி மைதானத்திலேயிருந்து நான் தெரிவிக்கின்றேன்.

அதற்கான குரலை இந்தியா முழுமையுமுள்ள - தாழ்த்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பரிவு கொண்டிருக்கிற மக்கள்-பிற்படுத்தப்பட்ட மக்கள்- மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரும் இந்தியாவிலே அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா கொண்டாடுகிற நேரத்தில், எப்படி தமிழகத்தில் ஒரு அம்பேத்கார் மாவட்டம் உதயமானதோ அதைப்போல் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒரு அம்பேத்கார் மாவட்டம் இருந்தாக வேண்டும் என்று குரல் கொடுக்க வேண்டும். இதை நான் எச்சரிக்கையாகச் சொல்லவில்லை. அன்பு வேண்டுகோளாக விடுக்கின்றேன்.

அது அவருடைய கொள்கைகளுக்கு நாம் தருகின்ற ஆக்கம்! அவருடைய இலட்சியங்களுக்கு நாம் வழங்குகின்ற வரவேற்பு! அவருடைய எண்ணங்களுக்கு நாம் தருகின்ற மரியாதை! அவைகள் ஈடேறுவதற்கு- நாம் உண்மையான இதயம் படைத்தவர்கள் என்று காட்டிக் கொள்ள அதைவிட வேறு சான்று இருக்க முடியாதென்று நான் கருதுகின்றேன்.

(வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டத்தை 30.9.89 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

அம்பேத்கார் நினைவு போற்ற தமிழக அரசு செய்துள்ள அரும்பணிகள்

- அம்பேத்கார் பெயரால் வடசென்னையில் அரசினர் கலைக் கல்லூரி 1974-இல் நிறுவப்பட்டது.
- திருவல்லிக்கேணியில் உள்ள ஹாமில்டன் பிரிட்ஜ் - அம்பேத்கார் பாலம் என மாற்றப்பட்டது.
- அம்பேத்கார் சிலை சென்னையில் பல இடங்களில் நிறுவப்பட்டது.
- அம்பேத்கார் திருஉருவப்படம் (1980 ஆகஸ்ட்) சட்டமன்றப் பேரவையில் திறந்து வைக்கப்பட்டது.
- வட ஆர்க்காடு மாவட்டம் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட போது - (1989 - செப்டம்பர்) ஒரு பகுதிக்கு வட ஆர்க்காடு அம்பேத்கார் மாவட்டம் எனப் பெயர் சூட்டப்பட்டது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் அம்பேத்கார் பெயரில் மாவட்டம் அமைக்கப்படவில்லை.

மைய அரசு செய்துள்ள அரும்பணிகள்

- அம்பேத்காரை நினைவுகூரும் வகையில் அவரது திருவுருவம் பொறித்த அஞ்சல் தலைகளை இருமுறை வெளியிட்டுள்ளது.
- அம்பேத்காரின் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில் அவரது பிறந்த நாளை (14.4.90) அரசு விடுமுறையாக அறிவித்துள்ளது.
- நாடாளுமன்றத்தில் அம்பேத்காரின் திருஉருவப்படத்தை 12-4-90 அன்று திறந்து வைத்துள்ளது.

ஈடு இணையற்ற தலைவர்

—தந்தை பெரியார்

டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்குச் சமமாக இந்தியாவில் யாரையும் சொல்ல முடியாது. இன்று மட்டுமல்ல, முப்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே இதை நான் கூறியிருக்கிறேன். 1930 முதலே எனக்கு அவரைத் தெரியும்.

நம்து 'குடியரசு' ஏட்டில் என்னென்ன கருத்துகள் வருமோ, அவைகளை எல்லாம் அவர் பேசி இருக்கின்றார். நமக்கு ஏற்ற நண்பர் என்பதை எண்ணி அவரை நான் பாராட்டிவந்தேன்.

நமது குடியரசில் அவரைப் பற்றிப் பாராட்டி எழுதியதைப் பார்த்துத்தான் தாழ்த்தப்பட்டவர்களே அவரை உணர்ந்தார்கள்.

அம்பேத்கார் சிறப்பாக - தாழ்த்தப்பட்ட சமுதாயத்துக்குத் தலைவர் என்று சொல்லப்பட்டாலும், பகுத்தறிவுக்கு எடுத்துக்காட்டாக உள்ள ஒரு பேரறிஞராக விளங்கினார். எப்படிப்பட்டவரும் எடுத்துச்சொல்லப் பயப்படும்படியான - புரட்சிகரமான விஷயங்களை எல்லாம் வெகு சாதாரணத் தன்மையில் எடுத்துச் சொல்லும்படியான வீரராகவும் விளங்கினார்.

அநேக அரிய காரியங்களைச் செய்த ஒரு மாபெரும் பகுத்தறிவுவாதியும், ஆராய்ச்சி நிபுணரும், சீர்திருத்தப் புரட்சி வீரருமாவார் டாக்டர் அம்பேத்கார்.

நீதி தேடும் சீயம்

—பேரறிஞர் அண்ணா

அம்பேத்கார் இருந்த இடமும் தூரமும் மிக அதிகம். எனினும் இங்கு பற்பல இடங்களில் 'அம்பேத்கார் மன்றம்', 'அம்பேத்கார் படிப்பகம்', 'அம்பேத்கார் படத்திறப்பு' என்று அவரது அந்தப் பெயரைச் சொல்லி உவகை கொள்வதுண்டு நாம். எங்கோ பிறந்து, படித்து, பட்டம் பெற்று, எவ்வளவோ பதவிகளையும் பாராளும் பொறுப்பினையும் ஏற்றிருந்த பொழுதும் கூட, அவர், தான் பிறந்தகுடி மீது நீங்காப் பற்றுக் கொண்டு, கேடு கெட்ட நிலையிலிருந்து மீண்டும் புது உருப்பெற வேண்டுமென்னும் ஆசை கொண்டு, அரும்பெரும் பணிகளைச் செய்தார் என்பதால்தான் - உறுதியோடு இந்நாட்டு மக்களுக்கு நீதி தேடிடும் சீயமாக அவர் இருந்ததால்தான் - அதே கொள்கைக்காகப் போராடிய நீதிக் கட்சியின் வழிவந்த நமக்கும் அம்பேத்கார் என்ற திருநாமம் தித்திக்கிறது.



மாநிலத்துக்கு ஒரு அம்பேத்கார் மாவட்டம் உருவாக வேண்டும்!

- முதல்வர் கலைஞர்

"அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய அழியாப் பெயரை இந்த மாவட்டத்திற்குச் சூட்டியதன் மூலம் நாங்களெல்லாம் பெருமை பெறுகிறோம். இது அம்பேத்காருக்கு வழங்கப்படுகின்ற பெருமை என்று நான் என்னை ஏமாற்றிக் கொள்ளமாட்டேன். அவருடைய பெயரைச் சூட்டுவதால் நமக்குக் கிடைப்பது பெருமை. அந்தப் பெருமையைப் பெறுகின்ற சுயநலத்தோடு தான் டாக்டர் அண்ணல் அம்பேத்கார் அவர்களுடைய திருநாமத்தை வட ஆர்க்காடு மாவட்டத்தினுடைய ஒரு பகுதிக்குச் சூட்டி நாமெல்லாம் மகிழ்கின்றோம்.

அம்பேத்கார் அவர்கள்-அடக்கப்பட்ட- ஒடுக்கப்பட்ட-தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக-கலங்கரை விளக்கமாக, அவர்களைக் கைதூக்கி விடுகின்ற காவலராகத் தோன்றியவர்.

அத்தகைய மாமேதை-ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காக உழைத்துக் கொண்டே இருந்தவர்- இன்றைக்கு இந்தியத் தரணியிலே நடமாடிக் கொண்டிருக்கின்ற அரசியல் சாசனத்தைத் தயாரித்துத் தந்த மூலகர்த்தா. அவருடைய பெயரால் அவர் பிறந்த மாநிலத்தில் ஒரு நினைவுச் சின்னம் கூட இல்லை என்பதை அம்மையார் சத்தியவாணிமுத்து அவர்கள் ஆழ்ந்த வேதனையோடு இங்கே குறிப்பிட்டார். சி.டி. தண்டபாணியும் தழுதழுத்த குரலிலே அந்த நிகழ்ச்சியை இங்கே சுட்டிக்காட்டினார்.

அம்பேத்கார் நூற்றாண்டு விழா வருகிறது. ஜீவரத்தினம் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்த ஆண்டு நேரு நூற்றாண்டு விழா. அதை நாம் கொண்டாடி மகிழ்கிறோம். ஜன

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும்

தந்தை பெரியார் அவர்களுக்கும் அண்ணல் அம்பேத்கார் அவர்களுக்கும் மிகுந்த பொருத்தம் இருந்தது.

தந்தை பெரியார் இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றபோதிலும், அந்தச் சமயத்தில் நிலவி வந்த மூட நம்பிக்கைகளைச் சாடி வந்தார்; பகுத்தறிவுத் தத்துவத்தைப் பரப்பிவந்தார். சீர்திருத்தக் கொள்கைகளை முழங்கி வந்தார்.

இந்தியத் திருநாட்டின் வடபகுதியைச் சேர்ந்த மராட்டிய மாநிலத்தில் தோன்றிய அண்ணல் அம்பேத்கார், இந்து சமயத்தில் தோன்றியவர்தான் என்றாலும், தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதால், சாதி இந்துக்களால் புறக்கணிக்கப்பட்டவர். அவர்களால் பல்வேறு துன்பங்களுக்கு ஆட்பட்டவர், உரிமைகள் மறுக்கப்பட்டவர்.

பல்வேறு துறைகளில் உயர்கல்வி பெற்றும்கூட அவர் சனாதன இந்துக்களால் மிகவும் துன்புறுத்தப்பட்டார். அதனால் இயல்பாகவே இந்து சமயத்தின் மீது அவருக்கு வெறுப்பு ஏற்பட்டது.

தீண்டாமைப் பேயை நாட்டை விட்டு விரட்ட வேண்டும் என்று அரும்பாடு பட்டார். தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காகப் போராடினார். நாட்டு மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் உண்மை விளங்க வேண்டும் என்பதற்காக மேடைகளில் முழங்கினார்; நூல்கள் பல படைத்தார்.

அம்பேத்கார் - தந்தை பெரியார் இருவரின் கொள்கைகளிலும் போராட்டங்களிலும் ஒப்பியல்பு அமைந்திருந்தது போன்றே, ஒருவரை ஒருவர் உணர்ந்து போற்றிக் கொண்ட செயலிலும் ஓர் ஒப்புமை இருந்தது.

தந்தை பெரியார் - வைக்கத்திலே தீண்டாமை ஒழிப்புப் போரை 1924-ஆம் ஆண்டில் தொடங்கினார். தாழ்த்தப்பட்ட சமூகத்தில் தந்தை பெரியார் பிறக்கவில்லை என்றாலும், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டார். பெரியார் நடத்திய வைக்கம் போராட்டம் அண்ணல் அம்பேத்காரைக் கவர்ந்தது.

"1924-இல் பெரியார் வைக்கத்தில் நடத்திய தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் என்னுள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது" என்று 1927-ஆம் ஆண்டில் அண்ணல் அம்பேத்கார் வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார்.

அம்பேத்காரின் அரும்பணி குறித்துத் தந்தை பெரியார் 1952-இல் போற்றி எழுதியிருக்கிறார். அது வருமாறு:

"1925-ஆம் வருஷத்திலே இந்த நாட்டில் சுய மரியாதை இயக்கம் தோன்றியது. இந்த நாட்டிலே மதத்தை எதிர்த்து, மற்ற பேதங்களை எதிர்த்துக் காரியம் செய்வதென்றால், அவ்வளவு கஷ்டமல்ல, மக்களுக்குள் நீண்ட நாளாகவே அந்த உணர்ச்சி இருந்து வந்திருக்கிறது என்பதால் ; ஆனால் வட நாட்டில் அப்படி அல்ல. அங்கு இந்த உணர்ச்சியைக் கிளப்புவதென்றால் கடினமான காரியம். ஆனால் அங்கேயே 1927, 1928-லேயே அம்பேத்கார் சுய மரியாதைக் கொள்கைகளைப் பேசியிருக்கிறார்."

1940-இல், தமது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டுவதற்காகத் தந்தை பெரியார் அவர்கள் பம்பாய்க்குச் சென்று அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜனாப் ஜின்னா அவர்களையும் சந்தித்தார். அப்போது அவரை ஆதரித்துக் கருத்துகளைப் பரிமாறி, தந்தை பெரியாருக்கும் அவரது குழுவினருக்கும் விருந்து தந்து மகிழ்ந்தார் அம்பேத்கார்.

பர்மாவில் 1954-இல் நடைபெற்ற புத்தமத 3-வது மாநாட்டில் அம்பேத்காருடன் தந்தை பெரியார் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார்.

சாதிக் கொடுமைகளைத் தீர்ப்பதற்காக, தாமும் தமது சமூக மக்களும் மதம் மாறிவிடப் போவதாக 1930-ஆம் ஆண்டிலேயே அம்பேத்கார் அறிவித்தார். தந்தை பெரியார் அம்பேத்காரைப் பாராட்டினார்; அவரது கருத்தை ஆதரித்தார். அவருக்கு ஊக்கமளித்தார்.

"நீங்கள் வேறு மதத்திற்குத் தனியாகப் போகக் கூடாது. குறைந்தது ஒரு இலட்சம் மக்களுடன் மதம் மாற வேண்டும். அப்போதுதான் நீங்கள் போகிற மதத்தவனும் மதிப்பான். தனியாக அங்கு போனால் அவனும் நம்மைக் கவனிக்க மாட்டான். ஆகையால் ஒரு இலட்சம் பேரோடு தாங்கள் மதம் மாறும் போது நானும் ஒரு 10, 20 ஆயிரம் பேர்கள் தருகிறேன்" என்று தந்தி அடித்தார்.

பகுத்தறிவுக்கு ஏற்புடைய-மானிடப் பண்புக்கு உகந்ததான-சமதர்மக் கோட்பாட்டுக்கு உரியதான பௌத்த சமயத்திற்கு மாறப் போவதாக அண்ணல் அம்பேத்கார் 1952-இல் அறிவித்தபோது அவரை வாழ்த்தினார் தந்தை பெரியார்.

"டாக்டர் அம்பேத்கார் அவர்கள் இப்போது கொஞ்ச நாட்களாக பௌத்தக் கொள்கையில் சேரப் போவதாகச் சொல்லி வருகிறார். உண்மையில் பௌத்தம் ஓர் உயர்ந்த மதமாகும்" - தந்தை பெரியார் தெரிவித்த கருத்து இது.

தந்தை பெரியார் - அண்ணல் அம்பேத்கார் இந்த இரு தலைவர்களும் - தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் நலன் காப்பதற்கு இயற்கை அளித்த கொடை என்று கூறினால் அது மிகையாகாது.

டாக்டர் சா. பெருமாள்

தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் சிரித்து மகிழ்ந்து உரையாடுகிறார்கள் (சென்னை — 1944)

தந்தை பெரியார் பம்பாய் சென்று, அண்ணல் அம்பேத்கார் அவர்களையும், ஜின்னா அவர்களையும் சந்தித்த நிகழ்ச்சி (1940)

பர்மாவில் நடந்த மூன்றாவது உலக பௌத்த மாநாட்டில், தந்தை பெரியாரும் அண்ணல் அம்பேத்காரும் (3.12.1954)

சமுதாயச் சிற்பி

அண்ணல் அம்பேத்கர்

சிந்திக்க வைப்பதற்கே பிறந்த போதன்
சீர்திருத்த அலையெழுப்பும் அறிவு வாரி
சந்திக்கும் பெரும்கிளர்ச்சி! அம்பேத் காரைச்
சந்தித்தோர் அனைவருமே மனிதர் ஆனார்!

கோத்திரங்கள் சாத்திரங்கள் குலதர் மத்தின்
குளறுபடி, குறுக்கீடு எல்லாம் சேர்ந்து
பூத்திருந்த அன்புதனைக் கருக்கிப் போட்டுப்
பூசலுக்குத் தூபமிட்டால் - அம்பேத் காரைக்

காத்திருந்து அழைக்காதா காலம்! அந்தக்
காட்டாற்று வெள்ளத்தில் சிக்கிக் கொண்ட
சாத்திரங்கள் பட்டபாடு கொஞ்ச மல்ல
சமுதாயச் சிற்பியவர்! மேதை அண்ணல்!

இன்றைக்கும் இருக்கிறதே சாதி! தெய்வம்
இதைத்தானா வேலையற்றுப் படைக்க வேண்டும்!
என்றைக்கு விஞ்ஞான புத்தி யோடு
எல்லோரும் சமமென்று நினைக்கின் றோமோ,

அன்றைக்கே புதுமனிதன் பிறப்பெ டுப்பான்
அரசியலும் மக்களுக்கு உதவும்! இல்லை
என்றால்இந் நாடென்றும் உருப்ப டாது
இதற்கேனும் அம்பேத்கார் வாழ வேண்டும்!

பாறைபோலே மதமிருந்தால் முன்னேற் றத்தின்
பாதையிலே தடைக்கற்கள் இருக்கும் அன்றோ!
யாரைப்போய் நோவதுநாம்? மக்கள் நெஞ்சில்
இருக்கின்ற அழுக்குக்குக் கார ணங்கள்

வேரெடுத்து இருக்குமானால் அதனைத் தூக்கி
வீசவேண்டும்! இல்லையெனில் அம்பேத் காரைச்
சீரெடுத்துப் பாடியென்ன பயன்தான் இங்கே!
சிந்திக்கத் துணிவதுதான் மூளை வேலை!

— தத்துவக்கவிஞர் குடியரசு

ஆதிதிராவிடர் நலம் காண அளவற்ற நற்பணிகள்

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

டாக்டர் எ.இராமகிருஷ்ணன்

கடந்த ஆண்டிலே 40 ஆயிரம் மனைப் பட்டாக்கள் கிட்டத்தட்ட 2.35 கோடி ரூபாய் செலவிலே வழங்கப்பட்டு, அந்த மனைப் பட்டாக்களிலே 45 ஆயிரம் தொகுப்பு வீடுகளை— கான்கிரிட் வீடுகளைக் கட்டிக் கொடுத்த பெருமை நம்முடைய தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களைச் சாரும் என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன். இந்த நிதியாண்டிலே கூட கிட்டத்தட்ட 40 ஆயிரம் மனைப்பட்டாக்கள் 2.5 கோடி ரூபாய் செலவிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. ரூ.56 கோடி செலவிலே 47 ஆயிரம் தொகுப்பு வீடுகளை — கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு அரசாகத்தான் தமிழக அரசு இந்த நேரத்திலே பீடு நடை போட்டுக்கொண்டு இருக்கிறது.

வீட்டுமனையைப் பொறுத்த வரையில்-தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையில், கடந்த காலத்தில் நம்முடைய மாண்புமிகு முதல்வர், தமிழக முதல்வராக இருந்த நேரத்தில் - அதாவது 1974 - ஆம் ஆண்டில் 'தாட்கோ' நிறுவனம் ஒன்றை ஏற்படுத்தி, அந்த நிறுவனத்தின் மூலமாக அந்த 2 ஆண்டிலே கிட்டத்தட்ட 35 ஆயிரம் தொகுப்பு வீடுகளை.– கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்.

கடந்த ஆண்டிலே 42,000 தொகுப்பு வீடுகளை-கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்து, இந்த ஆண்டிலே ரூ.56 கோடி செலவிலே 47,000 கான்கிரீட் வீடுகளைக் கட்டிக்கொடுக்க இந்த அரசு இருக்கிறது. கடந்த ஆண்டு உள்ளாட்சித் துறை மூலமாக அந்தத் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. வருகின்ற நிதியாண்டிலே அந்தத் தொகுப்பு வீடுகள், பல்வேறு உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, 'தாட்கோ' மூலமாகக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு வாய்ப்பை நான் நம்முடைய தானைத் தலைவர், தமிழகத்தின் முதல்வர் அவர்களிடம் வேண்டுகோளாகக் கேட்டுக் கொள்ள இருக்கிறேன் என்ற உண்மையினைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இந்த நிதியாண்டில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்குப் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்



கீழ் ரூபாய் 16.26 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் குழந்தைகளின் கல்விச் செலவுக்காக மட்டும் கிட்டத்தட்ட ரூ.50,02,44,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கல்வித்துறையினால் துவக்கப்பட இருக்கின்ற 50 புதிய துவக்கப் பள்ளிகளையெல்லாம் ஆதிதிராவிடர் வசிக்கும் இடங்களிலே துவக்க அரசு முடிவு செய்துள்ளது.

ரூ.45.33 இலட்சம் செலவில் 40 புதிய விடுதிகள் திறக்க அரசு திட்டமிட்டிருக்கிறது. ரூபாய் 9.6 இலட்சம் செலவில் 100 புதிய இடைநிலை ஆசிரியர்களைப் பணியமர்த்த அரசு திட்டமிட்டிருக்கிறது.

பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக ரூபாய் 22 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளிகள் கட்டுவதற்காக ரூபாய் 26.9 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 10 இலட்சம் மாணவர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதற்காக ரூபாய் 1.73 கோடி இந்நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சுகாதார மற்ற தொழில்கள் செய்பவர்களுடைய குழந்தைகள் சுமார் 1,223 பேர் படிக்க ரூபாய் 6.96 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்பு படிப்பதற்காக ரூபாய் 100 இலட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்குக் கல்விக் கடன் உதவித் தொகை வழங்க ரூபாய் 86 இலட்சமும், கிறிஸ்துவ மதம் மாறிய மாணவர்களுக்கு

ரூபாய் 3.5 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் புத்தகம் வாங்குவதற்காக ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

20 கல்லூரி விடுதிகளுக்கு நூலக வசதி ஏற்படுத்த ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

31 விடுதிகளுக்கு ரூ.13.9 இலட்சம் செலவில் இண்டேன்எரிவாயு வழங்கப்பட உள்ளது.

50 விடுதிகளுக்கு மாவு அறைக்கும் இயந்திரம் வழங்கப்பட உள்ளது.

கல்லூரி விடுதிகளுக்கு ரூ.1.5 இலட்சம் செலவில் வண்ணத் தொலைகாட்சிப் பெட்டி வழங்கத் திட்டமிட்டிருக்கிறது.

விடுதிகளில் 2,500 மாணவர்கள் கூடுதலாகச் சேர்க்க ரூபாய் 24.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1990-91-ஆம் ஆண்டின் விடுதி மற்றும் பள்ளிகள் கட்ட மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 30 இலட்சமும், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூபாய் 20.84 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

3,400 ஆதிதிராவிட விவசாயிகள் கடன் பெற ரூபாய் 46.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

600 சிறிய வாணிபத் தொழில் செய்பவர்கள் கடன் வசதி பெற ரூபாய் 6.5 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

24,000 ஆதிதிராவிடர் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் மூலம் பயன் பெற ரூபாய் 3 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

வரும் நிதியாண்டில் சிறப்பு மைய உதவித் திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் ஆதிதிராவிடர் பயன் பெற ரூ.25 கோடி செலவிடத் திட்டமிட்டிருக்கிறது.

1991-இல் ரூ.56 கோடி செலவில் 47,000 கான்கிரீட் வீடுகள் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

சமூகநீதி ஆண்டு

"டாக்டர் அம்பேத்காரின் நூற்றாண்டு விழா 1990 ஏப்ரல் 14 முதல், 1991 ஏப்ரல் 14 வரை நாடு முழுவதும் கொண்டாடப்பட உள்ளது. இந்த ஆண்டு சமூக நீதி ஆண்டாகக் கொண்டாடப்படும்" என மாண்புமிகு மத்திய தொழிலாளர் நல அமைச்சர் திரு ராம் விலாஸ் பஸ்வான் 3.4.90 அன்று செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

40,000 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்க ரூ.2.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறது.

3,000 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி செய்ய ரூபாய் 14.09 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இணைப்புச் சாலைகள் அமைக்க ரூபாய் 9 கோடி நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறது.

ரூபாய் 50 இலட்சம் செலவில் 250 குடியிருப்புகளுக்கு மின்சாரத் தெரு விளக்குகள் அமைக்கத் திட்டமிட்டிருக்கிறது.

ரூபாய் 5 இலட்சம் செலவில் சமூகக் கூடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

ரூ.19.5 இலட்சம் செலவில் 600 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக்கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

1,256 ஆட்டோ ரிக்ஷாக்கள் ரூ.9.55 கோடி செலவில் 628 நகரப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

37,546 கிராமப்புற, நகர்ப்புற ஆதிதிராவிடர்களுக்கு உதவிட சிறப்பு மையத் திட்டத்தின் கீழ் ரூபாய் 5.5 கோடி வழங்கிட அரசு திட்டமிட்டிருக்கிறது.

சிறுதொழில் துவங்கி சுயவேலை வாய்ப்புப் பெற 10,000 பேர் பயன்பெறும் வகையில் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது.

2,200 ஆதிதிராவிடர் பயன் பெற ரூ.6.64 கோடி செலவில் விசைத்தறிகள் அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரூ.5.16 கோடி செலவில் 24,211 நபர்களுக்குக் கறவை மாடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

உதகையில் பழங்குடியினர் அருங்காட்சியகம் அமைக்கும் திட்டம் ரூ.2 கோடி செலவில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் 1990-91-ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ஆதிதிராவிடர் குடும்பங்களும், 900 பழங்குடியினர் குடும்பங்களும் பயன்பெற தமிழக அரசு வழிவகை செய்திருக்கிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்கள் பிறந்த நாள் விழாவைத் தமிழகம் முழுவதும் சிறப்பாகக் கொண்டாட தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது. இந்தியத் திருநாட்டில் முதலாவதாக ஒரு மாவட்டத்திற்கு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் என்று பெயர் சூட்டிய பெருமை மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும் என்பதைக் குறிப்பிட்டுக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சுவாமி சகஜானந்தா நூற்றாண்டு விழாவை ஒட்டி தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் நந்தனார் பள்ளியில் ரூ.10 இலட்சம் செலவில் சமூகக் கலையரங்கம் கட்ட தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

இந்தியத் திருநாட்டில் தமிழ்நாட்டில்தான் ஆதிதிராவிட, பழங்குடியின மக்களைச் சிறுதொழில் அதிபர்களாக்கும் புதுமாதிரியான திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் ரூ.6 இலட்சம் வரையில் உள்ள கட்டுமானப் பணிகளை, படித்து வேலையில்லாமல் இருக்கிற ஆதிதிராவிடப் பழங்குடியின மக்களுக்கு நியமன அடிப்படையில் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

இந்நாட்டிலேயே முதலாவதாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறிஸ்துவத்திற்கு மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்குப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில்தான் முதலில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து இரண்டு நீதிபதிகளைச் சென்னை உயர்நீதி மன்றத்திற்கு நியமித்த பெருமை டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும்.

காவல்துறையின் முதன்மைப் பதவியைத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவருக்குக் கொடுத்த பெருமையும் டாக்டர் கலைஞர் அவர்களையே சாரும். இவ்வாறாகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முதுகெலும்பாக இருந்து, அவர்களுடைய கல்வி, சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக அயராது உழைத்து வரும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு இத்துறையின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மாண்புமிகு ஆதிதிராவிடர்
நலத்துறை அமைச்சர் அவர்கள்,
29.3.90 அன்று
சட்டமன்றப் பேரவையில்
ஆற்றிய உரையிலிருந்து

அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது

அம்பேத்காருக்கு அவரது மறைவுக்குப் பிறகு பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது. அதுவும் அநேக வருடங்கள் கழித்து வழங்கப்படுகிறது. காலங்கடந்து அவருக்கு இந்த மரியாதை செய்யப்பட்டாலும், அதற்கு முற்றிலும் தகுதியானவர்தான் அவர்.

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர்
திரு. ஆர். வெங்கட்ராமன்

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக அரும்பாடுபட்டவரும் இந்திய அரசியல் சட்டத்தை வகுத்த சிற்பிகளில் ஒருவருமான மறைந்த டாக்டர் அம்பேத்காருக்கு பாரத ரத்னா விருது வழங்கப்படுகிறது.

அம்பேத்காரைக்கௌரவிப்பது நம்மை நாமே கௌரவிப்பது ஆகும். அவரது பிறந்த தினமான ஏப்ரல் 14-ஆம் தேதி டெல்லியில் உள்ள அம்பேத்கார் விளையாட்டுத் திடலில் பேரணி நடைபெறும்.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் அம்பேத்காரின் உருவப்படம் ஏப்ரல் 12-ல் திறக்கப்படும்.

அரசியல் சட்டத்தை எழுதிய அம்பேத்கார் படம் இதுவரை நாடாளுமன்றத்தில் இடம் பெறாதது விசித்திரமானது.

மாண்புமிகு இந்தியப் பிரதமர்
திரு. வி.பி. சிங்.
(நாடாளுமன்றத்தில்-31.3.90)

தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி இந்திய மக்கள் அனைவரும் மகிழக் கூடிய வகையில், மறைந்த மாமேதையும், இந்திய அரசியல் சட்டத்தை வடித்துத் தந்தவருமான அம்பேத்காருக்கு மிக உயர்ந்த விருதான - பாரத ரத்னாவை வழங்கும் பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்கு அனைத்துத் தரப்பினர் சார்பில் வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர்
(சட்டமன்றப் பேரவையில் - 31.3.90)

டாக்டர் அம்பேத்கார்

ஆ. முத்துசாமி
உதவி இயக்குநர்,
'தமிழரசு'

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் அடிமைப்பட்டுக்கிடந்த இந்திய நாட்டின் விடுதலைக்கும் மேம்பாட்டிற்கும் அருந்தொண்டாற்றிய பெருமைமிகு பெருமக்கள் பலராவர். அவர்களில், சமுதாய எழுச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் வித்திட்டு, என்றும் வரலாற்றில் இடம் பெறத்தக்க அரும்பணிகளை ஆற்றி, உலகத்தார் உள்ளங்களில் நிலைத்திட்ட அறிஞர் டாக்டர் அம்பேத்கார் ஆவார்.

அவரது நூற்றாண்டு விழாவினை இந்திய அரசும் தமிழ்நாடு அரசும் கொண்டாடி, மக்களுக்கு அவரின் அருந்தொண்டினைப் பரப்பிடத் திட்டமிட்டுள்ளன. முன்னோடியாகத் தமிழ்நாடு அரசு, டாக்டர் அம்பேத்கார் பெயரில் மாவட்டம் ஒன்றினை அமைத்துச் சிறப்பித்துள்ளது. தமிழ்நாடு சட்டப் பேரவையில் டாக்டர் அம்பேத்காரின் உருவப் படம் முன்னரே அழகுறத் திகழ்கிறது. தமிழ்நாட்டில், டாக்டர் அம்பேத்காரின் புகழைப் பன்னெடுங்காலமாகப் போற்றிடும் மனப்பாங்கு நின்று நிலவி வருவது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் அவர்களின்பால் பேரன்புகொண்டு அவரைப் பாராட்டிப் பேசி வந்துள்ளதுடன், ஜின்னா அவர்களைச் சந்திக்கப் பம்பாய் சென்றபோது டாக்டர் அம்பேத்கார் அவர்களையும் கண்டு உரையாடி வந்துள்ளார்.

இந்திய அரசு, அவரது நூற்றாண்டை 'சமூகநீதி' ஆண்டாகக் கடைப்பிடிக்க முனைந்திருப்பது டாக்டர் அம்பேத்கார் சமுதாய மறுமலர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினைச் சிறப்பிப்பதாக அமைகிறது.

டாக்டர் அம்பேத்கார் அவர்களின் நூற்றாண்டையொட்டி, அன்னாரின் அளப்பரிய தொண்டினைச் சிறப்பிக்கும் வகையில் 'பாரத் ரத்னா' என்ற உயரிய விருதினை வழங்கிட உள்ளது, இந்திய வரலாற்றில் பீடுமிக்க நிகழ்ச்சியாகும்.

டாக்டர் அம்பேத்கார், தீண்டாமையை ஒழித்திடப் போராடி அவர்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை அளிக்கப்பட வழிவகை செய்த சமுதாயச் சிற்பி.

முதன் முதலாகத் தன்னிச்சையான தொழிலாளர் கட்சியையும் பின்னர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் கூட்டமைப்பையும் உருவாக்கிய மாமனிதர்.

அரசியல் சுதந்திரம் கிட்டிய பின்னர், வயதுவந்தோருக்கு வாக்குரிமை அளிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்தியவர் அம்பேத்கார். சமய எழுச்சியும் சமுதாயச் சீர்திருத்தமும் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு அருந்தொண்டாற்றிய பல்கலைத் திறன்கொண்ட பேரறிஞராகத் திகழ்ந்தவர் அவர்.

அறிவைத் தேடி ஆக்கம் பெறுவதிலும், புத்தகங்களை எப்போதும் படித்துப் பயன்பெறுவதிலும், சிந்தனை செய்து அறிவுத் தெளிவடைவதிலும், நிகரற்ற கல்விமானாகத் திகழ்ந்தார். வரலாறு, பொருளாதாரம், அரசியல், சட்டம், அரசியலமைப்பு ஆகிய துறைகளில் கற்றுத் துறைபோகிய வித்தகர் டாக்டர் அம்பேத்கார். வாழ்நாள் முழுவதும் நூல்களைப் பயில்வதில் காலம் கழித்ததுடன் பல்வேறு மொழிகளை அறிந்த பல்கலை வல்லுநராக வாழ்ந்தவர். சிறந்த நூல்நிலையத்தை நிர்வகித்ததுடன் அங்கேயே உண்டு உறங்கியும் நாட்களைக் கழித்தார். "என்னைப் போன்ற சமுதாயத்தில் நிராகரிக்கப்பட்டவருக்கு, இப்புத்தகங்களே சீரிய நண்பர்கள்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

1953-ஆம் ஆண்டு உஸ்மானியா பல்கலைக் கழகம் அவருக்கு எல்.எல்.டி. பட்டம் வழங்கியபோது அவரைச் சிறப்பித்துக் கூறுகையில்,

"பேரறிவாளர்; சமுதாயத் தொண்டர்; சட்டவல்லுநர்களில் தலைசிறந்தவர்; புகழ்பெற்ற சட்டப் பேரவை உறுப்பினர்; இந்தியாவின் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மக்களின் நலன் காக்கும் ஒப்புயர்வற்ற சீராளர்" என்று குறிப்பிட்டுள்ளது.

ஆருயிர் மனைவி இராமாபாய் அவர்களுடன் டாக்டர் அம்பேத்கார்

அம்பேத்காரின் பாட்டனார் மலோஜி சக்பால், மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த ரத்னகிரி மாவட்டத்தின் மஹார் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர். இவரது மகன் ராம்ஜியும் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவராவார். இவருக்குப் பதினான்கு குழந்தைகள். இறுதியாகப் பிறந்த குழந்தைதான் டாக்டர் அம்பேத்கார். 1891-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள் பிறந்தார்.

இராணுவத்தில் சுபேதார் மேஜராகப் பணியாற்றி, இராணுவப் பள்ளியில் சுமார் 14 ஆண்டுகள் தலைமை ஆசிரியப் பொறுப்பில் இருந்தவர் இவரது தந்தையார் ராம்ஜி. அவர் 1891-ஆம் ஆண்டில் ஓய்வு பெற்று, மாதம் ரூ.50 ஓய்வூதியம் பெற்றுவந்தார். பின்னர் ரத்னகிரி மாவட்டம் டபோலியில் குடும்பத்தினருடன் வாழ்ந்தார். 1894-ஆம் ஆண்டில் ரத்னகிரி பொதுப்பணித் துறையில் கிடங்குக் காப்பாளராக மீண்டும் பணியில் சேர்ந்தார்; பின்னர் சதாரா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டார்.

அவரது பதினான்காவது மகனாகப் பிறந்த பீம்ராவ், 1900-ஆம் ஆண்டில் சதாராவில் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் முதல் வகுப்பில் சேர்ந்தார். பள்ளியில் இவ்ரது பெயர், பீவராம்ஜி அம்பாவாடிகார். சதாரா உயர்நிலைப் பள்ளியில் பயிலும்போது அம்பேத்கார் என்னும் பெயருடைய ஆசிரியர் ஒருவர் பீம்ராவ் மீது அளவற்ற அன்பும் பாசமும் கொண்டிருந்த காரணத்தால், இந்த ஆசிரியருக்கு மரியாதையும் மதிப்பும் செலுத்தும் வகையில் பீம்ராவ், தனது பெயரையும் அம்பேத்கார் என்று மாற்றிக் கொண்டார்.

அம்பேத்கார் பள்ளிப் பருவத்திலேயே தீண்டாமைக் கொடுமைக்கு ஆட்பட்டார். பள்ளியில் தீண்டத்தகாதவர் வரிசையில் அமர்த்தப்பட்டார். பிற சாதி மாணவர்களுடன் கலந்து விளையாடவும் உண்ணவும் அனுமதிக்கப்படவில்லை. இவர்கள் சமஸ்கிருதம் கற்கத் தடை செய்யப்பட்டனர்; எனவே, பார்ஷியன் மொழியை இரண்டாவது மொழியாக அம்பேத்கார் பயின்றார்.

1904-ல் சதாராவில் ராம்ஜி மேற்கொண்ட பணி முடிவுற்றமையால் பம்பாய் நகருக்குக் குடி வந்தார். பம்பாயில் எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் அம்பேத்கார் சேர்ந்து பயின்றார். 1907-ஆம் ஆண்டில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இவர் ஐந்தாம் வகுப்பில் படிக்கும்போது அதாவது 14-ஆம் வயது எய்தியபோது ராமாபாய் என்னும் ஒன்பது வயதுச் சிறுமியை மணந்தார்.

பரோடா மகாராஜா சயாஜிராவ் முற்போக்கு எண்ணமுடையவர்; தீண்டத்தகாத வகுப்பைச் சேர்ந்த மாணவருக்கு மேற்படிப்புக்கு உதவிட முன் வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, அம்பேத்கார் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். மாதம் ஒன்றுக்கு ரூ.25 படிப்பு உதவிப் பணம் அளிக்கப்பட்டார்.

1912-ஆம் ஆண்டில் பி.ஏ., பட்டமும் பெற்றுத் தேர்ச்சி பெற்றார். படிப்பை முடித்ததும் பரோடா

அரசுப் பணியில் சிறிதுகாலம் பணியாற்றினார். அங்கு நிலவிய சூழ்நிலை மனநிறைவளிக்காமையால் அப்பணியிலிருந்து நீங்கினார். 1913-ஆம் ஆண்டு பிப்ரவரி 28-ஆம் நாள் அம்பேத்காரின் தந்தையார் மறைவு எய்தியது, இவருக்குப்பெரும் அதிர்ச்சியாக அமைந்தது.

பரோடா மகாராஜா அம்பேத்காரை அமெரிக்காவிலுள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் உயர்படிப்பிற்கு அனுப்ப முடிவு செய்தார். 1913-ஆம் ஆண்டு ஜூலை மூன்றாம் வாரம் அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். புகழ்பெற்ற பொருளாதாரப் பேராசிரியர் செலிக்மேன் இவரது ஆசிரியராக இருந்தார். "பண்டைய இந்திய வர்த்தகம்" என்ற தலைப்பிட்ட ஆய்வுநூலுக்காக 1915-ஆம் ஆண்டு எம்.ஏ., பட்டம் பெற்றார். அம்பேத்கார் கொலம்பியா பல்கலைக் கழ்கத்தில் இருந்த சமயம், அப்போது அமெரிக்காவில் தஞ்சம் புகுந்த லாலாலஜ்பத்ராய் அடிக்கடி கல்லூரி நூலகத்திற்கு வருவார். அம்பேத்காரும் அவரும் இந்திய சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகள் குறித்துப் பேசுவர்.

1916-ஆம் ஆண்டில் அம்பேத்கார், கொலம்பியா பல்கலைக் கழகத்தை விட்டு லண்டனிலுள்ள பொருளாதார, அரசியல் பள்ளியில் சேர்ந்தார். படிப்பு முற்றுப் பெறாத நிலையில் அம்பேத்கார் இந்தியா வந்தார். 1917-ஆம் ஆண்டில் பம்பாய் வந்து குடியேறினார். 1918-ஆம் ஆண்டில் பம்பாய், சிதென்காம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். 1920-ஆம் ஆண்டில் இப்பதவியை விட்டு விலகி, லண்டனில் மீண்டும் சட்டம், பொருளாதாரம் படிக்கச் சென்றார்.

1920, ஜனவரி 31-ஆம் நாள் அம்பேத்கார், 'மூக்நாயக்' என்னும் வார இதழைத் தொடங்கி, இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் குறைபாடுகளை, அவர்களுக்கு சமூகத்தில் இழைக்கப்படும் அநீதிகளைச் சாடினார். "அதிகாரமும் கல்வி மேம்பாடும் இல்லாமல் பிற்படுத்தப்பட்ட மக்களும் தாழ்த்தப்பட்டவர்களும் எந்த முன்னேற்றமும் அடைய

புத்தமதத்தைத் தழுவிய டாக்டர் அம்பேத்காரின் தோற்றம்

முடியாது" என்று தெளிவுபடுத்தினார்.

1920, செப்டம்பர் மாதம் லண்டன், பொருளாதார அரசியல் பள்ளியில் மீண்டும் சேர்ந்ததுடன் பாரிஸ்டராகப் பயின்று தேர்ச்சி பெறத் தொடங்கினார். 1922-23-ல் ஜெர்மெனியிலுள்ள போன் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரம் படிக்கச் சில காலம் தங்கியிருந்தார்.

டாக்டர் அம்பேத்கார், தனது வாழ்நாளில் மூன்று பெருமக்களை வழிகாட்டியாகக் கொண்டிருந்தார். கபீர், ஜோதிபாபோலி, புத்தர் ஆகியோரின் வழிநடந்து தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்க்க உறுதி பூண்டார். கபீர், அவரைப் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்தக் காரணமாயிருந்தார். பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனிற்குப் பாடுபடும் உணர்வை, எழுச்சியை ஊட்டியவர் ஜோதிபா போலி; புத்த பெருமானின் அறிவுரைகள் அவரைப் பெரிதும் கவர்ந்ததுடன் பிற்காலத்தில் அவர் பௌத்த சமயத்தைத் தழுவுவதற்கும் வழி வகுத்தன

அம்பேத்கார் மேற்கொண்ட சமூகநலப் போராட்டங்கள், தீண்டத்தகாதவர்களுக்கு, சமயம், சமூகம், பொருளாதாரம், அரசியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சமத்துவம், சமஉரிமை வேண்டும் என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவை. தாழ்த்தப்பட்ட மக்கள் அம்பேத்காரின் தலைமையில் ஓரணியாகத் திரண்டு போராடத் தயாராயினர்; தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் இந்துக்களிலும் வேறு பட்ட தனித்த சமூகத்தினராகக் கருதப்பட வேண்டுமென்று விரும்பினார். சட்டப் பேரவைகளிலும் பிற வகைகளிலும் அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்யப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்.

1930-ஆம் ஆண்டில், இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பொருட்டு பிரிட்டிஷ் அரசாங்கம் லண்டனில் வட்டமேஜை மாநாட்டைக் கூட்டியது. மொத்தம் 89 உறுப்பினர்களில் 53 பேர் இந்தியாவிலிருந்து சென்ற உறுப்பினர்கள்; அம்பேத்கார், ராவ்பகதூர் ஸ்ரீநிவாசன் ஆகிய இருவரும் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதிகளாகச் சென்றனர்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்றேற்றத்திற்குப் போராடிய அம்பேத்கார், அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்வது குறித்து அண்ணல் காந்தி அடிகளுடன் சில சமயம் கருத்து வேறுபாடு கொள்ள நேர்ந்தது. காந்தியடிகளை எரவாடா சிறையில் அம்பேத்கார் சந்தித்துத் தனது கருத்துக்களை வலியுறுத்தினார். தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் பிரதிநிதித்துவம் குறித்து 1932, செப்டம்பர் 24-ஆம் நாள் ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாகியது. இதற்கு வரலாற்றுப் புகழ்மிக்க புனா ஒப்பந்தம் என்று பெயராகியது. தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதியாக அம்பேத்கார் இதில் கையெழுத்திட்டார்.

பறிபோன உரிமைகளைப் பிச்சையாகப் பெற இயலாது. தீர்மானங்கள் மூலமாகவோ, மன்றாடுவதன் மூலமாகவோ, நியாயம் பிறக்காது. ஆடுகளைத்தான் கோவில்கள் முன்பாக வெட்டுகிறார்களேயொழிய, சிங்கங்களை அல்ல; ஆடுகளாக. இருக்க வேண்டாம். சிங்கங்களைப் போன்று வீறு கொண்டெழுமின்!

இந்த ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் அரசும் ஒப்புக் கொண்டது.

புனா ஒப்பந்தத்திற்குப் பின்னர், 1932-ல் அனைத்து இந்திய தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினார். பின்னர், இதன் பெயர், ஹரிஜன் சேவக்சங்கமாக மாற்றப்பட்டது. 'ஹரிஜன்' என்ற வார இதழை காந்தியடிகள் தொடங்கினார்.

தாம் பிறந்த சமுதாயம் புறக்கணிக்கப்படுவதையும், ஒதுக்கி வைக்கப்படுவதையும் உணர்ந்த அம்பேத்கார் வீறு கொண்டெழுந்தார். சாதி ஒழிய வேண்டும் என்று அரும்பாடுபட்டார்.

சாதி ஒழிய வேண்டுமென்றால் கலப்புமணம் ஒன்றினால்தான் அது முடியும் என்று முதன் முதலாக மொழிந்தவர் அம்பேத்கார். அதற்கு எடுத்துக்காட்டாகவும் அவர் திகழ்ந்தார்.

1928-ஆம் ஆண்டு பம்பாயில் அரசினர் சட்டக் கல்லூரியின் முதல்வரானார்.

1942-ல் கிரிப்ஸ் கமிஷன் இந்தியாவிற்கு வந்தபோது அம்பேத்கார், சர் ஸ்டேபோர்டு கிரிப்ஸ் அவர்களைச் சந்தித்துப் பேசினார். அம்பேத்கார், ராஜா ஆகியோர் 'கிரிப்ஸ் திட்டங்களினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தீங்கு விளையும்' என்று எச்சரித்தனர்.

1942, ஜூலை 2-ஆம் நாள் அம்பேத்காரின் பெயர், வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் சேர்க்கப்பட்டு இந்தியர்களின் பிரதிநிதித்துவம் 14ஆக உயர்ந்தது. இந்திய அரசின் நிர்வாகக் குழுவின் உறுப்பினராகத் தீண்டத்தகாத இந்து ஒருவர் நியமிக்கப்பட்டது இந்திய வரலாற்றில் இதுவே முதலாவதாகும். 1942, ஜூலை 20-ஆம் நாள், தொழிலாளர் துறை அமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1946, மே மாத இறுதி வாரத்தில் வைஸ்ராயின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியை விட்டு விலகினார்.

இந்தியா விடுதலை பெற்று முதன் முதலாக மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டபோது அம்பேத்கார் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒருவர் மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றது சிறப்பு அம்சமாகக் கருதப்பட்ட காலம். விடுதலைக்குப் பின்னர், அம்பேத்கார் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான எண்ணத்தையும் காந்தியடிகளுக்கு எதிரான கருத்துக்களையும் மறந்து ஒத்துழைப்புத் தந்தார்.

வங்காளத்திலிருந்து அரசியல் நிர்ணயசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் பிரிவினைக்குப் பின்னர் இந்த இடத்தை இழந்தார். பம்பாய் சட்டசபை காங்கிரஸ் கட்சியால் இப்பதவிக்கு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அம்பேத்கார் பண்டித நேருவின் அமைச்சரவையிலிருந்து 1951 செப்டம்பர் மாதம் விலகினார். 1952, ஜனவரியில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அம்பேத்கார் தோல்வியடைந்தார். மார்ச் மாதத்தில் மாநிலங்கள் அவைக்கு அம்பேத்கார் தேர்ந்தெடுக்கப்பட்டார். அமைச்சரவையிலிருந்து விலகிய பின்னர், அவர் எதிர்க்கட்சித் தலைவராகவே பணியாற்றினார்.

சமயம், 'மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது' என்றே கருதினார் அம்பேத்கார். "மனிதன் உணவினால் மட்டும் வாழ்வதில்லை. அவனுக்கு மனம் உண்டு. மனத்தினால் சிந்தித்து உண்மை அறிகின்றான்; ஆகவே, சமய வாழ்க்கையும் மனித வாழ்விற்கு அடிப்படையானதே" என்ற கருத்தை வலியுறுத்தினார். 1950-ஆம் ஆண்டில் டில்லியில் நடைபெற்ற முதலாவது பௌத்தர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டார். 1954 டிசம்பரில் பௌத்தர்களின் மூன்றாவது உலக யாநாட்டில் கலந்து கொண்டார். இங்குதான் அவர், பௌத்த சமயத்தைத் தழுவும் எண்ணத்தை மேற்கொண்டார். 1956, மே, 24-ஆம் நாள் புத்தர் பிறந்த நன்னாளில், தான் (1956 அக்டோபரில்) பௌத்த சமயத்தில் சேரப் போவதாக பம்பாயில் அறிவித்தார்.

1956 அக்டோபர் 15-ஆம் நாள், நாகபுரி நகராட்சி மன்றம் அம்பேத்காருக்கு வரவேற்பு அளித்தபோது, "சமூக சீர்திருத்தவாதி, தத்துவஞானி, சிறந்த அரசியல் அமைப்பு நிபுணர்" என்று பாராட்டுரை தெரிவித்துச் சிறப்பளித்தது. காட்மாண்டுவில் நடைபெற்ற உலக பௌத்தர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு, 'பௌத்தம் சாதாரண சமயம் மட்டுமன்றி, சமுதாய வாழ்க்கை முறைகளை வகுக்கும் சீரிய நெறியாகும்' என்று அறிவித்தார். பின்னர் டில்லிக்குத் திரும்பி வந்து, தலைலாமாவிற்குச் சிறப்புச் செய்யும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

டாக்டர் அம்பேத்கார், தனது பணிகளை மூன்று நிறுவனங்கள் மூலம் வகைப்படுத்திக் கொண்டார். 1945-ல் தொடங்கப்பட்ட மக்கள் கல்விச் சங்கம், அதன் கல்லூரிகள் மூலமும், 1953-ல் தொடங்கப்பட்ட இந்திய பௌத்த சங்கத்தின் மூலமும், இந்தியக் குடியரசுக் கட்சி மூலமும் தொண்டுகளை விரிவுபடுத்திக் கொண்டார்.

1956, டிசம்பர், 6-ஆம் நாள் திருமதி அம்பேத்கார் வழக்கம் போல் எழுந்து பார்த்தபோது டாக்டர் அம்பேத்கார் மீளாத்துயிலில் இருந்தார். உறங்கும் போதே இயற்கை எய்திவிட்டார்.

டாக்டர் அம்பேத்கார் சிறந்த அரசியல் மேதையாகவும் அறிஞராகவும் திகழ்ந்தவர். இந்தியாவிற்குச் சட்ட அமைப்பு வழங்கியதுடன் மக்களுக்கு உரிமைகளின் அடித்தளத்தை வகுத்துக் கொடுத்தார். இந்திய அரசியல் எழுச்சியின் வரலாற்றில் அவரது அரசியல் பணியும் எழுத்துப் பணியும் இரண்டறக் கலந்து விட்டன.

பட்டுக்கோட்டையும் பாடல்களும்

ப. ஜீவானந்தம்

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பிறந்த நாளையொட்டி (13.4.30) இக்கட்டுரை வெளியிடப் படுகிறது.

புத்தக அறிவு புட்டிப்பால்; அனுபவ அறிவு தாய்ப்பால். பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் விவசாயத் தொழிலாளி, ஏழை விவசாயி, பாட்டாளி ஆகியவர்களில் ஒருவராக வாழ்ந்து அடிபட்டு அனுபவ அறிவு பெற்றவர். அடிப்படைப் பெருமக்களின் அனுபவப் பெருஞ் செல்வனான மார்க்சிம் கார்க்கியைச் சோவியத் யூனியன் மட்டுமல்ல, உலகம் முழுவதுமே 'மக்கள் கலைஞன்' என்று உச்சியில் தூக்கி வைத்து மெச்சுகிறது. அதுபோல, பட்டுக்கோட்டை ''மக்கள் கவிஞன்'' என்று தமிழகம் வாயாரப் புகழத் தொடங்கியதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இத்தகைய கவிஞர் தமது 'பாட்டுத் திறத்தாலே' இரண்டொரு ஆண்டுகளுக்குள் தமிழ்ப் பெருமக்களை ஆட்டிப் படைத்துவிட்டார் என்பது நம் எல்லோருக்கும் நன்கு தெரியும். மக்கள் கோணத்திலிருந்து பார்த்தால் ''இன்ப உருவெடுப்பது கவிதை'' என்ற கவிமணியின் வாக்குக்குப் பட்டுக்கோட்டையின் பாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. பாட்டின் இன்பத்தைப் பற்றிப் பட்டுக்கோட்டையின் மதிப்பென்ன தெரியுமா?

''எத்தனையோ இன்பம் இந்த
நாட்டிலே உண்டு
அத்தனைக்கும் பெரிய இன்பம்
பாட்டிலே உண்டு''

என்கிறார். இந்த இரண்டு வரிகளிலும் உணர்ச்சி பொங்கி வழிய அவர் வெளியிட்டுள்ள உண்மை, பாட்டால் அவர் அனுபவித்த இன்பத்தையும் பாட்டால் மற்றவர் அனுபவிக்க அவர் விரும்பிய இன்பத்தையும் படம்பிடித்துக் காட்டுகிறது.

பொது மக்கள் வாழ்வில் அவருக்குக் கிடைத்த தெள்ளிய அனுபவமும், பாட்டின்பத்தில் அவருக்கிருந்த அழுத்தமான ஈடுபாடும் அவர் பாடல்களில் எல்லாம் உள்ளீடாக விளங்குவதைக் காணமுடியும்.

அவர் பாடல்களில் நான் மிகச் சிறந்த இரண்டு கூறுகளைக் காண்கிறேன். ஒன்று நாடோடிப் பரம்பரை (Folk Tradition); அதாவது வழி வழி மரபு. மற்றொன்று நவீன முறையில் வெளியிடுதல் (Modern Expression); வழி வழி மரபையும் நவீன உணர்வையும் இணைத்துப் பாட்டுத் திறம் காட்டுவது இன்று மிக மிக முக்கியம்; மிக மிகத் தேவை. நிலப்பிரபுத்துவச் சமுதாயத்திலிருந்து விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் மலிந்த தற்கால நாகரிகத்திற்கு முன்னேறிச் செல்லும் மக்களுக்கு இந்த வழி அதி முக்கியமானது. நமது நாடும் - பாரதமும் தமிழகமும்- பிற்போக்கைத் தேய்த்து முன்னேற்றத்தில் வளரத் துடிக்கும் நாடுதான். இந்த வளர்ச்சி நமது இலக்கியத்திலும் முதலிடம் பெற வேண்டும் எனச் சொல்லத் தேவையில்லை.

சராசரி மனிதனின் சாதாரண விருப்பு வெறுப்புக்களையும் மன அசைவுகள் உணர்ச்சிப் பெருக்குகளையும் எளிமையாக நேர்பாங்காக உயிர்த்துடிப்பாகச் சொல்லும் மரபே நாடோடி மரபு. இதில் சிக்கலான கருத்துக்களுக்கும், உருவங்களுக்கும் இடமில்லை. எளிய விவசாய நாகரிகத்தின் அடிப்படையான உணர்வுகளை வெளியிட்டு வந்திருப்பதையே இந்த மரபில் பார்க்கிறோம்.

சிக்கல் நிறைந்த நிகழ்கால வாழ்க்கைத் தோற்றத்தை மிகச் சாதாரண கண்ணோட்டத்தில் வைத்துக் கூறுவதும், கேட்பவரின் நெஞ்சை உடனடியாகக் கவரும் விதத்தில் நேரான வழி வழியான ஆற்றலோடு வெளியிடுவதும் நாடோடி மரபின் இரட்டைக் கூறுகள்.

சிந்து, காவடிச்சிந்து, கும்மி, குறவஞ்சி, பள்ளு, ஆனந்தக் களிப்பு, தெம்மாங்கு, கண்ணிகள் முதலிய பாடல் உருவகங்களின் தோற்றங்களும், சித்தர்கள், தாயுமானவர், இராமலிங்கனார், பாரதி, கவிமணி, பாரதிதாசன் போன்றோர் தத்துவ, சமய, லௌகிக, அரசியல், சமுதாயக் கருத்தோட்டங்களை வெளியிட மேற்படி உருவகங்களையெல்லாம் வளர்த்துப் பயன்படுத்திய முயற்சியும் நாம் கவனத்தில் கொள்ளத் தக்கவை.

மூவருலாவையும், நைடதத்தையும் படியுங்கள்! அதை அடுத்து பாரதியையும் பாரதிதாசனையும் படியுங்கள். சிக்கல் சிக்கலான கருத்தோட்டங்களுக்கும் உருவாக்கங்களுக்கும் காலத்தால் வளர்ந்த நாடோடி மரபுகளுக்கும் உள்ள வேற்றுமையைக் காணலாம்.

பட்டுக்கோட்டை காலக்குரலின் இந்த நாடோடி மரபுக்குத் தனி முத்திரை வைத்து ஒளிவிடுகிறார்.

(மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் என்னும் நூலிலிருந்து)

சென்னைத் தொலைக்காட்சி நிலைய விழா

சென்னைத் தொலைக்காட்சியின் கூடுதல் நேர மண்டல ஒளிபரப்புத்தொடக்க விழா, தொலைக்காட்சி நிலைய அரங்கில் 25-3-90 அன்று மாலை 3.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்பு-நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் திரு. உபேந்திரா அவர்கள் கூடுதல் நேர மண்டல ஒளிபரப்பைத் துவக்கி வைத்துப் பேசினார்.

விழாவில் நாட்டிய நிகழ்ச்சியும், கிராமியக் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இவ்விழாவிற்குத் திருவாளர்கள்- வை.கோபால்சாமி, எம்.பி., டி.ஆர். பாலு, எம்.பி., ஆர்.கணேசன், எம்.பி., பரிதி இளம்வழுதி, எம்.எல்.ஏ., மதிவாணன், எம்.எல்.ஏ. மற்றும் அரசு அதிகாரிகள், எழுத்தாளர்கள் என ஏராளமானோர் வருகை தந்தனர்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் முழுநேர மண்டல ஒளிபரப்புத் துவக்க விழாவில், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

''அன்பார்ந்த மத்தியப்பேரரசின் செய்தித்துறை அமைச்சரும், என்னுடைய அன்புச் சகோதரருமான மாண்புமிகு உபேந்திரா அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தின் நண்பர்களே! இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டும், கண்டு கொண்டுமிருக்கின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் அனைவருக்கும் இந்த மகிழ்ச்சியான நேரத்தில் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி தெரிவிப்பது முதலில் யாருக்கு என்றால், தமிழுக்கு அதிக நேரத்தைத் தொலைக்காட்சியிலே அழைப்பு இல்லை என்பதை நினைவு கூர்கிறேன். அந்த நாளையும், இந்த நாளையும் நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

இந்தியாவிலே, அரசியல் பண்பாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு பெரிய வளர்ச்சியை எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன். அந்த அரசியல் பண்பாட்டிற்குக் காரணம், இன்றைக்கு இந்தியத் திருநாட்டினுடைய தலைமை அமைச்சர் பொறுப்பை ஏற்றிருக்கின்ற மாண்புமிகு வி.பி.சிங் அவர்களும், நண்பர் உபேந்திரா போன்றவர்களும் என்று சொன்னால் அது மிகையாகாது. உபேந்திரா அவர்கள் இங்கே நல்ல தமிழில் உரையாற்றினார். நானே வியக்கின்ற அளவிற்கு அருந்தமிழில் இங்கே உரையாற்றினார். நம்மையெல்லாம் அவருடைய தமிழால் திகைக்க வைத்தார். நான் அவருக்கு என்னுடைய மகிழ்ச்சியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொலைக்காட்சி நிலையத்திற்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்பு இப்போது வழங்கியுள்ள மத்திய அரசுக்கும், நம்முடைய மத்திய அமைச்சர் உபேந்திராவிற்கும் ஆகும்.

தொலைக்காட்சி நிலையத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை நான் அறிந்தும் - உணர்ந்தும் - கண்டும் - கேட்டும் பெருமையடைகிறேன்.

எனக்கு மிக நன்றாக நினைவிருக்கிறது-முதன் முதலாகத் தமிழ் நாட்டுத்தொலைக்காட்சி நிலையத்தில் இப்படியொரு நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்வது இதுதான், முதல் தடவை. 1973 முதல் 1975 வரையில், தொலைக்காட்சி நிலையத்தை இங்கே அமைக்க வேண்டுமென்று இடம் பார்த்துக் கொடுத்து, அதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் மாநில அரசின் சார்பாகச் செய்து, 1975-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள் இந்தத் தொலைக்காட்சி நிலையம் தொடங்கி வைக்கப்பட்ட போது, அன்றைய முதலமைச்சராக இருந்த எனக்கு

கிறேன் உபேந்திரா அவர்கள் வாயிலாக! இந்த ஆண்டு பாவேந்தர் பாரதிதாசனுடைய நூற்றாண்டு தொடங்குகின்ற ஆண்டு. டாக்டர் அம்பேத்காருடைய நூற்றாண்டு விழா தொடங்குகின்ற ஆண்டு. ஏப்ரல் திங்கள் முதல் அந்த இரண்டு மாமனிதர்களுடைய நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகின்ற நேரத்தில், ''புதியதோர் உலகு செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்'' - என்ற எழுச்சிப் பண் பாடிய பாவேந்தருடைய கொள்கைகள் பசும் உள்ளங்களிலே கூட பதியத்தக்க வகையில் பாவேந்தரைப் பற்றிய நிகழ்ச்சிகள் அமைய வேண்டுமென்று விரும்புகிறேன்.

வகுப்புக் கலவரங்கள், சாதிக் கலவரங்கள், ஆண்டவன் சன்னிதானத்தின் முன்னால் அனைவரும் சமம் என்ற கருத்துக்கு மாறுபாடான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்ற இந்த நேரத்தில்-அம்பேத்கார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் போது மக்களுக்குச் சமத்துவ நோக்கம், சமதர்ம நோக்கம், இதயத்திலே பதியத்தக்க வகையில் நிகழ்ச்சிகளை வகுத்து, இந்த நூற்றாண்டு விழாவை இந்தத் தொலைக்காட்சி நிலையம் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்; பயன்படுத்தும் என்று நம்புகின்றேன்; பயன்படுத்துவோம் என்று உறுதி கூறுகின்றேன்.''

— இவ்வாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

—இந்த விழாவின் தொடக்கத்தில், தொலைக்காட்சி நிலையப் பொது இயக்குநர் பொறுப்பு வகிக்கும் திரு. எஸ்.கே. கபூர் வரவேற்புரையாற்றினார். விழா முடிவில் - தலைமைப் பொறியாளர் திரு. ஓ.பி. குஷ்ரு நன்றி கூறினார்.

தொலைக்காட்சி சுதந்திரமாகச் செயல்பட...

நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பதிலும், வளர்ச்சிப் பணிகளிலும் தொலைக்காட்சி முக்கியப் பங்காற்ற முடியும். சென்னைத் தொலைக் காட்சியில் முழுநேர மண்டல ஒளிபரப்பு செய்வதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள மக்களுக்குக் கல்வியறிவைப் பெருக்குவதற்கும், அன்றாடச் செய்திகளை அளிப்பதற்கும் மேலும் வாய்ப்பேற்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் இந்த மின்னணுத் தகவல் தொடர்புச் சாதனங்கள் குறுகிய நோக்கில் தவறாகப் பயன்படுத்தப்பட்டதன் விளைவாக, அவற்றின் நம்பகத்தன்மை அழிக்கப்பட்டுள்ளது. இந்தச்சூழ்நிலையில், கடந்த காலத்தில் செய்யப்பட்ட தவறுகள் மீண்டும் நடைபெற அனுமதிக்கமாட்டோம். இதையெல்லாம் கருத்தில் கொண்டுதான், நாடாளுமன்றத்தில் 'பிரச்சார் பாரதி மசோதா' அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம், மின்னணுத்தகவல் தொடர்புச் சாதனங்கள் அரசுக் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபட்டு, சுதந்திரமாகச் செயல்படும்.

—திரு. உபேந்திரா
மாண்புமிகு செய்தி-ஒலிபரப்புத்துறை அமைச்சர்,

(25.3.90 அன்று சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தில் ஆற்றிய உரையிலிருந்து)

ஓர் உத்தமமான சமூக அமைப்பில் எல்லாருக்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் தொடர்பு ஏற்பட பலதிறப்பட்ட மார்க்கங்களும், சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும். அதாவது, சமூகத்தில் அங்கம் பெற்ற உறுப்பினர்கள் பரஸ்பரம் நீக்கமறக் கலந்து கொள்வதற்கு சமூக அமைப்பில் இயல்பாகவே இடம் இருக்க வேண்டும். இதுவே உண்மையான சகோதரத்துவம்.

—டாக்டர் அம்பேத்கார்

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி :

சுற்றுலாப் பொருட்காட்சி

நிறைவு விழா

சென்னை தீவுத் திடலில் நடைபெற்று வந்த 16வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியின் நிறைவு விழா, 31.3.1990 அன்று மாலை சிறப்புற நடைபெற்றது.

மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு.இ[illegible]ம்பரசு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் திரு. ரகுமா[illegible] திரு. அப்துல் லத்தீப், திரு. மதிவாணன், ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கிப் பேசியதாவது:

''இங்குள்ள குடிநீர் வழங்கு துறை அரங்கத்தை நான் பார்த்தேன். சென்னைக்கு, தெலுங்கு கங்கைத் திட்டத்தின் கீழ் குடிநீர் இன்னும் மூன்றாண்டுகளில் வர இருக்கிறது. இப்போது உள்ள குழாய்கள் எல்லாம் ஐம்பது, அறுபது ஆண்டுகளுக்கு முந்தையது. அவற்றை மாற்ற வேண்டும். 1992-இல் அந்தப் பணியைச் செய்தால், மக்கட்தொகைப் பெருக்கம் காரணமாக யாரும் நடமாட முடியாது. எனவே இந்த ஆண்டே அதற்கான பணிகளுக்குத் திட்டமிடப்பட்டு உள்ளது.

இதற்காக அதிகாரிகள் வாஷிங்டன் சென்று உலக வங்கியுடன் ஒப்பந்தம் செய்து வந்துள்ளனர்.

இந்தப் பொருட்காட்சியின் மூலம் ரூ.26 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது. 75 இலட்சம் பேர் கண்டு களித்துள்ளனர்.

மகாபலிபுரம், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில் ஆகியவற்றுக்கு இணையான இடம் உலகில் எங்கும் கிடையாது. அங்கு [illegible] தற்கான சாலைகள் [illegible] தேசி[illegible] வுக்குத் தரம் வாய்ந்த[illegible] வேண்டும்.

நமது மூலதனம் [illegible] கலாச்சாரம்தான். தஞ்சா[illegible]ருந்து கும்ப

கோணம் வரை நிறைய கோவில்கள் உள்ளன. எனவே ''திராவிட கலாச் சார சுற்றுலா'' தொடங்க வேண்டும்.

சென்னை நகரத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும் என அன்பரசு எம்.பி. கேட்டுக் கொண்டார். முன்பு பிரதமர் ராஜீவ் காந்தி கல்கத்தாவுக்கும், பம்பாய் நகருக்கும் கோடிக் கணக்கில் பணத்தை வாரிக் கொடுத்தார். சென்னை நகரைப் புறக்கணித்து விட்டார். இப்போது நமக்கு உரியதைப் பெற நாம் போராட வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை, எங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை தமிழ்நாட்டுக்காக, தமிழ் மண்ணுக்காகத்தான் இருப்போம். இதுவரையில் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சியை மைய அரசு புறக் கணித்தே வந்திருக்கிறது. இனிமேல் தமிழகத்திற்குச் சேரவேண்டிய உரி மைகளைப் பெற்றுத்தர முயற்சி செய்வேன்.

இங்கே நிரந்தரப் பொருட்காட்சி வேண்டும் என்றார்கள். நல்ல கொள்கை; அதே சமயம்-தோல் தொழில், கைத்தறித் தொழில் ஆகிய வற்றில் நாம் சிறந்து விளங்குகிறோம். எனவே, தொழில் பொருட்காட்சி யையும் இணைத்து நிரந்தரமாக்க வேண்டும்.''

மாண்புமிகு அறநிலையம் மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் தமது தலைமை உரையில் குறிப் பிட்டதாவது:

''கடந்த டிசம்பர் மாதம் 23ஆம் தேதியன்று முதல்வர் கலைஞர் அவர்கள் இந்தப் பொருட்காட்சி யைத் தொடங்கி வைத்தார். நூறு நாட்களாக இந்தப் பொருட்காட்சி சிறப்பாக நடந்திருக்கிறது. அற நிலையத்துறை அரங்கு மட்டும் ரூ.6 இலட்சம் செய்து அமைக்கப்பட்டது. அதை இனி பிரிக்க வேண்டும். இதுபோன்ற நிலைமைகளை மாற்றவே நிரந்தரப் பொருட்காட்சி அமைக்கத் திட்டமிடுகிறோம்.

முதல்வர் கலைஞரும் கொள்கை அளவில் அதை ஏற்றுள்ளார். ஒவ்வொரு துறைக்கும் 10 ஆண்டு செய்யும் செலவுகளை வழங்கினால் போதும்; நிரந்தரக் கட்டடம் அமைத்து விடலாம்.

அம்பேத்கார் பொன்மொழி

● சமூக சீர்திருத்தத்திற்கு உள்ள வழி இந்தியாவைப் பொறுத்தவரையில் - சுவர்க்கத் திற்கு உள்ள வழிபோலக் கரடுமுரடானது; சங்கடமானது; ஆபத்துகள் நிறைந்தது.

● இந்தியாவில், சமூக சீர்திருத்தத்திற்கு நண்பர்கள் சிலரே; எதிரிகளோ அதிகம்! எதிரிகள் இருவகை; ஒரு கூட்டத்தார் அரசியல் சீர்திருத்தக்காரர்; மற்றவர்கள் அபேதவாதிகள்.

● இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால், அரசியல் சீர்திருத்தத்திற்குமுன் - சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.

இதை இன்னும் சிறப்பான முறையில் எப்படி அமைக்கலாம், ''அம்யூஸ்மெண்ட் பார்க்'' எந்த இடத்தில் இருக்க வேண்டும் என்பது பற்றி எல்லாம் முடிவு செய்ய டெல்லியிலிருந்து ஒரு ''ஆர்க்கி டெக்ட்'' வந்து பார்த்துச் சென்றார்.

அவர் ''டெல்லியில் பிரஹதி மைதானத்தில் இப்படி ஒரு பொருட் காட்சி இருப்பதாகவும், தமிழக அரசு சார்பிலும், அங்கு ஒரு கட்டடம் உள்ளது'' என்றும் கூறினார்.

டெல்லியில் 100 ஏக்கர் நிலத் தில் உள்ள அந்த அமைப்பை விட இங்கு 22 ஏக்கர் நிலத்தில் 2 மடங்கு வசதியுடன் அமைத்துத் தருவதாக அவர் சொல்லி இருக்கிறார்.

அதற்கான பிளான் விரைவில் வந்து சேரும். இந்த ஆண்டு ஒரு பகுதியிலாவது நிரந்தரக் கட்டடம் கட்ட வேண்டும் என்று இருக்கிறோம்.

இன்னும் நான்கைந்து ஆண்டு களில் தமிழகத்தை, சுற்றுலாத் துறை யில் இந்தியாவில் உள்ள வேறு மாநி லங்களுக்கு இணையாக-அல்லது அதற்கு ஒருபடி மேலாகச் செய்யப் பல்வேறு பணிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

இந்தப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த அரசுத் துறை அரங்கங்களிலேயே சிறந்த அரங்க மாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தீய ணைப்புத் துறை அரங்கத்திற்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. இப் பொருட்காட்சியைச் சிறப்பாகக் கண் காணித்துக் காவல் பணிபுரிந்தமைக் கான சிறப்புப் பரிசும் தீயணைப்புத் துறைக்கு வழங்கப்பட்டது.

நெடுஞ்சாலைத்துறை - கிராமப் புற வளர்ச்சித்துறை ஆகியவற்றுக்கு இரண்டாவது பரிசுகளும், பட்டு வளர்ச்சித்துறை அரங்கிற்கு மூன்றா வது பரிசும் வழங்கப்பட்டது.

அரசு சார்பு நிறுவனங்களில் - வீட்டு வாரிய அரங்கு, சென்னைக் குடிநீர் அரங்கு, தமிழ்நாடு குடிநீர் வாரிய அரங்கு ஆகியவை பரிசுகள் பெற்றன.

சிறந்த அலங்காரத்திற்கான பரிசுகள் அறநிலையத்துறை, சுற்றுலாத் துறை, இந்திய மருத்துவம், ஆகிய அரங்குகளுக்கும், தனியார் அரங்கு களில் சிறந்தவற்றுக்கான பரிசுகள் அரியானா கைத்தறி, யூனியன் ஃபோம், பூபதி ஆகியவற்றுக்கும் - சிறந்த அலங்காரத்திற்கான பரிசுகள் நியூ பாம்பே சூப்பர் பஜார், ஸ்ரீராம் எக்ஸ்போர்ட் கார்மென்ட்ஸ், வசந்த் அண்ட் கோ அரங்குகளுக்கும் வழங்கப்பட்டன.

துப்புரவுப் பணிக்காகவும், நுழை வாயில் அலங்காரத்திற்காகவும் சென்னை மாநகராட்சிக்குச் சிறப்புப் பரிசு அளிக்கப்பட்டது.

விழாத் தொடக்கத்தில், செய்தி-சுற்றுலாத்துறை ஆணையர் மற்றும் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை யாற்றினார்; விழா முடிவில், தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. சுந்தர்ராஜ் நன்றி கூறினார்.

—பி.எல்.ஆர்.

தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்

திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இந்த வருடாந்திரக் கூட் டத்தில், வேளாண்மை ஆராய்ச்சி பற்றியும், வேளாண்மை உற்பத்தி அதிகரிப்பு பற்றியும் சில கருத்துக் களைத் தங்கள் மேலான கவனத் திற்குக் கொண்டு வந்து இந்தக் கருத்தை மாண்புமிகு துணைப் பிரதமர் சீர்தூக்கிப் பார்த்து நடை முறைப் படுத்த வேண்டுகிறேன்.

வேளாண்மைக் கல்வி

தமிழகத்தில் வேளாண்மை உற் பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளில், புதிதாக இரண்டு வேளாண்மைக் கல்லூரிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் கிள்ளிகுளத்திலும், குமுளூரிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு கல்லூரிகளுக்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் திடமிருந்து எந்த நிதி உதவியும் கிடைக்கவில்லை. இக்கல்லூரிகளில் கல்விமுறையை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேம்படுத்த எண்ணியுள் ளோம். இதற்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நிதி உதவி கோரப் பட்டும் கிடைக்கவில்லை.

தமிழ்நாடு வேளாண்மைப். பல் கலைக் கழகத்தில் படிக்க, மத்திய அரசு பரிந்துரை செய்யும் 10 சத விகித மாணவர்களையும் நாங்கள் சேர்த்துக் கொள்கிறோம். இந்த நிலையில் எங்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் தின் நிதி உதவி கிடைக்காமல் இருப்பது வருந்தத் தக்கதாக உள்ளது. வேளாண்மை உற்பத்தி அதிகரிக்க, விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட, பாடுபட்டு வரும் நமது துணைப் பிரதமர் அவர்கள் எங்கள் கோரிக்கையினை ஏற்று, வேளாண்மைக் கல்லூரிகள் இரண்டுக்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத் தின் நிதி உதவி வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன்.

வேளாண்மையும் அதைச் சார்ந்த துறைகளான தோட்டக்கலை, வேளாண் பொறியியல், மீன் அறிவியல், வனவியல் மற்றும் கால்நடைப் பட்ட தாரிகளுக்கு வயல்வெளியில் ஏற்படும் பிரச்னைகளைச் சமாளிக்கப்பயிற்சி அளிக்கப்பட வேண்டும். எனவே இளம் வேளாண் அறிவியல் பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்குக் கடைசி இரண்டு ஆண்டுகளில் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப பாடங்களில் பயிற்சி அளிக்க ஆராய்ச்சிக் கூடங்கள் நவீனப் படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்வதால், மாணவர்களுக்கு நம் பிக்கை ஏற்பட்டு, வேளாண்மை சார்ந்த சுய தொழில்களைச் செய்ய ஏதுவாக இருக்கும்.

ஆகையால், வேளாண்மைக் கல்லூரிகளிலும் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையங்களில் பயிற்சிக் கான கட்டமைப்புகளை உருவாக்கு வதற்கும் முன்னோடிக் களங்கள் அமைப்பதற்கும் மற்றும் ஆய்வுக் கூடங்களை நவீனப்படுத்துவதற்கும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவி செய்ய வேண்டும். இக்கட்டமைப்புகளைக் கொண்டு வேளாண் தொழில் முனைபவர்க்கு விதை உற்பத்தி, நாற்று மேலாண்மை, உயிர் உரங்கள் தயாரித்தல், காளான் உற்பத்தி, கறிக் கோழி உற்பத்தி, மீன் பண்ணை அமைத்தல், பயிர் திசு வளர்ப்பு மூலம் பயிர்களை உருவாக்குதல், பட்டு வளர்ப்பு மற்றும் ஒட்டுண்ணிகள் மூலம் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத் துதல் போன்ற துறைகளில் பயிற்சி கொடுக்கலாம்.

வளர்ச்சி அடைந்த பல மேலை நாடுகளில் கம்ப்யூட்டர் வேளாண்மைக் கல்வியில் முக்கிய இடம்பெற்று விட்டது. இளம் அறிவியல் மற்றும் முதறிவியல் வேளாண்மைப் பட்ட தாரிகளுக்கு கம்ப்யூட்டரைப் பண்ணைத் திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி வேளாண்மை ஆகியவற்றிற்குப் பயன்படுத்த பயிற்சி அளிக்கப் படுகின்றது. இதே போன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல் கலைக் கழக மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்க எண்ணியுள்ளோம். இதற்கும் போதிய அளவில் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழக நிதி உதவி தேவைப்படுகிறது.

நமது வேளாண் பட்டதாரி களுக்கு வயல்களில் ஏற்படும் பிரச்னை களை மிகத் துல்லியமாக ஆராய்ந்து, விவசாயிகளின் குறைகளைத் தீர்க்கும் பொருட்டு மாணவர்களுக்கு நவீன கருவிகளைக் கொண்டு தொழில் கூடங்களை நிறுவி, பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இக்கருவி

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களை மாண்புமிகு மத்திய உணவு அமைச்சர் திரு. நாதுராம் மிர்தா அவர்கள் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார். மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள் உடன் உள்ளார் (30.3.90)

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற துணைப் பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் பி.எச்.டி. பட்டங்களை வழங்கினார். (30.3.90)



சென்னை மைலாப்பூர் சார்பதிவக வளாகத்தில் நடைபெற்ற தமிழக அரசு பதிவுத் துறையின் 125-வது ஆண்டு நிறைவு விழாவில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தின் புதிய கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார். சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. என். கணபதி, வருவாய்த் துறைச் செயலர் திரு. ஏ.எம். சுவாமிநாதன், இ.ஆ.ப., பதிவுத்துறைத் தலைவர் திரு. நா. ஆதிமூலம், இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர். (25.3.90)

செங்கை-அண்ணா மாவட்டம், அச்சிறுப்பாக்கத்தில் நடைபெற்ற நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 94-வது பிறந்தநாள் விழாவில் மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் நலிந்தோருக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாண்புமிகு ஆதி-திராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன் அவர்கள் உடன் உள்ளார். (24.3.90)



களை வாங்கவும், ஆராய்ச்சிக் கூடங்களை மேம்படுத்தவும் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து நிதி உதவி கொடுக்க வேண்டும்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால், வேளாண்மைப் பட்டதாரிகள் மண் நலம், பயிர் நலம் மற்றும் கால்நடை நலன்களில் பயிற்சி பெற்று அதனால் மண், பயிர், கால்நடை நலப் பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். உயர்தொழில் நுட்பமுடைய வேளாண்மை விஞ்ஞானிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு ஒளி, ஒலி பயிற்சி சாதனங்களைக் கொண்டு பாடம் கற்பிக்கப்பட்டால், கல்வி முறையை இன்னும் மேம்படுத்தலாம். இது போன்ற பயிற்சிகளைத் தகுந்த இடைவெளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அளித்தால் சிறப்பாக இருக்கும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆராய்ச்சி

நடைமுறையில், அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித்திட்டங்கள் இயங்கும் அனைத்து ஆராய்ச்சி மையங்களுக்கும் 75 சதவீத நிதி உதவியை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் செய்து வருகின்றது. கிடைக்கக் கூடிய பொருட்களும் மற்றும் ஆராய்ச்சி தகவல்களும் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள அனைத்து மையங்களுக்கு இடையே பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

ஆகையால், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் 100 சதவீத நிதி உதவி செய்ய வேண்டும்.

நமது நாட்டில் பயறு வகைகள் உற்பத்தி போதிய அளவு அதிகரிக்கப்படவில்லை. எண்ணெய்வித்துப் பயிர்களுக்கு ஏற்படுத்தியது போன்று, ஒரு தொழில் நுட்ப முனைப்புத் திட்டத்தைப் பயறு வகைப் பயிர்களுக்கும் விரிவுபடுத்தலாம். எனவே, பயறு வகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேளாண் விஞ்ஞான நுட்ப அமைப்பு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இறவை சாகுபடியில் அதிக அளவு ரசாயனப் பொருட்களான உரம் மற்றும் பூச்சி மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இவை



நாட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசுபடுத்துகின்றன. நிலம் பயன்படுத்தும் முறையைத் துரிதப்படுத்த, அதிக அளவிற்கு நீர் மற்றும் நில ஆதாரங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு நிலம் பயன்படுத்தும் முறையில் சுற்றுப்புறச் சூழ்நிலையை முக்கியமாகக் கொண்டு ஆராய்ச்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் தற்போது மூல விதை உற்பத்திக்கு-குறிப்பாகப் பயறு வகைப் பயிர்கள், எண்ணெய்வித்துப் பயிர்கள் மற்றும் காய்கறி விதை உற்பத்திக்கு மாநில வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றது. இத்திட்டம் அனைத்துப் பயிர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டால் விவசாயிகள் புதிய ரகங்களின் விதைகளையும் ஒட்டு ரகங்களின் விதைகளையும் வெகு விரைவில் பெற முடியும்.

தமிழ்நாட்டில் வாழை பல்வேறு சூழ்நிலைகளில் சமவெளி மற்றும் மலைப்பகுதிகளில் தோட்டக் காலிலும், மானாவாரியாகவும் சாகுபடி செய்யப்படுகிறது. வர்த்தக ரீதியான வாழைப்பழ வகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, பல மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் குழு ஒன்று தமிழ்நாட்டில் பல இடங்களைப் பார்வையிட்டு, வாழை திருச்சி மாவட்டத்தில் சிறப்பாகவும் பெருவாரியாகவும் சாகுபடி செய்யப்படுவதைக் கண்டறிந்தது. அதனால், உத்தேசிக்கப்பட்ட தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தை திருச்சி மாவட்டத்தில் அமைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மாநில அளவில் பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் 1983-84 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு உள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் தமிழ்நாடு வேளாண்மைத் துறையும் தோட்டக்கலைத் துறையும் இணைந்து இத்திட்டத்தைச் செயலாற்றுகின்றன. ஒவ்வொரு வாரமும் 7,200 மையங்களில் பூச்சி நோய்க் கண்காணிப்பு நடைபெற்று விவரங்கள் சேகரிக்கப்பட்டு, பூச்சி நோய்களைக் குறித்து முன்னறிவிப்புச் செய்யும் ஒருமுறை செயல்பெற்று வருகிறது. இதை மேலும் திறம்பட நடத்த ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத் தலைமையிடத்திலும் வானிலை மையங்கள் ஒரு வேளாண் அலுவலர் தலைமையில் நிறுவப்பட வேண்டும். வானிலை மையத் தகவல்கொண்டு பூச்சி நோய்கள் வருவதை முன்னறிவிப்பு செய்வதற்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதனால், தேவையற்ற அளவில் பூச்சி மருந்துகளை உபயோகிப்பது தவிர்ப்பதோடு, சுற்றுப்புறச் சூழ்நிலை பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம்.

கரிசல் மண்ணில் மானாவாரி சாகுபடிக்கு அனைத்து வேளாண்மை விஞ்ஞான நுட்பங்களை விவசாயிகளுக்கு மாநில அரசும், மத்திய அரசும் அளித்துள்ளன. ஆனால், செம்மண் மானாவாரி சாகுபடிக்கு எந்தவிதமான விஞ்ஞான நுட்பங்களும் இதுவரை இல்லை. தமிழ்நாட்டில் சுமார் 60 சதவிகிதத்திற்கு மேல் செம்மண் நிலங்களே உள்ளன. அதனால், செம்மண் மானாவாரி சாகுபடிக்கு ஓர் ஆராய்ச்சி நிலையத்தைத் தமிழ்நாட்டில், குறிப்பாக சேலம் மாவட்டத்தில் ஆரம்பிக்கலாம். சேலம் மாவட்டத்தில் 75 சதவிகிதத்திற்கு மேல் செம்மண் நிலங்களே உள்ளன.

விரிவாக்கம்

'கே.வி.கே' எனப்படும் 'கிருஷி விஞ்ஞான் கேந்திரா' - அதாவது வேளாண்மை அறிவியல் நிலையம் உழவர் பெருமக்களுக்குத் தேவையான ஆராய்ச்சிக் கண்டுபிடிப்பின் தகவல்களையும், பயிற்சிகளையும் அளித்து சிறந்த சேவை செய்கின்றது. இதனால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கே.வி.கே. நிறுவப்பட வேண்டும். இந்த 'கே.வி.கே' வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள் நடத்த ஒப்புதல் அளிக்கப்பட வேண்டும்.

ஏனென்றால், வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில்தான் பல புலங்களின் ஆராய்ச்சியும் விஞ்ஞானிகளின் சேவையும் மிகுந்து இருக்கின்றன. வேளாண்மை தொழில் நுட்பங்கள் உழவர்களுக்கு விரைவாகச் சென்றடைய தகவல் தொடர்பு வழிமுறைகளை மேம்படுத்த வேண்டும். தொலைக்காட்சி வாயிலாக ஒலி, ஒளிபரப்பு, வீடியோ நாடாக்கள் தயாரிக்கப்பட வேண்டும். இதற்காக வேளாண்மைப் பல்கலைக் கழகங்களுக்கு இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் நிதி உதவி அளிக்க வேண்டும். முன்னேற்றப் பண்ணைத் தொழில் நுட்பங்களை வழங்கவும் உழவர்களுக்குத் தொழில் திறனை பயிற்றுவிக்கவும் ஒவ்வொரு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள கல்லூரிகளில் தகவல் தொடர்பு மையங்கள் அமைக்க நிதி உதவி செய்திட வேண்டும்.

தமிழ்நாட்டு விவசாயிகள் மட்டுமல்ல; இந்திய விவசாயிகள், இந்தியப் பிரதமர் மாண்புமிகு வி.பி.சிங் அவர்களையும், துணைப் பிரதமராகிய தங்களையும் இன்றைய விவசாயிகள் நம்பிக்கை நட்சத்திரமாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து நான் எடுத்து வைத்துள்ள கருத்துக்களின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

—14.3.1990 அன்று, புதுடில்லியில் மாண்புமிகு துணைப்பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்திய வேளாண்மை வளர்ச்சிக் கழகக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

TANMAG

தொலைபேசி: 7036
7037
7038
தந்தி: ''டேன்மாக்''
டெலக்ஸ்: 450-223

தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)

5/53, ஓமலூர் மெயின் ரோடு
ஜாகீர் அம்மாபாளையம்,
சேலம் - 636 302

கச்சா மேக்னசைட்,
சூடேற்றிச் சுத்தம் செய்யப்பட்ட

டெட்பர்ண்ட் மேக்னசைட்
மிதமாகச் சூடேற்றப்பட்ட

கால்சியண்டு மேக்னசைட்
போன்றவைகளின் தேவைக்கு
எங்களை அணுகவும்

DIPR/526/MS/90/MCS

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தேர்வாணையத்தால் 1990-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ஆம் நாள், தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தமிழ்நாடு ஆவணகாப்பகத்தில் உதவிப் பதிப்பாசிரியர் பதவிக்கு நேரடி நியமனத்திற்காக நடத்தப்பட்ட சுருக்கப் பட்டியல் தேர்வு முடிவின் அடிப்படையில், தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்ப தாரர்களின் பதிவு எண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு, சென்னை-600 002, அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

35	36	38	57	67	68	74
79	81	92	94	111	112	

DIPR/651/MS/90/AC

செயலாளர்

தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் டிபிடி 82 கிருட்டிணகிரி - 635002

"ஆரோக்கியமான வாழ்விற்கு

ஆவின் பால்

பால் உப பொருட்களை வாங்கி உபயோகியுங்கள்"

தருமபுரி மாவட்டத்தில் மேன்மேலும் தொழில் வளம் பெருகி நலிவுற்ற மக்கள் மேம்பட எங்களது இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

கிராமப்புறத் தொழில் வளம் பெருக்கப்பாடுபடும்

தருமபுரி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம், கிருட்டிணகிரி-2

டாக்டர் ஆர். சாலமோன், பி.வி.எஸ்.சி., நிர்வாக இயக்குநர் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

கே. அலாவுதீன் I.A.S. மாவட்ட ஆட்சித் தலைவர்/ஒன்றியத் தலைவர்



வைகை நுண்புனல் மின் நிலையம்

மதுரை மாவட்டத்தில் ஆண்டி பட்டி வட்டத்தில்- மதுரையில் இருந்து சுமார் 70 கிலோமீட்டர் தொலைவில்- வைகை நுண்புனல் மின்திட்டம் அமைந்துள்ளது.

1958-ஆம் ஆண்டு, தமிழ்நாடு பொதுப்பணித்துறையால் வேளாண்மைக்காக வைகை ஆற்றின் குறுக்கே வைகை அணை கட்டப்பட்டது. மின் உற்பத்தி செய்வதற்காக 3.05 மீட்டர் விட்டமுள்ள இரண்டு நீர் அழுத்தக் குழாய்கள் அணை கட்டும்பொழுதே பதிக்கப்பட்டன. வைகை அணையில் நீரின் உயர்மட்ட அளவு 27.54 மீட்டராகும். இதுகாறும் இவ்வணையிலிருந்து வெளியேறும் நீரைக் கொண்டு வேளாண்மை மட்டுமே செய்யப்பட்டது. மின்சாரம் உற்பத்தி செய்யப்படவில்லை. இப்பொழுது கட்டி முடிக்கப்பட்டுள்ள நுண்புனல் மின் நிலையம், அணையிலிருந்து வெளியே செல்லும் நீரில் 1,400 கன அடியை மின்உற்பத்தி செய்யப் பயன்படுத்தும்.

இவ்வணையின் அடிவாரத்திலேயே அமைக்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையத்தில் மூன்று மெகாவாட் திறன் கொண்ட இரண்டு நுண் மின்உற்பத்திக் கலன்கள் நிறுவப்பட்டுள்ளன. மின்உற்பத்தி செய்த பிறகு வெளியேறும் நீர் மறுபடியும் வைகை ஆற்றிலேயே விடப்பட்டு வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படுகிறது. மூன்று மெகாவாட்திறன் கொண்ட இவ்விரண்டு உற்பத்திக் கலன்கள் மூலம் ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய 223 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் உற்பத்தி செய்யலாம் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. ஜப்பானிய "யென்" நாணயம் மூலம் "ஓவர்சீஸ் எகானாமிக் கோவாப்பரேசன் ஃபண்ட்" என்றழைக்கப்படும் (O'ECF) நிறுவனம் அளித்துள்ள கடன் வசதியினால் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இம்மின் நிலையத்திற்கான மின் உற்பத்திக் கலன்களை வழங்கி அதனை நிறுவுவதற்கான மேற்பார்வை உதவியையும் ஈந்தவர்கள் ஜப்பான் நாட்டின் டோயோ மென்கா கெஷா லிமிடெட் நிறுவனத்தினர் ஆவர். இந்தியாவில் இவர்களது பிரதிநிதிகள் சென்னையிலும், புதுடெல்லியிலும் உள்ள விர்கோ மார்க்கெட்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினர் ஆவர்.

இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 1987-ஆம் ஆண்டு ஜூன் மாதம் துவக்கப்பட்டு 1990-ம் ஆண்டு பிப்ரவரிமாதம் முடிக்கப்பட்டன. சோதனை ஓட்டம் மற்றும் ஆய்வுகளுக்குப் பிறகு இம்மின் நிலையம் 4.3.1990 அன்று மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

இம்மின்நிலையத்தின் உற்பத்தித் திறனாகிய ஆறுமெகாவாட் என்பது, சுமார் 8,000 குதிரைவேக சக்தி வாய்ந்த மோட்டார்களை இயக்கப் போதுமான சக்தியாகும். இந்த மின் கலங்கள் நீர் சக்தியைக் கொண்டு இயக்கப்பட்டு, மின்சாரம் 3,300 வோல்ட் மின் அழுத்தத்தில் உற்பத்தி செய்யப்பட்டு, பிறகு மின்மாற்றிகள் மூலம் 22,000 வோல்ட் உயர் மின் அழுத்தமாக அதிகரிக்கப்பட்டு ஆண்டிபட்டி உபமின்நிலையத்திற்குக் கம்பிகள் மூலம் அனுப்பப் படுகிறது.

பொதுவாக மின்உற்பத்தி செய்யும் புனல் மின் நிலையங்கள் உயர்ந்த மலைத்தொடர்களின் மத்தியிலோ அல்லது மலை அடிவாரங்களிலோ இருப்பதால், அதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரம் நீண்ட தொலைவில் உள்ள நகர்களுக்கும், நகர்ப்புறக் கிராமங்களுக்கும் மற்றும் மின்பளு அதிகம் உள்ள தொழில் நகரங்களுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட உபமின்நிலையங்கள் மூலம் எடுத்துச் செல்லப்படுவதால் அதிக பொருட் செலவும், மின் அழுத்தக்குறைவும் (Voltage Drop) ஏற்படுகிறது. இது சாதாரணமாக புனல் மின்திட்டங்களில் தவிர்க்க முடியாததொன்று.

ஆனால், இந்த நுண்புனல் மின்நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம் மின்நிலையத்திலிருந்து 22 கி.வோ. (22,000 வோல்ட்) விநியோகக் கம்பிகளின் மூலம் நேரடியாக சுமார் எட்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆண்டி பட்டி உபமின்நிலையத்திற்கு அனுப்பப்பட உள்ளதால் அதிலிருந்து அதன் சுற்றுப்புறங்களில் உள்ள வருசநாடு, சிலுக்குவார்பட்டி, குள்ளப்புரம், ஜெயமங்கலம், வடுகப் பட்டி, துலுக்கப்பட்டி, ஏ.புதுப்பட்டி, தேவதானப்பட்டி முதலான முப்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களும் ஊர்களும் அடங்கிய ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி வட்டங்களுக்கும் மின்அழுத்தக் குறைவற்ற மின்சாரம் விநியோகிக்கப்பட இயலும். மின்சார

சீக்கிரம் என் மகளுக்குத் திருமணம் செய்திருக்க முடியாது. கஷ்டப்பட்டு அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் தான் கல்யாணம் செய்திருக்க வேண்டும். ஏழைக் கூலி விவசாயி ஆகிய நான் கடன்காரன் ஆகாமல் என் ஒரே மகளுக்குத் திருமணம் செய்து வைத்துள்ளேன். என்னை இன்று சமுதாயத்தில் தலை நிமிர்ந்து நடக்கச் செய்திருக்கும் தமிழ்நாடு அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார் மகிழ்ச்சியுடன்.

தகவல்: எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்

சேலம் மாவட்டத்தில்...

சேலம் மாவட்டம் கொளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பூம்மணியூர் கிராமத்தில் வசிக்கும் விசாலாட்சி கூலிவேலை செய்து வருகிறார். இவர் வேலை செய்யும் இடத்தில் காந்தி என்ற வாலிபர் டிராக்டர் டிரைவராகப் பணிபுரிகிறார். காந்திக்கும், விசாலாட்சிக்கும் திருமணம் செய்ய ஏற்பாடாகியது. ஆனால் வறுமை காரணமாக, திருமணம் தள்ளிக் கொண்டே போனது. இந்த நிலையில், அரசின் திருமண உதவித்தொகை பெற ஊராட்சி ஒன்றிய ஆணையரையும், மாவட்ட சமூக நல அலுவலரையும் அணுகி ரூ.5,000 பெறுகின்றனர். திருமணம் இனிதே நடக்கிறது.

திருமணம் செய்து கொண்ட திருமதி விசாலாட்சி கூறும்போது, ''இந்தத் திருமண உதவித் தொகை கிடைக்காவிடில் நிச்சயமாக எங்கள் திருமணம் நடந்தே இருக்காது. எங்களைப்போன்ற ஏழைச் சமுதாயத்தில் திருமணத்திற்குத் தடையாக உள்ள பணச் சிக்கலை முதல்வரின் அருட்கொடைதான் நீக்கியுள்ளது. எங்களுக்கு வாழ்வு தந்த அரசுக்கு நாங்கள் என்றும் நன்றியுள்ளவர்களாக இருப்போம்'' என்றார்.

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் நாட்டாமங்கலம் கிராமத்தைச் சேர்ந்தவர் பிருந்தாவனம். இவரது தகப்பனார் ஒரு லாரி டிரைவர். பொருளாதாரத்தில் நசிந்துள்ள குடும்பம். பணம் இல்லாததால் பெண்ணின் திருமணம் தள்ளிக் கொண்டே போனது. இந்த நிலையில் தங்கராஜ் என்ற வாலிபருக்கும், பிருந்தாவனத்திற்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. உடன் கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி பிருந்தாவனத்தின் தகப்பனார் திருமண உதவித்தொகை பெற முயற்சிக்கிறார். விண்ணப்பம் கொடுத்த 15 நாளில் ரூ.5,000 கிடைக்கிறது. திருமணம் சிறப்பாக நடைபெறுகிறது.

இதுபற்றி திருமதி பிருந்தாவனமும், அவரது தகப்பனாரும் கூறும்போது, 'தமிழக அரசின் திருமண உதவித்தொகையான 5,000 ரூபாய் கிடைப்பதால், எங்களைப் போன்ற ஏழைக் குடும்பத்தில் தற்போது திருமணம் என்பது ஓர் பிரச்சினையாகவே தெரியவில்லை. அதுவும் திருமணத்திற்கு முன்பே இந்தத் தொகை கிடைப்பதால், கடன் வாங்கத் தேவையுமில்லை' என்று கூறினார்கள்.

கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் செக்கானூர் கிராமத்தைச் சார்ந்த பெண்மணி பஞ்சவர்ணம். வயது 25. தந்தை இல்லாதவர். தாயார் மட்டும்தான் இருக்கிறார். ஏழைக் குடும்பம். கூலிவேலை செய்துதான் வாழ்க்கை நடக்கிறது. இந்த நிலையில் நவப்பட்டி கிராமத்தைச் சார்ந்த இருசாகவுண்டர், பஞ்சவர்ணத்தைத் திருமணம் செய்துகொள்ள முன் வருகிறார்.

பஞ்சவர்ணம் தனது தாயாருடன் ஊராட்சி ஒன்றிய ஆணையரை அணுகி ரூ.5,000 உதவித்தொகை பெறுகிறார். உதவித் தொகை திருமணத்திற்கு முன்பே கிடைக்கிறது. இத்திருமணமும் இனிதாக நடைபெறுகிறது. ஏழைப் பெண் பிருந்தாவனம் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறார். அவரது இதயம் தமிழக அரசுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறது.

தகவல்: வை. புண்ணியமூர்த்தி
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
சேலம் மாவட்டம்

புது மணத் தம்பதிகள்

திருமதி ப.ராஜலெட்சுமி தன் கணவருடன்.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்...

கலப்புத் திருமணத் தம்பதியருக்கு உதவி

அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டத்தின்கீழ் கலப்புத் திருமணத் தம்பதியரின் ஆண்டு வருமானம் ரூ.12,000 மிகையாகாமல் இருந்தால் (சென்ற ஆண்டு இது ரூ.6,000 ஆக இருந்தது) திருமணச் செலவுக்கென ரூ.1,000 ரொக்கமும், ரூ.4,000க்கு தேசிய சேமிப்புப் பத்திரமும் வழங்கப்படுகிறது. கலப்பு மணத் தம்பதியரின் குழந்தைகளுக்கு கல்வியில் ஒருசில சலுகைகள் வழங்கப்படுகின்றன. மருத்துவக் கல்லூரியில் 12 இடங்களும், இந்திய மருத்துவக் கல்லூரியில் 2 இடங்களும், இந்திய மருத்துவப் பட்டயப் படிப்பில் 1 இடமும், பொறியியற் கல்லூரியில் 5 இடங்களும் இவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளன.

சமுதாயத்தில் பெண்களின் தகுதியை உயர்த்தவும், படிக்கின்ற ஆர்வத்தை ஊக்குவிக்கவும் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு ரூ.5,000 நிதியுதவி அளிக்கும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்.

இத்திட்டத்தின் கீழ் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் 528 பேர்களுக்கு ரூ.26.4 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இம்மாவட்டத்தில் இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டுள்ளது. 528 பேர்களும் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர் ப. ராஜலெட்சுமி. தந்தை பரமேஸ்வரன், (56) தாயார் முத்துலெட்சுமி (52), இவர்களுடன் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். இவருடைய தந்தை சமையல் தொழில் புரிந்து வருகிறார். இவருடைய கணவர், ஸ்ரீவைகுண்டத்தில் சுக்குக் காபிக் கடை வைத்துள்ளார்''. இத்திட்டத்தை அறிமுகப்படுத்தி எங்களுடைய மகளின் வாழ்க்கை அமைய, பண உதவி செய்த முதல்வர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டனர் ராஜலட்சுமியின் பெற்றோர்கள்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்ற கே.கோமதியின் தந்தை புகையிலை வியாபாரம் செய்து வந்தவர் தற்போது உடல்நிலை சரியில்லாதவர். இவருடைய அண்ணன் கொல்லத்தில் உள்ள பிள்ளையார் கோவிலில் உதவியாளராகப் பணிபுரிகிறார். இவரது மிகக் குறைந்த வருமானத்தைக் கொண்டுதான் குடும்பம் நடத்தப்படுகிறது.

இவரது தாயார், இந்தத் திருமணம் நடைபெறுவதற்கு 15 நாட்களுக்கு முன்பாக விண்ணப்பித்து, குறித்த காலத்தில் பணம் கிடைக்கப் பெற்றுத் திருமணம் நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்.

''இத்திட்டமானது, சாதியை வைத்துப் பார்க்காமல், வருமானத்தை வைத்துப் பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதால்தான், எங்களைப் போன்ற ஏழ்மையான குடும்பங்கள் பயன்பெறுகின்றன'' என்று மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் குறிப்பிட்டுள்ளார் இவர்.

திருமதி கே.கோமதி தன் கணவருடன்.

தகவல்: எஸ்.எம். பஷீர்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி மாவட்டம்

யாட்டு அரங்கம் அமைக்க 1984-இல் தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியது. இத்திட்டமும் இப்போதுதான் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ரூ.45 இலட்சம் இதன் மதிப்பீடு. ஒரே நேரத்தில் 7,000 பேர்கள் அமர்ந்து விளையாட்டைப் பார்க்க ஏதுவாக இந்த உள் விளையாட்டு அரங்கம் காந்தி விளையாட்டுத் திடலிலேயே அமைக்கப்படுகிறது. இந்த விளையாட்டு அரங்கிலேயே விளையாட்டு வீரர்கள் தங்கும் அறைகளும் கட்டப்படுகின்றன.

புதிய விமான நிலையம்

சேலம் மாவட்டத்தில் வாணிபம் சிறந்து விளங்குவதோடு, கைத்தறித் துணிகள் ஏற்றுமதியும் பெருமளவில் நடப்பதாலும், குச்சிக்கிழங்கு மாவு தயாரித்தல், நிலக்கடலை உற்பத்தி ஆகியவற்றில் முன் நிற்பதாலும், சேலம் இரும்பாலை போன்ற பெரிய நிறுவனங்கள் அமைந்துள்ளதாலும் இம்மாவட்டத்திற்கு விமான நிலையம் அவசியம் என அரசு முடிவு எடுத்து, அதற்கான அனுமதி 12.5.88லேயே வழங்கப்பட்டது. இந்த விமான நிலையம் அமைக்கும் பணியும் தற்போதுதான் செயல்படுத்தப்படுகிறது.

விமான நிலையம், சேலம் நகரிலிருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் ஓமலூர் அருகில், காமலாபுரம் என்ற இடத்தில் ரூ.75 இலட்சம் செலவில் அமைக்கப்படவுள்ளது. தேவையான 49.28 எக்டேர் நிலம் தேசிய விமான தள நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புதிய மருத்துவக் கல்லூரி

சேலம் மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஏற்கப்பட்டு, கல்லூரியை உருவாக்க அரசு 23.4.86இல் அனுமதி அளித்து உள்ளது. சேலம் இரும்பாலை அருகில் 150 ஏக்கர் நிலப்பரப்பில் மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் உருவாக்கரூ.981.59 இலட்சத்திற்குத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. அரசு முதற்கட்டமாக ரூ.352.45 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

1985-86 முதல், ஆண்டு ஒன்றுக்கு 75 மாணவர்கள் இக்கல்லூரியில் சேர்த்துக்கொள்ளத் தேர்வு செய்யப்பட்டனர். கட்டடங்கள் முடியும் வரை சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கை மருத்துவக் கல்லூரிகளில் கல்லூரிக்கு தலா 25 மாணவர்கள் வீதம், பயின்று வருகின்றனர். கல்லூரிக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டவுடன் மாணவர்கள் சேர்க்கப்பட வேண்டிய எண்ணிக்கை 100 ஆக உயர்த்தப்படும்.

புதிய குடிநீர் வழங்கும் திட்டம்

மேட்டூரிலிருந்து ஆத்தூருக்கும் மற்றும் இதர 11 பேரூராட்சிகள் மற்றும் 264 வழியோரக் கிராமங்களுக்கும், சேலம் நகருக்கும், உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் வழங்க மாபெரும் திட்டம் ரூ.37.68 கோடி செலவில் தயாரிக்கப்பட்டுப் பணிகள் துரிதமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சேலம், தூரங்கலம், ஆத்தூர் நகராட்சிகள், மேச்சேரி, ஓமலூர், கருப்பூர், கன்னங்குறிச்சி, அயோத்தியா பட்டினம், வாழப்பாடி, ஏத்தாப்பூர், பெத்த நாயக்கன் பாளையம், நரசிங்கபுரம் ஆகிய 9 பேரூராட்சிகள் உட்பட, மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை 9 ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த 264 வழியோரக் கிராம மக்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுகிறார்கள். இத்திட்டத்தினால் பயன்பெறுவோர் எண்ணிக்கை 12,93,667. திட்ட மதிப்பீட்டின்படி ஒருவருக்கு ஆகும் செலவு ரூ.291.27. மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை 20 நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டம் 30.9.'91இல் முடிவடையும். தற்போது குழாய்கள் அமைக்கும் பணி மிக முனைப்பாக நடைபெற்று வருகிறது.

ரூ.45 இலட்சம் செலவில் சேலம் நகரில் அமைக்கப்பட்டுவரும் உள் விளையாட்டு அரங்கம்.



பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில்

மின்சாதனங்களைப் பழுதுபார்க்கும் பெண்டிர் திலகங்கள்!



சமுதாய, பொருளாதார நிலைகளில் பெண்கள் சம உரிமைகளோடு கல்வித்திறனும் தன்னம்பிக்கையும் பெற்று, நாட்டின் வளர்ச்சியில் முக்கியப் பங்கேற்கும் ஏற்றமுடையவர்களாய் உயரவேண்டும் என்கிற அடிப்படை நோக்கோடும், சமுதாயப் பொருளாதாரத் தடைகளால் மேலும் பள்ளிப்படிப்பைத் தொடர இயலாது இடையில் நிறுத்திவிட்டுப் பயனற்று முடங்கித்தவிக்கும் இளைஞர்களில் – குறிப்பாக – பெண்களின் அவல நிலையைப் போக்கும் எண்ணத்தோடும் பல்வேறு திட்டங்கள் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சுயதொழில் ஒன்றைக் கற்றுத் தேறுதல், சுய சம்பாத்தியம், தன்னம்பிக்கை - இவையே பெண்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் வழிமுறைகளாகும் என்பது தெளிவான உண்மை.

கிராமப்புற இளைஞர் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தினை, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் பயன்படுத்தி நடப்பு நிதியாண்டில் 385 இளைஞர்கள் சுயவேலைவாய்ப்புப் பயிற்சியுடன் தன்னம்பிக்கையும் பெற்றுள்ளனர். இதில் 285 இளம் பெண்கள் புது வாழ்வு பெற்றுள்ளனர்.

வறுமைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இப்பயிற்சி வகுப்புகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர். 13.1.89 முதல் 6 மாதகாலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறையின் வாயிலாக, காரைக்குடிக்கு அருகேயுள்ள சாக்கோட்டை கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து வறுமைக் கோட்டிற்கும் கீழ் நிலையில் வாழும், வறுமையின் காரணத்தால் பள்ளிப்படிப்பை இடையிலேயே நிறுத்திவிட்ட பெண்களில் 30 பேர்களைத் தேர்ந்தெடுத்து 15 பெண்களுக்குத் திரை அச்சுப் பயிற்சியும் (Screen Printing), 15 பெண்களுக்கு வீட்டு மின் சாதனங்களைப் பழுது பார்த்தல் மற்றும் பராமரிக்கும் பயிற்சியும் வழங்கப்பட்டன. இந்த இரண்டு பயிற்சிகளிலும் ஈடுபட்ட ஒவ்வொரு மாணவிக்கும் ரூ.250/- மானியத்தொகையாக மாதந்தோறும் வழங்கப்பட்டது. (ஒவ்வொரு மாணவியும் இந்தத்தொகையில் மாதந்தோறும் ரூ.100/-ஐ வங்கிச் சேமிப்பில் சேமித்துள்ளது குறிப்பிடத்தக்கது).

திரை அச்சுப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்ட மாணவியரில் சிலர் 6வது வகுப்புகூட படிக்காதவர்கள்.

மின்சாரப் பயிற்சியில் சேர்ந்த பெண்கள் சிலரின் வீடுகள் மின் வசதியில்லாதவை. மேலும் மின்சாரம் என்றாலே பயந்து நடுங்கும் சமுதாயத்தில், பெண்கள் துணிச்சலுடன் இன்று மின் விசிறி, மின் விளக்கு, மாவரைக்கும் எந்திரம், தண்ணீர் இறைக்கும் எந்திரம் போன்ற மின் சாதனங்களை மட்டுமின்றி, விளக்குக் கம்பத்தில் ஏறிப்பழுது பார்க்கும்

அளவிற்குத் திறனும் பெற்றுள்ளனர் என்றால் அதற்குக் காரணம் முறை யாக நடத்தப்பட்ட 'டிரைசெம்' பயிற்சி வகுப்புகளேயாகும்.

மேலும் பல்வேறுதுறை வல்லு நர்கள் வாயிலாகக் கலந்துரையாடல், வங்கிகளுக்குச் சென்று பணம் போடுதல், பணம் எடுத்தல், விலை நிர்ணயம், வெளிச்சந்தையில் தர நிர்ணயம் செய்தல், ஆய்வு செய்தல் போன்ற பயிற்சிகளும்; அருகிலுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று காண்பித்தல் ஆகிய பணிகளும் செயல்படுத்தப் பட்டுள்ளன. முதலுதவி வகுப்பு களும் ஒருவாரகாலம் நடத்தப்பெற்றன.

திரை அச்சுத்தொழில் பயிற்சி பெற்றுள்ள 15 பெண்களும் அரசின் மானியத்துடன் (தலா ரூ.2,000/-) வங்கிக் கடனுதவியும் பெற்று "சுப மங்கலா திரை அச்சுத்தொழில் நிறுவனம்" என்ற நிறுவனத்தைக் காரைக்குடியில் தொடங்கிட முடிவு செய்து செயல்படுத்தி வருகின்றனர். "ரூ.500/- முதலீட்டில் ரூ.50 ஆயிரம் வரை திரை அச்சுகளை உருவாக்குவோம்" என்று நம்பிக்கை யுடன் கூறுகின்றனர்.

வீட்டு மின்சாதனங்களைப் பழுது பார்க்கும் பயிற்சி பெற்ற பெண்கள் அருகிலுள்ள கோட்டையூர், கானாடு காத்தான், புதுவயல் போன்ற பேரு ராட்சிகளிலும், அரியக்குடி போன்ற கிராமங்களிலும் அரசு மானியத் துடன் வங்கிக் கடனுதவி பெற்று, தொழில்களைத் தொடங்க முன்வந் துள்ளனர்.

ஜனவரித் திங்கள் 16-ஆம் நாள் காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக அரங்கில் நடைபெற்ற, டிரை செம் பயிற்சிபெற்ற மாணவியருக்குச் சான்றிதழ்களும், தொழில் உப கரணங்களும் வழங்கும் விழாவில் கலந்து கொண்ட பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு அ.இளங்கோவன் இ.ஆ.ப., அவர்கள் பேசும்போது, "285 பெண்கள் உட்பட 385 இளைஞர்களுக்குக் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதி ஆண்டில் இதற்கென ரூ.9.35 இலட்சம் செலவு செய்யப் பட்டுள்ளது.

"மேலும் வரும் நிதி ஆண்டில் சுமார் ரூ.22.30 இலட்சம் செலவில் கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயிற்சிகள் அளிக்க அரசின் அனுமதியை வேண்டியுள்ளோம். அதில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறையின் வாயிலாக 60 பெண் களுக்குப் பயிற்சி அளிக்க அனுமதி வழங்கப்படும். மேலும் ஒரே நேரத் தில் 200 பேர், பயிற்சிபெறும் வகையில் திருக்கோட்டியூரில் சிறிய பயிற்சி மையம் ஒன்று ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கிட அரசிடம் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள பெண்களின் மேம்பாட்டிற்கெனப் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகின்றது. அனைவரும் இத்திட்டங் களை முழுமையாகப் பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

அழகப்பா பல்கலைக்கழகத் துணை வேந்தர் திருமதி இராதாதியாகராசன் பேசும் போது "தமிழகத்துப் பெண் களைப் பொறுத்தவரை இந்நாட்கள் ஓர் மாபெரும் திருப்புமுனை. பெண்களின் மேம்பாட்டிற்கெனத் திட்டங்களை அடுக்கடுக்காய்க் கொணரும் தமிழக அரசுக்கு மன மார்ந்த நன்றிகள் பல." என்று தெரிவித்தார்.

முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சை.வே.சிட்டிபாபு, பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் திரு எஸ்.தியாகராசன் ஆகியோர் இவ்விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

கிராமப்புற இளைஞர் சுயவேலை வாய்ப்புத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றுள்ள மாணவியர் 30 பேர் களுக்குப் பயிற்சிச் சான்றிதழ்களும், ரூ.500/- மதிப்புள்ள தொழில் உப கரணங்களும் அரசின் சார்பில் வழங்கப்பட்டன.

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் செயல் படுத்தப்பட்டுவரும் பல்வேறு திட்டங் களில் ஒன்றான கிராமப்புற இளைஞர் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பயனடைந்த 30 பெண்களின் வாழ்க்கை சமுதாயத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தொகுப்பு:
துரை.தாமரைச்செல்வம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.



குழந்தைகளுக்கான ஒரு குட்டிக்காடு

அது ஒரு பயங்கரமான காடு அல்ல; அழகான காடு; அமைதி யான காடு!

அதோ, ஒரு சிறுவன் சிங்கத்தின் வாயினுள் கையை விட்டுக் கொண்டு தைரியமாக நிற்கிறான்.

ஒரு சிறுமி, வரிக்குதிரையின் வாலைத் தொட்டுப் பார்க்கிறாள்.

சிங்கமோ, வரிக்குதிரையோ அவர்களை ஒன்றும் செய்யவில்லை. அவற்றுக்கு உயிர் இருந்தால்தானே, அவை ஏதாவது செய்யும்? அவை தான் பொம்மைகளாயிற்றே!

குழந்தைகளைக் கவரும் இந்தக் குட்டிக்காடு எங்கே இருக்கிறது?

சென்னைக்கு அருகில் உள்ள, வி.ஜி.பி. தங்கக் கடற்கரையில் தான்!

அதோ, பச்சைக் கம்பளம் விரித் தாற் போன்று பசும்புல் தரை, வருவோரை வரவேற்பது போல, வண்ணமலர்கள் காற்றில் அசைந் தாடுகின்றன. அந்த இடத்தில் நடுப் பகுதியில் காட்சியளிக்கிறது, பண்டித ஜவகர்லால் நேருவின் திருவுருவச் சிலை. அதுதான், நேரு பூங்கா.

இந்தப் பூங்காவை அடுத்து, மலைக் குகையினுள் நுழைந்து உள்ளே போய் வெளியே பார்க் கிறோம். நம் கண்முன் காட்சியளிக் கிறது, அமைதி மலை (Peace Mountain).

அங்கே சிறிய மலை ஒன்று தெரிகிறது. அதையொட்டி சிற்றாறு ஓடுகிறது. அந்த ஆற்றில் குதிரைகளுடன் உள்ள வீரன் ஒருவன் காட்சி யளிப்பது போன்ற சிற்பம் கண்ணைக் கவர்கிறது. பெயருக் கேற்றாற் போலவே அது ஒரு அமைதி மலையாகவே காட்சியளிக் கிறது.

இன்னிசை, காற்றில் மிதந்து வரும் திசைநோக்கிப் போகிறோம். மிருகங்கள் சில ஒன்று சேர்ந்து இசைக் கருவிகளை மீட்டுகின்றன.

அந்த இசையில் மெய்ம்மறந்து நின்றுவிட்டனவோ வரிக்குதிரைகள்? ஆம். அழகிய வரிக்குதிரைகள் சுவருக்குப்பக்கத்தில் நின்று கொண்டி ருந்தன.

யானை இல்லாமல் ஒரு காடா? அங்கே யானையும் இருந்தது. அருகே புலியும், சிங்கமும் இருந்தன. இவை



யெல்லாம் யாரையும் ஒன்றும் செய்யவில்லை. எல்லாம் பொம்மைகளே! அவ்வளவு தத்ரூபமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குட்டிக் காட்டுக்கு வருபவர்கள் ஓர் அபூர்வக் காட்சியையும், ஒரு அரிய காட்சியையும் காணத் தவறமாட்டார்கள்.

அவைதாம், ஒன்று மீனும் தவளையும் முத்தமிடும் காட்சி, மற்றொன்று தாய்த்திருநாட்டின் காட்சி அமைப்பு.

அதோ, இரயில் வருகிறது, சற்று விலகி நில்லுங்கள்! ஆம். குட்டி யானை வடிவில் அமைக்கப்பட்ட, குழந்தைகள் உல்லாசமாகப் பயணம் செய்யும் குட்டி இரயில்தான் அது! அதில் குழந்தைகள் பயணம் செய்யும் போது, அவர்கள் முகத்தில்தான் எத்தனை மகிழ்ச்சி!

அண்ணல் காந்தியடிகளுக்கு ஒருவர் மூன்று குரங்குகள் உள்ள பொம்மையை அன்பளிப்பாகக் கொடுத்தாராம். தீயனவற்றைப் பேசாதே - தீயனவற்றைப் பார்க்காதே - தீயனவற்றைக் கேட்காதே என்கிற தத்துவத்தை உணர்த்துவதாகும் அது.

அதே மாதிரியான மூன்று குரங்குகள் பொம்மை, பெரிய அளவில், சற்று உயரமான இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. பொம்மையின் கீழே வாசகங்களும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மேற்கண்ட வாசகத்தைச் சற்று மாற்றி, 'நல்லதையே பேசுங்கள் - நல்லதையே பாருங்கள் - நல்லதையே கேளுங்கள்' என்று எழுதப்பட்டிருக்கிறது. இது குழந்தைகளை மட்டும் அல்ல, பெரியவர்களையும் கவரும் என்பதில் ஐயமில்லை.

பொய்க்கால் குதிரை ஆட்டம் பார்க்கலாமா? இந்தக் காட்டில் இதையும் பார்க்கலாம்.

ஒற்றைப் பனைமரம் ஒன்று ஓங்கி வளர்ந்திருக்கிறது. அதைச் சுற்றி உலக நாட்டுக் குழந்தைகள் வட்ட வடிவமாக நின்று கொண்டிருக்கிறார்கள். அண்ணாந்து பார்க்கிறோம். இயற்கையாக வளர்ந்துள்ள பனைமரம் போலவே இருக்கிறது. உலகக் குழந்தைகள் ஒன்று சேர்ந்து நிற்பது, ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக உள்ளது.

சிவப்பிந்தியர் ஒருவர் கையில் ஈட்டியுடன் நிற்பதைக் கண்டு யாரும் பயப்பட வேண்டாம். அவரைத் தாண்டி அப்பால் செல்கிறோம்.

ஒரு கரடி வலைகளுக்கு உள்ளே இருந்து, இப்படியும் அப்படியுமாகப் பார்க்கிறது. "ஆனந்த் ... ஆனந்த் ..." என்று ஒருவர் கூப்பிடுகிறார். உடனே ஓடிவந்து அவருக்குக் கை கொடுக்கிறது, கரடி.

ஆம். இப்போது நாம் வந்திருப்பது ஒரு 'மினி' உயிர்க்காட்சிச் சாலைக்கு!

இங்கே, காட்டுக்கோழி, காட்டு ஆடு, முயல், குரங்கு, மான், வெள்ளெலி, கிளி ஆகியவை உள்ளன.

'தாய்த் திருநாட்டை'க் காண்போமா?

முகப்பில் அசோகச் சக்கரம் காணப்படுகிறது.

தரையில் இந்திய வரைபடம் ஒன்று பெரிய அளவில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் இந்தியாவிலுள்ள மாநிலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதைப் பார்க்கும் போது, "இவ்வளவு பெரிய நாட்டிலா நாம் வாழ்கிறோம்?" என்கிற பிரமிப்பு ஏற்படுகிறது.

பச்சைப் பசேலென்ற புல் தரையின் மத்தியில் ஒரு அழகிய மண்டபம். அந்த மண்டபத்தில் ஒருமைப்பாட்டை உணர்த்தும் வாசகங்கள் கல்லில் செதுக்கப்பட்டுள்ளன.

பைபிள், திருக்குறள், பகவத் கீதை ஆகியவற்றின் வாசகங்களும், அண்ணல் காந்தியடிகள், மகாகவி பாரதியார் ஆகியோரின் பொன்மொழிகளும் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

அதோ, ஒரு பீரங்கி காட்சியளிக்கிறது. அந்தப் பீரங்கியில் ஒரு பக்கம் குருவி கூடு கட்டியிருக்கிறது. மறு பக்கம் சிலந்தி கூடு கட்டியிருக்கிறது; நெருப்புப் பிழம்பு பீரங்கி வாயிலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தால், இந்தக் குருவியும், சிலந்தியும் அங்கே கூடு கட்டியிருக்குமா? "உலகில் அமைதி தவழ வேண்டும்; போரையே விரும்பாத உலகம் வேண்டும்" என்பதைச் சொல்லாமல் சொல்கிறதல்லவா இந்தக் காட்சி?

சற்றுக் காலார நடந்து செல்கிறோம். அங்கே காட்சியளிக்கிறது தேவாலயம். பக்கத்தில் சிவன் கோயில். அதற்குப் பக்கத்தில் பள்ளி வாசல். நடு நாயகமாக இந்திய வரைபடத்தில் இந்தியத் தாய் காட்சியளிக்கிறாள். "இந்திய மக்கள் யாவரும் ஒன்றே" என்பதை உணர்த்தும் ஒப்பற்ற காட்சி அமைப்புகளாக விளங்குகின்றன இவை.

"சனநாயகம், எங்கு வேண்டுமாயினும் வளரும் செடியன்று. சமுதாயத்தில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளே சனநாயகத்தை அழிக்கின்ற கரையான்கள் ஆகும். ஆதலால், மக்களின் நல்வாழ்விற்கான திட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றைக் கொண்டதே உண்மையான சனநாயகம் ஆகும்."

— டாக்டர் அம்பேத்கார்

தஞ்சாவூரில் வீடுகள் எப்படி இருக்கும் என்பதைக் காட்டும் வண்ணம், ஒரு பழமையான வீட்டு அமைப்பையே உருவாக்கியிருக்கிறார்கள். வீட்டுக்குப் பின்னே கிணறு இருக்கிறது. அது வெறும் காட்சிக்குத்தானா என்று எட்டிப் பார்க்கிறோம். கிணற்றில் தண்ணீர் இருக்கிறது.

குழந்தைகளைக் குதூகலப்படுத்த, திருவள்ளுவர் அருவி, மினி இரயில், இராட்டினம், சிறுவர் பூங்கா, மந்திர ஜாலக் காட்சி. கழைக் கூத்தாடிகள் ஆடும் வீர சாகசக் காட்சிகள், கரக ஆட்டம், நடன நாடக நிகழ்ச்சிகள் எல்லாம் உண்டு இங்கே.

இந்தக் குட்டிக் காட்டில் இன்னும் என்னென்ன வரப்போகின்றன?

வி.ஜி.பி. நிறுவனங்களின் தலைவர் திரு. வி.ஜி. சந்தோஷம் அவர்கள் இது பற்றிக் கூறினார் -

"சுற்றுலாத் தலங்கள் வெறும் பொழுதுபோக்குக்கு மட்டுமில்லாமல், குழந்தைகளுக்குக் கல்வி-படிப்பினை தருவதாகவும் இருக்க வேண்டும்.

"தமிழ்நாடு அரசு, சுற்றுலாத் தலங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து, ஊக்கம் தந்து வருவதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

"குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். அதோ, அந்தக் குட்டி இரயிலில் வரும் குழந்தைகளின் முகத்தில் எத்தனை மகிழ்ச்சி பார்த்தீர்களா? இந்திய நாடு பெரிய நாடு என்பதை உணர்த்தவும், ஏழ்மையான நாடு என்கிற எண்ணத்தை மாற்றவும், குழந்தைகள் மத்தியிலே தன்னம்பிக்கை வளரவும் இந்தக் கானகம் உதவும் என்பது எங்கள் நம்பிக்கை.

"குழந்தைகளுக்கான இந்தக் கானகத்தில், இழுவை இரயில் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அழகிய குளத்தில் டால்பின்கள் புரியும் சாகசங்களும் குழந்தைகளை மகிழ்விக்கப் போகின்றன. அது மட்டுமல்ல, இந்த வளாகத்தில் 108 கால் மண்டபமும் உருவாகிக் கொண்டிருக்கிறது. மதுரையில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் போல இந்த மண்டபமும் அமையும். அங்கிருப்பது போல, இங்கும் ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு வகையான இசை ஒலிக்கும்

"ஆசியாவிலேயே பெரியது இந்தத் தங்கக் கடற்கரை. 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த வளாகத்தில் 700 பேர் பணிபுரிகிறார்கள்."

"பொதுவாக ஒரு நாளைக்கு 5,000க்கும் மேற்பட்டோர் இங்கே வருகை தருகிறார்கள். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் வருவது குறிப்பிடத்தக்கது.

"சுற்றுலாப் பயணிகளைக் கவரத் தக்க வகையிலே, கலை வல்லுநர்களைக் கொண்டு அழகிய வடிவமைப்புகள் கொண்ட காட்சிகளை உருவாக்கிக் கொண்டு வருகிறோம். உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணிகளைக் கவரத்தக்க வசதி மிக்க குடில்களும் இங்கே உள்ளன. பிரத்தியேகமாக, கடற்கரையோரத்திலேயே அமைக்கப்பட்ட 'கப்பற் குடில்' சுற்றுலாப் பயணிகளுக்காகவே வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்டது."

அலைகடலோரத்தில், கலையெழில் மிக்க இந்தக் கடற்கரையில் தன்னிகரற்று விளங்குகிறது, இந்தப் புதுமைக் கானகம்; மனத்துக்குப் புத்துணர்ச்சியையும், பூரிப்பையும் தரும் இந்த அழகிய கானகத்தைக் கண்டு களிப்போமா?

—பி.வி.கிரி

எங்களின் உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்

ப்ரோவிமி ப்ராடக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: பெங்களூர்

தொழிற்சாலை & அலுவலகம்:
3-எப், மில் ரோடு,
கோபிசெட்டிபாளையம் 638 476
தமிழ்நாடு

தொலைபேசி: 2593, 2493
2707 & 2059

**தந்தி: ப்ரோவிமி
டெலக்ஸ்: 08501-203
PROV IN

1. ப்ரோவிமி மினரல் மிக்சர்-கேட்டல்
2. ப்ரோவிமி மினரல் மிக்சர்-பவுல்ட்ரி
3. ப்ரோவிமி சால்ட்லிக்ஸ்
4. ஃபெர்ட்டிடோன்
5. பூஸ்ஃபோர்ட்
6. மில்க் பூஸ்டர் AD3
7. டாக்கிட்ஸ்
8. டாப்-அப்
9. மீன் குச்சித் தீவனம்
10. ஆட்டுக் குச்சித் தீவனம்
11. முயல் குச்சித் தீவனம்
12. இறால் குச்சித் தீவனம்
13. ப்ரோமேக்ஸ்-ஏ
14. ப்ரோவி-பி-ப்ளெண்ட்
15. ஸ்ட்ரெஸ்ஃப்ரீ 'சி' ஃபோர்ட் (வைட்டமின் 'சி')
16. ஹெர்போலின் - சிறந்த ஈரல் டானிக்
17. கே-ப்ரோ
18. விட்டாலைட்-M
19. B-ஃபிட் காம்ப்ளக்ஸ்

Estd. 1916 Phone : 6286

THE COONOOR CO-OPERATIVE URBAN BANK LIMITED,
COONOOR-2
Post Box No.15, Mount Road, Coonoor-643 102

(Awarded Shields for the years 1978-79, 1980-81, 1983-84 and 1988-89 for the best working Co-operative Urban Bank in Tamil Nadu).

APPROVED as bankers to the Coonoor Municipality and Panchayat Boards in Nilgiris and also permitted to collect pay bills and pension bills under an amendment to the Madras Treasury Code.

Paid-up Share Capital and Reserves	: Rs. 94.51 lakhs
Deposits Exceed	: Rs.510.26 lakhs
Amount of loans issued during the last Co-operative year	: Rs.583.58
No. of Savings bank accounts exceed	: 22,629

The bank offers 1 percent more than the interest offered by other banks for deposits of various types.

Dividend on Share Capital paid at 14 per cent as per the Co-operative Act.

Thiru. D. SIVARAJ, B.Sc., Special Officer. **Thiru. M.B. RAMAN,** B.Com., Secretary.

தமிழரசு
தமிழ் - மாதம் இருமுறை

சந்தா விவரம்

ஆண்டுச் சந்தா ரூ. 24.00
6 மாதச் சந்தா ரூ. 12.00

'தமிழரசு' — ஆங்கிலம்

ஆண்டுச் சந்தா ரூ. 12.00

6 மாதச் சந்தா ஏற்பதில்லை.

சந்தாத் தொகையை மணியார்டராகவோ, பாங்க் டிராஃப்ட் மூலமோ செலுத்தலாம்.

அனுப்பவேண்டிய முகவரி :

உதவி இயக்குநர்
'தமிழரசு' அலுவலகம்,
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

புத்தம் புதிய சைக்கிள்

அருணாசலம், தன் மகன் அரவிந்தனை மிகவும் செல்லமாக வளர்த்து வந்தார். அவன் எது கேட்டாலும் வாங்கித் தருவார். அப்படி வாங்கித் தரவில்லை என்றால் அவன் அன்று முழுக்க சாப்பிடமாட்டான். ஒரே அடம் பிடிப்பான்!

ஒரு நாள்.

காலை நேரம்.

வழக்கம் போல பள்ளிக்கூடம் போனான். அங்கே அவன் வகுப்பு மாணவன் தியாகு, அன்று புதிய சைக்கிளில் வந்திருந்தான். பத்தாம் வகுப்பு மாணவர்கள் எல்லாரும் ஒன்று கூடி அந்தச் சைக்கிளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். தியாகு, பெருமையாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"தியாகு! இந்தச் சைக்கிள் என்ன விலை?"

"ஆயிரத்து அறுநூறு ரூபாய்!"

"எங்கே வாங்னே...?"

"பிராட்வேயில்!"

"டேய்! ஏண்டா இந்தக் கலர்லே வாங்கின? சிவப்புக் கலரில் வாங்க வேண்டியதானே!"

"நானும் அந்தக் கலரிலே வாங்கத்தான் ஆசைப்பட்டேன். அப்பொழுது எந்தக் கடையிலும் சிவப்புக் கலரில் வண்டிகள் இல்லை!" இப்படி எல்லாரும் கேள்வி பதில்களாக மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருந்தனர்.

அரவிந்தனுக்கு ஒரே எரிச்சல்! "எந்தப் பொருளும் முதன் முதலாக நாம்தான் வாங்கி வந்து, பள்ளிக் கூடத்தில், எல்லாருக்கும் காண்பிப்போம்! இன்றோ, நம்மிடம் இல்லாத சைக்கிளை வாங்கி வந்து எல்லாரிடம் காட்டிப் பெருமையடித்துக் கொள்கிறானே! இதற்கு ஒரே வழி, இன்று மாலையே அப்பாவிடம் சொல்லி, ஒரு சிவப்புக் கலர் புத்தம் புதிய சைக்கிளை வாங்கிட வேண்டும்." என்று முடிவு செய்து கொண்டான்.

அன்று முழுவதும் அரவிந்தன் பாடங்களைக் கவனிக்கவேயில்லை. கவனம் எல்லாம் புத்தம் புதிய சைக்கிள் மீதே இருந்தது.

பள்ளிக் கூட நேரம் முடிந்தது. மற்ற மாணவர்கள் எல்லாம் விளையாடத் திடலுக்குப் போனார்கள். ஆனால் அரவிந்தன் மட்டும் வீட்டிற்கு ஓட்டமும் நடையுமாகப் போனான்.

"அம்மா, எனக்குப்புதுசா ஒரு சைக்கிள் வேணும்" என்று புத்தகப் பையைக் கீழே வைத்தான்.

"என்ன? சைக்கிளா? அதுக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேலே ஆகுமே!" தாய் சொன்னாள்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. எனக்கு சைக்கிள் தான் வேண்டும்! அதுவும் இப்பவே வேண்டும். சிவப்புக் கலர் சைக்கிள்! என்று அடம் பிடித்தான். ஆனால் அவர் தாயோ அவனைக் கண்டித்தாள்.

"அப்பாவிடம் சைக்கிள் கேட்டால், அம்மா அடிப்பாங்க! சைக்கிள் இல்லாம எப்படிப் பள்ளிக் கூடத்துக்குப் போவது? தியாகுவை மட்டம் தட்ட வேண்டும். புதிய சைக்கிளைக் காட்டிப் பெருமையடித்துக் கொள்ள வேண்டும்" என்று எண்ணினான் அரவிந்தன்.

மா.தா. ஸ்ரீதர்
பத்தாம் வகுப்பு 'சி' பிரிவு,
இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளி (தெற்கு),
சென்னை-600 017.

மறுபடியும் அம்மாவிடம் போய், "அம்மா, அம்மா! இந்த ஒரு தடவை மட்டும் அப்பாவிடம் சொல்லி எனக்கு ஒரு சிவப்புக் கலர் சைக்கிளை வாங்கித் தரச் சொல்லுங்க அம்மா!" என்றான். அதற்கு அவன் அம்மா சம்மதம் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம் குடும்ப நிலைமை அப்படி இருந்தது.



நுரைகளும் அலைகளும்

ஆசிரியர்: ய. மணிகண்டன்,
வெளியீடு: பூவரசு பதிப்பகம்,
19 அப்பா தெரு, மேற்கு மாம்பலம்,
சென்னை-33

விலை: ரூ.3.00 பக்கம்: 24

நட்சத்திரங்கள், முகில்கள் என இயற்கைப் படைப்புகள் குறித்துத் தீட்டப்பட்ட வசன கவிதை மலர்களை ஏந்திவரும் மலர்க்கூடை இந் நூல்;மரபுக் கவிதையின் ஆழம் இந்த வசன கவிதைகளிலும் காணப் படுகிறது. ஆசிரியரின் கற்பனை வளம் - நம்மை வியப்பில் ஆழ்த்தி மகிழ்விக்கிறது. பலமுறை படிக்கத் தூண்டுகிறது. ஆசிரியரின் சொல் லாட்சி சொக்க வைக்கிறது. மேலும் பல கட்டுரைகள் தீட்டி நூலை இன்னும் பெரிய அளவில் படைத்திருந்தால் நூலின் சிறப்பு அதிகரித் திருக்கும்.

காதல் தமிழ்

ஆசிரியர் : கருவூர் கன்னல்
வெளியீடு: 76, தெற்கு நரசிம்மபுரம்
கரூர் - 639 001.

விலை: ரூ.12/- பக்கம்:111

மரபுக் கவிதைகள் 54 கொண்ட கவிதைத் தொகுப்பு இந்நூல்.

ஒவ்வொரு கவிதையிலும், கவிஞரின் தமிழ்க் காதல் வெளிப் படுத்தப்படுகிறது.

பகுத்தறிவுக் கவிஞர் பாவேந்தர் தமிழைக் காதலியாகவே பாவித்துப் பாராட்டியிருக்கிறார். அந்த மரபில், இந்நூலாசிரியரும் வந்துள்ளார் என்பதைக் கவிதை நூல் தெரிவிக்கின்றது. காதலியிடம் பேசும் போதும் கூட, தமிழையே நினைக்கிறார்.

பத்திரிகை விளம்பரங்களில் மங்கையர்கள் மிகவும் மலிவாகச் சித்திரிக்கப்பட்டிருப்பதைச் சாடியிருப்பது பாராட்டுக்குரியது.

ஒவ்வொரு கவிதையிலும் உயிரோட்டம் உள்ளது. கவிதைகளில் காணப்படும் இனிமை, நயம், சொல் லாட்சி ஆகியவை நம்மைச் சொக்க வைக்கின்றன.

—தமிழ்ப்பித்தன்

என் பேராசிரியர் பெருந்தகை மு.வ.

ஆசிரியர்:
பேராசிரியர் சு.ந.சொக்கலிங்கம்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41, பி.சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை: ரூ.12/- பக்கம்: 120

டாக்டர். மு. வரதராசனார் அவர்களின் சிறப்பம்சங்களைக் குறித்து அவரது மாணவர் படைத்திருக்கும் நூல் இது.

பிறரை ஊக்குவிக்கும் பண்பு மு.வ. அவர்களிடம் குடி கொண்டிருந்ததைச் சான்றுகளுடன் தெரிவித்துள்ளார் நூலாசிரியர். அவரது அரும் பண்புகளைப் பட்டியலிட்டுக் காண்பித்துள்ளார்.

மு.வ. அவர்களின் வாழ்க்கைச் சுருக்கத்தையும் - அவரது நூல்களின் பட்டியலையும் . கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது.

மு.வ. அவர்களுடன் தொடர்பு கொண்ட நூலாசிரியர் தன்னைப் பற்றிய செய்திகளைக் குறைத்துக் கொண்டு மு.வ. குறித்து மேலும் பல சுவையான செய்திகளைச் சொல்லியிருக்கலாம்.

உழைப்போம் உயர்வோம்

ஆசிரியர் : கோ. குலோத்துங்கன்
வெளியீடு: குகன் பதிப்பகம்
210, சுந்தரராச பெருமாள் காலனி,
ஜவகர் நகர், சென்னை - 82

விலை: ரூ. 10 பக்கம்: 88

தொழிலாளர்கள் தொடர்பாக அரசு உருவாக்கியுள்ள சட்டங்கள் - அவற்றின் திருத்தங்கள் - அவற்றினால் ஏற்படும் நன்மைகள் ஆகியவற்றை நூலாசிரியர் தக்க விதத்தில் எழுதியுள்ளார். இந்தியத் தொழிற் சங்க வரலாறும் இடம் பெற்றுள்ளது.

பணிக்கொடை, இழப்பீட்டுச் சட்டம் ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. தொழில் - தொழிலாளர் தொடர்பான பல்வேறு அரிய தகவல்களும் இந்நூலில் செறிந்துள்ளன.

'ஊருக்குப் பெருமை' என்ற தலைப்பில் உள்ள கட்டுரையில், உழைப்பாளரின் பெருமை சான்று காட்டி விளக்கப்பட்டுள்ளது. நூலில் இடம்பெற்றுள்ள தகவல்கள் ஆசிரியரின் பேருழைப்பை எடுத்துச் சொல்கின்றன.

—எஸ்.எஸ். சுந்தரம்

உலகச் சிந்தனையாளர் பிளாட்டோ

ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்
வெளியீடு: குமரிப் பதிப்பகம்,
8, நீலா தெற்கு வீதி,
நாகப்பட்டினம் - 611 001.

விலை: ரூ.8.00 பக்கம்:90

அட்டையில் - 'உலகச் சிந்தனையாளர் பிளாட்டோ' என்றும், உள்ளே - 'பிளாட்டோவின் வாழ்வும் சிந்தனைகளும்' என்றும் பெயர் வைக்கப்பட்டுள்ள இந்த நூல், அளவில் சிறியதாக இருந்தாலும் நிறைந்த செய்திகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது.

சட்டத் துறை நூல்கள் சிலவற்றை எழுதிப்பழகிய இந்த நூலாசிரியர், இந்நூல் மூலம் வரலாற்றுத் துறைக்கு வருவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மொழி பெயர்ப்பு நூல் என்பதை இந்த நூலின் நடையே வெளிச்சம் போடுவதாக இருக்கிறது இருப்பினும் - 'ஏமாற்றம்' (Despair) 'நம்பிக்கை' (Optimism) 'முகமூடி'

சிறு சேமிப்புத் துறை



இந்த வரைபடம் உங்கள் வரிப் படம்...

குறைந்துவிட்டதே!

தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ.30,000/- வரை 100% வரி விலக்கு பெறுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டம்

வரிவிலக்கு

வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின்கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற

உங்கள் முதலீடு

தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/ 15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல் முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!

தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் **தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில்** ரூ.1000/- அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.

பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	— காண்டஸா கார்
1 முதல் பரிசு	— மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	— ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 மூன்றாவது பரிசுகள்	— கலர் டி.வி.
20 நான்காவது பரிசுகள்	— 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	— குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	— குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(அல்லது)
மாவட்ட சேமிப்பு அலுவலர்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குனர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

அதி நவீன பருத்தி வகைகள்



உங்கள் ஆடை அணிகள் பொலிவுடன் விளங்குவதில் உங்களுக்கு அதிக விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் — உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங் • பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA


சென்னை தொலைக்காட்சி நிலையம்
முழுநேர மண்டல ஒளிபரப்பு
25-3-1990


தமிழரசு
1-5-1990 ரூ.1

(Mask) என்றெல்லாம் ஆங்காங்கே அவசியமில்லாமல் தட்டுப்படும் ஆங்கிலச் சொற்களைத் தவிர்த்திருக்கலாம்.

பலவேறு நூல் ஆதாரங்களைக் காட்டி, மிக அருமையாக விளக்கியிருக்கிறார் நூலாசிரியர். மாணவருலகம் படித்துப் பயன் பெறத்தக்க மிக நல்ல முயற்சி.

ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

ஆசிரியர்: எஸ். அகஸ்தியர்

வெளியிட்டோர்: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட்,
41-பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098.

பக்கம்:64 விலை ரு. 6.00

தமிழிலக்கியத்தின் தொடக்கம் கனிநிகர் கவிதைகளாக மலர்ந்து, அதன்பின் கரடுமுரடான உரை நடையாக உருப்பெற்றது. நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரை தமிழகத்தில் - இன்னும் சொல்லப் போனால் இந்தியாவில், தமிழில் புதின இலக்கியத்தைத் தோற்றுவித்த பெருமை மாயூரம் வித்துவான் ச. வேதநாயகம் பிள்ளையினுடையதாகும்.

இதேபோல் - ஈழத்தில் தமிழிலக்கியத்தை முதன்முதல் உருவாக்கிய பெருமை ஜனாப் சித்தி லெப்பையினுடையதாகும்.

அப்படி இங்கே உருவான 'பிரதாப முதலியார் சரித்திரம்' —அங்கே உருவான 'அசன்பே சரித்திரம்' ஆகிய இலக்கியங்களின் கர்த்தாக்களை அவர்களுடைய தமிழ்த் தொண்டினை விரிவாக விளக்குவது மட்டுமல்ல; தமிழிலக்கியத்தின் அந்த முதல் வித்துக்களை ஒப்பாய்வு செய்வதே இந்த நூல்.

அரிய முயற்சி.

வலவனின் வண்ணச் சிறகுகள்

ஆசிரியர்: மு. வலவன்

வெளியிட்டோர்:
முத்தையன் பதிப்பகம்,
65, பெரிய தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

பக்கம்:214 விலை ரு.20

ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ள இனிய கவிதைகளின் தொகுப்பு நூல் இது. ஆசிரியர் ஓவியப் புலமையுடன் தமிழ்ப்புலமையும் பெற்றவர். எனவே, அத்தனையும் மரபுக் கவிதைகளாகவும், மனங் கவரும் சந்தக் கவிதைகளாகவும் இருப்பதில் வியப்பில்லை.

தெய்வ பக்திப் பாடல்கள் இதில் பல உண்டு. தமிழறிஞர்கள் புகழ் பாடும் கவிதைகளும் பொதிந்துள்ளன. அதே போல்- காதல் கவிதைகளையும், சிறுவர்க்கான பாடல்களையும், கவியரங்கப் பாடல்களையும் கூட இதில் இணைத்திருக்கிறார் நூலாசிரியர்.

கரும்பு நிகர் கவிதைத் தொகுப்பு.

—'சோழ ராஜா'

> **புத்தகம் வாங்கும் பழக்கம் வேண்டும்**
>
> நம்மவர் வீடுகளில் சமையலறை இருக்கும். பூஜை அறை இருக்கும். படுக்கை அறை இருக்கும். புத்தகம் வைப்பதற்கென்று ஒரு அறையோ, ஒரு இடமோ இராது. பிள்ளையார் மாடம் இருக்கும். அதற்குப் பக்கத்தில் பஞ்சாங்கம் இருக்கும். விநாயகர் அகவல் இருக்கும். அதற்குப் பக்கத்திலே பால்காரன் கணக்கிருக்கும். ஆங்கிலம், தமிழ் அகராதி, அட்லாஸ், சரித்திரப் புத்தகம் இவை இரா. வாங்குவதற்குப் பணமில்லை என்று குறை சொல்ல முடியாது. மற்றவற்றிற்குச் செலவு செய்வதில் ஒரு பகுதியை ஒதுக்கிப் புத்தகங்கள் வாங்குவதற்கென்று செலவிட வேண்டும்.
>
> —பேரறிஞர் அண்ணா

இந்திய நாட்டு நாடோடிக் கதைகள்

ஆசிரியர்: சுமதி நாராயணன்

வெளியீடு: முத்துமணி பதிப்பகம்,
8, முத்துக்கிருஷ்ணன் தெரு,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

விலை: ரு.13.50 பக்கம்: 140

நமது நாட்டில் பழங்காலந் தொட்டுச் சொல்லி வந்த கதைகளில் சிலவற்றைத் தொகுத்துக் கூறுகிறது இந்நூல்.

காலங்காலமாகக் கூறப்பட்டு வந்த இந்தக் கதைகள் படிக்கச் சுவையான அன்பு, பண்பு, வீரம், தியாகம் முதலான தன்மைகளை அறிவுறுத்தும் அற்புதக் கதைகள்.

இந்தக் கதைகள் கேட்க, படிக்க இனிக்கும்; குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை படித்து மகிழ வேண்டிய கதைகள். கதைகளுக்கேற்ற படங்களும் இடம் பெற்றுள்ளன இந்நூலில்.

இஸ்லாமிய நெறி

ஆசிரியர்: தி. தயானந்தன் பிரான்சிஸ்

வெளியீடு:
கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
த.பெ. எண்:501,
பூங்கா நகர், சென்னை-600 003.

விலை: ரு.14 பக்கம்: 68

மாபெரும் சமயமாகிய இஸ்லாத்தின் அடிப்படை உண்மைகளை இந்நூல் எடுத்தியம்புகிறது.

நபிகள் நாயகம் பற்றியும், இஸ்லாத்தின் அடித்தளம் பற்றியும், இஸ்லாமிய மத ஒழுக்கம் பற்றியும் இச்சிறு நூல் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றது. இஸ்லாமிய நெறி பற்றி அறிந்து கொள்வார்க்கு இந்நூல் ஒரு கையேடாகும்.

—பி.வி. கிரி

தொழிற்சாலைகளில் மின்சாரச் செலவைக் குறைப்பது எப்படி?

ஆசிரியர்: வாசன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
41பி, சிட்கோ எஸ்டேட்,
சென்னை-600 098

விலை: ரு.10.00 பக்கம்: 104

தொழிற்சாலைகளில் மின்சாரச் செலவினைக் குறைக்கப் பெரு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். வருமானத்தில் கணிசமான தொகை மின்கட்டணமாகப் போய்விடுவதே இதற்குக் காரணம். பலவேறு மின்துறை அறிஞர்களின் ஆய்வுகள், அனுபவங்கள், ஆலோசனைகள் இந்நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்பொருள் குறித்துத் தமிழில் இந்நூல் வெளியிடப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது.

—குமார்

அம்பேத்கார் அமுத மொழிகள்

''உத்தமமான ஒரு சமூகம், மாற்றங்களை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும். சமூகத்தின் ஒரு பகுதியில் ஏற்படும் மாற்றம், மற்றப் பகுதிகளிலும் பரவக் கூடியதாய் இருக்க வேண்டும். ஒரு உத்தமமான சமூக அமைப்பில், எல்லோர்க்கும் பொதுவான பல பாத்தியதைகள் இருக்க வேண்டும். மற்றவர்களுடன் சம்பந்தம் ஏற்படப் பல திறப்பட்ட மார்க்கங்களும் சந்தர்ப்பங்களும் இருக்க வேண்டும்.''

''இந்தியாவில் பல்லாயிரக்கணக்கான சாதிகளும், மூடத்தனங்களும் இருந்து கொண்டிருக்கும் நாள்வரைக்கும், நாம் ஏனைய நாடுகளின் முன்பாக, தலை நிமிர்ந்து வாழ இயலாது. வெட்கித் தலை குனிந்து தான் வாழ வேண்டும்''.

ஒரு நாடு, மற்றொரு நாட்டை அடிமைப் படுத்தி வைக்க எவ்வித உரிமையும் கிடையாது.

''தீண்டாமை, மதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல; பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. இது அடிமைத்தனத்தைக் காட்டிலும் மிகவும் மோசமானது.''

'' அறிவானது மனிதனுடைய வாழ்வின் அடித்தளம் ஆகும். ஆதலால், மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் ஆற்றலைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும்.

''துளி இரத்தமும் சிந்தாமல், மக்களின் சமூக, பொருளாதார வாழ்வில், புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தும் அரசுமுறையே, நல்ல ஜனநாயகம் ஆகும்.''

''நம்மை நாமே உயர்த்திக் கொள்ள வேண்டும். நாம் சுயமாக வாழ்வது எப்படி என்று கற்றுக் கொள்ள வேண்டும். தன்மானம் உடையவர்களாய் வாழ வேண்டும். நாமாக முயற்சி செய்து நமது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.. இவற்றைச் செய்தால், நாம் உயர்வது உறுதி.''

''அரசு, பெரும்பான்மையினரால் அமைக்கப்பட்டு சிறுபான்மையினரின் ஒத்துழைப்பையும், சம்மதத்தையும் பெற்று, நடைபெறுவதே சுதந்திரத்தின் அர்த்தம் ஆகும். அத்தகைய ஜனநாயகத்தை நான் வரவேற்பேன்.''

ஆயிரமாயிரம் ஆண்டு அடிமைகளாக, தன்மானத்தை இழந்து இருப்பதைக் காட்டிலும், அரை நிமிடம் வாழ்வாங்கு வாழ்ந்து அமரனாதல் சாலச் சிறந்ததாகும்.

''சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம்.''

''எல்லாச் சமூகங்களும் சில பயனற்ற விஷமத்தனமான பழக்க மூட்டைகளைச் சுமந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனால், அறிவு விளக்கம் பெற்ற சமூகங்கள் தமது பழக்க வழக்கங்களை ஆராய்ந்து, நல்லவைகளை ஒப்புக் கொண்டு, தீயவைகளை நிராகரித்து, முன்னேற முயல்கின்றன.''

பிறந்தவன் சாவான் என்பது இயற்கை. அதைக் கண்டு நான் பயப்படவா போகின்றேன்? ஆனால், சீரிய லட்சியமாகிய சுயமரியாதையை மேலும் வளர்ப்பதில் ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுதான் மனித வாழ்விற்கே சிறப்பாகும். நாம் அடிமைகள் அன்று; நாம் போர் வீரர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். சுயமரியாதை இல்லாமல், நாட்டுப்பற்று இல்லாமல், பற்றின்றி வாழ்வதை விட, சாவதே ஒரு வீரனுக்கு உகந்த வழியாகும்.



சென்னை, பெரம்பூர்த் தொகுதி, கன்னிகாபுரத்தில் சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு அமைச்சர்கள் திரு. கோ.சி. மணி, டாக்டர் பொன்முடி, திரு. எஸ். தங்கவேலு, தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் ஆகியோர் உடன் உள்ளனர் (14.4.1990)

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

சித்திரைத்திங்கள் - 18

மலர்:20 1-5-1990 இதழ்:21

இந்த இதழில்...

பகுத்தறிவுக் கவிஞன்
—தந்தை பெரியார் ... 2

நமக்குக் கிடைத்த ஷெல்லி!
—அறிஞர் அண்ணா ... 3

புதுவைக்குயில் புரட்சிக் குயில்
—முதல்வர் கலைஞர் ... 4

பாவேந்தர் நினைவு போற்றுவோம்!
—மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் ... 6

கவிதைப் பெரியார்
—கவிஞர் பொன்னிவளவன் 8

எனது நாடு
—பாவேந்தர் பாரதிதாசன் ... 9

பாவேந்தர் பார்வையில் பெண்மை
—டாக்டர் சு. சிவகாமசுந்தரி ... 10

முகவரியைத் தந்தவன்
—கவிஞர் அப்துல் ரகுமான் ... 12

புரட்சிப் பாவலரின் புதிய பார்வை
—புலவர் சா. மருதவாணன் ... 13

புயல் வேகக் கவிஞர்
—கவிஞர் குடியரசு ... 15

மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்க!
—கவிஞர் அரிமதி தென்னகன் ... 16

தமிழுள்ளம் தாயுள்ளம்
—கவிஞர் மன்னர் மன்னன் ... 17

சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகள் தொடக்கவிழா ... 33

இலவச அரிசி வழங்கு விழா 37

தூரிய விளக்கே!
—கவிஞர் அரசு மணிமேகலை ... 39

புதுநெறி நிலைநாட்டுவோம்!
—கவிஞர் பொன்னடியான் ...

சீர்திருத்தக் கவிஞர்
—மன்னை நாராயணசாமி ... 41

பாரதிதாசனின் தமிழியக்கம் ... 47
— தவத்திரு குன்றக்குடி அடிகளார்

அடுத்து வரும்

'தமிழரசு' இதழ்களிலும்

பாவேந்தர் குறித்த

எழுத்தோவியங்கள்

இடம் பெறும்.

பாவேந்தர் நூற்றாண்டுச் சிறப்பிதழ்

பகுத்தறிவுக் கவிஞன்

-தந்தை பெரியார்

பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துக்களை வெளிப்படுத்திய முதல் கவியும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு அடுத்து அவருக்கு ஈடாக வேறு எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும் பழமைக் கருத்துக்களைக் கொண்டவர்கள்தான்

இன்றைக்கு நம் நாட்டில் இவரோடு குறிப்பிடத்தக்க வேறு புலவர்கள் இருந்தார்கள் என்றோ, இருக்கின்றார்கள் என்றோ சொல்லுவதற்கு இல்லை.

அவர் புதுமைக் கருத்துக்களையும் புரட்சிக் கருத்துக்களையும் மக்கள் சமுதாயத்திற்குத் தேவையான சமதர்மக் கருத்துக்களையும் துணிந்து- வெளியிட்டுள்ளார்.

சுருங்கச் சொன்னால், அவர் போல் தீவிரமான கருத்துக்களை அவருக்கு முன்பும், பின்பும் எடுத்துச் சொன்னவர்கள் இன்னார் என்று - எடுத்துக்காட்ட ஆளே இல்லையே!

பாரதிதாசன் எந்த இடத்திலும் எந்தச் சந்தர்ப்பத்திலும்- பகுத்தறிவுக்குப் புறம்பான கருத்துக்களை எடுத்துப் பாட முற்படவே இல்லை. சமுதாய மாற்றத்திற்கான கருத்துக்களைத் துணிந்து கூறிய பெரும் புலவர் ஆவார். இன்றைக்குப் பகுத்தறிவாளர்களுக்கு எடுத்துச் சொல்லத்தக்க சாதனமாகப் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் அமைந்துள்ளன.

நமது மக்கள் இப்படிப்பட்டவர்க்குப் பாராட்டும், பெருமையும் அளிக்கவேண்டிய அளவுக்கு அளிக்காதது வருந்தத் தக்கதாகும். காரணம், அவர் பகுத்தறிவுவாதியானபடியால் அவருடைய பணிக்குக்

கிடைக்க வேண்டிய மதிப்புக் கிடைக்கவில்லை.

பாரதிதாசனைப் போன்று புதிய கருத்துக்களை எடுத்துச் சொல்லிப் பரப்ப ஆளே இல்லையே! பாரதிதாசன் போல நமது நாட்டில் புரட்சிப் புலவர்கள் தோன்றி இருந்திருப்பார்களேயானால், நமக்கு 2000, 3000 ஆண்டுகளாக இருந்து வரும் இழிதன்மை இருந்து வந்திருக்குமா?

(சிவகங்கை மன்னர் ராஜா துரைசிங்கம் நினைவுக் கல்லூரியில், 8.3.1973-இல் ஆற்றிய உரையிலிருந்து)

எவரின் தோள்கள்?

- பாவேந்தர்

நீரோடை நிலங்கிழிக்க, நெடும ரங்கள்
நிறைந்துபெருங் காடாகப், பெருவி லங்கு
நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக் கல்லின்
நெடுங்குன்றில் பிலஞ்சேரப், பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை அந்த நாளில்
புதுக்கியவர் யார்? அழகு நகருண் டாக்கி!

சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கியநல் வாய்க்காலும், வகைப்ப டுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்வி ளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?
கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக்
கருவியெலாம் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்றுகளைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போய்எடுக்க அடக்கியமூச் செவரின் மூச்சு?

நமக்குக் கிடைத்த ஷெல்லி!

—பேரறிஞர் அண்ணா

வானுலக வீதியிலே சுற்றி, தேவர் தம் வடிவழகைக் கண்டு கூறி வருபவரே கவிஞர், அஃதே கலை என்றிருந்த நிலை மாறி, கவி நம்முடனேயே இருப்பார், நமது உலகில்தான் உலவுவார், நாம் காண்பனவற்றையே காண்பார். ஆனால், அவைகளைப் பற்றி நாம் கூறத் தயங்குவோம் இயலாததால்; அவர் கூறுவார், அறிவுத் தெளிவால், கலைத்திறனால்; இந்தப் புரட்சியைச் செய்தார் பாரதிதாசன்.

புரட்சித் துறையில் ஈடுபட்டவர்கள் பெரிதும், துவக்கத்தில் பூவால் அர்ச்சிக்கப்படுவதில்லை. புன்மொழிகளையே வீசப்பெறுவர். அதிலும் மொழி வீசும் துறையிலே ஈடுபட்ட புலவர்கள் உலகிலே புத்தம் புதிய புரட்சியை ஒருவர் வெற்றிகரமாகச் செய்து வருவது கண்டால், பொச்சரிப்பின் விளைவாகப் புன்மொழி, மாரி போல் பொழியத்தானே செய்யும்?

பாரதிதாசன், இந்த மாரியைச் சட்டை செய்யவில்லை. புரட்சியில் ஈடுபட்டுள்ளவருக்கு இதற்கு நேரம் ஏது? போரிட்டார், போரிட்டார், போரிட்டுக் கொண்டே இருக்கிறார்! வென்றார், வெல்கிறார், வெற்றி பெற்றபடியே இருப்பார்!

அவர் பெற்ற வெற்றிகளிலே ஒன்று அவருடைய கவிதைகளை இன்று மக்கள் அறிந்து கொண்டார்கள். புரிந்து கொண்டார்கள், ரசிக்கிறார்கள், பயன் பெறுகிறார்கள்.

நாளைக்கு என்ன நடக்கும் என்பதை எண்ணும் போதுதான், "புரட்சிக் கவிஞரே பாரதிதாசன்; ஐயமில்லை" என்று அனைவரும் கூறமுடிகிறது. அவர் போர் முகாம் அமைத்து விட்டார்; போர் வீரர்களைக் கூட்டிவிட்டார். படைக்கலன்களும் தயார். முரசும் கொட்டி விட்டுக் கூப்பிடுகிறார்.

"கொலை வாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே".

என்று. அந்தக் குரல், காற்றில் மிதந்து வரும் கீதமாக மட்டும் இன்றி, கிண்கிணிச் சத்தத்தோடு இழைந்து வரும் கீதமொழியாக மட்டுமின்றி, கேட்போரின் வளைந்த முதுகை நிமிர்த்தி விடும் வீரக் குரலாகிவிட்டது! எனவே தான், நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார், நமக்கோர் ஷெல்லி கிடைத்து விட்டார், நமக்கு ஒரு கவிஞர் கிடைத்து விட்டார், அவர் நம்மோடு இருக்கிறார். நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார். நாம் வாழ வழி அமைக்கிறார். அவர் வாழ்க, அவர் திறன் ஓங்குக! அவர் வெல்க! அவர் வெற்றியினால் நமக்கு வெற்றி ஓங்குக! என்று மனமார நாம் கூறுகிறோம். நாம் மட்டுமா, நாடு கூறுகிறது.

புரட்சிக் கவிஞர் 55-ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டி 1946-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கவிஞர் மலரிலிருந்து.

நாட்டு மக்களுடைய இந்த மகிழ்ச்சியின் ஒரு சிறு அறிகுறியே இதுபோது கவிஞருக்கு அளிக்கப்படும் பொற்கிழி. இதிலே குவிந்துள்ள ஒவ்வோர் காசும் பேசக்கூடுமானால் மணிக்கணக்கில் பேசும் கவிஞரின் பெருமையை; அதனால் சமுதாயம் பெற்ற பெருமையை- பொற்காசுகள் பேசினாலும் கூட புரட்சிக் கவிஞரின் செவியில் அந்த ஒலி புகாது - எப்படிப் புகும்? அவருடைய செவியிலே ஆலைச்சங்கு, சுண்ணம் இடிக்கும் சுந்தரியின் பெருமூச்சு, பாட்டாளியின் குமுறல், பணமெனும் கொடி கட்டிய படகு வருமா என்று எதிர்பார்த்து ஏங்கும் ஏழையின் ஏக்க மொழி, எழில் ததும்ப இளமை ததும்ப உள்ள மங்கை மஞ்சத்தில் குறட்டை விடும் கிழ மணாளனைக் கண்டு கண்ணீர் விட்டுக் கதறும் ஒலி இவை புகுந்து, கண்களிலே அனலையும் புனலையும் கிளப்பி விட, "ஏடா! தம்பி! எடடா பேனா! கொண்டு வா மைக்கூடு; இந்தக் கொடுமைகளைக் களைந்தேயாக வேண்டும்; இன்றே களைந்தாக வேண்டும்" என்று முழக்கமிடுகிறார்! அந்த முழக்கம் இந்நாளில் நாம் பெற்ற கருவூலம்! அவர் நமக்கு அளித்த அழியாத செல்வம்; அவர் வாழ்க! வெல்க!

பாவேந்தர் அவர்களுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்கள் பொற்கிழி அளித்தல்

16)

பாவேந்தர் நினைவு போற்றுவோம்

மாண்புமிகு கல்வியமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்

தமிழ் மொழி மறுமலர்ச்சி - கவிதை எழுச்சி ஆகியவற்றை உருவாக்கியவர் என்ற தகுதியால் தமிழ் நாட்டின் வரலாற்றில் தமக்கென ஓர் அழியாத இடத்தை-நீங்காத புகழ் ஒளியைப் பெற்ற பெருமைக்குரியவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

கண் மூடிகளாக - கருத்துக் குருடர்களாக-தம்மையே இழிபிறவிகளாக எண்ணிக் கிடந்த ஏமாளிகளான தமிழ் மக்களை அறிவுக் கண் திறந்து காணச் செய்த கவிஞரின் - உணர்வுகள், முழக்கங்கள், பாட்டு வரிகள், பகுத்தறிவு விளக்கங்கள், சாதி சமய மூட நம்பிக்கைகளைச் சாடிய கேள்விக் கணைகள் - யாவும் இன்றும் நமது உள்ளங்களில் ஒலித்துக் கொண்டுள்ளன. தமிழன் என்று ஒருவன் வாழ்ந்திடும் காலம் வரை - அவை ஒலித்துக் கொண்டிருக்கும் தகுதியுடையன.

புரட்சிக் கவிஞரின் கவிதை - தமிழ் உள்ளளவும் வாழும்; அவர் உருவாக்கிய கவிதை மரபும் வாழும்! அவர் தம் வழி வழி வளரும் கவிஞர் தலைமுறையும் வளரும்.

ஆயினும், புரட்சிக் கவிஞர் ஊட்டிய உணர்வுகளை, வளர்த்த சிந்தனைகளை, வாழ்வித்த இனப்பற்றை, மலர்வித்த மொழி ஆர்வத்தை, வடித்த கற்பனையை, தொடுத்த உவமைகளை, தீட்டிய இயற்கையை, வழங்கிய செஞ்சொற்களை, முழங்கிய பாநடையை, அவரது கவிதையைச் சுவைப்பதாலன்றி வேறு வகையால் பெறுதல் இல்லை.

அப் பாவேந்தரின் நிலைபெற்ற தோற்றமே, அழியாத வடிவாம். புரட்சிக் கவிஞர் உயிர் புகுந்த ஓவியமே அந்தக் கவிதைகள் தாம்! அவை நம்மோடு வாழ்பவையே, நமக்காகப் பிறந்தவையே! அவையெல்லாம் நம்மினத்தின் வாழ்விற்காகத்தான்! நம்மை வாழவைப்பதற்காகத்தான்! எனவே, பாவேந்தர் இன்றும் வலம் வருகிறார், அவரது கவிதை வடிவில்! நம்மோடு உரையாடுகிறார், பாட்டு நடையில்! நமக்கு உணர்வூட்டுகிறார், அவற்றைப் படிக்கும் நிலையில்! ஆம்; அந்தக் கவிஞரின் க்விதைகளைப் போற்றிடும் கடமையைச் செய்வதிலேதான் - தமிழ் இனக் காப்புக்கு ஏற்ற அரண் கண்டவர்களாவோம் என்பதை நாம் மறத்தலாகாது.

அவரது நினைவு போற்றுங் கடமை தமிழர்க்கு எந்நாளும் உரியது எனினும், இந்நாளில் (ஏப்.29) நாடெங்கும் கொண்டாடுவது நமது கடமை. கவிஞரிடையே -'அரிமா' எனவும், புலவர்களிடையே 'தமிழ்க் களிறு' எனவும், பகுத்தறிவாளர்களிடையே -'ஏறு' எனவும் வலம் வந்த பாவேந்தரிடம் நான் பழகும் வாய்ப்புப் பெற்ற நாட்கள் நினைவிற்கு வருகின்றன.

1940-ஆம் ஆண்டு, நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டிருந்தேன். சிதம்பரத்தில் என் தந்தையார் ஒரு தொழில் நடத்திக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு நாள் புவனகிரி செல்லும் வழியில் - புரட்சிக் கவிஞர் எங்கள் இல்லம் வந்தார். அவரது புவனகிரி (பெருமாத்தூர்) நண்பர்கள் பலர் - என் தந்தையாரிடம் மதிப்புடன் பழகி வந்தனர். அவர்கள் என் தந்தையாரைப் பற்றிக் கூறியிருந்ததனால், கவிஞர் வந்தார். என் தந்தையார், அவரது தோற்றத்தைப் பார்த்தவுடனேயே - அவர் யார் என்பதைப் புரிந்துகொண்டு 'வாங்க, வாங்க, கவிஞரே!' என்று ஆர்வத்துடன் வரவேற்றார். பின்னர் இருவரும் - தன்மான இயக்கம் - இந்தி எதிர்ப்பு - முதலானவைபற்றி உரையாடிக் கொண்டிருந்தனர். பின்னர் உணவருந்தினர். எங்கள் இல்லம் என்பதால் சைவ உணவையும் (வேறு வழியில்லை என்று) மகிழ்ச்சியாகவே ஏற்றுக்கொண்டார். அப்பொழுதுதான் அவரை நெருங்கிக் கண்டேன். உணவு முடிந்ததும் சிகரெட் வாங்கிவரச் சொன்னார். வாங்கிவந்து கொடுத்தேன்! 'நீ என்ன படிக்கிறே?' என்றார். பல்கலைக் கழகத்தில் முதலாண்டு (இண்டர்மீடியட்) என்றேன். உடனே மகிழ்ச்சியோடு 'பலே பலே - அப்படித்தான் படி. அந்தப் பயல்களுக்கெல்லாம் நமது திறமையைக் காட்டணும் - நல்லா படி' என்று அன்போடு கூறினார். அதுவே அவரிடம் எனக்கு ஏற்பட்ட முதல் தொடர்பு.

அடுத்த ஆண்டு, திராவிட இயக்கச் சார்புடைய ஒரு வணிகர் மறைந்ததையொட்டி நடத்தப்பட்ட நீத்தார் நினைவு நாள் நிகழ்ச்சியில் அவர் தலைமை ஏற்றிட இசைந்து, சிதம்பரம் வந்தார். அந்த நிகழ்ச்சியில் பேசிய பலருள் நானும் ஒருவன். நான் ஓர் இளம் மாணவனாக இருந்து, தடையின்றி, தயக்கமின்றித் தொடர்ந்து பேசியது அவருக்கு ஒரு வகையில் வியப்பினை ஏற்படுத்தி இருந்தது.

பின்னர் பாவேந்தர் பேசுகையில், "ஏதோ மாணவன் அன்பழகன் பேசப் போகிறான் என்று சொன்னேன். பேச்சா இது - பேச்சு இப்படியா? மூச்சு விடக்கூட நேரம் வேண்டாமா?" என்று சொல்லிவிட்டு.

"என் நண்பர் கல்யாண சுந்தரம் (மணவழகனார்) தந்த கொள்கைப் பயிற்சி! இப்படித்தான் பிள்ளைகளை வளர்க்க வேண்டும். ஆமாம் - அப்படித்தான்" என்றார்.

அன்று கவிஞர் தங்கியிருந்த இடத்தில் அவருடன் இருந்து உரையாடி மகிழ்ந்தேன். அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலரைக் குறித்தும், தன்மானக் கொள்கைக்குள்ள ஆதரவு நிலை குறித்தும் ஆர்வத்தோடு கேட்டார். நான் அறிந்தவற்றைக் கூறினேன்.

பாடாத தேனீக்கள்,
உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு
பார்த்த துண்டோ?

அந்த ஆண்டில் - புதுச்சேரியில் சிறப்புடன் நடைபெற்று வந்த ஒரு தமிழ்ச் சங்கத்தில் கல்லூரி மாணவர்கட்கு எனக் கட்டுரைப் போட்டியும், பேச்சுப் போட்டியும் நடைபெற்றன. அதில் நானும் - அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் சிலரும் கலந்து கொண்டோம். பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள நான் சென்ற போது, புதுவை இயக்கத் தோழர் புவனகிரி இராமலிங்கம் அவர்களுடன் கவிஞர் இல்லம் சென்றேன். அன்பாக வரவேற்று என்னுடைய ஆர்வத்தை வாழ்த்தினார். அந்தப் போட்டிகளில் - பேச்சு - கட்டுரை இரண்டிலும் எனக்கு முதற் பரிசுகள் அறிவிக்கப்பட்டன. அதைக் கேட்டு - கவிஞர்க்குப் பெரு மகிழ்ச்சி; நண்பர்களிடம் எல்லாம் அதையே சொல்லிச் சொல்லி,'தன்மான இயக்கத்தவர் தரம் எப்படி? என்று கேட்டார்.

அடுத்த நாள் மாலை அங்கிருந்த பிரெஞ்சு ஆட்சியின் ஆளுநர் பரிசுகள் வழங்க இசைந்திருந்தார்; மாலை ஆறு மணிக்கு நிகழ்ச்சி. மாலை ஐந்து மணிக்குக் கவிஞருக்கு ஒரு திடீர் எண்ணம் ஏற்பட்டு 'நீ பூட்ஸ் (காலணி) போடாமல் கவர்னரிடம் சென்று பரிசு பெறுவது நன்றாக இராது; எனவே, உடனே சென்று பூட்ஸ் வாங்கி வர வேண்டும்' என்றார். நான் தயங்கினேன். அவரே என்னையும் அழைத்துக் கொண்டுகடைத் தெருவுக்குச் சென்றார். கடைகளில் ஏறி இறங்கி அளவு சரியாகப் பார்த்து வாங்கிக் கொண்டு திரும்புவதில், எப்படியோ காலம் தாழ்ந்து ஆறரை மணி அளவில்தான் பரிசளிப்பு நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு நான் போய்ச் சேர்ந்தேன்.

ஆளுநர் சிறிது நேரம் காத்திருந்துவிட்டு -'முதல் பரிசுகள் இரண்டும் பெறுகின்ற மாணவனே வந்து சேரவில்லையே'- என்று கேட்டுவிட்டுப் போய்விட்டார். எனக்கு ஏமாற்றம் ஏற்பட்டது என்றாலும் அதைவிட, அந்தச் சங்கத்தாருக்கு ஏமாற்றம் ஏற்படக்காரணமாகி விட்டோமே என்பதை எண்ணி வருந்தினேன்; பின்னர் கவிஞரைக் காணச் சென்றேன். அவரும் அதைக் கேட்டு வருந்தினார். ஆனால் உடனே ஆறுதலும் கூறி, ஊருக்கு அனுப்பிவைத்தார். புதுவைச் சங்கத்தாரும் பரிசுகளைத் தந்து வாழ்த்தி அனுப்பினர். இருபது ஆண்டுகளுக்குப் பின் - அப்பொழுது நான் எழுதிப் பரிசு பெற்ற கட்டுரையைக் கூட எனக்கு அவர்கள் அனுப்பி வைத்தனர் என்பதும் குறிப்பிட வேண்டியதாகும்!

கவிதைப் பெரியார்

கவியரசர் பொன்னிவளவன்

பாரதி
நேரசை
மானிடக்
தேனிடம்
கனலின்
அனலின்
தூக்கப்
ஆக்கிப்
இப்படி
செப்படி
நிமிர்ந்துநின்
அமர்ந்தவர்
ஒழிக்க
நாங்கள்
நீங்கள்
உம்கவித்
கைகட்டி
நிற்கவைத்
கற்க
உயிரே!
உயரலாம்
மனிதராய்ப்
கணிதமே!
எழுத்துநீர்;
அடிநீர்;
வல்லினம்
மூவினம்
பாவினம்-
கண்டிருக்
இனத்தை
மனத்தைத்

தாசனே!
நிரையசை
கவிக்கனா
இனிப்பாய்த்
துண்டு
கொழுந்தில்
படுக்கையில்
படைத்தீர்
அப்படி
வித்தைகள்
றெரிந்த
ஒருசிலர்!
முனைந்தீர்;
தமிழின்
எங்களை
திறனால்
நிற்க
தீரே;
வைத்தநீர்
தமிழின்
எனும்நிலை
பிறந்த
நாத்திகப்
அசைநீர்;
தொடைநீர்;
மெல்லினம்
கொண்டநம்
உமக்கொரு
கின்ற
மொழியைக்
தந்தீர்;

பாட்டுத்
நிலைதெரிந்
மனிதரே!
திகழ்ந்துநின்
கற்கண்
அல்லியின்
ஊக்கத்
அழகின்
எப்படி
செய்திருக்
நெருப்பே!
அடிமைத்
ஒழிக்க
அடிமைகள்;
அடிமைப்
உம்முன்
வைத்த
நியாயமா?
கவிதைப்
உயிரே!
உம்மால்
சிங்கமே!
புனிதமே!
சீர்நீர்;
பாநீர்!
இடையினம்
முத்தமிழ்த்
பாட்டுப்
கவிவிருந்
காப்பதே
மதிக்கின்

தலைவரே!
தவரே!
செந்தமிழ்த்
றவரே!
டானது;
குளிர்ச்சி;
துடிப்பு!
சிரிப்பு!
யெல்லாம்
கின்றீர்!
உம்முன்
தனத்தை
முடிந்ததா?
தமிழால்
படுத்தினீர்!
தமிழரைக்
கவிஞரே!
எங்களைக்
பெரியார்!
கவிதையால்
பிறந்தது!
கவிதைக்
எங்களின்
தளைநீர்;
என்றும்
என்னும்
தாய்க்குப்
பரம்பரை
ஞானியே!
கடன்எனும்
றேனே!

எனது நாடு

பாவேந்தர் பாரதிதாசன்

என்வருமைத் தேசம்
எழில்பா ரததேசம்
பொன்னும் பொருளும்
பொருந்தும் பழநாடு!

கங்கை பெருகும்;
கலகலென ஓசைவரும்!
அங்கு மணிப்பறவை
அத்தனையும் பண்பாடும்!

தூய இமயமலை
வானைத் தொடும்! சிந்து
பாயும் ஒருபால்!
பழமரங்கள் ஓங்கும்!

நதிகள் சமுத்திரத்தை
நண்ணும்! கரையில்
நிதிகள் கொழிக்கும்!
நிறைகப்பல் நீர்மிதக்கும்!

பூக்கள், மகரந்தம்,
பூந்தேன், புதியமணம்,
ஈக்கள் சதாகீதம்
என்னென்ன இன்பங்கள்!

வெள்ளைமலை போற்பசுக்கள்
வேண்டுமட்டும் பால்கொடுக்கும்!
அள்ளும் தயிர்நறுநெய்
ஆர்ந்து கிடக்குமிங்கே!

தென்றல் சிலிர்க்க வரும்
செவ்விளநீர் தித்திக்கும்!
மன்றலுறு தாமரைகள்
வாவியெலாம் பூத்திருக்கும்!

செந்நெல், கரும்பு,
செழும்பலா, தேன்கதலி,
எந்நலமும் வற்றாச்
சமுத்திரம்போல் இங்குண்டு!

தேனென்று பாலென்று
சேல் விழியார் வாய்முத்தந்
தானென்று சொல்லும்
தமிழ்க்கவிதை யெல்லாம்

புகழ்க்கூட்டம் செய்து,
புனிதத் தமிழர்
அகத்தே உயிராகி
ஆர்ந்து கிடக்குதிங்கே!

வீடுதொறும் நல்லறஞ்செய்
வெண்நகைசேர் பெண்களெலாம்
பாடுதொறும் இன்பஞ்செய்
பச்சைப் பசுங்குயில்கள்!

ஈர முடையார்;
எவர்க்கும் நலம்புரிவர்;
வீரர்; பகைக்குலத்தை
வேரறுப்போர் ஆடுவார்கள்!

கோலமுப் பத்தைந்து
கோடி குலமக்கள்
காலம்பார்க் கின்றார்கள்
கட்கத்தை ஓச்சுதற்கு!

சாதி யனைத்தும்
சமன்செய்தார்; புன்மதத்தால்
மோதி யழியாமே
முன்னேறிச் செல்கின்றார்;

கண்ணினிக்கும் காட்சிகளைப்
பாடும் கவிஞரெலாம்
பெண்ணினத்தை இங்கே
பெரிதென்று பாடுகின்றார்!

மூட வழக்குக்கு
முடிவளித்தார்; பேதமெனும்
காடழிக்க நல்லறிவுக்
கோடாரியைக் கைப்பிடித்தார்!

எங்கும் புதிய
எழுச்சி இலகினதால்
அங்கே பகைவரெலாம்
அங்கம் நடுங்குகின்றார்!

நானிலத்தார் இன்பமெலாம்
நன்றி நுகர்வதற்குத்
தேனென் றினிக்கும்
எனது திருநாடு

தூக்குந்தோள், வில்லில்
தொடுக்குங்கோல், நல்லறத்தால்
ஆக்கும்போர், நெஞ்சில்
அடக்கும் மூச் சுகளெல்லாம்

வெல்கவெல்க! என்நாடு
வெல்க! உரிமையெலாம்
மல்கநலம் அத்தனையும்
வாய்ந்து.

(1936-ல் எழுதியது)

புதுவைக் குயில்

பாளைச்சிரிப்பு, பசு நெய்யின் நறுமணம், வாளைமீன் துள்ளல், வரிப்புலியின் கனல் பார்வை எல்லாமே இணைந்திட்ட கவிதைச் சுரங்கமே பாரதிதாசன்.

பாற்கடலைப் பற்றிப் புராணங்கள் பகர்ந்திடக் கேட்டிருக்கிறோம். பாரதிதாசனோ, 'பாற்கடலாகவே' பரந்து விரிந்து, தமிழ்மண்ணின் நெஞ்சமெல்லாம் நிறைந்து நின்றார்.

அந்தக் கடலிலே உவமையழகு, உணர்ச்சித் துடிப்பு, புதுமை நோக்கு, புரட்சி வெடிப்பு அனைத்துமே அலைகளாகப் பொங்கியெழுந்து சீறிப்பாய்ந்தன. சிலம்பமும் ஆடின. அவருடைய உருவமே மிடுக்கானது. அந்த உள்ளத்திலிருந்து வெடித்துக் கிளம்பிய சொல்லாட்சியோ, எல்லாவற்றையும்விட மிடுக்கானது- இழிதகைமையை, ஈனச்செயல்களை மிதித்துத் துவட்டக் கூடியது.

"கொலைவாளினை எடடா-மிகு
கொடியோர் செயல் அறவே!"

என்பன போன்ற புரட்சி தெறித்திடும் வரிகளை இன்னொருவரால் புனைந்திடத்தான் முடியுமா.

"சிற்றூரும் வரப்பெடுத்த வயலும் ஆறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன் விளைத்த
நிறையுழைப்புத் தோள்கள்எலாம் எவரின்
தோள்கள்?

எனக்கேட்டு,

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் - அவன்
காணத் தகுந்தது வறுமையா?
பூணத் தகுந்தது பொறுமையா?"

என்றெல்லாம் தொழிலாளர் தோழராய் உரத்த குரல் எழுப்பிச் சமதர்மப் பூங்காவைச் சமைத்திட அவர் துடித்த துடிப்பினை யாரே மறுத்திட முடியும்?

'தட்டுப்ப டாத பெரும்-பொருட்கொரு
சாதியும் உண்டோடா!- படுவாய்
சாதியும் உண்டோடா!
மட்டற்ற செம்பொருட்கே- முரண்படும்
மதங்கள் உண்டோடா!'

என்று சாதிச் சழக்குகளைச்- சாத்திரச் சடங்குகளை ஆத்திரத்துடன் சாடிய ஆண்மையாளர்- அரிமாவும்- அவரே!

'கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே, இங்கு
வேரில் பழுத்த பலா! - மிக்க
கொடியதென் றெண்ணிடப்
பட்ட தண்ணே- குளிர்
வடிகின்ற வட்டநிலா!'

-என்று பெண்டிர்க்காகக் கண்ணீர் வடித்திட்ட பேரன்புத் தாயுமாவார் அவர்!

முதல்வர் கலைஞர்

தமிழ் எங்கள் உயிர் என்பதாலே- வெல்லுந்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!'

என்று போர்ப் பரணி பாடிய வீர மறவரும் அவரே ஆவார்!

திருவாரூரில் தமிழ் மாணவர் மன்றம் என்னும் ஓர் அமைப்பினை உருவாக்கி என்னாலியன்ற தொண்டினை இயற்றி அதன் ஓராண்டு நிறைவு விழாவினை நான் நடத்திய காலை, அதனை வாழ்த்திடும் முகத்தான் அவர் வரைந்தனுப்பிய வீரங் கொப்பளித்திடும் வரிகள் இன்றைக்கும் என் இதயத்திலே ஈரங்காய்ந்திடாமல் எழுச்சியை-இன மொழி, நாட்டுப்பற்றினைச்- சூடேற்றிய வண்ணமே உள்ளன.

புரட்சிக் குயில்

நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம் பாட வந்த மறவன்; புதிய
அறம் பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து'!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!'

என்றெல்லாம் அவர் பாரதியாரைப் பற்றிப் பாடினாலும் அந்த வைர வரிகள் தமக்கே பொருந்துமாறு வாழ்ந்து காட்டிய பாவலர்.

பாரதி-பாடென்று சொன்னவுடன்
பாடிய மறவன்
பார் அதி தீரனென்று பாரதி
புகழ்ந்த புலவன்......
கனக சுப்புரத்தினம் என்று
காத தூரம் இருந்த பெயரைக்
கவி பாரதிக்குத் தாசனென்று
சுச்சிதமாய்ச் சூட்டிக் கொண்டான்!
திமிர்ந்த நோக்கு, நெரித்த புருவம்;
நீர் வீழ்ச்சி ஓசை, நெற்கதிர்க் கட்டு மீசை;
பாட்டெழுதும் வித்தையிலே பாரதி ரசவாதம்
கற்றவனாம்-இவனைப்
பார், அதிரசவாதம் கற்றவனாம்!
அத்துணை இனிப்பு; இவன் பாட்டில்!
வினாக்குறியா? வெடிக்கும் எரி மலையா?
புரட்சிக்கவிஞனெனப் புவியொப்பி மாலை
போடப்போதாதோ இவைகள்?
இவனோர் கருட்டுக்கவிஞன்- புகைச்
சுருட்டுக்கவிஞன்- இவன்
புரட்டுக் கவிஞனாவான்;
மூடப் பழக்கமெலாம் தலைகீழ்ப்
புரட்டும் கவிஞனாவான்...
அமளி துமளி ஆர்ப்பாட்டம்! அணிவகுப்பு!
அமைதியிலே உலகுவாழப் புதுவைக்குயில்
கூவாதோ!

கருத்துக்கவிஞன்; சுற்றுக்
கருத்த கவிஞன்;
காலக்கவிஞன், முக்
காலக் கவிஞன் அவன்!
சுவையாய்த் தமிழுக்கு
அருவியின் பாடல் அமைவாய்க் கண்ட
அற்புதம் என்னே!

இருண்ட வீட்டில் குடும்ப விளக்கைஏற்றி
வைத்தார்

இசையமுது பொழிந்து,
அதற்குப் பாண்டியன் பரிசு பெற்றார்!

நமக்குக் குயில், குறிஞ்சித் திட்டுமுண்டு.
இதழ் நடத்தும் போது கவிதை;
அழகின் சிரிப்பாலே தமிழியக்கம் கவர்ந்து விட்டார்
அமைதிக்கு நல்ல தீர்ப்பளித்தார்
அவர் காதல் நினைவாலே கவிப்பெண்ணை
வாடவிட்டு
சாவின் எதிர்பாரா முத்தத்தால் பிரிந்து விட்டார்!
என் ஆசான்!...

பம்பாயில் நடைபெற்ற கவியரங்கில் பாரதிதாசனைப் பற்றி நான் பாடிய கவிதை வரிகளில் சிலவே இவை!

பகுத்தறிவு புரியின் காவலர்களாக அவரது பழைய கவிதை வரிகளை நிறுத்தி வைத்து விட்டு அவர் போய்விட்டார். 'பாரதிதாசன்' என்பது இனி ஒரு த்னி மனிதரின் பெயரல்ல. தமிழ் இன்பம் பொழிகின்ற கவிதைத் தொகுப்பின் பெயர். அந்தப் பாரதிதாசனை என்றென்றும் நம்மிடையே வைத்துப் போற்றுவோம்! ●

● தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!
எழிலை உலகம் தழுவும் வண்ணம்
ஒழியா வளர்ச்சியில் உயரும் பலவகைத்
தொழிலே வாழிநீ! தொழிலே வாழிநீ!

*

● அச்சம் தவிர்ந்தது வாழ்வு- நல்
அன்பின் விளைவது வாழ்வு!
மச்சினில் வாழ்பவ ரேனும்- அவர்
மானத்தில் வாழ்வது வாழ்வு!

பாவேந்தர் பார்வையில் பெண்மை

டாக்டர். சு. சிவகாமசுந்தரி
சிறப்புநிலைப் பேராசிரியர்
இலக்கியத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்

பெண்மையில் பாரதிதாசன் கண்ட புரட்சி-கால வெள்ளத்துடன் எதிர் நீச்சலடித்து, கவிதைக் கரையைத் தொட்டுவிட்ட பெரும் புரட்சியாகும்.

பாரதிதாசனின் பெண், அதிகம் பேசவில்லை. அந்தப் பெண்ணின் சார்பில் கவிஞர் பேசுகின்றார். சங்க இலக்கியத் தமிழ் மரபில் ஊறிவந்த பாவேந்தர், பகுத்தறிவுப் பாசறையின் புதுமைத் தமிழச்சியாகத் தன் காலத்தில் பெண் விளங்க வேண்டுமென்பதைத் தன் எழுத்துக்கள், பாத்திரங்கள் அனைத்திலும் அடிச்சரடாக அமைத்துக் காட்டுகிறார்.

"கோட்டைப் பவுன் உருக்கிச் செய்த
குத்து விளக்குகள் போன்ற குழந்தைகளைப்"
பெற்றுக் கொடுப்பது மட்டும் பெண்ணின் பணியல்ல.

"வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று" உறுதியாகச் சொல்லக் கூடியவளாகப் பெண் வளரவேண்டும்.

"அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியல்"
பெண், "தாய் என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவள்." ஆனால்,

"கல்வியில்லை உரிமையில்லை
பெண்களுக்கு,
கடைத்தேற வழியின்றி
விழிக்கின்றார்கள்"

என்ற நிலையில் தடுமாறித் தவித்து நிற்கின்றாள். எனவேதான் அவளைக் கடிகாரம் ஓடுமுன் அண்டை வீட்டுப் பெண்களோடு சேர்ந்து, தலை வாரிப் பூச்சூடிக் கொண்டு பாடசாலைக்குச் செல்ல வேண்டுகிறார். கடல் சூழ்ந்த தமிழ்நாடு முழுவதும் "பெண்கல்வி பெண்கல்வி" என்ற ஓசை விண்ணையும் தாண்டி ஒலித்து முழங்க வேண்டும்.

"குப்பை மணக்கக் குடித் தெருவெல் லாம்மணக்க அப்பம் நிலாப்போல் அடுக்கி வைக்க"வும் பெண்ணுக்குக் கல்வி வேண்டும். அவளால் மட்டுமே "வாழ்க வையகம்" என்று வாழ்த்திப்பாடி மற்றவர்களையும் பணி செய்யத் தூண்ட முடியும்.

குடும்பவிளக்கு அவரது புரட்சி மனத்தில் எழுந்த உண்மைக் காவியமாகத் திகழ்கின்றது. தன்னிலை தன்னை விட்டோட, அதைத் தான் தொடர்ந்தே பற்றி வரும் மின்னலைப்போலப் பெண்மைக்குக் கவிமாலை சூட்டிப்பாவேந்தர் மகிழ்கின்றாரெனில் மிகையில்லை.

இளமை மணத்தை, இரண்டாந்தாரமாகப் பெண் வாழ்க்கைப் படுவதைக் கண்டிக்கும் பாவேந்தர், விதவை மணத்தை வரவேற்கின்றார். அவலச் சுவையின் பேருருவியாய், பெருங்காடாய் குழந்தை மணத்தின் கொடுமையை, ஏழுவயதுச் சிறுமியின்- கூவத்தெரியாத குஞ்சின் கூாலை-தாவாச் சிறுமானின் துயரத்தை- மோவா அரும்பின் துயரத்தைப் பாவேந்தர் கண்ணின் நீர் பெருக விவரிப்பார். கணவனை இழந்த சிறுமி, கைம் பெண்ணாகத் தந்தை வீட்டில் இருக்கின்றாள். மனைவியை இழந்த அவள் தந்தை, மறுமணம் புரிந்து, பழமையை மறந்து, ஏழுவயதில் தன் கணவனை இழந்த மகள் நிலையையும் மறந்து, புதிய மனைவியோடு மகிழ்ந்திருக்கின்றார். இதையெல்லாம் கவனித்த ஏழுவயது விதவைச் சிறுமி தேம்பி அழுத வண்ணம் தன் பாட்டியிடம் கூறுகின்றாள்.

"கோரிக்கை யற்றுக் கிடக்குதண்ணே வேரிற் பழுத்த பலா" எனக் காட்டி, நம் சிந்தனையைத் தூண்டி விடுகின்றார். அத்துடன் தேம்பி அழும் குழந்தையை அழைத்துத் திடங் கொண்டு போராட, மாற்று வழியையும் காட்டுகின்றார்.

பொருந்தா மணத்தை எதிர்க்கும் பாவேந்தரின் இளம் பெண்ணும் பெரியதொரு போராட்டத்திற்குத் தயாராகின்றாள். கண் குழிந்த நரைத் தலைக் கிழவனுக்கும், இள நங்கைக்கும் திருமணம் நடத்தப்பட்டுவிட்டது. சொல்லத் துணிவின்றிப் பெண்ணைக் கூட்டிவைத்த திருமண வாழ்க்கையைத் தாய் காணுகின்றாள்.

"இளமை ததும்ப எழிலும் ததும்ப
காதல் ததும்பக் கண்ணீர் ததும்பி
என்மகள் கிழவ னருகில் இருந்தாள்."

வாயின் கடையில் எச்சில் வழியக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்த கணவனைப் பார்த்தாள். நேரம் நகர்ந்தது.

"தொண்டு கிழவன் விழிப்பான் என்று
கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள்
காதலும் தானும் கனலும் புழுவுமாய்
ஏங்கினாள்"

பால் செம்பை எடுத்தாள் இடையில் செருகியிருந்த சிமிழை எடுத்து அதில் ஏதையோ கொட்டினாள். அருந்தப்போகும் சமயம் தாய் வந்து தடுத்தாள். பால்சிந்த அதனைப் பூனை குடிக்க, அது செத்து விழுகிற, பெண்ணின் பரிதாப நிலையைக் குறிப்பிடும் புரட்சிக்கவிஞர் அவளுக்குரிய விடுதலை மார்க்கத்தை வெளிப்படுத்துகின்றார்.

பிறிதொரு வேளை, தனித்து வரும் பெண்ணை மடக்குகின்றான் 'தறிகெட்ட' காளை ஒருவன். புரட்சிக் கவிஞர் அந்தப் பெண்ணுக்கு அறிவுரை கூறுகின்ற இங்கு பாவேந்தர், ஒரு புதிய கோணத்தில் புதுமைப் பெண்ணைப் பழக்கப்படுத்த எண்ணுகின்றார்.

"தனித்து வரும்போது- கெட்ட
தறுதலை கண் வைத்தால்
இனிக்க நலம் கூறு- பெண்ணே
இல்லாவிடில் தாக்கு!"

பெண்கூறும் இனிய அறவுரைக்கு முதலிடமும் ஏற்காவிடில் வன்முறைக்கு மறுஇடமும் கொடுக்கின்றார். "எழுச்சியுற்ற பெண்களில்" மீண்டும் ஒரு காட்சி! பெண் கூறும் இனிய உரையைத் தறுதலை ஏற்கவில்லை. எனவே,

"ஒரு கையில் உடைவாளும்
இடது கையில்
"ஓடிப் போ" என்னு மொரு
குறிப்புமாகப்
புருவத்தை மேலேற்றி
விழித்து......"

அவனை விரட்டுகின்ற பாரதிதாசனின் புதுமைப் பெண், புதிய விடுதலைக்கு வித்திட்டு வளருகின்றாள்.

பாவேந்தரின் கவிதை வாழ்வின் வெற்றிக்குக் காரணம், அவர் பெண்மையை வாழ்த்தி, வணங்கிப் போற்றிப் பாராட்டியது தானெனின் அதுதான் உண்மை.

கருத்துக்களாலும், கவிதைத் திறத்தாலும் பாரதிதாசன் கூறும் முடிந்த கருத்து, "பெண்கள் அருளொளி கறங்கு வெண்டிரை வையகம் காக்கும்" என்பதே. பெண்மையை வணங்கிப் புதுமைப் பெண்ணுக்குப் பாரதி வகுத்தது இலக்கணம்; பாவேந்தர் படைத்தது இலக்கியம்!

**துன்பம் பிறர்க்குநல் இன்பம் தமக்கெனும்
துட்ட மனோபாவம்
அன்பினை மாய்க்கும் அறங்குலைக் கும்நல்ல
ஆக்கம் தனைக்கெடுக்கும்!**

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2

தேர்வாணையத்தால் 1990, ஜனவரி 31-ல் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறையில் தமிழ்நாடு வேளாண்மை சார்நிலைப் பணியில் தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களில் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும்; நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியன குறித்த விவர அறிவிப்பு, தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

3	4	5	8	11	16	17	19	20
21	23	24	25	26	27	35	38	39
43	44	48	51	52	53	54	56	59
61	62	63	65	66	67	68	70	72
73	76	78	79	80	81	84	85	87
89	90	93	94	97	101	107	118	120
122	125	127	134	135	136	138	140	143
145	147	148	149	157	170	172	174	179
180								

DIPR/924/MS/90/MCS

முகவரியைத் தந்தவன்

அந்தப் புரங்களில்
ஆடுகின்ற பெண்ணாய்
வீணாக்கி வைத்த
விலாசக் கவிதையினை
ஆணாக்கி வைத்தவனே!
ஆர்ப்பாட்டப் பாவேந்தே!

இருட்டுகளை எப்போதும்
எதிர்த்துவந்த ஒளிநிலவே!
உனக்கு
அமாவாசை என்ற
ஆபத்தே இருந்ததில்லை
ஏனெனில்
ஈரோட்டுச் சூரியனில்
எரிசுடரைப் பெற்றவன் நீ

நீ
பன்னி எழுச்சி
பாடிய போது
விழித்த கண்கள்
வெறும் கண்கள் அல்ல
நெருப்பால் தண்டிக்கும்
நெற்றிக் கண்கள்

செம்மைப் புரட்சிச்
சிவப்புக்குச் சிலரிங்கே
அம்மியிலே மருதாணி
அரைக்கையிலே - நீயோ
இரத்தத்தில் உன்னுடைய
எழுதுகோலைத் தோய்த்தாய்!

பெண்களைப் பாடும்
பித்தர்களின் கூட்டத்தில்
பெண்களுக் காகப்
பாடிய பெருங்கவி நீ!

பூவிழந்த கொடிக்காகப்
புலவர்கள் புலம்பையிலே
பூவிழந்த பூவையர்க்காய்ப்
போர்க்கவிதை புனைந்தவன் நீ

வானத்து மீன்பிடிக்க
வலை பின்னும் கவிஞரில்
கொக வலையைப் பின்னிக்
கொடுத்தவன் நீயல்லவா?

முகத்தையே இழந்து
முதலற்ற எங்களுக்கு
முகவரியைத் தந்தவன் நீ!
முதலாக வந்தவன் நீ!

கவிஞர் அப்துல் ரகுமான்

புரட்சிப்பாவலரின் புதிய பார்வை

புலவர் சா. மருதவாணன்

புரட்சிப்பாவலர் பாரதிதாசன் பிறபாவலர்களைப் போன்றவரல்லர். அவருடைய பார்வையோ புதுமையானது - புரட்சி வாய்ந்தது. இலக்கியக் கலையைக் காலத்தின் கண்ணாடி என்பர் அறிஞர். அக்கலையைக் காலத்தின் கண்ணாடி ஆக்கிக் காட்டுவதிலே வல்லமை படைத்தவர்- கண்ணாடியாக்கிக் காட்டுவதோடு அவர் நிற்பதில்லை- புதிய காலத்தையே- மறுமலர்ச்சிக் காலத்தையே புதிதாகப் படைத்துக் காட்டுகின்றார். மறுமலர்ச்சியைப் படைப்பதோடு, நம்மையே அக்காலத்தில் நடமாட வைக்கின்றார்- காலத்திற்கேற்ற கருத்தாளராக்கிக் காட்டுகின்றார்.

புரட்சிப்பாவலரின் புதிய பார்வைகளைக் கண்டு மகிழ்வோம்! பாவேந்தர் பார்வையோ புதுமையாக உள்ளது. பிறர் காணும் கடலையும் கடற்கரையையும் புரட்சிப் பாவலர் காணுகின்றார்- கடல் அலைகளைப் பார்க்கின்றார்- கற்பனை பிறக்கின்றது. கடலோர மணற் பரப்பைக் காணுகின்ற பொழுது, மணலின் பழுப்பு நிற வெண்மையும் கருமையும் கலந்த தோற்றம் கீரிப் பிள்ளையின் உடல் வண்ணத்தைப் போன்று இருப்பதை உன்னுகின்றார்- மணல் குவியல் தவியலாக மிகுந்து கிடக்கின்ற காட்சி மணல் மெத்தையாகப் புரட்சிப் பாவலருக்குத் தோன்றுகின்றது. அந்த மணல் மெத்தை மேல் அலைகள் வந்து மோதுகின்றன- சில அலைகள் மணல் மெத்தை மேல் வீழ்ந்து நனைக்கின்றன- சில அலைகள் கீழே வீழ்கின்றன- இந்த இனிய இயற்கைக் காட்சி, கல்விநிலையங்களில் பயிலுகின்ற இளைஞர்கள் மகிழ்ச்சிப் பெருக்கால் மேல் எழுந்து ஆடிக் குதிப்பதையும் கீழே விழுந்து புரள்வதையும் நினைவிற்குக் கொண்டு வருகின்றது. புதிய பார்வையில் பாடல் பிறக்கின்றது.

''ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல் வண்ணம்போல்
மணல் மெத்தை அம்மெத்தைமேல்
நேரிடும் அலையோ கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும்
புரண்டிடும் பாராய் தம்பி''

கடல் அலைகள் மணல் மெத்தை மேல் ஏறிவீழ்வதற்குக் கல்விநிலைய மாணாக்கரை உவமையாகப் பாடியிருப்பது படித்து மகிழத்தக்கது. கல்விநிலையங்களில் மகிழ்ச்சிப் பெருக்கால் இளைஞர்கள் துள்ளிக் குதிப்பதையும் தரையில் விழுந்து புரள்வதையும் எண்ணிப்பாருங்கள். அப்பொழுதுதான் அந்த உவமையின் பொருத்தம் நனி விளங்கும்.

அடுத்து, வானம் வழங்கும் வண்ணக் காட்சியை எல்லாரும் கண்டு இன்புறுகின்றோம். ஒளி வீசித்திகழும் விண்மீன்களைப் பார்க்கின்றோம்- வியப்படைகின்றோம்- விண்மீன்கள் வழங்கும் வியத்தகு ஒளிக்காட்சியில் மூழ்கித் திளைக்கின்றோம்- சிரித்து மகிழ்கின்றோம். புரட்சிப் பாவலர் விண்மீன்கள் நிறைந்த விரிந்த வானத்தைக் காணுகின்றார்- கூர்ந்து நோக்குகின்றார்- அவருடைய பார்வையில் அவை விண்மீன்களாகத் தெரியவில்லை- வானப்பாவையின் உடலில் ஏற்பட்ட புண்களாகவே தோன்றுகின்றன. எவ்வாறு? இந்த மண்ணில் பாட்டாளிகள் பகல் முழுவதும் கடுமையாக உழைக்கின்றார்கள்.

ஆனால், அவர்கள் உண்பதற்குரிய உணவோ- உடுப்பதற்குரிய ஆடைகளோ- உறைவதற்குரிய இல்லங்களோ இல்லாமல் வறுமையில் உழலுகின்றார்கள்- ஏழ்மையில் புரளுகின்றார்கள்- துயர்க்கடலில் மிதக்கின்றார்கள். தங்கள் உடைமையாளரிடம்- பண்ணையாரிடம்- ஆலை அரசர்களிடம்- தொழிலதிபர்களிடம், உழைத்து உருக்குலைந்து போன- செல்வம் சேர்வதற்குக் காரணமாயிருந்த- பாடுபட்ட பாட்டாளி பணிவாகச் சென்று, உரிய பங்கைக் கேட்டால், செல்வர்கள்- பண்ணை உரிமையாளர்கள்- ஆலை அரசர்கள்- முதலாளிகள் ஈவு இரக்கம் இல்லாமல்- கடமை உணர்வு இல்லாமல் பொறுப்பில்லாமல் சீறிப்பாய்கின்றார்கள்- புலியாக உறுமுகின்றார்கள்- வசைமாரி பொழிகின்றார்கள்- இழிமொழிகளால் குளிப்பாட்டுகின்றார்கள்- வெளியில் அடித்து விரட்டுகின்றார்கள்- வேதனையைச் சுமக்கச் செய்கின்றார்கள். இக்கொடிய காட்சியை வானம் என்ற மங்கை நல்லாள் பகல் முழுவதும் பல்வேறிடங்களில் காணுகின்றாள்- வயிறு எரிகின்றாள்- உடல் பதைக்கின்றாள்- வெகுளியடைகின்றாள். இதன் ஏதுவால் உடல், மிகுந்த வெப்பமடைகின்றது- வெப்பமிகுதியால் அவள் உடலில் கொப்புளங்கள் ஏற்பட்டு விட்டன. இவ்வாறு ஏற்பட்ட கொப்புளங்களே விண்மீன்களாய்க் காட்சியளிக்கின்றன என்று கற்பனை நயத்தோடு கன்னித் தமிழால் பாடுகின்றார்.

''மண்மீதில் உழைப்பா ரெல்லாம்
வறியராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்பு பாய்ச்சும்
புலையர்செல் வராம் இதைத்தன்
கண்மீதில் பகலிலெல் லாம்
கண்டுகண் டந்திக்குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த
விரிவானம் பாராய் தம்பி''

விரிவானம் வழங்கிய ஒளிக் காட்சி, புரட்சிப் பாவலருக்கு வியப்பாக இல்லை - எழிலாக இல்லை- மகிழ்ச்சியாக இல்லை- வேதனையாக உள்ளது. இதனால் நாம் அறிவதென்ன? பாட்டாளி மக்கள் மீது- உழைப்பாளிகள் மீது - பாவலரின் பரிவு எந்நிலையில் இருந்ததென்பதை உணர்கின்றோம். புரட்சிப் பாவலர் வழங்கிய அறிவுரையைக் கேட்ட நாம், உயர்வு தாழ்வுகளைப் படைத்துக் கொண்டு பேதைமைக்கு இடமளிக்கக் கூடாது. தமிழர்கள் அனைவரும் ஒருதாய் மக்கள் என்ற உண்மையைப் பரப்பவேண்டும். சால்பினை வளர்த்துச் சான்றோர்களாய் மிளிர வேண்டும். ●

உலக ஒற்றுமை

தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே.

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 1.11.89 மற்றும் 2.11.89 அன்று, தமிழ்நாடு பொதுப்பணித் துறையில் தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணியில் இளநிலைப் பொறியாளர் (கம்மியல்) (Junior Engineer Mechanical) பதவிக்கு நடத்தப்பட்ட முதன்மை எழுத்துத் தேர்வு (Main Written Examination) முடிவின் அடிப்படையில், தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்த விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் தெரிவிக்கப்படும். இப்பட்டியலில் இடம் பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

4	5	16	23	25
41	54	56	58	65

DIPR/827/MS/90/MCS

TNPSC

விளம்பர எண்: 12/90

தமிழ்நாடு மாநில கருவூல மற்றும் கணக்குகள் பணியில் மூன்றாம் நிலை பதவிகளில் (Class-III posts i.e. Accounts Officer etc.) இரண்டு காலியிடங்களுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய **ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து மட்டும்** 21.5.1990 அன்று, மாலை 5.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.

(இந்த இரண்டு காலியிடங்களும் முன் தெரிவில் நிரப்பப்படாத காலியிடங்களாகும். ஆதி திராவிடர்/பழங்குடி வகுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த காலி இடங்களை நிரப்ப இது இரண்டாவது முயற்சியாகும்).

வயது: வயது வரம்பு இல்லை.

QUALIFICATION:

A pass in the final examination conducted by the Institute of Chartered Accountants/Cost Accountants.

ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பைச் சார்ந்த தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''களில் தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரி இலவசமாகப்பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு இருக்க வேண்டும். அத்துடன் சுயவிலாசம் எழுதிய உறையும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR.932/MS/90/ad.bureau/3306

பூக்களுக்கும் மலைகளுக்கும், அருவி ஓடை
புகுந்தோடும் சமதளத்துப் புல்வெ ளிக்கும்-
ஈக்களுக்கும், முகில்மிதக்கும் வானத் திற்கும்-
ஈரநிலா வருகைக்கு முன்சி வந்து

படர்ந்திருக்கும் அந்திக்கும்- கூடு நோக்கிப்
பறந்துவரும் பறவைக்கும்- வான வில்லின்
சுடருக்கும்- சலனமற்ற நீர்நி லைக்கும்-
பாட்டெழுதிக் கொண்டிருந்தார் பாவ லர்கள்!

வருவித்துக் கொண்டமனத் துன்பத் திற்கு
மருந்தாக்கிக் கொண்டார்கள் கவிதை தன்னை-
திருப்புமுனை இப்படியும் காண்ப துண்டு!
திருந்தாத தமிழருக்குச் சீர்தி ருத்த

விருந்தொன்றைப் பாவேந்தன் படைத்தான்- அன்னோன்
வேகத்தில் புயல்வேகம் தோற்ற துண்டு!
அரும்புகளை புலிப்பல்லாய் மாற்றி, மான
அணிவகுப்பில் பூச்சரத்தை நிறுத்தி வைத்தான்!

இயற்கையினைத் தமிழுணர்வுக் கேற்ற வண்ணம்
இயக்கியவன்! நாற்றுகளை ஈட்டி யாக்க
முயற்சித்தான்- தமிழியக்கக் காத லாலே
முட்டைக்குள் புலிக்குஞ்சைப் பொரித்தான் என்றால்,

செயற்கையான சொல்லடுக்கா அவனின் பாடல்?
செல்லரித்து, பழமையிலே உளுத்துக் கொட்டி
இயங்காமல் போய்விட்ட தமிழி னத்தை-
எழுப்புதற்குக் கூவிவந்த கவிதைச் சேவல்!

பெரியாரின் கொள்கைக்குள் இருக்கும் நுட்பைப்
பெயர்த்தெடுத்து அப்படியே கவிதை ஆக்கிச்
சரியான நேரத்தில் படைத்தான்! சாதிச்
சக்கரத்தில் நசுங்கிவந்த தமிழ ரெல்லாம்

காலத்தால் தப்பித்தார்! மொழிக்கு வந்த
கைவிலங்கை முறித்தார்கள்! எதிலும் எங்கும்
கோலஞ்செய் தமிழ்மகளைப் போற்றி னார்கள்
கோலோச்ச அரியணைமேல் ஏற்றி னார்கள்.

வடமொழியின் ஆதிக்கம் மேலும் இங்கே
வட்டமிடும் வழக்கத்தைப் பாட்டால் தீய்த்தான்
படமெடுக்கும் சாதிமத அரவம் காட்டும்
பற்களெல்லாம் உதிரும்வண்ணம் சொற்கள் செய்தான்

நடமாட தமிழிசையை, செவியை நோக்கி
நகர்ந்துவர வழிவகுத்தான்! தமிழ்மொ ழிக்குத்
திடமான படைப்புகளை அணிசெய் வித்தான்
தித்திப்பே தமிழென்றான்! வீரம் வாழும்

உள்ளத்தை மட்டுந்தான் உள்ளம் என்றான்-
உழைப்பின்றி உலகில்லை- சுரண்டு வோரின்
கள்ளத்தைத் தான்கொன்றான்! விதவை வாழ,
கதவுகளைத் திறவென்றான்! காத லென்ற

வெள்ளத்தை அணை கட்டித் தடுப்போர் தம்மை
வெறுத்தொதுக்க வேண்டுமென்றான்- இந்நூற் றாண்டின்
கொள்ளையின்பம் பாவேந்தன்! அவனின் பாட்டைக்
குடிக்கின்ற தேனீயும் தமிழ்தான் பாடும்

TNPSC

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

திருத்த அறிக்கை

1.9.1989 நாளிட்ட தமிழரசு பத்திரிக்கையில் பக்கம் 19-32-ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளுக்கு கீழ்க்கண்ட திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

திருத்தங்கள்

1. இணைப்பில், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்|சீர்மரபினர் பட்டியலில், வரிசை எண் 171-ல் உள்ள இனத்திற்குப்பதிலாக கீழ்க்கண்டவாறு படிக்கவும்:-

   171. பரவர் (கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் தவிர - அங்கு இவ்வகுப்பினர் ஆதி திராவிடர் களாக அழைக்கப்படுகின்றனர்). *(கிருத்துவ மதம் மாறியவர்கள் உட்பட)*

2. பத்தி 14 (ஐ)-விற்குப் பதிலாக கீழ்க்கண்டவாறு படிக்கவும்:-

   காலியிடங்கள் உள்ள ஒரு பதவிக்கு அனுபவம் ஏதேனும் கேட்கப்பட்டிருந்து பதவியில் உள்ள காலியிடங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இன ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பின் மேற்படி அனுபவம் இல்லாத ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விண்ணப்பதாரர்களும் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட விதி அரசினால் அவர்களுக்கு சாதகமாக தளர்த்தப்படலாம் என்று நிபந்தனைக்குட்பட்டு விண்ணப்பிக்கலாம். அதுபோன்ற அனுபவம் இல்லாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காலியிடங்களை நிரப்புவதற்கு முழுமையான தகுதிகள் பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பு விண்ணப்பதாரர்கள் கிடைக்காவிட்டால் மட்டுமே கவனிக்கப்படும். இந்நோக்கத்திற்காக முழுமையான தகுதி பெற்ற ஆதிதிராவிடர்|பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் வாய்மொழித் தேர்விற்கு முதலில் அழைக்கப் படுவார்கள். அவர்கள் தெரிவு பெறாத பட்சத்தில் மட்டுமே நிர்ணயிக்கப்பட்ட அனுபவம் பெற்றிராத ஆதிதிராவிடர்|பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்ப தாரர்கள் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

நாள்:1.2.1990 செயலாளர்.

படமும் செய்தியும்



மாண்புமிகு இந்தியத் தலைமை நீதிபதி திரு. சபயாஜி முகர்ஜி அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னையில் நினைவுப் பரிசினை வழங்கினார். (16.4.90)

திருவள்ளுவர் திருவுருவப் படத்தினை வரைந்த ஓவியர் திரு. வேணு கோபால் சர்மா அவர்களின் குடும்பத்திற்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ரூ. 3 இலட்சத்திற்கான காசோலை யைத் தலைமைச் செயலகத்தில் வழங்கினார். (6.4.90)

மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்க!

ஒன்றென்றாய்; உளத்தாலே ஒன்றி விட்டோம்;
  ஓரினமே தமிழரெனும் விதையை நட்டோம்!
என்றென்றாய்; இமயம்போல் உயர்தல் என்றாய்;
  ஏற்றத்தால் எழில்வானே சிலிர்க்கக் கண்டோம்!
நன்றென்றாய்; புத்துலகம் காண்பாய் என்றாய்;
  நாடென்ன, மொழியென்ன, துறைகள் தோறும்
நின்றொளிரப் புதுமைபல நிலவச் செய்தோம்!
  நிலவென்ன, சூரியனும் வீட்டுத் தோட்டம்!

போரில்லா உலகம்நீ வேண்டும் என்றாய்;
  பூஉதிர்ந்தால் காற்றுக்கும் பொறுப்புண் டென்னும்
நேரில்லா வகையினிலே அமைதி யுண்டு;
  நெஞ்சென்றால் கருணையுள நிலையே உண்டு!
சீரெல்லாம் பொங்குவதால் பஞ்சந் தன்னைச்
  செயற்கையிலும் படைப்பதற்கு வாய்ப்பே இல்லை!
பாரெல்லாம் பொதுவுடைமை ஆன தாலே
  பசி, வறுமை என்றால், யார் என்பார் மக்கள்!

ஆதிக்க மொழியில்லை; அதனால் எங்கும்
  அடிமையெனும் சொல்பற்றி அறிவார் இல்லை!
போதிக்கும் நீதியெனல் இல்லை; குற்றம்
  புரிபவராய்ச் சொல்வதற்கோர் ஆளே இல்லை!
வாதிக்கும் கருத்தில்லை; விஞ்ஞா னத்தின்
  வளர்ச்சிக்கே அதுஎல்லை! ஆண்,பெண் என்று
சோதிக்கும் கருவிக்கே வேலை இல்லை:
  சொல்லன்றி வேற்றுமை,வே றெதிலும் இல்லை!

இப்படியெல் லாம்,நெஞ்சில் உன்னை எண்ணி
  எழுச்சியுடன் பாடுதற்கோர் ஆவல் என்றால்
எப்படியப் பா,முடியும் என்பார்! உள்ளம்
  எரிமலைபோல் ஆகிறது, உன்நூற் றாண்டைத்
தப்படிவைத் தாடுதல்போல் கொண்டா டற்குத்
  தமிழ்நெஞ்சம் மறுக்கிறது! கொள்கை தன்னை
ஒப்படைத்தாய் எம்மிடத்தே; கவிதை வேந்தே!
  உருப்படியாய் ஆக்கும்நாள் உன்நூற் றாண்டே !

கவிதைக்கும் தமிழுக்கும் மூச்சே யாகக்
  கனலுக்கும் புனலுக்கும் விளக்க மாகப்
புவியினிலே புரட்சியினைப் படைப்பாய்த் தந்த
  புலமைக்குத் தெளிவுரையே! உன்றன் நெஞ்சத்
தவிப்பெல்லாம் காட்சியெனச் செய்யும் காலம்
  தரைமூடிப் போவதற்கு விடவே மாட்டோம்!
நவயுகத்தைப் படைத்திடுவோம்; உன்நூற் றாண்டை
  நானிலமே கொண்டாடும் நாளைக் காண்போம்!

இனநலத்தின் வேரினிலே நீரைப் பாய்ச்சி
  இந்தியத்தை வளர்ப்போமேல், உலகம் என்னும்
கனிகுலுங்கச் செய்திடலாம்; உயிர்கள் எல்லாம்
  காலத்தின் படைப்பாகும்; சமமும் ஆகும்
எனும்நோக்கம் ஞாலத்தின் வேத மாகும்!
  எழுச்சிவிதை இட்டவனே, அக்கா லத்தே
மனிதமெனும் உணர்வோடே உன்நூற் றாண்டு
  மண்ணகத்தின் திருவிழாவாய் மலர்ந்தே ஓங்கும்!

கவிஞர் அரிமதி தென்னகன்

தமிழுள்ளம் தாயுள்ளம்

கவிஞர் மன்னர்மன்னன்

புதுவை பெருமாள் கோயில் தெரு, எண்பத்தெட்டாம் எண் வீட்டில் குடியிருக்கிறார் தமிழாசிரியர் கனக-சுப்புரத்தினம். மேற்கே கோட்டை மேடு பகுதியில் பசிய வயல்கள். அடுத்து தென்னந்தோப்பு. அருகிருக்கும் இலாசுப்பேட்டை மடுக்களிலிருந்து வழியும் நீர் இங்குதான் பாயும்.

புயலும் பெருமழையுமாய் வெள்ளம் பெருக்கெடுக்கிறது. வெள்ளநீர் பெருக்கெடுத்துப் பெருமாள்கோயில் தெருவுக்கும் வந்துவிட்டது.

காடெல்லாம் விறகான கதை தான்!

வீட்டில் அரிசி-பருப்பு எதுவுமில்லை. ரேஷன் கடை திறக்கப்படவில்லை.

கனக-சுப்புரத்தினம் ஊரைப் பற்றிக் கவலைப் பட்டுக்கொண்டிருக்கிறாரேதவிர குடும்பத்தைப் பற்றி எண்ணியதாகத் தெரியவில்லை.

அவரின் கவிதைக்குக் கருப்பொருள் கிடைத்து விட்டதே! சொல்லவா வேண்டும்!

குயில் சிவா வந்தார்; வீட்டின் நிலவரம் எப்படி, குழந்தைகள் சாப்பிட்டார்களா என்பதைத் தம் விழியாலே கண்டுகொண்டார். சிறிது நேரத்தில், புயலால் மலிவாகிப் போன சில தேங்காய்களும், மழை நீரில் நிலம் விட்டு மேல் எழும்பி விட்ட வள்ளிக்கிழங்கும் வந்து சேர்ந்தன.

சிவா தாத்தா ஏற்பாடுதான்!

வள்ளிக்கிழங்கை அவித்து, உதிர்த்துத் தேங்காய்த் துருவலைச் சேர்த்து எங்கட்கு அளித்தார் அன்னையார்.

அப்போது ஒரு கூக்குரல்:

''வாத்தியாரே, பாருங்க எங்க குடிசையும் போச்சி, எங்க ஊட்டுக்காரை பாம்பு கடிச்சிட்டுது. புள்ளைங்க சாப்புட்டு நாலு நாளாச்சி!''

கருத்தூன்றி எழுதிக் கொண்டிருந்த கனக-சுப்புரத்தினத்தின் காதில் இந்தக் குரல் பாய்ந்தது.

எழுதுகோலை எடுத்துவைத்து விட்டு எழுந்தோடினார்.

''இப்ப என்ன செய்றது?—பழநி'ம்மா, இந்த பசங்க திங்கிறதுக்கு ஏதாச்சும் குடு!''

இவரின் கட்டளை மீது முறையிட வேறு முறையீட்டு நீதிமன்றம் கிடையாது.

குடிசை வீட்டுச் குழந்தைகள் வரிசையாக அமர்ந்து வள்ளிக்கிழங்கோடு தேங்காய்த் துருவலையும் உண்டனர்.

இதற்குள் வாத்தியார் வெளியில் போய்விட்டார்.

பக்கத்துத் தெருவில் இருந்த இவரின் சீடர் கம்பவுண்டர் பார்த்தசாரதியுடன் புறப்பட்டுச் சென்று பாம்புக்கடிபட்ட குடிசை ஆசாமிக்கு மருத்துவம் பார்க்கச் செய்திருக்கிறார்.

குயில் சிவாவுக்கு ஒரு பக்கம் ஆத்திரம். மற்றொரு பக்கம் ஆச்சரியம்.

குடும்பத்தினரின் பசியைப் பற்றிக் கவலைப்படாத சுப்புரத்தினம் பரபரப்பாய் ஓடி எவருக்கெல்லாமோ உதவி செய்கிறாரே!

கனக-சுப்புரத்தினம் இதற்கு விளக்கமளித்தார்: ''என் குடும்பத்தைப் பார்த்துக்க உன்னைப்போல யாராச்சும் இருக்கிறீங்க. ஏழை எளியவங்களுக்கு யார் உதவி செய்யப் போறாங்க?

சுப்புரத்தினம் - இவர் புலவரா, புரவலரா?

இனிமைத் தமிழ், தொன்மைத் தமிழ், தென்றமிழ் என்றெல்லாம் பாடிவிட்டுப் போக வேண்டியது தானே!

இன்னலிலே தமிழ் நாட்டினிலேயுள்ள
என் தமிழ் மக்கள் துயின்றிருந்தார்

என்று கன்னல் தமிழில் பாடிவிட்டு இவரும் துயின்றிருக்க வேண்டியது தானே!

தமிழுள்ளம், தமிழைப் போற்றுகிற உள்ளம், தமிழரை ஒன்றுபடுத்துகிற உள்ளம், தமிழரின் நலிவு தீர்க்கும் உள்ளம் என்று பொருள்கண்டார் பாவேந்தர்.

தமிழக அரசின் தமிழ்ப்புத்தாண்டு நாள் இலவச அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் சென்னை அரும்பாக்கத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் டாக்டர். க. அன்பழகன் அவர்கள் இலவச அரிசி வழங்கினார். (11.4.90)

சென்னை கிண்டியில் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி துணைக் கட்டிடத்தினை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். திரு. ஆர்.எஸ். ஸ்ரீதர், எம்.எல்.ஏ., மாநகராட்சி ஆணையர் திரு. மு. அபுல்ஹசன் ஆகியோர் உடன் உள்ளனர்.

சின்ன வயதினிலே

வெளியூரிலிருந்து வந்த பெரியம்மா வாழைப்பழங்களைக் கொண்டு வந்திருந்தாள். வீட்டிலுள்ள பெரிய பையன், சின்னப்பையன் இருவரிடமும் ஆளுக்கு ஒன்றாகக் கொடுத்து விட்டு, மீதிப் பழங்களை அறைக்குள் கொண்டு சென்று வைத்துவிட்டு வந்தாள். பெரிய பையனிடம் "அறைக்குள் இருக்கும் பழங்களெல்லாம் உனக்குத்தான். அப்புறமாக யாருக்கும் தெரியாமல் எடுத்துத் தின்றுவிடு" என்று சைகை மூலம் அறிவித்தாள். ஆனால் பாவம், அந்தப் பையனுக்கு அவளது சைகையின் அர்த்தம் தெரியவில்லை. அவனுக்குத்தான் தெரியவில்லையே தவிர, அங்கே நின்ற சின்னப் பையனுக்கு நன்றாகத் தெரிந்து விட்டது!

உடனே, அவன் யாரும் பார்க்காதபடி மெதுவாக அறைக்குள்ளே புகுந்தான். அங்கே இருந்த அத்தனை பழங்களையும் தின்று தீர்த்தான். கடைசியில் பழங்கள் இருந்த இடத்தில் தோல்களை வைத்துவிட்டு மெதுவாக வெளியில் வந்துவிட்டான்.

சிறிதுநேரம் சென்றது. பெரியம்மா மூத்த பிள்ளையை அழைத்து, "தம்பி அறைக்குள்ளே இருக்கிற பழங்களை எடுத்துக் கொள்ளச் சொன்னேனே, இன்னும் எடுத்துக் கொள்ளவில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லையே!" என்றான் அவன். "சரி, உடனே போய் எடுத்துக்கொள். தம்பிக்குத் தெரிந்தால் விடமாட்டான்" என்றாள் பெரியம்மா.

உடனே அவன் ஆவலாக அறைக்குள் ஓடினான். வாழைப்பழங்கள் இருந்த இடத்தை நெருங்கினான். தோல்களைக் கண்டதும் திடுக்கிட்டான். உடனே பெரியம்மாவிடம் திரும்பி வந்து கலக்கத்துடன் விஷயத்தைக் கூறினான். பெரியம்மா உடனே சின்னவனைக் கூப்பிட்டுக் கேட்டாள். "ஆம், நான் தான் செய்தேன்" என்று அவன் துடுக்காகப் பதில் சொன்னான். பெரியம்மா கோபம் கொண்டாள். வாயில் வந்தபடி திட்டினாள்.

இந்தச் செய்தி அப்பாவுக்கு எட்டியது. உடனே சின்னவன், நடந்ததை நடந்தபடி ஒரு காகிதத்திலே எழுதி அப்பாவிடம் கொடுத்தான். எப்படி எழுதிக் கொடுத்தான்? வசனத்திலா? இல்லை; பாட்டிலேயே எழுதிக் கொடுத்தான்! அப்பா அந்த அழகான பாட்டைப் படித்ததும், மிகவும் வியப்படைந்தார்.

அந்தப் பாடல் பின்வருமாறு:

பழங்கலத்திலே பழங்களைத்தான்
பார்த்துத் தேடி பயல்களைத்தான்
கிழங்களைத்தான் உதைக்க வேண்டும்
கெடு நினைப்பே அதிகமப்பா
ஒழுங்குபட வாழைச் சீப்பில்
ஒன்றுவிழுக்காடு தந்தாள்;
விழுங்கிடவே அண்ணாவுக்கு
மீந்துக் கொடுக்க மறைப்பதென்ன?

பதின்மூன்று வயதில் இப்படி ஓர் அருமையான கவிதையை எழுதிய அந்தச் சிறுவன்தான் பின்னர் மாபெரும் கவிஞராக மாறினான். கப்புரத்தினம் என்னும் பெயர் கொண்ட பாவேந்தர் பாரதிதாசன் தான் அந்தக் கவிஞர்.

ஆதாரம்:
குழந்தைக்கவிஞர்
அழ. வள்ளியப்பா எழுதிய
'சின்னஞ்சிறு வயதில்' - முல்லை
முத்தையா தொகுத்த 'அறுசுவை
விருந்து'

பாவேந்தர் வாழ்வில்..

கவிஞர் பிறந்தார்

1891 ஏப்ரல் 29-ம் நாள் புதன்கிழமை, புதுச்சேரி கனகசபை முதலியார் - இலக்குமி அம்மையாருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தார். பெற்றோர் அவருக்கு இட்ட பெயர் சுப்புரத்தினம்.

ஆரம்பக் கல்வி

1891-ல் ஆசிரியர் திருப்புளிசாமி ஐயா விடம் ஆரம்பக் கல்வி பயின்றார்.

இலக்கண-இலக்கியம்

1907-ல் புதுச்சேரி மகாவித்துவான் ஆ. பெரியசாமி ஐயாவிடமும் பங்காருபத் திரிடமும் இலக்கண இலக்கியங்களையும் வேதாந்த சித்தாந்த பாடங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

1906-ல் வித்துவான் தேர்வில் வெற்றி பெற்றார்.

இளமையிலேயே புனையும் திறமை பெற்றார்.

பாரதியார் அறிமுகம்

புதுச்சேரி வேணு ...க்கர் இல்லத்தில் 1908-ல் பாரதியாரை ...ும் வாய்ப்பைப் பெற்றார். பாரதியார் ...மையும் எளிமை யும் கவிஞரைப் பெரி... கவர்ந்தது.

பாரதியார் பா... சொல்லி கவிஞர் பாடிய முதல்பாட்டு '... எங்கு காணினும் சக்தியடா' என்னும் ...டு.

பள்ளி ஆசிரியர்

1909-ல் அதா... பதினெட்டாம் வயதில், காரைக்கா... சேர்ந்த நிரவி என்னும் ஊரில் அரசு பள்ளியில் ஆசிரிய ராக நியமனம் ஆனா...

புரட்சியாளர் தொட...

1910-ல் புதுச்சே... ...ங்கி இந்தியப் புரட்சியில் ஈடுபா... ...ர், வ.வெ.சு. ஐயர், டாக்டர் வரத... நாயுடு ஆகி யோருடன் நெருங்கி... ...ும் வாய்ப்பைப் பெற்றார்.

பாரதியார் நடத்தி... 'இந்தியா' என்னும் பத்திரிகையைப் பத... ...க்க மறைமுகமாக ஒத்துழைத்தார்.

புனை பெயர்கள்

பாரதியாரிடம் தாம் கொண்ட மதிப்பின் காரணமாக 'கனக சுப்புரத்தினம்' என்னும் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண் டார். அந்தப் பெயர் பிரபலமாயிற்று.

மற்றும் புதுவை கே.எஸ்.ஆர்., கண்டெழுது வோன், கிறுக்கன், கிண்டல்காரன், கே.எஸ். பாரதிதாசன் ஆகிய பெயர்களில் பாடல்கள்,

---

புலவர் ந.மு. நாகராசன்

கட்டுரைகள், தேசியப் பாடல்கள் எழுதி வரலானார்.

சிறை வாசம்

1919-ல் புதுவையைச் சேர்ந்த திருபுவனை என்னும் ஊர்ப்பள்ளியில் ஆசிரியராக இருக் கையில், அப்பொழுது பிரெஞ்சுக்கு எதி ராகச் செயல் புரிந்ததாகக் குற்றம் சாட்டப் பட்டு ஒன்றரை ஆண்டு சிறைத் தண்டனை பெற்றார். மத்தியில் விடுதலை அடைந்தார்.

திருமணம்

1921-ல் புவனகிரிக்கு அடுத்த பெருமாத் தூர் பரதேசி முதலியார் மகள் பழநி அம்மாளைப் பாரதிதாசனுக்குத் திருமணம் செய்து வைத்தனர்.

கதர் விற்பனை

தேசிய இயக்கம் தீவிரமாக இருந்த காலம் கதர்த் துணிகளைத் தோளில் சுமந்து தெருத் தெருவாக விற்பனை செய்தார்.

முதல் பெண் குழந்தை

1921-ல் கவிஞருக்கு முதல் பெண் குழந்தை பிறந்தது. அதுவே சரசுவதி.

கதை, கவிதை, கட்டுரை

தேச சேவகன், புதுவை கலைமகள், தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்த போதினி, சுதேசமித்திரன், தூய்ப்ளேக்ஸ் ஆகிய இதழ் களில் கவிதை, கட்டுரை, கதைகளை, கே. எஸ். பாரதிதாசன் என்ற பெயரில் எழுதினார்.

பக்திப் பாடல்

1926-ல் 'ஸ்ரீமயிலம் சுப்பிரமணியர் துதியமுது' என்ற சிறு நூலை கவிஞர் இயற்றினார்.

அதைப் புதுவையிலிருந்த காசி ஈ. லட்சுமண பிரசாத் வெளியிட்டார்.

இரண்டாவது ஆண் குழந்தை

1928-ல் கவிஞருக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் கோபதி. பின்னர் 'மன்னர் மன்னன்' என மாற்றிக் கொண்டார்.

காட்சிக் கூடமாகத் திகழ்ந்து வரும் பாவேந்தர் இல்லம்



பெரியார் தொடர்பு

1929-ம் ஆண்டு பெரியார் ஈ.வெ.ரா. அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது.

பெரியார் நடத்திய 'குடியரசு', 'பகுத்தறிவு' இதழ்களில் கதை, கட்டுரை, கவிதை எழுதத் தொடங்கினார்.

குடும்பக் கட்டுப்பாடு

இந்தியாவிலேயே முதன் முதலில் 'குடும்பக் கட்டுப்பாடு' பற்றிப் பாடல் எழுதிய ஒரே கவிஞர் பாரதிதாசன் என்ற பாராட்டைப் பெற்றார்.

தேசபக்திப் பாடல்கள்

சிறுவர் சிறுமியர் தேசியகீதம், தொண்டர் வழி நடைப் பாட்டு, கதர் இராட்டினப் பாட்டு முதலானவை சிறு நூல்களாக வெளி யிடப் பெற்றன.

பத்திரிகை ஆசிரியர்

'புதுவை முரசு' என்னும் வார இதழுக்கு ஆசிரியராக இருந்து நடத்தினார்.

மூன்றாவது பெண் குழந்தை

1931-ல் கவிஞருக்கு மூன்றாவதாகப் பெண் குழந்தை பிறந்தது. இட்ட பெயர் வசந்தா. பின்னர் வேனில் என மாற்றப் பெற்றது.

முதல் நாடகம்

பள்ளி ஆண்டு விழாவில், 'சிந்தாமணி' என்னும் முத்தமிழ் நாடகத்தை எழுதி இயக் கினார்.

இசைப்பாடல்கள்

மற்றவர்களுடைய நாடகங்களுக்கும், சுய மரியாதைக் கூட்டங்களுக்கும், பொதுவுடை மைக் கூட்டங்களுக்கும் இசைப்பாடல்கள் எழுதிக் கொடுத்தார்.

நாத்திகர் மாநாடு

மா.சிங்காரவேலர் தலைமையில் சென்னை ஒயிட்ஸ் நினைவு மண்டபத்தில் நடைபெற்ற நாத்திகர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசினார்.

நான்காவது பெண் குழந்தை

கவிஞருக்கு நான்காவதாகப் பெண் குழந்தை பிறந்தது. பெயர் ரமணி.

இரணியன் நாடகம்

1934-ல் 'இரணியன் அல்லது இணை யற்ற வீரன்' என்னும் நாடகத்தை எழுதினார்.

பெரியார் தலைமையில் நாடகம் அரங் கேற்றப்பட்டது.

தமிழுள்ளம் என்பது ஒற்றைச் சாண் உயரமல்ல. அது உலகளா வியது!

சின்னதொரு கடுகுபோன்ற உள்ளம், கடுகுக்கு நேர் மூத்த துவரையுள்ளம், தொன்னையுள்ளம், மாம்பிஞ்சியுள்ளம் ஆகியவற்றை வரிசைப்படுத்தி வரம்பு கட்டியவர்,

தொல்லுக மக்களெலாம்
'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்,
ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான்
தீர்ந்ததாலே!

என்று உலக சமுதாய அமைப்புக்கு வழிகாட்டுவார்.

அன்னையின் ஆற்றலைத் தமது குடும்பவிளக்கில் அழகுறச் சித்தரிப்பார்:

"மலர்க்கண்ணி தனில் அவிழ்ந்த
மலரிதழ் ஒன்றைத் தூக்கம்
கலைத்திடக்குழந்தை மீது
போட்டனன்"—

கணவன் வேடப்பன் வீசிய அந்த மலரிதழ் என்ன ஆயிற்று?

தாயின் கைதான்
மலரிதழ் தனைத் துடைத்து
மற்றும் தன் இடம் போயிற்று!

தாய்மையின் ஆற்றலும் பொறுப்பு உணர்ச்சியும் இந்த உலகிலே வேறு எவர்க்குண்டு?

தன்னலம் தாய்க்கில்லை. அந்தத் தாயுள்ளம் வாய்க்கப் பெறும்போது தன்னலம் மாய்ந்து போகும்.

அப்படி ஒரு தாயுள்ளம் தான் தமிழுள்ளமாய்த் திகழ முடியும்.

வேலையில்லை தந்தைக்கு!
வெள்ளை நூல் அன்னையிடம்
பாலில்லை பச்சைக்குழந்தைக்கே!—
தாலி விற்றால்
வாங்குவாரில்லை; அங்கு வாட்டும்
பசி நீக்கித்
தாங்குவார் தாம் தவம் செய்வார்,

என்பார் மணிமேகலை வெண்பாவில்!

மேலும்,

சோறில்லை என்பார்க்குச் சோறு
தருவதுதான்
கூற்றங்களின் சாற்றுக்
கூட்டம்மா—வேறேதான்
எங்குண்டம்மா பசிக்கே ஈரம்

பாவேந்தர் குடும்பத்தவர்

பழஞ்சோறிட்டு வக்கும்
அங்குண்டம்மா நல்லறம்.

இப்படி ஏழையர்க்குச் சோறிடும் அறத்தைப் பேணுவாா தாயுள்ளம் படைத்த ஈர நெஞ்சினர் என்கிற பாவேந்தர்,

தன்னலங்கள் தீர்ந்ததாலே
தடைச்சுவர்கள் மாயும். எல்லாரும்
ஒன்றே என்ற எண்ணம் தோயும்.

இக்காலத்தில் நம் கண்முன்னே தோன்றும் கலகங்கள், நாசங்கள் எதனைக்காட்டுகின்றன? தன்னலச் சுவர்கள் எழும்பியிருப்பதையும் தாயுள்ளம் குன்றிப்போனதையும் அன்றோ காண்கிறோம்!

1960-இல் பாவேந்தர் இதற்கு 'ஐந்தொழுக்கம்' ஒன்றினை வகுத்தார்.

1. ஓர் இனம் மற்றோர் இனத்தை மாய்க்கலாகாது.
2. ஒரு மொழி மற்றொரு மொழியை மாய்க்கலாகாது.
3. ஒரு நாடு மற்றொரு நாட்டைப் பற்றிச் சுரண்டும் பான்மை கட்டோடு ஒழிதல் வேண்டும்.
4. உள்நாட்டின் அமைதியைக் காக்கும் அளவுக்கு மேல் பெரும்படை, விலையேறப் பெற்ற அழிப்புக் கருவிகளை எந்த நாடும் வைத்திருக்கக் கூடாது. உண்டாக்கக் கூடாது.
5. அங்கங்குள்ள சான்றோரைக் கொண்ட ஓர் உலகப் பெருமன்றம் மேற்சொன்ன நான்கு திட்டங்களைச் சிதறாமல் மேற்பார்வை பார்த்து வர வேண்டும்.

ஒன்று பட்ட நாடுகளின் அவை ஒன்று இருக்கிறதாம். உலகை அது அறநெறியில் செலுத்துகிறதாம். எங்கே செலுத்துகிறது? சின்ன நாட்டுக்கு மேலும் இன்னல் தேடுவதில் மும்முரப்படுகின்றது.

ஐந்தொழுக்கம் வகுத்த அந்தத் தமிழுள்ளம்தான், அதற்கும் முப்பதாண்டுக்கு முன்பே,

உன்வீடு உனது பக்கத்து வீட்டின்
இடையில் வைத்த சுவரை இடித்து
வீதிகள் இடையில் திரையை விலக்கி
நாட்டொடு நாட்டை இணைத்து
மேலே ஏறு!

என்று மானுட சமுத்திரத்தைப் பார்த்துக் கூவினார்.

தம் அளவில் தமிழுள்ளம், தாயுள்ளம் என்பதை வாழ்ந்து காட்டினார். அந்த வழியில் தமிழர்களை ஒன்று கூட்டினார். வேற்றுமைகளை ஓட்டினார். ஒன்றே அனைவரும் என்பதை நிலை நாட்டினார். அதனாலன்றோ,

தமது ஆத்திசூடியின் முதல் வரியாக "அனைவரும் உறவினர்" என்று தீட்டினார்!

பாவேந்தரோடு

பாவேந்த ரோடென்றும் அருகிருக்கும் பேற்றைப்
பல்லாண்டு பெற்றவன்நான், பலநூலைக் கற்றேன்;
பூவேந்து செந்தேனின் புதுச்சுவையை ஒக்கும்
புரட்சிமிகு பாடலெல்லாம் அவர்பாடக் கேட்டேன்;
மாவேந்து பழச்சாறே அவர்யாத்த பாடல்!
மறுமலர்ச்சி மனமலர்ச்சி மொழிமலர்ச்சி கூட்டும்!
காவேந்து பேரெழிலாம் கவியரசர் உள்ளம்
கனிந்துவந்த கவிதையெலாம் எனைஊக்கக் கண்டேன்.

இளவயதில் அவரிடத்தில் நான்பயின்று வந்தேன்;
இனியமுகம் பாடத்தை எடுத்தியம்பும் ஆற்றல்
வளமுடையார்; வகையுடையார்; அவரிடத்தில் கற்றோர்
மாத்தமிழின் வளமுடையார்; பற்றுடையார்; அஞ்சா
உளமுடையார்; செயலுடையார், உயர்நோக்க முடையார்;
ஒண்டமிழன் முன்னேற்ற நோக்குடையார் ஆவர்!
களமுடையார் எதிர்க்கின்றார் போர்மறவன் என்றன்
…யரசர் பகைகண்டு கலங்கியதே இல்லை.

…புணையும் நற்றொழிலை அவரிடத்தில் கற்றேன்;
…த்துணரும் நற்செயலை அவரிடத்தில் கண்டேன்
…ப்பணியைத் தொன்னூலை அவர்விளக்கக் கேட்டேன்;
…மல் அவர்போல எனையூக்க வல்லார்

காப்பணியாய் எனக்கிருந்தார்; நற்கவிதை யாக்கும்
கலைச்செறிவை நனிவிளக்கி எனைஎழுதச் செய்தார்;
பாப்பாவின் இனமெல்லாம் பாடுகின்ற ஆன்ற
பரம்பரையை, நற்கவிஞர் பாசறையைக் கண்டார்.

காடெடுத்த பல்லவர்கள் நற்றொண்டை நாட்டின்
கடல்புரளும் சீர்ப்புதுவை பெற்றெடுத்த செம்மல்
ஏடெடுத்தால் பாப்பிறக்கும், இனியதமிழ் பிறக்கும்;
எவரிடத்தும் பேச்செடுத்தால் இருபொருளும் பிறக்கும்;
மாடெடுத்து நகைசெய்வோர் மலைக்கின்ற வண்ணம்
வகைவகையாய்த் தமிழ்முத்து மணிமாலை யாக்கிப்
பீடெடுத்த தமிழ்த்தாயின் முடிசூட்டிச் சென்ற
பெரும்புலவர் பாவேந்தர் எனதாசான் வாழ்க!

பன்னூறு திருமணத்தில் அவைத்தலைமை ஏற்பார்;
படர்ந்துவரு நிழல்போல அவரோடு செல்வேன்
தொன்னூலின் பொருள்விளக்கிச் சுவைவிளக்கி இல்லம்
தொடங்குகின்ற மணமக்கள் நல்வாழ்விற் காண
பொன்னூறு தீந்தமிழால் புதுக்கருத்தைச் சொல்வார்
புதுக்கிள்ளை போல்நானும் இரண்டொன்று சொல்வேன்
மன்னூறு விருந்தினிலும் அருகமர்த்திக் கொண்டு
வயிறார உண்ணென்று வாயாரச் சொல்வார்.

பலாமொய்க்கும் ஈப்போல அவரிருக்க வந்து
பல்லோர்கள் சூழ்ந்திடுவர் ; நீண்டகடல் ஓர
நிலாச்சோற்றை உண்பதுபோல் அவர்வாயின் பேச்சை
நெடுநேரம் கேட்டிருப்பர் ; சிரித்துமகிழ்ந் திருப்பர் ;
புலாலுணவே அவர்விருப்பம்; அவரோடே சோந்து
புசித்தின்பம் கண்டதினால் புல்லுணவை மறுத்தேன்
உலாவுவார் கடலோரம் அதிகாலை, மாலை;
ஒப்பிலாக் கனகசுப்புக் கவியரசர் வாழ்க!

கானெழுந்த மலைக்காட்டு நீரருவி! நன்கு
கனிந்திருக்கும் குண்டுபலா! மாவாழை! உச்சித்
தேனெழுந்த செஞ்சொல்லார், பூக்காட்டுத் தும்பி!
செந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த சீர்த்திமிகு செல்வர்,
வானெழுந்த ஞாயிறவர்! அவரொளியைப் பெற்று
மறிகடல்சூழ் உலகத்தில் தொடுவானில் தோன்றும்
கூனெழுந்த நிலவுநான்! எனதாசான் நீண்ட
குமரிமுனைத் தமிழ்க்கடலே; கடலோரம் நானே!

—'பாவேந்தர் பாரதிதாசன் பெருமை' என்னும் நூலிலிருந்து

— கவிஞர் வாணிதாசன்



ஓவியங்களில் பாவேந்தர்

பாரதிதாசன் பண்பாடு

மொழிஞாயிறு

ஞா.தேவநேயப்பாவாணர்

நாட்டு விடுதலைக்கு நன்றாகப் பாடுவான்
ஈட்டு தமிழர்க்குள் இல்எனலை- வீட்டக்
கனகசுப்பு ரத்தினப்பேர்க் கார்முகில் தோன்றி
மினுமினுத்துப் பெய்ததுபா மேல்.

ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையுஞ் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினு மஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்.

தெளிதேனில் தீன்கலந்த தெண்ணீர்ப் பதம்போல்
எளிதாம் இனிய எழில்கொள் - களிநடையிற்
செம்பொற் கருத்துக்கள் சேர வழங்கினான்
இம்பர்க்குப் பாரதிதா சன்.

இருபதாம் நூற்றாண் டிடையிணையே யில்லாப்
பெருமைசேர் பாரதி தாசன் - ஒருமையுடன்
வாழ்நாள் முழுதும் வளரடக்கங் கொண்டுற்றான்
வீழ்நாளில் விண்ணவனாம் வீறு.

தன்னலமுந் தன்குடும்பத் தின்னலமும் பேணாது
மன்னலமே யென்றும் மதித்தொழுகித் - தன்னினமாஞ்
செந்தமிழ் மக்கள், சிறந்தோங்கி வாழ்வதற்கே
வந்தனன் பாரதிதா சன்.

இம்மியே கூடினும் இன்றமிழை விற்றுவிடும்
தெம்மனப் போலித் திரிதமிழர் - கும்மிடையே
பாலை நிலத்திற் பழம்படு பன்மரப்பைஞ்
சோலையே பாரதிதா சன்

நண்பன் புறத்திருக்க நல்வா னமுதெனினும்
உண்ப திலையென் றுயர்தமிழப் - பண்பதனைத்
தன்னகத்தும் வேற்றகத்துந் தப்பாது கைக்கொண்ட
தென்னகத்தான் பாரதிதா சன்.

புரட்சிப்பா வேந்தனென்று போற்றும் புகழில்
முரட்சிக் கிடமின்றி முற்றி - வறட்சியால்
வாடி வருந்தினும் வண்டமிழைக் கைவிடான்
வீடினான் பாரதிதா சன்.

('முதன்மொழி' என்னும் இதழிலிருந்து 24.4.71)

துணைவியார் பழனியம்மையாருடன் பாவேந்தர்

சோமசுந்தரபாரதியார் தலைமையில் கவிஞருக்கு இருபத்தையாயிரம் ரூபாய் நிதி அளித்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப் பெற்றது. அதை அறிஞர் அண்ணா அவர்கள் சிறப்பாகச் செய்தார்.

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு

புதுவை அரசுப் பள்ளியில் முப்பத்தேழு ஆண்டுகள் ஆசிரியராகப் பணி புரிந்ததிலிருந்து கவிஞர் 1946 நவம்பர் மாதம் ஓய்வு பெற்றார்.

திருச்சியில் மணிவிழா

யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை ஏற்பாட்டில், திருச்சியில் 1950-ல் கவிஞருக்கு மணிவிழாக் கொண்டாடி, பொன்னாடை போர்த்தி, ஆயிரம் ரூபாய் நிதியும் அளிக்கப் பெற்றது.

வசந்தா திருமணம்

1951-ல் கவிஞரின் இரண்டாவது மகள் வசந்தாவுக்கும், தண்டபாணிக்கும் திருமணம் நடைபெற்றது.

ஆட்சிமொழிக் குழு

குளித்தலையில் இளமுருகு பொற்செல்வி ஏற்பாட்டில் நடைபெற்ற ஆட்சிமொழிக் குழுவுக்குத் தலைமை வகித்தார்.

ரமணி திருமணம்

கவிஞரின் மூன்றாவது மகள் ரமணிக்கும் சிவசுப்ரமணியத்துக்கும் 1954-ல் திருமணம் நடைபெற்றது.

சட்ட மன்றத்துக்குத் தேர்வு

1954-ல் புதுவை சட்ட மன்றத் தேர்தலில் கவிஞர் வெற்றி பெற்று, சட்டமன்றத்துக்குத் தலைமை வகித்தார்.

மன்னர் மன்னன் திருமணம்

கவிஞர் மகன் மன்னர் மன்னனுக்கும் மைசூர் சாவித்திரிக்கும் 1954 ஜூன் மாதம் தேசபக்தர் கோவை அ. அய்யாமுத்து தலைமையில் புதுவையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

தமிழகப் புலவர் குழு

தமிழகப் புலவர் குழுவினர், கவிஞரைச் சிறப்பு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தனர்.

திரைப்பட முயற்சி

1961-ல் புதுவை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் பாலசுப்ரமணியம், கவிஞரின் மருமகன் தண்டபாணி, புவன்கிரி பாலசுப்பிரமணியம் ஆகியோர் கூட்டுறவில், கவிஞரின் 'பாண்டியன் பரிசைத்' திரைப்படமாகத் தயாரிக்கத் திட்டமிட்டுச் சென்னையில் அலுவலகம் தொடங்கப்பட்டது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டது.

எழுத்தாளர் சங்கம் கௌரவிப்பு

1962-ல் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சென்னையில் மூதறிஞர் ராஜாஜி அவர்களால் கவிஞருக்குப் பொன்னாடை அணிவித்துக் கேடயம் வழங்கப்பட்டது.

பாரதியார் திரைப்பட முயற்சி

மகாகவி பாரதியார் வரலாற்றை 1963-ல் திரைப்படமாகத் தயாரிக்கக் கவிஞர் முயன்றார். பாரதியாராகக் கவிஞரே நடிப்பதாக இருந்தார். முயற்சி வெற்றி பெறவில்லை.

கவிஞரின் மறைவு

1964- ஏப்ரல் மாதம் கவிஞருக்குத் திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. உடனே சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஏப்ரல் 21-ம் நாள் கவிஞர் இயற்கை எய்தினார். பாடிப் பறந்த குயில் மறைந்தது. தமிழுக்கு பெரிய இழப்பு; தமிழர்கள் துக்கம் அடைந்தனர்.

மறுநாள் கவிஞரின் உடல் புதுவைக்குக் கொண்டு செல்லப்பட்டு, புதுவைக் கடற்கரையில் அடக்கம் செய்யப் பெற்றது.

நினைவு மண்டபம்

புதுவை நகராட்சி 1965-ல் கவிஞர் நினைவு மண்டபத்தை எழுப்பியது.

சென்னையில் உருவச் சிலை

1968 ஜனவரி மாதம் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் தமிழக முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் சென்னை கடற்கரையில் கவிஞரின் முழு உருவச்சிலை நிறுவப்பெற்றது.

மத்திய அரசின் பரிசு

1969-ல் கவிஞர் இயற்றிய 'பிசிராந்தையார்' என்ற நாடகத்துக்கு மத்திய அரசின் சாகித்திய அகாடமியினால் ஐயாயிரம் ரூபாய் பரிசு வழங்கப்பெற்றது.

பிறந்த நாள் விழா

புதுவை அரசு 1971 ஏப்ரல் மாதம் 29-ம் நாள் கவிஞரின் பிறந்த நாளை அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடியது.

நினைவு நூலகம்

புதுவை, பெருமாள்கோவில் தெருவில் இருக்கும் கவிஞரின் இல்லத்தைப் புதுவை அரசு விலைக்கு வாங்கி, கவிஞரின் குடும்பத்தாருக்கு உதவி புரிந்து, அந்த இல்லத்தைக் கவிஞரின் நினைவு நூலகமாகவும் காட்சிக் கூடமாகவும் ஆக்கியது.

கவிஞரின் உருவப்படம்

தமிழக அரசு 1975-ல் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கவிஞரின் முழு உருவ வண்ணப்படத்தைத் திறந்து வைத்தது.



(கவிஞர் பங்கு பெற்ற தேர்தல் விளம்பரச் சுவரொட்டி)

1978-ல் பாரதிதாசன் பிறந்தநாள் விழா தமிழக அரசின் சார்பில் கொண்டாடப் பட்டது. 'பாவேந்தர் விருது அறிமுகம் செய்யப் பட்டது. முதன் முதலாக அந்த விருது உவமைக் கவிஞர் சுரதா அவர்களுக்கு வழங்கப்பட்டது 1978 முதல் ஆண்டுதோறும் பாவேந்தர் விழாவைத் தமிழக அரசு கொண்டாடி வருவதுடன் பாவேந்தர் விருதையும் தொடர்ந்து வழங்கி வருகிறது.

(பாவேந்தர் பாரதிதாசன் பெருமை - நூலிலிருந்து)

TNPSC

விளம்பர எண்: 10/90.

தமிழ்நாடு பொதுப்பணியில், சமூகநலத் துறையில் உதவி இயக்குநர் (சிறப்பு பள்ளிகள்) (Assistant Director (Special Schools)) பதவி ஒன்றுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 14.5.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப் படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2200-75-2800-100-4000.
(நியமன ஒதுக்கீட்டு விதி இத்தேர்விற்கு பொருந்தாது).

வயது: 1.7.1990 அன்று 35 வயதிற்குக் குறைவாக.

QUALIFICATIONS:

(i) A Post Graduate degree and

(ii) B.Ed. degree and

(iii) Senior Diploma in Teaching the visually or hearing handicapped or mentally handicapped, and

(iv) Experience for a period of not less than five years as a teacher in a school for visually handicapped or hearing handicapped or mentally handicapped.

NOTE: Regular members in any of the services of the Government of Tamil Nadu may also apply even if a period of five years has elapsed since the date of their regular first appointment under the Government of Tamil Nadu provided they satisfy the prescribed qualifications vide item (i) to (iv) including age limit.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/ அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறை''களில் தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அல்லது அதற்கு பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft) -யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 x 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/863/MS/90/MCS(863)

சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப்பணிகள் தொடக்க விழா!

சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் தொடக்க விழா 14.4.'90 அன்று தமிழ்ப்புத்தாண்டு நாளில் - பெரம்பூரில் உள்ள கன்னிகாபுரம் - மாநகராட்சி விளையாட்டுத் திடலில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்றுச் சிறப்பித்த இவ்விழாவிற்கு, மாண்புமிகு மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள் தலைமை தாங்கினார்.

விழாப் பணிகள் விவரம்

சென்னையில் 14.4.90 புத்தாண்டு நாளன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்ட சென்னை நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டப் பணிகள் விவரம் வருமாறு:

1. தெலுங்கு-கங்கை குடிநீர்த் திட்டப் பணிகள் தொடக்கம்: ரூ. 505 கோடி செலவில், ஆண்டுக்கு 12,000 மில்லியன் கனஅடி கிருஷ்ணா நதிநீரைச் சென்னை மாநகருக்குக் குடிநீராக வழங்கும் திட்டம்.

2. கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், கூடுதல் சுத்திகரிப்பு நிலையம் தொடக்கம்: ரூ. 3 கோடியே 71 இலட்சம் செலவில், கீழ்ப்பாக்கம் நீரேற்று நிலையத்தில், நாளொன்றுக்கு 90 மில்லியன் லிட்டர் கூடுதல் திறன்கொண்ட சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

3. குடிநீர் மற்றும் கழிவுநீர் வரிகள் - குடிநீர்க் கட்டணம் வசூலிப்பதற்கான நுகர்வோர் அட்டை அறிமுகம்.

4. நடைபாதைவாசிகளுக்கு, இரவில் தங்கும் விடுதி கட்டும் திட்டம் தொடக்கம்.

5. நகர்ப்புற நலிவுற்றோர் வீடுகள் மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்.

6. நடைபாதைவாசிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வீட்டு மனைகள் அளித்தல்.

7. நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பயிற்சிக்கான உதவித்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல்.

மாண்புமிகு தமிழ்நாடு அரசு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களும், மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்களும் மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களும் இந்த விழாவில்கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினர்.

சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத் தலைவர் திரு ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை யாற்றினார். பெரம்பூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு செங்கை சிவம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு எஸ்.கே. சர்மா, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. ஆகியோரும் இவ்விழாவில் சிறப்புரை யாற்றினார்கள்.

சென்னை மக்கள் சார்பிலும், தொகுதி மக்கள் சார்பிலும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களுக்கும் பொன்னாடை அணி விக்கப்பட்டு, நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''இந்தியாவிலேயே குடிநீர்த்தட்டுப்பாடு அதிகம் உள்ள நகரமாக நமது சென்னைதான் இருக்கிறது. சென்னைக் குடிநீர்த் திட்டத்தைச் செம்மைப்படுத்து வதற்காகப் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப் படவிருக்கின்றன. தெலுங்கு-கங்கை குடிநீர்த் திட்டப் பணிகள் முடிந்த நிலையோடு, இங்கே கிருஷ்ணா நதி நீரைச்சேகரித்து வைக்கத் தக்கபடி புழல், பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகளின் கரைகளையும் உயர்த்த வேண்டியதிருக்கிறது; புதிய நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும்; ராமஞ்சேரி, திருத்தண்டலம் ஆகிய இடங்களில் புதிய நீர்த்தேக்கங்கள் உருவாக்கும் திட்டம் இருக்கிறது.

''தெலுங்கு-கங்கைத் திட்டத்தின் முதல் கட்டத் தின்கீழ் 505 கோடி ரூபாய் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் உலக வங்கி உதவியான 300 கோடி ரூபாய் தவிர - மத்திய அரசின் வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சி நிறுவனம்

அந்த நாடகத்தில் குத்தூசி குருசாமி இரணியனாகவும், திருவாசகமணி பால சுப்பிரமணியம் பிரகலாதனாகவும் நடித்தார்கள்.

கவிதா மண்டபம்

1935-ல் ஸ்ரீசுப்பிரமணிய பாரதி கவிதா, மண்டலம் கவிதை இதழ் தொடங்கப்பெற்றது. அதன் ஆசிரியர் பாரதிதாசன். இதழ் முழுதும் கவிதைகளாகவே திகழ்ந்தது.

பாரதிதாசன் கவிதைகள்

திருமதி. குஞ்சிதம் குருசாமி அவர்கள் ஆர்வத்தால் கவிஞரின் கவிதைகளை எல்லாம் திரட்டி, கடலூர் தி.கி. நாராணயசாமி நாயுடு அவர்களின் பொருள் உதவியால் "பாரதிதாசன் கவிதைகள்" என்னும் முதல் பதிப்பை, எட்டணா விலையில் வெளியிட்டனர்.

அந்தப் புத்தகத்தில் திரு. நாயுடு அவர்களுக்குச் சமர்ப்பணம் கவிதையால் கூறியுள்ளார்.

பெரியார் பாராட்டு

சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர் என்று பெரியாரின் பாராட்டைப் பெற்றார்.

இந்திய விடுதலைக் கிளர்ச்சி

இந்திய விடுதலைக் கிளர்ச்சியை மறைமுகமாக ஆதரித்து, புரட்சியாளர்களுக்கும் தேசபக்தர்களுக்கும் இயன்ற உதவிகளைச் செய்தார்.

முத்தமிழ் மன்றம்

செட்டி நாட்டு அன்பர்கள் கூட்டுறவுடனும், பொருள் உதவியுடனும் சாந்தோம் சாலையில் 'முத்தமிழ் மன்றம்' நிறுவினார் கவிஞர். அதில் ஆடல், பாடல், நாடகம் என முத்தமிழையும் முழங்கச் செய்தார். அது ஒரு புது முயற்சி ஆகையால், மக்களிடையே அதற்கு அப்போது ஆதரவு இல்லாமல் போயிற்று.

கவிஞர் சுரதா அந்தக் குழுவில் ஓரிரு மாதம் சேர்ந்திருந்தார்.

முத்தையா அறிமுகம்

முல்லை முத்தையா, கே.ஏ.செல்லப்பா, நூர்முகம்மது ஆகிய மூவரும் கவிஞரைக் காண முத்தமிழ் நிலையம் சென்றனர்.

அப்பொழுது தோழர் முத்தையா 'கமலா பிரசுராலயம்' என்னும் பதிப்பகத்தை நடத்தி, அதில் ராஜாஜி, டி.எஸ். சொக்கலிங்கம், தினமணி ஏ.ஜி. வேங்கடாச்சாரி நூல்களை வெளியிட்டிருந்தார்.

பாவேந்தர் பயன்படுத்திய சாய்வு நாற்காலி, எழுதுபலகை கட்டில்.

முத்தையா ஒரு பதிப்பாளர் என்ற விவரத்தை நூர்முகம்மது கூறினார். 'அத்தகைய பதிப்பாளர்தாம் எனக்கு வேண்டும்'' என்று கூறி, 'அழகின் சிரிப்பு' கையெழுத்துப் பிரதியை முத்தையாவிடம் கொடுத்தார் கவிஞர்.

மூத்த மகள் திருமணம்

கவிஞரின் மூத்த மகள் சரசுவதிக்கும் கட்டிபாளையம் கண்ணப்பருக்கும் 1944-ல் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

செட்டி நாட்டில் கவிஞரின் முழக்கம்

கவிஞருக்குச் செட்டி நாட்டுத் தொடர்பு அதிகரித்தது. செட்டி நாட்டு வட்டாரத்திற்குச் சென்று சொற்பொழிவுகளை நிகழ்த்தி, இளைஞர்களிடையே புத்துணர்ச்சியையும் கவிதை ஆர்வத்தையும் உண்டாக்கினார்.

செட்டி நாட்டுச் சுற்றுப் பயணத்தின் போதெல்லாம் கானாடுகாத்தான் சுயமரியாதை வீரர் வை.சு.சண்முகம்-மஞ்சுளா பாயின் இல்லத்தில் தங்குவார் கவிஞர்.

முல்லைப் பதிப்பகம்

கவிஞர் நூல்களை வெளியிடுவதற்கென முல்லை முத்தையா, அ. திருநாவுக்கரசு செட்டியார் உதவியோடு 'முல்லைப் பதிப்பகத்தை' நிறுவினார். மிகக் கவர்ச்சியாக கவிஞரின் நூல்களை, முல்லை முத்தையா பதிப்பித்து வெளியிட்டார். அப்பொழுது முல்லைப் பதிப்பகம் பிராட்வே 59-ஆம் எண் கட்டடத்தில் இருந்தது.

இலக்கிய மண்டபம்

முல்லைப் பதிப்பகத்துக்குக் கவிஞர் அடிக்கடி வருவார்; தங்குவார். கவிஞரைக் காண அங்கே புதுமைப்பித்தன், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார், நாரண துரைக்கண்ணன், பேராசிரியர் அன்பழகன்



காஞ்சி மணிமொழியார், கொத்தமங்கலம் சுப்பு, 'சக்தி' ஆசிரியர் தி.ஜ.ர., டி.வி. நாராயணசாமி, கலைஞர் டி.கே. சண்முகம், கவிஞர் கம்பதாசன், கவியரசு கண்ணதாசன், மே. சக்கரவர்த்தி நயினார், எஸ்.வி. லிங்கம் ஆகியோர் வருவார்கள். அப்பொழுதெல்லாம் முல்லைப்பதிப்பகம் ஓர் இலக்கிய மண்டபமாகவே காட்சி அளிக்கும்.

அறிஞர் அண்ணா

அறிஞர் அண்ணா அவர்களும் சென்னைக்கு வரும் போதெல்லாம் முல்லைப் பதிப்பகத்துக்கு வருகை புரிவார். அவரைக் காண இயக்கத் தோழர்கள் பலர் வருவார்கள்.

புதுவையில் சொந்த வீடு

முல்லைப் பதிப்பகத்துக்கும் கவிஞருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. பொதுவாக பதிப்பாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் நில்வுகின்ற ராயல்டி முழுஉரிமை போன்ற பிரச்சனைக்கே இடமில்லை. கவிஞரின் தேவைக்கெல்லாம் அவ்வப்போது முத்தையா பணம் கொடுத்து வந்தார்.

புரட்சிக் கவிஞரின் 'பிசிராந்தையார்' நாடக நூலுக்கு 'சாகித்திய அகதெமி' 1969ம் ஆண்டிற்கான பரிசு வழங்கியது.

முல்லை முத்தையா அவர்களின் முயற்சியினால், புதுவையில் கவிஞர் சொந்த வீடு வாங்கினார்.

முல்லை முதுவல்

1946-ல் முல்லை மாத இதழை முல்லை முத்தையா தொடங்கினார். அதன் ஆசிரியரும் உரிமையாளரும் அவரே. கவிஞர் அதன் ஆதரவாளர். கவிஞரின் கவிதையும், கவிஞரைப்பற்றிய சுவையான கருத்துகளும், அறிஞர் பலருடைய கட்டுரைகளும் தாங்கிச் சிறப்பாக வெளிவந்தது. வாசகர்களிடையே 'முல்லை'க்கு நல்ல வரவேற்பு காணப்பட்டது.

''முல்லையின் முயற்சியில தமிழ்த்தாய் அரியாசனம் ஏறுவாள்'' எனத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பாராட்டுத் தெரிவித்தார்.

கவிஞரைப் பற்றிய முதல் நூல்

1946-ல் கவிஞரைப் பற்றி முதன் முதலாக அறிஞர்கள், புலவர்கள், கவிஞர்கள், மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் ஆகியோரிடமிருந்து முல்லை முத்தையா பெருமுயற்சி எடுத்து, கட்டுரைகள், கவிதைகள், வாழ்த்துரைகள் சேகரித்துப் 'புரட்சிக் கவிஞர்' என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார். அந்நூல் நான்கு பதிப்புகள் வெளிவந்துள்ளது.

'பாரதியாருக்குப் பிறகு நான் பாராட்டக் கூடிய கவிஞனே இல்லை' என்று கூறிய நாவலர் சோமசுந்தர பாரதியாருக்கு முல்லை முத்தையா கவிஞரின் நூல்களைக் கொடுத்து அறிமுகப்படுத்தினார்.

நிதிக்குழு அமைப்பு

முல்லைப் பதிப்பகத்தில் 1946-ல் கவிஞருக்கு நிதி திரட்டி அளிப்பதற்காக கவிஞரிடம் அபிமானம் கொண்ட பலர் சேர்ந்து குழு அமைத்தனர். அறிஞர் அண்ணா பொருளாளராகவும், டி.என். ராமன், முல்லை முத்தையா செயலாளராகவும் இருந்தனர்.

அவ்வப்போது குழுவில் சிலரைச் சேர்த்து, பின்னர் காஞ்சிக்கு மாற்றப் பட்டது.

'கல்கி' ஆசிரியர் திரு.ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களை முல்லை முத்தையா சந்தித்துப் பேசி, நிதிக்குழு அறிக்கையைக் 'கல்கி' இதழில் வெளியிடச் செய்தார்.

நிதி அளிப்பு

சென்னை பச்சையப்பன் விளையாட்டுத் திடலில் 1946 ஜூன் மாதம் 29-ல் நாவலர்

TNPSC

விளம்பர எண்: 11/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

30.9.1989 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினத்தந்தி ஆகிய நாளிதழ்களிலும் 7.10.89 அன்று இந்து நாளேட்டிலும் வெளியிடப்பட்ட தேர்வாணைய விளம்பர எண் 55, நாள் 21.9.89-ன் தொடர்ச்சியாக கீழ்க்காணும் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு தொகுதி இரண்டு மற்றும் தொகுதி மூன்றில் அடங்கிய கூட்டுறவுச் சார்நிலைப்பணி முதுநிலை ஆய்வாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட நடத்தப்படும் நேரடிப் போட்டி முதனிலைத் தேர்வுக்கு உடல் ஊனமுற்ற நபர்களிடமிருந்து மட்டும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட காலியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

21.9.89 நாளிட்ட விளம்பர எண் 55-ல் கோரியபடி முதுநிலை ஆய்வாளர் பதவிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த உடல் ஊனமுற்ற விண்ணப்பதாரர்கள், அவர்களது விண்ணப்பங்களில் உடல் ஊனமுற்றவர் எனக் குறிப்பிடாமலிருந்தாலும் தகுந்த மருத்துவச் சான்றிதழ் அனுப்பாமலிருந்தாலும் புதிதாக விண்ணப்பம் அனுப்பத் தேவையில்லை. அவர்கள் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விபரத்தினை செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 என்ற முகவரிக்கு கடிதம் எழுதித் தெரிவித்தால் போதுமானதாகும். முந்தைய விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த தேர்வு மையத்தின் பெயரையும் கடிதத்தில் தவறாமல் குறிப்பிட வேண்டும். விண்ணப்பிப்பவர்கள், அப்பதவிக்குத் தகுதியானவர்களாய் இருப்பதுடன் அவர் உடல் ஊனமுற்றவர் என்றும், அந்த ஊனம் தெரிவு செய்யப்படும் பதவியில் செவ்வனே பணியாற்ற தடையாக இருக்காதென்றும் தமிழக அரசுப்பணிகளில் பணியாற்றும் உதவி அறுவை மருத்துவ அலுவலர் அல்லது அதற்கு மேற்பட்ட நிலையில் இருக்கும் மருத்துவ அதிகாரியிடமிருந்து 1.4.90க்குப் பிறகு பெறப்பட்ட சான்றிதழின் நகலை அனுப்பி வைக்கவேண்டும். மேற்கண்ட விவரங்களுடன் கூடிய சான்றிதழுடன் பெறப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பட்டியல்

வ. எண்	பணி மற்றும் பதவியின் பெயர்	பதவிகளின் எண்ணிக்கை	சம்பள ஏற்ற முறை	1.7.89 அன்று வயது	கல்வித்தகுதி	குறிப்புரை
1.	தொகுதி 2 தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவுச் சங்கங்களில் முதுநிலை ஆய்வாளர் (எல்லா வகுப்பினரும்)	1	மாதம் ஒன்றுக்கு ரூ.1400-40-1600-50-2300-60-2600	30 வயதிற்குள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினருக்கு வயது வரம்பு இல்லை.	பல்கலைக்கழக மானியக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஏ., பி.எஸ்.சி. அல்லது பி.காம். பட்டம் அல்லது மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பி.பி.ஏ. பட்டம் அல்லது பாரதியார் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட பி.ஓ.எல். பட்டம் அல்லது ஊரகப் பணியில் பட்டயம் அல்லது பட்டயக் கணக்கர்களுக்கான நிலையங்களில் இணை உறுப்பினர்களுக்கான பட்டயம்.	
2.	தொகுதி 3 தமிழ்நாடு கூட்டுறவு சார்நிலைப்பணியில் கூட்டுறவு சங்கங்களின் முதுநிலை ஆய்வாளர்	1	மாதம் ஒன்றுக்கு ரூ.1400-40-1600-50-2300-60-2600.	வயது வரம்பு இல்லை	இன்டர்மீடியட் அல்லது புகுமுக வகுப்பு அல்லது மேல்நிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.	தாழ்த்தப்பட்ட வகுப்பினர்/தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் தேர்வாணைய அலுவலகத்தில் வந்துசேர வேண்டிய கடைசி நாள்: 15.5.90, மாலை 5.45 மணிக்குள்.

நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும், விண்ணப்பப்படிவமும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பம் கோரும் மனு தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயரைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, ரூபாய் ஐந்துக்கு அஞ்சல்வில்லை ஒட்டப்பட்ட சுயவிலாசமிட்ட உறையுடன் அனுப்பப்பட வேண்டும். கோரிக்கை பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப் பட்டிருக்கவேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR 873/MS/90/SAS1

இலவச அரிசி வழங்கு விழா

தமிழ்ப்புத்தாண்டையொட்டி, ஏழை எளிய மக்களுக்குத் தமிழக அரசின் இலவச அரிசி வழங்கும் விழா 11.4.90 அன்று சென்னை, துறைமுகம் தொகுதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்களும் பங்கேற்ற இந்த விழா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் நியாய விலைக் கடைகளின் சார்பில் நடத்தப்பட்டது.

விழாவின் தொடக்கத்தில்- உணவு, நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவுத்துறை அரசுச் செயலாளர் திரு. இரா. பூரணலிங்கம் இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

அரசு தலைமைச் செயலாளர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப., அவர்கள் தமது முன்னிலை உரையில்- ''ஏழை எளிய மக்களும் மகிழ்வோடு விழாக்களைக் கொண்டாட வேண்டும் என்ற வகையில் சென்ற ஆண்டு 82 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்த இத்திட்டம், மாண்புமிகு முதல்வர் அவர்களால் இப்போது 121 இலட்சத்திற்கும் அதிகமான குடும்பத்தார்களுக்குப் பயனளிப்பதாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது'' என்றார்.

விழாவுக்குத் தலைமை தாங்கிய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. பொன். முத்துராமலிங்கம் அவர்கள், தமது தலைமையுரையில்,-

''சென்ற ஆண்டு இந்த இலவச அரிசி, மாத வருமானம் முந்நூறு ரூபாய்க்கும் குறைவாக உள்ளவர்களுக்கு வழங்கப்பட்டது; பிறகு அத்திட்டம் மறு ஆய்வு செய்யப்பட்டு, மாத வருமானம் ஆயிரம் ரூபாயும் அதற்குக் குறைவாகவும் உள்ளவர்களுக்கு ஆண்டுக்கு மூன்று முறை வழங்க முடிவு செய்யப்பட்டது. இதன்படி சுமார் 60,741 டன் அரிசி ஒவ்வொரு முறையும் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு ஒரு முறை அரிசி வழங்க, அரசுக்குச் சுமார் 12 கோடி ரூபாய் செலவாகிறது'' என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து - மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், இவ்விழாவில் இலவச அரிசி வழங்கிப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றும்போது குறிப்பிட்டதாவது:

''சமுதாயத்திற்காகப் பல நன்மைகளை ஒரு அரசு செய்யும்போது அதிலே நலிவுற்ற மக்களுக்கு நன்மை போய்ச்சேர வேண்டும் என்று ஒரு அரசு கருதும்போது- அந்த நன்மைகளைப் பெறுகின்ற மக்களும் அரசோடு ஒத்துழைக்க வேண்டும். அந்த நன்மைகளை மக்களிடத்திலே கொண்டு போய்ச் சேர்க்கின்ற பெரிய அதிகாரிகளிலிருந்து கடைசியாக இருக்கின்ற கடைநிலை ஊழியர்

சங்கு நாதம்
எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்!
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே

(ஹட்கோ) 125 கோடி ரூபாயும், ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (எல்.ஐ.சி.) 50 கோடி ரூபாயும் வழங்கும். இத்திட்டம், சென்னை நகர வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

"நடைபாதைவாசிகள் தங்குமிடம் எல்லா மாநிலங்களிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதேபோல், சென்னையில் உள்ள கண்ணப்பர் திடலில் 120 நடைபாதைவாசிகளும், பேசின் பாலத்தில் 160 நடைபாதைவாசிகளும், தங்குவதற்குத் தகுந்தாற்போல் விரைவில் விடுதிகள் கட்டப்படும்; இதற்காக மத்திய அரசு ஒரு நபருக்கு இரண்டாயிரம் ரூபாய் வீதம் மொத்தம் எட்டு இலட்சம் ரூபாயும், ஹட்கோ இருபது இலட்சம் ரூபாய் கடனும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பத்து இலட்ச ரூபாயும் அளிக்கும். இவ்விடுதிகளில் தங்க, ஒருவருக்கு ஒரு ரூபாயிலிருந்து ரூபாய் 1.50 வரை வசூலிக்கப்படும்.

"இந்தியாவிலேயே முதன்முதலாகத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்ட மாநிலம் நமது தமிழ்நாடுதான்; அறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அந்தச் சாதனை, அரசு மூலம் நிறைவேற்றப்பட்டது. அதேபோல், நம்முடைய கலைஞராட்சிக் காலத்தில்தான் இந்தியாவிலேயே முதன்முதலாகக் குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்பட்டு, ஏழை-எளிய மக்களுக்காக அடுக்கு மாடி வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன."

—இவ்வாறு மாண்புமிகு மத்திய அரசு நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

இதன்பின், மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் - சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கல் அமைப்பின் 75 ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்பு மலரை வெளியிட்டார்; முதல் மலரை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின் றாரே!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?

சென்னைக் குடிநீர் வாரிய விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோருக்குப் பரிசுகள் வழங்கியும்- சென்னைப் பெருநகர மேம்பாட்டுத் திட்டப்பணிகளைத் தொடங்கி வைத்தும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ள திட்டங்களில் மிக முக்கியமான திட்டம் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குகின்ற திட்டமாகும். சென்னை மாநகரம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் மிகுந்த இன்னலுக்கு ஆளாகியிருப்பதை உணர்ந்துதான் தெலுங்கு-கங்கைத் திட்டத்தை, இன்று நேற்றல்ல; 1970-ம் ஆண்டிற்கு முன்பிருந்தே தமிழக அரசின் சார்பாக மேற்கொண்டோம்.

"அன்றைக்கிருந்த ஆந்திர முதலமைச்சரோடு தொடர்பு கொண்டோம்; மத்திய அரசோடு தொடர்பு கொண்டோம். ஆனால் அன்றைக்கிருந்த மத்திய அரசு, மாநிலத்தினுடைய கோரிக்கையைக் காதிலே போட்டுக் கொள்ளாமலே காலங்கழித்து, 1976-ஆம் ஆண்டு வரையில் அதைப்பற்றிச் சிந்தனை செய்யாமலே இருந்த காரணத்தாலேதான்- அவர்களுடைய அலட்சியத்தை எண்ணிப் பார்த்து, 'தெலுங்கு-கங்கை வருகிறபோது வரட்டும்; அதற்கிடைக் காலத்திலே ஓரளவாவது சென்னை மக்களுடைய தாகத்தைத் தீர்க்கின்ற வகையில் வீராணம் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் தொடங்கி வைத்த- அடிக்கல் நாட்டிய- அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்த நேரத்திலே ஈடுபட்டேன்.

"ஆகையால், அதிலே ஏற்பட்ட எதிர்பாராத சில காரணங்களினால்- ஒப்பந்தக்காரரே மறைந்துவிட்ட காரணத்தால்-அந்தத் திட்டத்தை அரசே ஏற்று நடத்துவதென்று அமைச்சரவையிலே ஒரு முடிவெடுத்து, அமைச்சரவைக் கூட்டத்திலே எடுக்கப்பட்ட அந்த முடிவை அன்றைக்கிருந்த மத்திய அரசிற்கு அன்னை இந்திரா காந்தியின் அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தோம். அதையும் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ளாதது மாத்திரமல்ல; நான் எழுதிய அந்தக் கடிதத்தினையும், கோப்புகளையும் கையிலேயே வைத்துக் கொண்டு, அங்கீகாரம் வழங்காமலே இருந்தார்கள்.

"இந்தக் கால கட்டத்திலேதான் இங்கே மத்திய அமைச்சர் மாறன் குறிப்பிட்டதைப் போல், எமர்ஜென்சி பிரகடனப்படுத்தப்பட்டது. ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெரும் பொறுப்பு நமக்கு இருக்கிற காரணத்தால் அன்றையதினம் நாம் எமர்ஜென்சியை ஆதரிக்கவில்லை. ஆதரிக்காதது மட்டுமல்ல; எதிர்த்த காரணத்தால் கழக ஆட்சி 76-ஆம் ஆண்டு தொடக்கத்தில் கலைக்கப்பட்டதென்பது உங்களுக்குத் தெரியும். அப்படிக் கலைக்கப்பட்ட பொழுதுதான், அன்னை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டுத் தமிழ்நாட்டுக்கு எவ்வளவோ நன்மைகளையெல்லாம் செய்யப் போகிறேன் என்று கூறி, அதிலே ஒரு நன்மையாகத்தான் சென்னை மாநகருக்கு கிருஷ்ணா தண்ணீரை வழங்கப் போகிறேன் என்று அறிவித்தார்கள்.

கல்வி இல்லாத பெண்கள்
களர்நிலம்! அந் நிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!

பிறகு தமிழகத்தின் முதலமைச்சர், ஆந்திர முதலமைச்சர், இந்தியப் பிரதமர் ஆகியவர்களெல்லாம் கலந்து கொள்கிற ஒரு பெரிய விழா நடத்தி, தெலுங்கு-கங்கை திட்டத்திற்குத் தொடக்கத்தைச் செய்தார்கள்.

"தொடக்கம்தான் நடைபெற்றதேயல்லாமல் அதன் பிறகு ஒரு ஐந்தாறு ஆண்டுக்காலம் அந்தத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. 40 அல்லது 45 கோடி ரூபாய் ஆந்திரத்திற்கு அந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு அளித்தது. அதன் பிறகு ஒப்பந்தப்படி பணம் அனுப்பப்படாத காரணத்தால், ஆந்திரப்பகுதியில் தெலுங்கு-கங்கைத்திட்டத்திற்காக நடைபெற வேண்டிய பணிகள் நடைபெறாமலேயே நின்று விட்டன.

"மீண்டும் கழக ஆட்சி வந்தது. இந்த ஆட்சி வந்தவுடன் ஏற்கெனவே தொடங்கிய வீராணம் திட்டம், நாம் எதிர்பாராமல் கிடைத்த கிருஷ்ணா திட்டம் இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து, கிருஷ்ணாநதித் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாமென்று முடிவு எடுத்து, உடனடியாக, இங்கே நமது தலைமைச் செயலாளர் குறிப்பிட்டதைப்போல், ஆந்திரத்திற்குச் சென்று முதலமைச்சராக இருந்த என்.டி. ராமாராவ் அவர்களைச் சந்தித்துப் பேசி மீண்டும் சென்னைக்கு, கிருஷ்ணா நதித் தண்ணீர் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை இருசாராரும் ஒப்புக்கொண்டு, மேலும் தரவேண்டிய தொகையையும் அவர்களுக்குத் தந்தோம்.

"அடுத்து என்.டி.ராமாராவ் அவர்களுடைய ஆட்சி, கடந்த தேர்தலிலே மாற்றப்பட்டு அங்கு காங்கிரஸ் கட்சியின் ஆட்சி சென்னா ரெட்டி அவர்களின் தலைமையில் அமைந்தபோது சில பேர் சந்தேகப்பட்டார்கள். அங்கே ஆட்சி மாறி இருக்கிறதே, சென்னைக்குத் தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேறுமா என்று! அந்த அச்சத்தைப் போக்குகின்ற வகையில் முதலமைச்சர் சென்னா ரெட்டி அவர்கள் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமென்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்தார். அவரைப் பாராட்டி, கடந்த ஆளுநர் உரையிலேயே அவருக்கு நன்றி தெரிவித்தோம்.

"பாராட்டு, நன்றி இவைகளோடு முடிந்துவிடாமல், நானும், நம்முடைய அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் மீண்டும் ஒரு முறை ஐதராபாத்திற்குச் சென்று, சென்னாரெட்டியைச் சந்தித்து, மேலும் தரவேண்டிய தொகையை அவர்களுக்குத் தந்து இந்தத் திட்டத்தை விரைவில் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

"அங்கிருந்து ஆந்திர மாநில அதிகாரிகள் சென்னைக்கு வந்தார்கள்; நம்முடைய தலைமைச் செயலகத்திலே நானும், அமைச்சர்களும், அந்த அதிகாரிகளோடு கலந்துபேசி, இந்தத் திட்டத்தை- எப்படியும் 92-ஆம் ஆண்டு இறுதிக்குள்- 93-ஆம் ஆண்டு தொடக்கத்தில்- சென்னை நகரவாசிகள் தெலுங்கு கங்கைத்தண்ணீரைக் கையில் எடுத்து அதை அருந்துகின்ற காட்சியை நாங்கள் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

"அப்படியானால் இன்றைக்கு நடைபெறுகின்ற விழா, என்ன விழா?

"92-ஆம் ஆண்டு இறுதியிலே கிருஷ்ணா தண்ணீர் தெலுங்கு-கங்கை என்ற பெயரோடு சென்னை நகரத்திற்குள் வருகிற நேரத்திற்குள், அதைப் பயன்படுத்திக் கொள்கின்ற முன்னேற்பாடுகளுக்கான அடிக்கல் நாட்டு விழாதான் இன்றைக்கு நடைபெறுகிறது. அந்தத் திட்டத்திற்கு கிருஷ்ணா தண்ணீர் சென்னை எல்லையைத் தொடுகிறவரையிலே ஆகக்கூடிய செலவு ஏறத்தாழ 300 கோடியைத் தாண்டும். ஏற்கெனவே போட்ட திட்டத்தைவிட நூறு அல்லது நூற்று இருபது கோடி ரூபாய் அதிகமாகும். சென்னைக்குள் அது வந்தபிறகு, அதைப் பயன்படுத்திக் கொள்ள நாம் தொடர்ந்து செய்ய வேண்டிய செலவு ரூ.500 கோடியைத் தாண்டும்.

"மொத்தத்தில் 800 கோடியைத் தாண்டக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை நாம் நிறைவேற்ற இருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதைப்போல் 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!' என்கின்ற அந்த உறுதியோடும், அந்தக் குறிக்கோளோடும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு இந்த அரசாகும். அதைப்போலவே 'சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று தேர்தல் நேரத்திலே அளித்த வாக்குறுதியைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிற அரசு தி.மு.கழக அரசு. அந்த அரசிற்குத் துணையாக இன்றைக்கு டில்லியிலே இருக்கின்ற தேசிய முன்னணி அரசு நாம் போடுகின்ற திட்டங்களுக்கெல்லாம் கூடுமானவரையில் அங்கீகாரம் அளித்து அந்தத் திட்டங்கள் வெற்றிகரமாக நடைபெறுகின்ற உதவிகளைச் செய்து வருகின்றது.

"இப்படி ஏழை-எளியோர்கள் கிராமப்புறத்து மக்கள், மாநகரங்களில்கூட சந்து, பொந்துகளிலே வாழ்கின்றவர்கள், சேரிகளில் வாழ்கின்றவர்கள், குடிசைப் பகுதிகளில் வாழ்கின்றவர்கள் ஆகியோருடைய நல்வாழ்வை மையமாக வைத்து இந்த அரசு, தொடர்ந்து தன்னுடைய பணிகளை ஆற்றும் என்ற உறுதியினை உங்களுக்குத் தந்து அதனுடைய அடையாளமே இந்த விழா என்று கூறிக் கொள்கிறேன்."

–இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு:
பி.எல்.ஆர்.



சீர்திருத்தக் கவிஞர்

மன்னை ப. நாராயணசாமி

ஓர் இனம் அறியாமையின் காரணமாக ஏமாற்றப் பட்டு அழிந்து கொண்டிருப்பதைக் கண்டு நெஞ்சு பொறுக்காத நிலையில் ஒவ்வொரு காலகட்டத்திலும் சமுதாய நல்வாழ்விற்குப் பாடுபடப் பெருமக்கள் பலர் தோன்றி, எத்தனையோ வதைகளை அவர்கள் ஏற்று, சுரண்டுபவர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றியும் பெறாது மடிந்துள்ளனர். இதுபோன்ற சரித்திரங்கள் பல, உலகில் உண்டு.

அதேபோல் தமிழ் இனம் வறுமைக்கோட்டிற்குக் கீழே வாடுகின்ற நிலையை அறிந்து அதற்கான காரணங்களை நன்றாக உணர்ந்த பெருமக்கள் சிலர் அவரவர் காலத்தில், பல கருத்துக்களைச் சொல்லியும் அதற்காகப் போராடியும், குறுகிய காலத்தில் அழிந்து பட்டிருக்கின்றார்கள். அவர்கள் விட்டுப்போன கொள்கைகளையும் ஆக்கபூர்வமான வழிகளையும் கண்டு கடுமையான எதிர்ப்புகளுக்கிடையே தந்தை பெரியார் அவர்கள் தன் 96-ஆம் ஆண்டு வரையில் தமது வழியில் போராடியும், கொள்கை முழக்கங்களை நிலை நிறுத்தியும் சென்றுள்ளார்கள்.

அவ்வழியில்தான் தமிழனுடைய, ஏன், மனிதனுடைய வளர்ச்சிக் கொள்கைகளைப் பாவேந்தர் தம் பாக்களால் பறை சாற்றினார். இவருக்கும் பல முனைகளில் எதிர்ப்புகள்! பயந்தாரா? இல்லை!!

''கடவுள்கடவுள் என்றெதற்கும்
கதறுகின்ற மனிதர்காள்
கடவுள்என்ற நாமதேயம்
களறிடாத நாளிலும்
உடமையாவும் பொதுமையாக
உலகுநன்று வாழ்ந்ததாம்

சுய மரியாதைகொள் தோழா!- நீ
துயர்கெடுப்பாய் வாழ்வில்
உயர்வடைவாயே!

ஒண்தமிழ்த்தாய் சிலம்படியின்
முன்னேற்றம் ஒவ்வொன்றும்
உன்முன் னேற்றம்!

கடையர் செல்வர் என்ற தொல்லை
கடவுள்பேர் இழைத்ததே

கடவுள் என்ற சொல் வந்த பிறகுதான் உழைப்பவன், சுரண்டுபவன், அடிமை, அரசன் என்ற பேதங்கள் உண்டானது என்பதை இவ்வாறு சிறப்பாக எடுத்துச் சொன்ன சீர்திருத்தக் கவிஞர் இவர்தான்.

தத்தம் மதம்தான் பெரிதென்று, பித்தர் போல் அலைந்து போராடிச் சாகின்ற இந்தச் சமுதாயத்திற்கு

பொன்னாடையும், பொற்கிழியும் வழங்கப்பட்ட மறுநாளில் எடுக்கப்பட்ட படம். பாவேந்தருடன், பேரறிஞர் அண்ணா, என்.வி. நடராசன், டி.வி. நாராயணசாமி மற்றும் பல நண்பர்கள் உள்ளனர்.

வரை அவர்களும் ஆர்வத்தோடு, இதய சுத்தியோடு பாடுபட வேண்டும். இல்லாவிட்டால் என்னதான் பெரிய திட்டங்களை ஒரு அரசாங்கம் தீட்டினாலும் கூட, அது போய்ச் சேர வேண்டியவர்களுக்குப் போய்ச் சேராமல் இடையிலே எங்கெங்கோ தங்கிவிடும்.

"இந்த ஆண்டு நியாய விலைக் கடைகளில் அரிசிவிலையை,சற்றே ஏற்ற வேண்டிய சூழ்நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கின்றது, உங்களுக்குத் தெரியும். கடந்த ஆண்டு இந்த அரசு பொறுப்பேற்றபோது- பொறுப்பேற்ற மறுநாளே மத்திய சர்க்கார் அரிசி விலையை ஏற்றி விட்டது. இருந்தாலும் நாங்கள் ஏற்றப் போவதில்லை என்று சொன்னோம். மீண்டும் மீண்டும் தொடர்ந்து மத்திய சர்க்கார், அரிசி விலையை ஏற்றிய காரணத்தினாலும் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களில் எல்லாம் இப்பொழுது நாம் இன்றைக்கு விற்கின்ற விலையைவிட இருபது காசு, முப்பது காசு, ஐம்பது காசு அதிகம் வைத்து அரிசி விற்கப்படுகின்ற காரணத்தாலும், நாம் இங்கே சற்று அரிசி விலையை உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது.

"இந்த அரசாங்கம் பொது மக்களுக்கு நியாய விலைக் கடைகள் வாயிலாக அரிசியை வழங்குகின்றதென்றால்- தஞ்சை, திருச்சி, தென் ஆர்க்காடு போன்ற வேறு சில மாவட்டங்களிலே கூட நாம் நெல்லைக் கொள்முதல் செய்து அரிசி ஆக்க வேண்டியிருக்கின்றது. விவசாயிகள் தங்களுடைய இடுபொருள்களின் விலை அதிகமாகிவிட்ட காரணத்தாலும், விவசாயத் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய ஊதியம்- நாள் ஊதியம் அதிகமாகிவிட்ட காரணத்தாலும், கொள்முதல் விலையை ஏற்றிக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். கொள்முதல் விலையைக் கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 25 ரூபாய் அதிகமாக ஏற்றி நெல்லை விளைவிக்கின்ற விவசாயிகளுக்குத் தருகின்றோம். அது மாத்திரமல்ல; அஃதன்னியில் மேலும் 35 ரூபாய் அவர்களுக்குப் போனசாகவும் தருகிறோம்.

"எனவே விவசாயிகளிடத்திலே இருந்து கொள்முதல் செய்கின்ற அரிசியின் விலை அதிகமாக இருக்கின்றது. அது நமக்குப் போதுமானதாக இல்லாத காரணத்தால் மாதம் ஒன்றுக்கு 75 ஆயிரம் டன் மத்திய அரசிடமிருந்து வாங்குகிறோம். அதனுடைய விலையும், இங்கே விற்கப்படுகின்ற விலையைவிட அதிகமானது. அதைக்கொண்டு வந்து சேர்க்கின்ற வரையில்- அந்த அரிசியின் விலையை வைத்துப் பார்த்தால் இதைவிட அதிகமாகக் கொடுக்க வேண்டியிருக்கின்றது.

"மத்திய சர்க்கார் கொடுக்கின்ற அரிசியும், மாநிலத்திலே நாம் கொள்முதல் செய்கின்ற அரிசியும் போதாமல் பக்கத்து மாநிலங்களிலேகூட நாம் விலை கொடுத்து அரிசியை வாங்க வேண்டியிருக்கிறது. அந்த விலையும் அதிகமாக இருக்கிறது. இப்படி அதிக விலை கொடுத்து விவசாயிகளிடமிருந்தும், பக்கத்து மாநிலங்களிலேயிருந்தும், மத்திய சர்க்காரிடமிருந்தும் நாம் அரிசியை வாங்குகின்ற காரணத்தால், நமக்கு நியாய விலைக் கடைகளின் மூலமாக அரிசியை விற்பதில் இந்த அரசாங்கத்திற்கு ஏற்படுகின்ற நஷ்டம் சுமார் 180 கோடி ரூபாய்.

"அதையன்னியில் சத்துணவுத்திட்டத்திற்காக- குழந்தைகளுக்குச்சத்துணவு வழங்குவதற்காக நாம் அதிக விலை கொடுத்து அரிசியை வாங்கி, அதைக் குழந்தைகளுக்கு இலவசமாக, சத்துணவிற்காக வழங்குகின்ற வகையில் 100 கோடி ரூபாய் நஷ்டத்திற்கான பொறுப்பை இந்த அரசாங்கம் ஏற்க வேண்டியிருக்கின்றது. ஆயிரம் ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருமானமுள்ள ஏழை எளிய நடுத்தர மக்களுக்காக,மூன்று பண்டிகைகளுக்கு இலவச அரிசி வழங்க பண்டிகை ஒன்றுக்கு 12 கோடி ரூபாய் வீதம், மொத்தம் 36 கோடி ரூபாய் நஷ்டத்தையும் இந்த அரசு ஏற்க வேண்டியிருக்கின்றது. எனவே ஏறத்தாழ 320 கோடி ரூபாய் மானியம்- அந்த நஷ்டத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டு இந்த அளவிற்கு விலையை ஓரளவிற்கு உயர்த்தியும்கூட 320 கோடி ரூபாய் நஷ்டம் என்கின்ற சூழ்நிலையிலேதான் அரிசி உங்களுக்கு வழங்கப்படுகின்றது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"36 கோடி ரூபாய் செலவழித்து இலவச அரிசி வழங்குகிறோமென்றால், ஏதோ கருணாநிதி வீட்டிலேயிருந்து கொண்டுவந்து வழங்கிடவில்லை. நீங்கள் தருகின்ற வரிப் பணம்- நீங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தருகின்ற வரிப் பணம்- அரசாங்கத்தின் கருவூலத்திற்கு வந்து, அது திரும்பவும் உங்களுக்குக் கிடைக்கின்ற நிகழ்ச்சிதான் இந்த நிகழ்ச்சியே தவிர வேறல்ல. ஆனால், இதைக்கூடச் செய்யாத அரசுகள் உண்டு. நம்முடைய அரசு, நீங்கள் தருகின்ற வரிப்பணத்தை உங்களுக்கே பயன்படுத்துகின்ற அரசாங்கமாக இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு இந்தப் பணியினைச் செய்கிறோம்".

விழா முடிவில்-தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. டி.ஆர். சீனிவாசன் நன்றி கூறினார்.

-நிகழ்ச்சித்தொகுப்பு
பி.எல். ராஜேந்திரன்

தமிழ் அமுது!

தமிழுக்கும் அமுதென்று பேர்- அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர்- இன்பத்
தமிழ்எங்கள் சமுகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர்- இன்பத்
தமிழ் எங்கள்வாழ்வுக்கு நிருமித்த ஊர்!

சூரிய விளக்கே

கவிஞர் அரசு மணிமேகலை

புரட்சிப்பிதா மகனே!
புதுயுக நெம்புகோலே!
சுயமாய் ஒளிதந்த
சூரிய விளக்கே!

கண்ணுக்குள் நிலவிய
கனவு மயக்கத்தைக்
கவிதைகள் மூலம்
கணத்தில் துடைத்தாய்!
புதுயுக விடியலுக்குப்
பூபாளம் இசைத்தாய்!

மனவயல்களில்
அன்று
மடமைப்பூக்களே
மண்டிக் கிடந்ததால்
கவிதை அரிவாளால்
களையெடுக்க முயன்றாய்!

முதுகெலும்புகளைத்
தாங்களே
முறித்துக் கொள்ளவும்
தயாராயிருந்த
அடிமைக் குணத்தவரை
உன் பாடல்களே
அமில குணத்தவராய்
மாற்றின...

வேட்டுப்போல்
வந்தவுன்
வீரக் கவிதையல்லவா
தூக்கத்தில் கிடந்த
நம்மக்களைத்
தூக்கி நிறுத்தி வைத்தது?

மூடப்பழக்கத்தின்
முதிர் இருளால்
நாடு
முற்றுகைக்கு
ஆளானபோது
நீயல்லவா
கவிதைக் கதிரவனாய்க்
கண்ணுக்கு
ஒளிதந்தது?

கோணல் முதுகுகளே
குலச்சொத்து
என்றவரை
வீரநடை
நடக்க வைக்க
வித்தகன் நீ
செய்ததென்ன?

'நீர்ப்பறவையா
பெண்?
இல்லையில்லை.
நெருப்புப் பறவை'
என்று
அனைவர்க்கும்
பெண்ணை
அடையாளம் காட்டினாய்.

பூமிக்கு வந்த
புரட்சிப்பெரு நெருப்பே!
நெருப்புப் பறவையின்
நெஞ்சார்ந்த வணக்கங்கள்...

புது நெறி நிலைநாட்டுவோம்

கவிஞர் பொன்னடியான்

உலகப் பெருங்கவி
ஒப்பிலாப் புகழ்க்கவி
தலைமைத் தமிழ்க்கவி
தமிழின் உயிர்க்கவி
எங்கள் புரட்சிக்கவி- அவன்
என்றும் புதுமைக்கவி!
பாரதி தாசனின்
புகழ்பாடுவோம்! - அந்தப்
பாட்டுத் தலைவன்நல்
வழி நாடுவோம்!

மானிடர் ஆற்றலை
மதித்து வணங்கினான்!
மானமிகு கொள்கை
விதைத்து விளங்கினான்
எங்கள் புரட்சிக்கவி!- எம்
இதயத் துயர்ந்தகவி - தந்த
நிகரிலாப் புதுநெறி
நிலை நாட்டுவோம்!- அவன்
நினைவினை மனம் ஏற்றித்
துயர் ஓட்டுவோம்!

மனிதரின் மனவயல்
உழ, பாடுபட்டவன்!
இனிய அன்புப்பயிர்
நடவினை நட்டவன்
எங்கள் புரட்சிக்கவி!-மன
இருட்டை விரட்டுங்கவி!- அந்த
வேங்கையின் பெருமைகள்
நாம் போற்றுவோம்! - பழம்
விதிமாற்றிச் சமநீதிக்
கொடி ஏற்றுவோம்!

தொழிலாளர் தடக்கை

நீர்கனல் நல்ல நிலம் வெளி காற்றென
நின்ற இயற்கைகளே! உம்மைச்
சாரும் புவிப்பொருள் தந்ததெவை? தொழி
லாளர் தடக்கைகளே!

இந்நிலை ஏன் வந்தது தெரியுமா? புரட்சிக் கவிஞரே கூறுகிறார். 'அண்டுபவரை அண்டாவகை செய்வது எது? மதங்கள் அன்றோ?'

"இருட்டறையில் உள்ளதடா உலகம் - சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!
வாயடியும், கையடியும் மறைவதெந் நாள்?
கருட்டுகின்றார் தம்கையில் கிடைத்தவற்றை
சொத்தெல்லாம் தமக்கென்றேசொல்வார் தம்மை
விரட்டுவது பகுத்தறிவே!!!

இவ்வாறு இந்தக் கொள்கைகளை அஞ்சாது உரைத்த ஒரே கவிஞர் பாவேந்தர்தான். ஆதலினால் பகுத்தறிவுள்ள மனிதன் எதனையும் பகுத்தறியாத் தன்மையினால் எவருக்கோ அடிமையாகிக் கொண்டிருக்கின்றான். பேரறிஞர் அண்ணா அவர்கள், 'கத்தியைத் தீட்டாதே - புத்தியைத் தீட்டு' என்று சொன்னதுபோல, சமுதாயத்தில் அறிவுபெற வேண்டும் என்று பலர், பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், பல காதலர்களைச் சித்திரித்துக் காட்டினர். அதுபோல, ஒரு பெண் எவ்வளவு திடமாகவும், காதலைவிடத் தன்னுயிர் மேம்பட்டதல்ல என்பதாகவும், காதலுக்கு இடையூறாக உள்ள சாதி மதங்களை எப்படி எதிர்க்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் 'புரட்சிக் கவியில்' ஒரு பெண்ணைவிட்டுப் பேசச் சொல்கிறார் பாவேந்தர்.

புரட்சிக் கவியில் ஒரு காட்சி... தூக்குமேடைக்குச் செல்லுகின்ற காதலர்கள் இருவரில் காதலியைவிட்டுப் பேசச் சொல்கின்றார். பெண்மைக்கு எவ்வளவு துணிவு வேண்டும் என்பதைச் சித்திரிக்கிறார். அதில் ஒரு கட்டம்...

ஆரத்தழுவி அடுத்தவினா டிக்குள் உயிர்
தீரவரும் எனினும் தேன்போல் வரவேற்பேன்
அன்றியும் என்காதல்அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன, தாழ்வென்ன
சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்
போதாக்குறைக்குப் பொதுத் தொழிலாளர்சமூகம்
மெத்த இழிவென்றும் மிகுபெரும்பாலோரே எல்லாம்
கத்தி முனைகாட்டி காலமெல்லாம் ஏய்த்துவரும்
பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்
ஆவி களையேனும் அர்ப்பணம் செய்வோம்

என்று காதலி பேசுகிறாள் துணிவோடு-துடிப்போடு!

தாய்மொழிப்பற்று தமிழனுடைய சமுதாயத்தில் இல்லாது போயிற்றே என்ற ஏக்கம், பாவேந்தர் உள்ளத்தில் வழிந்தது. எண்ணி எண்ணித் துடிக்கிறார்.

"தமிழின் மேன்மையை இகழ்ந்தவனை
என் தாய் தடுத்தாலும் விடேன்!"
"இந்திக்குத் தமிழ்நாட்டில் ஆதிக்கமா?
எல்லோரும் வாருங்கள் நாட்டினரே!
செந்தமிழுக்குத் தீமை வந்திடின் - இந்த
தேகம் இருந்தொரு லாபம் உண்டோ?"

— பாவேந்தர் அழுகிறார்.

என் புரட்சிக் கவிஞர், இளைஞர்களை நோக்கிக் கூறுகிறார். "போர்க்களத்திற்குப் போ" என்று உசுப்புகின்ற ஒரு பாட்டு.

"மங்கை ஒருத்தி தரும்சுகமும்
மாத்தமிழுக்கு ஈடு இல்லை"

என்று உரைத்துக் களத்திற்கு இளைஞர்களை அனுப்புகிறார் இந்தி எதிர்ப்புப் போராட்டக் காலத்தில்...

இப்பொழுது உள்ள சமுதாயத்திற்கும், வருங்கால சமுதாயத்திற்கும் வரைமுறை வேண்டும் அல்லவா? 'வெந்ததைத் தின்றுவிட்டு, விதி வந்தால் சாகின்ற நோஞ்சான் சமுதாயமாக வாழாது ; வரையறுத்த குடும்பங்கள்தான் நாட்டின் பொருளாதார முன்னேற்ற வாழ்வுக்கு உகந்தவை என்ற ஒரு சிறந்த கொள்கையைப் பல ஆண்டுகளுக்கு முன்னே, விஞ்ஞானத்தின் வழியில் நின்று ஒரு கவிதை வாயிலாகச் சொல்லுகின்றார் பாவேந்தர்...

"காதலுக்கு வழிவைத்து கருப்பாதை சாத்தக்
கதவு ஒன்று கண்டறிவோம்",

என்கிறார்.

இவர் ஒரு புரட்சிக் கவிஞர் மட்டுமல்ல, எவருடைய விருப்பு வெறுப்புகளுக்கும் கவலைப் படாது போர்வீரர் போல் நின்று மக்களைச் சுரண்டுகின்றகூட்டத்தைத் தன் பேனா முனையால் தாங்க முடியாத அடிகளைக் கொடுக்கின்றார் - வீழ்ச்சியுற்ற தேகத்திலே வலிமையூட்டுகிறார் ; தாய்மொழிப் பற்றற்ற தற்குறிகளுக்கும் உணர்வு ஏற்றுகின்றார். புரட்சிக் கவிஞரின் நோக்கமும் ஆசையும் நிறைவேறப் பாடுபடுவோமாக!

அவர் வழிநின்று உலக மகா கவிஞர், கலைஞர் அவர்கள், அவருடைய நினைவுகளை நிறைவேற்றி வருகிறார்.

நலிவடைந்த கலைஞர்களின் வாழ்வை நலம்பெறச் செய்யும் இந்த அரசு

- முதல்வர் கலைஞர்



தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில் 28 கலைஞர்களுக்கு இன்றைய தினம் 'கலைமாமணி' என்கின்ற பட்டம்' வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த மன்றம் 1972-ஆம் ஆண்டு வரையில் சென்னை 'சங்கீத நாடக சபா' என்ற பெயரிலே விளங்கியது. 1972-ஆம் ஆண்டு சங்கீதம், நாடகம் என்று மாத்திரமில்லாமல் இயலுக்கும் இந்தக் கலைஞர்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும், இடமளிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டு 'தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம்' என்று இந்த அமைப்பிற்குப் பெயர் மாற்றப்பட்டது.

நம்முடைய கலைஞர்களின் சார்பிலே, பட்டம் பெற்றவர்களின் சார்பிலே நன்றி கூறிய தம்பி கவியரசு வைரமுத்து இங்கே குறிப்பிட்டதைப் போல், 600க்கு மேற்பட்டவர்களுக்கு இந்த

எனையீன்ற தந்தைக்கும் தாய்க்கும் மக்கள்
இனமீன்ற தமிழ்நாடு தனக்கும் என்னால்
தினையளவு நலமேனும் கிடைக்கும் என்றால்
செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்!

சிறு சேமிப்புத் துறை



இந்த வரைபடம் உங்கள் வரிப் படம்...

குறைந்துவிட்டதே!

தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ.30,000/- வரை 100% வரி விலக்கு பெறுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டம்

வரிவிலக்கு

வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின்கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற

உங்கள் முதலீடு

தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/ 15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல் முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!

தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில் ரூ.1000/- அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.

பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	— காண்டஸா கார்
1 முதல் பரிசு	— மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	— ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 மூன்றாவது பரிசுகள்	— கலர் டி.வி.
20 நான்காவது பரிசுகள்	— 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	— குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	— குவார்ட்ஸ் கலர் கடிகாரம்

DIPR/MS/90/ARIES

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(அல்லது)
மாவட்ட சேமிப்பு அலுவலர்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

பாரதிதாசனின் தமிழியக்கம்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

பாவேந்தன் பாரதிதாசன் தமிழுக்கு ஒரு இயக்க உருவம் கொடுத்த முதற்கவிஞன். ஆம்! தமிழ் ஒரு மொழி! அம்மொழியைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கழகங்களிலும் பயின்றால் போதாது. மக்கள் வாழ்க்கையின் படிநிலை தோறும் தமிழ், இடம் பெறுதல் வேண்டும். சமுதாயத்தின் உறுப்பாகிய ஒவ்வொருவரும் அவரவர் துறையில் தமிழைப் போற்றி வளர்க்க வேண்டும். இதுவே தமிழியக்கம்.

தமிழுக்கு- தமிழ் வளர்ச்சிக்கு- தமிழ்ப் பாதுகாப்புக்கு ஓர் இயக்கத்தைக் காண வேண்டிய நெருக்கடி பாவேந்தன் காலத்தில் ஏற்பட்டது; நமது தலைமுறைக்கு ஏற்பட்டது. தமிழ், பல நூற்றாண்டுகளாக சமஸ்கிருதம், உருது, ஆங்கிலம் ஆகிய பல்வேறு மொழிகளின் ஊடுருவலால் தூய்மை கெட்டது; வளர்ச்சி குன்றியது. சமஸ்கிருதத்தின் ஊடுருவலால் தமிழின் தூய்மை கெட்டது. ஒரு கலப்புத் தமிழ்நடை- மணிப்பிரவாள நடை என்ற பெயரில் தோன்றிப் பயிலத் தொடங்கியது. தமிழ்த் தாயின் திருவுருவில், அம்மை வார்த்த உருவம் போலத் தழும்புகள் தென்படலாயின. எங்கும் கலப்புத் தமிழ். கலப்புத் தமிழ் பேசுபவர்கள் உயர் குடியினர் என்ற ஒரு மதிப்புணர்வு கூட நிலவியது. ஆங்கிலத்தின் ஊடுருவலால்- மேலாதிக்கத்தால் தமிழ் மொழியின் வளர்ச்சி பாதிக்கப் பட்டது. தமிழ், உலகின் மற்ற மொழிகளைப் போலத் துறைதோறும் வளர முடியாமல் ஆங்கிலம் தடுத்து விட்டது. இந்த நிலையில்தான் பாவேந்தன் பாரதிதாசன் தமிழுக்கு இயக்கம் காண்கின்றான். அவனுடைய வேதனை வெளிப்படுவதை.

"மணக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது!
தமிழகத்தின் தமிழ்த்தெருவில்
தமிழ்தா னில்லை."

(தமிழியக்கம் பா:22)

என்ற வரிகள் பாவேந்தன் காலத்துத் தமிழகத்தின் நிலை! இன்று என்ன நிலை? தமிழகத்தில் தமிழ் பயிலத் தொடங்கி உள்ளது. ஆயினும் முற்றாக நடைபெறவில்லை! தமிழகச் சட்டப்பேரவைத் தலைவர் மாண்பமைந்த தமிழ்க்குடிமகன் பெருமுயற்சி எடுத்து வருகின்றார்! அவர்தம் முயற்சி வெற்றி பெறுவதாக!

அடுத்து, தமிழில்- தமிழ் வழியாக இளைஞர்கள் கற்க வேண்டும். தமிழனின் அறிவு வளர்ந்தாலே அவனுடைய தாய்மொழியாகிய தமிழும் உயரும்; வளரும். இன்று, தமிழ் வழிக் கல்வி உண்டு. ஆனால், தமிழ்வழிக் கல்வி ஏழைகள் கற்கின்றனர்! ஆங்கில வழிக்கல்வி ஆளும் இனத்தினர் பழக்கித் தந்தனர். இந்த நிலை அடியோடு மாறவேண்டும். அறிவியலில் துறைதோறும் தமிழ் வளர்தல் வேண்டும். அப்போது தான் தமிழன் அறிஞனாவான். தமிழ், அறிவியல் தமிழாக வேண்டும்! உலகத்தின் பல்வேறு மொழிகள் முன்னேறுவது போல், தமிழ்மொழியும் முன்னேற வேண்டும் என்பது பாவேந்தரின் விருப்பம்.

தமிழ், காலத்தால் மூத்தது; கருத்தாலும் மூத்தது. கடவுள் என்ற சொல்லே, தமிழ்ச் சொல்தான். இது பொருள் நிறைந்த தமிழ்ச் சொல்! தமிழினம் மெய்ப்பொருள் நெறி கண்ட இனம். விண்ணளந்து காட்டி வினைமறைக்கும் எண்ணற்ற திருக்கோயில்கள் கண்ட இனம், தமிழ்இனம், இறைவன் தமிழ்மீது தணியாக் காதல் உடையவன். காசு கொடுத்துத் தமிழ் கேட்கும் பெரு விருப்பம் சிவனுக்கு உண்டு! ஏன், கொற்றாளாக மண்சுமந்தும் பண் சுமந்த தமிழ்கேட்கும் விருப்பினன். திருமாலோ, பைந்தமிழ்ப் பின்சென்ற பெருமைக்குரியவன். ஆயினும் ஏன்? கருவறைக்குள்ளே தமிழ் இல்லை! தமிழ் நுழைய முடியவில்லை! இந்த வேதனையைப் பாவேந்தன்,

"சொற்கோவின் நற்போற்றித்
திரு அகவல் செந்தமிழில்
இருக்கும் போது,
கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு
சகத்ர நாமம்?
தெற்கோதும் தேவாரம்
திருவாய்நன் மொழியான
தேனி ருக்கச்
செக்காடும் இரைச்ச லென
வேதபா ராயணமேன்
திருக்கோ யில்பால்?

(தமிழியக்கம்.பா:59)

என்று வேதனையோடு கேட்கின்றான்: பாவேந்தன் பாரதிதாசன் வினாவிற்கு இன்னும் முழுதாக விடை கிடைக்கவில்லை! மெல்லத் தமிழ்த்தாய், திருக்கோயிலுக்குள் "தமிழிலும்" என்ற இழிநிலையைச் சுமந்து கொண்டு நுழைந்தாள்! நெருக்கடி நிலை வந்தது! அதுவும் இல்லாமற் போயிற்று! இங்கும் அங்கும் சில உத்தமர்கள் தமிழில் அருச்சனை செய்கின்றனர்! தமிழ் நாட்டுத் திருக்கோயில்களில் தமிழே வழிபாட்டு மொழியாக இருத்தல் வேண்டும். அருச்சனை மொழியாக இருத்தல் வேண்டும். இப்பணி எப்பணிக்கும் முதற்பணி!

தமிழ்நாட்டுக்குத் தமிழாராய்ந்த ஒரு தலைமகன முதலமைச்சராதல் வேண்டும் என்பது பாரதிதாசன் விருப்பம்; இன்று நிறைவெய்தியிருக்கிறது. நற்றமிழ்த் தலைவர், உயர் தமிழ்க் கவிஞர், தமிழாராய்ந்த அறிஞர், முத்தமிழாக- முழுச் சொத்தாகத் தமிழ்நாட்டுக்கு வாய்த்த மாண்பமைந்த கலைஞர் முதலமைச்சராக அமர்ந்துள்ளார். பாரதிதாசன் நூற்றாண்டு விழாப் பணிகளுடன் தமிழியக்கப் பணிகளும் முடுக்கி விடப் பெறும் என்ற நம்பிக்கை இருக்கிறது!

தமிழ்எங்கள் உயிர்என்ப தாலே- வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழ்என்னில் எம்முயிர்ப் பொருளாம்-

மன்றத்தின் சார்பில் இதுவரையில் விருதுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இந்த விருதுகள் இதுவரையில் கடந்த ஆண்டு வரையில் அவர்களுக்கு ஆளுநர் அவர்கள் இங்கே அணிவித்தார்களே பதக்கம், அது ஒரு சவரன் மதிப்புள்ள விருதுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு முதல், இன்று முதல் இரண்டரைச் சவரன் மதிப்புள்ள விருதுகள் அவர்களுக்கு வழங்கப் படுகின்றன.

இரண்டரைச் சவரன் மதிப்புள்ள விருதுகள் இன்று வழங்கப்பட்டுள்ளன என்று நான் கூறுவதில் அந்தச் சவரனின் மதிப்பல்ல, சில நேரங்களில் நம்முடைய கலைஞர்கள் தங்களுக்கு அணிவிக்கப்பட்டுள்ள விருதுகளின் பதக்கங்களைக் கூட அடமானம் வைத்தோ அல்லது விற்றோ தங்களுடைய வாழ்க்கையை நகர்த்திக் கொள்ள வேண்டிய பரிதாபகரமான சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் எண்ணிப் பார்க்கிறேன்

நான் அவர்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன். இரண்டரைச் சவரன் என்று அந்தப் பதக்கத்தைப் பெரிதாக அளிப்பதற்குக் காரணம், பதக்கம் பெரிதாக இருக்கவேண்டுமென்ற எண்ணமே தவிர, அதனுடைய மதிப்பு அதிகமாக இருந்தால் எதிர்காலத்தில் உங்களுக்குப் பயன்படும் என்பதற்காக அல்ல. அதைப் பயன்படுத்த வேண்டுமென்ற சூழ்நிலை உங்களுக்கு ஒன்று வருமேயானால் நீங்கள் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தை நாடுங்கள். அதனுடைய தலைவர்களும், நிர்வாகிகளும் எங்களை நாடுவார்கள். உங்கள் நிலையை எங்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். அந்தப் பதக்கங்களின்மீது நீங்கள் கைவைக்காமலேயே உங்களுடைய வாழ்க்கையை, நலிவடைந்த வாழ்க்கையை நலம் பெறச் செய்ய இந்த அரசு என்றென்றும் தயாராக இருக்கின்றதென்பதை கலைவாணர் மண்டபத்தில் நடைபெறுகின்ற இந்த விழாவில், கலைவாணரை மனதில் எண்ணிக் கொண்டு சொல்ல விரும்புகின்றேன்.

கலைஞர்கள் இங்கே விருதுகள் பெற்றதை இந்த மாமன்றத்தில் குழுமியிருக்கின்ற நீங்களெல்லாம் பார்த்தீர்கள். அதிலே, மதுரை பொன்னுத்தாய் அம்மையார் அவர்கள் அந்த விருதைப் பெற்ற நேரத்தில், அவர்கள் முன்னாள் குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்களால் பாராட்டப் பெற்றவர். பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் பாராட்டப் பெற்றவர். நீண்ட நெடுங்காலமாக இந்தத் துறையில் தன்னுடைய இளம் பிராயம் முதல் இந்தத் துறையில் இருப்பவர் என்பது மாத்திரமல்ல, அண்மையிலே சில வாரங்களுக்கு முன்பு 'ஆனந்த விகடன்' வாரப் பத்திரிகையில் அவருடைய பேட்டி வந்ததை நான் படித்துப் பார்த்தேன். படித்து முடிக்கின்ற வரையில் தொடர்ந்து அதைப் படிக்க இயலாமல், விழிகளை நீர்த்திரைகள் மறைத்துக் கொண்டன. அப்படிப் பட்ட கலைஞர்களும் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் காப்பாற்ற வேண்டிய, அவர்களுக்கெல்லாம் நல்வாழ்வு

இன்பம் எனப்படுதல் - தமிழ்
இன்பம் எனத்தமிழ் நாட்டினர் எண்ணுக!

அளிக்க வேண்டிய பொறுப்பு ஒரு அரசுக்கு இருக்கின்றது.

ஐந்து கோடி மக்கள் வாழ்கின்ற இந்த மாநிலத்தில் குறிப்பிட்ட சில கலைஞர்கள் அவர்களுடைய வாழ்வு மாத்திரம் முக்கியமாகத் தெரிகிறதா என்று யாராவது கேட்பார்களேயானால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வது அந்த ஐந்து கோடி மக்களும் சில நேரங்களில் துன்புற்று, துயருற்று இன்னல்களுக்கு ஆளாகிற நேரத்தில் அவர்கள் ஒரு அரை மணிநேரம்- ஒரு மணி நேரம் இவைகளையெல்லாம் மறந்து கலைச் சுவையிலே திளைக்க வைக்கவேண்டிய அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அந்தக் கலைஞர்களுக்கு, இந்த உதவியைச் செய்வது அரசின் சார்பாக மாத்திரமல்ல, ஐந்து கோடி மக்களின் சார்பாகத்தான் என்பதையும் நான் இங்கே எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

'கலை மாமணி' விருது வழங்கும் விழாவில், ஆற்றிய உரையிலிருந்து (14.4.1990)

கலைமாமணி விருது வழங்கும் விழா

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில், 1989-90-ஆம் ஆண்டிற்கான 28 கலைஞர்களுக்குக் 'கலைமாமணி' விருதுகள் வழங்கும் விழா, 14.4.90 தமிழ்ப் புத்தாண்டு நாளன்று, சென்னைக் கலைவாணர் அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

மங்கல இசையுடன் தொடங்கப்பெற்ற இந்த விழாவில், மன்றத் தலைவர் திரு சா. விசுவநாதன் (சாவி) அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மேதகு தமிழக ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்து, கலைஞர்களுக்குப் பொற்பதக்கம் வழங்கினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விருது பெறும் கலைஞர்களுக்குப் பட்டம் வழங்கிப் பொன்னாடை வழங்கினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், சிறந்த கலை நிறுவனத்துக்காக மதுரை ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜத்துக்கும், சிறந்த நாடகக் குழுவுக்காக, சென்னை ஏ.பி.என். ஆர்ட்ஸ்க்கும் கேடயங்கள் வழங்கினார்.

விருது பெற்ற கலைஞர்கள் சார்பில், கவிஞர் வைரமுத்து நன்றி நவின்றார்.

விழா முடிவில் மன்றச் செயலாளர் கவிஞர் கு.மா. பாலசுப்பிரமணியம் நன்றி கூறினார்.

பிறகு, வழுவூர் ஆர். சாம்ராஜ் குழுவினர் வழங்கிய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் ''சங்கத்தமிழ்'' நாட்டிய நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

பாவேந்தர் பாரதிதாசன்

நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழு

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக் குழுவின் முதல் கூட்டம், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 8.4.90 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுவில் இடம்பெற்றுள்ள பெருமக்கள்:

மாண்புமிகு முதல்வர் கலைஞர்
மாண்புமிகு கல்வி அமைச்சர்
பேராசிரியர் க. அன்பழகன்
மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத்துறை
அமைச்சர் திரு. கே.என். நேரு
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்
திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்
திரு எஸ்.ஆர். இராதா, எம்.எல்.ஏ.,
திரு குமரி அனந்தன், எம்.எல்.ஏ.,
முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம்
புலவர் கா. கோவிந்தன்
தவத்திரு குன்றக்குடி அடிகளார்
திரு கி. வீரமணி
திரு மன்னை ப. நாராயணசாமி
திரு மன்னர் மன்னன்
திருமதி ஜெயந்தி, இ.ஆ.ப.,
டாக்டர் ஔவை நடராசன்
டாக்டர் வா.செ. குழந்தைசாமி
முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
டாக்டர் ச. முத்துக்குமரன்
திரு சிவாஜி கணேசன்
டாக்டர் மா. நன்னன்
டாக்டர் எஸ். அப்துல் ரகுமான்
திருமதி அரசு மணிமேகலை
டாக்டர் மா. செல்வராசன்
கவியரசர் பொன்னிவளவன்
கவிஞர் சுரதா
கவியரசு முடியரசன்
கவிஞர் வைரமுத்து
கவிஞர் பொன்னடியான்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்
டாக்டர் திருமதி சிவகாமசுந்தரி
திருமதி நிர்மலா சுரேஷ்
டாக்டர் பு.பா. இராஜஇராஜேஸ்வரி
டாக்டர் சு. செல்லப்பன்
முனைவர் தமிழண்ணல் (ராம.பெரிய கருப்பன்)
டாக்டர் க.ப. அறவாணன்
முனைவர் பா. வளன் அரசு
கவிஞர் தி. முருகுசுந்தரம்
புலவர் சா. மருதவாணன்
புலவர் மு. அருச்சுனன்
கவிஞர் கோவை இளஞ்சேரன்
திரு புலவர் புலமைப்பித்தன்
கவிஞர் அரிமதி தென்னகன்
டாக்டர் மு. நாகநாதன்
திரு கி. இராஜமாணிக்கம், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை,
உறுப்பினர்-செயலர்
திரு எஸ். வேணுகோபால ரெட்டி
திரு கே.பி.கே. நம்பியார்
திரு கே. சொர்ணம்.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை; தமிழ்நாடு; தமிழ மக்கள்,
தமிழ்என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

அதி நவீன பட்டு வகைகள்

100% உன்னதமான பட்டு
உத்தரவாதமான சரிகை

உங்கள் உலகில் முக்கிய பங்கு பெறுவது வண்ணங்கள்... அவைகளின் அழகு ஜாலங்களை பொலிவும் நேர்த்தியும் மிக்க பட்டு வகைகளில் உங்களுக்குக் கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1766/MS88/HTA

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் 8.4.90 அன்று தலைமைச் செயலகத்தில் கூடிய பாவேந்தர் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுக்கூட்டம்.



பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 100-ஆவது பிறந்த நாளையொட்டி சென்னையில் காமராஜர் சாலையில் அமைந்துள்ள பாவேந்தர் பாரதிதாசன் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்பு மற்றும் பாராளு மன்ற விவகாரத்துறை அமைச்சர் திரு. பி. உபேந்திரா அவர்களும், மாண்புமிகு மத்திய நகர்ப்புறவளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முரசொலிமாறன் அவர்களும் மற்றும் மாண்புமிகு தமிழக அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர் (29.4.90).



வெள்ளுடை வேந்தர் சர்.பிட்டி. தியாகராயர் அவர்களின் 139-ஆவது பிறந்த நாளையொட்டி சென்னை மாநகராட்சி வளாகத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர். (27.4.90)

இந்த இதழில்...

தன்மானக் கவிஞர் பாரதிதாசன்
—முதல்வர் கலைஞர் உரை ... 2
பாவேந்தர் நூற்றாண்டு-சில சிந்தனைகள்
—புலவர் கா. கோவிந்தன் ... 5
முதல்வர் கலைஞர் அறிவித்த
அடுக்கடுக்கான சலுகைகள் ... 8
முதற் கவிஞன்
—கவிஞர் சாமி. பழனியப்பன் ... 9
பெற்றோர் ஆசிரியர் கழக
வெள்ளிவிழா ... 11
அண்ணா பன்னாட்டு முனையம்
காமராஜர் உள்நாட்டு முனையம் ... 15
பெரியார் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் ... 17
ஊர்ப் பெயர் - ஓர் ஆய்வு
—நடன. காசிநாதன் ... 21
தானியங்களைப் பாதுகாக்கும் முறை ... 27
இதய நோயைத் தவிர்ப்போம்! ... 33
மறதியிலும் ஓர் இனிமை
—முல்லை பி.எல். முத்தையா ... 39
முந்து புயல்களுக்கு ஒரு முகமன்
—கவிஞர் ஈரோடு தமிழன்பன் ... 40
தொழிலாளர் வர்க்கத்தின்
வெற்றிச் சின்னம் ... 41
அம்பேத்கார் அந்தாதி
—கவியரசர் இளந்தேவன் ... 44
பாவேந்தர் நூற்றாண்டுத்தொடக்க விழா ... 45

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2021
வைகாசித் திங்கள் - 2
மலர்:20 இதழ்:22
16-5-1990

சென்னையில் பலத்த காற்று, கடும் மழையால் பாதிக்கப்பட்ட இடங்களில் நடைபெறும் நிவாரணப் பணிகளை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 9.5.90 அன்று நேரில் சென்று பார்வையிட்டார். மேலும் துறைமுகம் தொகுதியில் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, ஆறுதல் கூறினார். பின்னர் திருவொற்றியூர்— எண்ணூர் எக்ஸ்பிரஸ் சாலையிலுள்ள பாதிக்கப்பட்ட மீனவர் பகுதிகளையும், கடல் அரிப்புப் பகுதிகளையும், காசிவிசாலாட்சி குப்பத்தில் கடல் அரிப்புப் பகுதிகளையும் பார்வையிட்டு, துரித நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் திரு டி.கே. பழனிசாமி, மற்றும் அரசு அலுவலர்களும் சென்றிருந்தனர்.



தன்மானக் கவிஞர் பாரதிதாசன்

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் சிலையினைத் திறந்து வைக்கின்ற எழுச்சிமிகுந்த இந்த விழாவில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்ல வாய்ப்பினைப் பெற்றமைக்காகப் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழக அரசின் சார்பிலும், மற்றும் தமிழர்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் இருக்கின்ற தமிழர்கள் சார்பிலும் சற்றொப்ப உலகெங்கிலும் புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு விழா கொண்டாடப் படுகிறது.

அதற்கு ஒரு தொடக்கமாக, பாவேந்தரின் பெயரில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகத்தில் அவருடைய திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து இந்த முதல் நிகழ்ச்சியிலேயே இருபதுக்கும் மேற்பட்ட கவிஞர்களுக்கு புரட்சிக்கவிஞர் வழிவந்த- அவருடைய கருத்துக்களை- எண்ணங்களை மேலும் சமுதாயத்திலே பரப்புகின்ற பணியிலே ஈடுபட்டு இருக்கின்ற அந்தப் புலவர் பெருமக்களுக்கு விருதுகளும், பொற்கிழிகளும் வழங்கப்பட்டு உள்ளன. அப்படி வழங்குகின்ற வாய்ப்புக் கிடைத்ததை எனக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

புரட்சிக் கவிஞருடைய பாடல்களை- அந்தப் பாடல்களில் காணப்படுகின்ற கற்பனை வளத்தை- நயத்தை மாத்திரம் நாம் சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. அவர் எண்ணியவற்றைச் செயலாற்ற வேண்டும் என்ற மனத் திடத்தோடு நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும் என்கிற சூளுரையை மேற்கொள்கின்ற விழாவாக இந்த விழா அமைய வேண்டும். அவருடைய பாடல்களின் நயங்களை, அழகினை இலக்கியச் செல்வர் குமரி அனந்தன் இங்கு எடுத்துக் காட்டியதைப் போல ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல, பல ஆண்டுகாலம் எடுத்துக் காட்டக்கூடிய அளவிற்கு அவ்வளவு திறன் வாய்ந்தவை அவருடைய கவிதைகள்.

ஆனால் நாம் அவற்றின் அழகில் மாத்திரம் நம்மைப் பறி கொடுத்து விடாமல் அவர் எத்தகைய சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று எண்ணினாரோ, தமிழினம் எப்படித் தலை நிமிர்ந்து இருக்க வேண்டும் என்ற ஏக்கம் கொண்டாரோ, தமிழன் என்றோர் இனமுண்டு, அந்த இனம் இன்று தலை தாழ்ந்து கிடக்கிறதே, அது நிமிர்ந்து நிற்க வேண்டும் என்று அவர் விட்ட எரிமலைப் பெருமூச்சு எத்தகையதென்பதெல்லாம் எண்ணிப் பார்த்து, அவருடைய எண்ணங்கள் ஈடேறுவதற்கு நாம் அனைவரும் உழைத்திட வேண்டும் என்பது இந்த நாளின் சபதமாக நமக்கெல்லாம் இருந்திட வேண்டும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் புரட்சிக் கவிஞருக்குப் பொற்கிழி அளிக்க வேண்டும் என்று பெரும் முயற்சி எடுத்துக் கொண்டு அதற்கென ஒரு குழுவை அமைத்து அந்தக் குழுவினர் தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து 25 ஆயிரம் ரூபாய் கொண்ட ஒரு பண முடிப்பை சென்னையில் நடைபெற்ற பாவேந்தருடைய திருநாளில் அவருக்கு வழங்கினார்கள்.

முதல்வர் கலைஞர்

அந்த நிகழ்ச்சியில் நடைபெற்ற ஒன்றை மாத்திரம் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். அண்ணா அவர்கள் பாவேந்தரிடத்திலே எவ்வளவு மரியாதை, அன்பு, பாசம் வைத்திருந்தார் என்பதற்கு அது எடுத்துக்காட்டு. ஒரு நிதியை வழங்குகின்ற நேரத்தில் அண்ணா கொடுப்பதைப் போலவும், பாரதிதாசன் வாங்குவதைப் போலவும் இருக்கக் கூடாது என்பதற்காக, கொடுக்கின்ற கை உயர்ந்தும், வாங்குகிற கை தாழ்ந்தும் இருக்கக் கூடாது என்பதற்காக, அண்ணா அவர்கள் அந்தப் பண முடிப்பைத் தம்முடைய கையிலே வைத்துக்கொண்டு அதைப் புரட்சிக்கவிஞர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கொடுத்த அண்ணாவின் கரம் தாழ்ந்து இருந்தது. அதை எடுத்துக் கொண்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கரம் உயர்ந்திருந்தது. பாரதிதாசன் எத்தகைய தன்மானக் கவிஞர், சுயமரியாதைக் கவிஞர் என்பதை அந்த நிகழ்ச்சியின் மூலமாக அண்ணா அவர்கள் படம் பிடித்துக் காட்டினார், நாட்டிற்கு விளக்கினார் என்...

அந்தக் காலத்தில் என்னுடைய எழுத்துக்களில் எப்படியும் புரட்சிக் கவிஞருடைய கவிதை வரிகளை நான் நுழைத்துவிடுவேன் என்று குமரி அனந்தன் இங்கே குறிப்பிட்டார். முன்பே பாரதிதாசன் அவர்கள் பெரும் புகழ் பெற்ற கவிஞராக இருந்தாலும்கூட ஆற்றல்வாய்ந்தவராக இருந்தாலும்கூட அந்த விளக்கொளியை அகிலத்திற்கு எடுத்துக் காட்டிய பெருமை பேரறிஞர் அண்ணா அவர்களைச் சாரும்.

அண்ணா நடத்திய 'திராவிடநாடு' இதழில் அண்ணா அவர்களுடைய எழுத்தோவியம் ஒவ்வொன்றிலும் புரட்சிக் கவிஞருடைய கவிதை வரிகள் இடம்பெறும். திராவிட நாடு இதழை ஆவலோடு வாங்கிப் படிக்கின்ற அந்தக் காலத்து இளைஞர்கள், இந்த பாரதிதாசன் யார் என்று கேட்கத் தொடங்கினார்கள். பிறகு பாரதிதாசனின் கவிதைகள் வெளிவரத் தொடங்கின.

இங்கே விருது பெற்ற திருமதி.ரஷ்யா அவர்களை பலருக்கு அவர் யார் என்று தெரிந்திருக்க நியாயமில்லை. சுயமரியாதை இயக்கம், தன்மான இயக்கம், சோவியத் ரஷ்யாவின் கொள்கைகளில் எந்த அளவிற்கு நாட்டம் கொண்டு இருந்தது என்பதற்கு அடையாளமாக மறைந்த அண்ணன் குத்தூசி குருசாமி அவர்கள் தன்னுடைய மகளுக்கு இட்ட பெயர்தான் ரஷ்யா என்பதாகும். அந்தப்பெண்தான் இங்கே அந்த விருதினைப் பெற்றார். காரணம் புரட்சிக் கவிஞருடைய கவிதைகளைத் தொகுத்து முதன்முதலில் நூலாக வெளியிட்ட பெருமை அண்ணன் குருசாமி குஞ்சிதம் அவர்களைச் சாரும். அந்த நூலுக்கு முன்னுரை எழுதிய பெருமை அண்ணன் கி.ஆ.பெ. அவர்களைச் சாரும். அந்த முன்னுரையைப் படித்துப் பார்த்துப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனுடைய புத்தகங்களைத் தொடர்ந்து வாங்க வேண்டும் என்று ஆவல் கொண்டவன் நான், அந்த இளைஞர் பருவத்தில். அவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பு அந்த நூல் வெளியிடப்பட்டது. அதிலேதான் அவர் எழுதி இருந்தார். 'அழகிற்காக ஒருமுறை படித்தேன். கவிதை நயத்திற்காக ஒருமுறை படித்தேன். கருத்துக்காக ஒருமுறை- கற்பனைக்காக ஒருமுறை படித்தேன். ஒவ்வொரு முறையும் படித்-தேனாகவே இருக்கிறது பாரதிதாசனுடைய கவிதை' என்று அண்ணன் கி.ஆ.பெ. அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அன்றைக்கு ஏற்பட்ட ஆவல் அந்தக் காலத்திலே என்போன்ற இளைஞர்களுக்கு பாரதிதாசனுடைய கவிதைகளைத் தொடர்ந்து படிக்க, அவரைப் பார்க்க ஒரு பெரும் தூண்டுதலை உள்ளத்திலே எழுப்பியது.

அதன் காரணமாகத்தான் திருவாரூரில் நாங்கள் நடத்திக் கொண்டிருந்த தமிழ்நாடு தமிழ் மாணவர்மன்ற ஆண்டு விழாவிற்கு அவர் இடத்திலே ஒரு வாழ்த்துக் கவிதை கடிதம் வாயிலாகக் கேட்டிருந்தேன். அண்மையில் கூட, வார ஏடுகளில் பார்த்திருக்கக்கூடும். நான் புரட்சிக் கவிஞருக்கு 1942ஆம் ஆண்டு எழுதிய கடிதத்தை அவருடைய மகன் மன்னர் மன்னன் சில வாரங்களுக்கு முன்பு என்னிடத்திலே கொண்டு வந்து தந்து 1942-ஆம் ஆண்டு நீங்கள் என் தந்தைக்கு எழுதிய கடிதமும் அந்தக் கடிதத்திலே என் தந்தை எழுதிய குறிப்பும் பாருங்கள் என்று என்னிடத்திலே தந்தார். அதை ஒரு வாரப் பத்திரிகையிலே குறிப்பிட்டு எழுதினேன். அப்பொழுது பாரதிதாசன் எழுதிய கவிதைதான்-

பாவேந்தர் நூற்றாண்டு:



பணிசெய்வாய்! தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும்
பழநாட் டானே

''தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ்மாண வர்மன்றங் காண்''

எனத் தொடங்கி, இங்கே பேராசிரியர் குறிப்பிட்டாரே,

''கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை''

—என்ற அந்தக் கவிதை வரிகள் விளைந்த கர்லம் அந்தக் காலம்தான்.

நான் அப்போது எழுதினேன். அவர் என்னை அறியாத காரணத்தால் அன்றைக்கே எழுதி இருக்கிறேன் பாருங்கள். அவரை விளிக்கும்போதே கவிஞர் என்றோ, புரட்சிக்கவிஞர் என்றோ குறிப்பிடாமல் கவிப்பெரியார் அவர்களுக்கு கருணாநிதி வணக்கம் என்று அன்றைக்கே விளித்து எழுதினேன். அதிலே கடைசியாக குறிப்பிலே அவரைக் கேட்டிருந்தேன். 'அலட்சியப்படுத்தி விடவேண்டாம். மாணவர்கள் நாங்கள். அவசியம் வாழ்த்துக் கவிதையை அனுப்புங்கள்' என்று. அவர் அந்தக் கவிதையை எழுதி அனுப்பி விட்டு அத்துடன் ஒரு துண்டுக் காகிதத்தையும் அனுப்பியிருந்தார்.

தோழர் கருணாநிதி அவர்களே, அவர் எண்ணிக் கொண்டார்- அவருக்குத் தோழர் என்று என்னை. நேராகப் பார்த்திருந்தால் 'பையா' என்று எழுதி இருப்பார். தோழர் கருணாநிதி அவர்களே ''கேட்ட வண்ணம் தீட்டினேன் தெரிந்தவரைக்கும்.'' எவ்வளவு அடக்கம் பாருங்கள்- நாலு வரி எழுதத் தெரிந்து விட்டாலே ஆணவப் பார்வை பார்க்கின்ற சில பேர் நாட்டில் உலவுகின்ற இந்தக் காலத்திலும் அவ்வளவு பெரிய கவிஞர் பாரதியாரோடு பழகிய அந்தப் பெருங்கவிஞர் ஒரு சாதாரண மாணவர்க்கு, உயர்நிலைப் பள்ளியிலே படித்துக் கொண்டிருந்த மாணவர்க்கு எழுதுகின்ற கடிதத்தில் ''கேட்ட வண்ணம் தீட்டினேன் தெரிந்த வரைக்கும். அலட்சியமாக இருந்து விடுவதுண்டு. வாரம் ஒன்றுக்கு இருபது ஒண்ணரையணா தபால்செலவை எண்ணி''. இதற்கு என்ன அர்த்தம் என்றால் இப்படிப் பல பேர் என்னிடம் வாழ்த்துக் கேட்கிறார்கள். ஒருவரும் ஸ்டாம்ப் வைத்து அனுப்புவதில்லை. நான் அவர்களுக்கெல்லாம் ஒண்ணரையணா செலவழித்து அவர்களுக்கு வாழ்த்துக் கவிதைகள் அனுப்பிக் கொண்டு இருக்கிறேன். இவ்வளவு பொருளும் அதிலே அடங்குகின்ற வகையில், 'அலட்சியமாக இருந்ததுண்டு. வாரம் ஒன்றுக்கு இருபது ஒண்ணரையணா தபால் செலவை எண்ணி' என்று எழுதியிருந்தார். அந்த கேலி நயத்தை என்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. புத்திசாலித்தனம் என்று கருதிக் கொண்டு மறுநாள் இருபது ஒண்ணரையாணா தபால் தலைகளை வாங்கி அதை ஒரு கவரிலே வைத்து அவருக்கு அனுப்பி வைத்தேன். அது ஒரு பெரும் தவறுதான். அந்தத் தவறுக்குப் பிராயச்சித்தம்தான் அந்தக் கவிவேந்தருடைய சிலையைத் திறந்து வைக்கின்ற நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்கிறேன்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், திரைப்படத்திலே நாடகத்திலே, நூல்களிலே, பள்ளியிலே, பல்கலைக்கழகத்திலே, பாவேந்தரின் பாடலை வைத்துக்கொள்ளத் துடியாய்த் துடிக்கிறோம். ஆனால் அன்றைக்கு அவருடைய பாடல்கள் என்றால் பயந்து நடுங்கியவர்கள் உண்டு. இலக்கியச்

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா உயர்நிலைக்குழு

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடத் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள உயர்நிலைக்குழுவின் முதல் கூட்டம், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில், 10.5.90 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுவில் இடம்பெற்றுள்ள பெருமக்கள்:

தலைவர்:

மாண்புமிகு முதல்வர் கலைஞர்

உறுப்பினர்கள்:

1. மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்
2. மாண்புமிகு ஆதிதிராவிடநல அமைச்சர் டாக்டர் எ. இராமகிருஷ்ணன்
3. மாண்புமிகு செய்தி தொழிலாளர் நல அமைச்சர் திரு. கே.என் நேரு
4. திரு. எஸ். ஆர். இராதா, எம்.எல்.ஏ. சட்டமன்றப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர்
5. திரு. ஜி. கருப்பையா மூப்பனார், எம்.எல்.ஏ.
6. திரு. டபிள்யூ.ஆர். வரதராசன், எம்.எல்.ஏ.
7. திரு. பி.எச். பாண்டியன், எம்.எல்.ஏ.
8. திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர், எம்.எல்.ஏ.
9. திரு. எம்.ஏ. அப்துல் லத்தீப், எம்.எல்.ஏ.
10. திரு. அழகர்சாமி, எம்.எல்.ஏ.
11. திரு. பி.என். வல்லரசு, எம்.எல்.ஏ.
12. பேராசிரியர் ஆஸ்கர் நிக்லி, எம்.எல்.ஏ.
13. திரு. கி.வீரமணி, எம்.ஏ.,பி.எல்.
14. டாக்டர் சத்தியவாணிமுத்து
15. திரு. எல். இளையபெருமாள்
16. திரு. வை. பாலசுந்தரம்
17. திரு. அ. சக்திதாசன்
18. கவிஞர் அருமைநாதன்
19. திரு. சு. பாலன்
20. திரு. ஆர்.ஏ. சீதாராமதாஸ். இ.ஆ.ப., செயலர், ஆதிதிராவிட நலத்துறை, சென்னை-9.
21. திரு. எஸ்.ஐ. வெங்கட்ராமன், பொருளாளர், செங்கை-அண்ணா மாவட்ட தி.மு.க.
22. திரு. ஜே. எஸ். ராசு, எம்.பி.
23. திரு. சி.டி. தண்டபாணி
24. திருமதி. ஏ.எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ.
25. திருமதி. ஜெயந்தி, இ.ஆ.ப., செயலர், செய்தி மற்றும் சுற்றுலாத்துறை, சென்னை-9.
26. டாக்டர் சா. பெருமாள், (தமிழ்த்துறைத் தலைவர்) முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி, வேலூர்.
27. திரு. எஸ். வேணுகோபால் ரெட்டி, நிலைய இயக்குநர், அகில இந்திய வானொலி நிலையம், சென்னை-4.
28. திரு. கே.பி.கே. நம்பியார், இயக்குநர், தொலைக்காட்சி நிலையம், சென்னை-5.
29. திரு. கே. சொர்ணம், தலைவர், தமிழ்நாடு திரைப்பட மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிலையம், சென்னை-113.
30. உறுப்பினர்-செயலர் திரு. கி.ராஜமாணிக்கம், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு, சென்னை-9.

- டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா, வேலூரில் வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கார் சிலையை ஜூலை முதல்நாள் திறந்து வைப்பதன்மூலம் தொடங்கி வைக்கப்படும்.

- நாடு முழுவதும், எல்லா மாநிலங்களின் தலைநகரங்களிலும் விழா எடுத்து, டாக்டர் அம்பேத்கார் அஞ்சல் தலை வெளியிட மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

- ஒரு ரூபாய் நாணயம், டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய திருவுருவம் பொறிக்கப்பட்டு, மத்திய அரசால் வெளியிடப்பட வேண்டும்.

- இனி, சென்னையில் உள்ள சட்டக் கல்லூரி சட்டமேதை அம்பேத்கார் பெயரால் அம்பேத்கார் சட்டக்கல்லூரி என்றே அழைக்கப்படும்.

—மாண்புமிகு முதல்வர் கலைஞர்

(10.5.90-ல் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டுவிழா உயர்நிலைக்குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரையிலிருந்து.)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் 10.5.90 அன்று தலைமைச் செயலகத்தில் கூடிய, டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா உயர்நிலைக் குழுக் கூட்டம்

லாம் அமர்ந்து காட்சியினுடைய முதல் பாடல் எதுவாக இருக்கலாம் என்று- ஒரு நடனப் பாடலாக இருக்கலாம் என்று முடிவு செய்து எந்தப் பாடல் அமைக்கலாம் என்று யோசித்தபோது நான் சொன்னேன், புரட்சிக் கவிஞர் எழுதிய 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற பாடலை வைக்கலாம் என்றேன். அவர் ஒப்புதல் தருவாரா என்று கேட்டார்கள். நிச்சயம் தருவார் என்றேன். பிறகு நானே புதுவைக்குச் சென்றேன். 'எங்கு வந்தாய்' என்று கேட்டார். சொன்னேன்: பராசக்தி படத்தில் முதல் காட்சியில் 'வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு' என்ற பாடலை வைக்கத் தீர்மானித்திருக்கிறோம். தங்களுக்கு எவ்வளவு தரவேண்டும் என்று கேட்டேன். அதை வைப்பதற்காக நீ எவ்வளவு கேட்கிறாய், நான் தருகிறேன் என்றார். கொள்கை பரவ வேண்டும் என்பதில், தன்னுடைய கருத்து மக்கள் உள்ளங்களுக்குச் சென்று தொட வேண்டும் என்பதிலே அவ்வளவு ஆர்வம் படைத்திருந்தார். அதற்கு முன்பு எத்தனையோ படங்களில் அவருடைய உரையாடல் வந்ததுண்டு. குறிப்பாக சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் அவருடைய உரையாடலைக் கொண்ட படங்கள் ஏராளமாக வந்ததுண்டு. அன்றைக்கு அவருடைய உரையாடல் தமிழில் துள்ளல் இருக்கும். எனக்கு நினைவு மகாபாரதத்தைத் தழுவி எடுத்த படம். அந்தப் படத்திலே அர்ச்சுனனைப் பற்றி



பாவேந்தர் நூற்றாண்டு:

தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள்-இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!
தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்-இன்பத்
தமிழ் எங்கள் வலமிக்க உளமுற்ற தீ!

ஒரு வர்ணனை அவன் கோபத்தோடு வந்தான் என்று சொல்லும்போது 'வில்லைக் காட்டினான் விஜயன் என்கிறார். பிறகென்ன பல்லையா காட்டுவான்?' இப்படிப்பட்ட உரையாடல்கள் திரையுலகத்திலே அண்ணா, நான், இளங்கோ இவர்களெல்லாம் நுழைவதற்கு முன்பே புரட்சிக் கவிஞர் பாரதிதாசனால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால் அவைகளெல்லாம் அந்தக் காலத்திலே புராணப் படங்களாக வந்துவிட்ட காரணத்தால் அவைகள் பெற வேண்டிய விளம்பரங்கள் பெற முடியாமல் போயிருக்கலாம். ஆனால் உரையாடலிலும் சரி, அவர் திரையுலகத்தில் படங்களுக்கு இயற்றிய பாடலிலும் சரி எதிலும் தமிழ் உணர்வு இருக்கும். பகுத்தறிவு உணர்வு இருக்கும், அந்தத் தமிழ் இனிமையை அவர் விட்டுக் கொடுக்க என்றைக்கும் தயாராகயில்லை.

இன்னொன்று மிக ஆழமாக- விஞ்ஞான ரீதியோடு அவர் பாடல்களை எழுதுவார் என்பதற்கு ஒரு சான்று. அவர் விதவைத் திருமணத்திற்காகப் போராடியவர். அவருடைய கவிதைகள் அதற்காகத்தொடர்ந்து முரசு கொட்டிக் கொண்டிருக்கின்றன. கலப்புத் திருமணம்- விதவைத் திருமணம், சமுதாயச் சீர்திருத்தம் இவைகளுக்காக,தொடர்ந்து அவர் முரசு கொட்டியவர். விதவையின் துயரத்தைச் சொல்கிறார்.

'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா'

என்பதோடு விடவில்லை, அந்தக் கைம்பெண்ணுக்கும் உணர்வுண்டு என்பதை எடுத்துச் சொல்ல,

பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ?

என்கிறார்.

பாடாத தேனீக்கள்-அதற்கு அடைமொழி கொடுக்கவில்லை. உலவாத்தென்றல்-அதற்கும் அடைமொழி கொடுக்கவில்லை. ஆனால் ஒரு கைம்பெண்ணுடைய உள்ளத்தைப் பற்றிக் கேள்வி கேட்கிற நேரத்தில் சொல்கிறார்.

பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ

பசியாத வயிறு பார்த்ததுண்டோ என்று கேட்கவில்லை. ஏனென்றால் எல்லா வயிறும் பசிப்பதில்லை. சில வயிறுகள் நோயின் காரணமாகப் பசி எடுப்பதில்லை. ஒரு நோயாளி மருத்துவரிடத்தில் சென்றால் மருத்துவர் கேட்கிற முதல் கேள்வி, பசி எடுத்ததா? சாப்பிட்டீர்களா? என்று கேட்பதுதான். நல்வயிறாக இருந்தால்தான் பசி எடுக்கும். எனவே பாரதிதாசன் அதையும் விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்து கவிதை பாடுகிறார்.

பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ

என்று கேட்கிறார். அப்படி விஞ்ஞான ரீதியாகக் கவிதை எழுதிய பெருங் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்.

நமக்குக் கிடைத்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், எங்கு தவறு நடந்தாலும் சீறிக் கிளம்புகின்ற தன்மானச் சிங்கமாக- தலைதாழாச் சிங்கமாக- தமிழர்களுக்குப் பாதுகாப்பு அரணாக

''வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள்
வெற்றித் தோள்கள்
கங்கையைப் போல்- காவிரி போல்
கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளம்''

என்று பாடிய கவிதை மூலமாக என்றென்றும் நம்முடைய உள்ளத்தில் தமிழுக்காக- தமிழர்களுக்காக- தமிழ்ச் சமுதாயத்துக்காகப் போராடக் கூடிய ஆற்றலைத் தந்தவர் அந்த மாபெரும் கவிஞர். அவர் வேதனையோடு பாடிய வரிகள்தான்-

''இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கிற தென்பானும் இருக்கின்றானே!

என்கிற பாடலாகும். இந்தப் பாடல் வரிகளில் இருக்கின்ற வேதனை இன்னமும் நீங்கிய பாடில்லை. இன்னும் சாத்தூர்கள்- ராஜபாளையங்கள், திண்டுக்கல்கள் நடைபெறுகின்றன.

சாதி-மத பேதங்கள் இன்னும் ஒழிந்த பாடில்லை. இந்த நூற்றாண்டு விழாவிலாவது சாதி மதத்தை வேரோடு சாய்க்கப் புறப்பட்ட- அந்தத் தடம் மாறாத பெருங் கவிஞன் பாரதிதாசன் பெயரால் சாதி மத பேதங்கள் அகல நாம் சூளுரை மேற்கொள்வோம்.

இந்த விழாவில் ஒரு இனிய நற்செய்தியாக புரட்சிக் கவிஞருடைய குடும்பத்தார் தம்பி மன்னர் மன்னன் தலைமையில் வந்து பாரதிதாசன் நூல்களை நாட்டுடைமையாக்க அரசுக்கு ஒப்புதலை வழங்கியிருக்கிறார்கள். அதற்குரிய தொகையை- அந்தக் குடும்பத்திற்குத் தேவையான என்று கூட அல்ல- இயன்ற தொகையைத் தந்து புரட்சிக் கவிஞர் தந்துள்ள விலை மதிப்பில்லா அந்தப் புதையலுக்கு- அதற்கு விலை கிடையாது.- இருந்தாலும் அரசின் சார்பில் இயன்ற தொகையைக் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பங்கிட்டுத் தரப்பட்டு இந்த நூற்றாண்டு விழாக்காலத்திலே புரட்சிக் கவிஞரின் நூல்கள் அரசுடைமையாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சியில் 6.5.90 அன்று பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா உரையிலிருந்து,

பாவேந்தர் நூற்றாண்டு: சில சிந்தனைகள்

-புலவர் கா. கோவிந்தன்.



இந்த ஆண்டு, பாவேந்தர் பாரதிதாசனாரின் நூற்றாண்டு. அவர் நூற்றாண்டினைக் கொண்டாடும் தமிழகம், விழாக் கொணடாடும் முன் தம் கவிதைகள் மூலம், ''அப்பாவேந்தர் காண விரும்பிய - உருவாக்க விரும்பிய தமிழகத்தை - உலகத்தைக் கண்டு விட்டோமா? உருவாக்கி விட்டோமா? அதற்காக, நாம் ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டோமா? எடுத்துக் கொண்ட முயற்சியில் சிறிதேனும் வெற்றி கண்டோமா?'' என்ற கேள்விகளைத் தத்தம் நெஞ்சுக்குள்ளேயாவது கேட்டுக் கொள்ள வேண்டாமா? பாவேந்தர் கேட்ட கேள்விகளும் அவர்தம் நினைவலைகளும் சில இதோ:

''குயில்கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த மயில் ஆடிக்கொண்டிருக்கும்; வாசம் உலவிய நல் காற்று குளிர்ந்து அடிக்கும்; கண்ணாடி போன்ற நீர் ஊற்றுக்கள் உண்டு; கனி மரங்கள் மிக உண்டு. பூக்கள் மணம் கமழும்; பூக்கள் தோறும் சென்று தேனீக்கள் இருந்தபடி இன்னிசை பாடிக்களிக்கும்''.

எனப்பாடி, எழில் கொஞ்சும் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் தமிழகத்தைக் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, உலகம் அச்சாரலின் இன்பக் காட்சிகளில் மெய்ம்மறந்திருக்கும் நிலையில்,

''இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப்பழக்கம், முடிவுற்ற கண்ணுறக்கம்,
ஓடுவது என்றோ? உயர்வது என்றோ?''

என்ற கேள்விக் கணைகளைத் தொடுத்து விட்டாரே! அவர் வினாக்களுக்கு விடை கண்டு விட்டோமா? அதற்கு அவர், அப்போதே விடையையும் எழுதி வைத்துச் சென்று விட்டார்: ''நானறியேன்'' இதுவே அவர் விடை.

''காதலைத் தீய்த்த கட்டுப்பாட்டிற்குள்'' சிக்குண்ட பாவேந்தர், காதலால் தீய்ந்த கன்னிப் பெண்ணாக மாறி,

''எனை மணந்தார் இறந்தார்; என்குற்றம் அல்ல;
இறந்தவுடன் மங்கலநாண் நல்லாடைகள்;
புனைமலர், குங்குமம், அணிகள் போனது உண்டு;
பொன்னுடலும், இன்னுயிரும் போனது உண்டோ''

என உலகைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்திக் கேள்விக் கணைகளை வீசியுள்ளாரே; நல்லவிடை அளித்தோமா? இல்லை; விதவையர்க்கு நிதியுதவி அளிக்கத்தான் முடிந்தது. அது செய்த தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கு நன்றி சொல்லலாம்.

''தமிழ் வளர்ச்சி'' காணத் துடித்த பாவேந்தர், ''எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்'' என ஆணையிட்டுச்சென்றார். அந்த ஆணையை நிறைவேற்றி விட்டோமா? நிறைவேற்றவில்லை.

''எந்நாளோ?'' என்ற ஏக்கப் பெருமூச்சு விடும் சிறுதலைப்பின் கீழ்.

''என்னரும் தமிழ்நாட்டின்கண் எல்லோரும்
கல்விகற்று உன்னத இமமா மலைபோல் ஓங்கிடும்
கீர்த்தி எய்தி, இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக் கேட்டிடல் எந்நாளோ

''தாயெழில் தமிழை,
ஆயிரம் மொழியில்காண இப்புவி அவா விற்று என்ற
தோயுறும் மதுவின் ஆறு வந்து பாயும் நாள்
எந்நாளோ?''

''வெள்ளம்போல் தமிழர் கூட்டம்; வீரம்கொள்
கூட்டம், உள்ளத்தால் ஒருவரே; கள்ளத்தால்
நெருங்கொணாதே'' என வையம் கலங்கக் கண்டு
உள்ளம் துள்ளும் நாள் எந்நாளோ?

அடுக்கடுக்கான இக்கேள்விகளைப் பாவேந்தர் அன்றே எழுப்பிச் சென்றார்;

''தமிழ் நாடெங்கும் தடபுடல்; உரக்கக் கேட்டான். ''உயிரோ நம் தமிழ்?'' அகிலம் கிழிய ''ஆம்; ஆம்'' என்றனர். தமிழை வளர்க்கும் சங்கம் அளித்தார்கள். சங்கீதமெல்லாம் தகத்தகாயத் தமிழ்! கண் எதிர் தமிழ்க் கட்டுடல் வீரர்கள். கண்ணாளனைக்கோதை ஒருத்தி கொச்சைத்தமிழால் புகழ்ந்தாள். அது பொறாமல் சோர்ந்து வீழ்ந்தார் பாவேந்தர். 'எல்லாம் தமிழ்க் கனவு'. விழித்தார். ''அந்தோ! பழைய நைந்த தமிழரிடையேதான் தாம் இருக்கக் கண்டார். அன்று அவர்கண்ட கனவை அன்றோ. அவருக்கு நூற்றாண்டு விழாக் காணும் இன்றும் நாமும் கண்டு விழிக்கின்றோம்?

''சாந்தியால் உலகம் தழைப்பது நன்றோ?
சமயபேதம் வளர்த்தே தளர்வது நன்றோ?''

எனத்தொடங்கி,

''சூழும் நற்பேதம் தொடர்வது வாழ்வோ?
சுயமரியாதையால் உயர்வது வாழ்வோ?''

என அடுக்கடுக்கான கேள்விக் கணைகளை வீசி ''ஆய்ந்து பார்; ஆய்ந்து பார்'' என ஆணையிட்டுச் சென்றுள்ளாரே பாவேந்தர்.

''புதியதோர் உலகம் செய்வோம்'' என ஆசைப் பட்டார். ''பேதமிலா அறிவுடைய இவ்வுலகத்திற்குப் பேசு சுயமரியாதை உலகு எனப் பேர் வைப்போம்'' எனப் பேராசைப் பட்டார் பாவேந்தர். அவர் ஆசையும், அவர் பேராசையும் நிறைவேறி விட்டனவா? அவற்றை நிறைவேற்றி வைக்க, நாம் முயற்சி செய்வோம்; வெற்றி பெறுவோம்!

முதல்வர் கலைஞர் அறிவித்த அடுக்கடுக்கான சலுகைகள்!

பொதுத் தொகுப்பு (Open Competition)- பிற்படுத்தப்பட்டோருக்கான தொகுப்பு (B.C.)- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (M.B.C.) மற்றும் சீர்மரபினருக்கான தொகுப்பு - ஆதி திராவிட பழங்குடி மக்கள் தொகுப்பு என மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழிற் கல்வித் தேர்வுக்கு அந்தந்த தொகுப்புக்கு உரிய மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களில் - அதாவது தொழிற் கல்வி பயில மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பொதுத் தொகுப்புக்கு 'கட் ஆப்' மார்க் 245 என்று இருக்கலாம். பிற்படுத்தப்பட்டோருக்கு 240 என்று இருக்கலாம். மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 230 என்று இருக்கலாம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 220 என்று இருக்கலாம். அப்படி உரிய மதிப்பெண் எடுக்கும் மாணவர்களில்- ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால், அந்தக் குடும்பத்திலிருந்து வரும் முதல் மாணவருக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும். ஆனால் இதுகுறித்து தவறான சான்றிதழ் தருவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலவசத் தொழிற்கல்வி!

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய தொகுப்புகளில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழிற் கல்விகளுக்கு - தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்கள் குடும்பத்தில் இதுவரை பெற்றோரோ அல்லது உடன்பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால் - அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும், அதற்குக் குறைவாகவும் இருந்தால், அந்தக் குடும்பத்தில் இருந்து வரும் முதல் மாணவராக இருந்தால் அவருக்கு மேற்கண்ட தொழிற் கல்வி வரை இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கின்றேன்.

இதே சலுகையைப் பெறுவதற்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு மேலே குறிப்பிட்ட மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழிற் கல்விகளைப் பெற ஆண்டு வருமானம் 15,000 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் என்று நிர்ணயிக்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இளங்கலை பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி

வருமான வரம்பின்றி- ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை (பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.காம்.) இலவசக் கல்வி வழங்கப்படுமென கடந்த ஆண்டு அறிவித்து அதனை இப்போது செயல்படுத்தி வருகிறோம்.

அதைப்போலவே ஆண்டு ஒன்றுக்கு 12,000 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் வருமானம் உடைய ஏழை, நடுத்தர, குடும்பப் பெண்களுக்கும் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படுமென கடந்த ஆண்டு அறிவித்து செயல்படுத்தி வருகிறோம்.

இதனைத் தொடர்ந்து,

இந்த ஆண்டு முதல் - பிற்படுத்தப்பட்டோருக்கும் - அந்தக் குடும்பத்திலே இதுவரை பெற்றோரோ அல்லது உடன்பிறப்புகளோ யாரும் பல்கலைக்கழகப் பட்டம் பெறாதவர்களாக இருப்பின்- அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும் அல்லது அதற்குக் குறைவாகவும் இருக்குமேயானால் - அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரை (பி.ஏ.,பி.காம்.,பி.எஸ்.ஸி.) இலவசக் கல்வி வழங்கப்படும்.

—சட்டமன்றத்தில் முதல்வர் கலைஞர்.
(10.4.90)

பாவேந்தர் நூற்றாண்டு:

முதற் கவிஞன்



கவிஞர் சாமி பழனியப்பன்

பள்ளத்தில் வீழ்ந்திருந்த தமிழ ரெல்லாம்
பகுத்தறிவும் இனவுணர்வும் பெறுவ தற்கு
உள்ளத்தில் ஒருசிறிதும் சலன மின்றி
உரமிக்க கவிதைவாள் கரத்தி லேந்தி
தெள்ளுதமிழ்க் கவிவெள்ளம் பெருக்கெ டுக்கச்
செய்திட்ட முதற்கவிஞன்; அவன்தான் எங்கள்
உள்ளத்தின் உணர்வானான்! அவனை இந்த
உலகத்தார் பாரதிதா சன்என் பார்கள்!

மக்கள்எதை விரும்பிடுவார்? எதனைச் சொன்னால்
மண்டுபுகழ் பெற்றிடலாம்? பதவி வாய்க்கும்?
தக்கபலன் எய்திடலாம் என்ப தெண்ணித்
தான்மக்கள் பின்செல்லும் போக்கில் லாமல்
எக்கருத்து தமிழினத்தை உயர்த்தும் என்று
எண்ணிஎண்ணி இகழ்ச்சிக்கும் எதிர்ப்பினுக்கும்
எக்கணமும் அஞ்சாமல் எடுத்து ரைத்தான்!
இவ்வாண்டு அன்னவனின் நூற்றாண் டாகும்!

பார்போற்றும் பகுத்தறிவுக் கொள்கை தன்னைப்
பைந்தமிழ்க் கவிதைகளால் நிரலே சொன்னான்;
காரிருளில் இவ்வுலக மக்க ளெல்லாம்
கலங்காமல் துறைதோறும் 'திருத்தம்' சொன்னான்
பார்மக்கள் அனைவரும் ஒன்றே என்னும்
பண்பாடு பரவுதற்கு வழியும் சொன்னான்
பாரெல்லாம் அவன்கொள்கை பரவிற் றல்லால்
பஞ்சமிலை! வறுமையிலை! கலக மில்லை!

பாவேந்தன் கொள்கையினை உலக மெங்கும்
பரப்புதற்குத் திட்டமிட்டுப் பணிகள் செய்வோம்!
நாவேந்த ராய்க்காலம் கழித்தி டாமல்
நாமெல்லாம் உழைத்திடுவோம்! அதுஒன் றேதான்
பாவேந்தன் தனக்குநாம் செலுத்து கின்ற
பார்போற்றும் பெருநன்றி! அவன்பேர் வாழ்க!
மூவேந்தர் வளர்த்ததமிழ் மொழியே போன்று
முழுமதிப்பா வேந்தன்புகழ் வாழ்க! வாழ்க!

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை
புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சிப் பணிகளில் 1989-90-ஆம் ஆண்டில் கண்டுள்ள சிறப்பான முன்னேற்றம் - 28.2.90

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்			
ஆண்டு ஒதுக்கீடு	...	169.914	இலட்சம்
பயன் பெற்றோர்	...	6615	நபர்கள்
வழங்கிய மான்யம்	...	126.920	இலட்சம்
வழங்கிய வங்கிக் கடன்	...	261.950	இலட்சம்
சுயவேலை வாய்ப்புத் திட்டம்			
பயிற்சிக்கு அனுப்பப்பட்டவர்கள்	...	155	நபர்கள்
இதுவரை செலவிடப்பட்ட தொகை	...	8.05	இலட்சம்
டோக்ரா			
ஆண்டு ஒதுக்கீடு	...	15.20	இலட்சம்
மொத்தம் பயனடைந்தவர்கள்	...	1967	நபர்கள்
ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்			
ஆண்டு ஒதுக்கீடு (1.4.89 ஆரம்ப இருப்பு உள்பட)	...	633.32	இலட்சம்
செலவிடப்பட்ட தொகை	...	600.82	இலட்சம்
தோற்றுவிக்கப்பட்ட மனித சக்தி நாட்கள்	...	28.37	இலட்சம்
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த வேலைகள்	...	4266	இலட்சம்
முடிக்கப்பட்ட வேலைகள்	...	3607	இலட்சம்
ஜீவன்தாரா கிணறுகள் எடுத்துக்கொள்ளப்பட்டவை	...	120	இலட்சம்
ஜீவன்தாரா கிணறுகள் முடிக்கப்பட்டவை	...	113	இலட்சம்
வேளாண்மைப் பெருக்குத் திட்டம்			
ஆண்டு ஒதுக்கீடு	...	28.56	இலட்சம்
பயன் பெற்றோர்	...	745	நபர்கள்
வழங்கிய மான்யம்	...	23.29	இலட்சம்
வழங்கிய வங்கிக் கடன்	...	52.92	இலட்சம்
வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்			
ஆண்டு ஒதுக்கீடு	...	60.000	இலட்சம்
செலவிடப்பட்ட தொகை	...	40.121	இலட்சம்
பயனடைந்த நிலத்தின் மொத்த பரப்பு	...	3940	ஹெக்டேர்
மண்வளப் பாதுகாப்பு செய்யப்பட்ட நிலத்தின் பரப்பு	...	2908	ஹெக்டேர்

திரு. அ. பாஸ்கரன், பி.ஏ.,
திட்ட அலுவலர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை.

திரு. ம. குற்றாலிங்கம், இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சித் தலைவர்/பெருந்தலைவர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை

புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,
புதுக்கோட்டை

எமது வங்கியின் சிறப்பு அம்சங்களில் சில:-

★ அனைத்து வகை டெபாசிட்டுகளுக்கும் ஏனைய வங்கிகளைவிட ½% கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது.

★ எமது வங்கியின் புதுக்கோட்டை நகரக்கிளை வாரத்தின் 7 நாட்களும் விடுமுறையின்றி காலை, மாலை, இரு வேளைகளிலும் செயல்படுகிறது.

★ வங்கித்தலைமையகம், ஆலங்குடி, கீரமங்கலம், அரிமளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை நகரக்கிளை மற்றும் மகளிர் கிளைகளில் பாதுகாப்புப் பெட்டக வசதி உள்ளது.

★ உங்கள் வசதிக்கு ஏற்ப பலவகை டெபாசிட் திட்டங்கள்.

உங்கள் வைப்பு பன்மடங்காகப் பெருக கூட்டு வட்டியுடன் கூடிய எங்களது

"கற்பகத்தரு டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்!"

விவரங்களுக்கு வங்கித் தலைமையகம் மற்றும் மாவட்டத்திலுள்ள 18 கிளைகளை அணுகுவீர் !

ச. நடராஜன், பி.காம்., (ஆனர்ஸ்)
செயலாளர்

அ. இராமையன், பி.காம்
தனி அலுவலர்

பெற்றோர் ஆசிரியர் கழக வெள்ளி விழா

தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழக வெள்ளி விழா, சென்னை-கலைவாணர் அரங்கத்தில் 26.4.90 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பங்கேற்று விருதுகள் வழங்கிய இந்த விழாவிற்கு, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் தலைமை தாங்கினார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சிவஞானம் வரவேற்புரையாற்றினார். பெற்றோர்-ஆசிரியர் கழகத் தலைவா திரு. அரங்க நடராசன், துணைத் தலைவர் திரு. மில்டன், ஆசிரியர் கழகத்தின் அரசு நியமன உறுப்பினர் திரு. முல்லைவேந்தன் எம்.எல்.ஏ., தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. நாச்சிமுத்து, கல்வித் துறைச் செயலர் திரு. எச்.பி.என். ஷெட்டி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இவ்விழாவில் கலந்துகொண்ட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. எஸ். துரை முருகன் அவர்கள் பேசிய பின்- மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்கள் தலைமையுரையாற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:

"தமிழ்நாட்டில், நீண்ட நெடுங் காலமாகக் கல்வியின் பயன் உணரப் பட்டே வந்திருக்கிறது. ஆனால்- 'என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி பெற வேண்டும்'என்கிற புரட்சிக் கவிஞரின் குறிக்கோள் நிறைவேற வேண்டுமானால், அரசு மட்டும் முயன்றால் முடியாது; சமுதாயமும் ஒத்துழைக்க வேண்டும். மாணவர்களை நல்ல விதமாகக் கல்வி பெறச் செய்வதில் ஆசிரியர்களுக்கு எப்படிப் பெரும் பொறுப்பு இருக்கிறதோ, அதேபோல் பெற்றோர்களுக்கும் சில கடமைகள் உண்டு.

"பெற்றோர் ஆசிரியர் சங்கம் எல்லாப் பள்ளிகளிலும் அமைக்கப் பட வேண்டும்; மாதம் ஒருமுறை கூடவேண்டும். மாணவர்களுக்குப் பாடநூல் தட்டுப்பாடு போன்ற குறைகள் ஏற்படாமல் கண்காணிக்க இத்தகைய சங்கங்கள் பயன்பட வேண்டும்; இப்படிப்பட்ட சங்கங்கள் பொதுமக்களின் நெருக்கமான உறவைப் பெறுமானால், கல்வித் துறைக்கே முதுகெலும்பு போல் இருந்து முழுப்பயனையும் ஏற்படுத்தித்தர முடியும்."

-இவ்வாறு மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்கள் பேசினார்.

170 பெற்றோர்- ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கியும், பெற்றோர்-ஆசிரியர் கழக வெள்ளிவிழா மலரை வெளியிட்டும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் நிறைவுப் பேருரை ஆற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"மாதா - பிதா- [illegible] - தெய்வம் என்று சொல்லுகிறோ[illegible] மாதா,

பாவேந்தர் நூற்றாண்டு:

**அன்பும் அறனும்
உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும்
அது' என்றார் வள்ளுவனார்
இல்வாழ்வில் அன்பும்
அறமும் இருக்குமெனில்
நல்லதன்மை நல்லபயன்
நாளும் அடையுமன்றோ?**

**தாழ்வில்லை உயர்வில்லை
சமமென்ற நிலைவந்தால்
வாழ்வெல்லை காண்போமடி-சகியே
வாழ்வெல்லை காண்போமடி!**

**பிறப்பில் உயர்வுதாழ்வு
பேசும் சமூகம்மண்ணில்
சிறக்குமோ சொல்வாயடி-சகியே
சிறக்குமோ சொல்வாயடி!**

பிதா, குரு, தெய்வம் என்று எழுதிப் பார்த்தால், அவை வார்த்தைகள் அல்ல; அது ஒரு வாக்கியமாகும். மாதா-பிதா-குரு-தெய்வம் என்கின்ற நான்கு பேரைக் குறிப்பதாகக் கருதலாம். ஆனால் அப்படி அல்ல. தெய்வம் என்பது, மாதா-பிதா-குரு இந்த மூன்று பேரையும் குறிப்பிட்டு இந்த மூவரும்தான் தெய்வம் என்று குறிப்பிடுகின்ற வாக்கியம் என்றே கருதுகிறேன். எனவே அத்தகைய தெய்வத்திற்கு, மாதா-பிதா-பெற்றோர், குரு-ஆசிரியர், பெற்றோர்-ஆசிரியர் இவர்களிடையே உருவாகியுள்ள அந்த ஆழமான உணர்விற்கு, ஒற்றுமைக்குப் பொருத்தமாகச் சொல்ல வேண்டுமேயானால் தெய்வத்திற்கு நடைபெறுகிற விழா, இந்த விழா என்று நான் கூற விரும்புகிறேன்.

''இங்கே குழுமியிருக்கின்றவர்களில் பெற்றோர் சங்கம் - அல்லது ஆசிரியர் சங்கம் இரண்டும் இணைந்த பெற்றோர் ,ஆசிரியர் சங்கம் என்று பார்க்கும்போது, இதில் ஆசிரியர்கள் பெற்றோராக இருக்கக்கூடும்; இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளை ஆகக்கூடும். ஆனால் பெற்றோர் எல்லாம் ஆசிரியராக இருக்க இயலாது. எனவேதான் இந்த பெற்றோர்-ஆசிரியரிடையே விளங்குகின்ற நல்லுறவு, நல்ல மாணவர்களை உருவாக்கவும், அப்படி உருவாகின்ற மாணவ சமுதாயம் இந்த நாட்டின் எழுச்சிமிக்க இளைய தலைமுறையாக எழுந்து நிற்கவும், நாம் பொறுப்போடு, கடமை உணர்வோடு பாடுபட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகைக்கு மாத்திரம் அல்ல; செயல்படுத்திக் காட்டுகின்ற வகைக்கும் தேவை என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

''மதிய உணவு, சீருடை, பேருந்துகளிலே இலவசப் பயணம் அல்லது பாதிக் கட்டணம் செலுத்தினால் போதும் என்கின்ற சலுகை, இட ஒதுக்கீடு, இலவசக் கல்வி என்கின்ற இவ்வளவும் இருந்தாலும்கூட இன்னமும் படிப்பவர்களுடைய தொகை விகிதாச்சாரம் நாம் மனநிறைவு கொள்கின்ற அளவிற்கு இல்லை என்பதை நம்மாலும் மறுத்திட இயலாது.

''இட ஒதுக்கீடுகளை இன்றைக்கு இந்தியாவிலேயே தமிழகத்தில் அவர்களுக்கு இத்தனை சதவிகிதம் என்று ஒதுக்கினால் மாத்திரம் போதாது; அந்தப் பயனைப் பெறுவதற்குக் கல்வித் துறையிலே இவ்வளவு சலுகைகளையும் செய்திட வேண்டும், நிர்வாக ரீதியாக - என்கின்ற எண்ணத்தோடு தமிழக அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டினாலும்கூட அந்தப் பயனைப் பெறுவதற்கான ஒரு தூண்டுதலை அந்தப் பிள்ளைகளுக்கு ஆசிரியப் பெருமக்களும், பெற்றோர்களும் வழங்கியாக வேண்டியிருக்கிறது. எனவேதான் பெற்றோர்-ஆசிரியர் இந்த இருவருடைய உறவும் நல்லிணக்கமும் பள்ளிக் கூடங்களை, அங்குப் பயிலுகின்ற மாணவர்களை-அவர்களது எதிர்காலத்தை பிரகாசம் மிக்கதாக ஆக்குகின்ற அந்த முயற்சியை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

''அதனை ஊக்கப்படுத்துகின்ற வகையிலேதான் இதுபோன்ற விழாக்கள் ஆண்டுதோறும் எடுக்கப்படுகின்றன. 170 பேருக்கு இன்றைக்கு நாம் விருதுகளை வழங்கியிருக்கிறோம்.

''இன்றைக்கு மாணவர்களுக்காகத் தரப்படுகின்ற மதிய உணவு, சத்துணவுக்கூடம் இவைகளைக்கூடக் கண்காணிக்கின்ற - மேற்பார்வையிடுகின்ற பொறுப்பு ஆங்காங்கே இருக்கின்ற பீக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு, ஒன்றியத் தலைவர்களுக்கு இருப்பதைப்போல - அதிகாரிகளுக்குத் தரப்பட்டிருப்பதைப் போல - அந்தப் பொறுப்பையும் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களும் ஆங்காங்கு கண்காணித்தால் இன்னும் கொஞ்சம் சரியாகச் செயல்படும். மற்றவர்கள் கடமை உணர்வோடு அந்தக் காரியத்தைச் செய்வார்கள்.

''பெற்றோர்களே நேரில் வந்து தங்களுடைய பிள்ளைகள் ஒழுங்காகச் சாப்பிடுகிறார்களா? அவர்களுக்காக வழங்கப்படுகின்ற இந்தச் சாப்பாடு அரசன் கையிலிருந்து மாறிவருகிற ஐஸ் கட்டியைப் போல ஆகிவிடுகிறதா? அல்லது ஒழுங்காகப் பரிமாறப்படுகின்றதா என்கின்ற அந்தப் பாச உணர்வோடு பார்க்கின்ற அந்தப் பொறுப்பு, பெற்றோர் இடத்தில்-ஆசிரியர் இடத்தில் இருக்கும் என்கின்ற காரணத்தினால் அவர்களும் இதிலே ஈடுபடலாம் என்கின்ற கொள்கை ரீதியான ஒரு எண்ணத்தை நாங்கள் பெற்றிருக்கிறோம். ஆசிரியர்கள், பழையபடி சமைக்கச் சொல்வார்களோ என்று யாரும் பயப்படத் தேவையில்லை. கண்காணித்தால் போதும். கண்காணித்தால் என்று சொல்வது, குழந்தைகளுக்குப் பரிமாறுவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும். சாப்பிடுகிறார்களா என்று பார்த்தால் போதும் என்கின்ற அந்த அளவிலேதான் நான் சொல்கிறேனேயல்லாமல் வேறல்ல.

''எனவே இந்தக் கழகத்தினுடைய பெரும்பணி, நம்முடைய சந்ததியர்களின் எதிர்காலத்தை உருவாக்க வல்லதாக அமையவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அமையும் என்று நான் நம்புகின்றேன்.''

தொகுப்பு:

-பி.எல்.ஆர்.

சிறு சேமிப்புத் துறை



இந்த வரைபடம் உங்கள் வரிப் படம்...

குறைந்துவிட்டதே!

தேசிய சேமிப்புத் திட்டத்தின் மூலம் ரூ.30,000/- வரை 100% வரி விலக்கு பெறுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டம்

வரிவிலக்கு

வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ் ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின்கீழ் ரூ. 40,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின் கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான வரிவிலக்கு பெற

உங்கள் முதலீடு

தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15 ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/- மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/ 15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல் முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!

தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில் ரூ.1000/- அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.

பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	— காண்டஸா கார்
1 முதல் பரிசு	— மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	— ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 மூன்றாவது பரிசுகள்	— கலர் டி.வி.
20 நான்காவது பரிசுகள்	— 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	— குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	— குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

DIPR/MS/90/ARIES

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(அல்லது)
மாவட்ட சேமிப்பு அலுவலர்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

TNPSC

தமிழ்நாடு - அரசுப்பணியாளர் தேர்வாணையம்

சென்னை-600 002.

தமிழ்நாடு தோட்டக் கலைத் துறையில் தோட்டக்கலை அலுவலர் பதவிக்கு (1989-90-ம் ஆண்டு) தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் அடங்கிய பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3	4	11	16	17	19	20	21
23	25	35	38	44	48	51	53
61	67	70	73	76	78	84	89
94	101	118	120	122	125	127	135
138	143	149	157	170	172	180	

ஒரு பணி வேட்பாளரின் தெரிவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

டிஐபிஆர்/1048/எம்எஸ்/90/அக்கார்ட்

TNPSC தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்

தொகுதி 2 மற்றும் 3 - 1989 - 90
முதல் நிலைத் தேர்வுகள்

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தன்னுடைய விளம்பர எண் 55-ல் தொகுதி 2, மற்றும் 3-ல் அடங்கிய பதவிகளுக்கு நேரடி தேர்வு மூலம் நியமிக்கப்பட விண்ணப்பங்கள் கோரப்பட்டது. இப்பதவிகளுக்கு முதல் நிலைத் தேர்வு நடத்த தேர்வாணையம் முடிவு செய்துள்ளது. இப்பதவிகளுக்கு உண்டான முதல்நிலைத் தேர்வின் தேதி மற்றும் தேர்வு விவரம் கீழே ஒவ்வொரு தொகுதிக்கும் நேரே குறிக்கப்பட்டுள்ளது.

பணி (1)	தேதி மற்றும் நாள் (2)	நேரம் (3)	தேர்வு நாள் (4)
தொகுதி-2 (பட்டப்படிப்பு தகுதி)	சனிக்கிழமை 9.6.'90	காலை 10 மணி முதல் 12 மணி வரை	பொதுஅறிவு பாகம்-1 (கொள்குறி) மற்றும் பாகம்-2 (விரிவுரை மற்றும் சிறுகுறிப்பு) (ஒரே சமயத்தில் விடையளிக்க வேண்டும்)
தொகுதி-3 (மேல்நிலைக் கல்வித்தகுதி	ஞாயிற்றுக்கிழமை 10.6.'90	10மணிமுதல் 12மணிவரை	,,

தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) தேர்வுக்கான இடம் நேரம் முதலிய **விவரம்** தேர்வுக்குப்பத்து தினங்களுக்கு முன்னதாகவே விண்ணப்பதாரர்களுக்கு தனித்தனியே அனுப்பப்படும். தேர்வு நாளுக்கு ஒரு வாரம் முன்னதாக தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரர்கள் ஏற்கனவே விண்ணப்பத்துடன் அனுப்பிய நிழற் படத்தின் மற்றொரு நகல் நிழற்படத்துடன், செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்.

DIPR/997/MS/90/MCS

அண்ணா பன்னாட்டு முனையம் - காமராஜர் உள்நாட்டு முனையம்

சென்னை - திரிசூலத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள அனைத்து நாட்டு விமான நிலையத்திற்கு - "அண்ணா பன்னாட்டு முனையம்" என்றும், இந்தியாவுக்குள் விமானப்பயணம் மேற் கொள்ளப்பயன்படும் மீனம்பாக்கம் விமான நிலையத்திற்குக் 'காமராஜர் உள்நாட்டு முனையம்' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 28.4.90 அன்று விமான நிலையத்தில் நடைபெற்ற இந்த விழாவில் கலந்து கொண்டு மாண்புமிகு மத்திய எரிசக்தி மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ஆரிஃப் முகமதுகான் அவர்கள் இப்பெயர்களைச் சூட்டி, அவற்றுக்கான கல்வெட்டுகளைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு மத்திய செய்தி - ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாத் தொடக்கத்தில் - இந்தியாவில் உள்ள பன்னாட்டு விமான முனையங்களின் தலைவர் திரு சி.எம். கொரானா அனைவரையும் வரவேற்றுப் பேசினார். சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சண்முகம், திரு மீ.அ. வைத்தியலிங்கம் ஆகியோரும் வரவேற்புரை வழங்கினர். விழா முடிவில், சென்னையில் உள்ள பன்னாட்டு முனையத்தின் இயக்குநர் திரு எம்.ஏ. கான் நன்றி தெரிவித்தார்.

இவ்விழாவிற்கு மாண்புமிகு உத்தரப் பிரதேச அமைச்சர் திரு முகமது அஸ்லம்கான், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் திரு கே.பி. கந்தசாமி, திரு எஸ். துரைமுருகன், திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோரும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், நகராட்சித் தலைவர்களும், அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன், செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு சமீர் வியாஸ் மற்றும் அரசு உயர் அதிகாரிகளும் வந்திருந்தனர்.

"1969ல் அறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு - தமிழகத்தின் முதலமைச்சராக நமது தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற போதே இந்த விமான நிலையத்திற்கு அறிஞர் அண்ணாவின் பெயர் வைக்கப்பட வேண்டும் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தியிடம் வலியுறுத்தினார். அப்போது மறுக்கப்பட்ட அது, கலைஞர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இன்று நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளது. உலகெங்கும் உள்ள தமிழர்கள் இதற்காகப் பிரதமர் வி.பி. சிங்கிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்கள், தமது உரையில் குறிப்பிட்டார்.

"காமராஜர் சார்ந்திருந்த காங்கிரஸ் கட்சியினர், அவருடைய பெயரைச் சிறியதொரு ரயில் நிலையத்திற்கு வைக்கும்படி போராட்டம் நடத்தினார்கள். அவர்கள் அரசாண்ட போது செய்ய முடியாததை இப்போது நாம் செய்திருக்கிறோம். அதாவது பெரியதொரு விமான நிலையத்திற்கே இன்று நாம் காமராஜர் பெயரைச் சூட்டியிருக்கிறோம். அந்த ரயில் நிலையத்திற்கு மறைமலையடிகள் பெயரே நிலைபெறட்டும். ஐதராபாத், பெங்களூர் விமானங்கள் சென்னைக்கு வந்து போகும் நிலைமை இருப்பதுபோலவே, இன்னும் அதிக விமானங்கள் இங்கு வந்து போகச் செய்ய வேண்டும்" என்று மாண்புமிகு மத்திய செய்தி-ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா பேசுகையில் தெரிவித்தார்.

"இந்நாட்டின் முதலமைச்சர்களாக இருந்த பேரறிஞர் அண்ணா பெயரையும் பெருந்தலைவர் காமராஜர் பெயரையும் இந்த விமான நிலையங்களுக்குச் சூட்டுவதில் பெருமைப்படுகிறேன். அமைச்சர் உபேந்திரா இங்கு கூடுதல் விமானங்கள் விட வேண்டும் என்றார்; அதன் படி, விரைவில் அதற்கு ஏற்பாடு செய்யப்படும். சென்னையிலிருந்து பெரும்பாலான உலக நாடுகளுக்கு நேரடி விமானப் போக்குவரத்துக்கு வகை செய்யவும் திட்டமிட்டிருக்கிறோம். பல விமான நிலையங்களுக்கு இவ்வாறு பெயர் வைக்கப்பட்டிருந்தாலும்- இப்படிப் பெயர் சூட்டும் விழா முதன்முதலாகச் சென்னையில்தான் நடக்கிறது. இதற்கான பெருமை அமைச்சர் முரசொலி மாறனையே சாரும்" என்று மாண்புமிகு மத்திய எரிசக்தி மற்றும் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ஆரிஃப் முகமதுகான் தமது உரையில் குறிப்பிட்டார்.

விழாத் தலைமையேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதாவது.

"நம்முடைய நீண்ட நாள் ஆசை நிறைவேறுகின்ற வகையில் விமான நிலையத்தினுடைய இரு முனைகளுக்குப் பேரறிஞர் அண்ணா அவர்

பாவேந்தர் நூற்றாண்டு:

ஏக பரம்பொருள் என்பதை நோக்க
எல்லாரும் உடன்பிறப்பே-ஒரு
பாகத்தார் தீண்டப் படாதவர் என்பதி
லேஉள்ளதோ சிறப்பே!

களுடைய பெயரும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய பெயரும் சூட்டப் பெற்று நாம் அனைவரும் பெருமகிழ்ச்சியிலே இன்றைக்கு ஆழ்ந்திருக்கின்றோம்.

"இந்த இரண்டு பெரும் தலைவர்களை நாம் சிறப்பிக்கிறோம் என்பதைவிட, அந்த இரண்டு பேருடைய பெயர்களைச் சொல்லி நம்முடைய பயணத்தை மேலும் தீவிரப்படுத்த- மக்களுக்காகப் பணி ஆற்றிட, ஏழை எளிய மக்களுக்கு முழுப் பயனும் சேர்ந்திட- அவர்களுடைய பெயர்களை நாம் இன்றைக்குப் பயன்படுத்துகிறோம் என்பது தான் உண்மையாகும். நாடாளுமன்ற, மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்ற பேரறிஞர் அண்ணா அவர்கள், பண்டித நேருவிற்கு எதிர் நின்று- மாநிலங்களவையிலே உரையாற்றிய நேரத்தில், தென்னாட்டிலே உள்ள ஏழை எளிய மக்கள், தெருவோரத்தில் இருக்கின்ற மக்கள், நடைபாதைவாசிகள் இவர்களுடைய பிரதிநிதியாக என்னுடைய குரல் ஒலிக்கிறதென்று குறிப்பிட்டார். அந்த அண்ணனுடைய பெயர் இங்கே இன்றைக்கு ஒளி விடுகிறது.

"அதைப்போலவே- இந்தியாவை நான் கிராமங்களில் காண்கிறேன் என்று முழங்கினார் பெருந்தலைவர் காமராஜர். அவருடைய திருப்பெயர் இங்கே சூட்டப்பட்டு நம்மையெல்லாம் இன்றைக்கு மகிழ்ச்சியில் ஆழ்த்திக் கொண்டிருக்கிறது.

"காமராஜர் பெயரால், அவர் மறைந்த பிறகு சென்னையிலே நீண்ட- நெடிய- உலகத்திலே உள்ள கடற்கரைகளிலேயே புகழ்பெற்ற கடற்கரைகளில் ஒன்று எனப் பாராட்டப்படுகின்ற- சென்னைக் கடற்கரைச் சாலைக்கு "காமராஜர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டது. காமராஜருடைய உடல் எரியூட்டப்பட்ட இடத்தில் நினைவாலயம் கட்டப்பட்டது. காமராஜருடைய பிறந்த ஊரான விருதுநகரில் அவர் பிறந்த இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது. அவர் சென்னையில் திருமலைப்பிள்ளை ரோட்டில் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது. அவருடைய பெயரால் மதுரையில் பல்கலைக்கழகம் உள்ளது. இவைகளுடன் இன்றைக்கு மேலும் ஒரு முத்துப் பதிப்பதைப்போல் இந்த விமான நிலையத்தின் ஒரு பகுதிக்கு அவருடைய பெயர் சூட்டப்பட்டிருக்கிறது.

"பேரறிஞர் அண்ணா அவர்கள் 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று அறிவித்தார்கள். அந்தக் காரணத்தினாலேதான் காமராஜர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று அந்தப் பொறுப்பு இருந்திட வேண்டுமேயானால் ஒரு இடைத் தேர்தலில் நின்று வெற்றி பெற வேண்டுமென்ற ஜனநாயக இலக்கணப்படி வட ஆர்க்காடு மாவட்டம் குடியாத்தம் தொகுதியில் இடைத் தேர்தலில் நின்றபோது, 'குணாளா! குலக்கொழுந்தே!' நீ வெற்றி பெற வேண்டுமென்று 'திராவிட நாடு' பத்திரிகையிலே வாழ்த்தி எழுதியவர் பேரறிஞர் அண்ணா. இந்த நல்ல விழாவிலே கலந்து கொண்ட நம்முடைய அருமை நண்பர் ஆரிப் முகமது கான் அவர்களையும், அருமை நண்பர் உபேந்திரா அவர்களையும், தம்பி முரசொலி மாறன் அவர்களையும், உத்திரப்பிரதேச அமைச்சர் முகமது அஸ்லம்கான் அவர்களையும் பாராட்டி வாழ்த்தி வரவேற்கின்றேன்.

"நம்முடைய ஆரிப் அவர்கள் உபேந்திரா அவர்களின் கோரிக்கையை ஏற்று, இங்கே ஏராளமான வெளிநாட்டு விமானங்கள் வந்து செல்கின்ற வசதியை உருவாக்குவதற்கு அவர்கள் ஒப்புதல் அளித்தமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"அதே நேரத்தில் நான் முக்கியமான ஒருவருக்கு நன்றி தெரிவித்தாக வேண்டும். சென்னைக் கடற்கரையில் நடைபெற்ற இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்த பொதுக் கூட்டத்தில் நான் இந்தியப்பிரதமர் வி.பி.சிங் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். இந்த விமான நிலையங்களுக்கு அறிஞர் அண்ணாவின் பெயரும், பெருந் தலைவர் காமராஜரின் பெயரும், சூட்டப் படவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். உடனடியாக அதை ஏற்றுக் கொண்டு மேடையிலேயே அறிவித்தார்கள். இங்கே ஆரிப் அவர்களும், உபேந்திரா அவர்களும் எடுத்துக் காட்டியதைப்போல- பிறகு டெல்லி அமைச்சரவைக் கூட்டத்திலே கலந்து பேசி, முதன்முதலாக அந்த பெயர்ப் பலகையின் திறப்பு விழாவை நடத்தியிருக்கின்றார்கள். அது தான் நியாயமும் கூட! நாம் இங்கே அறிவித்த பிறகுதான், கல்கத்தாவிலே சுபாஷ் சந்திரபோஸ் விமான நிலையம் வந்திருக்கிறது. எனவே, எதற்கும் வழிகாட்டியாக இருக்கின்ற தமிழகம் இதற்கும் வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது. அதனை ஏற்றுக் கொண்டு இங்கே பெயர்சூட்ட ஒப்புதல் அளித்த பிரதமர் வி.பி.சிங் அவர்களுக்குத் தமிழக மக்களின் சார்பாக, அறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பிகளின் சார்பாக, காமராஜர் அவர்களுடைய தொண்டர்களின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

—நிகழ்ச்சித் தொகுப்பு:
'ராஜு'

பெரியார் மாவட்டத்தில்...
வளர்ச்சிப் பணிகள்

பெரியார் மாவட்டத்தில் அரசின் திட்டங்கள் பலவேறு அரசுத் துறைகள் மூலம் முடுக்கி விடப்பட்டுச் சிறப்பாகச் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்டத்திற்கு ரூ.261.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள 10,177 நபர்கள் பயன் பெறுவார்கள். இதில் 5,089 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரும், 4,093 பெண்களும் அடங்குவர். இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.214.79 இலட்சம் செலவிடப்பட்டு 8,900 நபர்கள் பயன்பெற்றுள்ளனர்.

கிராமப்புற இளைஞர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 1989-90-ஆம் ஆண்டில் 700 கிராமப்புற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இதுவரை 548 நபர்கள் பயிற்சி முடித்துள்ளனர். 182 நபர்கள் பயிற்சியில் உள்ளனர். இதுவரை ரூ.14.29 இலட்சம் உதவித் தொகையாக அவர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது.

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் இவ்வாண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ரூ.774.050 இலட்சம். இதுவரையில் வழங்கப்பட்ட தொகை ரூ.725.070 இலட்சமாகும். ஆதிதிராவிடர் வகுப்பினர்களுக்கு 1,729 தொகுப்பு வீடுகள் கட்டுதல், வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் 20 கசிவு நீர்க்குட்டைகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் 188 கசிவு நீர்க்குட்டைகள் அமைத்தல், ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு 100 கிணறுகள் வெட்டுதல், சாலைகள் மற்றும் ஊராட்சிக் கட்டடங்கள் அமைத்தல் முதலான 1,292 பணிகளும் ஆக மொத்தம் 3,329 பணிகள் எடுக்கப்பட்டதில் இதுவரை ரூ.733.756 இலட்சம் செலவிடப்பட்டு, 2,685 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
பெரியார் மாவட்டம்

மாபெரும் திட்டத்தின்கீழ் சிறு, குறு விவசாயிகளுக்கு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க, இதுவரை 937 நபர்களுக்கு ரூ.23.19 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு உள்ளது.

ஊரக வளர்ச்சித் துறை

17,000 நபர்களுக்குக் குடும்ப நலச் சிகிச்சை வழங்கப்பட வேண்டும் என்பது இலக்கு. இதுவரை 12,000 நபர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலட்சுமிரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின்கீழ் 8,600 நபர்களுக்கு ரூ.17.20 இலட்சம் வழங்கப்பட வேண்டும் என்ற குறியீட்டின்படி இதுவரை 5,611 நபர்களுக்கு ரூ.11.90 இலட்சம் உதவி வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடாக ரூ.95.84 இலட்சம் வரப்பெற்றது. இதுவரை ரூ.103.07 இலட்சம் செலவில் 450 ஆழ் குழாய்க் கிணறுகளும், 100 மாற்று ஆழ்குழாய்க் கிணறுகளும், அமைக்கப்பட்டதுடன், குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத்தும் பணிகளும், லாரி மூலம் குடிநீர் விநியோகம், விசைப் பம்புகள் மேம்பாடு, ஆழ்குழாய்க் கிணறுகள் தூர் எடுத்தல், குடிநீர்க் குழாய்கள் பழுது பார்த்தல், குடிநீர்க் குழாய்கள் நீட்டிப்புச் செய்தல், ஜெனரேட்டர் வாங்குதல், தனி நீரேற்று நிலையம் அமைத்தல் மற்றும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் பிறதுறைப் பணிகளும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு மட்டும் இதுவரை ரூ.1.95 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இலவச கண்ணொளி வழங்க குறியீடான 1,000 நபர்களுக்கு இதுவரை 1,171 நபர்களுக்குக் கண்ணொளி வழங்கப்பட்டுள்ளது.

சமூக நலத்துறை

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி வழங்கும் திட்டத்தின்கீழ் 536 நபர்களுக்கு ரூ.26.80 இலட்சம் வழங்க நிதிஒதுக்கீடு பெறப்பட்டது. இதில் இதுவரை 411 நபர்களுக்கு ரூ.20.55 இலட்சம் வழங்கப்பட்டு உள்ளது.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 4 விதவை தம்பதியர்க்கு தலா ரூ.5,000/- வீதம் ரூ.20,000/- தேசிய சேமிப்புப் பத்திரமாக உதவி வழங்கப்பட்டு உள்ளது.

ஏழை விதவைகளின் மகள் திருமணத்திற்கு நிதியுதவியாக தலா ரூ.1,000/- வீதம் 40 நபர்களுக்கு ரூ.40,000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

ஆகிய ஐந்து பேரூராட்சிகளும் மற்றும் வழியில் உள்ள 20 ஊராட்சிகளில் உள்ள 131 கிராமங்களும் பயனடைய உள்ளன.

இத்திட்டம் பவானி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு, தலைமை நீரளிப்பகம் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் கோடைமேடு என்ற இடத்தில் அமைக்கப்படவுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் கவிங்கயம், கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர், ஊத்துக்குளி ஆகிய பேரூராட்சிகளின் வழியாக 47 கி.மீ. நீளமுள்ள குழாய்களின் மூலம் கொண்டு சென்று மேற்படி பேரூராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் பயனளிக்கும் வகையில் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி திட்டத்திற்கு இதுவரை சுமார் ரூ.255 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கவுந்தப்பாடி,
பி. மேட்டுப்பாளையம்,
சலங்கபாளையம் கூட்டுக்
குடிநீர்த் திட்டம்

இத்திட்டத்திற்கு ரூ.108.22 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2021-ஆம் ஆண்டுக்கான உச்ச மக்கள் தொகை 50,100க்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் வழங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு உச்ச அளவாக 35.07 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்குமாறு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கவுந்தப்பாடி, பி. மேட்டுப்பாளையம், சலங்கபாளையம் ஆகிய பேரூராட்சிகள் பயன் அடையும்.

இத்திட்டத்தின் கீழ் பவானி ஆற்றின் நிலத்தடி நீரை நீர் ஆதாரமாகக் கொண்டு பெருந்தலையூர் என்ற கிராமத்திற்கு அருகில் வடிகிணறு நீர் ஏற்றும் இயந்திரம், அறை ஆகியவைகளைக் கொண்ட தலைமை நீரளிப்பகம் அமைக்கப்படவுள்ளது. தலைமை நீரளிப்பகத்திலிருந்து பி. மேட்டுப்பாளையம், கவுந்தப்பாடி, சலங்கபாளையம் ஆகிய ஊர்களின் வழியாக 7 கி.மீ. நீளமுள்ள குழாய் மூலமாக நீரைக் கொண்டு சென்று மேற்படி பேரூராட்சிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில் அமைக்கப்பட உள்ளது.

இத்திட்டத்திற்கு இதுவரை சுமார் 19 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது. திட்டத்திற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கெம்பநாய்க்கன்பாளையம் மற்றும் 5 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த்திட்டம்

இத்திட்டத்திற்கு அரசு ரூ.31.58 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 2016-ஆம் ஆண்டுக்கான உச்ச மக்கள் தொகை 13,500க்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் வீதம் வழங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றிற்கு உச்ச அளவாக 9.50 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்குமாறு அமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கெம்பநாய்க்கன்பாளையம் பேரூராட்சியும், பெரிய கொடிவேரி பேரூராட்சிகளில் 5 குடியிருப்புகளும் பயனடையும்.

இத்திட்டம் பெரிய கொடிவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் நீர் ஆதாரத்தைக் கொண்டு பெரிய கொடிவேரி திட்டத்தில் ஏற்கெனவே உள்ள பிரதானக் குழாயில் இணைப்புக் கொடுத்து 4.5 கி.மீ. தொலைவிற்கு கிளைபிரதானக் குழாய் மூலம் மேற்படி பேரூராட்சியும், குடியிருப்புகளும் பயனடையும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு இதுவரை சுமார் ரூ.5 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அம்பேத்கார் நூற்றாண்டு

சகோதரத்துவமும் சனநாயகமும் வெவ்வேறானவையன்று. சனநாயகம் என்பது, ஒரு அரசியல் முறை மட்டுமன்று; ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துகிற ஒரு சமூக வாழ்வாகும்.

அரசு, பெரும்பான்மையினரால் அமைக்கப்பட்டு சிறுபான்மையினரின் சம்மதத்தையும் ஒத்துழைப்பையும், பெற்று நடைபெறுவதே சுயராஜ்யத்தின் நோக்கம் ஆகும். அத்தகைய சனநாயகத்தை நான் வரவேற்பேன்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே, எனது இலட்சியம். அத்தகைய ஒரு சமூக அமைப்பு ஏன் ஏற்படக் கூடாது? சகோதர பாவனை ஏன் ஏற்படாது? அதற்கு, எத்தகைய முட்டுக்கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

இந்திய சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டுமானால், அரசியல் சீர்திருத்தத்திற்குமுன் - சமூக சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமென்னும் எனது கொள்கையை ஒருவராலும் மறுக்க முடியாது.

ஊர்ப்பெயர் ஓர் ஆய்வு

நிலப்பகுதியை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்து வகையாகப் பிரித்துக் கொண்டு வாழ்ந்த தமிழ்மக்கள் ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் ஏற்ப ஊர்ப் பெயர்களை அமைத்து வந்திருக்கின்றனர்.

குறிஞ்சிப் பகுதியில் அமைந்த ஊர்கள் 'குறிஞ்சி' என்று முடிகின்ற பான்மையிலும், முல்லை நிலத்தில் அமைந்த ஊர்கள் 'பட்டி' என்று முடிகின்ற வகையிலும், மருதம் நிலப் பகுதியில் 'ஊர்' என்று முடிகின்றவாறும், நெய்தல் நிலப் பகுதியில் 'பாக்கம்' என்று முடிவதாகவும் அமைத்திருக்கின்றனர். மேலும் இயற்கைச் செல்வங்களின் இன்றியமையாமையை உணர்த்தும் வகையில் ஆறு, மலை, குன்று போன்ற இயற்கைப் பொருட்களின் பெயரோடு சேர்த்து ஊர்கள் அழைக்கப்பட்டன.

காலப்போக்கில் மக்களின் கூட்டு வாழ்க்கையின் முக்கியத்துவம் குறைந்து, மன்னர் ஆட்சி தலைதூக்கியபோது மன்னன் பெயரில் ஊர்கள் அமையலாயின. ஒரு மன்னரது ஆட்சி முடியப் பெற்று வேறொரு மன்னன் ஆட்சிப் பொறுப்பேற்கின்றபோதும், ஒரு மன்னன் தோற்கடிக்கப்பட்டு வேறொரு மன்னனால் ஆட்சி கைப்பற்றப்படும்போதும் ஊர்ப் பெயர்கள் அந்தந்த மன்னர்கள் பெயரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

மன்னர் ஆட்சிமுறையில் மதங்களின் செல்வாக்குப் பெருக பெருக மதப் பெரியார்களின் பெயரிலும், கடவுளர்கள் பெயரிலும் கூட ஊர்ப் பெயர் சூட்டப்பட்டன. சில நேரங்களில் புதுப் பெயரோடு பழைய பெயரும் தெரிகின்ற வகையில் இரு பெயர்களும் சேர்த்து அழைக்கப்பட்டிருக்கின்றன.

அவ்வாறு அமையப்பெற்ற ஊர்ப் பெயர்கள் பிற பகுதி மக்கள் மற்றும் பிறநாட்டு மக்களின் குடியேற்றத்தால் அவர்களது உச்சரிப்புக்கேற்ப பெயர் மாறுதல் பெற்று அழைக்கப்படலாயின. குறிப்பாகச் சென்னையும், சென்னையைச் சுற்றி அமைந்துள்ள ஊர்களும் காலப்போக்கில் எவ்வாறெல்லாம் பெயர் மாற்றம் பெற்றுள்ளன என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நடன. காசிநாதன்

கற்காலம் தொட்டே சென்னைப் பகுதியில் மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள், என்பதற்கு ஆதாரமாகத் தற்போதுள்ள பல்லாவரத்திலிருந்து கண்டெடுக்கப்பெற்ற பழைய கற்காலக் கருவி உதவுகிறது. சங்க காலத்திற்கு முன்பிருந்து இப்பகுதி முக்கிய வணிகத்தலமாக விளங்கியிருந்திருக்கலாம் என்பது மாம்பலம் பகுதியில் கிடைத்துள்ள முத்திரை குத்தப் பெற்ற நாணயங்களினால் புலனாகிறது. பெருங் கற்கால மக்கள் அடையாற்றையொட்டிய பகுதியில் வாழ்ந்திருக்கிறார்கள் என்பது கிண்டிக்கு அருகில் உள்ள அடையாற்றின் தென் கரையில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள முதுமக்கள் தாழிகளால் உறுதி செய்யப்படுகிறது.

பல்லவர் காலம் முதல் சென்னைப் பகுதி மிகச் சிறப்பாக விளங்கியிருக்கிறது என்பதை ஆழ்வார்களின் பாசுரங்களாலும், நாயன்மார்களின் பக்திப் பாடல்களாலும் உய்த்துணரலாம். அக்காலங்களில் இப்பகுதி சிறுசிறு கிராமங்களாகவும், சிறு நாட்டுப் பிரிவுத் தலைநகரங்களாகவும் விளங்கியிருக்கின்றது. பல்லவர் மற்றும் சோழர் காலங்களில் மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, திருவொற்றியூர், திருவான்மியூர், வேளச்சேரி என்று சிறுசிறு ஊர்களாகத் திகழ்ந்திருக்கின்றன. சென்னைப் பட்டணம் என்ற பெயர் கி.பி.18-ஆம் நூற்றாண்டிலிருந்து வழங்கப்பட்டிருக்கிறது.

திருவொற்றியூர்:

பல்லவர்கள் காலம் முதல் இவ்வூர் 'திருவொற்றியூர்' என்று அழைக்கப்பட்டு வருகிறது என்பதை

"பாம்பின்வாய்த் தேரை போலப்
பலப்பல நினைக்கின்றேனை
ஓம்பி நீ உய்யக் கொள்ள
ஒற்றியூ ருடைய கோவே"

என்று ஒற்றியூர் இறைவனை அப்பர் பெருமான் மனமுருகக் கூறுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயிலில் காணப்படும் பல்லவ மன்னர்கள் கம்பவர்மன், நிருபதுங்கன் கல்வெட்டுக்களிலும் இவ்வூர் திருவொற்றியூர் என்றே குறிக்கப்பட்டுள்ளது. அபராஜிதன் காலத்தில் 'ஒற்றிமுதூர்' என்றும் வழங்கப்பட்டதாகத் தெரிகிறது.

சோழர் காலத்திலும் திருவொற்றியூர் என்றே அழைக்கப்பட்டிருக்கிறது. இவ்வூர் ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து விக்கிரம சோழ வளநாட்டுப்புழல் கோட்டத்தில் அமைந்திருந்தது என்பது சோழமன்னன் இரண்டாம் இராஜராஜன் கல்வெட்டு மூலம் அறிய முடிகிறது. திருவொற்றியூர் என்னும் பெயர் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து இன்றும் தொடர்ந்து நிலவி வருகிறது.

திருவல்லிக்கேணி:

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கை ஆழ்வார்

புதியதோர் உலகம்செய்வோம்- கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்!

ஏழை விதவையர்களின் குழந்தைகள் 170 பேர்களுக்கு ரூ.13,000/-க்கு பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.

கடும் ஊனத்தினால் பாதிக்கப்பட்ட 20 நபர்களுக்கு மாதம் ஒன்றிற்கு தலா ரூ.100/- வீதம் பராமரிப்பு உதவித்தொகை பெறுவதற்காக ரூ.24,000 ஒதுக்கீடு பெறப்பட்டது. 20 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு, உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றன.

உடல் ஊனமுற்றோருக்கு இலவசப் பேருந்து பயணச் சீட்டு வழங்கும் திட்டத்தின்கீழ் உடல் ஊனமுற்ற மாணவ மாணவியர் பள்ளி, கல்லூரி சென்றுவரவும், அலுவலகம் செல்வோர்க்கும், சிகிச்சையாக மருந்துவமனை சென்று வரவும், இலவசப் பயணச் சீட்டுகள் 27 நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் இலவசக் கல்வித் திட்டத்தின்கீழ், படிப்பு, சிறப்புத் தேர்வுக் கட்டணம் முதலானவற்றை ஈடு செய்யும் பொருட்டு 1,143 நபர்களுக்கு ரூ.3.05 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர்களுக்கு ரூ.7.21 இலட்சம் செலவில் 738 வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு உள்ளன. 23 கலப்புமணத் தம்பதியர்களுக்கு ரூ.1.10 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறை

குறுகிய கால, மத்திய காலக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியும், இதனுடன் இணைக்கப்பட்ட 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளும் இதுவரை குறுகிய காலக் கடனாக ரூ.1,616.36 இலட்சமும், மத்திய காலக் கடனாக ரூ.101.97 இலட்சமும் வழங்கியுள்ளன.

நீண்டகாலக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் 12 கூட்டுறவு நில வள வங்கிகள் மூலம் ரூ.142.46 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைக் கடன் 6 கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் ரூ.934.64 இலட்சமும், 230 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.2,021.11இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 27 கிளைகள் மூலம் ரூ.504.05 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

சிறுதொழில் கடனாக 6 கூட்டுறவு நகர வங்கிகள் மூலம் ரூ.81.30 இலட்சமும், பெரியார் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மூலம் ரூ.6.34 இலட்சமும், வழங்கப்பட்டுள்ளன.

தொழில் துறை

இந்தியப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், 1988-89-ஆம் ஆண்டிற்குரிய குறியீடான 600 நபர்களுக்குப்பதிலாக916 நபர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இதில் வங்கிகள், 603 நபர்கள் கடன் பெற வழங்கலாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 378 நபர்களுக்கு ரூ.60.84 இலட்சம் கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

1989-90-ஆம் ஆண்டிற்குக் குறியீடான 300 நபர்களுக்குப்பதிலாக 632 நபர்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. இதில் வங்கிகளால் 263 நபர்களுக்கு ரூ.41.725 இலட்சம் பெற வழங்கலாணை பிறப்பிக்கப்பட்டு இதுவரை 222 நபர்களுக்கு ரூ.33.563 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

பட்டு வளர்ச்சித் துறை

பெரியார் மாவட்டத்தில் 2,110 பட்டு விவசாயிகள் மல்பெரி பயிரிட்டுப் பட்டு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நடப்பாண்டில் ஏப்ரல் '89 முதல் சனவரி '90 முடிய ரூ.1.6 கோடி மதிப்புள்ள 1.96 இலட்சம் கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன.

இத்தொழிலில் 2,110 பட்டு விவசாயிகள் நேரடியாகப் பயன் பெறுவதுடன், நிலமற்ற விவசாயப் பணியாளர்கள்10,550பேர்வேலை வாய்ப்பு பெற்று வருகின்றனர்.

பால்வளத் துறை

சிறப்பு மத்திய உதவியுடன் வழங்கும் தாட்கோ நல மானியத் திட்டத்தின் கீழ் 1989-90-ஆம் ஆண்டிற்கு 1,110 கறவைகளுக்கு ரூ.11.73 இலட்சம் மானியத் தொகை ஒதுக்கப்பட்டதில் முதல் தவணையாக ரூ.5.86 இலட்சம் விடுவிப்பு செய்யப்பட்டு 550 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். எஞ்சிய ரூ.5.86 இலட்சம் இரண்டாம் தவணையாக விடுவிப்பு செய்யப்பட்டு, 550 நபர்களுக்கு மானியமாக வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் நல மானியம் வழங்கும் திட்டத்தின்கீழ் 200 கறவைகளுக்கு வழங்க ரூ.1 இலட்சம் மானியத் தொகை பெறப்பட்டது. இதுவரை 162 கறவைகளுக்கு ரூ 0.81 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறி மற்றும் துணி நூல் துறை

1989-90-ஆம் ஆண்டிற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் காசுக் கடன் வழங்கப் பெரியார் மத்திய கூட்டுறவு வங்கிக்கு ரூ.1,910 இலட்சம் நபார்டு வங்கி அனுமதித்து உள்ளது. இதில் பெரியார் மத்திய கூட்டுறவு வங்கி பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.1,730 இலட்சமும், தொழிலியல் நெசவாளர் சங்கங்களுக்கு ரூ.87 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.1,817 இலட்சம் வழங்கியுள்ளது. 1990-ஆம் ஆண்டிற்கு ரூ.1,800 இலட்சம் கடன் அளவுக்குக் கோரிக்கை பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் தறிகளில்லாத 100 பெண்களுக்கு, தொடர்ந்து வேலைவாய்ப்பும், நியாயமான கூலியும் பெற்று வழங்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டி ரூ.10 இலட்சம் மானிய உதவியுடன் பெண்களுக்காக மட்டும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று அவல்பூந்துறையில் அமைக்க அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.



வேலைசெய்யும் பெண்கள்
வீட்டின் இரு கண்கள்!

மீன் வளர்ப்புத் துறை

மீனவர் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் தொழிலில் ஈடுபடும் போது இறந்தால் ரூ.15,000/- நஷ்ட ஈடாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் அம்மாப்பேட்டை பவானிசாகர் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் மீன்பிடிக்கும்போது இறந்துபோனதால் தலா ரூ.15,000/- வீதம் ரூ.30,000 நஷ்ட ஈடாக வழங்கப்பட்டது.

குடிநீர் வடிகால் வாரியப் பணிகள்

பெரியார் மாவட்டம் ஈரோடு நகரக் கோட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் முனைப்போடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

ஈரோடு குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், கோபி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், பவானி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம், அம்மாப்பேட்டை, நெரிஞ்சிப் பேட்டை கூட்டுக் குடிநீர்த் திட்டம், கலிங்கயம், கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர், ஊத்துக்குளி கூட்டுக் குடிநீர்த் திட்டம், கவுந்தப்பாடி, பி. மேட்டுப் பாளையம், சலங்கப்பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் மற்றும் கெம்பநாய்க்கன் பாளையம், சலங்கப் பாளையம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் மற்றும் கெம்பநாயக்கன் பாளையம் மற்றும் ஐந்து குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டப்பணிகள் முதலான 7 பணிகள் ஈரோடு கோட்ட அளவில் நடைபெற்று வருகின்றன.

ஈரோடு குடிநீர்
மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்திற்கு அரசு ரூ.272 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 125 லிட்டர் வீதம் 2006-ஆம் ஆண்டில் உச்சக்கட்ட மக்கள் தொகையான சுமார் 2,30,000 மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில்45இலட்சம்லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மற்றும் ஆற்றுப் படுகையில் குழாய் பதிக்கும் பணி தவிர அனைத்து பிரதான பணிகளும் முடியும் தறுவாயில் உள்ளன. இத்திட்டத்தின்மூலம் தற்போது நாள் ஒன்றிற்கு 15 இலட்சம் லிட்டர் குடிநீர், மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் அடங்கியுள்ள 45 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி கட்டும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.411 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

கோபி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்திற்கு அரசு ரூ.96.55 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 100 லிட்டர் வீதம் 2011-ஆம் ஆண்டில் உச்சக்கட்ட மக்கள் தொகையான சுமார் 85,000 மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முக்கிய பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.134 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பவானி குடிநீர்
மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்திற்கு அரசு ரூ.67.42 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் காவேரி ஆற்றை நீர் ஆதாரமாகக் கொண்டு நபர் ஒருவருக்கு ஒரு நாளுக்கு 70 லிட்டர் குடிநீர் வீதம் 2011-ஆம் ஆண்டில் உச்சக்கட்ட மக்கள் தொகையான சுமார் 55,000 மக்கள் பயன்பெறும் விதத்தில் வடிவமைக்கப்பட்டு, 31.8.89-இல் முடிக்கப் பட்டது. இதுவரையில் இத்திட்டத்திற்காக ரூ.91 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

அம்மாபேட்டை,
நெரிஞ்சிப்பேட்டை கூட்டுக்
குடிநீர்த் திட்டம்

இத்திட்டத்திற்கு அரசால் ரூ.90.48 இலட்சம் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. காவிரி ஆற்றை, நீர் ஆதாரமாகக் கொண்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் 2011-ஆம் ஆண்டில் உச்சக் கட்ட மக்கள் தொகையான சுமார் 26,000 பேர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீர் கொணரும் குழாய் பதிக்கும் பணிகள் இ.இ.சி. திட்டக் கோட்டம், கோபி - மூலம் நடைபெற்று வருகிறது. ஈரோடு நகரக் கோட்டத்தினால் செயல்படுத்தப்படும் பணிகள் 80 சதம் முடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.33 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

கலிங்கயம், கொளப்பலூர்,
சிறுவலூர், குன்னத்தூர்,
ஊத்துக்குளி கூட்டுக்
குடிநீர்த் திட்டம்

இத்திட்டத்திற்கு அரசு ரூ.590.116 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் 2010-ஆம் ஆண்டுக்கான உச்ச மக்கள்தொகை1,26,000க்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் பேரூராட்சிகளுக்கும், 40 லிட்டர் வீதம் ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு, உச்ச அளவாக 7.60 இலட்சம் மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்குமாறு திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் கலிங்கயம், கொளப்பலூர், சிறுவலூர், குன்னத்தூர், ஊத்துக்குளி

இந்திய நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் விருந்தளித்து நினைவுப் பரிசினை வழங்கினார். (30.4.90)

படமும் செய்தியும்

அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரி வளாகத்தில் ஸ்பிக் உயிரியல் செயல்முறை ஆய்வுக்கூடத்திற்கு மாண்புமிகு மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் ராஜாராமண்ணா அவர்கள் கால்கோள் நாட்டினார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் டாக்டர் க. அன்பழகன் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். (3.5.90)



கும்பகோணம் கீழப்பழையாற்றில் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கு விழாவில் சமுதாய நலக்கூடம் மற்றும் பள்ளிக் கட்டடங்களை மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி அவர்கள் திறந்து வைத்தார். (27.4.90)

சென்னையில் நடைபெற்ற "சுற்றுலா ஆண்டு 1991" என்ற சிறப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. கே.பி. கந்தசாமி அவர்கள் கலந்துகொண்டார். மத்திய சுற்றுலா அமைச்சரகச் செயலாளர் திரு மனீஷ் பஹல், தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறைச் செயலர் திருமதி ஜெயந்தி ஆகியோரும் உடன் உள்ளனர்.

இரண்டாம் நந்திவர்மனின் காலத்தைச் சேர்ந்தவர் என்று கூறுவர். அதாவது கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவரது பெரிய திருமொழியில் மூன்றாம் பத்தாகத் திருவல்லிக்கேணி பற்றி

''குரவமே கமழும் குளிர் பொழிலூடு
குயிலொடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைசெய்தறியாத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே''.

என்று பாடுகின்றார். இப்பத்தின் ஒன்பதாவது பாடலில்

''தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக்கேணிக்கண்டேனே.

என்று இவர் கூறுவதால் மயிலையின் ஒரு பகுதியாகத் திருவல்லிக்கேணி அந்நாளில் திகழ்ந்திருக்கிறதென்பதும், மயிலை விழுமியதாக விளங்கியிருக்கிறதென்பதும் தெரிய வருகிறது.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் காணப்பெறும் பல்லவ மன்னர் நந்திவர்மனின் பன்னிரெண்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (கி.பி.808) திருவல்லிக்கேணி குறிக்கப்பெறுகிறது. மயிலையோடு சேர்த்துத் திருவல்லிக்கேணி குறிக்கப்பெறவில்லை. ஆதலால் நந்திவர்மன் காலத்தில் திருவல்லிக்கேணி தனித்துச் சிறப்புப் பெற்ற ஊராக விளங்கத் தொடங்கிவிட்டது என்று நம்பலாம்.

கி.பி. 16ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் திருவல்லிக்கேணி செயங்கொண்ட சோழமண்டலம் புலியூர்க் கோட்டம் எழுமூர் நாட்டில் உள்ளடங்கிய ஒரு ஊராகத் திகழ்ந்திருக்கிறது.

மயிலை:

திருவொற்றியூர் இறைவனை வழிபட்டு வந்த தமிழ் ஞானசம்பந்தர் மயிலைக் கபாலீச்சரமமர்ந்தானை,

'மலிவிழா வீதி மட நல்லார் மாமயிலை' என்று மயிலையில் நிகழும் விழாச் சிறப்பை விரித்துப் போற்றுகிறார். ஞானசம்பந்தர் வாழ்ந்த காலமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் மயிலாப்பூர், 'மயிலை' என்றுதான் அழைக்கப்பட்டுள்ளது.

திருமங்கையாழ்வார் தம் பெரிய திருமொழியில்

'மன்னுதண் பொழிலும் வாவியும்
மதிளும்
மாட மாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர்கோன்
செய்த நன் மயிலை.'

என்று பாடுகிறார்.

திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயிலில் காணப்பெறும் கம்பவர்மன் கல்வெட்டில் 'மயிலாப்பில் என்று காணப்படுகிறது.

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் காணப்படும் பாண்டிய மன்னன் குலசேகரதேவர் கல்வெட்டில் (கி.பி.1309) ஜெயங்கொண்ட சோழமண்டலத்து புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ நாட்டில் திருமயிலாப்பூர் அமைந்திருந்தது குறிக்கப்படுகிறது.

திருவான்மியூர்:

ஆளுடைப் பிள்ளையார் திருவான்மியூர் தலத்திற்குச் சென்று உலகாளுடைய நாயனாரைப் பாடிய போது,

'மஞ்சுலாவிய மாடமதிற் பொலி
மாளிகைச்
செஞ்சொலாளர்கள் தாம்பயிலும்
திருவான்மியூர்'

சோழமன்னன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் திருவான்மியூர் ஒரு தேவதான ஊராக விளங்கியிருக்கிறது. மேலும் செயங்கொணட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டம் கோட்டூர் நாட்டில் அமைந்த ஊராக இவ்வூர் இருந்திருக்கிறது.

வேளச்சேரி

இவ்வூர் சோழ மன்னன் முதலாம் இராசேந்திரன காலத்தில (கி.பி. 1014-1044) 'வெளிச்சேரி' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. இவவூர் செயங்கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர்க் கோட்டத்தில் கோட்டூர் நாட்டைச் சார்ந்த ஊராகத் திகழ்ந்திருக்கிறது. பிராமணர்களுக்காக அளிக்கப்பெற்ற 'பிரமதேயம்' என்று குறிக்கப்படுகிறது. மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் 'வெளிச்சேரி என்னும் ஜின சிந்தாமணிச சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப்பட்டிருக்கிறது.

சேத்துப்பட்டு

திருவொற்றியூரிலுள்ள இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருட்டினனின் கல்வெட்டில் 'சேற்றுப்பேடு' என்று குறிக்கப்படுகிறது. புலியூர்க்கோட்டத்தைச் சேர்ந்த துடர் முனியூர் நாட்டில் அமைந்திருக்கிறது. இதே ஊர் ஸ்ரீ ரங்கநாதயாதவராயர் காலத்தில் செயங்கொண்ட சோழ மண்டலம் புழற்கோட்டம் என்றும், விக்கிரம சோழ வள நாட்டில் எழுமூர் துடர்முனி நாட்டைச் சேர்ந்ததாகக் குறிக்கப்படுகிறது.

கொரட்டூர்:

கச்சியும் தஞ்சையும் கொண்ட மூன்றாம் கிருட்டினன் காலத்தில் இவ்வூர் 'குரத்தூர்' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. மேலும் புழற்கோட்டம் அம்பத்தூர் ஏரிக்கீழ் நாட்டில் அடங்கிய ஊராக இருந்திருக்கிறது. இவ்வூருக்குப் 'பராந்தகச் சதுர்வேதி மங்கலம்' என்னும் மற்றொரு பெயரும் வழங்கியிருக்கிறது.

சோழமன்னன் முதலாம் இராஜாதிராஜன் காலத்தில் (கி.பி.1018-1052) 'குரட்டூர்' என்று குறிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது புழற்கோட்டம் அம்பத்தூர் நாட்டில் அடங்கிய ஊராகக் காணப்படுகிறது. பராந்தகச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் இவர் காலத்தில் காணப்படவில்லை. மேலும் அம்பத்தூர் ஏரிக்கீழ்நாடு என்பது இந்த காலகட்டத்தில் அம்பத்தூர் நாடு என்ற அளவில் வழங்கப்பட்டிருக்கிறது. குரட்டூரில் ஒரு ஊராட்சி அவை முதலாம் இராசாதிராசன் காலத்தில் இருந்திருக்கிறது.

வியாசர்பாடி:

இவ்வூர் முதலாம் இராசாதிராசன் காலத்தில் 'வோஷாருபாடி' என்று வழங்கியிருக்கிறது. பின்பு மூன்றாம் இராஜராஜன் காலத்தில் 'வேழ்ஷாரு' என்று சுருங்கி அழைக்கப்பட்டிருக்கிறது.

அயனாவரம்:

இவ்வூர் 'அயன்புரம்' என்று கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை வழங்கப்பட்டு வந்திருக்கிறது. இது சயங்கொண்ட சோழமண்டலத்து விக்கிரம சோழ வளநாட்டுத் துடர்முள்ளி நாட்டில் அமைந்த ஊராகத் திகழ்ந்திருக்கிறது. கி.பி. 19-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்றில் 'அயனவரமென்கிற சொத்திரிய கிராமம்' என்று குறிப்பிடப்படுகிறது.

பல்லாவரம்

இவ்வூர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் 'பல்லர்புரம்' அல்லது 'பல்லாபுரம்' என்று வழங்கப்பட்டிருக்கிறது. மயிலாப்பூரிலுள்ள கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் இவ்வூருக்கு 'வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்ற பெயரும் வழங்கி வந்தமை 'பல்லர்புரமான வானவன் மாதேவிச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிக்கப்பட்டதிலிருந்து தெரிகிறது. பல்லாவரத்துக்கு அருகில் உள்ள பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் காலத்தியக் குடைவரைக் கோயில் இன்னும் உள்ளது. அக்கோயிலில் மகேந்திரவர்மனின் பட்டப் பெயர்கள் பல்லவ கிரந்த எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்வூர் 'பல்லவர்புரம்' என்று வழங்கி வந்திருக்கலாம் என்றும், அதுவே கல்வெட்டுக்களில் பல்லர்புரம் அல்லது பல்லாபுரம் என்று காணப்படுவதாகவும் கருதலாம்.

மொத்தத்தில் தற்போதுள்ள சென்னைப் பகுதி செயங்கொண்ட சோழமண்டலம் என்ற பெரும் நிலப்பிரிவில் புலியூர்க்கோட்டம், புழல் கோட்டம் என்று பிரிக்கப்பட்டு, கோட்டூர் நாடு, எழுமூர் நாடு, அம்பத்தூர் நாடு என்று சிறுசிறு பகுதிகளாக விளங்கியிருப்பதைக் காணலாம்.

அம்பேத்கார் நூற்றாண்டு:



மனிதனின் நல்வாழ்விற்கு எவை அவசியமோ அவற்றையே புத்தம் கற்பிக்கின்றது. புத்தரின் மார்க்கம் தர்மத்தை - நீதியை - சன்மார்க்கத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றது. புத்தம், நீதி நூலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. புத்தர் ஒரு வழிகாட்டியாக நடந்து கொண்டார். கடவுளாக அல்ல.

எப்போதும் ஊக்கமாகச் சமூக சேவை செய்தால், உங்கள் முன்னோர்களால் சாதிக்க முடியாததை உங்களால் வெகு சுலபமாக சாதிக்க முடியும்.

நாம் ஒரு கூட்டத்தாரை நாகரீகப்படுத்த முயன்றால, நாமும அவர்களுள் ஒருவராக இருந்து அவர்களுடன் கலந்து பழகி, அவர்களுடைய சுக துக்கங்களில் பங்கேற்று, ஒத்த உணர்வையும், அனுதாப உணர்வையும் வளர்த்தால்தான் நமது முயற்சி பயனடையும்.

ஊரும் பேரும்

சேலம் மாவட்டம் பழம் பெருமை களைக் கொண்ட மாவட்டமாகும். சீலர்கள் (புத்த சீலர்கள்) வாழ்ந்த மாவட்டம் சேலம். இங்கே வாழ்ந்த மக்கள் முற்ற எல்லா வற்றையும் போல் மிருகங்களையும் மிக நெருக்கமாக நேசித்தனர் என்பது தெரிந்த சேதியாயினும், விலங்குகளின் பெயரில் தம் ஊர்களையே அமைத்துக்கொண்டனர் என்பது எத்துணைப் பெருந்தன்மை உடைய செயல். இந்த மாவட்ட மக்கள் தம் ஊர்களுக்குச் சூட்டிய, விலங்குகளுக்கே பெருமை சேர்த் துள்ள சில ஊர்களின் பெயர்கள்:

1. ஆட்டையாம்பட்டி,
2. மாட்டையாம்பட்டி, 3. எருமப்பட்டி,
4. எருமப்பாளையம், 5. கரடிப்பட்டி,
6. கீரிப்பட்டி,

இது மட்டுமா? தாவர இனங்களுக்கும் தம் ஊரில் நிரந்தரப் பெருமை அளித்துள் ளார்கள். தாவரங்களின் பெயர்களையும் சில ஊர்களுக்குச் சூட்டியுள்ளனர். அவை:

1. பனமரத்துப்பட்டி, 2. அரசமரத்துப்பட்டி,
3. ஆலமரத்துப்பட்டி, 4. வேப்பிலைப்பட்டி,
5. கருவேப்பம்பட்டி, 6. காட்டுவேப்பிலைப்
பட்டி, 7. மூங்கில்பட்டி, 8. விலாம்பட்டி,
9. பனைமடல் 10. பாகல்பட்டி,
11. வாழப்பாடி 12. நெருஞ்சிப்பட்டி,
13. வெள்ளரிவள்ளி.

—தொகுப்பு: தி. வெங்கடாசலம்,
உதவி ஆணையர் (பொறுப்பு)
மாவட்ட ஆவணக் காப்பகம், சேலம்

தொலைபேசி: 2587

புதுக்கோட்டை
கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட்
எம்.எம்.296

கல்யாணராமபுரம்

புதுக்கோட்டை 622 002

ஒன்றியம் பதிவு செய்யப்பட்ட நாள்	... :	19.08.63
ஒன்றியம் பதிவுப்பணி துவக்கிய நாள்	... :	13.11.63
கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கத்தினை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியமாக மாற்றப்பட்ட நாள்	... :	20.01.83
விவகார எல்லை	... :	புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும்
ஒன்றியத்திற்குப் பால் வழங்கும் சங்கங்களின் எண்ணிக்கை	... :	62
ஒன்றியத்துடன் இணைந்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்	... :	140
பால் சேகரிப்பு வழித்தடங்களின் எண்ணிக்கை	... :	5

1. புதுக்கோட்டை ... குளத்தூர்
2. புதுக்கோட்டை ... பொன்னமராவதி
3. புதுக்கோட்டை ... கீரமங்கலம்
4. புதுக்கோட்டை ... கறம்பக்குடி
5. புதுக்கோட்டை ... அறந்தாங்கி

பால் உற்பத்தி மற்றும் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன் 100 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்க குறியீடு நிர்ணயித்து, அறந்தாங்கி, ஆவுடையார் கோயில் பகுதிகளில் முதல் கட்டமாக 15 சங்கங்கள் துவக்கப்பட்டு, புதிய பால் வழித்தடம் அமைத்து, பால் கொள் முதல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒன்றியத்தின் பால் உற்பத்தி 7,500 லிட்டர் அளவுக்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

3-ம் பால் பெருக்குத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 150 பால் உற்பத்தியாளர் சங்கங்களைத் துவக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் இச்சங்கத்தின் தினசரி பால் கொள்முதல் 15,000 லிட்டராக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மக்களின் தேவையயறிந்து நல்லதரமான பால்களை விநியோகிக்கும் இவ்வொன்றியத்திற்கு ஆதரவு நல்குமாறு வேண்டுகிறோம்.

ம. குற்றாலிங்கம் இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்
பெருந்தலைவர்

ஏ. மாணிக்கவாசகம் எம்.ஏ.எம்.காம். ஐ.டி.டி
நிர்வாக இயக்குனர்

தானியங்களைப் பாதுகாக்கும் முறை

அரிசி வண்டு கோதுமை, மக்காச் சோளம், நெல் முதலிய தானியங்களைச் சேதப்படுத்துகின்றது. தாய் வண்டு கருப்பு மற்றும் கருஞ்சிவப்பு நிறமானது. முன் இறக்கைகள் மீது நான்கு கோடுகள் காணப்படும். இதன் வாய்பாகம், மூக்கு அல்லது அலகு போன்று நீண்டு வளைந்து காணப்படும். இம்மூக்கின் நுனியில் வாய் பாகங்கள் அமைந்துள்ளன.

தாய் வண்டானது தானியத்தின் மேல்பாகத்தைச் சுரண்டி முட்டையிட்டு அதை ஒருவித் திரவத்தினால் மூடிவிடும். ஒரு வண்டு 300 முதல 400 முட்டைகளை இடும். முட்டைகளிலிருந்து வெளி வரும் காலில்லாப புழுக்கள் அதிகமான அளவு சேதத்தை உண்டாக்குகின்றன. இப்புழுக்கள் தானியத்தின் உள்ளே இருந்து கொண்டு வாழ்ந்து 25 நாட்களில் கூட்டுப்புழுக்களாக மாறிவிடுகின்றன. கூட்டுப் புழுக்களிலிருந்து சுமார் 10 நாட்களில தாய் வண்டுகள் தம கூரிய அலகால தானியத்தைக் குடைந்து வெளிவருகின்றன. ஆகவே, தானியத்தின் மேல் காணப்படும் துளைகள் வண்டுகள் வெளிவந்ததன் அடையாளமாகும். துளையுண்ட விதைகள் முளைக்காது.

நெல் துளைக்கும் வண்டு

இப்பூச்சியால் தாக்கப்படும் தானியங்களில் நெல், அரிசி, கோதுமை, சோளம், மக்காச்சோளம் ஆகியவை முக்கியமானவை. இவ் வண்டு கரும்பழுப்பு நிறமுடையது. இதன் தலைப்பகுதி முக்கோண வடிவில் வளைந்தும், மார்புப்பகுதி சாய்ந்தும், உடலில் பின்பகுதி தட்டையாகவும் காணப்படும். இப் பூச்சிகள் சுமார் 3 முதல் 4 மி.மீ. நீளமுடையது.

தாய்ப்பூச்சிகள் நன்றாகப் பறக்கக்கூடிய வல்லமை உடையவை. இவை முட்டைகளைத் தனித்தோ அல்லது கூட்டமாகவோ கோணிப் பைகளிலோ சுவர் இடுக்குகளிலோ இடுகின்றன. தாய்ப்பூச்சி 500 முட்டைகள் வரை இடும். முட்டைகளிலிருந்து வெளிவரும் புழுக்கள் மெதுவாக ஊர்ந்து சென்று தானியங்களைத் துளைத்து உண்டு மாவாக்கிவிடும்.

பயறு வண்டு

இவ்வண்டு பயறு வகைகளை மட்டுமே தாக்கவல்லது. வண்டுகள் 3 முதல் 4 மி.மீ. நீளமும் பழுப்பு நிறமும் உடையவை இறக்கையின் மேல் வெண்புள்ளிகள் காணப்படும். தாய் வண்டு முட்டைகளைத் தனித்தனியாக விதைகளின் மேல் இடும். சிறிய புழுக்கள் முட்டையிலிருந்து வெளிவந்து விதையைக் குடைந்து உட்சென்று உண்டு வாழ்கின்றன. புழுக்கள் வளைந்து வெண் மஞ்சள் நிறம் கொண்டதாக இருக்கும். இவ்வண்டுகளின் தாக்குதல் பயிறு வகைகளின் அறுவடை சமயத்திலேயே ஆரம்பமாவதால் அறுவடைக் காலத்தில் முன்னெச்சரிக்கை தேவை.

புகையிலை வண்டு அல்லது மஞ்சளைத் தாக்கும் வண்டு

இவ்வண்டுகள் விதை மஞ்சள் மிளகாய் விதை முதலியவற்றைச் சேதப்படுத்துகின்றன. இவ்வண்டுகள் சிகப்பு நிறத்துடன் நீள் வட்ட வடிவத்தில் இருக்கும். இறக்கைகளின் மிகச்சிறிய உரோமங்கள் காணப்படும். இதன புழுக்கள் வெண் மஞ்சள் நிறம் கொண்டது.

ஸ்டெகோபியம் பெனிசியம் என்னும் வண்டுகளும் மஞ்சள், தனியா விதைகளைத் தாக்கிச் சேதம் விளைவிக்கும்.

நெல் அந்துப்பூச்சி

அந்துப் பூச்சிகளின் சேதம் வயலிலேயே தொடங்கிவிடுகின்றன. நெல், மக்காச் சோளம், சோளம் போன்ற பயிர்கள் மிக அதிகமாக

தாக்குதலுக்கு உள்ளாகிறது. சேமிப்புக் கிடங்குகளில் இவைகள் தானிய மூட்டைகளின் மீது பறந்து கொண்டிருக்கும். அந்துப் பூச்சிகளின் புழுக்கள் தானியங்களை முழுவதும் சேதப்படுத்திய பின்னர் தான், சேதத்தை நாம் உணர முடியும். இதன் தாக்குதல் நெல்லில் அதிகமானால் இறுதியில் உமி மட்டும் மிஞ்சும்.

பருத்தி இளஞ்சிவப்பு காய்ப்புழு

இப்பூச்சி சேமித்த பருத்தி விதைகளை அதிகம் தாக்குகின்றன. விதைகளின் உள்ளேயே புழுக்கள் தங்கியிருந்து தாக்குவதால் பாதிக்கப் பட்ட விதைகள் முளைப்பதில்லை.

சர்க்கரைவள்ளிக்கிழங்கு வண்டு

சிவப்பும் கறுப்பும் கலந்த எறும்பை ஒத்த உருவமைப்பு கொண்ட மூக்கு வண்டு. இது சர்க்கரை வள்ளிக் கொடிகளையும் கிழங்குகளையும் சேதப்படுத்தும். இதன் புழுக்கள் மெல்லிய கொடிகளைக் குடைந்தும், கிழங்குகளைக் குடைந்து உண்டும் சேதமேற்படுத்தும். சிறிய கொடிகளுக்குள்ளேயே பூச்சியின் புழு மற்றும் கூட்டுப் புழுப் பருவங்கள் இருப்பதால் கொடிகள் மீண்டும் நடும் பொழுது பூச்சிகள் பரவ ஏதுவாகின்றன. வயலில் தொடங்கிய சேதம் சேமிப்புக் கிடங்குகளிலும் தொடர்கிறது.

உருளைக்கிழங்கு அந்துப்பூச்சி

கிடங்குகளில் சேமிக்கப்பட்ட உருளைக் கிழங்குகளையும், விதைக்காகச் சேமிக்கப்படும் கிழங்குகளையும் இப்பூச்சிகள் சேதப்படுத்துகின்றன. கரும்பழுப்பு நிறமுள்ள தாய் அந்துப்பூச்சி முட்டைகளை உருளைக்கிழங்கின் முளைக்கண்களின் மீது இடுகிறது. முட்டையிலிருந்து வெளிவரும் வெளிர் மஞ்சள் நிறப்புழுக்கள் கிழங்கைத் துளைத்து சேதப்படுத்துவதால் விதைக் கிழங்குகளின் முளைப்புத்திறன் முற்றிலும் பாதிக்கப்படும். புழுக்கள் கிழங்குகளிலேயே கூட்டுப்புழுவாக மாறுகின்றன. அந்துப்பூச்சியின் தாக்குதல் வயலிலும் காணப்படுகிறது.

இவை தவிர எலிகளும் விதைக்கென சேமிக்கப்பட்டுள்ள தானியங்களை உணவாகக் கொண்டு பெரும் சேதம் விளைவிக்கின்றன. சிலவகை நூற்புழுக்கள் முக்கியமாக பொன்னிற நூற்புழுக்கள் உருளைக் கிழங்கிலும், நெல் நுனியில் நூற்புழு விதை நெல்லிலும் தங்கி முளைப்புத் திறனைக் குறைக்கிறது.



தானியங்களைப் பாதுகாக்கும் முறைகள்

★ வயலிலேயே தாக்குதலைத் தொடங்கும் பூச்சிகளை அறுவடை செய்யும் போது தாக்கப்பட்ட தானியங்களை அழிப்பதன் மூலம் சேமிக்கும்போது ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம்.

★ புகை நச்சு மருந்தின் மூலம் சாக்குப்பைகளைச் சுத்தம் செய்ய வேண்டும்.

★ பாஸ்டாக்ஸின் 1.000 கன அடி அளவிற்கு 5 வில்லைகள் வீதம் வைத்து வாயு மண்டலம் உண்டாக்கப்பட்ட அறைகளில் விதைகளைச் சேமிக்கலாம்.

★ விதை நூற்புழுக்களை கட்டுப்படுத்த விதைக்கும் முன் விதைகளை 50 முதல் 53°C வரை வெப்பமுள்ள நீரில் 15 நிமிடம் மூடி வைத்த பிறகு விதைக்க வேண்டும்.

★ அமில வீரியமேற்றப்பட்ட களிமண்ணை 100 கிலோ விதைக்கு 1 கிலோ களிமண் என்ற அளவில் விதையுடன் கலந்து சேமிப்பதன் மூலம் பூச்சிகளிலிருந்து விதைகளைப் பாதுகாக்கலாம்.

★ விதைகளைப் பாதுகாக்க எளிய முறைகளான செம்மண் பூசுதல், மற்றும் தாவர எண்ணெய் முலாம் பூசுதல் போன்றவைகளாலும் பூச்சிகளிடமிருந்து விதைகளைப் பாதுகாக்கலாம்.

★ உணவுக்கன்றி விதைக்காக ஒதுக்கப்பட்ட தானியங்களை மட்டும் அலுமினிய பாஸ்பைடு 3 கிராம் வில்லைகளை மூட்டைக்கு ஒரு வில்லை என்ற அளவில் வைத்தும் விதைகளைப் பாதுகாக்கலாம்.

★ அறுவடைக்குப்பின் விதைகளில் உள்ள ஈரப்பதத்தை நீக்கும் வண்ணம் வெயிலில் உலர்த்தி தானியங்களை சேமிக்க வேண்டும்.

★ அறுவடை செய்த பின் விதைகளை உலர்த்தும் களங்களில் இடுக்குகளோ துவாரங்களோ இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தகவல்: வேளாண் தகவல் பணிமையம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோவை



மாணவர்க்கு எழுச்சி

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

(கல்யாணம் செய்துக்கோ என்ற மெட்டு)

நிற்கையில் நிமிர்ந்து நில்! ந
டப்பதில் மகிழ்ச்சி கொள்!
சற்றே தினந்தோறும் விளையாடு.
பற்பல பாட்டும் பாடிப் பழகு! - நீ
பணிவாகப் பேசுதல் உனக் கழகு! (நிற்)

கற்பதில் முதன்மை கொள்
காண்பதைத் தெரிந்து கொள்
எப்பொழுதும் மெய்யுரைக்க அஞ்சாதே!
சுற்றித் திரிந்திடும் துஷ்டர் சிநேகிதம்
தொல்லை என்பதி லென்னசந் தேகம்? நீ (நிற்)

சித்திரம் பயின்று வா
தேன் போன்ற கதை சொல்
முத்தைப்போலே துவைத்த உடையணிவாய்.
புத்தகம் உனக்குப் பூஷணம் அல்லவோ?
போக்கடிக்காதே இதை நான் சொல்லவோ-நீ
(நிற்)

பத்திரி கைபடி நீ
பலவும் அறிந்து கொள்
ஒத்துப் பிறர்க்கு நலம் உண்டாக்கு!
நித்தமும் இந்தத் தேசம் தன்னை
நினைத்துப் பொதுப் பணிசெய் அவனுனக் கன்னை.
(நிற்)

—'முல்லைக்காடு' என்னும் நூலிலிருந்து.

தெரிந்து கொள்ளுங்கள்

கங்காரு

கங்காரு 2 மீட்டர் நீளம் வரை இருக்கும். ஆஸ்திரேலியாவில் புல்லும் புதரும் மண்டியுள்ள திறந்த வெளிகளில் இது வாழ்கிறது. இது மெதுவாக நடக்கும்போது முன் கால்களையும் ஊன்றி விகாரமாக நடக்கும். விரைவாகச் செல்லும் போது தாவித் தாவிப் பாயும். தரையில் உதைத்து மேலெழும்பி, அம்புபோல் பாயும்; நெடுந்தொலைவுக்குத் தாவும்.

கங்காரு குட்டி போடும். குட்டி கண் திறக்காமலிருக்கும். தாயின் வயிற்றில் பை எனப்படும் தோல் மடிப்பிலேயே குட்டி வளரும். தாய்ப் பிராணி குட்டியைப் பற்களால் கௌவி எடுத்துப் பைக்குள் நுழைக்கும். சுமார் எட்டு மாதங்கள் வரை குட்டி பைக்குள் இருக்கும்.

வௌவால்

பாலூட்டிகளில் சீராகப் பறக்கக் கூடியவை வௌவால்களே. அவற்றின் கைவிரல்கள் வெகு நீளமாக நீண்டு, குட்டைகளிலுள்ள கம்பிகளைப் போல் விரிக்கப்பட்டிருக்கும். பறவைகளைப் போல இறக்கைகளை அடித்துப் பறக்க முடியும்.

வௌவால்களைப் பெரு வௌவால்கள் என்றும், சிறு வௌவால்கள் என்றும் பிரித்திருக்கிறார்கள். அவைகளைப் பழ வௌவால்கள் என்றும், துருஞ்சில்கள் என்றும் சொல்வதுண்டு. பழ வௌவால்களின் முகங்கள் நரியின் முகத்தைப் போலிருப்பதால் அவைகளை ஆங்கிலத்தில் 'பறக்கும் நரிகள்' என்றும் கூறுவர். நூறு நூறாய் இவை ஒரே மரத்தில் நாள் முழுவதும் தொங்கி இரவில் இரை தேடும்.

—திரு. வி. என். சாமி எழுதிய 'விலங்கினங்களின் பல்வகை வேறுபாடுகள்' என்னும் நூலிலிருந்து

புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை லிமிடெட்,

தபால் பை எண்:3, அறந்தாங்கி-614 616.

கதிர்களின் எண்ணிக்கை	:	25,080
ஆலையின் திட்ட முதலீடு	ரூ. :	750 இலட்சம்
ஆலையின் மூலதனத்தில் தமிழக அரசின் பங்கு	ரூ. :	325 இலட்சம்

தொலைபேசி எண்:

தனி அலுவலர் இருப்பிடம்: 2872 (புதுக்கோட்டை)
தனி அலுவலர் அலுவலகம்: 323 (அறந்தாங்கி)
நிர்வாக அலுவலகம்: 274 (அறந்தாங்கி)
ஆலை: 471 (அறந்தாங்கி)

தந்தி:

"புது நூல்"

எங்களது ஆலையில் உயர்ரக பஞ்சைக் கொண்டு புதியதாக நிர்மாணிக்கப்பட்ட நவீன இயந்திரங்களின் மூலம் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தாமிக்க 20,40,60,80, நம்பர் கோன், மற்றும் 2/17 முதல் 2/60 வரையிலான சிட்டம் மற்றும் இழை நூல்களைத் தயார் செய்கிறோம்.

எங்களது ஆலையில் தயாராகும் நூல்கள் நூதன மின் சோதனைக் கருவிகளைக் கொண்டு ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறந்த முறையில் தரக்கட்டுப்பாடு செய்யப்பட்டு நூல் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. எங்கள் ஆலையில் தயாராகும் நூல் தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களில் ஏராளமாக வரவேற்கப்பட்டு நற்பெயர் ஈட்டி வருவதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது ஆலையில் தயாராகும் நூல்களை மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் விற்பனை நிலையங்களின் மூலமாகவும் விற்பனை செய்கிறோம்.

சிறப்புமிக்க இவ்வாலையில் பங்குதாரர்களாகி பெருமை பெற நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அன்புடன் அழைக்கிறோம்.

கோ. ராமமூர்த்தி, எம்.ஏ.,
மாவட்ட வருவாய் அதிகாரி/
தனி அலுவலர்.



குழந்தைகளே! உங்களைத்தான்!

குழந்தைகள், பெற்றோர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? அதற்கான நல்லொழுக்க நெறிமுறைகள் என்னென்ன? இது குறித்து 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாரசீக-தாஜிக் அறிஞர் ஹுசைன் வாய்ஸ் கோஷிபி 11 அன்புக் கட்டளைகளை இடுகிறார். அவை:

1. உங்களது தாய், தந்தையர்க்கு எப்போதும் மரியாதை அளித்து வாருங்கள்.
2. இவ்வுலகில் அவர்களுக்கு எந்தச் செல்வங்களையும் வழங்கத் தயங்கக் கூடாது.
3. உங்கள் பெற்றோர்க்கு மரியாதை கொடுத்து வருவதையோ, தொண்டு செய்து வருவதையோ அவர்களிடம் ஒருபோதும் கூறாதீர்கள்.
4. அவர்களை எதிர்த்துப் பேசாதீர்கள்.
5. அவர்கள் அழைத்த குரலுக்கு உடனே செவிசாய்த்து நடந்து கொள்ளுங்கள்.
6. அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது உங்கள் முகத்தைக் கடுகடுப்பாக வைத்திருக்காதீர்கள்.
7. பெற்றோர்களின் எல்லா வேண்டுகோள்களையும் நிறைவேற்றுங்கள்.
8. தாய், தந்தையருடன் பேசும்போது குரலை உயர்த்திக் கோபமாகப் பேசாதீர்கள்.
9. பெற்றோரின் ஆலோசனையைக் கேட்காமல் பயணம் செய்யாதீர்கள்.
10. அவர்கள் மனமகிழ்ச்சியோடு இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள்.
11. மிகச் சிறந்தவற்றை அவர்களிடமிருந்து பெற்றுவரும் நீங்கள் அவர்களிடம் கனிவுடனும் அன்புடனும் நடந்து கொள்ளுங்கள்.

என்ன நோய் என்று கண்டுபிடிக்கும் கம்ப்யூட்டர்!

நோயாளி ஒருவர் என்னவிதமான நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பதைச் சில நிமிடங்களுக்குள் கண்டுபிடித்துக் காட்டும் 'கம்ப்யூட்டர்' ஒன்றை அமெரிக்க மருத்துவர்கள் இருவர் உருவாக்கியுள்ளனர்.

'மெடிடெல்' என்பது இந்தக் கம்ப்யூட்டரின் பெயராகும். நோயாளி ஒருவரைப் பரிசோதிக்கும் மருத்துவர், அந்த நோயாளியின் சிரமங்கள், அவரது உடலில் உள்ள நோயின் அறிகுறிகள் ஆகியவற்றை இந்தக் கருவியில் பதிவு செய்து விட்டு, ஒரு பொத்தானை அழுத்தினால், உடனே அந்த நோயாளிக்கு என்ன நோய் என்பதை இந்தக் கம்ப்யூட்டர் கருவி காட்டி விடுகின்றது. மருத்துவர்களுக்கு மிகவும் துணை புரியக் கூடிய கருவி இது.

இந்தக் கம்ப்யூட்டருக்குள் 1200-க்கும் மேற்பட்ட நோய்களின் அறிகுறிகள், இந்த நோய்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் ஆகியவை பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே குறிப்பிட்ட அறிகுறிகள் பற்றிய விவரங்களை இந்தக் கம்ப்யூட்டரில் செலுத்தியதும், இந்த விவரங்களை இது நன்கு அலசி ஆராய்ந்து, ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, அந்த நோயாளிக்கு என்ன நோய் என்று சொல்லி விடுகிறது. மேற்கொண்டு இதனை உறுதிப்படுத்த வேறு என்ன சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அது யோசனை கூறுகிறது.

நியூயார்க்கைத் தலைமையகமாகக் கொண்ட 'எல்ஸ்வியர் ஸயின்ஸ் பப்ளிஷிங் கம்பெனி' என்னும் நிறுவனம் இந்தக் கம்ப்யூட்டரை உருவாக்கியுள்ளது.

-அமெரிக்கத் தகவல் நிலையம்

இராயப்பேட்டை மருத்துவமனை

சென்னை - இராயப்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் இதயநோய்ப் பிரிவுக்கான அதிசயக் கருவியொன்று அண்மையில் திறந்து வைக்கப்பீட்டது. அவ்விழாவிற்குச் சென்றிருந்த போது, மருத்துவமனைக் கண்காணிப்பாளரான டாக்டர். வி. முருகேசன் அவர்களை அங்கே சந்திக்க நேர்ந்தது. இதய நோய் பற்றிய சில ஐயப்பாடுகளை நாம் அவரிடம் கேட்டபோது - நறுக்குத் தறித்தாற் போலப் புன்னகையோடு பதில் கூறினார், அவர்.

இதய நோயைத் தவிர்ப்போம்

''எங்கள் மருத்துவமனை, அரசு பொது மருத்துவமனைக்குப் பிறகு தோன்றியதுதான்; அதாவது, 1904ல், ஒரு மாநகராட்சி டிஸ்பென்சரி என்ற அளவில் துவக்கப்பட்டு, 1941ல் தான் அரசு மருத்துவமனை ஆகியது. இதய நோய்ப்பிரிவு முதன்முதல் துவக்கப்பட்டது இராயப்பேட்டை மருத்துவமனையிலேதான். 1969ல் அந்தப்பிரிவு தனியே துவக்கப்பட்ட போது, சர். டோனோவன் என்பவர்தான் மருத்துவமனைக் கண்காணிப்பாளராக இருந்தார்; அதற்குப்பிறகு டாக்டர்கள் எம்.வி. கிருஷ்ணமூர்த்தி, ஆர்.எஸ். ராஜகோபாலன், ஜி. அனந்தசுப்பிரமணியம் பொறுப்பு வகித்த காலத்தில், இதயநோய்ப்பிரிவு பெரும் புகழோடு வளர்ந்தது....'' என்றெல்லாம் பெருமிதத்தோடு கூறிய டாக்டர் வி. முருகேசன் அவர்கள், தானும் சில காலம் தீவிர இதய நோய்ப் பிரிவின் தலைமை மருத்துவராக இருந்ததாகவும் கூறினார். விழா நேரப் பரபரப்பில் இருந்த (RMO) டாக்டர் வி. முத்து வீரப்பன் (ARMO)ஆகியோர் வரவேற்றனர். ''மலேரியா போன்ற நோய் வகையைச் சேர்ந்தது காலா ஆஜார் (Kala Azar) என்னும் வியாதி; அந்தக் கொடிய நோய்க்கு மூலகாரணமான டோனோவன் அணுக்களை (Donovan Bodies) முதன்முதல் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்த மருத்துவ மேதை சர். டோனோவன் இங்கேதான் பணிபுரிந்தார்; வாய்ப் புற்றுநோய்க்கான (Oral Cancer) புதியதோர் அறுவைச் சிகிச்சையை முதன்முதல் இந்த மருத்துவமனையில் பணிபுரிந்த டாக்டர் எம். நாராயணன்தான் வெற்றிகரமாகச் செய்துகாட்டினார். ஆண் மலட்டுத்தன்மை முதலாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டதும், மாற்றுச் சிறுநீரகச் சிகிச்சை முதலாவதாகத் தமிழகத்திலேயே வெற்றிகரமாகச் செய்யப்பட்டதும் இராயப்பேட்டை மருத்துவமனையில் டாக்டர்கள் ஏ. ரர்ஜசேகரன், எம்.ஏ. முத்துசேதுபதி ஆகியோர் பணியாற்றிய போதுதான்'' என்று பலவாறாகவே பெருமையோடு தெரிவித்தார்கள் அவர்கள். பிறகு, நம் வருகையின் குறிப்பறிந்து அவர் ''இப்போது எங்கள் மருத்துவமனை இதயநோய்ப் பிரிவின் தலைமை மருத்துவராக உள்ள டாக்டர் சி.வி. பிரம்மானந்தத்தை ஒருநாள் வந்து பாருங்களேன், இந்நோய் பற்றி இன்னும் உங்களுக்கு விவரம் கிடைக்கும்'' என்று அன்போடு கூறிவிட்டு விடைபெற்றார்.

அதன்படி இராயப்பேட்டை அரசு பொது மருத்துவமனைக்கு மறுநாள் சென்றபோது டாக்டர் கே. கௌசல்யா தீவிர இதய நோய்ச்சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் சி.வி. பிரம்மானந்தம் அவர்களிடம் அறிமுகப்படுத்தினார். இதயநோய் பற்றிய நமது ஐயப்பாடுகளுக்கெல்லாம் ஆழ்ந்து சிந்தித்துப் பதிலளித்தார் அவர். டாக்டர். ஜெயராஜாவும், நமது சந்திப்பில் கலந்து கொண்டார்.

''நெஞ்சை வலித்தல், மூச்சுத் திணறல், படபடப்பு ஏற்படுதல், திடீரென மயக்கம் உண்டாவது, வியர்வை பெருக்கெடுத்தல், தேவையில்லாத வாந்தி போன்ற சில மாற்றங்களே மாரடைப்பு நோய் வருகைக்கான முன் அறிகுறிகளாகும்''.

'' போதுமான மருத்துவச் சிகிச்சை உடனடியாகக் கிடைக்க ஏற்பாடு செய்யாத காரணத்தாலும், அலட்சியத்தாலுமே இதய நோய்க்கு ஆளானோரில் பலர் இறந்து போக நேரிடுகிறது. நெஞ்சுவலி ஏற்பட்ட ஒருவரை நான்கு அல்லது ஆறு மணி நேரத்

திற்குள் கூசுந்த மருத்துவமனைக்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டால், அவர்களைத் தக்க சிகிச்சையளித்துக் காப்பாற்றிவிட முடியும்.

இதய இரத்த ஓட்டத்தைச் செம்மைப்படுத்தும் இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பு, மாரடைப்புக்கு முக்கிய காரணமாகும். அந்த அடைப்பை நீக்கும் வகையில், இப்போது புதிதாக மூன்று அருமையான மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. Strepto Kinase, Urokinase, Tissue Plasminogen Activator என்கிற அந்த மருந்துகளின் மூலம், இதய நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நான்கைந்து மணிநேரத்திற்குள் சிகிச்சையளித்தால் காப்பாற்றிவிடமுடியும்''.

''இதயநோய் வருவதற்கு வயது வரம்பு எதாவது உண்டா?'' என்றொரு கேள்வியைக் குறுக்கே போட்டோம் நாம்.

இராயப்பேட்டை மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் வி.முருகேசன், இதயநோய்ப் பிரிவு தலைமை மருத்துவர் டாக்டர் சி.வி. பிரம்மானந்தம்.

சிந்தனை காரணமான மூளை அழற்சி போன்றவைகளேயாகும்.

இதய நோயைப் பரம்பரை நோய் என்று கூறமுடியாது. ஆனால், அப்படிச் சொல்லுவதிலும் சில நேரங்களில் உண்மையிருப்பதை எங்களால் காணமுடிகிறது. தந்தைக்கோ, தாய்க்கோ அப்படி ஏற்பட்டிருக்கும்

அளவுக்குமேல் கொழுப்புப் படர்ந்து வழி அடைபட்டு இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்துவதே மாரடைப்பு (Heart Attack) ஏற்பட மிக முக்கியக் காரணமாகும்.

இது, ஓரளவுக்குச் சுமாராக ஏற்படும்போது நெஞ்சுவலி (Angina-Chest pain) என்ற அளவில் இருக்கும்.

இதயநோய் பெரிதும் ஆண்களையே பாதிக்கிறது; பெண்கள் அவ்வளவாகப் பாதிக்கப்படுவதில்லை; குறிப்பாகச் சொன்னால் - மாதவிலக்கு நிற்கும் காலம்வரை பாதிக்கப்படுவதில்லை; அதன் பிறகு, ஆண்களைப் போலவே பெண்களுக்கும் இதய நோய் ஏற்பட அதிக வாய்ப்புகள் உண்டாகி விடுகின்றன.

சிறுவர் சிறுமியரை இந்நோய் சோதிப்பது கிடையாது.

இதயநோய்க்கு ஆளானோர் புகைப்பதை நிறுத்திவிட வேண்டும்; கொழுப்புச் சத்து அதிகமுள்ள உணவுப் பொருட்களை அடியோடு தவிர்க்க வேண்டும்; இரத்த அழுத்தம் சீராக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்; முக்கியமாக உணவில் மிகுந்த கட்டுப்பாடு வேண்டும்; நம்

'சென்ட்ரல் மானிட்டர்' மூலம் நோயாளிகள் நிலையறிதல்.

''நாற்பது வயதிலிருந்து அறுபது வயதுக்குள்தான் மாரடைப்பு வரும் என்று முன்பு ஒரு நிலை இருந்தது. இப்போதெல்லாம் இருபது முப்பது வயதிலேயே வந்து விடுவதைப் பார்க்கிறோம்'' என்று வியப்போடு தெரிவித்தார் டாக்டர் சி.வி. பிரம்மானந்தம்.

இளமையில் இதயநோய் வந்திடக் காரணம் - அதிக அளவில் புகை பிடித்தல், தேவையில்லாத உணவுப் பழக்கவழக்கங்கள், அனாவசியமான அவசர வேலைகள் தொடர்பான பரபரப்பு (Tension) அடிக்கடி உணர்ச்சி வசப்படல், ஓய்வற்ற

பட்சத்தில், பின் சந்ததியில் சில நேரங்களில் யாருக்காவது அப்படி வருகிற வாய்ப்பும் இருப்பதாகத் தெரிகிறது.

பருமனான உடல், சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, புகைக்கும் பழக்கம் ஆகியவை ஒருவருக்கு இருந்தாலே போதும், அப்படிப் பட்டவருக்கு இதயநோய் எளிதில் வரக்கூடும்.

இதயத்தில் இரத்த ஓட்டத்தை முறைப்படுத்தும் முக்கியமான மூன்று இரத்தக் குழாய்களில் (Right coronary, Left coronary, Left anterior descending-left Circumflex Artery) ஓர்

முன்னோர்கள் 'பசித்திரு - புசித்திரு' என்றார்களே ? அதே போல அதிக அளவில் உணவை உட்கொள்ளாமல் இருக்கவேண்டும்; அதற்காகப் பட்டினி கிடக்கவும் கூடாது; பச்சைக் காய்கறிகள் அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம்; உடலின் எடை கூடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்; உடற் பயிற்சி செய்யலாம்''.

''உடற்பயிற்சி என்றால் எது போன்ற உடற்பயிற்சிகள்?''

''காலையிலும் மாலையிலும் ஓரளவு தூரம் நடக்கலாம்; குறைவான வேகத்தில் சைகிள் விடலாம்; தண்ணீரில் நீந்தலாம்...''

''இதய நோய் உள்ளவர்கள் நீர்வீழ்ச்சியிலெல்லாம் குளிக்கக் கூடாதாமே?

''குளிக்கலாம்; தவறில்லை; ஆனால் எதையும் அளவோடு செய்தால் ஆபத்தே இல்லை. நடப்பதைக் கூட விரைந்த நடை... மெதுவான ஓட்டம் என்று சக்திக்கேற்றபடிதான் செய்ய வேண்டும்.''

''இரத்தக் குழாயில் ஏற்படும் அடைப்புதான் மாரடைப்பிற்குக் காரணம் என்பதால், அறுவைச் சிகிச்சை செய்து சரி பண்ணிவிடலாம் என்கிறார்களே? அதை மருந்து மூலமே செய்ய இயலாதா?'' என்ற நம் கேள்விக்கு நீண்டதோர் பதில் கிடைத்தது.

'டிரட்மில் எக்சசைஸ் எலக்ட்ரோ கார்டியோகிராபி' மூலம் நோயாளி சோதிக்கப்படுதல்.

''அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளுவது நல்லதுதான்; அதன் மூலம், இதயநோய்க்கு ஆளானோரின் வாழ்நாளைக் கூட்ட முடியும். அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு, ஒருவரின் அன்றாட நடவடிக்கைகளில் எந்தச் சங்கடமும் ஏற்படாது. இப்போது, இரத்தக் குழாய் அடைப்பை நீக்குவதில் 'Balloon Angioplasty' என்ற முறை ஒன்று கடைபிடிக்கப் படுகிறது. அதாவது அடைப்பு ஏற்பட்ட இரத்தக் குழாயைக் கண்டு பிடித்து, அதில் பலூன் போன்ற சிறியதோர் பொருளைப் பொருத்தி 'பம்ப்' செய்து அடைபட்ட குழாயை விரிவடையச் செய்து, தடைப்படும் இரத்த ஓட்டத்தைச் சீராக்கலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் - குறிப்பாக டெக்சாஸ் மாநிலம், இந்த இதய நோய் சிகிச்சையில் புகழ்பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. அங்கே லேஸர் (Laser) மூலமும் இதைச் செய்கிறார்கள்; மேலே குறிப்பிட்ட பலூன் முறையையும் இந்த லேஸர் முறையையும் சேர்த்து இரத்த ஓட்டம் தடைப்படும் இரத்தக்குழாயை விரிவடையச் செய்யும் முயற்சியும் வெற்றி கண்டுவருகிறது.

''இதய நோய்க்குத் தனியார் மருத்துவ மனைகளில் தரமான சிகிச்சை அளிக்கப்படுவதாகச் சொல்கிறார்களே ....'' என்று நாம் கேட்ட போது, டாக்டர் பிரம்மானந்தம் ''அரசு மருத்துவமனைகளில் இலவசச்சிகிச்சை அளிக்கப்

இதய நோய்ப் பிரிவில் உள்ள மருத்துவர்கள் – செவிலியர்

TNPSC

விளம்பர எண்: 13/90

தமிழ்நாடு நீதிப்பணியில் (Tamil Nadu State Judicial Service) 41 மாவட்ட முன்சீப் மற்றும் - குற்றவியல் நீதிபதி பதவிகளுக்கு (District Munsif cum Judicial Magistrate) நேரடித்தேர்வின் மூலம் நியமனம் செய்யப்பட விண்ணப்பங்கள் 28.5.1990 அன்று மாலை 5.45 மணிவரை வர வேற்கப்படுகின்றன.

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2500-75-3100-100-4200.

வயது: 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக

QUALIFICATIONS:

1. B.A., or B.Sc., B.Com., or an Honours degree;
2. Must have been enrolled as an Advocate of a High Court or of any State Bar Council of the Indian Union;

AND

3. Experience at the bar for a period of not less than three years.

Note: Preference will be given to destitute widows who possess the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

Explanation: "Destitute Widows" means, a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆதி திராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப் பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசு பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணிவேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" அறிவிக்கையில் தரப்பட்டுள்ளது. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அளிக்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும், செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்து மூலம் கோரிப் பெற்றுக்கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூ.10/-) சென்னை அண்ணா சாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 1.4.1990 அன்றோ அல்லது அதற்கு பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006, ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய் 10/-) "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26×12செ.மீ) அனுப்பவேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்கவேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

டிஐபிஆர்/1018/எம்எஸ்/90/அக்கார்ட்

மறதியிலும் ஓர் இனிமை

முல்லை பி.எல். முத்தையா

ஐம்பது ஆண்டுகளுக்கு முன், பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞர் என்றழைத்துப் பெருமைப்படுத்தி வந்தது தமிழகம்.

அண்மைக் காலமாக, பாவேந்தர் என்றே தமிழகம் போற்றிக் கொண்டாடி வருகிறது.

அவரது கவிதைகள் மக்களிடையே ஈடு இணையற்றுப் பதிந்தமையால், பாவேந்தர் என்ற மாபெரும் சிறப்பை அவர் பெற்றார்.

பாரதிக்குப் பின்னர், பிற கவிஞர்கள் எவரும் பெறாத பெரும் புகழை பாரதிதாசனே அடைந்தார்.

பாரதிக்குப் பின் வாழ்ந்த ஏனைய கவிஞர்களைவிட, பாரதிதாசனைப் பற்றி வெளிவந்த நூல்கள் மிகுதியானவை. தாம் எழுதிய பாடல்களிலும், பழந்தமிழ் இலக்கியங்களிலும் ஆழ்ந்த நினைவாற்றல் பாவேந்தருக்கு இருந்தது. அத்தகைய சிறப்பு வாய்ந்த பாவேந்தருக்கு, வாழ்க்கை நடைமுறையில் அவ்வப்போது மறதி மிகுதி. அவற்றைக் கண்டு நான் வியப்படைவது உண்டு.

புதுவையில் பாவேந்தர் இல்லத்துக்கு வெளியூரிலிருந்து எந்த நேரத்திலும் பலர் வருவார்கள். அறிமுகம் இல்லாதவர்களும் வந்து, தங்கி உரையாடி, உணவு அருந்திச் செல்வது வாடிக்கையான நிகழ்ச்சிகள். வருகிறவர்களிடம் முகம் சுளிக்காமல், இனிமை ததும்பச் சிரித்துப் பேசி மகிழ்வார் பாவேந்தர்.

ஒருமுறை வெளியூர் அன்பர் ஒருவர் வந்தார். அவர் யார் என்பது பாவேந்தருக்குத் தெரியாது. எப்போதாவது வருகிறவர்களை, பாவேந்தர் எவ்வாறு நினைவு கொள்ள முடியும்?

வந்தவர், "ஐயா! வணக்கம்" என்றார்.

பாவேந்தரும் பதில் வணக்கம் தெரிவித்தார். ஆனால், அவர் யார் என்று தெரியவில்லை.

"எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றார் பாவேந்தர். ஊரைக் கொண்டு வந்தவரைத் தெரிந்து கொள்ளலாம் என்பது பாவேந்தரின் எண்ணம்.

"நேராகப் பேருந்து நிலையத்திலிருந்து வருகிறேன்" என்றார் அந்த அன்பர்.

"இப்பொழுது என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டார் பாவேந்தர்.

அவர் செய்யும் தொழிலைக் கொண்டு அவரைத் தெரிந்து கொள்ளலாம் என்ற நினைப்பு, பாவேந்தருக்கு!

"சும்மாதான் இருந்து கொண்டிருக்கிறேன்" என்றார் வந்தவர்.

முயற்சி தோல்வியுறவே, "நீங்கள் ......?" என்று நேரிடையாகவே கேட்க முற்பட்டார் பாவேந்தர்.

தான் இன்னார் என்பதைத் தெரிவித்தார் அவர்.

"அதுதானே பார்த்தேன்; எனக்குத் தெரியுமே" என்று சமாளித்து, அவருடன் உரையாடலானார் பாவேந்தர்.

அனுமான்', 'சக்தி', 'மஞ்சரி' பத்திரிகைகளில் ஆசிரியராக இருந்த தி.ஜ.ர., பாவேந்தரைக் காண முல்லைப் பதிப்பகத்துக்கு வந்தார். பாவேந்தரும் நானும் வெளியே புறப்படத் தயாரான நேரம் அது. பாவேந்தரும் தி.ஜ.ர.வும் கைகூப்பி வணக்கம் பரிமாறிக் கொண்டனர். ஆனால், வந்திருப்பவர் தி.ஜ.ர. என்பது பாவேந்தருக்குத் தெரியாது. சிறிது நேரம் இருவருக்குமிடையே மௌனம் நிலவியது.

இம்மாதிரி நிலை ஏற்படும் என்பது எனக்குத் தெரியும். உடனே இவர், 'சக்தி' ஆசிரியர் தி.ஜ.ர. என்று அறிமுகம் செய்தேன்.

"ஓ" எனக்கு முன்பே தெரியுமே; என்று கூறி அவரைக் கட்டித் தழுவினார். பிறகு 'மணிக்கொடி' காலத்திய தொடர்புகளை இருவரும் அளவளாவினார்கள்.

ஒரு முறை புதுவையிலிருந்து இரவு ரயிலில் திருச்சிக்குப் பயணமானார் பாவேந்தர். அவரது பயணத்தின்போது, எவரேனும் ஒருவராவது துணை போவது வழக்கம். அப்பொழுது வில்லியனூர் விவசாயி ஒருவர், உடன் சென்றார்.

ரயில் விழுப்புரத்தில் நின்றது. பாவேந்தருக்கு அயர்வு; தூக்கக் கலக்கம், 'இறங்கு, இறங்கு' என்று கூறி, ரயிலிலிருந்து இறங்கி விட்டார் பாவேந்தர். தூக்கம் தெளிந்தது. பாவேந்தர் சுற்று முற்றும் பார்த்தபடி எதுவும் பேசாமல் நடந்தார். ரயிலும் திருச்சி நோக்கிப் புறப்பட்டு விட்டது.

'இது விழுப்புரமுங்க!' என்றார் துணையாக வந்தவர்.

"அதை ஏன் நீ அப்பொழுதே சொல்லவில்லை?" என்று கடிந்தார் பாவேந்தர்.

'விழுப்புரத்தில் ஏதோ அலுவலைக் கருதிப் பாவேந்தர் இறங்குகிறார் போலும்' என்று நினைத்து விட்டார் வில்லியனூர்க்காரர்.

பிறகு என்ன? அடுத்த ரயிலில் பயணமானார்கள் இருவரும்.

இப்படியாக மறதி விளைத்த நிகழ்ச்சிகள் எத்தனை, எத்தனையோ! அத்தனையும் - பிறருக்கு இடையூறு தேடித்தராதவை!



தொழிலாளர் உழைப்பு

ஆர்த்திடும் யந்திரக் கூட்டங்களே!- உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ?- நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பில்
உதித்தது மெய் அல்லவோ?

படுவதால் அப்படி லேசாகப் பேசப் படுகிறதோ என்னவோ தெரியாது. அங்கெல்லாம் பயன்படுத்துவதை விட உயர்ரக மருந்துகளும், சிகிச்சைக்கான அற்புதமான கருவிகளும் அரசு மருத்துவ மனைகளிலும் ஏராளம் இருக்கின்றன. வெளியார் மருத்துவமனைகளை விட இந்த வகையில் நாங்கள் தரமான சிகிச்சையளித்து வருகிறோம். புகழ் பெற்ற தனியார் மருத்துவ மனைகளில் - "இனி முடியாது" என்று கைவிடப்பட்டு வெளியே அனுப்பப்பட்ட இதய நோயாளிகளில் பல பேரை நாங்கள் காப்பாற்றியிருக்கிறோம். ஆனால், எங்களால் முடியாது என்று நாங்கள் எந்த ஒரு நோயாளியையும் வெளியே அனுப்பியதே இல்லை. அரசு மருத்துவ மனைகளில் முறையான மருத்துவக் கவனிப்பு அளிக்கப்படுகிறது என்று ஆணித்தரமாகச் சொன்னார், அவர்.



75 ஆண்டுக்காலப் பழமை மிக்க சென்னை-இராயப்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவ மனையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட இந்த ஹோல்டர் மானிட்டர் அல்லது டைனமிக் எலக்ட்ரோ கார்டியோ கிராபி மானிட்டர் கருவி ரூ.8 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்புடையது ஆகும்; தீப்புண் சிகிச்சைப் பிரிவைப் புதுப்பிக்க ரூ.63 ஆயிரமும், பிணப் பரிசோதனை நிலையத்தைச் செம்மைப்படுத்த ரூ.32 ஆயிரமும் அரசு செலவிட்டுள்ளது.

இங்கே இராயப்பேட்டை [illegible] சிகிச்சை செய் [illegible] உண்டா?

Department of Cardiology [illegible] அதிகப்படுக்கை வசதி செய்யப்பட்டு, தனி பரிசோதனைக் கூடமும் அறுவைச்சிகிச்சைத்துறையும் இங்கே அமைக்கப்

'ஹோல்டர் மானிட்டர்' அறிமுக விழா

சென்னை- இராயப்பேட்டையில் உள்ள அரசு பொது மருத்துவ மனையில் இருக்கும் இதய சிகிச்சைப் பிரிவில் ஹோல்டர் மானிட்டர்என்ற கருவி அறிமுகப்படுத்தி- புதுப்பிக்கப்பட்ட தீப்புண் சிகிச்சைப் பிரிவு, பிணப் பரிசோதனை நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைக்கும் விழா 18.4.90 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர். க. பொன்முடி, ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், மருத்துவக் கல்வி இயக்குநர் திருமதி டாக்டர் லலிதா அனந்த சுப்பிரமணியம், திரு டி.ஆர்.பாலு எம்.பி., மாநில குடிசைமாற்று வாரிய உறுப்பினர் திரு எஸ்.ஏ.எம். உசேன், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். ராம ராகவன் ஆகியோர் விழாவில் பங்கேற்றனர்.

இராயப்பேட்டை மருத்துவமனைக் கண்காணிப்பாளர் டாக்டர் வீ. முருகேசன் வரவேற்புரையாற்றினார். இருதய சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவர் டாக்டர் சி.வி. பிரம்மானந்தம், ஹோல்டர் மானிட்டர்கருவியைப் பற்றி விளக்கவுரையாற்றினார். மருத்துவமனையின் நிலைய உதவி அலுவலர் டாக்டர் முத்து வீரப்பன் நினைவுப் பரிசுகள் வழங்கினார். விழா முடிவில், மருத்துவமனை நிலைய மருத்துவமனை அலுவலர் திருமதி டாக்டர் கௌசல்யா கேசவன் நன்றியுரையாற்றினார்.

பட்டால் நாங்களும் அறுவைச்சிகிச்சை செய்யலாம்; இப்போது இல்லை."

"இராயப்பேட்டை மருத்துவமனையின் தீவிர இதயநோய்ப் பிரிவில் (Iccu) எட்டுப் படுக்கைகளே உள்ளன; இவைதவிர, இடைநிலைப் படுக்கைகள் நான்கு உண்டு. படுக்கைகளின் எண்ணிக்கையைக் கூட்டினால் - ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனியே இதய நோய்ச் சிகிச்சைப் பிரிவை அமைக்க முடியும்; இது பற்றியும் - 'Cardiac Catheterization Laboratary தேவையென்றும் அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது."

இங்குள்ள இதயநோய்ப் பிரிவில் - தலைமை மருத்துவரின் கீழே- உதவி டாக்டர்களாகத் திருவாளர்கள் எம். ஜெயராஜா, பி.எஸ். நடராஜன், எம். அப்துல் சீதக்காதி, பி.எஸ். மோகன முருகன், பி. சிற்றம்பலம், ஐ. பலவேசம் ஆகிய அறுவரும், ஐந்து செவிலியரும் அயராது பணி புரிகின்றனர்.

'டாப்லர் எக்கோ கார்டியோகிராபி' பரிசோதனை

தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள எட்டுப் படுக்கைகளிலும் 'மானிட்டர்' (Monitor) பொருத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு படுக்கைக்கும் தனித்தனி அறை இருப்பதால் அந்தந்தப் படுக்கையில் உள்ள இதய நோயாளியின் நிலை என்ன என்பதை அறைக்கு வெளியில் ஓரிடத்திலிருந்தே அறிந்து கொள்ள உதவும் Central Monitor' என்னும் கருவியும் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிலேயே 'Cardiac Rehabilitation Centre' உள்ள மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனைதான்.

"ஒரு இதய நோயாளி மருத்துவ மனையில் 6 முதல் 7 வாரம் வரை சிகிச்சை பெற வேண்டும் என்ற நிலை 1955ல் இருந்தது. 1960ல், 3 வாரகாலம் இருந்தால் போதும் என்றாயிற்று; 1972ல் அது 2 வார காலமாகக் குறைந்தது. 1980ல் ஏழு முதல் பத்து நாட்கள் வரை சிகிச்சை பெற்றால் போதும் எனப்பட்டது; இப்போதோ, ஒரு குறையும் வைக்காமல் மூன்றே நாட்களில் முழுச் சிகிச்சையும் அளித்துக் குணப்படுத்தி ஏழாம் நாளே ஸ்ட்ரஸ்டெஸ்ட் செய்து விடுகிறோம்" என்றார், தலைமை மருத்துவர்.

ஸ்ட்ரஸ் டெஸ்ட் (Stress test) என்பது, ட்ரட்மில் (Treadmill), நிலையான சைக்கிள் (Bi-cycle ergometer) ஆகியவற்றின் மூலம் இதய நோயாளியை - நடப்பது, ஓடுவது, ஃபெடல் பண்ணுவது போன்றவற்றைச் செய்ய வைத்து, இதயத்துடிப்பை அதிகமாக்கி, அந்த நேரத்தில் இதய வலிமை - இதயத்தின் இயக்கம் ஆகியவற்றையும், பாதிக்கப்பட்ட இரத்தக்குழாய் தவிர மற்றவற்றின் இரத்த ஓட்டம் போதுமான அளவிற்கு இருக்கிறதா என்பதையும் கண்டு பிடிக்க உதவும் பரிசோதனையே ஆகும்.

எக்கோ கார்டியோகிராபி (echo cardiography)எனப்படும்அல்ட்ரா சவுண்ட் துணை கொண்டு இதயத்தைப் பல்வேறு கூறுகளாகப்படம் பிடித்துப் பார்க்கும் பரிசோதனையும் இங்கே மேற்கொள்ளப்படுகிறது. இதயம் எந்தவகைப் பாதிப்பிற்கு ஆளாகியுள்ளது, இதய வால்வில் ஏற்பட்டுள்ள கோளாறு என்ன, என்பதையெல்லாம் அறிய இது உதவும்.

'ஹால்டர் மானிட்டர்' (Holter Moniter) என்று ஒன்று இருக்கிறது. இதன்மூலம், நாள்முழுதும் ஒரு நோயாளியின் இதயத் துடிப்பை ஒலி நாடாவில் பதிவு செய்து, அதை ஒரு கம்ப்யூட்டர் மூலம் ஆய்வு செய்யலாம்.

'பேஸ் மேக்கர்' (Pace Maker) என்றோர் சிகிச்சை முறை இங்குண்டு. இதயத்துடிப்பு சரியில்லாமல் இருந்தால், தகுந்த பரிசோதனைக்குப் பின் மிகக் கவனமாக ஒரு ஒயரை நோயாளியின் இதயத்துக்குள் செலுத்தி, பாட்டரி மூலம் மின்சாரம் செலுத்தி, இதயத் துடிப்பைச்செம்மைப் படுத்துகிற முறைதான் அது. எப்போதாவதுதான் இதற்கு அவசியம் ஏற்படும்.

ஆனால், இதயத்தில் எந்தப் பகுதியில் அந்த ஒயர் செலுத்தப்படுகிறது என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்து இதைச் செய்தால் நல்லது. அப்படிக் கண்டுபிடிக்க 'Image intensifier' என்றொரு கருவி இருக்கிறது; அது எங்கள் மருத்துவ மனைக்குத் தேவை என்று அரசுக்கு முறைப்படி தெரிவித்திருக்கிறோம். "இந்தச் சாதாரணக் குறைகளெல்லாம் விரைவில் நீங்கிவிடும் என்பதை - மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஆகியோரின் துரிதமான நடவடிக்கைகள் மூலம் நாங்கள் உணருகிறோம். அதற்குப் பிறகு, இந்த வகையில் இன்னும் பல அற்புதங்களை நாங்கள் செய்யமுடியும். பின்னர், இதயநோய் சிகிச்சைக்காக யாரும் தனியார் மருத்துவமனைகளை நாடமாட்டார்கள். என்று அழுத்தந்திருத்தமாகச் சொன்னார், இராயப்பேட்டை மருத்துவ மனையின் தீவிர இதயநோய் சிகிச்சைப் பிரிவின் தலைமை மருத்துவரான டாக்டர். சி.வி. பிரம்மானந்தம்.

முதிய நோயாளி பரிசோதிக்கப்படுகிறார்.

"இதயநோய் வராமல், முன் கூட்டியே குறிப்பறிந்து தடுக்க முடியாதா?" என்ற நம் கேள்விக்கு அவர் அளித்த பதில் - "இதய நோய் எல்லோருக்கும் வரும் என்று சொல்ல முடியாது; இன்னின்னாருக்கு வராது என்றும் கூறமுடியாது. கொழுப்புச்சத்துள்ள உணவுகளைத் தவிர்ப்பது; உடற்பயிற்சி செய்வது; இரத்த அழுத்தம் ஏற்படாமல் அவ்வப்போது கண்காணிப்பது; அமைதி; தியானம்; புகை - சினம்விடல் போன்றவைகளின் மூலம் மிக எச்சரிக்கையோடு ஒருவர் இருந்து வருவாரானால் அவர் மாரடைப்பைத் தவிர்க்கலாம்!"

— உரையாடல் தொகுப்பு
பி.எல். ராஜேந்திரன்.

முந்து புயல்களுக்கு ஒரு முகமன்

கோடி
கொட்டும்
பாடிய
பாரதி

இனமொழி
எழுத்தெலாம்
கனலைப்
கைகளில்

உறக்க
ஒடுங்கிய
தெறித்து
பொறிகளாய்ச்

விலங்குகள்
விவாதங்கள்
பலமாய்த்
சம்மட்டிப்

சந்தங்கள்
தாளங்கள்
முந்து
முகமன்

காதல்
கண்களில்
மோதும்
மூர்க்கச்

சாதி
சாத்திர
வீதிக்கு
வீரன்

பொட்டுப்
பொசுக்கும்
சட்டென்று
சந்நதி

ஒற்றை
ஒருகடல்
எற்றும்
எதிர்த்தவன்

விடியல்கள்
கவிதைகள்
பூங்குயில்-நம்
தாசன்!

உணர்வுகள்
தகித்திடக்
பிழிந்து-நம்
கொடுத்தவன்!

முகாம்களில்
மானிடர்க்குத்
விழிப்பின்-புதுப்
சிதறினான்!

அகற்றவே
செய்யாமல்
தாக்கினவே-இவன்
பாடல்கள்!

இருந்தன
போடவல்ல!
புயல்களுக்கு-ஒரு
உரைப்பதற்கு!

தமிழின்மேல்
அன்பிருக்கும்!
பகைமேலோ-ஒரு
சினமிருக்கும்!

சமயங்கள்
பேதங்கள்
வந்ததெலாம்-இந்த
வருவதன்முன்!

பனித்துளியும்
சூரியனாய்ச்
மாறிவிடும்-இவன்
முன்விழுந்தால்!

அலையிலும்
நாம்திறப்போம்!
கடல்அவன்!-அதை
எவன்வாழ்ந்தான்?

கவிஞர் ஈரோடு தமிழன்பன்

பாவேந்தர் நூற்றாண்டு:

நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிச் சின்னம்

மே தின நினைவுத் தூண் திறப்பு விழா, 1.5.'90 அன்று காலை சென்னை நேப்பியர் பூங்காவில் சிறப்பாக நடைபெற்றது.

செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம், இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ''சிகாகோ நகரில், 1886-இல் நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்துப் போராட்டம் ஒரு நாளைக்கு எட்டு மணிநேர வேலை என்ற நிலையை உழைப் பாளர் மக்களுக்கு உரிமையாக்கியது. சிகாகோ வில் எழுந்த உரிமைக்குரல் பின்னர் உலகத்தின் பல நாடுகளில் பரவியது'' என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், விழாவிற்குத் தலைமையேற்றுப் பேசுகையில், ''தொழிலாளர் நலனில் அக்கறை உள்ள தமிழக அரசு, அவர் களது நலனுக்காக அறிவித்ததையெல்லாம் செயல் படுத்தி வருகிறது. பதினைந்தே நாட்களில் இந்த மே தின நினைவுத்தூண் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்தின் வெற்றிச் சின்னமாக இந்தத் தூண் விளங்கும்'' என்றார்.

மாண்புமிகு செய்தி-தொழிலாளர்நலத்துறை அமைச்சர் திரு.கே.என். நேரு அவர்கள் விழா விற்கு முன்னிலை வகித்துப் பேசுகையில், ''மூடப் பட்டிருக்கும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற் சாலையை மீண்டும் விரைவில் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கூறியுள்ளார்கள். இன்னும் ஒரு மாதக் காலத்தில் இந்தத் தொழிற்சாலை திறக்கப்பட்டு விடும்''என்றார்.

திரு. டபிள்யூ. ஆர். வரதராஜன், எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், ''இதுபோன்ற நினைவுச் சின்னம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று மே தின நூற்றாண்டு விழாவின்போது, 1986-ஆம் ஆண்டிலேயே தெரிவிக்கப்பட்டும், அது அமல் படுத்தப்படவில்லை. தற்போது இது தொடர்பாக நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று, உடனடி யாக நினைவுத்தூணை ஏற்படுத்தியதற்காக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைத் தலைவர் திரு செ. குப்புசாமி அவர்கள் பேசுகை யில், ''பெற்ற உரிமையைப் பாதுகாக்கவும், உரிமைக் குரல் எழுப்பிடவும் இந்த மே நாள் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. ரஷ்ய நாட்டைத் தவிர வேறெங்கும் இதுபோன்ற நினைவுத் தூண் நிறுவப்பட்டதில்லை. இதை நிறுவிய பெருமை மாண்புமிகு கலைஞர் அவர்களையே சாரும்'' என்றார்.

திரு அப்துல் லத்தீப், எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், ''வரலாற்றுச் சிறப்புமிக்க நேப்பியர் பூங்காவில், மே தின நினைவுச் சின்னம் அமைக்கப் படுவது மிகவும் பொருத்தமான ஒன்று'' என்றார்.

மே தின நினைவுத்தூணைத் திறந்து வைத்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார். அப்போது அவர் குறிப் பிட்டார்:-

''அயர்வை அச்சத்தால் போக்கி
வியர்வை ரத்தக்குளமாக்கி
வாடுகின்ற பாட்டாளியும்
ஆடுகின்றான் திருநாள் என்று!''

என பதினைந்து ஆண்டுகளுக்குமுன் மே தினத் தைப் பற்றி ஒரு கவிதை எழுதினேன். அந்தக் கவிதையை நினைவூட்டி இங்கே குழுமியிருக்கின்ற பாட்டாளி மக்களுக்கும், தமிழகம் முழுவதும் உள்ள பாட்டாளி மக்களுக்கும் மேதின வாழ்த்துக் களை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

''மேதினம் நாம் கொண்டாடுகிற இந்த நாள் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுக்கு நூற்றாண்டு விழா நடத்திக் கொண்டிருக்கிற ஆண்டில் ஒரு நாள். அவர் பாட்டாளி வர்க்கத்தைப் பற்றி எப் படியெல்லாம் பாடினார் என்று எனக்கு முன் னால் இங்கே பேசியவர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

''காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான்
அவன் காணத்தகுந்தது வறுமையாம்
பூணத் தகுந்தது பொறுமையாம்!''

என்று ஆதங்கத்தோடு தன்னுடைய உள்ளத்தை அவர் வெளிப்படுத்திக் காட்டினார்.

''சிற்றூரும், வரப்பெடுத்த வயலும், ஆறு
தேக்கிய நல் வாய்க்காலும், வகைப்படுத்தி
நெற்சேர உழுதுழுது பயன்விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களெல்லாம்
எவரின் தோள்கள்?''

—என்ற வினாக்குறியை வேலாக்கினார். அதனையே அரிவாளாக்கினார். அதனையே சம்மட்டியாக்கினார். யாருடைய தோள்கள்? என்று கேட்டார். ''பொற்றுகளை-கடல்முத்தை-மணிக்குலத்தைப் போய் எடுக்க அடக்கிய மூச் செவரின் மூச்சு? என்று கேட்டார்.

அப்படி பாட்டாளிக்காக-தொழிலாளிக்காக-தரல் கொடுத்த புரட்சிக் கவிஞன் பாரதிதாசனுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிற இந்தக் காலக்கட்டத்தில் அவற்றில் ஒரு நாளில் மேதின நினைவுச் சின்னத்தை - நினைவுத் தூணை இங்கே நிறுவி அதனைத் திறந்து வைப்பது மிகமிகப் பொருத்தமுடைய ஒன்றாகும்.

மே தினத்திற்கான விடுமுறை வழங்கப்பட வேண்டும். அது நிரந்தரமான விடுமுறைகளிலே ஒன்றாக இருக்கவேண்டும். சம்பளத்தோடு கூடிய விடுமுறையாக இருக்க வேண்டும். அரசு அலுவலர்களுக்கு மாத்திரம் அல்ல, எல்லாத் தொழிலாளர்களுக்கும் தனியார் ஆலைகளில், தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளிகளுக்கு ஊதியத்தோடு கூடிய விடுமுறையாக இருக்க வேண்டும் என்று அரசின் சார்பில் வெளியிடப்படுகின்ற அந்த விடுமுறை நாட்கள் பட்டியலில் அது இணைய வேண்டும் என்று 1970-ஆம் ஆண்டு எப்ரல் திங்கள் 25-ஆம் நாள் நான் கையெழுத்திட்டு ஆணை பிறப்பித்தேன். மேநாள் விடுமுறை நாட்களிலே ஒரு நாளாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று.''

ஆனால் இன்றைக்கு மத்திய அரசே அறிவிக்கிறது - மேதினம் விடுமுறை நாளாக ஆக்கப்படும், அகில இந்திய அளவிலே ஆக்கப்படும், என்று அறிவிக்கிறது. "மாநிலங்களவையிலே வாய்ப்புக் கிடைத்தால், இதைப்பற்றிப் பேசி மேதினத்திற்கு அனைத்திந்திய அளவிலே விடுமுறை தேவை என்பதை வலியுறுத்துக'' என்று கோபால்சாமியிடத்திலே சொலலி அனுப்பினேன். அவரும் அந்த வாய்ப்பைப் பெற்று, பெற்ற வாய்ப்பை வீணாக்காமல் நல்லமுறையிலே பயன்படுத்தி, மாநிலங்களவையிலே பேசி அவருக்கு ஆதரவாக ஜனதா தளத்தைச் சேர்ந்தவர்கள், கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்தவர்கள், முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் அனைவரும் குரல் கொடுத்து அடுத்த சில வினாடிகளுக்கெல்லாம 'மே தினம் அகில இந்திய [illegible]

> **நேப்பியர் பூங்காவின் மையப் பகுதியில் எழிலுறக் காட்சியளிக்கும் இந்த நினைவுத்தூண் மூன்றரை லட்ச ரூபாய் செலவில் அமைக்கப் பட்டது. 26 அடி உயரமுள்ளது இது. தூணின் அடிப்பாகம் கடப்பைக் கற்களால் அமைக்கப்பட்டது. மெருகேற்றிய சிவப்பு வண்ணக் கருங் கற்களால் உருவாக்கப்பட்ட தூணின் மேற்புறத்தில் இரு பற்சக்கரங்களும், 'மே' என்னும் தமிழ் எழுத்தும், பக்கத்தில் 'ஒன்று' என்கிற எண்ணைக் குறிக்கும் வகையில் துப்பாக்கியும் காட்சியளிக்கிறது.**

கடைப்பிடிக்கப்படும், அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்படும்' என்கின்ற செய்தி வந்திருக்கிறதென்றால், இந்த மேதினத்திலே நமக்கு மிகமிக மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒரு இனிய நற்செய்தி என்பதை, அதுவும் நம்முடைய நினைவுத்தூண் இன்றைக்கு திறக்கப்படுகிற நேரத்திலே இந்தச் செய்தி வந்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியை நமக்கு வழங்கக்கூடிய ஒன்றாகும்.

''தொழிலாளர்களுடைய அரசு இந்த அரசு என்று துரைமுருகன் இங்கே வாதிட்டார். வாதிடத் தேவையில்லை. தமிழர்கள் என்றாலே அவர்கள் தொழிலாளர்கள்தான். தந்தை பெரியார் அடிக்கடி சொல்வார். ''நான் தனியாக தொழிற்சங்கம் வைக்காததற்குக் காரணம்- பலபேர் வற்புறுத்துகிறார்கள்- வைக்காததற்குக் காரணம், திராவிடர் கழகம் என்றாலே அது தொழிலாளர் கழகம்தான். திராவிடன் என்றாலே அவன் தொழிலாளிதான். ஆலையிலே வேலை செய்கின்றவன் மாத்திரம் அல்ல. சாலையிலே செருப்பு தைக்கின்றவனும், துப்புரவுப் பணியிலே ஈடுபட்டிருப்பவனும், கழனியிலே காலை முதல் மாலை வரை பணியாற்றிக் கொண்டிருக்கின்ற விவசாயத் தொழிலாளியும், அனைவரும் தொழிலாளிதான். அவர்கள் இதிலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் திராவிடர்கள் தான். எனவேதான் நான் திராவிடர் கழகம் என்று பெயர் வைத்திருக்கிறேன் என்று பெரியார் அடிக்கடி குறிப்பிடுவார். அனைவரும் தொழிலாளிகள் தான்.''

''சென்னை மாநகரத்திலே அண்ணா சாலை, காமராசர் சாலை ஆகிய இரண்டு சாலைகளிலும் தான் ஊர்வலம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு அனுமதி பெறவேண்டும். மற்ற இடங்களில் எல்லாம் நகர காவல் சட்டம் 41-ன் கீழ் உள்ள தடை இனி கிடையாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது தொழிலாளர் சங்கங்கள் அத்தனைக்கும் மகிழ்ச்சி ஊட்டக்கூடிய ஒன்றாகும். இது தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாட்டாளி வர்க்கத்திற்கு ஒரு நல்ல செய்தி என்று நான் இன்றைக்குக் கருதுகின்றேன்.

நம்முடைய இயக்கம் தொழிலாளியை- அவனுடைய உழைப்பை எல்லா இடத்திலும் காண்கின்ற ஒரு இயக்கமாகும்.

காதல் சுரக்கின்ற நெஞ்சத்திலே. கெட்ட
கைம்மையைத் தூர்க்காதீர்- ஒரு
கட்டழகன் திருத் தோளினைச் சேர்ந்திடச்
சாத்திரம் பார்க்காதீர்!



நான் மீண்டும் சொல்கின்றேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒரு ஏழையின் வீட்டிற்குள் எட்டிப் பார்க்கிறார். அந்த வீட்டில் அந்த ஏழை உழைத்து வியர்வை சிந்தி காலை முதல் மாலை வரை பாடுபட்டுக் கொண்டு வந்த அரிசியை, மனைவி இடத்தில் தந்து, அந்த அம்மையார் அதை உலையிலே இட்டு சோறு பொங்குகின்ற காட்சியைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் காணுகிறார். அப்போது அவருக்கு வருகிற எண்ணம் என்ன? அதைக் கண்டவுடன், வேறுபக்கம் திரும்பிப் பார்க்கிறார் வானத்தை, குளிர்ந்த நிலவு! அதையும் பார்க்கிறார். நிலவுக்கு உவமை சொல்ல எண்ணுகிறார். வேறு எந்த உவமையும் அவருடைய கற்பனைக்கு வரவில்லை, எந்த உவமை வருகிறதென்றால்,

'நித்தம் நித்தம் உழைத்த ஏழை வீட்டில்
வெண்சோறு காணும் இன்பம்தான்
கவின் நிலவே உனைக் காணும் இன்பமோ!'

''ஏழையின் வீட்டிலே வெண்சோறு பொங்குகிறதே அந்த வெண்சோற்றைப் பார்க்கின்ற இன்பந்தான் கவி நிலவே உனைப் பார்க்கின்ற இன்பமோ! என்று அங்கேயும் நிலவை வர்ணிக்கிற இடத்திலேகூட ஏழை வீட்டிலே வெண்சோறு பொங்குவதைத்தான் புரட்சிக் கவிஞரால் உவமைக்கு அழைக்க முடிகிறது.

வரதராசனுடைய உள்ளத்திலே சந்தேகம் இருந்தால் நான் கேட்கிறேன். இத்தகைய கவிஞரைப் பெற்ற நாங்கள் தொழிலாளர்களுக்கு விரோதமாக நடப்போமா? என்று கேட்கிறேன்.

அருமை நண்பர் அப்துல் லத்தீப் இங்கே தன்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். இங்கே வந்தவுடன் என்னிடத்திலே ஒரு கோரிக்கையைக்கூட வைத்தார். அந்தக் கோரிக்கை என்ன என்று சொல்லும் முன்பே நீங்கள் யாரும் கை தட்டி விடக்கூடாது. அதற்கு ஒரு மாற்று நான் சொல்வதாக இருக்கிறேன். அவர் சொன்னார், இந்தப் பூங்காவிற்கு மறைந்த கபாலமூர்த்தியின் பெயரை வைக்க வேண்டும் என்று இந்தத் தொகுதியிலே உள்ள மக்கள் விரும்புகிறார்கள் என்று சொன்னார். நான் சட்டமன்றத்திலே வரதராசன் பேசும் போதே சொல்லியிருக்கிறேன். இந்த மேதின நினைவுத்தூண் என்றென்றும் சென்னைக்கு வருகிற மக்களுக்கெல்லாம் அதைக் காண வேண்டும் என்ற எண்ணம் வரவேண்டுமேயானால், இந்தப் பூங்காவும் 'மேதினப் பூங்கா' என்ற பெயரோடு அமைந்தால்தான், தொழிலாளர் ஊர்வலம் மேதினப் பூங்காவிலிருந்து புறப்படும், தொழிலாளர் ஊர்வலம் மேதினப் பூங்காவிலிருந்து கிளம்பும், தொழிலாளர் கூட்டம் மேதினப் பூங்காவிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் முடிந்து அங்கே நடைபெறும் என்றெல்லாம் அமைந்தால்தான் இந்தத் தூண் இங்கே இருப்பதற்குப் பெருமை. நேப்பியர் நல்லவர் என்றாலும்கூட அவருடைய சிலை இந்தப் பூங்காவில் இருப்பது ஒன்றே அவருக்கு நாம் காட்டுகின்ற மரியாதை என்ற அளவில் 'இந்தப் பூங்காவுக்குள் சிலை இருக்கும். ஆனால் **இந்தப் பூங்கா 'மேதினப் பூங்கா' என்று இனிமேல் அழைக்கப்படும்**'. மாநகராட்சி மன்றம் அதற்கான பணிகளை நிறைவேற்றும். நான் அறிவித்திருக்கிறேன், மாநகராட்சி மன்றத்தின் சார்பாக அந்தப் பணி நிறைவேற்றப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

துணை மேயர் கபாலமூர்த்தி சாலை

''இந்தப் பூங்காவைச் சுற்றி இரண்டு சாலைகள் அருணாசலம் சாலை என்று ஒரு சாலை இருக்கிறது. இன்னொரு சாலை, கிழக்குக் கூவம்சாலை. அந்த கிழக்குக் கூவம் சாலையின் பெயர் மாற்றப்பட்டு, இந்தத் தொகுதி மக்கள் லத்தீப் மூலமாக கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்கப்பட்டு கிழக்குக் கூவம் சாலையின் பெயர் மாற்றப்பட்டு இனிமேல் அது 'கபாலமூர்த்தி சாலை' என்று அழைக்கப்படும்.

''இந்த கிழக்குக் கூவம் சாலை கபாலமூர்த்தி சாலை என்று அழைக்கப்பட மாநகராட்சி மன்றம் பணிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த நல்ல நாளில் உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை மே தின வாழ்த்தைக் கூறி- துணை மேயர் கபாலமூர்த்தி சாலை என்று இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு முன்னாள் துணை மேயர் கபாலமூர்த்தி சாலை என்ற போட வேண்டியிருக்கும். பெயர்கள் நீளமாக வந்தால் பிறகு இன்சியலில்தான் அந்தப் பெயர்கள் இருக்கும். சம்மதம் என்றால் வைத்துக் கொள்ளுங்கள். எனவே அவர்களுடைய விருப்பப்படியே '**துணை மேயர் கபாலமூர்த்தி சாலை**' என்று அந்தச் சாலைக்குப் பெயரிடப்படும் என்று கூறி மீண்டும் மே தின வாழ்த்துக்களைக் கூறி விடைபெறுகிறேன்.''

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்.

நினைவுச் சின்னம் குறித்த அறிக்கையை, பொதுப்பணித்துறைத் தலைமைப் பொறியாளர் திரு. ஏ.வி. சத்தியகாமன் அவர்கள் படித்தார். விழா முடிவில், பொதுப்பணித்துறைத் துணைத் தலைமைப் பொறியாளர் திரு. வி.சி. காந்தி நன்றி நவின்றார்.

-நமது செய்தியாளர்.

அம்பேத்கார் அந்தாதி

கவியரசர் இளந்தேவன்

அம்பேத்கார் நூற்றாண்டு

தேன்மொழியே கேளிதுதான் தீராதி தீரனெங்கள்
ஆண்டகையாம் அம்பேத்கார் நூற்றாண்டு-கூண்டுவிட்டுச்
சிங்கம் எழுந்துவந்த சீர்த்திமிகு நூற்றாண்டில்
எங்கும் அவர்புகழைக் கேள்!

கேளம்மா அம்பேத்கார் கீர்த்திதனை, நானூறு
நாளம்மா போதாது நானுரைக்க!-வாளம்மா
நுண்ணறிவு அந்த நுழைபுலத்து நாயகர்க்குக்
கண்ணிரண்டும் காந்தக் கடல்!

காந்தக் கடல்தான்! கண்ணெதிரே காணுகின்ற
மாந்தக் கடலிழுக்கும் மந்திரம்தான்!-சாந்த மகான்
நெற்றிப் பரப்பும் நிறைகருணைப் பார்வைகளும்
இற்றைக்கும் வாழும் எழில்!

எழிலுக்கும் எங்களுயிர் இந்தியத்தாய் வாழ்க்கைப்
பொழிலுக்கும் நீரான புண்ணியன்காண்!- தொழிலுக்குச்
சட்டம் படித்தமகன்; தாழ்வுற்ற மக்களுக்கு
முற்றும் அவனே முதல்!

முதல்நாள் அறைப்புகுந்து மூன்றாம்நாள் வந்த
உதயம் வரைக்கும் உறங்கா(து)- இதயமெலாம்
கல்விக்கே அர்ப்பணித்த கண்ணே! கலைமகளாம்
செல்விக்கு நீயன்றோ சேய்!

செய்வேண்டும் எம்மினத்தின் சீருக்குக் குரல்கொடுக்க
வாய்வேண்டும் என்பவர்க்கு வாய்த்தவனே!- கோவேந்தர்
காலமுதல் ஆட்டமிட்ட காட்டேரி யாம்சாதி
தோலுரியக் கண்டதுன் தொண்டு!

தொண்டுக்கோர் சாதி துரைத்தனத்துக் கோர்சாதி
பண்டை வழக்கமென்ற பல்லவிகள்-தொண்டையிலே
விக்கும் படிநீ விழித்தவுடன் சாதி, உயிர்
சுக்கும் படியாச்சு காண்!

காணும் திசையெல்லாம் கற்பி! உடன் ஒன்றுபடு
பூணும் உரிமைப் புரட்சிசெய்-மானுடத்தின்
அங்கம்நீ! மண்ணல்ல! ஆமையல்ல! என்றுரைத்த
தங்கம்நீ என்றன் தமிழ்!

தமிழுக்குச் சாவில்லை! தண்டமிழே, சாவுச்
சிமிழுக்குள் நீயடங்க மாட்டாய்!- உமிழுமுன்றன்
வாய்நீர் அமிலமையா! வாய்திறந்து நீபருகும்
தேநீரும் சூரியனின் சாறு!

சாறு பிழிந்தெடுத்த சக்கையென வந்தவர்க்கு
வீறு தரவந்த வித்தகனே!- ஏறுநிகர்
அம்பேத்கார் என்னும் அறிவுலகப் பெம்மானே!
தெம்பூட்டும் உன்வாய்ச்சொல் தேன்!

பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா

பாவேந்தர் பாரதிதாசன் நூற்றாண்டுத் தொடக்க விழா, திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்தில் மே 6,7 ஆகிய நாட்களில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மே 6-ஆம் நாள் மாலை 6.30 மணியளவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் விழா தொடங்கப் பெற்றது.

வரவேற்புரை ஆற்றிய பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. முத்துக் குமரன் அவர்கள் குறிப் பிட்டார்.

"பாவேந்தர் பாரதிதாசன் தன் வாழ் வைத் தமிழின் நலத்திற்காகவே அர்ப் பணித்துக் கொண்டவர். தமிழ் உயர்ந் தால்தான் தமிழன் உயர்வான் என்னும் உயர் கொள்கையை உரத்த குரலில் முழங்கியவர். தமிழ் மக்கள் அனைவரும் கல்வி வளம்பெற்று அறிவுடைய மக்களாய் உலக அரங்கில் தலைநிமிர்ந்து வாழ வேண்டும் என்று ஆசைப்பட்டவர். தமிழ் நாட்டில் தமிழ் மக்களாய்ப் பிறந்த யாவ ருக்கும் கல்வி நலம் கிட்ட வேண்டும் என்று ஆசைப்பட்டார்."

வாழ்த்துரை வழங்கிய தமிழ்ப் பல் கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் குறிப் பிட்டதாவது:

"20-ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக் கிய வளர்ச்சியில் பாவேந்தர் பாரதி தாசனின் பங்கு பெரிது. எளிய தமிழில், புரியும் தமிழில் கிளர்த்தும் மரபு பாவேந் தரிடம் சிறப்பாக உள்ளது.

"நிலவைப் பற்றி எத்தனையோ கவிஞர்கள் பாடியுள்ளனர். அவர்கள் எல்லாரிலும் பாவேந்தர் மாறுபட்ட முறையில் பாடுகிறார்.

"பசித்த மக்கள் சிறிது கூழ் தேடுங் கால் பானை ஆரக் கனத்திருந்த வெண் சோறு காணும் இன்பம், கவின் நிலவே உனைக் காணும் இன்பம் தானோ" என் கிறார்.

"பாவேந்தரின் நிலவுப் பாட்டு, அவ ருக்கு சமுதாயத்திடம் உள்ள நாட்டத்தை எடுத்துரைக்கிறது."

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய முத் தமிழ்க் காவலர் திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தெரிவித்ததாவது:

"தமிழ் எங்கள் உயிர் என்று சொல் லிய முதல் கவிஞர் பாரதிதாசன்தான். மற்றக்கவிஞர்கள் எல்லாரும் தமிழை இனிமையானது என்றெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள். பாவேந்தர் பாரதி தாசனின் உழைப்பு நமது வாழ்க்கைக்கு உரமாக அமைந்துள்ளது."

அடுத்து, வாழ்த்துரை வழங்கிய இலக் கியச் செல்வர் திரு குமரி அனந்தன் எம்.எல்.ஏ. அவர்கள் குறிப்பிட்டார்:

"பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள் மண் மேடல்ல; காலக் காற்றால் அசைக்க முடியாத மலைக்கோட்டை. இயற்றமிழில் கிளியாக, இசைத் தமிழில் குயிலாக, நாடகத் தமிழில் மயிலாக, நின்று முத் தமிழைத் தந்தவர் பாரதிதாசன்! எதையும் வளர்க்க வேண்டும் என்ற நேரத்தில் அவரது கவிதை தென்றலாக வீசுகிறது. எதையும் உடைக்க வேண்டும் என நினைக்கும் போது அவரது கவிதை புயலாக மாறுகிறது".

அடுத்து வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள், "பாரதிதாசன் அவர்களுக்கும் திருச்சிக்கும் நிறையத் தொடர்பு உண்டு; அதனால்தான் அவரது நூற்றாண்டு விழா திருச்சியில் தொடங்கப்பட்டிருக் கிறது" என்று தெரிவித்தார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்தது வருமாறு:

"ஒவ்வொரு பல்கலைக் கழகமும் ஒவ்வொரு கல்லூரியும், ஒவ்வொரு பள்ளியும் பாவேந்தர் விழாவை இந்த ஆண்டு முழுதும் கொண்டாட வேண்டும். மாணவர்களுக்கு உணர்வு ஊட்டும் வகை யில் விழா கொண்டாடப்பட வேண்டும்.

"பாரதி புதிய உணர்வை- புதிய சிந்தனையை ஊட்டினார். மக்களுக்காகப் பாடி - மக்கள் கவிஞர் என்ற தகுதியைப் பெற்றார்.

"அந்த பாரதியோடு தொடர்பு கொண் டவர் பாரதிதாசன்; 'பாரதி நடந்த பாதை தான் என் பாதை' என்று பாரதிதாசன் சொன்னார். ஆனால் பாரதி சென்ற பாதையைவிட நீண்ட தூரம் பயணம் செய்தார் பாரதிதாசன்.

"தொழிலாளர்களைக் குறித்துப் பாடும் போது தனது கையிலே கோடாரி பிடித்திருப்பதாகவே அவர் நினைத்துக் கொண்டு பாடுவார். இன்று நாட்டில்

வேழவேந்தன் | கோவை இளஞ்சேரன் | அரிமதி தென்னகன் | நாரா. நாச்சியப்பன்

அரசு மணிமேகலை — மு.பி. பாலசுப்பிரமணியம் — மா. செங்குட்டுவன் — புலமைப்பித்தன் — சாமி பழனியப்பன் — முருகுசுந்தரம்

பரவியுள்ள நம்பிக்கை- புது எழுச்சி பாரதிதாசன் தந்தவை.

''மனிதர்களுக்கு நடைமுறை உணர்வு, கற்பனை உணர்வு என இரு வகை உணர்வுகள் உண்டு. கற்பனை இல்லாத மனிதன் உயர்வதில்லை! கற்பனையிலேயே மூழ்கியவன் வாழ்வதில்லை. கற்பனையை நடைமுறை ஆக்குவதற்குப் பாடியவர் பாவேந்தர். அவரது கற்பனை, பயனற்ற கற்பனை அல்ல. மண்ணுலகக் கற்பனை, மண்ணுக்குள்ளே பயன்படப் பாடிய கவிஞர் பாவேநதர். அவர் ஒரு மறு மலர்ச்சிக் கவிஞர். பகுத்தறிவுக்காக வாதாடிய கவிஞர். சாதியைச் சாடிய கவிஞர். அவரது பாடல்கள் உணர்ச்சி ஊட்டும்; நம்மைத் தலைநிமிர்ந்து நிற்கச் செய்யும்;தன்மானத்தோடு வாழவைக்கும்; தமிழனாக உலவச் செய்யும்.''

அடுத்து, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பாவேந்தரைக் குறித்துப் பேருரை ஆற்றினார்கள் (உரை பிறிதோரிடத்தில் இடம் பெற்றுள்ளது.)

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை நவின்றார்.

இவ்விழாவில், பாவேந்தரின் திருவுருவச் சிலையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்ததுடன் சிலையை வடித்த சிற்பி திரு மோகன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

பாவேந்தர் வழியில் கவிதைகள் எழுதி வரும் கவிஞர்கள் 21 பேருக்கு பாவேந்தர் விருது வழங்கிய முதல்வர் அவர்கள், பாவேந்தரின் நூல்களை முதன் முதலில் வெளியிட்ட பதிப்பாளர் குஞ்சிதம் குருசாமி அவர்களுக்காக, அவரது மகள், திருமதி ரஷ்யா அவர்களுக்கும், முல்லைப்பதிப்பக உரிமையாளர் திரு முல்லை முத்தையா அவர்களுக்கும் விருதுகள் வழங்கினார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக - தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில், காலை 10.30 மணி அளவில் கருத்தரங்கம் தொடங்கியது.

வரவேற்புரை ஆற்றிய டாக்டர் மா. ராமலிங்கம் குறிப்பிட்டார்:

''இருட்டில் ஆழ்ந்து கிடந்த தமிழர்களைத் தட்டி எழுப்பிய பெருமை பாவேந்தருக்கு உண்டு. நாத்திகக் கவிஞரான அவர், புனிதம் என்னும் சொல்லை ஒரே ஒரு கவிதையில் தான் ஆண்டுள்ளார். பொதுவுடைமையைப் போற்றும் கவிதையில் அந்தச் சொல் இடம் பெற்றிருக்கிறது.''

தொடக்க உரையாற்றிய தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலர் திரு ஔவை நடராசன் அவர்கள் தெரிவித்ததாவது:

''கவிச் சக்கரவர்த்தி என விளங்கிய கம்பருக்கு ஒரு பரம்பரை அமையவில்லை; சேக்கிழாருக்கு என, பாட்டுப் பரம்பரை ஒன்று உருவாகவில்லை. ஆனால் பாவேந்தர் பாரதிதாசனுக்கு ஒரு பரம்பரை வாய்த்துள்ளது. அவரைப் போலவே கவிதைகளை உருவாக்கும் தலைமுறை உதயமாகியுள்ளது. ஈரமலர்களால் ஒரு வீர வாளைச் செய்ய முடியும் என மெய்ப்பித்தவர் பாரதிதாசன்''

டாக்டர் ரஷ்யா

முல்லை முத்தையா

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டார்:

''ஒரு கவிஞன் அல்லது ஒரு இலக்கியம் அவன் வாழ்ந்த காலத்தில் வாழும் சமுதாயச் சூழலில் தோன்றுகிறது. சூழலைப் படம் பிடித்துக் காட்டி அதிலிருந்து மக்களை மீட்க வேண்டும் என்ற உணர்வுடன் கவிஞன் பாடுகிறான். காலம் தான் ஒரு கவிஞனைக் கணிக்கிறது.

''அநியாயத்தோடு சமாதானம் செய்து போவது கூடாது என்பது பாவேந்தரின் கொள்கை. அவர் முக்கியமாக 3 நெறிகளை வலியுறுத்திக் கூறியுள்ளார். சாதிகளை அறவே அகற்றுவது, தமிழை வளர்ப்பது, பொதுவுடைமைக் கொள்கையைச் சேர்ப்பது இவைதான் அந்தக் குறிக்கோள்கள்''

அடுத்து உரையாற்றிய புலவர் திரு. ந. இராமநாதன் அவர்கள் தெரிவித்தார்:

''உள்ளுணர்வுகளுக்கும் பண்புகளுக்கும் உருவம் கொடுப்பதில் வல்லவர் பாரதிதாசன். சிறிய சிறிய விஷயத்தில் கூட அவர் கருத்துச் செலுத்தியுள்ளார். எந்தக் கவிஞரும் பாட விரும்பாத மிக எளிய உயிர்களான எலி, கோழி, நாய், சிட்டுக்குருவி போன்றவற்றையும், சாமானிய மக்கள் வரிசையில் இடம் பெறும் மாடுமேய்ப்பவன், பால்காரன், தபால்காரன், விறகு வெட்டி போன்றவர்களையும் கவிதையில் வடித்தவர் பாவேந்தர்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் சிலம்பொலி செல்லப்பன் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''நாட்டில் நடைபெற்ற கொடுமைகளைக் கண்டித்தவர்; பொதுவுடைமைக் கருத்துகளை எடுத்துச் சொன்னவர்; ஆழமாக, நுட்பமாக கருத்துக்களைச் சொல்லியவர் பாவேந்தர் பாரதிதாசன். அவரது கவிதையில் உள்ள சொற்கள் எளிமையாக இருக்கும். அதில் உள்ள பொருள்கள் ஆழமாக இருக்கும்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர். தா.வே. வீராசாமி அவர்கள் தெரிவித்தார் :



தி.நா. அறிவொளி — நிர்மலா சுரேஷ் — வெற்றியழகன் — கன்னல் — பொன்னடியான் — கவிதைப்பித்தன்

''பாரதிதாசனின் கவிதையில் ஆழ்ந்த புலமை உண்டு. அவரிடம் ஆற்றல் மிக்க பார்வை உண்டு. பாரதியிடமிருந்து அவர் பெற்ற தேசியப்பார்வை. பின்னர் சமுதாயப் பார்வையாக மாறியது. பாவேந்தரின் 'குடும்ப விளக்கு' தோன்றுவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் குடும்பத்திற்கெனத் தனிநூல் உருவானதே இல்லை''

அடுத்து உரையாற்றிய டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''இன்று அரசுகள் எல்லாம் வலியுறுத்தி வருகின்ற ''குடும்பக் கட்டுப்பாடு''குறித்து 1929-ஆம் ஆண்டிலேயே கவிதை எழுதியவர் பாரதிதாசன். தொலைநோக்கு உணர்வு உடையவர் அவர். தமிழுக்கு எதிராக — பகையாக எவர் இருந்தாலும் அவர்களை எதிர்க்கும் எண்ணம் பாவேந்தரிடம் நிறைந்திருந்தது.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் திருமதி அரசு மணிமேகலை அவர்கள் குறிப்பிட்டார்:

''எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'' என்று பாடிய பாரதிதாசன்- அடுத்த வரியாக ''எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே'' என்று தீர்க்கதரிசன உணர்வுடன் பாடினார்''.

அடுத்து உரையாற்றிய டாக்டர் மா. செல்வராசன் தெரிவித்ததாவது:

''புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பெண் இனத்திடம் மிகுந்த பரிவு காட்டியவர்; பெண்மையைப் போற்றியவர். காவியத்திலும் சரி, தனிக் கவிதைகளிலும் சரி. ஆண்களை விடப் பெண்கள் அறிவாளிகள் என்று தெரிவித்துள்ளார்.''

அடுத்து உரையாற்றிய டாக்டர் சோ. சத்தியசீலன் குறிப்பிட்டார்:

''பாவேந்தர், தமிழ்க் கல்வியை வலியுறுத்தினார். தமிழ்க்கல்வி என்பது தமிழைப் பயில்வது மட்டுமன்று, தமிழ் வழி பயில்வதும் ஆகும். பழைய சுமைகளைத் தூக்கி எறிய நமக்குத் துணை புரிந்த சமுதாய வழிகாட்டியாக விளங்கியவர் புரட்சிக் கவிஞர்.''

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் முடிவுரைக்குப் பின்னர் கருத்தரங்க நிகழ்ச்சி நிறைவெய்தியது.

பிற்பகல் 4.30 மணி அளவில், புதுவை மாநிலக் கல்வியமைச்சர் மாண்புமிகு கவிஞர் நா. மணிமாறன் அவர்கள் தலைமையில் கவி அரங்கம் தொடங்கியது.

கவி அரங்கத்தைத் தொடங்கிவைத்த, பாவேந்தர் மகனார் கவிஞர் மன்னர் மன்னன் தெரிவித்ததாவது:

''கருத்துச் செறிவின் காரணமாகத் தான் பாவேந்தரின் கவிதைகளுக்கு மேன்மை ஏற்பட்டது. பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பாடல் வரிகளில் மனதைப் பறிகொடுத்தால் மட்டும் போதாது. அவரது கருத்துகளுக்கு நாமெல்லாம் செயல் வடிவம் தரவேண்டும்.

''அவர் புலவராக மட்டுமின்றிப் புரவலராகவும் வாழ்ந்துவந்தார். பல்ரைப் புரந்தார்.

''இந்தச் சமயத்தில் அரசுக்கு எனது வேண்டுகோள் வருமாறு:

''புதுடெல்லியில் தமிழ்நாடு அரசு சார்பில் சிலை ஒன்று நிறுவப்பட வேண்டும்.

''சென்னையில் அவர் வசித்துவந்த ராமன் தெரு, 10-ஆம் எண் உள்ள இல்லத்தை அரசு, பாவலர்கள் பாடும் வீடாக- குயில் கூடாக மாற்ற வேண்டும்.

''ஒரு மாவட்டத்தில் நூறு சிற்றூர்களையாவது அரசு தத்து எடுத்துக் கொண்டு அவ்வூரில் உள்ள மக்களை நூற்றுக்கு நூறு எழுத்தறிவு உள்ளவர்களாக ஆக்க வேண்டும்.''

வாழ்த்துரை கூறிய கவிஞர் சுரதா அவர்கள், ''ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும் பாட்டுப் பலகை அமைத்து அதில் பாவேந்தரின் பாடலை இடம் பெறச் செய்ய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

பாவேந்தர் கவியாங்கில், கவிஞர்கள் பொன்னடியான், பொன்னிவளவன், ஈரோடு தமிழன்பன், வைரமுத்து, சிற்பி பாலசுப்பிரமணியன், நிர்மலா சுரேஷ் ஆகியோர் பங்கேற்றுப் பாவேந்தருக்குக் கவிமாலை புனைந்தனர்.

பின்னர், பாரதிதாசன் பல்கலைக் கழக மாணவ, மாணவியர் பங்கேற்ற கலை நிகழ்ச்சியுடன் பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்கவிழா நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

நிகழ்ச்சித் தொகுப்பு

தமிழ்ப்பித்தன்

குடியரசு — ஈரோடு தமிழன்பன் — பொன்மணி — புதுமைவாணன் — அருள்மொழி

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/P



தமிழரசு

1-6-1990 ரூ. 1

பார்த்தோம் படித்தோம்

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்ட அறிக்கையை விவரமாக வெளியிட்டமைக்கு மிக்க நன்றி.

—கே.எம். ஷம்மி குமார்
வேலூர்.

தமிழக அரசின் புதிய திட்டங்களை வரவேற்கிறேன்.

—க. சிற்றம்பலம்,
ஒட்டப்பிடாரம்.

நிதிநிலை அறிக்கை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

—ஏ. கந்தசுவாமி
திருப்பூர்

நிதி நிலை அறிக்கையை முழுமையாக வெளியிட்டமைக்கு மிக்க நன்றி.

—ப.முருகேசபாண்டியன்
கரப்பாடி

'தானிய சேமிப்பு' கட்டுரை பயனுள்ளதாக இருந்தது.

—எம். சேகர்
தோட்ட நாவல்

'நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்வோம்' என்னும் முதல்வர் கலைஞர் அவர்களின் உரையும், டாக்டர் மு.வ.வின் நிறைந்த நெஞ்சமும் வண்ணக் களஞ்சியமாக விளங்கியது.

—சாமிதாஸ்
கீழையூர்

(டாக்டர் மு.வ.வின் இலக்கிய விருந்து கட்டுரையைப் பாராட்டி எழுதியிருப்பவர்கள்: சுவீட் சிக்ஸ் டீன், பூண்டி-2; எஸ்.பிரபாகரன், மேல் பாலானந்தல்; இரா.குமார், தோலி; கோ. நேரு, அரவலம்; மரிய பெரிசிஸ், பாப்பாக்குடி; துரை. வேணுகோபால், பரங்கிப்பேட்டை)

சுவையான செய்திகளைத் தாங்கி வெளிவரும் தமிழரசுவின் பணி தொடரட்டும்!

—க. குமரேசன்
திருவாரூர்.

திருத்தம்

16.4.1990 தமிழரசு இதழ் 7-ஆம் பக்கத்தில் உள்ள முதற் படத்தின் அடிக்குறிப்பில் (சென்னை 1944) என்று இருப்பதை (பர்மா 1954) என்று திருத்திப் படிக்கவும்.

மாணவர் பக்கத்தில் அறிவுச் சுடர்' பகுதி மிகவும் சுவையாக இருந்தது.

—கு. இளங்கோ,
குமுக்கோட்டை

'நன்மையே செய்வோம்; நன்மையே பெறுவோம்' என்னும் கவிஞர் தமிழ்முடியின் கவிதை உள்ளத்தைத் தொடுகிறது.

—அ.வல்லநாட்டான்
கண்டவராயன்பட்டி

16.4.90 இதழ், அண்ணல் அம்பேத்கார் நூற்றாண்டுச் சிறப்பிதழாக மலர்ந்து வந்தது. மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. 'குழந்தைகளுக்கான ஒரு குட்டிக்காடு' கட்டுரையும் படமும் பாராட்டும்படியாக இருந்தது.

—மாயன்
சென்னை-106

மாணவர் பக்கத்தைப் பார்க்கும் போது, மழை மேகம் கண்ட மயில் போல் மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

—க.கோபி,
சென்னை-109

TNPSC

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தமிழ்நாடு தொழிற்சாலைப்பணியில் 1989-90-ஆம் ஆண்டு உதவி தொழிற்சாலைகள் ஆய்வாளர் பதவிக்கு நியமனம் செய்யும் பொருட்டு தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் பதிவு எண்கள் அடங்கிய பட்டியல்.

82	94	103	105	181
232	277	311	332	340
355	392	407	433	458
461	471	483	487	501
502	513	553	563	

நான்கு விண்ணப்பதாரர்களின் தெரிவு முடிவுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

டிஐபிஆர்/1063/எம்எஸ்/90/அக்கார்ட்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

அதி நவீன பாலியெஸ்டர் வகைகள்

எங்கள் மனதைக் கவர்ந்தவை மலர்கள்.
அவைகளின் அற்புத வண்ண ஜாலங்களை
உங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் அளிக்கிறது,
மிக நவீனமாக அழகு மிளிரும்
பாலியெஸ்டர் புடவை வகைகளில்!

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1768/MSPR/LTA



மேதகு தமிழக ஆளுநராகப் பதவி வகித்து வந்த டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தேநீர் விருந்தளித்து நினைவுப் பரிசு வழங்கினார். (23.5.1990)

எளியோர்க்கு உதவிட நிதி அளிப்பீர்

மாண்புமிகு முதல்வர் வேண்டுகோள்

என்னுடைய பிறந்தநாளை ஒட்டி நடைபெறுகின்ற விழாக்கள் ஏழை, எளிய மக்களுக்கு உதவி செய்கின்ற வகையில் அமைந்திட வேண்டும். இதை யொட்டி நலிந்தோருக்கு உதவி செய் கின்ற 'முதலமைச்சர் நிவாரண நிதிக்கு நிதி வழங்கிடப் பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இதழில்...

தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர்
—தந்தை பெரியார் ... 2

பல திறன் படைத்த கலைஞர்
—பேரறிஞர் அண்ணா ... 3

படையினராக எழுமின்
—தவத்திரு குன்றக்குடி அடிகளார் 5

மகளிர் உரிமை ஆட்சி மாண்பாளர்
— கி. வீரமணி ... 8

நான் காணுகின்ற ஓர் அரசியல் அதிசயம்
-திரு. செங்கல்வராயன் ... 9

சித்திரைத் திருநாள்
—மாண்புமிகு முதல்வர் ... 10

தமிழ் பெற்ற தலைமை
வித்துவான் ச. தண்டபாணி தேசிகர் ... 15

எங்கள் ஊர் திருக்குவளை
—மாண்புமிகு முதல்வர் கலைஞர் ... 42

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

வைகாசித் திங்கள் - 18

மலர்:20 1-6-1990 இதழ்:23

முத்தமிழ் அறிஞர்

தமிழகத்தின் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் கருணா[illegible] அவர்கள் அறிவாற்றல் நிறைந்தவர்; எழுத்துலக அறிஞர்; அ[illegible] கவிதைகள் எழுதியிருக்கிறார். நாடகங்கள் தீட்டியிருக்கிற[illegible] அவருடைய உரையாடல்களும், சொல்லாட்சித் திறனும், எ[illegible] ணற்ற மக்களுக்கு இனிய - புதிய கருத்துக்களை எடுத்[illegible] சொல்லும் அரிய கருவிகளாக உள்ளன.

உரைநடை, கவிதை, நுண்ணிய கலைகள், நாடகத்து[illegible] அனைத்திலும் சிறந்து விளங்கிடும் கலைஞர் மு. கருணாநிதி[illegible] 'முத்தமிழ் அறிஞர்' என்று பட்டம் சூட்டி இனி அழைக்கலா[illegible]

—டாக்டர் சங்கர் தயாள் சர்[illegible]
மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவ[illegible]

தொலைநோக்கு உணர்வு கொண்டவர்

நாட்டின் மிக முன்னேறிய மாநிலங்களில் ஒன்று என்று[illegible] அரசியலிலும், நிர்வாகத்திலும் நிலைத்த தன்மை உடைய[illegible] என்றும் தமிழ்நாடு பெயர் பெற்றுள்ளது. திறமைமிக்க, ஒப்பற்[illegible] நிர்வாகிகள் பலரை முதலமைச்சர்களாகப் பெற்ற பெரும[illegible] உடையது இந்த மாநிலம்.

தற்போதைய முதலமைச்சர் டாக்டர் கருணாநிதி அவர்க[illegible] தொலைநோக்கு, ஆற்றல், நிர்வாகத்திறன், ஏழை எளி[illegible] மக்களின் நலனில் காட்டும் அக்கறை ஆகியவற்றுக்குப் பெய[illegible] பெற்றவர்.

இம்மாநிலத்தின் வளர்ச்சிக்கு அவருடன் சேர்ந்து உழைக்கு[illegible] வாய்ப்பினை நான் எதிர் பார்த்துள்ளேன்!

—மேதகு ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் [illegible]
தொலைக்காட்சிக்கு அளித்த செய்தியி[illegible]
([illegible])

தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர்

– தந்தை பெரியார்

கலைஞர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிற அரிய பொக்கிஷமாகும். மற்ற மாநிலங்களை விட நமது தமிழகத்தின் பெருமை போற்றப்படுவதற்குக் காரணம் நமது முதல்வரின் தனித்திறமையே ஆகும்.

•

மனிதர்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதாவது- நம்பிக்கையாளர்கள், பகுத்தறிவாளர்கள் என்பதாகும். முன்னோர்கள் சொன்னது- பழைய காலம் முதல் இருந்து வருவது- என்பதற்காக எதையும் சிந்திக்காமல் கடவுள் - மதம் - ஜாதி - சாஸ்திரம் - என்கிற பெயரால், பல மடமைகளைச் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்பவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆவார்கள்.

அறிவைக் கொண்டு ஆராய்ந்து, அறிவுக்கு ஏற்றதை ஏற்றுக்கொண்டு, மற்றதைத் தள்ளிவிடக் கூடியவர்கள் - பகுத்தறிவாளர்கள் ஆவார்கள்.

இதில் நம்நாட்டில் நம்பிக்கையாளர்கள் என்பவர்கள் தான் அதிகம். பகுத்தறிவாளர்கள் இருப்பது மிகமிகக்குறைவே ஆகும்.

இந்தியாவில் எந்த நாடு அமைதியோடிருக்கிறது?

தி.மு.கழகத்திற்குப் பெரும் வெற்றி என்றால், அது கலைஞர் அவர்கள் தனது சாதுரியத் திறமையால் பெற்றதாகும்.

பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்யோசனையுடனும், அவர் நடந்து வருவதன் மூலம் தமிழர்களுக்குப் புதுவாழ்வு தருபவர் - நமது முதல்வர்.

பல்லாண்டு வாழ்ந்து, அவர் பணி வெற்றியடைய வேண்டும் என ஆசைப்படுகிறேன்.

(மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 48-வது பிறந்தநாள் விழா மலரிலிருந்து)

பலதிறன் படைத்த கலைஞர்

பேரறிஞர் அண்ணா

தம்பி கருணாநிதியினுடைய ஆற்றல் பற்றியும், ஆற்றல் காரணமாகப் பெற்ற வெற்றிகள் பற்றியும், பெற்ற வெற்றிகள் எல்லாம் நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன்பட்டன என்பது பற்றியும், அந்த ஆற்றலும் வெற்றியும் நாட்டுக்கு இனியும் நல்ல முறையில் பயன்படும் என்பது பற்றியும், நண்பர்கள் பலர் எடுத்துச் சொல்லிக் கேட்பதில் எனக்கு மிகுந்த பெருமிதம்.

வண்ணமான எண்ணத்தை மிகச் சிறு பருவத்தில் பெற்றவர் கருணாநிதி. அவர், இளமைப் பருவம் முதல், நாட்டு மக்களுக்கு எதையாவது சொல்ல வேண்டும் என்ற ஆர்வத்தோடு சில எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு, கையேட்டுப் பிரதிகள் மூலமாகச் சொல்லி - அதற்குப் பிறகு மேடையிலே பேசுவதன் மூலமாகச் சொல்லி - கட்டுரை வடிவத்தில் சொல்லி - திரைப்படத்துறை மூலம் சொல்லி - இன்றைய தினம் அமைச்சராக இருந்து, அந்த எண்ணங்களுக்கு எல்லாம் அமைச்சர் என்ற முறையில் எந்த அளவுக்கு வடிவம் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு வடிவம் கொடுத்து வருவதை, நாமெல்லோரும் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறோம்.

கலைத் துறையில் ஈடுபாடு கொண்ட ஒருவர், பொறுப்புகளை நிறைவேற்றுவாரா என்ற ஐயப்பாடு இருந்தது.

ஒரு நல்ல கலைஞர் - சிறந்த கலைஞர் என்றால், அவர் கலையில் எந்த அளவு திறமை காட்டுகிறாரோ, அந்த அளவு திறமை அவர் எடுத்துக் கொண்ட பொறுப்பு ஒவ்வொன்றிலும் காட்டுவார் என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

ஒரு நாளைக்குக் கருணாநிதி எத்தனை மணி நேரம் தூங்குகிறார் என்பதை யாராவது அவருக்குத் தெரியாமல் பார்த்தால்தான் அவர் இத்தகைய திறமையைப் பெற்றதன் அடிப்படை - உழைப்பு என்பதை உணருவார்கள்.

உழைக்காமல் இந்தத் திறமை வந்துவிடவில்லை.

உழைக்காமல் ஒரு திறமை வராது.

சிலப்பதிகாரத்தைக் கருணாநிதி இன்றைய நடைக்கு ஏற்ற அளவில் ஆக்கித் தந்திருக்கிறார் என்றால் - அதற்கு நூறு முறையாவது முறைப்படி படித்திருப்பார்.

அப்படிப்பட்ட கடுமையான உழைப்புக்குக் காரணம், நாம் பெற்றிருப்பது நாட்டுக்கு அளிப்பதற்குப் போதாது என்கிற அடக்க உணர்ச்சிதான்.

''எனக்கு எல்லாம் தெரியும்'' - என்று ஒருவர் எண்ணியவுடன் அவருடைய வரலாற்றை எழுதி, மலிவுப் பதிப்பு வெளியிட்டு, இரண்டாம் பதிப்பு வராது என்று உலகுக்கு அறிவித்து விடலாம்.

என்னை முழுவதும் அறிந்தவர்கள் தான் கழகத்தில் இருக்கிறார்கள். அவர்களிலே முற்றிலும் அறிந்தவர் என்று சொல்லத் தக்கவர்களிலே கருணாநிதிக்கு மிகச் சிறந்த இடம் உண்டு.

அவர் மூலமாக நானும் நாடும் நிரம்ப எதிர்பார்த்திருக்கிறோம். இப்போது செய்திருக்கின்ற காரியங்களை விட, பல மடங்கு அதிகமான காரியங்கள் அவருடைய திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டி இருக்கின்றன.

(ஆதாரம். ''நம் நாடு'' நாளிதழ், ஜூன் 4, 1967)

இவருக்கும் தமிழென்று பேர்

அறுபத் தாறு ஆண்டுகள் முன்னே
அக்கினிக் குஞ்சாய்ப் பிறந்தமகன்
இருபத் தாறு வயதைப் போலே
இன்னும் செயலில் இளையமகன்

வீழ்த்தப் பட்டோர் அணியி லிருந்து
வேலாய் வேலாய் எழும்பியவன்
தாழ்த்தப் பட்டோர் கிடங்கி லிருந்து
தணலின் நதியாய்க் கிளம்பியவன்

நெருப்பைச் சுமந்து நெருஞ்சியில் நடந்து
நீண்ட புகழை ஈட்டியவன்
உறுப்பை அரிந்தே உயிர்பிழிந் தாலும்
உறுதியில் குலையா ஈட்டி அவன்

எத்தனை ரணங்கள் எத்தனை தழும்புகள்
இளைத்த தோள்களில் தாங்கியவன்
அத்தனை துயரையும் சிரிப்பில் மறைக்கும்
ஆண்மை மிகுஇடி தாங்கி அவன்





பேனாப் பிடித்துப் பேனாப் பிடித்துப்
பெரிய தடங்கள் விரல்களிலே
தானாய் நடந்து தமிழக மெங்கும்
தடம்பதித் தானே வீதியிலே

அமிர்தத் தமிழை அவன்வாய் சொன்னால்
அடடா! அடடா! நாதசுரம்
தமிழைப் பொழியும் பொழுதில் சபையில்
சங்கீ தத்தின் ஏழுசுரம்

இருபத் தொன்பதே இளைய வயதில்
இரும்பே தலையணை என்றமகன்
இரும்பும் கூடக் கோடையில் இளகும்
இவனோ நிலைத்து நின்றமகன்

மானமும் வீரமும் கொண்ட தலைவனை
மகிழ்ந்து மகிழ்ந்தே ஏத்துகிறேன்!
ராணுவத் தமிழைத் தந்த ஆசானை
மாணவன் வணங்கி வாழ்த்துகிறேன்!

கவியரசு வைரமுத்து

தமிழ்நாட்டின் புதிய ஆளுநர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களின் பதவி ஏற்புவிழா 24-5-1990 மாலை 4.45 மணியளவில் சென்னையில், ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்றது. பதவி ஏற்பு விழாவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும் , சட்டப்பேரவைத் தலைவர் திரு. தமிழ்க்குடிமகன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக, திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களும், அவரது துணைவியார் திருமதி. சுர்ஜித் கவுரும் ஊர்வலமாக அழைத்து வரப் பட்டனர். முதல்வர் கலைஞர் அவர்களும், அரசு தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அவர்களும் அரசு மரியாதையுடன் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்களை மண்டபத்திற்குள் அழைத்துச் சென்று அமரவைத்தனர்.

தமிழக ஆளுநராக திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்களை நியமித்த குடியரசுத் தலைவர் அவர்களின் ஆணையைத் தலைமைச் செயலர் திரு. எம்.எம். இராஜேந்திரன் இ.ஆ.ப. அவர்கள் முதலில் படித்தார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. ஏ. எஸ். ஆனந்த் அவர்கள், பதவிப் பிரமாணம் செய்து வைக்க திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள், மேதகு தமிழக ஆளுநராகப் பதவி ஏற்றுக் கொண்டார்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டப் பேரவை உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் மேதகு ஆளுநர் அவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டனர்.

பிறந்த நாள்	:	21.10.1925
பிறந்த ஊர்	:	இப்போது அரியானா மாநிலத்தில் உள்ள அடேலிபெக்பூர்
தந்தையார் பெயர்	:	சர்தார் நர்சிங் (நாபா மாநிலத்தில் நீதித் துறை அலுவலர்)
கல்வி	:	லக்னோ பல்கலைக்கழகத்தில் 1946-இல் சட்டப் படிப்பை முடித்தார்.
தொழில்	:	1951-இல் அரசு வழக்குரைஞராக . நியமிக்கப்பட்டார்.
		1953-இல் அரசு வழக்குரைஞர் பதவியிலிருந்து விலகினார்.

பொது வாழ்வு

1967-இல் பஞ்சாப் மாநில சட்டப்பேரவை உறுப்பினரானார்; தொடர்ந்து பர்னாலா தொகுதிப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1969-இல் அந்த மாநிலக்கல்வி அமைச்சரானார். அவசர நிலை அமலாக்கப்பட்டதை எதிர்த்துப் போராடினார்.

1977-இல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காங்கிரசல்லாத முதல் வேளாண்மைத்துறை அமைச்சராகப் பொறுப் பேற்றார்.

மாநில உரிமைகளைப் பேணுவதிலும், இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பதிலும், பலவேறு சமூகங்களிடையே ஒற்றுமை நிலவச் செய்வதிலும் முன்னோடி வீரராகச் செயல்பட்டார். அவரது கொள்கை உறுதி; பஞ்சாப் தலைவர் சாந்த் ஹர்ச்சந்த் சிங்ஜி லோங்கோவால் அவர்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியது. அவருடன் சேர்ந்து பஞ்சாப் பிரச்னை தீர 1985 ஜூலையில் பஞ்சாப் ஒப்பந்தம் உருவாகத் துணை செய்தார்.

அவர் சார்ந்திருந்த சிரோமணி அகாலி தளத்தை மக்கள் தேர்தலில் வெற்றிபெறச் செய்தனர். 1985 செப்டம்பர் 29-இல் பஞ்சாப் முதலமைச்சராகப் பொறுப்பேற்று அகாலிதள அரசை நிறுவினார்:

கலையில் - குறிப்பாக ஓவியத்திலும், சிற்பக் கலையிலும் சிறந்த ஆர்வம் கொண்டவர். மனிதாபிமான அடிப்படையில் பிரச்சினைகளை அணுகும் இயல்பும் அடக்கமான பண்பும் பெற்றவர்.



படையினராக எழுமின்

தண்ணார் தமிழளிக் கின்ற தண்டமிழ்
நாட்டுக் கலைஞர்; நம்முத லமைச்சர்;
வள்ளுவத் திற்கு வான்புகழ் சேர்க்கும்
எழில்மிகு தலைவர்; இராசரா சனுக்குப்
புகழினைச் சேர்க்கும் தகைமிகு தோன்றல்;
நலம்பல மகளிர் எய்திட நல்லறம்
பலப்பல இயற்றிடும் பண்புசால் முதல்வர்;
இல்லை யெனும்சொல் இல்லாமை யாகவும்
எல்லாரும் உடையும் உணவும் பெற்று
நல்லின்ப வாழ்வு நாளும்எய் திடவும்
எண்ணி எண்ணி ஏணியைப் போலே
பலர்வாழ் வுயர்ந்திடப் பணிக ளாற்றிடும்
ஏந்தல்! கங்கையிற் புனித மாகிய
காவிரி மீட்கும் போர்க்க ளத்தினில்
நிற்கும் தலைவர்! நற்றமிழ் நாட்டுப்
பெரியீர் அறிமின்! அறிமின்! அறிந்து
பூம்புகார்ப் புகழ்ஒளி நாயகர் கலைஞர்தம்
கொற்றம் சிறக்கவும் அவர்தம் கொள்கைகள்
முற்றவும் அவர்கண் டனைய தியற்றும்
படையின ராகப் பாங்குடன் எழுமினோ!

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

மகளிர் உரிமை ஆட்சி மாண்பாளர்!

-கி. வீரமணி

நமது டாக்டர் கலைஞர் தலைமையில் அமைந்துள்ள ஆட்சி என்பது சம்பிரதாய ரீதியான ஒரு ஆட்சி அல்ல! வெறும் அரசியல் கட்சி ஆட்சிப் பீடத்தில் இருக்கிறது என்று சாமானியமாக இதனைக் கணித்துவிடக் கூடாது.

அடுத்த தேர்தலைப் பற்றிக் கவலைப்படும் ஒரு ஆட்சி என்கின்ற மலிவான கணிப்பிலும் இதனை எடை போடக்கூடாது.

இதற்கென்று ஒரு பின்னணி உண்டு. இதனை நீதிக்கட்சிப் பொன் விழா மலரில் அறிஞர் அண்ணா அவர்கள் மிக அழகாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடத்திய போது தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு ''மகளிர் உரிமை ஆட்சி மாண்பாளர்'' என்ற பட்டத்தையும், அதனை நினைவூட்டும் நினைவுப் பரிசையும் அளித்தோம் என்றால், அது அழகுக்காக அல்ல; கலைஞருக்கு ஒரு பட்டம் கொடுக்க வேண்டும் என்கிற ஆசையினாலும் அல்ல!

அவர் ஆட்சிக் காலத்தில் பெண்களின் மறுமலர்ச்சிக்காக ஆற்றிய அருஞ்சாதனைகளைப் பட்டியல் போட்டுப் பார்த்தால் தான் அப்பட்டத்திற்கான ஆழமும் அருமையும் புரியும்.

மகளிர் உரிமைக்காகத் திட்டங்கள் தீட்ட வேண்டும்; அவர்களின் முன் கல்வெட்டுகள் என்பதை எவரும் மறுக்க முடியாது.

26.11.1928-ல் தந்தை பெரியார் அவர்களின் தலைமையில் நடைபெற்ற தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

◦ குடும்பச் சொத்தில் பெண்களுக்கு ஆண்களைப் போலவே சமஉரிமை அளிக்கப்பட வேண்டுமென்று இம் மகாநாடு தீர்மானிக்கிறது.

◦ புருஷன் மரணமடைந்துவிட்டால் அவன் சொத்து முழுமையும் பெண் சாதிக்குச் சர்வ சுதந்திரமாய் அனுபவித்துக் கொள்ள உரிமை அளிக்கப்பட வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

"The DMK of which I happen to be the General Secretary, has been the result of the historical evolution set in motion by the Justice Party. The leadership of the justice party today has nothing but goodwill to the D.M.K. Ministry" என்று குறிப்பிட்டார்கள்.

சமுதாயப் பார்வை என்பது தான் இந்த ஆட்சிக்குரிய தனி முத்திரை! பகுத்தறிவுக் கண்ணோட்டம் என்பது தான் இதனுடைய அணுகுமுறை. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டால் தான் இந்த ஆட்சிக்கும் மற்ற கட்சி ஆட்சிகளுக்கும் உள்ள வேறுபாட்டை வினயமாகப் புரிந்து கொள்ள முடியும்.

கடந்த 29.4.90 அன்று புரட்சிக் கவிஞரின் நூற்றாண்டு விழாவை, திராவிடர் கழகமும், பகுத்தறிவாளர் கழக அமைப்புகளும் ஒருங்கிணைந்து னேற்றத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்கிற எண்ணம் அவருக்கு எப்படி ஏற்பட்டது?

அங்கே தான் தந்தை பெரியார் வருகிறார்; அறிஞர் அண்ணா வருகிறார்; புரட்சிக் கவிஞர் வருகிறார்; தன்மான இயக்கம் வருகிறது.

1928-ஆம் ஆண்டு முதல், தன்மான இயக்க மாநாடுகளில் தந்தை பெரியார் தெரிவித்த கருத்துக்கள் - நிறைவேற்றிய தீர்மானங்களையும், கலைஞர் அவர்களின் ஆட்சித் திட்டங்களையும் ஒரு நேர்க் கோட்டில் காண முடிகிறது.

ஆட்சி மாறலாம்; முதல்வர்களும் மாறலாம். ஆனால் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஆக்கப்பட்ட சட்டங்களும், திட்டங்களும் காலத்தை வென்று நிற்கும் சரித்திரக் (இத்தகைய சட்டத்தைக் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிவிட்டார்கள்).

◦ எல்லாப் பொதுப்பள்ளிக் கூடங்களிலும் ஆண், பெண் என்கின்ற வித்தியாசமில்லாமலும் உயர்வு, தாழ்வு என்கின்ற வித்தியாசமில்லாமலும் கட்டாயப் படிப்பு கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(ஆண்கள் கல்லூரிகளிலும் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்கிற தமிழக அரசு ஆணை சில நாட்களுக்கு முன் வெளி வந்ததை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளலாம்).

1929 செங்கற்பட்டு முதல் சுயமரியாதை மாநாட்டுத் தீர்மானம்:

மற்ற வகுப்புச் சிறுவர், சிறுமிகளின் அந்தஸ்தைப் பெறும் வரைக்கும் தீண்டப்படாதார் என்று சொல்லப்படுபவர்களின் சிறுவர், சிறுமி

41-ஆம் பக்கம் பார்க்க

நான் காணுகின்ற ஓர் அரசியல் அதிசயம்!

என்னுடைய அருமை அன்புள்ள தோழர் பேரறிஞர் அண்ணாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. கல்லூரிக் காலத்தில் தோன்றின தோழமை; நாங்கள் பிறகு வெவ்வேறு அரசியல் தோட்டத்தில் பூத்து, காய்த்து, கனிந்து பழமாக நின்று விட்டோம். ஆனால் எங்களுடைய பரஸ்பர அன்பு, மரியாதை, பாசம்-அரசியல் கட்சிக்கு அப்பாற்பட்டது. நான் கற்ற அரசியல், வளர்ந்து வந்த பாரம்பரியம், காந்தீயப் பண்பு இவற்றால்-மாற்றுக் கட்சித் தோழர்களையும் தலைவர்களையும் மதிப்பது, பாராட்டுகள் தெரிவிப்பது, அன்புடன் பழகும் இயற்கை நிலையாகி விட்டது. நம்முடைய இந்திய ஜனநாயகத்தின் பூங்காவில் ஒவ்வொரு அரசியல் கட்சியையும் ஒரு வண்ணமுள்ள பூச்செடியாகத்தான் என்னால் பார்த்துப் பூரிக்க முடிகின்றது. அம்முறையில் தான் பேரறிஞர் அண்ணாவுடன் கடைசி வரையில் நான் பழகிக் கொண்டு வந்தேன்.

அண்ணாவின் வாரிசு

அவ்வரிசையில் அவருடைய வாரிசான டாக்டர் கலைஞரை- தமிழக முதல்வரைப் போற்றிப் புகழ்ந்து, பாராட்ட மிகவும் பெருமை அடைகிறேன். மற்ற அரசியல்வாதிகளை விட இப்படி மாற்றுக் கட்சித் தலைவர்களிடத்தில் தோழமை கொள்வது, என்னுடைய நீண்ட நெடுங்கால அரசியல் வாழ்வில் கிடைத்த பெரும் பாக்கியம்.

என்னுடைய அரசியல் கருத்திற்கும், பொருளாதாரத் தத்துவத்திற்கும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசியல் கருத்திற்கும், பொருளாதாரத் தத்துவத்திற்கும் மிக்க இடைவெளியுண்டு. ஆனால் எவ்வளவிற்கு எவ்வளவு வித்தியாசங்கள் இருந்தபோதிலும், எங்களிடையே நிலையான அன்பும், பாசமும், மரியாதையும் மங்காமல் மறையாமல் நீடித்து நிற்கின்றன என்பது எனக்குத்தான் பெருமை.

அநேகமாக அவருடைய பிறந்த நாள் பாராட்டுக் கூட்டத்தில் பேச எனக்கு அழைப்பு வரும், நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு பேசுவேன். ஒரு கூட்டத்தில் பேசும் பொழுது எப்படித் துவக்குவது என்று எனக்குக் கொஞ்சம் தயக்கம் ஏற்பட்டது. அப்போது ''நான் உடன் பிறப்பு என்று இல்லையென்றால், உறவினர் என்று பேசுகிறேன்'' என்று ஆரம்பித்தேன். அரசியல் வேறுபாடு ஒன்று இருக்க, நல்ல உறவு இருப்பது அரசியல் ஆரோக்கியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டு.

தமிழக முதல்வர் அவர்கள் தான் ஏற்றுக்கொண்டு தன் குறிக்கோளாக வைத்துக்கொண்டு, தான் சார்ந்தும் சேர்ந்தும் இருக்கின்ற கழகத்திலிருந்து பல்லாண்டுகளாக நழுவாமல், சரியாமல், ஓயாமல், தாழ்விலும் வாழ்விலும் சரி, பதவி இருந்தாலும் இல்லையென்றாலும், ஒரே நிலையில் நிற்பதுதான் நான் காணுகின்ற ஓர் அரசியல் அதிசயம். அதுவும் இக்காலத்தில் இவ்வித உயர்ந்த நிலையைப் பார்ப்பது மிகவும் அதிசயம்.

ப. செங்கல்வராயன்

ஒரு தலைவர் ஆட்சி முதல்வராக இருக்கலாம். ஆனால் கட்சியைப் பிடித்து நிற்க வைப்பது மிகவும் கடினம். ஆட்சிப் பொறுப்பும் ஏற்று, கட்சியின் அமைப்பும் சீர்குலையாமல் வைத்து, இரண்டையும் ஒரே சமயத்தில் நடத்தும் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆற்றலை நான் பாராட்ட விரும்புகிறேன்.

சுதந்திர இந்தியாவில் சட்டசபையில் 25 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து பிரதிநிதித்துவம் பெற்ற பெருமை டாக்டர் கலைஞர் அவர்களைத்தான் சாரும். மேல்நாட்டு அரசியலில்தான் இச்சாதனையைப் பார்க்க முடிந்தது.

சட்டசபை விவாதத்தில் கலந்து கொண்டு தமிழக முதல்வர் ஆற்றியுள்ள பேச்சுகள் ஒவ்வொன்றையும் நான் படிப்பது உண்டு. சில கருத்துக்கள், அணுகுமுறை பிடிக்கவில்லையென்றால்-அவருடைய வாதத் திறமையை என்னால் மெச்சிடாமல் இருக்கமுடியாது. பொதுக்கூட்டத்தில் பேசுகின்ற கலைஞர் வேறு. சட்டசபையில் பேசுகின்ற கலைஞர் வேறு என்று இருப்பதுதான் கலைஞருடைய பெருமை.

டாக்டர் கலைஞரை நான் மிகவும் பாராட்டிப் போற்றிப் புகழ்வது அவருடைய சொல்வன்மையை, சொல்லழகை, சொல்பெருக்கை, சொல்லின் சுவையை; மதுரைத் தமிழ்ச் சங்கம் மூன்று தமிழ் ஈன்றது என்றெல்லாம் நான் படித்தும், கேட்டும் இருக்கின்றேன். தமிழ் மூன்றோடு நின்றுவிட்டதே. நான்காவது தமிழ் வராதா, பிறக்காதா என்று ஏங்கி இருந்த காலத்தில், டாக்டர் கலைஞர் 'நான்காவது தமிழ்' என்று சிறப்பாக வந்து நம்மையெல்லாம் மகிழச் செய்கின்றார்.

சிலர் சிறந்த பேச்சாளர்களாக இருப்பார்கள். அவர்கள் அதே நிலையில் எழுத்தாளர்களாக இருக்க மாட்டார்கள். டாக்டர் கலைஞர் அவர்கள் - அச்சிலும் பேச்சிலும் சிறந்து விளங்குவதை நான் பாராட்ட விரும்புகின்றேன்.

எனக்கு அவர் எழுதிய நூலின் வெளியீட்டு விழாவில் பாராட்ட அழைப்பு வருவதுண்டு. ஒரு சமயத்தில் அவர் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்தகம் வெளியிடப்பட்டது. பதிப்பாளர்கள் ஒரு மடலை எனக்கு முன்கூட்டியே அனுப்பினார்கள். நான் படித்தேன், மேலும் படித்தேன், மென்மேலும் படித்தேன். அவருடைய கருத்தோவியம், சொற்களின் வடிவம், கலைக் கருவூலம், ஏழை-எளியோர்கள் வாழ்க்கையின் விமர்சனம், என்னை அப்படியே உட்கார வைத்து, பெரிய புத்தகம் முழுவதையும் படித்து முடித்தேன். அவருடைய நெஞ்சம் எப்பேர்பட்டது என்று தெரிந்து கொண்டேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் இன்னும் நீண்ட காலம் எல்லாவித ஆரோக்கியமும், நலமும் பெற்று வாழ்வு எய்திட வேண்டும். தமிழுக்கும், தமிழ் இனத்திற்கும், இந்தியப் பெருநாட்டிற்கும் எப்பொழுதும் அவருடைய சேவையை எதிர்பார்க்கலாம்.

சித்திரைத் திருநாள்

உள்ளன்பு கொண்ட தமிழ் மக்களுக்கும்
உயர் கவிதை படைக்க வந்த பெருமக்களுக்கும்-என்
உயிரினு மேலான உடன் பிறப்பு கட்கும்
வணக்கமும் வாழ்த்தும் குவிக்கின்றேன்!

புத்தாண்டு வாழ்த்துரைக்க வருக என்று
தொலைக்காட்சி நிலையத்தார் தூது விடுத்தார்.
"தூ! தூ!! இவன் எதற்கு?" என்ற காலம் மாறி
தூது விடுக்கும் காலம் தோன்றியது விந்தையன்றோ?

இங்கிருக்கும் கவிஞர்களின் அரங்கிற்கு
நான் தலைவனாம்! வேடிக்கை; நல்ல வேடிக்கை!
இலக்கணமெனும் தாய்ப்பால் அருந்தாமல்-பசி
எடுத்த போதெல்லாம் புதுக் கவிதைப் புட்டிப்பால்
குடித்திடும் குழந்தை நான்!
எனை அழைத்து கவியரங்கத் தலைமை ஏற்கச்
செய்துள்ளார்!
ஏன் என்று யோசித்துப் பார்த்தபோது - நான்
"வைகாசி" என் கவிதைக்கெனக்கேட்க மாட்டேன்.
வைகாசி!
"வை - காசு" என் கவிதைக்கெனக்கேட்க மாட்டேன்.
அதனாலே—
சித்திரைக்கு வாழ்த்துச் சொல்ல அழைத்துள்ளார்கள்!
கவியரங்கில் பங்கு நீ பெற்றந்த சித்திரைப் பெண்ணுக்கு
ஆசி கூறென்பார்!
பங்குனி பெற்ற அந்த சித்திரைப் பெண்ணுக்கு
ஆசி கூறென்பார்!
புரட்டாசி கூற மாட்டேன் என்பதாலே
"புரட்டு ஆசி" கூற மாட்டேன் என்பதாலே
துணிந்தழைத்தார் போலும்!
(நான் வரும்போது)

மார்கழியாத் தாவணியுடன்
மார் கழி!
மார் கழியாத் தாவணியுடன்
(காற்றாலோ, கையாலோ விலகாத தாவணியுடன்)
மார் கழியாத் தாவணியுடன் ஆவணிப் பெண்ணாள்
மரபு வழிக் குடும்ப மங்கை; எனைப் பார்த்து
ஆ நீயா? என்று ... (ஆனி)
ஆடித் தீர்த்தாள் தை தை என்று
அனல் கொட்டும் விழிகாட்டி!
எதற்காக?
தை முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டாம்;
—அதற்காக!
உண்மைதான் எனினும் அவள் உருகாமல்
இருப்பதற்கு நான் சொன்னேன்
தமிழர்க்கு ஓராண்டில் இரு புத்தாண்டு வருவதால்
இரட்டிப்பு மகிழ்ச்சி தானே என்று!
தளிர்ப் பெண்ணின் குளிர் முகத்தில் நிலவு கண்டேன்!

தழுவிக் கொண்டாள்! திகைக்காதீர்! மேலும்,
மற்றொருத்தியா என்று!
மாதம் தான்!
மாதல்ல!!

புத்தாண்டு இவ்வாண்டு என்பதை விடப்
புரட்சிக்கவிஞரின் நூற்றாண்டு என்பதிலே பெருமகிழ்ச்சி!
புது மனிதன் அம்பேத்கர் அவதரித்து
புதை குழியில் கிடந்தோரை எல்லாம்
கை தூக்கி நடக்க விட்டு அவர் முகத்தில்
கதிரொளியைப் பரவ விட்ட
வரலாற்றை; இந்த வண்ணமிகு திருநாளில்

வாழ்த்த வேண்டும்!
வளர்க்க வேண்டும்; புதிய சிந்தனையை!

இந்தியத் திருநாட்டு அரசியல் சாசனத்தைச்
சிந்தனைக் கருவூலமாய்த் தந்தவர்க்கும்-
விந்தியம் போல் எழுந்து நின்று, மொழி வெறி
வீணர்களின் ஆதிக்கம் தடுத்து நின்றவர்க்கும்,
ஆம்! அடலேறு மனிதர் அம்பேத்கருக்கும்
உள்ளதைச் சொன்னால் உடலெரிந்து வருவதேன்
கோபம்?
சிந்தனையில் விளைந்த செல்வம் சீர்திருத்தக்
கொள்கையெனில்,
செயல்படாது அதனை விடுத்தல் பெருந்துரோகம்!
துரோகத்தைப் போற்றித் துதிபாடித் தொழுவதற்கு
எட்டப்பன் காலத்திற்கு முன்பிருந்தே பழகி விட்ட
தமிழர்களும் இருக்கின்றார் தமிழ்நாட்டில்! காறி
உமிழ்கின்றான் கட்ட பொம்மன் என்றாலும்;
கவலையில்லை அந்தக் காரியவாதிகளாம் பகைவர்
கால் பிடித்து வாழ்கின்ற மேதைகட்கு!
கொள்கை என்றும் கோட்பாடென்றும்
குரல்வளையை நெரித்தாலும் விடேன் என்றும்
குன்றேறி முழக்கி விட்டு-அதில்
ஒன்றேனும் நிறைவேறச் செயல்படாமல்,
மன்றேறி மாவீரன் போல் நிமிர்ந்து நின்று
மக்கள் முன்னே நடிப்பதனால் என்ன பயன்?
வாக்கும் செயலும் ஒன்றாக இருந்தால் தான்-நாட்டில்
பூக்கும் அரசு காய்த்துக் குலுங்கும்!

முதல்வர் கலைஞர்

அரிமா நெஞ்சப் பாரதி தாசருக்கும்
நூற்றாண்டு கொண்டாடும் இந்த ஆண்டில்
தோற்றோடிப் போகட்டும் தொல்லை தரும் தீய சக்தி!

"சாதியிலே மதங்களிலே சாத்திரச் சகதியிலே
சாயாதீர் மனிதர்காள்" என்ற சான்றோன்
வடலூர் வள்ளலார் வார்த்தைகளை மதித்தோ
மில்லை! அவருக்கு

வான் மறைக்கத் தோரணம் கட்டி
விழா மட்டும் எடுக்கின்றோம்; வெட்கமில்லை!
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கு மென்ற
பெருமகனாம் வள்ளுவர்க்குச்
சிறப்பு மட்டும் செய்கின்றோம்; ஆனால் அவர்
செப்பியதைச் செயல்படுத்த ம...த்து விட்டுப்
பெற்றெடுத்த பெண்ணுக்...ள்ளைகட்கும்
உற்றார் உறவுக்குள் சம்... தேடுகின்றோம்;
—இந்த
ஊருக்கு உபதேசிகளால் ...காட்ட கொள்கைக்கு
என்ன இலாபம்?
சொன்னதைச் செய்வதற்கும்
செய்வதைச் சொல்வதற்கும்
ஓர் அரசு உமதரசு நடப்பதாலே
சீர் பெருக உழைத்திடுவோம் என்றும்,
தேர்க்காலின் அச்சாணி போன்ற
ஏர்ப்பின்னால் தேசம் இருத்தலே பொருத்தமென்றும்,
எழில்மிகு நகர்கள், ஊர்கள், ஏக்கமிலாச் சமுதாயம்-
தொழில் வளம் பெருகினால் தோன்றிடுமென்றும்,
தீய நோய் பல களைந்து தெளிந்த நல்வாழ்வு காண
தூய நோக்குடன் திட்டங்கள் தேவை என்றும்,
பாயும் புலியாய் அரசினர் இருந்தால்
பதுக்கல் எலிகள் அழுந்துவர் என்றும்,

இடுப்பொடிந்து கல்வியிலும் வேலை ...ினிலும்
துடுப்பில்லாப் படகுகளாய்த் தத்தளி... வாழ்வு,

இட ஒதுக்கீட்டுப் புரட்சிகர மாற்றங்...
இனி வரும் காலத்தில் வளம் பெற்றுத் ... ன்றும்,

எட்டாவது வரை படித்த ஏழை வீட்டு இளஞ்சிட்டு
எட்டாப் பழமடியோ இல்வாழ்க்கை என ஏங்கியதை
—மாற்றி விட்டு
தட்டாமல் அவள் கழுத்தில் தாலியேற வைப்பதற்குத்
தந்திடும் ஐயாயிரம் தவமின்றிப் பெற்ற வரமென்றும்,

குடும்பத் தலைவரை இழந்து குமுறிக் கதறி
இடும்பைகூர் வறுமையினால் வாடுவோர்க்கு-அரசு
தரும் தொகை தான் அவர்தம் கண்ணீர் துடைக்கும்
அரும் தொகையாய் அமையும் என்றும்,

முட்டையுடன் குழந்தைகட்குச் சத்துணவு-வெறும்
பெட்டைகளாய்ப் பெண்களை எண்ணாதீர் என்று,
முப்பது விழுக்காடு, முதல் கட்டச் சலுகை என்றும்
முடிவாக ஆணுக்கும் பெண்ணுக்கும்
('அர்த்த நாரீஸ்வர' உரிமை கிட்டுமென்றும்;.
அதாவது பாதி பாதி - 50 சதவிகிதம்)
பெண்ணுரிமை வழங்கினால் தான் பேசுந்திருநாட்டு
மண்ணுரிமை நிலைக்கு மென்றுரைத்து
பெற்றோர் உடைமையில் பாதி பெண் மகவுக்குமெனப்
பெருமை மிகு சம உரிமைச் சட்டமென்றும்,
கருவுற்ற ஏழைப் பெண்கள், கலப்பு மணத் தம்பதியர்,
கைம்பெண்ணை மணம் புரிந்தோர், ஊனமுற்றோர்,
தொழுநோய் இரவலர்,
பொருளற்றுத் திருவற்றுத் திகைத்திடாமல்-நாம்
புரவலராய் நின்றவரைப் போற்றுவோமென்றும்,
ஆண்டுக்கு மூன்று பண்டிகைகளில்
அய்ந்து கிலோ அரிசி இலவசமென்றும்,
ஆதி திராவிடர் பழங்குடியினர்க்கு மட்டுமின்றி
அடி மட்டத்தில் உழல்கின்ற மிகப் பிற்பட்டோர்
—சீர் மரபினர்
குடியிருக்க வீட்டு மனை இலவசமாய்க்
கொடுத்திடுவோம் கையகப் படுத்தி யென்றும்,
குடி நீர் இல்லா சிற்றூர் இல்லை எனும்
புது நிலை காணப் பணி புரிவோம் என்றும்,
வானமே கூரையாய், பூமியே பாயாய்
வாழ்ந்தது போதும்!
மீனவர் மற்றும் ஆதி திராவிடர், பழங்குடியினர் வசித்திட
திட மிகு வீடுகள் தினமும் கட்டிடும்
திட்டத்தை மீண்டும் தொடருவோம் என்றும்,
நாடு காத்தும் மொழி காத்தும் நலிவுற்ற தியாகிகட்கு
நல நிதி மற்றும் வசதி வாய்ப்புகள் தருவது என்றும்.
கல்விச் சாலைகள் சென்றிடு மாணவர்க்குப் பேருந்தில்
கட்டணச் சலுகை வாரி வழங்குவ தென்றும்,
அரசு ஊழியர், ஆலைத் தொழிலாளர், ஆசிரியர்,
நெசவாளி,
அனைத்துப் பாட்டாளி மக்கள் உழவர்கள் என்றே
ஆவி நிகர்த்தவர் நியாயக் கோரிக்கை ஏற்று
தாவித் துயர் களையத் தயாராயிருப்போம் என்றும்,
வெல்லம் போல் இனிக்கின்ற சொல்லால் அல்ல-
சொல்லுக்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற
—ஆட்சி இது!

★ ★ ★ ★ ★

நிறைவுரையாக நான் ஏதும் கூறாவிட்டால்
குறை யொன்றும் நேராது எனினும்,
ஒன்று கூற விரும்புகின்றேன்!
சிங்கத் தமிழ் இளைஞர் கூட்டம்-நன்கு
சிந்தித்துச் செயல்படுவதற்கு. நான் எழுதிய
சங்கத் தமிழ் நூலில் ஒரு பகுதி
எடுத்துரைப்பேன்; ஏற்றிடுவீர்!

மந்த மாருதத் தாலாட்டில் உறங்குவதற்கு
மாட மாளிகை கட்டி வாழ்கின்ற பெரியீர்!
பணம் பணம் பணமென்று பாட்டாளியின்
வியர்வையிலே
தினம் தினம் குளியல் நடத்திக் குவிக்கின்றீர்
செல்வத்தை!

பிணம் தின்னும் கழுகு போல நீவிர்,
பெருக்க வைக்கின்றீர், உமது வயிற்றை!
இருள் சூழ்ந்த வாழ்க்கையிலே ஏழைகளைத்
தள்ளிவிட்டு
பொருள் தேடி அலைகின்றீர்; போதுமென்ற மனமின்றி!
வாழ்வில் வளம்பெருக்கல் ஒன்றையே குறிக்கோளாய்க்
கொண்டோரே,
வார்த்தையொன்று கேட்கின்றேன் பதில் சொல்வீர்!
மாணிக்கப் பொரியலும் மரகதக் கூட்டுமா
இலையிலிட்டு உண்கின்றீர்?
வைரத்தால் வறுவல் செய்து வைடூரிய அவியலுடன்
முத்துப் பவளமெனும் மணிகளினால் செய்திட்ட
அரிசியையா
குத்தி உலையிலிட்டுக் குடற்பையை நிரப்புகின்றீர்?
என்றதொரு கருத்தமைந்த கேள்வியினைக்

குன்றமெனச் செல்வம் குவிக்கின்ற மனிதரிடம்,
மன்றமேறி அறிஞர் அண்ணா கேட்டார்-அதனை
மறவாமல் என்றும் நாம் கேட்கின்றோம்!
பொதுமை மணம் கமழ வேண்டும் என்று,
புவியில் நாம் முழங்குகின்றோம் இன்று!
புதுமையல்ல இம் முழக்கம், புலவர் பிரான் நக்கீரர்,
புறப்பாடலொன்றில் பொதுமை முரசம் ஆர்க்கின்றார்
கேளீர்!

தெண் கடல் சூழ் தரணி முழுவதுமே-தன்
வெண்கொற்றக் குடையின் கீழ் வரவேண்டுமெனத்
தனியுரிமை நிலைநாட்டத் துடிக்கின்ற வேந்தனுக்கும்,
கனி சுவைக்கக் கல் எறிந்து வீழ்த்துதல் போல்
காடகத்தில் விலங்குகளை வேட்டையாட
கண்ணுறக்கமின்றிப் பகலிரவு பாராமல் அலைகின்ற
கல்வியறிவற்ற முரட்டு மனிதனுக்கும்,
மானம் காத்திட அவர்தம் உடலுக்குக்
கீழும் மேலும் இரு உடைதான் வேண்டும்!-அவரை
மயக்கத்தில் ஆழ்த்தாமல் பசி நீக்கக்
கூழோ பொங்கலோ உண்டு களிக்க
ஆழிசூழ் இவ்வுலகில் அவரவர்க்கும் ஒரு
நாழித் தானியம் மட்டும் போதுமன்றோ?
இப்படி
உண்பது நாழி, உடுப்பவை இரண்டேயெனும்
உண்மைதனை உணர்ந்த பின்னும்,
வறுமையில் பலர் வாட, வளமிகு செல்வப்
பெருமையில் சிலர் ஆடல் நீதி தானோ?
உலகிற் பிறந்தோர் அனைவருக்கும்,
உடல், உள்ளத் தேவையெல்லாம்
ஒன்றாக இருக்கும் போது-இதனை
நன்றாகச் சிந்திக்காமல்
வெள்ளம் போல் பொருள் எதற்கு ஒருவன்
சேர்த்தல் வேண்டும்?
பள்ளம் போல் வாழ்வினிலே பலர் எதற்குச் சாதல்
வேண்டும்?

தனக்கே எலாம் எனும் தனியுடைமை தகர்த்துத்
தரித்திரத்தை விரட்டுவதற்குத் தக்க வழி காண
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பொதுமைக்
கொள்கையினை
வகுத்தளித்து வையத்தில் இன்பம் காண்பது தான்
வாழ்வெடுத்த பயனாகும்!
தொகுத்தளித்தார் இக்கருத்தை நக்கீரர், அதனைத்
தொடர்ந்தளித்து வருகின்றார் தொல்புவியில்
நல்லோரெல்லாம்!

தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி, உடுப்பவை இரண்டே,
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே.''

(புறநானூறு: பாடல் 189
பாடியவர்-நக்கீரனார்)

பதவியில் இல்லாக்காலத்தில் நான்
பாடிய பாட்டாம் இஃது!
பதவி யொரு முள் மாலை! இலக்கியப்
பணி எனக்கு முல்லைச் சரம்!
பதவி யொரு நெடும் பள்ளம்! பொதுப்
பணி எனக்குப் பொதிகைக் குன்றம்!
மானமா? மகுடமா? எனக் கேட்டால்
மானத்தை மட்டுமே மதிக்கின்ற மனிதன் நான்!
கிரீடமே போதுமென இளிக்கின்ற கிறுக்கனல்ல நான்!
அதனால் தான்
உறவுக்குக் கை கொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்றுரைத்துப் பதவித்
துறவுக்கும் தயாராகப் பத்தாண்டுக்குமேல் கழித்தவன்
நான்!

பணி புரியும் வாய்ப்புத்தான் பதவி!
பதவி, பவிசு, படாடோபம் எல்லாமே, ஊதிய
பலூனைப் போல் வெடித்து விடும்
பண்பார்ந்த தொண்டொன்றே
வானைப் போல் நிலைத்து நிற்கும்!
இஃதறியாச் சில பேர்கள்
பதவி யொன்றே பிறவி யெடுத்த பயன் என்று
கரையிலிட்ட மீனைப் போல் துடிக்கின்றார்!
அவர்களுக்கும் சேர்த்துப் புத்தாண்டு வாழ்த்துக் கூறி
அறிஞர்க்கும், கவிஞர்க்கும்
அனைத்துப் பிரிவுத் தோழர்க்கும்
நன்றி கூறி அமைகின்றேன்!
நல்வணக்கம் ஏற்றிடுக!

(14.4.90 அன்று தொலைக்காட்சிக் கவியரங்கில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமை ஏற்றுப் பாடிய கவிதையை, முதல்வர் அவர் களின் பிறந்த நாளையொட்டி (ஜூன் 3) வெளியிட்டுப் பெருமை கொள்கிறது தமிழரசு)



TNPSC

விளம்பரம் எண்: 14/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்காக 1990-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் நடத்தப் பெறும் நுழைவுத் தேர்வு.

டேராடூனில் உள்ள இராஷ்ட்ரிய இந்திய இராணுவக் கல்லூரியில் சேருவதற்கான அடுத்த நுழைவுத் தேர்வு இந்திய நாட்டில் குறிப்பிட்ட சில இடங்களில் 1990-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 7 மற்றும் 8-ஆம் தேதிகளில் நடைபெற விருக்கிறது. இத்தேர்வு நடத்தப்பெறும் இடங்களில் சென்னையும் ஒன்றாகும். இத்தேர்வு எழுத்து மூலத்தேர்வு, நேர்முகத்தேர்வு ஆகிய இரண்டும் கொண்டதாக இருக்கும். எழுத்து மூலத்தேர்வு ஆங்கிலம், கணக்கு, பொது அறிவு ஆகிய மூன்று தாள்கள் கொண்டது. கணக்குத்தாள் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் விடையளிக்கப்படவேண்டும். பொது அறிவுத்தாள் இந்தியிலோ வட்டார மொழிகளில் (Regional Languages) எவையேனும் ஒன்றிலோ விடையளிக்கப்படலாம். நேர்முகத் தேர்வானது விண்ணப்பதாரர்களின் அறிவுக் கூர்மை, தனித்தன்மை ஆகியவற்றை ஆராய்வதாக இருக்கும்.

விண்ணப்பதாரர்களின் பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர் 01.07.1990 அன்று 12 வயது நிரம்பியவராகவும், 13 வயதை அடையாதவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வயது வரம்பில் எந்தத் தளர்த்தலும் கிடையாது. விண்ணப்பதாரர் ஏற்புப் பெற்ற பள்ளியில் (Recognised School) மேற்குறிப்பிட்ட இராணுவக் கல்லூரியில் சேர அனுமதிக்கப்படும்பொழுது, ஏழாம் வகுப்பு தேறியவராக இருத்தல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 என்ற முகவரிக்கு **15.06.1990** அன்று மாலை 5.45 மணிக்குள் வந்து சேர வேண்டும்.

மேற்கொண்டு முழு விவரங்கள், மாதிரி வினாத்தாட்கள், விண்ணப்பப் படிவங்கள் ஆகியவற்றைத் தேர்வுக் கட்டுப்பாடு அலுவலர்; தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை-600 002 என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

டிஐபிஆர்/1087/எம்எஸ்/90/அக்கார்ட்

தமிழ் பெற்ற தலைமை

வித்வான்
ச. தண்டபாணி தேசிகர்

பொது மேடைகளிலே - கருத்தரங்கிலே - சட்டமன்றத்திலே எல்லாருடைய உள்மனமும் உவக்க-பொது மக்கள் வியக்க - சிரிக்கச் சிரிக்க-தக்க விடைகளைத் தங்குதடையின்றி கேட்டவர்கள் வாய் மூடும் முன்னே பதில் அளிக்கிறாரே நம் தமிழக முதல்வர்! இந்த வல்லமை இவருக்கு எப்படி வந்தது என்று இவரோடு இளமை தொட்டுப் பழகிய நான் - அறிவு உறவு கொண்ட நான் - எண்ணிப் பார்க்க உரிமை உண்டுதானே!

எண்ணுகிறேன்; எண்ணிக் கொண்டே இருக்கிறேன். பழைய நிகழ்ச்சிகளில் பல என் நினைவுக்கு வருகின்றன. விதையில் இல்லாத ஆற்றலா - கலையா விளைச்சலில் உண்டாகும்? இவை எல்லாம் இவருடைய இள உள்ளத்திலே இருந்தனவே. அன்று அணு அணுவாக அமைந்து அடங்கிக் கிடந்தவை, படிப்பிலும் விளையாட்டிலும் வளர்ந்தவை, இன்று தமிழர் வாழத் தனி அரசாளும்தமிழ் நாட்டரசியல் அரங்கங்களில் மணம் பரப்புகின்றன; தமிழர்க்கு ஊட்டமளிக்கின்றன; உறுதியை உதவுகின்றன.

தமிழ் மக்களுக்குரிய பொது மனிதரான இவர் கழகங்களின் பொறுப்பேற்று முப்பது, முப்பத்தைந்து ஆண்டுகளாகவே பேச்சிலும், செயலிலும், கேள்வியிலும், பதிலிலும், காட்டி வரும் ஆற்றலைக் கண்டு தமிழுலகம் வியக்கின்றது. இவற்றிற்கெல்லாம் மூலம் - இவை விதையாய் இருந்தபோது அடங்கியிருந்த ஆற்றல்தானே!

இவர் படிக்கும் காலத்திலேயே, பத்துப் பன்னிரெண்டு வயதிலேயே, பேச்சுக்கு ஒரு சொற் பயிற்சி மன்றம், எழுத்துக்கு ஒரு 'முரசொலி' கையெழுத்து ஏடு, செயற்பட்டுப் பழகக் கிளைக்கழகங்கள், சீர்திருத்தம் வளர திராவிடர் கழகப் பிணைப்பு, அறிவுவளர கல்விக் கழகம் - இப்படி எல்லாம் இருந்து பழகித் தேறிப் பழுத்த அறிவே இவரை இப்படி உயர்த்தி வருகிறது என்று எண்ணி நான் அடிக்கடி மகிழ்வதுண்டு.

> **இக்கட்டுரை ஆசிரியர், முதல்வர் கலைஞர் பயின்ற உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றிய தமிழாசிரியர் ஆவார். அவர் தமது மாணவராகிய முதல்வர் கலைஞரின் இளமைப் பருவத்தை இங்கு நினைவு கூர்கிறார்.**

அன்று இவர் இளநாற்றாய் இருந்த கருணா; திருவாரூர் மாநாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியாகிய அறிவுப் பண்ணையில் வளர்ந்தார். இனப்பூசலும் ஏற்றத் தாழ்வும் ஆகிய களைகளும் தலை காட்டின. அவற்றை அமுக்கி மேல் நோக்கி வளர்ந்தார். அந்தப் பண்ணை ஒரு கூட்டுப் பண்ணை; அதிலே இவர் வளர்ந்த காலத்தில் 48 உழவர்கள் ஒரு மனமாக உழைத்து வந்தோம். எங்கள் உழைப்பால் வளர்ந்தன பல பயிர்கள். தமிழோடு கலந்த உழைப்பும் உறவுமாக கருணாப் பயிர்க்குப் பயன்பட்டவன் நான் என்பதை ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் மாயூரத்தில் கலைஞர் கூறிய கனிவுரையாலும் அறிந்து கொண்டேன். ஆதலால் இவருடைய இளமை நிகழ்ச்சிகள் சிலவற்றை என் தமிழ் உறவுகளுக்கு நினைவூட்டுகிறேன்.

என்னுடைய முப்பத்தைந்து ஆண்டுகளான ஆசிரியத் தொழில் இள உள்ளங்களோடு பழக வைத்தது. இள உள்ளங்கள் பல வகையில் என்னுடைய முதுமையைப் போக்கிச்

மாணவர் கடமை

★ மாணவர்கள் நல்ல வித்தகர்களாக- மேதைகளாக- மிக முக்கியப் பிரதிநிதிகளாக வருவார்கள் என்கிற ஆசைக் கனவுகள் ஆயிரத்தை இதயங்களில் தேக்கி வைத்துக் கொண்டு. குக்கிராமங்களில் பட்டி தொட்டிகளில் எத்தனை பெற்றோர்கள் நாளெல்லாம் தவங்கிடப்பார்கள் என்பதைப் பள்ளியில் புகுந்து- கலாசாலையில் நுழைந்த- கல்லூரிகளில் பயின்று கொண்டிருக்கின்ற மாணவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்தச் சிந்தனை ஓட்டம் அவர்கள் நெஞ்சிலே பதியுமானால் தங்கள் பெற்றோர்கள் மனம் மகிழத்தக்க அளவுக்கு அவர்களால் நற்பணிகளை ஆற்றிட முடியும். அந்த வகையில் தங்களுடைய கடமைகளை மாணவர்கள் உணரவேண்டும்.

★ மாணவர்களைப் பெற்றோர்களும் நண்பர்களும் படி படி என்கின்றனர். படி என்றால் புத்தகத்தை மட்டும் படி என்று அர்த்தமல்ல— பணிந்து நட என்றும் அதற்கு அர்த்தமுண்டு. அடக்கத்தோடு இரு என்றும் பொருளுண்டு. அதாவது அடக்கத்தோடு பணிந்து நடந்தால் தான் வாழ்க்கையின் உயர் மட்டத்தில் ஏறிடப் படிக்கட்டுகள் நம்மை நோக்கி வரும். மாணவர்கள், அந்த வகையில் படித்துப் பல முன்னேற்றப் படிகளில் ஏறிட வேண்டும்.

சிந்தனையைப் பெருக்கியது உண்டு. உள்ளன்போடு பழகுகின்ற இளஉள்ளங்களின் நட்பே என் வாழ்வில் நான்கண்ட இலட்சியப் பேறு.

என்னுடைய கனிந்த உள்ளத்தில் எப்போதும் காட்சி தருபவர் ஒருவர்; அவரோடு சுமார் பத்தாண்டுகள் பழகியிருப்பேன். அதன் பிறகு அவர் போகிற போதும் வருகிற போதும் தொலைவில் நின்று பார்த்திருப்பேன். மக்கள் வெள்ளத்தின் நடுவிலே கப்பல் போலக் காட்சி தரும் மேடையிலே கொடி மரத்தின் அடியிலே இருக்கும் மாலுமிபோல நின்று சமூகச் சீர்திருத்தங்களைப் பற்றிப் பேசிய பேச்சுகளைக் கேட்டு மகிழ்வேன். ஆற்றல், எளிமை, ஆழம் அத்தனையும் தான் அவர் எல்லார் உள்ளத்தையும் கவர்வதற்குத் துணை செய்வன என்பதைக் கண்டு மகிழ்வேன். இத்தனையும் எனக்குமில்லாத அரிய ஆற்றல். அப்போது என் உள்ளம்,

''தம்மில் தம்மக்கள் அறிவுடைமை
மாநிலத்து
மன்னுயிர்க்(கு) கெல்லாம் இனிது''

என்ற திருக்குறளை எண்ணித் தடுமாறும். வள்ளுவர்க்குச் சொந்தப் பிள்ளை ஒன்றாவது உண்டா? வாத்தியாராக இருந்து வழிவழியாக அறிவுக் குழந்தைகளையாவது ஆக்கியிருக்கிறாரா, இல்லையே! அப்படியிருந்தும், தம் மக்கள் அறிவு தம்மைக் காட்டிலும் உலகத்துக்கு இனிமையாக இருப்பதை எப்படிக் கண்டார் என எண்ணினேன். இது உலகத்தியற்கைதான் என்பதை, என்னுடைய வாழ்வில் ஒரு மாணவனது வளர்ச்சி எடுத்துக் காட்டியது. அந்த மாணவரே இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள். அவருடைய இன்றைய வாழ்வின் வளத்துக்கு, ஆட்சித் திறத்துக்கு, சிந்தனையின் சிறப்பிற்கு, முள்ளை முள்ளாலேயே எடுத்தெறியும் இயல்பிற்கு அடிப்படையாக அமைந்துள்ள ஒரு சில அன்றைய நிகழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கிறேன்.

4-ஆம் படிவம் 2-ஆம் பருவம் அந்த மாணவர் பயின்று கொண்டிருந்தார். அவர் ஓயாமல் ஒழியாமல் சமூகச் சீர்திருத்தக் கூட்டங்கள் அத்தனையிலும் கலந்து கொள்வார். பொதுநலக் குழுக்களிலும் பெரும் பங்கு கொள்வார்; பள்ளிக்கூடமும் தவறாமல் வருவார். எனக்குள் நான் நினைத்துக் கொள்வதுண்டு, இளம் பிள்ளை சருகு அரிக்க வேண்டிய நேரத்தில், குளிர் காய்கின்றாரே இவர் எப்படி கல்விக் கடலின் கரை காணப் போகிறார் என்று.

இதுமட்டுமா? இன்றைய 'முரசொலி' அன்றைய கையெழுத்து ஏடாக மாணவர் சமுதாயத்திலும் மற்றையோரிடத்தும் மிகச் செல்வாக்குடன் பரவிற்று. உள்ளத்தைத் தொட்டு உணர்ச்சியூட்டும் எழுத்துக்களே இதன் பரவலுக்குக் காரணம். இதன் ஆசிரியர் இவரேதான். நாவைந்து படிகள் எழுதுபவரும் இவரேதான். அப்படியிருந்தும் இவர் பள்ளிக்கூடம் வரத் தவறியதே இல்லை. ஒழுங்கான வருகைப் பதிவுக்காகவும் நல்லொழுக்கத்திற்காகவும் 4-ஆம் படிவத்திலோ 5-ஆம் படிவத்திலோ ஒரு சான்றிதழ்கூட சி.ஜே. பர்க்கி தலைமையில் பெற்றிருப்பதாக நினைவு.

ஒரு நாள் கட்டுரை வகுப்பு, திருத்தும் நேரம். உயிர் எழுத்தின் முன் வல்லின மெய் வந்தால் மிக வேண்டும் என்ற முறைமையை வற்புறுத்தினேன். அவர் கேட்டார்; ''வல்லினம் மிக வேண்டும், உடன்படு மெய்வேண்டும் என்ற இலக்கணங்கள் வேற்று மொழிகளுக்கு உண்டா?'' என்றார். எனக்குத் தெரிந்த வரை வடமொழி போன்ற மொழிகளுக்கு இல்லையென்றேன். நமது மொழி வாக்குமொழி. இனிமையும், எளிமையும் உடையது. வழங்குவதற்கேற்ற முறையில் தொடர்பு விடாமல் இருப்பதற்காக இவை அமைக்கப்பட்டிருக்கின்றன என்றேன். அவர் ''இதிலுமா தமிழுக்குத் தனிச் சிறப்பு'' என்று கூறிச் சிரித்தார். இப்படிப் பலப்பல.

இன்று என் உள்ள அரங்கிலிருந்தும் வளர்ந்து அவர் உலக அரங்கிலே எல்லாராலும் போற்றப்படுகிறார். அரசியல் தந்திரிகள் வந்து கலந்து மகிழ்கிறார்கள். கவிஞர்களும், கலைஞர்களும் வந்து போற்றுகின்றனர். நான்.

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்
தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்''

என்ற நிலையில் உவப்போடு இருக்கிறேன். தாயின் மகிழ்ச்சியைத் தளராது காக்க வேண்டியது தனயன் கடமை என்ற நிலையில் அவர் இருக்கிறார். ''இன்றே போல் நம் புணர்ச்சி'' என்ற நிலையில் இருவரும் இருக்கிறோம்; இருப்போம்.

அன்றைக்கு இளமாணவராய் இருந்த கலைஞர் அரைநூற்றாண்டு நிரம்பிய அறிஞராக விளங்குகிறார். அவர் இன்றே போல் ஒன்றற்கும் அஞ்சாத உறுதி உள்ளத்தோடு என்றும் போல் கடமைகளைச் செய்து, இன்பமொடு வாழச் செந்தமிழ் அன்னை திருவருள் சுரப்பாளாக!

—பூங்கொடி பதிப்பகம் வெளியிட்ட 'பொன்னாரம்' என்ற நூலிலிருந்து.
(1973)

சென்னையில் அம்பேத்கர் (1934)

1934-ல் சென்னைக்கு வருகை புரிந்தபோது லாங்க்ஸ் கார்டன் தெருவில் (வரதராஜ புரம்) நீதிபதி டபுள்யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வீட்டில் அம்பேத்கர் அவர்களுடன் மேயர் டி. சுந்தர்ராவ் நாயுடு, திரு அட்டன், ராவ்சாகிப் எல்.சி.குருசாமி, டபுள்யு.எஸ். கிருஷ்ணசாமி நாயுடு (நீதிபதி), டபுள்யு. எஸ். சாமி நாயுடு (கிருஷ்ணசாமி நாயுடு அவர்களின் தந்தையார்), ஏ. கிருஷ்ணசாமி செட்டியார், மற்றும் பெருமக்கள் ஆகியோர்.

—படம் உதவி: என்.ஏ. கருணாகரன்

புதுக்கோட்டைத் திருக்கோயில்கள்

புதுக்கோட்டை மாமன்னரின் நேரடிப் பார்வையில் இருந்த 117 ஆலயங்களும், அதன் துணை ஆலயங்கள் 83 ஆக மொத்தம் 200 ஆலயங்களைக் கொண்ட தொகுப்பு ஆலயங்களே புதுக்கோட்டைத் திருக்கோயில்களாகும்.

1. திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் ஆலயம்
2. திருவப்பூர் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்.
3. புதுக்கோட்டை அருள்மிகு சாந்தநாதசாமி ஆலயம்
4. நார்த்தாமலை அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்
5. விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி ஆலயம்
6. திருமணஞ்சேரி அருள்மிகு சுகந்த பரிமளேஸ்வரர் ஆலயம்
7. திருவரங்குளம் அருள்மிகு அரங்குளநாதர் ஆலயம்
8. குமரமலை அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலயம்
9. பேரையூர் அருள்மிகு நாகநாதசுவாமி ஆலயம்
10. திருமயம் அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் ஆலயம்
11. வைத்திகோயில் அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம்

ஆகியவை புதுக்கோட்டைத் திருக்கோயில்களில் புகழ் மிக்கவையாகும்.

இத்திருக்கோயில்களில் நார்த்தாமலை, அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயம் முக்கிய ஆலயமாகும். பங்குனி மாதம் 10-ஆம் நாள் திருவிழா குறிப்பிடத்தக்க திருவிழாவாகும்.

புதுக்கோட்டை மாவட்டத்தின் புகழ்மிக்க ஆலயங்களைக் கண்டு தரிசித்து அருள்பெற அன்புடன் வேண்டுகிறோம்.

தி. சுவாமிநாதன், பி.ஏ.பி.எல்.,
செயல் அலுவலர்

ஏ. சேதுரத்தினம், பி.ஏ.,
உதவி ஆணையர்/தக்கார்.

புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி லிட்.,
புதுக்கோட்டை

எமது வங்கியின் சிறப்பு அம்சங்களில் சில:-

★ அனைத்து வகை டெபாசிட்டுகளுக்கும் ஏனைய வங்கிகளைவிட ½% கூடுதல் வட்டி அளிக்கப்படுகிறது.

★ எமது வங்கியின் புதுக்கோட்டை நகரக்கிளை வாரத்தின் 7 நாட்களும் விடுமுறையின்றி காலை, மாலை, இரு வேளைகளிலும் செயல்படுகிறது.

★ வங்கித்தலைமையகம், ஆலங்குடி, கீரமங்கலம், அரிமளம், அறந்தாங்கி, புதுக்கோட்டை நகரக்கிளை மற்றும் மகளிர் கிளைகளில் பாதுகாப்புப் பெட்டக வசதி உள்ளது.

★ உங்கள் வசதிக்கு ஏற்ப பலவகை டெபாசிட் திட்டங்கள்.

உங்கள் வைப்பு பன்மடங்காகப் பெருக கூட்டு வட்டியுடன் கூடிய எங்களது

''கற்பகத்தரு டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்யுங்கள்!''

விவரங்களுக்கு வங்கித் தலைமையகம் மற்றும் மாவட்டத்திலுள்ள 18 கிளைகளை அணுகுவீர் !

ச. நடராஜன், பி.காம்., (ஆனர்ஸ்)
செயலாளர்

அ. இராமையன், பி.காம்
தனி அலுவலர்



பிரெஞ்சு மொழியில்

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா வாழ்க்கை வரலாறுகள்

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் வாழ்க்கை வரலாறுகள் தமிழ், ஆங்கிலம் முதலான மொழிகளில் வெளி வந்துள்ளன.

பிரெஞ்சு மொழியில் அவர்களது வரலாறுகள் எழுதப்பட்டு வருகின்றன என்கிற செய்தி நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

தமிழ் - பிரெஞ்சு அகராதியை எழுதி வெளியிட்ட, அகராதி அறிஞர் திரு ந. கைலாசம் அவர்கள், அவ்விரு பெரும் தலைவர்கள் பற்றிய வரலாறுகளைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வருகிறார்.

இது தொடர்பாக அவரைச் சந்தித்த போது அவர் கூறினார்.

''இளமைக் காலம் முதலே திராவிட இயக்க வரலாறுகளை ஊன்றிப் படித்து வந்தேன். அதில் அழுத்தமான நம்பிக்கையும், பற்றும் எனக்கு ஏற்பட்டது. சமுதாயச் சிற்பிகளாக விளங்கிய - மறைந்தும் மறையாமல் இருக்கின்ற தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின்வாழ்க்கை வரலாறுகளைப் பிரெஞ்சு மொழியில் எழுத வேண்டும் என்ற ஆர்வம் நெடு நாட்களாக என் உள்ளத்தில் எழுந்தது. அதன் விளைவாக இன்று தீவிரமாக அந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன்''.

திரு ந. கைலாசம் அவர்கள், தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாற்றை, 17 அத்தியாயங்களில் பகுத்துத் தொகுத்து வருகிறார்.

இளமைப் பருவம், தேசியத் தொண்டு, சமூகச் சீர்திருத்தம், சாதி ஒழிப்பு (பேச்சு-எழுத்து), பெண்கள் சம உரிமை, விதவைத் திருமணம், மூடப் பழக்க வழக்கங்களுக்கு எதிர்ப்பு, சீர்திருத்தத் திருமணம், இந்தி எதிர்ப்பு, பெரியாரின் தொண்டு தொடர்கிறது,- இப்படிப் பல தலைப்புகளில் இந்தக் கையெழுத்துப் பிரதி தயாராகி வருகிறது. நூலின் பெயர், 'உலகத் தலைவர் தந்தை பெரியார்.

சுமார் 100 பக்க அளவில் வெளிவர விருக்கும் இந்நூலை, நூலாசிரியரே சொந்தமாக வெளியிடுகிறார். அதுவும் மலிவுப் பதிப்பாக, எல்லாரும் வாங்கக் கூடிய விலையில் தயாரிப்பது என்பது இவரது திட்டம்.

''தந்தை பெரியார் உலகச் சிந்தனையாளர். சீர்திருத்தக் கருத்துக்களை- உலகமே ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துக்களைச் சொன்னவர் தந்தை பெரியார்தான். பெரியார் இயல், பெரியாரிசம் உலகத்துக்கே பொதுச் சொத்து. அதை யாராலும் அழிக்க முடியாது'' என்று ஆணித்தரமாகக் கூறும் திரு. கைலாசம் அவர்கள், பிரெஞ்சு மொழி நூலுக்கு ஆதரவு இருக்குமா? என்று கேட்டதற்குச் சொன்னார்-

''பிரெஞ்சில் உலகத் தலைவர்களைப் பற்றிய புத்தகங்கள் வெளிவந்துள்ளன. அதைப் போல, உலகச் சீர்திருத்தவாதியைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வம் இருக்காதா என்ன? இன்னொரு தலைவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் நிச்சயம் அங்கு உள்ளது. இதை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.''

பிரெஞ்சு மொழியில் திருக்குறள் வெளிவந்துள்ளது (1983). பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள் சிலவும் இம்மொழியில் வெளிவந்துள்ளன. நாலடியாரும் பிரெஞ்சு மொழியில் வெளியிடப் பட்டுள்ளது.

வட ஆர்க்காடு-அம்பேத்கார் மாவட்டம் குடியேற்றத்தில் பிறந்த அகராதி அறிஞர் திரு. ந. கைலாசம் அவர்கள், பொழுது போக்காக பிரெஞ்சு மொழி கற்க ஆரம்பித்து அதில் சான்றிதழ்த் தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு பிரெஞ்சு மொழியில் இடைநிலைத் தேர்வில் வெற்றி பெற்றார்.

பிரான்சு நாட்டில் சுற்றுப் பயணம் செய்த இவர், அங்கு சில மாதங்கள் தங்கியிருந்து, பிரெஞ்சு மொழியின் முறையான உச்சரிப்புகளைக் கற்றறிந்தார். பாரத ஸ்டேட் வங்கியில் அலுவலராகப் பணியாற்றும் இவர், வங்கியின் புதுச்சேரிக் கிளைக்கு மாற்றம் செய்யப்பட்டபோது, அங்கு பிரெஞ்சு மொழியைத் தொடர்ந்து படித்து வந்தார். பிரெஞ்சு மொழியில் டிப்ளமா பட்டம் பெற்ற இவர், இம்மொழியில் வர்த்தகத் துறைச் சான்றிதழ்த் தேர்விலும் வெற்றி பெற்றார். பிரெஞ்சு - தமிழ் அகராதி நூலை எழுதி வெளியிட்டார்.

பிரெஞ்சு நாட்டுக் கல்வி அமைச்சர் ஜான்பியர் செவனுமான் அவர்கள், ''கைலாசம் பிரெஞ்சு-தமிழ் அகராதி, இரு நாடுகளின் கலாச்சாரங்களை அறிய உதவும் பாலம்'' என்று பாராட்டி 'அகராதி அறிஞர்' என்ற பட்டத்தையும் அளித்தார்.

கூட்டுறவே நாட்டுயர்வு
புதுக்கோட்டை கூட்டுறவு நகர வங்கி லிட்.,
புதுக்கோட்டை 622001

தலைமை அலுவலகம்: கீழ ராஜவீதி
த.பெ.எண்:24, தொலைபேசி 2232

கிளை அலுவலகம்: சந்தைப்பேட்டை திலகர் திடல்
தொலைபேசி:2834

	(ரூ. லட்சத்தில்) 31.12.89-ல்
1: அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 15.00
2. செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 10.21
3. வைப்புகள்	ரூ. 110.00
4. நடைமுதல் மூலதனம்	ரூ. 161.00

அனைத்து வைப்புகளுக்கும் (டெபாசிட்ஸ்) அதிகபட்சம் 11 சதவிகித வட்டி வழங்கப்படுகிறது.

இது மற்ற வர்த்தக வங்கிகளைவிட 1 சதவிகிதம் வட்டி அதிகம்!

ரூ. 30,000/- வரை டிபாசிட் இன்சூரன்ஸ் பாதுகாப்பு உண்டு!!

வளர் நிதியில் முதலீடு செய்து வளம் பெறுவீர்!!
கூடுதல் வட்டி பெற இன்றே முதலீடு செய்வீர்!!

விபரங்களுக்கு: நாடுவீர் நகர கூட்டுறவு வங்கியை!

ஏ.வி.ஸ்ரீநிவாசன் பி.காம்., எச்.டி.சி.,
செயலாளர்

பெ. சப்தரிசி எம்.ஏ.,
கூட்டுறவு சார்பதிவாளர்/ஆட்சியர்

எங்களது
இதயங்கனிந்த
வாழ்த்துக்கள்

ஏ. ராமையா நாடார் பிரதர்ஸ்
சங்கர் டிம்பர் டிப்போ

ஸ்ரீபிரியா திரையரங்கம்
ஸ்ரீபெரியாண்டவர் சேம்பர் & டைல் ஒர்க்ஸ்

மானாமதுரை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

ஆசிரியர்: டாக்டர் ஜே.வி.ஜி.சேகர்
வெளியிட்டோர்:
நர்மதா பதிப்பகம்,
16/7 ராஜாபாதர் தெரு,
தியாகராயநகர்,
சென்னை-600 017.

பக்கம்:160 விலை: ரூ.16/-

உலகெங்கும் காணப்படும் மருத்துவ முறைகளில்- ஆயுர்வேதம் நான்கு வேதங்களாலும், ஓமியோபதி ஜெர்மானியர்களாலும், காஷ்மீரி காஷ்மீர் மக்களாலும், யுனானி அரபு மக்களாலும், அக்கு பிரஷ்ஷர் சீனர்களாலும், அலோபதி ஆங்கிலேயர்களாலும் உருவானதாக- அல்லது பிரபலம் பெற்றதாகக் கூறப்படுவதுண்டு; இவற்றைப் போல- இயற்கை மருத்துவ முறையாம் சித்த வைத்திய முறை தமிழர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட பெருமை உடையதாகும்.

பெருமைமிக்க சித்த வைத்திய முறையை மிக எளிமையாக இதன் மூலம் அளித்திருக்கிறார் நூலாசிரியர். நோய்களின் குணங்களை விளக்கியிருப்பதோடு அவ்வந் நோய்க்குரிய எளிய முறை, மூலிகை மருத்துவ முறைகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

என்ன நோய் வராமலிருக்க, என்ன வகை யோகாசனம் செய்வது பொருத்தும் என்பதையும் நூலாசிரியர் விளக்கியிருக்கிறார். இயற்கை முறை மருத்துவ ஆர்வலர்கள் படிக்க வேண்டிய நூல் இது.

கவிஞரும் கவிதையும்

ஆசிரியர்: கவிஞர் முருகுவண்ணன்
வெளியிட்டோர்:
தமிழ்நெறி மன்றம்,
8, துளசிங்க முதலித்தெரு,
பெரம்பூர், சென்னை-600 011.

பக்கம்:180 விலை: ரூ.15/-

'தத்துவக் கவிஞர் என்ற பெயருக்குத் தகுதி வாய்ந்தவரே கவிஞர் முருகுவண்ணன்...' எனத் தொடங்கும் பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையாரின் அணிந்துரையோடு மலர்ந்திருக்கும் மரபுக் கவிதைகளின் தொகுப்பு நூல் இது; சீர்திருத்தத் தமிழிலேயே நூல்கள் வெளியிடப் பட வேண்டும் என்ற நூலகச் சட்டத்தையும் தாண்டி பழையபடியே வெளியிடப்பட்டுள்ளது.

பாவேந்தர் பாரதிதாசனாரின் 'குயில்', கலைஞரின் 'முரசொலி' போன்ற சில ஏடுகளில் தாமெழுதிய கவிதைகளையும் இதில் இணைத்திருக்கிறார், ஆசிரியர்.

தமிழ், திருவள்ளுவர், இராமலிங்க வள்ளல், கனவு, நினைவு முதலாக- கராத்தே, கம்ப்யூட்டர் உட்பட எதையும் விட்டு வைக்காமல் 99 கவிதைகள் எழுதப்பட்டுள்ளன இனிய எளிய தமிழில்.

ஐந்தாறு ஆங்கிலக் கவிதைகளும் இந்நூலில் காணப்படுவதுடன், ஆங்காங்கே சில ஆங்கிலச் சொற்களும் தூவப்பட்டிருப்பது சற்றே நெருடலாக உள்ளது. ஆனால் 'Cell என்பதை சில்' என்றும் Computer என்பதை 'எண்புகட்டர்' என்றும் தமிழ்ப்படுத்தியிருப்பது அருமை.

மரபுக் கவிதை விரும்பிகள், படித்து மகிழலாம்.

—'சோழராஜா'

பொது அறிவு வளர்க்கும் நூல்கள்

விஞ்ஞான வித்தகர்கள் மக்கள் வாழ்க்கையை வளமாக்கப் பல அற்புதங்களைக் கண்டுபிடிப்பதை மக்கள் அறிய மாட்டார்கள். எதிர் கால உலகம் விஞ்ஞானிகளைப் பற்றிய நல்ல ஏடுகளைத் தயாரித்து மக்கள் மன்றத்திலே வைத்துப் பொது அறிவை விருத்தி செய்ய வேண்டும்.

பேரறிஞர் அண்ணா

கல்லெழுத்துக் கலை

ஆசிரியர்: நடன. காசிநாதன்,
வெளியீடு: மணிவாசகர் பதிப்பகம்,
55, லிங்கி தெரு,
சென்னை-600 001.

விலை: ரூ.32 பக்கம்: 236

கல்மேல் எழுதும் வழக்கத்தைப் பண்டைத் தமிழர்கள் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கைக் கொண்டிருந்தார்கள். அந்த எழுத்துக்களை எல்லோரும் அறிந்து கொள்வது எளிதன்று. எல்லோரும் எளிதில் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் பேரெண்ணத்தின் விளைவாக இந்நூலை உருவாக்கியிருக்கிறார் நூலாசிரியர்.

கல்வெட்டுப் படி எடுக்கும் முறை, செப்பேட்டில் உள்ள எழுத்துக்களை எளிதில் படிக்கும் முறை ஆகியவை குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளார்.

அசோக மன்னன் காலத்து பிராமி எழுத்துக்கும் பண்டைத் தமிழ்- எழுத்துக்கும் உள்ள வேற்றுமையைத் தக்க வகையில் எடுத்துரைத்திருக்கிறார். வட்டெழுத்து, தமிழ் எழுத்து ஆகியவை குறித்து அட்டவணை வாயிலாக விளக்கியுள்ளார்.

கல்வெட்டாய்வு இந்தியத் திருநாட்டில் வளர்ச்சியுற்ற வரலாற்றையும் விவரித்துள்ளார்.

இந்நூலைப் படிப்பதன் மூலம், கல்வெடடுகளில் காணப்படும் பண்டைய எழுத்துக்களைப் படிக்கும் திறன்வருவது உறுதி. அந்தவகையில் இது ஒரு வழிகாட்டி நூலாகப் பயன் படுகிறது.

— தமிழ்ப்பித்தன்

ஒரு குடும்பத்தின் கதை

ஆசிரியர் : துரை. இராமு.
வெளியீடு: டி. ராமு
6, பிள்ளையார் கோயில் தெரு,
பழைய தாம்பரம்,
சென்னை-600 045.

விலை:ரூ.16.00 பக்கம்:148

மூன்று தலைமுறையில் நடந்த சம்பவங்களின் தொகுப்பு, இக்கதை.

ஒரு கதையில், அது நிகழும் பகுதியின் மண்வாசனையை அக் கதையில் வரும் உரையாடல்களே இனம் பிரித்துக் காட்டும். கதையின் துவக்கமும், முடிவும் அக்கதைக்குப் பெருமை சேர்க்கும் வண்ணம் அமைய வேண்டும். இக்கதையில் இவை தவிர்க்கப்பட்டு வித்தியாசமான முறையில் எழுதப்பட்டுள்ளது.

சிறுசிறு சம்பவங்கள் கூட, மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சில சம்பவங்களையும், சில விரிவாக்கங்களையும் குறைத்திருந்தால் கதைக்கு விறுவிறுப்பு கூடி இருக்கும்.

—என். குமாரசாமி

அடித்தட்டு மக்களுக்கான அமைதிப்புரட்சி!

முதல்வர் கலைஞர்

பதிப்புரை

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 1990-91-ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையை 10.4.90 அன்று சட்டப்பேரவையில் தாக்கல் செய்து ஆற்றிய உரையையும், மானியக் கோரிக்கை மீது மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்கள் நடத்திய விவாதங்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அளித்த பதிலுரையையும் தொகுத்து **'அடித்தட்டு மக்களுக்கான அமைதிப்புரட்சி!'** என்னும் தலைப்பில் சிறு நூலாக்கி தமிழரசு 1.6.90 இதழின் இலவச இணைப்பாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தமிழ்நாடு அரசு.

அடித்தட்டு மக்களுக்கான அமைதிப்புரட்சி!

முதல்வர் கலைஞர்

1990-91-ஆம் ஆண்டிற்கான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 10.4.90 அன்று, சட்டப் பேரவையில் தாக்கல் செய்து ஆற்றிய உரை.

1. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.28,46,79,000 அளிப்பதற்கான 32-ஆம் எண் மானியக் கோரிக்கையை இப் பேரவையின்முன் வைக்கிறேன். இதைத் தவிர, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனத்திற்குப் பங்குத் தொகையாக அளிக்க ரூ.1 கோடி மானியக் கோரிக்கை எண் 58-ன் கீழும், பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான விடுதிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக மானியக் கோரிக்கை எண் 53-ன் கீழ் ரூ.1.23 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் இத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூ.30.70 கோடி ஆகும் என்பதையும், இது சென்ற ஆண்டு ரூ.19.57 கோடியாக இருந்தது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. இவ்வரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றுக் கொள்வதற்கு முன் நிலவிய சூழல்களைக் கருத்திற் கொண்டு, விரிவான பரிசீலனைக்குப் பின்னர், பிற்படுத்தப்பட்டோரின் மொத்த இட ஒதுக்கீடான 50 விழுக்காட்டிற்குள், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்குத் தனியே 20 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தது. இதன் பயனாக, 1988-ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்களில் 68 மாணவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மாறாக, 1989-ஆம் ஆண்டில் 187 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதேபோன்று, 1988-ஆம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த 354 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு மாறாக, 1989-ல் 685 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

எளியோர் நலம் காக்க புதியதோர் சிகிச்சைப் பிரிவு

சென்னையில் உள்ள அரசு பொது மருத்துவ மனையில் - ஒரு கோடி ரூபாய் செலவில் அமைந்துள்ள காமா கேமரா மற்றும் இருதய இரத்தக் குழாய் மாற்று அறுவைச் சிகிச்சைப் பிரிவை 28.4.90 அன்று காலையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு எஸ். துரைமுருகன் அவர்கள் நியூக்ளியர் கார்டியாலஜி கட்டிடத்தைத் திறந்து வைத்து, முன்னிலை உரை நிகழ்த்தினார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் தலைமையுரையாற்றினார்.

இருதய நோய் இயல் துறைக்கூடுதல் பேராசிரியர் டாக்டர் வி. சொக்கலிங்கம், நியூக்ளியர் கார்டியாலஜி மற்றும் இருதய அறுவைச் சிகிச்சை விளக்கவுரையாற்றினார். மக்கள் நல்வாழ்வுத்துறைச் செயலர் திருமதி யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., விழா மலரை வெளியிட்டார்.

தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு எம்.எம். இராஜேந்திரன், இ.ஆ.ப., அயோர்டிக் பலூன் விசைத் திறப்பை நிகழ்த்தி உரையாற்றினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மூலம் - அரசு பொது மருத்துவமனை முட நீக்கியல் பிரிவிற்கு ஐம்பது கட்டில்களை நடிகர் திரு விஜயகாந்த் வழங்கினார். இதய நோய்த்துறையின் தலைவர் டாக்டர் ஏ. தஜ்மல் உசேன், இருதய அறுவைச் சிகிச்சைத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். வாசுதேவன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு இரா. அன்பரசு, தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு அ. இரகுமான்கான் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மருத்துவக் கல்வி இயக்குநர் திருமதி டாக்டர் லலிதா அனந்த சுப்பிரமணியம் வரவேற்புரையுடன் தொடங்கிய இந்த விழா அரசு பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் ந. சண்முகசுந்தரம் அவர்களின் நன்றி உரையுடன் நிறைவேறியது.

நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அதிகாரிகளும், ஓய்வு பெற்ற மருத்துவ மேதைகளும் கலந்து கொண்டு சிறப்பித்த இவ் விழாவில் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறப்புவிழாப் பேருரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"கடந்த ஆண்டு அக்டோபர் திங்கள் என்று எனக்கு நினைவு; இங்கு ஏழை-எளிய மக்களுக்கு இருதய அறுவைச் சிகிச்சைக்காக குறிப்பாக மாற்று இரத்தக் குழாய் அமைக்கின்ற அறுவைச் சிகிச்சைக்காக ஒரு கோடி ரூபாய் முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவித்து, அன்றைய தினம் திரண்டிருந்த பெருமக்கள் அதனை மிகுந்த பூரிப்போடு வரவேற்றுப் பாராட்டி



அடித்தட்டு மக்களுக்கான அமைதிப் புரட்சி!

முதல்வர் கலைஞர்

3. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ-மாணவியர்களுக்குப் பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி அளிக்கும் திட்டம் 1989-90-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ், பயனடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 60,833 ஆகும்.

4. பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கெனத் தனியாக ஒரு இயக்ககம் 1969-ல் அமைக்கப்பட்டது. மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினரின் நலனுக்காக வகுக்கப்படும் புதிய திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மட்டுமல்லாது தற்போதுள்ள திட்டங்களையும் செவ்விய வகையில் நிறைவேற்றுவதற்காகவும், நிர்வாகப் பணியாளர் அமைப்பை வலுப்படுத்தவும், மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு எனத் தனியாக ஒரு இயக்ககம் 1989-90-ல் அமைக்கப்பட்டது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காகத் தற்போதுள்ள இயக்ககம் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலனுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும்.

5. நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுவதற்கும், புதிய திட்டங்களை வகுப்பதற்கும், முன்பு தலைமைச் செயலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூக நலத்துறையென இருந்ததை இரண்டாகப் பிரித்து, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை என்ற தனித்துறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்துறைக்குச் செயலாளர் ஒருவர் தனியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

6. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்காக 1989-90-ஆம் ஆண்டில் மாணவ-மாணவியர் விடுதிகள் 25 திறக்கப்பட்டன. இவ்வாண்டில் 50 புதிய விடுதிகளைத் திறக்க இருக்கின்றோம். இவ்விடுதிகளை நல்ல கட்டிடங்களில் அமைக்க வேண்டிய அவசியத்தையும், மாணவர்கள் தங்களின் கல்வியைச் சீரிய வகையில் பெறுவதற்கு ஏற்ற சுற்றுப்புறச் சூழலை அமைத்துத்தர வேண்டிய அவசியத்தையும் நன்குணர்ந்து இவ்வாண்டில் மொத்தம் ரூ.4 கோடி செலவில் 40 புதிய விடுதிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கான திட்டத்தை அரசு துவக்கியுள்ளது.

7. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு நிறுவனம், 1982-ஆம் ஆண்டு, கீழ்க்காணும் நோக்கங்களுடன் செயல்படத் துவங்கியது.

(1) பிற்படுத்தப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்கு உதவுகின்ற தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க உதவுவதுடன் அத்தகைய சங்கங்களுக்குக் குறியீட்டுக் கடன் வழங்குதல்.

(2) பிற்படுத்தப்பட்டவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு அவசியம் என்று கருதக் கூடிய வர்த்தக, வணிகத் தொழில் ரீதியான மற்றும் பொதுவான நடவடிக்கைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ மேற்கொள்ளுதல்.

இந்நிறுவனம் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுத் தொழில் சங்கங்களுக்கு ரூ.3 இலட்சம் என்ற உயரளவுக்குட்பட்டு, திட்ட மதிப்பீட்டில் 20 விழுக்காடு வரை தொடக்க உதவித் தொகை வழங்கி வருகிறது. இத்தொழிற் சங்கங்கள் எஞ்சியுள்ள முதலீட்டுத் தொகையை வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். இந்நிறுவனம் இதுவரை 39 கூட்டுறவுத் தொழிற் சங்கங்களுக்கு ரூ.9.22 இலட்சம் வரை தொடக்க உதவித் தொகை அளித்துள்ளது.

இந்நிறுவனம் நிதிப் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டு முனைந்து செயல்படாமல் இருந்தது. இந்நிறுவனத்தினைப் புதிய வேகத்துடன் செயல்படுத்த இவ்வரசு முடிவு செய்துள்ளது. இந்த நிறுவனத்திற்கு ரூபாய் ஒரு கோடி அளவிற்குப் பங்குத் தொகை 1990-91-ல் வழங்கப்படும்.

கூட்டுறவுத் தொழிற் சங்கங்களுக்கு உதவி அளிப்பதோடு, பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த தனி நபர்களுக்குச் சுய வேலைவாய்ப்புக்குக் கடன் உதவி அளிக்கும் திட்டங்களையும் இந்நிறுவனம் மேற்கொள்ளும். கிராமக் கைவினைஞர் வளாகங்களை அமைப்பதற்குத் திட்டங்களை வகுக்கும்படியும் இந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வளாகங்களில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்குச் சுயவேலை வாய்ப்புப் பெற இயலும் வகையில், நல்ல ஆதாயம் கிடைக்கக் கூடிய தொழில்களில் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. இந்திய ஆட்சிப் பணி மற்றும் பிற மைய அரசுப் பணிகளுக்கு மட்டுமே பயிற்சியளித்து வந்த பிற்படுத்தப்பட்டோருக்கான சிறப்புப் பயிற்சி நிலையத்தின் தரத்தினை உயர்த்தி, மேம்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலிருந்து இந்திய ஆட்சிப்பணி மற்றும் பிற மைய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளுக்குப் பயிற்சியளிப்பதுடன், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வுக்குழு, இரயில்வே பணியாளர் தேர்வுக் குழு மற்றும் பிற பணியாளர் தேர்வு அமைப்புகள் நடத்தும் போட்டித் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்க முடிவு செய்துள்ளோம்.

9. வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மிகப் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க முடிவு செய்துள்ளோம். இதற்காக நிலம் கையகப்படுத்தும் செலவினத்திற்காக 1990-91-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம்.

இதுவரை ஆதிதிராவிடர், பழங்குடி மக்கள், முடிதிருத்து வோர், சலவைத் தொழிலாளர், போயர் மற்றும் நரிக்குறவர் முதலிய வகுப்பினருக்கு மாத்திரம் நிலம் கையகப்படுத்தி இல வசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு வந்தன. இந்த ஆண்டிலிருந்து இந்தத் திட்டம் எல்லா மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் மற்றும் சீர்மரபினருக்கும் விரிவுபடுத்தப் படுகிறது.

10. கணிப்பொறி, தொலையச்சு மற்றும் தொலைபேசி இயக்குபவர் போன்ற பணி சார்ந்த பயிற்சியளிக்கும் திட்டங் களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது. கடந்த வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது உறுதியளித்தது போல, மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு உண்டி, உறைவிடக் கட்ட ணத்தை உயர்த்தியுள்ளோம்.

11. சமய மற்றும் மொழிவாரி சிறுபான்மையினர் நலத் தைப் பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய மாநில சிறுபான் மையினர் நல ஆணையம் ஒன்றினைத் தோற்றுவித்துள்ளோம். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.எம். அப்துல் ஜப்பார் அவர்களைத் தலைவராகவும், பேராசிரியர் எஸ்.எம். மரிய நல்லு அவர்களைத் துணைத் தலைவராகவும் திருவாளர்கள் எம். சாந்தி லால் ஜெயின், கே.பி. கொட்டாரக்கரா, பி. ஒபுல் ரெட்டி மற்றும் கே.எஸ். ஷெட்டி ஆகியோரை உறுப்பினர்களாகவும் நியமித்துள்ளோம்.

சிறுபான்மையினர் நல ஆணையத்திற்கு, கீழ்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.'

(1) இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திலும், மாநில சட்ட மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மூலமும் சிறுபான் மையினருக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு பாதுகாப்புகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என்பது பற்றி மதிப்பீடு செய்தல்.

(2) எல்லாப் பாதுகாப்புத் திட்டங்களையும் அமல்படுத்து வதற்கும், செவ்வனே நிறைவேற்றுவதற்கும் வேண்டிய பரிந் துரைகள்.

(3) சிறுபான்மையினருக்கென அரசால் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளும், திட்டங்களும் செயல்படுத்தப்படுவது குறித்து ஆய்வு செய்தல்.

(4) சிறுபான்மையினருக்கு எதிரான வேறுபாடுகளைக் களைய ஆய்வுகள், ஆராய்ச்சி, பகுத்தறிந்துணர்தல் முதலிய வற்றை மேற்கொள்ளுதல்.

(5) மாநில அரசுகள் சிறுபான்மையினர் பொருட்டு மேற் கொள்ள வேண்டிய சட்டம் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் தெரிவித்தல்.

(6) மாநில அரசுக்குக் கால முறை அறிக்கைகள் அனுப்புதல்

12. சென்ற ஆண்டு இம்மாமன்றம் ஏகமனதாகத் தீர்மானித் ததைத் தொடர்ந்து, இந்த அரசு வலியுறுத்தியதற்கு இணங்க, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்து வோம் என்று அறிவித்துள்ள இந்தியப் பிரதமர் அவர்களைப் பாராட்டுகிறோம்.

13. அரசு மேற்கொண்ட நடவடிக்கைக்ளின் சிறப்பு அம் சங்களை மாத்திரம் மேலே குறிப்பிட்டுள்ளேன். பிற்படுத்தப் பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலனுக்காக அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங் களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

14. கல்வி

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றம் பெற, கல்வி ஒரு முக்கியமான சாதனமாதலால் அரசு இவர்கள் கல்வியில் ஏற்றம் பெறத் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. மேற்கண்ட இனத்தைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்காகப் பள்ளிகள், விடுதிகள், உதவித் தொகை, பயிற்சிக் கால உதவித் தொகை, பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபலகைகள், சீருடைகள் மற்றும் தனிப் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. சீர்மரபினருக்கென்று நடத்தப்படும் பள்ளிகளில் சத்துணவு, இலவசக் காலணிகள் ஆகியவையும் தரப்பட்டுள்ளன.

பள்ளிகள்

சீர்மரபினர் நிலையை மேம்படுத்துவதற்காக அரசு தனிச் சலுகைகளையும், வசதிகளையும் அளித்து வருகிறது. சீர்மரபினர் சிறுவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காகத் தமிழ்நாட்டில் 278 பள்ளிகள் நடத்தப்படுகின்றன. 1989-90-ஆம் ஆண்டில், 53,776 மாணவ, மாணவியர்கள் இப்பள்ளிகளில் பயின்றனர்.

75 ஆரம்பப் பள்ளிகளுக்கு ரூ.75,000 மதிப்பீட்டுச் செலவில் போதனைக் கருவிகளும், மூன்று மேல்நிலைப் பள்ளிகள், 7 உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு ரூ.75,000 மதிப்பீட்டுச் செலவில் விளையாட்டுச் சாதனங்களும் 1990-91-ஆம் ஆண்டில் வழங்கப்பட உள்ளன.

1990-91-ஆம் ஆண்டில், ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கப்பலூர் மற்றும் மேலஉறப்பனூரில் சீர்மரபினருக்காக உள்ள இரு அரசு நடுநிலைப் பள்ளிகளின் நிலை உயர்த்தப்படும்.

1989-90-ஆம் ஆண்டில், இப்பள்ளிகளை நடத்த ரூ.3,02,01,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

1990-91-ஆம் ஆண்டில் ரூ.4,08,70,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பரிசுகள் வழங்குதல்

ஒவ்வோர் ஆண்டும், மாநில மற்றும் மாவட்ட அளவில் தனித்தனியாக எட்டாம் வகுப்பு, 10-ஆம் வகுப்பு +2 பொதுத் தேர்வுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

பேரறிஞர் அண்ணா-தந்தை பெரியார் நினைவுப் பரிசுகள்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், மேல்நிலைப் பள்ளித் தேர்வில் அந்தந்த மாவட்டத்திலே முதல் மற்றும் இரண்டாம் மதிப்பெண்கள் பெற்றுத் தொழில் கல்லூரிகளில் சேரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த இரண்டு மாணவர்களுக்கும், இரண்டு மாணவியர்களுக்கும் 1989-90-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,000 என உயர்த்தப்பட்ட வீதத்தில் ஐந்து வருடங்களுக்குப் பேரறிஞர் அண்ணா நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில், முதல் இரண்டு நிலைகளில் மதிப்பெண் பெற்று பல்தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிலும் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியருக்குத் தந்தை பெரியார் நினைவு விருதுகள் வழங்கப்படுகின்றன. இவ்விருதுகளைப் பெற, பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.12,000 என்று இருந்தது. 1989-90-லிருந்து வருமான வரம்பு நீக்கப்பட்டது. இதற்காக 1990-91-ஆம் ஆண்டில் ரூ.5,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால், 250 மாணவ, மாணவியர் பயன் அடைவார்கள்.

தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டம்.

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் துறையால் நடத்தப்படும் 278 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்குச் சத்துணவு வழங்குவதற்காக 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.32,24,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

புத்தகங்கள் மற்றும் எழுது பலகைகள் வழங்குதல்

மேற்குறிப்பிட்ட 278 பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு எழுது பலகைகள், பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள் முதலியவற்றை இலவசமாக வழங்க 1990-91-ஆம் ஆண்டிற்கு ரூ.15,07,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

சீருடைகள் (பள்ளிகள்)

மேற்குறிப்பிட்ட 278 பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு ஒவ்வோராண்டும், தீபாவளிக்கு ஒரு ஜோடி சீருடையும், பொங்கலுக்கு ஒரு ஜோடி சீருடையுமாக ஆண்டிற்கு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்கு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.29,23,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சீருடைகள் (விடுதிகள்)

ஆண்டுதோறும் உயர்நிலைப்பள்ளி விடுதியிலுள்ள மாணவ மாணவியருக்குத் தீபாவளிப் பண்டிகைக்கு ஒரு ஜோடி சீருடையும், பொங்கல் பண்டிகைக்கு ஒரு ஜோடி சீருடையுமாக இரண்டு ஜோடி சீருடைகள் வழங்கப்படுகின்றன. 33,500 மாணவ மாணவியர் பயன்பெறும் வகையில் 1990-91-ஆம் ஆண்டிற்காக ரூ.29,17,000 கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காணும் வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கூடங்கள் செயல்படு கின்றன:

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை

(1) தையல் மற்றும் ஆயத்த ஆடைப் பயிற்சி நிலையம், அண்ணாநகர், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம்.

(2) தையல் மற்றும் பூ வேலைப்பாடு நிலையம் தெற்குத் தெரு, மதுரை மாவட்டம்.

இதன்மூலம் 70 நபர்கள் பயிற்சி பெறுவர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை.

(3) தையல் பயிற்சி நிலையம், திருவெண்ணெய் நல்லூர், தென்னார்க்காடு மாவட்டம்.

(4) தையல் பயிற்சி நிலையம், இராமவர்மபுரம், கன்னியா குமரி மாவட்டம்.

(5) தையல் பயிற்சி நிலையம், உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.

(6) தையல் பயிற்சி நிலையம், சேரன்மாதேவி, திருநெல்வேலி - கட்டபொம்மன் மாவட்டம்.

(7) தையல் பயிற்சி நிலையம், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம்.

(8) நாரிழைப்பிரிவு, குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.

தையற் பயிற்சி நிலையங்கள், சமூக நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழும், நாரிழைப் பயிற்சி நிலையம் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை நிர்வாகத்தின் கீழும் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 125 நபர்கள் பயிற்சி பெறுவர். இதற்காக 1990-91-ஆம் நிதியாண்டிற்கு ரூ.4,28,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பாசனக் கிணறுகள் தோண்டுதல்.

சீர்மரபினரின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் பொருட்டு, அவர்களில் 2 ஏக்கருக்கும் குறையாத சாகுபடி நிலம்

உள்ளவர்களுக்கு, பாசனக் கிணறு தோண்ட மானியத் தொகை அளிக்கப்படுகிறது. கிணறு ஒன்றுக்கு உயரளவாக ரூ.2,500 மானியத் தொகை அளிக்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண் டிற்கு ரூ.75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 30 நபர்கள் பயன் பெறுவர்.

வீட்டுவசதி

சீர்மரபினருக்கு ஒவ்வொன்றும் ரூ.4,300 மதிப்பீட்டுச் செலவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. 1979-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இம்மதிப்பீட்டில், தற்போது வீடுகள் கட்ட இயலாது. ஆகவே, வீடுகள் கட்டுவதற்கான செலவை உயர்த்துவதற்கான கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

1989-90-ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், தேவராயநேரி நரிக்குறவர் காலனியில் உள்ள 140 வீடுகளையும் கிணற்றையும் பழுது பார்க்கும் வேலை முடியும் தறுவாயில் உள்ளது. இதற்காக ரூ.2,02,500 அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுமனைகள் வழங்க நிலம் கையகப்படுத்துதல்.

முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர், போயர் மற்றும் நரிக்குறவர் முதலிய வகுப்பினருள் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் வழங்க, தனியார் பட்டா நிலங்களைக் கையகப்படுத்தும் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.13,20,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இத்திட்டத்தை மேலே குறிப்பிட்டவாறு விரிவுபடுத்துவதற்கு ரூ.1 கோடி கூடு தலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இவ்வரசு பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினரின் வாழ்க்கை நிலையை உயர்த்திட, பல முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது. இம்மானியத்தை ஏற்று ஒப்புதலளிக்க இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறினார்கள்.

	ரூ.
பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	15,25,000
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை	13,92,000

விடுதிக் கட்டிடங்கள் கட்டுதல்.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையைச் சேர்ந்த 596 விடுதிகளில், 58 விடுதிகள் மட்டுமே, அரசுக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. எஞ்சியுள்ள விடுதிகள், வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. 14 விடுதிகள் கட்டும் பணி, பொதுப் பணித் துறையால் மேற்கொள்ளப்பட்டு அப்பணி பல்வேறு நிலைகளில் உள்ளது. 1990-91-ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.400 இலட்சம் செலவில் 40 விடுதிகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

பகுதி நேர ஆசிரியர்களை நியமித்தல்.

உயர்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு உதவி புரிவதற்காகப் பகுதி நேர ஆசிரியர்கள் ஆண்டுதோறும் 6 மாதத்திற்கு நியமனம் செய்யப்படுகின்றனர். இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.125 வீதம் மதிப்பூதியம் வழங்கப்படுகிறது. 1989-90-ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 4,100 மாணவ,மாணவியர் பயன் அடைந்தனர்.

உணவு மானியம்

தனியாரால் நடத்தப்படும் 38 மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கியுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர் ஒவ்வொருவருக்கும் உணவுச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.70 என்ற வீதத்தில் ஓராண்டில் 10 மாதங்களுக்கு உணவு மானியம் வழங்கப்படுகிறது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.12,000 வரை உள்ள மாணவ, மாணவியர் மட்டுமே இந்த மானியம் பெறத் தகுதியுடையவர்களாவர்.

1989-90-ல் 2,109 மாணவர்கள் பயனடைந்தனர். ரூ.11,83,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1990-91-ஆம் நிதியாண்டிற்கு இதற்காக ரூ.12,65,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

படிப்புதவித் தொகைகள்

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த விடுதியில் தங்கிப் பயிலும் மற்றும் விடுதியில் தங்காமல் பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் படிப்புதவித் தொகை அளிக்கப்படுகிறது. விடுதியில் தங்காது பிற இடங்களில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கான படிப்புதவித் தொகையில், படிப்புக் கட்டணம், தனிக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணம், புத்தகங்களின் தொகை ஆகியவை அடங்கும். விடுதிகளில் தங்கிப் பயிலுபவர்களுக்கான படிப்புதவித் தொகையில் மேற்சொன்ன கட்டணங்களுடன் நிர்ணயிக்கப்பட்ட உண்டி, உறையுள் கட்டணமும் அடங்கும். இவர்கள் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.5,000 ஆக இருந்ததை உயர்த்தி ரூ.12,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ, மாணவியர்க்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும், சீர்மரபினர் மாணவ, மாணவியர்க்கு ஆறாம் வகுப்பிலிருந்தும் இவ்வுதவித் தொகை வழங்கப்படுகிறது. இவ்வுதவித் தொகையைப் பெற, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 விழுக்காடு மதிப்பெண்ணிற்குக் குறையாமல் பெற்றிருக்க வேண்டும். ஆனால் சீர்மரபினர் மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருப்பதே போதுமானதாகக் கொண்டு உதவித் தொகை வழங்கப்படுகிறது. உதவித் தொகை பெறுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட வயது வரம்பு 1989-90 முதல் நீக்கப்பட்டு விட்டது.

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியருக்குப் படிப்புதவித் தொகை வழங்க அந்தந்தக் கல்வி நிறுவனங்களின் முதல்வர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

1990-91-ம் நிதியாண்டில் இதற்காக ரூ.5,52,32,000 கீழ்க்கண்டவாறு ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை	ரூ.3,25,35,000
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை	ரூ.2,26,97,000

இலவசக் கல்வி

மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபின மாணவ, மாணவியர்களுக்குக் கல்லூரி வகுப்பு வரை, அவர்களது பெற்றோரின்

ஆண்டு வருமானத்தைக் கணக்கில் கொள்ளாது இலவசக் கல்வித் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. **இத் திட்டத்தின்கீழ் 60,833 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளனர்.**

1990-91-ஆம் ஆண்டில், இத்திட்டத்திற்காக ரூ.3,62,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

15. பயிற்சி

சிறப்புப் பயிற்சி நிலையம்.

அனைத்திந்திய உயர் அரசுப் பணிகளுக்காக மைய அரசு தேர்வாணையம் நடத்தும் தேர்வுகள் எழுதவிருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக, இத்துறை 1971-ஆம் ஆண்டிலிருந்து சென்னையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்றை நடத்தி வருகிறது. இந்நிலையத்தில் 60 மாணவ, மாணவியர் (விடுதியில் தங்கிப் பயிலுவோர் 50 பேர், வெளியில் தங்கிப் பயிலுவோர் 10 பேர்) சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்நிலையத்தில் சேர, பெற்றோர்களின் ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.12,000-லிருந்து ரூ.24,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு இலவச தங்கும் வசதியும், திங்கள் ஒன்றுக்கு ரூ.250-க்கு மிகாத செலவில் உண்டி வசதியும் செய்து தரப்படுகிறது. இப்பயிற்சி நிலையம், இந்திய ஆட்சிப் பணி மற்றும் ஏனைய மைய அரசுப் பணிகளுக்கான தேர்வுகளுக்குப் பயிற்சி அளிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வுக் குழு, இரயில்வே பணியாளர் தேர்வுக் குழு மற்றும் இதர பல்வேறு பணியாளர் தேர்வு அமைப்புகள் நடத்தும் தேர்வு எழுதவும் சிறப்புப் பயிற்சி அளிக்கக் கருதப்பட்டுள்ளது. இதனால் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு நல்ல வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற அரசின் நோக்கம் நிறைவேறும் எனக் கருதப்படுகிறது.

கோவை, அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியில், அனைத்திந்தியப் பணிகளுக்கான தேர்வு எழுதவிருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபின மகளிருக்குச் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்காக, 1989-90-ஆம் ஆண்டு முதல் சிறப்புப் பயிற்சி மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் ஆண்டுதோறும் 25 பெண்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1990-91-ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும்

சீர்மரபினரைச் சேர்ந்த மேலும் நான்கு தொகுதியினருக்கு அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகள் எழுத, சிறப்புப் பயிற்சித் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் ஆண்களும் பெண்களுமாக 25 பேர் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்திட்டத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2.40 இலட்சம் செலவாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம், டாக்டர் அழகப்பா பல்கலைக் கழகம், காந்தி கிராமம் கிராமியப் பல்கலைக் கழகம் மற்றும் திருநெல்வேலி புனித சேவியர் கல்லூரி ஆகிய இடங்களில் அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்த பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் பயனடையும் வகையில் இப்பயிற்சிகள் அளிக்கப்படும். அகில இந்தியப் பணிகளுக்கான தேர்வுகளைத் தமிழகத்திலிருந்து மேலும் அதிகமானவர்கள் எழுத இச்சிறப்புப் பயிற்சி உதவும்.

சென்னையில் உள்ள சிறப்புப் பயிற்சி நிலையத்தை நடத்தவும், கூடுதல் வசதிகள் செய்து கொடுக்கவும் 1990-91-ஆம் ஆண்டில் ரூ.19,40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுநோக்குப் பொறியியல் பட்டறைகள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டத்தில் செக்கானூரணியிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்தில் வீரகேரளம்புதூரிலும் மூன்று பொதுநோக்குப் பொறியியற் பட்டறைகள் இத்துறையின் நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இவை 1984-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து தொழிற்பயிற்சி நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டு, தற்போது, சென்னை வேலை வாய்ப்புப் பயிற்சித்துறை இயக்குநரால் நிர்வகிக்கப்படுகின்றன. இப்பட்டறைகளில் பொருத்துதல், பற்றவைத்தல், இரும்புத் தகடு செய்தல் ஆகியவற்றில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. சீர்மரபினர் வகுப்பைச் சேர்ந்தவர்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சொந்தமாகத் தொழில்கள் தொடங்குவதற்குத் தேவையான தொழில் நுட்பத் திறமை அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆண்டு ஒன்றிற்கு 208 நபர்கள் இப்பயிற்சி நிலையங்கள் மூலம் பயன் பெறுவர். 1990-91-ஆம் நிதியாண்டிற்கு ரூ.16,35,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக் கூடங்கள்.

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் இனத்தவருக்குப் பயிற்சி அளிப்பதற்காகக் கீழ்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியக் கோரிக்கை மீது சட்டப் பேரவை உறுப்பினர்கள் நடத்திய விவாதத்திற்குப் பதிலளித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் (10.4.90 அன்று) ஆற்றிய பதிலுரை.

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர் மரபினர், சிறுபான்மையோர் ஆகியோருக்கான மானியம் இன் றைய தினம் விவாதிக்கப்பட்டு, அது நிறைவேற்றித் தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற கட்டத்தில், இந்த மானியத் தின் அடிப்படையிலே பல்வேறு நல்ல கருத்துக்களை வழங்கி யுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். எதிர்க்கட்சியின் சார்பிலே பேசிய உறுப்பினர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கி இருக்கிற தொகை குறைவானது என்று கூறி னாலும், அல்லது சிலவற்றைக் குறை கூறிக் குற்றம் சாட்டிப் பேசினாலுங்கூட, அத்தகைய குறை கூறல்கள், குற்றச்சாட்டுகள் இவை எல்லாம் மேலும் இந்தத் துறையை வளர்ப்பதற்கும் அப்படி வளர்ப்பதன் மூலமாக, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், மற்றும் சிறுபான்மை மக்களுக்கு நன்மை செய்ய இந்த அரசை ஊக்கப்படுத்தும் வேண்டுகோளாக அமையும் என்கின்ற எண்ணத்தோடு நான் அந்தக் கருத்துக்களை யும், அவை எதிர்த்தரப்புக் கருத்துக்களாக இருந்தாலும் குற்றம் சாட்டப்பட்ட கருத்துக்களாக இருந்தாலும் அவற்றையும் நான் பணிவன்போடு ஏற்றுக் கொள்கின்றேன்.

நான், இன்றைக்கு முதலில் இந்த விவாதத்திலே எதிர் பார்த்ததும் ஏறத்தாழ நிறைவேறி இருப்பதும்- இந்த ஒரு மானி யத்திலாவது நம்முடைய அப்துல் லத்தீப் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல அவை உறுப்பினர் அனைவரும் ஒன்றாக இருந்து கருத்து மோதுதல்களுக்கு அதிக இடம் தராமல், கடுமை யான வார்த்தைப் பிரயோகங்களுக்கு வழி வகுக்காமல், மோதுதல் இல்லாமல் நிறைவேற்றித் தர வேண்டும் என்பதுதான். ஏனென் றால் நம்முடைய நண்பர் பி.எச். பாண்டியன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல பெரும்பாலான பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர்மரபினர், சிறுபான்மை யினர் வாழுகின்ற இந்தத் தமிழ் நிலத்தில் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நாமெல்லாம் இந்த அவையிலே வீற்றிருக்கிறோம். ஆளும் கட்சியினராக இருந்தாலும் எதிர்க் கட்சியினராக இருந்தாலும் அந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே நாம் வீற்றிருக்கிறோம்.

சமுதாயப் புரட்சி ஏற்படக் காரணமானவர்கள் துயில் கொள்ளும் திக்கு நோக்கித் தொழுதிடுவோம்!

ஒரு 40 ஆண்டு அல்லது 50 ஆண்டுக் காலத்திற்கு, இன்னும் மேலே சொல்லக்கூடிய காலத்திற்குப் பின்னோக்கி இந்த மாநிலத்திலே அமைந்திருந்த அரசுகளை எண்ணிப் பார்த்து, இன்றைக்கு இந்த அவையிலே அமர்ந்திருக்கிற நாமெல்லாம் யார், எப்படிப்பட்டவர்கள், எப்படி ஒதுக்கி வைக்கப்பட்ட வர்கள், எப்படி அடக்கி வைக்கப்பட்டவர்கள்? நாமெல்லாம் இன்றைக்கு ஒரு அவையிலே அமர்ந்து இருக்கின்ற அளவுக்கு வளர்ச்சி, முன்னேற்றம் இன்னும் சொல்லப்போனால் சரியாக சமுதாயத்தில் ஒரு புரட்சி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் யார் என்பதை எல்லாம் நாம் எண்ணிப் பார்த்து, அவர்கள் இன் றைக்குத் துயில் கொண்டிருக்கிற திக்கு நோக்கித் தொழ வேண்டி யவர்களாக இருக்கிறோம்.

சமுதாயத்தை விழிப்படையச் செய்த கம்யூனல் ஜி.ஓ.

1921-ஆம் ஆண்டில் பனகல் அரசர் ஆளுகின்ற பொறுப் பில் தலைமைப் பதவியை ஏற்ற அந்த நேரத்தில் கல்வித் துறை யிலே, வேலைவாய்ப்புத் துறையிலே பெரும்பாலான மக்களைக் கொண்ட சமுதாயம் தலை எடுக்க முடியாமல் புறம் தள்ளிப் போகிறது என்பதை எண்ணிப் பார்த்து அந்த மக்களுடைய நன்மைக்காக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தபோது, நிறை வேற்றப்பட்ட சட்டம் நடமாட முடியாமல் அன்றைக்கு இருந்த அதிகாரவர்க்கத்தால் தடுக்கப்பட்டு, அதன் பின்னர் அமைச்சர் பொறுப்பை 1928-ஆம் ஆண்டு சுப்பராயன் அவர்கள் தலைமை யிலே ஏற்றுக்கொண்ட முத்தையா முதலியார் அவர்கள், 'கம்யூனல் ஜி.ஓ.' என்கிற அந்த வரப்பிரசாதத்தை நமக்குச் சட்ட ரீதியிலே வழங்கினார்கள். அப்படி வழங்கப்பட்டபோது ஒரு வேலைக்கு, ஒரு பணிக்கு 12 பேர்களை எடுக்க வேண்டுமென்றால் அந்த 12 பேர்களில் ஏற்கெனவே முன்னேறியவர்கள் எத்தனை பேர், முன்னேற வேண்டிய நிலையில் பின்னுக்குத் தள்ளப்பட்டு இருப்பவர்கள் எத்தனை பேர், இஸ்லாமியர் எத்தனை பேர், கிறிஸ்தவர் எத்தனை பேர், தாழ்த்தப்பட்டோர் எத்தனை பேர் என்கின்ற ஒரு முறை வகுக்கப்பட்டு, அது சட்டமாக ஆக்கப்பட்ட போது அன்றைக்குப் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது.

முத்தையா அவர்கள் அதைச் சட்டமாக நிறைவேற்றிய போது, 1928-ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்கள் குடியரசு இதழில் ''மந்திரி முத்தையா முதலியார் வாழ்க! வாழ்க!! வாழ்க!!!'' என்று மூன்று வாழ்த்து முழக்கங்களை இணைத்துத்

தலையங்கம் எழுதினார்கள் என்றால் எவ்வளவு உணர்ச்சிட் பூர்வமாக இந்தக் கருத்து அன்றைக்கு இந்தச் சமுதாயத்தை விழிட் படையச் செய்வதற்கு ஒரு திட்டமாக வந்திருக்கிறது, ஒரு சட்ட மாக வந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்த்துட் பெருமை அடைய முடியும்.

எதிர்ப்புகளைத் தூள்தூளாக்கிய பெரியார்-அண்ணாவின் போர்க்குரல்!

இன்றைக்கு வளர்ந்துவிட்ட ஒரு சமுதாயத்தில், பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்கக்கூடிய ஒரு சமுதாயத்தில், நம்முடைய முன்னோர்கள் ஒரு 40, 50 ஆண்டுக் காலத்திற்கு முன்பு இதற்காகப் போராடியதெல்லாம் மிகச் சாதாரணமாகத் தெரியக் கூடும். ஆனால், அன்றைக்கு இருந்த சூழ்நிலையிலே இப்படிப் பட்ட புரட்சிக்கு வித்திட்டவர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு அந்தப் பணியினை மேற்கொண்டார்கள் என்பதை நாம் எண்ணிப் பார்த்து,அவர்களைப் போற்றிப் புகழக்கடமைப்பட்டிருக்கிறோம்.

எதிர்ப்புக்கிடையிலே கொண்டுவரப்பட்ட அந்தச் சட்டம், அதற்குப் பிறகு 1936-க்குப் பிறகு அன்று அமைந்திருந்த அரசால் எதிர்க்கப்பட்டாலும்கூட தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் அன்றைய தினம் போர்க்குரல் எழுப்பிய காரணத் தால் அந்த எதிர்ப்பு தூளாக்கப்பட்டது. அதற்குப் பிறகு குமார சாமி ராஜா அவர்கள் காங்கிரஸ் கட்சி சார்பிலே முதலமைச் சராகப் பொறுப்பேற்றிருந்த அந்தக் கால கட்டத்தில் 1950-ஆம் ஆண்டு வாக்கில் அவரும் அந்தச் சட்டத்தைப் புறக்கணிக்க வில்லை. அதற்கு முன்பே ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் 'இந்த சட்டத்தைப் புறக்கணிக்க வேண்டும், இதை ரத்து செய்ய வேண்டும்' என்ற குரலுக்குச் செவி சாய்க்காத காரணத் தினால் ஓமந்தூர் ராமசாமி அவர்களைத் ''தாடி வைக்காத ராமசாமி நாயக்கர்'' என்றுகூட அன்றைக்கு கேலி பேசினார்கள், கிண்டல் செய்தார்கள்.

அரசியல் சட்டம் முதன்முதலில் திருத்தப்படக் காரணம் யார்?

ஆனால் 1950-ஆம் ஆண்டில், இது நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உயர்நீதி மன்றத்திலும், உச்ச நீதி மன்றத்திலும் இந்தச் சட்டம் செல்லாது என்று அரசியல் சட்டத்தின் அடிப் படையிலே சொல்லப்பட்ட நேரத்தில்,பெரியாரும் அண்ணாவும் எந்த அளவுக்கு, தமிழகத்திலே போர்க்கோலம் பூண்டிருந்தார்கள் என்பது கடந்த கால வரலாறாகும். அவர்கள் மாத்திரம் அல்ல

இதே மன்றத்திலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் உறுப்பின ராக இருந்து மறைந்த கோசல்ராம் அவர்கள், மறைந்த ஆர்.வி. சுவாமிநாதன் அவர்கள் எல்லாம்கூட நீதி மன்றத்தினுடைய தீர்ப்புக்குப் பிறகு, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய வாழ்வு பெருமளவு பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே அரசியல் சட்டத்திலே ஒரு மாற்றம் தேவை, இதற்கான ஒரு மாற்றம் செய்ய வேண்டும் என்ற கருத்தை, பெரியார் அவர்களுடைய கருத்தை, அண்ணா அவர்களுடைய கருத்தை, அவர்களும் ஏற்றுக்கொண்டு இந்த மாமன்றத்திலே பேசி, அதற்குப் பிறகு, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள், முதல் தடவையாக அரசியல் சட்டத்தைத் திருத்தியதே தமிழகத்திலே ஏற்பட்ட அந்தப் புரட்சியின் காரணமாகத்தான்.

அதற்குப்பிறகுதான் 'சோசியல் அண்டு எஜுகேஷனலி பேக்வேர்ட்' என்கின்ற அந்தச் சொற்றொடர் பயன்படுத்தப் பட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒரு பாதுகாப்புக் கவசமாக அரசியல் சட்டம் திருத்தப்பட்டது. ஆனால் இன்றைக்குக்கூட இந்த உரிமை, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தேவை என்று வாதிட வேண்டிய சூழ்நிலை நமக் கெல்லாம் இருக்கிறது. அன்றைக்கு இந்தச் சட்டம் தோற்கடிக்கப் பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு இதழில் ஒரு தலையங்கத்தைத் தீட்டினார்கள். அந்தத் தலையங் கத்தைத் தொடர்ந்து அவரும் கிளர்ச்சியிலே ஈடுபட்டார். 1951-ஆம் ஆண்டில் கம்யூனல் ஜி.ஓ. வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செல்லு படியாகாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளிக்கிறது.

அண்ணா எழுதிய தலையங்கம்!

அண்ணா அந்தத் தலையங்கத்தில் எழுதுகிறார்.

''ஏமாந்த காலத்தில் ஏற்றம் கொண்டோரால் சமூக நீதி சாக்கடையில் தள்ளப்பட்டுவிட்டது, சட்டம் என்ற கோல் கொண்டு. சுப்ரீம்கோர்ட் இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டி வகுப்பு உரிமை செல்லுபடியாகாது என்று தீர்ப்புத் தந்து விட்டது. சட்டம் என்ற கூண்டு, உள்ளே, சமூக நீதி, தேன் தேடி அலைபவனை தேள் கொட்டியதைப்போல, சமநீதி மூலம் தன் முடிந்துபோன வாழ்வைச் சீர்படுத்திக் கொள்ளத் தொடங்கிய மக்களின் முன்னேற்றப் பாதையிலே வீழ்ந்த பேரிடியாகும் இந்த சம்பவம். திகைத்துத் திண்டாடும் திராவிட சமுதாயம், ரத்தம் கொதிக்க, எண்ணங்கள் கிளர்ச்சி முரசு கொட்ட, எங்கள் முது கெலும்பு உடைக்கப்பட்டதா, இருதயத்தையோ எத்தர்கள் எடுத்து விட்டனர், எங்களுக்கா இந்தப் பேரிடி என்று தமது ஒளியிழந்த

கண்களிலே நீர் ததும்ப, ஒலியிழந்த குரல்களிலே வேதனை தொனிக்க, தமது தலைவர்களைச் சோகத்தோடு பார்க்கிறது. சமூக நீதி சென்னை நீதிமன்றத்திலே சட்டப் பிரச்சினை மூலம் சாய்க்கப்பட்டது. நாம் எல்லாம் குமுறினோம். நாடெங்கும் மக்கள் கண்டனத்தைத் திரட்டிக் காட்டினோம், 'சம நீதி வேண்டும், இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்து' என்ற முழக்கங்களோடு!'' என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அண்ணா சொன்னார். ''நாட்டிலுள்ள ஜாதிப் பாகுபாடு அனைத்தும் ஒழிந்து, மக்கள் அனைவருமே சமுதாயத் துறையிலே ஒன்றே குலம் என்ற நிலை ஏற்படும் வரையில், இந்த வகுப்புவாரி முறை, அதாவது வகுப்புக்கு ஏற்ற நீதி வழங்கப்பட வேண்டுமென்ற ஏற்பாடு இருந்தே தீர வேண்டுமென்று குறிப்பிட்டார்.

நேரு கூறிய கருத்து!

பண்டித நேரு அவர்கள், பாராளுமன்ற காங்கிரஸ் உறுப்பினர்களுடைய கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்:

'I will lay special emphasis on casteism because it is the most dangerous tendency. We talk about casteism and we condemn it as we should. But the fact remains that a half dozen or may be ten so called superior castes dominate the Indian scene among the Hindus. There is no doubt about it. If we do not equalise or tend to equalise, undoubtedly casteism will flourish in a most dangerous way!

என்று குறிப்பிட்டார்.

'நான் ஜாதித் தன்மை குறித்து முக்கியமான கவனம் செலுத்த விரும்புகிறேன். ஏனென்றால் அது மிகவும் ஆபத்தான போக்கு ஆகும். நாம் ஜாதிகளைப் பற்றிப் பேசுகிறோம். அதைப்பற்றிக் கண்டிக்கிறோம். எதனால் என்றால், இந்து சமுதாயத்தைச் சேர்ந்த 6 அல்லது 10 உயர்ந்த ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இந்தியாவின் அமைப்பையே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதைப்பற்றி எந்தவித சந்தேகமும் இல்லை. நாம் அதனைச் சமப்படுத்தாமலோ, சமப்படுத்த முயற்சிக்காமலோ இருந்தால் சந்தேகத்திற்கு இடம் இன்றி ஜாதித் தன்மை மிக ஆபத்தான அளவிலே வளர்ந்துகொண்டு போகும்' என்று நேருபிரான் அந்தக் கூட்டத்திலே எடுத்துக் காட்டினார்கள்.

தகுதி, திறமை என்பது அர்த்தமற்ற கூச்சல் என்றார் முத்தையா முதலியார்!

பேராசிரியர் அவர்கள் அந்தப் போராட்டத்தின் போது வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூலை எழுதினார். அந்த நூலுக்குச் சிறப்புரை எழுதியவர் திரு. முத்தையா முதலியார் அவர்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகிறார்கள், மிக அழகாக ''கம்யூனல் ஜி.ஓ.வை ஆதரிப்பவர்கள் கூறுவதெல்லாம் தகுதியற்ற முன்னேறிய வகுப்பினரை அதிகம் எடுப்பதைக் கைவிட்டு, தகுதியற்றவர் என்றாலும் பிற்படுத்தப்பட்டவர் என்றால் உரிமை மிகுந்த மற்ற வகுப்பாரை எடுப்பது என்பதாகும். மேலும் தகுதி, திறமை என்பது அர்த்தமற்ற, ஆதாரமற்ற, சுயநல ஏமாற்றுக் கூச்சலே ஆகும்'' என்று முத்தையா முதலியார் குறிப்பிட்டார். அதையே பெரியார் குறிப்பிடுகிறார். ''இந்தியாவுக்கு, சிறப்பாக தென் இந்தியாவுக்கு ஜாதி வித்தியாசங்கள் ஒழிக்கப்படுவதும், சட்டப்பூர்வமாக அது வெற்றிபெறும்வரை சமூக எதிர்ப்பையும், இழிவையும் சமாளிக்க அரசாங்கத்தின் அரசியல் உரிமை ஸ்தாபனங்களில் பேதப்படுத்தப்பட்ட வகுப்புகளுக்கு விகிதாச்சார உரிமைகள் வேறுபடுவதையும் ஒரு பெரும் சமதர்மப் புரட்சியாகவே நான் க்ருதுகிறேன்.''

மேலும் பெரியார் கூறுகிறார்:

''ஜாதியையும், மதத்தையும் ஒரு புறத்திலே காப்பாற்றிக் கொண்டு, மற்றொரு புறத்திலே ஜாதி, மத வகுப்பு பிரதிநிதித்துவங்கள் கேட்பது இழிதன்மை என்று சொன்னால் அப்படிச் சொல்வது ஆயிரம் மடங்கு, இரண்டாயிரம் மடங்கு இழிதன்மையும், வஞ்சகத் தன்மையும், துரோகத் தன்மையும் ஆனது'' என்று பெரியார் சொல்கிறார். இத்தகைய கருத்துக்களுடைய அடிப்படையிலேதான் இந்த நிலத்தில் ஒடுக்கப்பட்ட மக்கள், அடக்கப்பட்ட மக்கள், தாங்கள் எப்படியும் முன்னேற வேண்டுமென்ற முனைப்பிலே ஈடுபட்டு அதற்கான வகையிலே உறுதியான அரசுகள் தங்களால் இயன்றவரை அவர்களுக்குக் கைகொடுத்து, இன்று இருக்கின்ற இந்த அரசு, கடந்த கால அரசுகளை விட மேலும் ஒரு மடங்கு அல்ல, இரு மடங்கு அல்ல, பல மடங்கு நன்மைகளை இந்தச் சமுதாயத்திற்குச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு பணியாற்றிக்கொண்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்டோர் நலனுக்கு எனத் தனித்துறை ஏற்படுத்தியதே கழக அரசுதான்!

இந்த அரசு 1969-ஆம் ஆண்டு அண்ணா அவர்களுடைய தலைமையிலே அமைந்த பிறகு அண்ணா அவர்கள் மறைந்து

அந்தப் பொறுப்பை நான் ஏற்றபோது, 1969-ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக முதன் முதலில் ஒரு தனித்துறை அமைக்கப்பட்டதை நீங்கள் மிக நன்றாக அறிவீர்கள்.

அதற்குத் தனியாக ஒரு அமைசசர் ஏற்படுத்தப்பட்டதும் அப்போதுதான். 69 வரை இந்த பிற்படுத்தப்பட்ட மக்களுடைய துறைக்கான மானியத்தில், நம்முடைய திரு. லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டது போல, இந்த மானியம் கவனிப்பாரற்று, கேட்பாரற்று விவாதிக்கப்பட்ட சூழலில், சில லட்சம் ரூபாய்கள் தான் இந்த மானியத்திற்காக ஒதுக்கப்பட்டது. 69-ஆம் ஆண்டு தான் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மானியத்திற்காக முதன் முதலாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 69-லே ஒரு கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை, 20 ஆண்டுகளில் வளர்ந்து, வளர்ந்து, கடந்த ஆண்டு 19 கோடி ரூபாய் என்ற அளவிலே வந்து நின்றது. ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய் என்ற அளவிலே வளர்ந்த இந்தத் தொகையை இன்றைய தினம் மேலும் ஒரே ஆண்டில், நம்முடைய நண்பர் பூவராகன் அவர்கள் இங்கே பாராட்டி, எடுத்துச் சொன்னதைப்போல, 11 கோடி ரூபாயை அதிகமாக்கி, ஒரே ஆண்டில் 30 கோடி ரூபாய் இந்தத் துறைகளுக்காக இன்றையதினம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலனில் இந்த அரசுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதைக் காட்டுகின்ற சான்றாகும்.

முயற்சி பலனளித்ததா?

இங்கே மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 20 சதவிகிதம் அளிக்கப்பட்டதைப் பாராட்டி அனைவரும் பேசினார்கள். எனக்கு இன்று பெருமகிழ்ச்சி என்னவென்றால், பிற்படுத்தப்பட்ட-மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக விவாதிக்கப்படும் இந்த மானியத்தில் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த திருமதி. பொன்னம்மாள் அவர்களும், நண்பர் திரு. பழனிச்சாமி அவர்களும் இன்னும் இதற்குத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுப் பேசியது எனக்கு மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். ஏனென்றால் எந்த மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்ட - அடித்தளத்தில் வீழ்த்தப்பட்டு, பிற்பட்டுக்கிடக்கிற மக்கள் உறவோடு நண்பர்களாக வாழ வேண்டுமென்று எண்ணுகிறோமோ, அவர்களிடத்திலே இன்றைக்கு அந்த ஒற்றுமை இல்லை.

இப்போதுகூட நான் வேதனையோடு தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றைக்குக்கூட தெற்கு மாவட்டங்களில், ஒரு மாவட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் இடையிலே ஏற்பட்ட ஒரு கலவரத்தின் காரணமாக இரண்டொருவர் உயிர் இழந்திருக்கிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இந்த அவையிலே இருக்கின்ற தனித் தொகுதியிலே வெற்றி பெற்ற உறுப்பினர்கள் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் பேசுவதும், அதைப்போல ஆதி திராவிடர் நலத் துறை மானியத்திலே பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினுடைய பிரதிநிதிகள் அவர்களுக்காகப் பேசுவதும், இந்த மாமன்றத்திலே நாம் ஒரு நல்ல மரபாக வளர்த்திருப்பது அந்த மக்களிடத்திலே ஒற்றுமையை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படைக் கொள்கையோடுதான். இருந்தபோதிலும்கூட இன்னமும் பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அந்த ஒற்றுமை உணர்வோடு செயல்பட, உறவு கொள்ள முன்வரவில்லையே என்பதை எண்ணுந்தோறும், இவ்வளவு செய்தும்கூட, இவ்வளவு கை தூக்கிவிட எல்லா அரசுகளும் முயன்றும்கூட, இந்த முயற்சி பலனளிக்கவில்லையே என்ற ஏக்கம் நம்மை வாட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

மானும்-மானும் ஒரே துறையில் தண்ணீர் அருந்தலாகாதா?

நான் எழுதிய ''ஒரே இரத்தம்'' என்ற தொடர் கதையிலே கூடக் குறிப்பிட்டிருக்கிறேன். அந்தக் காலத்திலே, புராண காலத்திலே, புலியும், மானும் ஒரே துறையிலே தண்ணீர் குடித்தது என்று படித்திருக்கிறோம். ஆனால் இந்தக் காலத்தில் மானும், மானுமாவது ஒரே துறையில் தண்ணீர் குடிக்கக்கூடாதா? பிற்படுத்தப்பட்ட மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் மான் இனந்தானே! அவர்கள் வேங்கை இனம் அல்லவே! இருவரில் ஒருவர் வேங்கை இனம் அல்லவே! பிறகு மானும், மானும்கூட இந்தக் காலத்திலே ஒரே துறையில் தண்ணீர் குடிக்க மறுக்கின்றனவே என்ற ஆதங்கத்தை நான் அதிலே வெளியிட்டிருக்கிறேன்.

50 சத இடஒதுக்கீடு வர, போராடியது யார்?

எனவே, நாம் இந்தத் துறையின் மூலமாகப் பணத்தை வாரி வழங்கினாலும், அதற்காகப் பள்ளிகளை எழுப்பினாலும், கல்லூரிகளை உருவாக்கினாலும், வேலை வாய்ப்பு மற்றும் பல

வாய்ப்புகளை இந்த மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக நாம் ஒதுக்கித் தந்தாலும்கூட, அவர்களிடத்திலே ஏற்படுகிற வளர்ச்சி முழு அளவில் இல்லை என்பதால், அவர்கள் வாழ நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டுமென்ற அந்த வேண்டுகோளையும் இந்த மான்யம் விவாதிக்கப்படுகிற நேரத்திலே நான் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக 20 சதவிகிதம் ஒதுக்கீடு செய்தது பற்றி எதிர்க்கட்சியின் சார்பாகப் பேசிய சின்னச்சாமி அவர்கள் இது என்ன பெரிய காரியம்'என்பது போலக் குறிப்பிட்டார். இதற்கு மீண்டும் ஒரு மக்கள் தொகைக் கணக்கை எடுக்க வேண்டும் என்று முதலிலே பேச்சை ஆரம்பித்த மாரப்பன் இங்கே எடுத்துச் சொன்னார். அவர்களே சொன்னார்கள். அவர்களே பதிலும் சொன்னார்கள். சிங்காரமும் சொன்னார். சென்சஸ் எடுக்க ஆரம்பித்தால் ஒவ்வொரு சாதியும் 2 கோடி, 3 கோடி என்று சொல்லி, தமிழ்நாட்டினுடைய மக்கள் தொகை 20 கோடி என்று வந்துவிடும் என்று அவரே அதற்கான விடையையும் வழங்கினார்.

என்னதான் சரியாகக் கணக்கு எடுக்க, சரியான அதிகாரிகளை நாம் இன்றைக்குப் பயன்படுத்தினாலும்கூட அது இன்றையச் சூழ்நிலையிலே அது முடிந்த பிறகு, அவர்களுக்கான விகிதாச்சாரத்தை ஒதுக்கினால் இயலாது என்ற காரணத்தினாலே தான் விரைவிலே ஒரு முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காகத் தான் ஏற்கெனவே எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை - பல குழுக்களின் சார்பாக எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களை, சட்டநாதன் குழு, தொடர்ந்து அம்பாசங்கர் குழு - இந்தக் குழுக்களின் சார்பாக எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலே தான் நாம் இந்த 20 சதவீதத்தை ஒதுக்கினோம். 50 கொடுத்த காரணத்தினாலேதானே நீங்கள் 20 கொடுக்க முடிந்தது என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. 50 என்று அறிவித்த அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களை நான் அன்றைக்கே பாராட்டி இருக்கின்றேன்.

பாராட்டுகிற நேரத்திலே பாராட்டுவதும், குறைகளைச் சொல்ல வேண்டிய நேரத்திலே குறை சொல்வதும் எதிர்க்கட்சிக்கு இலக்கணமாக இருக்க வேண்டும் என்ற அந்த அடிப்படையில் அப்போதே பாராட்டி இருக்கின்றேன். ஆனால் அந்த 50 சதவீதம் வரவேண்டும் என்பதற்காகப் போராடியவர்களை யாரும் மறந்துவிடக்கூடாது. இந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால் 9 ஆயிரம் ரூபாய் என்று ஒரு உச்சவரம்புச் சட்டத்தை எம்.ஜி.ஆர். தலைமையிலே அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்கள் பிரகடனப்படுத்தியபோது, அதை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்தது. திராவிடர் கழகமும் எதிர்த்தது. இன்னும் சொல்லப் போனால் காங்கிரஸ் கட்சி, தீர்மானம் போட்டு எதிர்க்கவில்லையே தவிர, காங்கிரஸ் கட்சியிலே இருந்த நண்பர் திண்டிவனம் இராமமூர்த்தி எங்களுடைய மேடைகளிலே வந்து அந்த 9 ஆயிரம் உச்சவரம்புச்சட்டத்தை, அந்த விதிமுறைகளை எதிர்த்துப் பேசி இருக்கிறார். ரமணிபாய் அம்மையார் எங்களுடைய கூட்டங்களிலே வந்து பேசி இருக்கிறார். அனந்தநாயகி அம்மையார் எங்களுடைய கூட்டங்களிலே கலந்துகொண்டு பேசி இருக்கிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த காலத்திலே நண்பர் தா. பாண்டியன் அவர்கள், எங்களுடைய கூட்டங்களிலே கலந்துகொண்டு பேசி இருக்கிறார்.

அவர்கள் எல்லாம் கட்சி சார்பாக அந்த முடிவுகளை எடுக்கா விட்டாலும்கூட அந்தக் கட்சிகளிலே உள்ள பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த பிரதிநிதிகள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பேராபத்து வந்து விட்டது என்று அந்த 9 ஆயிரம் ரூபாய் உச்சவரம்புச் சட்டம் கூடாது. ஒரே குடும்பத்தில் 9 ஆயிரம் ரூபாய் வருமான்ம் உள்ளவன், 10 ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவன் என்று இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கொண்டால், 9 ஆயிரம் ரூபாயும் அதற்குக் கீழும் வருமானம் உள்ளவன் பிற்படுத்தப்பட்டவன். 9,100 ரூபாய் வருமானம் உள்ளவன் முன்னேறிய சாதி என்றால், அண்ணன் ஒரு சாதி, தம்பி ஒரு சாதி என்று வீட்டுக்கு உள்ளேயே ஆகிவிடும் என்று அன்றைக்கே மிகக் கடுமையாக நாங்கள் எல்லாம் எதிர்த்த காரணத்தால், அந்த எதிர்ப்பைத் துச்சமாகக் கருதுவேன் என்று சொல்லாமல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றைக்கு நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு அவர்கள் மறுபரிசீலனை செய்து, 50 சதவீதம் என்கின்ற ஒதுக்கீட்டை பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகச் செய்தார்கள். அதை அப்போதே நாங்கள் பாராட்டி இருக்கின்றோம், எங்களுடைய அணுகு முறையின்படி.

ஏனென்றால் இது ஒரு கட்சிக்கு உரிய பிரச்சினை அல்ல. கட்சிக்கு உரிய பிரச்சினையாக எப்போது ஆகிறது என்றால் நம்முடைய திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல நாம் அறிவிக்கின்ற திட்டங்கள் ஒழுங்காகப் போய்ச் சேராமல் அதிகாரிகள் செயல்படுவார்களேயானால் அப்பொழுது அதை அரசியல் நோக்கத்தோடு விமர்சிப்பதற்கு எல்லாக் கட்சிகளிலே உள்ளவர்களுக்கும் உரிமை இருக்கிறது. ஏனென்றால், இவைகள் எல்லாம் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும் என்கின்ற அந்த எண்ணத்தோடுதான் அரசு திட்டங்

படிப்பு வரை (பி.ஏ.,பி.காம்.,பி.எஸ்.ஸி.) இலவசக் கல்வி வழங்கப்படும் என மகிழ்ச்சியோடு அறிவிக்கிறேன். (பலத்த கையொலி)

இந்த அறிவிப்புகளோடு அகமகிழ்ந்து, உங்களுடைய பாராட்டுக்களை நான் பகிர்ந்து கொண்டு, இந்த அளவிலே என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

வெளியீடு:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

களைத் தீட்டுகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகின்ற இடத்திலேகூட அந்த சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் அவர்களுடைய பிரதிநிதிகள் அந்த அதிகாரிகள்தான் இருக்க வேண்டும் என்று கூட நான் எண்ணி அந்த வகையிலேதான் அந்தத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்குச் செயல்படுத்தப்படுகின்றன என்பதையும் இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள் என்று நான் நம்புகின்றேன். அதிலே தவறுகள் இருக்குமேயானால், அவைகளைச் சுட்டிக்காட்ட எல்லாக் கட்சியினருக்கும் உரிமை உண்டு.

மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற வலியுறுத்துவோம்!

நம்முடைய நண்பர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் உரையாற்றிய சீரங்கன் அவர்கள் இதை வரவேற்று, அதிலே சில குறைபாடுகள் இருப்பதையும் எடுத்துச் சொன்னார்கள். அதைப் போல ஒவ்வொரு கட்சியின் சார்பிலே குறைபாடுகள் சொல்லப்பட்டன. மண்டல் கமிஷன் தீர்மானத்தை நிறைவேற்றியதே இந்த மாமன்றம்தான். இன்னும் சொல்லப்போனால் மண்டல் கமிஷன் 1977-ஆம் ஆண்டில் அன்றைக்கு இருந்த ஜனதா அரசில் நியமிக்கப்படுவதற்கு முன்பே, 4 ஆண்டுகளுக்கு முன்பே 1973-ஆம் ஆண்டு அலகாபாத்தில் நடைபெற்ற பிற்படுத்தப்பட்டோர் மாநாட்டில் மைய அரசின் பணிகளுக்கும், மைய அரசு சார்புடைய நிறுவனங்களிலே உள்ள பணிகளுக்கும் இதுபோன்ற வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்ற கருத்தை அன்றைய் தினம்நான் அந்த மாநாட்டிலே எடுத்துச் சொல்லி இருக்கின்றேன்

ஏனென்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நீண்ட நாள் கொள்கை - மாநில அரசிலே மாத்திரம் இந்த இட ஒதுக்கீடு இருந்தால் போதாது. மத்திய அரசு நிறுவனங்களிலும், மத்திய அரசிலும், நிர்வாகத்திலும்கூட இந்த இட ஒதுக்கீடு தேவை என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இதே மன்றத்திலே தீர்மானம் போட்டு அனுப்பினோம். முன்பிருந்த அரசு அந்தத் தீர்மானத்தைச் சட்டை செய்யவில்லை. ஆனால் இன்றைக்கிருக்கின்ற மத்திய அரசு அந்தத் தீர்மானத்தை ஏற்று, குடியரசுத் தலைவர் உரையிலேகூட மண்டல் கமிஷன் பரிந்துரைகள் நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொல்லி, பிறகு நிதிநிலை அறிக்கையிலேகூட மண்டல் கமிஷன் பரிந்துரை நிறைவேற்றப்படும் என்று எடுத்துச் சொல்லி, அண்மையிலே பிரதமர் வி.பி.சிங் அவர்களேகூட மாமன்றத்திலே உறுதியளித்திருக்கின்றார் விரைவில் நிறைவேற்றப்படும் என்று.

என்னமோ வரும் என்று எனக்கு நம்பிக்கையே கிடையாது என்று திரு. பி.எச். பாண்டியன் இங்கே சொன்னார். அப்படிச் சொன்னது, வர வேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காகச் சொல்லப்பட்ட வார்த்தையே தவிர வேறல்ல. வராவிட்டால் அது வருவதற்கேற்ற வகையிலே நாம் அனைவரும் ஒருமித்த குரல் கொடுக்க உங்களையெல்லாம் அதிலே இழுத்துச் சேர்த்துச் செல்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் என்னதான் நாம் சலுகைகளை வழங்கினாலும், உரிமைகளை வழங்கினாலும், அதை வழங்குகின்ற ஒரே காரணத்தாலேயே அவர்கள் எல்லாப் பயன்களையும் பெற்றுவிட முடியும் என்று சொல்ல முடியாது. எனவேதான் இங்கே சில புதிய கருத்துக்களை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

அருமை நண்பர் லத்தீப் எடுத்துக்காட்டியதைப் போல- இது கேட்காமலே சொல்லப்படுகிற அறிவிப்புகள் அல்ல. ஆனால் பல நேரங்களில் கேட்கப்பட்டு, இன்றைக்குச் சுட்டிக் காட்டப்பட்டு, உறுதியாகக்கேட்கப்படாவிட்டாலும்கூட, என் மனதிலே இருக்கிற எண்ணங்களை, ஐந்தாறு நாட்களாகச் சிந்தித்துச் சிந்தித்து அதை ஒரு அறிவிப்பாக உங்கள் முன் வைக்கிறேன்.

இன்னும் மதுரை மாவட்டம் போன்ற பகுதிகளிலே இருக்கிற சீர்மரபினர் - குறிப்பாக பிரமலைக் கள்ளர்களுக்கெல்லாம் இருக்கிற குறைகளை ஆசையன் இங்கே எடுத்துக் காட்டினார்.

தம்பி ஏ.ஜி. சம்பத் பேசும்போது இன்னும் அதிகத்தொகை இதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

அடுத்த ஆண்டு ரூ.50 கோடி ஆக உயர உங்கள் கையொலி துணைநிற்கும்!

சின்னச்சாமி அவர்கள் முப்பதுக்குப் பின்னால் ஒரு கோடு போடுங்கள் என்று குறிப்பிட்டார். எப்போதும் அவர்கள் அந்த இலக்கணத்தில் கைதேர்ந்தவர்கள். ஒன்று என்று போட்டுவிட்டு பிறகு ஐந்தாறு பூஜ்யம் போட்டால் - அந்த ஒன்று இருந்தால் தான் பூஜ்யத்துக்கெல்லாம் மதிப்பு என்கிற இலக்கணத்தையே நமக்கெல்லாம் சொல்லிக் கொடுத்தவர்கள். எனவேதான் ஒன்று போடுங்கள் என்றார். ஆனால், இந்த முப்பது கோடி ரூபாய் இந்தத் துறைக்காக ஒதுக்கப்பட்டிருப்பது எப்படி வளர்ந்திருக்கிற

தென்றால் - ஒவ்வொன்றாக வளர்ந்து, வளர்ந்து, ஆண்டு தோறும் ஒரு கோடி, ஒரு கோடி என்று வளர்ந்து - சென்ற ஆண்டு 19 கோடி ரூபாயாக வளர்ந்து நின்று, இந்த ஆண்டு மேலும் 11 கோடி ரூபாயை அதிகமாக உயர்த்தி - மொத்தம் முப்பது கோடி ரூபாயாக ஆகியிருக்கிறது. அடுத்த ஆண்டு உங்களுடைய உணர்வுகளையெல்லாம் நம்முடைய நிதித் துறை செயலாளரிடம் எடுத்துச் சொல்லி, ஐம்பது கோடி ரூபாயாக இந்தத் தொகையை உயர்த்துவதற்கு (பலத்த கையொலி) உங்களுடைய கையொலி துணை நிற்கும் என்று நான் கருதுகிறேன்.

அந்த வகையில் நாம் அளிக்கின்ற சலுகைகள், உரிமைகள் எல்லாம் பயன்பெறவேண்டுமல்லவா? அப்படிப் பயன்பெறுவதற்குச் சில இடையூறுகள் இருக்கின்றன. சட்டநாதன் குழுவிலே கூட அதைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

சில குடும்பங்களில் ஏற்கனவே நான்கைந்து பேர் டாக்டர் ளாக இருப்பார்கள். ஒரே குடும்பத்தில் நான்கைந்து பொறி ாளர்கள் இருப்பார்கள். அவர்களுடைய வீட்டுப் பிள்ளைகள் லபமாக மீண்டும் ஒரு டாக்டராக, பொறியாளராக வந்து விடுகிறார்கள். அவைகளையெல்லாம் எப்படித் தவிர்ப்பது என்று அன்றைக்கே ஒரு கேள்வி எழுந்தது. இன்றைக்குக்கூட அதைப் பேசும்போது சில பேர் - சின்னச்சாமி கூட குறிப்பிட்டார் என்று கருதுகிறேன். அவர்கள் எல்லாம் ஜாடையாகக் குறிப்பிட்டார்கள்.

மனம் மகிழத்தக்க நல் அறிவிப்புகள்!

எனவே, அதைப் பற்றிச் சிந்தித்துச் சில அறிவிப்புகளை நீங்கள் எல்லாம் மகிழத்தக்க வண்ணம் இங்கே செய்கிறேன்.

பொதுத் தொகுப்பு (Open competition) - பிற்படுத்தப்பட்டோருக்கான தொகுப்பு (B.C.) - மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (M.B.C.) மற்றும் சீர்மரபினருக்கான தொகுப்பு - ஆதி திராவிட பழங்குடி மக்கள் தொகுப்பு என மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழில் கல்வித் தேர்வுக்கு அந்தந்தத் தொகுப்புக்கு உரிய மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களில் - அதாவது தொழில் கல்வி பயில மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பொதுத் தொகுப்புக்கு 'கட்-ஆப்' மார்க் 245 என்று இருக்கலாம். மிகப்பிற்படுத்தப்பட்டோருக்கு 230 என்று இருக்கலாம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 220 என்று இருக்கலாம்.

அப்படி உரிய மதிப்பெண் எடுக்கும் மாணவர்களில் ஒரு குடும்பத்தில் பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால் அந்தக் குடும்பத்திலிருந்து வரும் முதல் மாணவருக்கு ஐந்து மதிப்பெண்கள் அதிகமாகத் தரப்படுவதற்கு அரசு ஆணை பிறப்பிக்கும். ஆனால் இதுகுறித்து தவறான சான்றிதழ் தருவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகிய தொகுப்புகளில் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, சட்டக் கல்லூரி, விவசாயக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி ஆகிய தொழிற்கல்விகளுக்கு - தேர்வு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்கள் குடும்பத்தில் இதுவரை பெற்றோரோ அல்லது உடன் பிறப்புகளோ பல்கலைக் கழகப் பட்டம் பெறாதவர்களாக இருந்தால்-அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும், அதற்குக் குறைவாகவும் இருந்தால் அந்தக் குடும்பத்தில் இருந்து வரும் முதல் மாணவராக இருந்தால் அவருக்கு மேற்கண்ட தொழிற்கல்வி வரை இலவசமாக வழங்கப்படும் என அறிவிக்கின்றேன். (பலத்த கைதட்டல்)

இதே சலுகையைப் பெறுவதற்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு மேலே குறிப்பிட்ட மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழிற்கல்விகளைப் பெற ஆண்டு வருமானம் 15,000 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் என்று நிர்ணயிக்கப்படுகிறது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்)

வருமான வரம்பின்றி - ஆதி திராவிட பழங்குடி மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கும் இளங்கலைப் பட்டப் படிப்பு வரை (பி.ஏ.,பி.எஸ்.சி.,பி.காம்.) இலவசக் கல்வி வழங்கப்படுமென, கடந்த ஆண்டு அறிவித்து, அதனை இப்போது செயல்படுத்தி வருகிறோம்.

இதனைத் தொடர்ந்து,

இந்த ஆண்டு முதல்-பிற்படுத்தப்பட்டோருக்கும்-அந்தக் குடும்பத்திலே இதுவரை பெற்றோரோ அல்லது உடன்பிறப்புகளோ யாரும் பல்கலைக் கழகப்பட்டம் பெறாதவர்களாக இருப்பின் - அந்தக் குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12,000 ரூபாயும் அல்லது அதற்குக் குறைவாகவும் இருக்குமேயானால் - அந்தக் குடும்ப்த்தைச் சேர்ந்த முதல் மாணவருக்கு இளங்கலை பட்டப்

தமிழ் எங்கள் இளமைக்குப் பால்!-இன்பத்
தமிழ் எங்கள் புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்- இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்த தேன்!

நல்வாழ்வுத்துறை அமைச்சர் தம்பி பொன்முடியும் மற்றும் இங்கே உள்ள மருத்துவத்துறை நண்பர்களும் பெரும் முயற்சி எடுத்து, அந்த எந்திரத்தை இங்கே தருவிக்கவும் அதன் வாயிலாகப் பலருக்குச் சிகிச்சை அளிக்கவும் மேலும் பலரும் நாடி வரத்தக்க அளவிற்கு நல்லதோர் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

''இன்னொன்றையும் நான் உங்களுக்கு இந்த நேரத்திலே தெரிவிக்க விரும்புகிறேன். ஏழைகள் என்று வரையறுக்க மாத வருமானம் 500 ரூபாய் என்றுதான இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்று அறிவிக்கின்றேன், இனிமேல், மாத வருமானம் ஆயிரமும் ஆயிரத்திற்குக் கீழும் உள்ளவர்களும் இந்த இலவசச் சிகிச்சையைப் பெறலாம் என்று நான் இந்த நிகழ்ச்சியிலே மிகுந்த உணர்வுபூர்வமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

''நம் ஒவ்வொருவர் உடலிலும் 5 லிட்டர் இரத்தம் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்; 5 லிட்டர் இரத்தம் சாதாரணமாக ஒருவருடைய உடம்பிலே இருக்கிறது என்றால், அந்த ஐந்து லிட்டர் இரத்தத்தின் ஒவ்வொரு துளியும் இருதயத்திற்குச் சென்று, மீண்டும் மற்ற அங்கங்களுக்குத் திரும்புகின்றது, ஆனால், ஐந்து லிட்டர் இரத்தம் இருக்கக்கூடிய இந்த உடலில் இருதயத்திலேயே அந்த ஐந்து லிட்டர் இரத்தமும் இருப்பதில்லை. அதிலே, அது கொஞ்ச இரத்தத்தைத் தான் சுமக்கிறது. ஒரு நிமிடத்தில் 70 சி.சி. என்கிற அளவிற்கு மிகச் சிறிய அளவு இரத்தத்தைத்தான் இருதயம் தன்னிடத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் உடல் எங்கும் பரவிக் கொண்டிருக்கின்ற அந்த இரத்தத்தினுடைய அளவு ஐந்து லிட்டர். அந்த இரத்தத்தை எல்லா இடங்களுக்கும் அனுப்பி, உடலை இயங்கச் செய்கின்ற- உடல் உயிரோடு இருக்கின்றது என்கின்ற தன்மையை வெளிக்காட்டுகின்ற அளவில் அவ்வளவு அற்புதமும் நம் இருதயத்திற்கு இருக்கின்றது. அதனால்தான் எதையும் தாங்கும் இதயம் என்று சொல்கின்றோம்.

''இதயத்தைப் பற்றிச் சொல்லும்போது இன்னமும் நாம் நம்முடைய மையப்பகுதியிலே இடது புறத்திலே இருக்கின்ற சிறு உறுப்பை மாத்திரம் சொல்வதில்லை. அது இருதயம் என்றாலும்கூட ஒரு மனிதனுடைய எண்ணம், சிந்தனை, அறிவு, ஆற்றல், இரக்க உணர்வு, தயவு, தாட்சண்யம் அத்தனையும் பிறக்கின்ற பகுதி மூளைப் பகுதியாக இருந்தாலும் கூட - அதிலே இருக்கின்ற செல்களாக இருந்தாலும் கூட - நாம் அதற்கும் சேர்த்து இதயம் என்றுதான் பேர் வைத்திருக்கின்றோம். ''உன்னுடைய மூளையில் என்னைப் பற்றி என்ன கருதிக்கொண்டிருக்கிறாய்? '' என்று யாரும் சொல்வதில்லை. ''உன்னுடைய இருதயத்திலே என்னைப் பற்றி என்ன கருதிக் கொண்டிருக்கிறாய்?'' என்றுதான் வீம்பு பேசும் வீரன் இன்னொருவனிடத்திலே சொல்வான். ''உன்னுடைய இருதயத்திலே எனக்கு என்ன இடம்?'' என்றுதான் காதலன், காதலியைப் பார்த்துப் பேசுவான். ஆனால் இருதயம் என்பது நாம் குறிப்பிடுகின்ற மையத்தின் இடப்பகுதியிலே இருக்கின்ற அந்த உறுப்பு என்று சொல்லப்பட்டாலும்கூட அவனுடைய எண்ணங்கள், அவனுடைய நினைவுகள், அவனுடைய சிந்தனைகள், இதைத்தான் நாம் இருதயம் என்று சொல்கின்றோம்.

''எனவே மிகச் சிறந்த உறுப்பாக - அதே நேரத்தில் மிகச் சிறந்த பொருளைத் தரக்கூடிய ஒன்றாக விளங்குகின்ற அந்த இருதயத்தைக் காப்பாற்ற வேண்டியது - உடலில் எந்த நோய் வந்தாலும், அந்த நோய்க்கான முற்றுப்புள்ளி வைக்கக்கூடியது கடைசியாக இருதயம்தான். அது நின்று விட்டால் பிறகு எந்த நோயைக் குணப்படுத்தியும் பயனில்லை. எனவே அப்படிப்பட்ட மிக முக்கியமான உறுப்புகளில் ஏற்படுகின்ற கோளாறுகளைக் கண்டுபிடிக்க முடியாமல் - என்ன என்றே தெரியாமல் தவித்த ஒரு காலம், பழங்காலம்.

''எனவே விஞ்ஞான முறையைப் பயன்படுத்தி மனிதனை வாழ வைக்க வேண்டும். யாருடைய சாவையும் முற்றிலும் தடுக்க முடியாது; தள்ளிப் போட வேண்டும். அவனை வாழ வைப்பதன் காரணமாக நாடு வாழ வேண்டும்; சமுதாயம் வாழ வேண்டும் என்கின்ற அந்த மனநிலையோடுதான் மருத்துவத் துறையிலே பல ஆய்வுகள் இன்றைய தினம் வெளிக்கிளம்பியிருக்கின்றன. அப்படிப்பட்ட ஆய்வுகளை நடத்துவதற்கு ஏற்ற இடமாக இங்கே ஒரு இடம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

''விஞ்ஞானம் வளர்ந்து வருகிற நேரத்தில் இப்போது இருதய இரத்தக் குழாயை மாற்றுவது மாத்திரம் அல்ல; உலகத்திலே பல பகுதிகளில் இருதயத்தையே மாற்றுகின்ற அளவிற்கு அறுவைச் சிகிச்சை நடைபெறுகிறது. என்னுடைய ஆசையெல்லாம் இங்கேயும் விரைவில் இருதயத்திலே உள்ள இரத்தக் குழாய்களை மாற்றுகின்ற அறுவை மாத்திரம் அல்ல; இருதயத்திலே பழுது ஏற்பட்டால் இருதயத்தையே மாற்றியமைக்கின்ற அளவிற்கு அத்தகைய ஒரு விஞ்ஞான வளர்ச்சி நம்முடைய சென்னை மாநகரத்திலும் இடம் பெற்றது என்கின்ற அந்த நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் எண்ணுகின்றேன்.''

இவ்வாறு மாண்புமிகு முதல்வர்கலைஞர் அவர்கள் பேசினார்.

-நிகழ்ச்சித் தொகுப்பு
பி.எல். ராஜேந்திரன்.

செந்தமிழே உயிரே!

டாக்டர் நா. ஆறுமுகம்
தமிழ் இணைப்பேராசிரியர்,
புதுவைப் பல்கலைக் கழகம்,

உயிரினம் உயிர்த்து வாழ விரும்புகின்றது. மூச்சு விட்டு வாழ்வது- வாழ விரும்புவது பொதுவான அதனியல்பு. தான் வாழ்வதைப் போலவே தனக்குப் பின்னால் தன் வாரிசும் வாழ வேண்டும் என்று இனவளர்ச்சி செய்வதும் உயிரினத்தின் இயல்பு.

மனிதனும் வாழ விரும்புகிறான்; மகிழ்ச்சியாக- இன்பமாக வாழ விரும்புகின்றான். தன் சந்ததியைத் தனக்குப் பின்னால் விட்டுச் செல்லவும் விரும்புகின்றான்.

மனிதன் மிக அதிகமாக விரும்புவது தன் உயிரைத்தான்; அவன் கடைசியாக இழக்க விரும்புவதும் தன் உயிரைத்தான்!

இந்தப் பின்னணியில் பாவேந்தர் செந்தமிழ் மொழியை வாழ்த்திப் பாடும் இசையமுதைக் கேளுங்கள்.

செந்தமிழே! உயிரே! நறுந்தேனே!
செயலினை மூச்சினை
உனக்களித்தேனே
நைந்தாயெனில் நைந்துபோகு
மென்வாழ்வும்
நன்னிலை உனக்கெனில்
எனக்குந் தானே!

தமிழர்க்குச் செந்தமிழ் உயிராயிருக்கிறது. உயிர்ப்பாய்த் திகழ்கிறது. தேனாய்- நறுந்தேனாய்ச் சுவைக்கிறது. இவ்வாறு ஊனாய், உயிராய், உயிர்ப்பாய்த் திகழும் தமிழ்மொழியின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தமிழரின் செயலும் மூச்சும் பயன்பட வேண்டும்.

'தமிழுக்கு அமுதென்று பேர்- இன்பத்
தமிழெங்கள் உயிருக்கு நேர்'என்றும்,
'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு'

என்றும், பாவேந்தர் தெளிவுபடுத்துவார்.

தமிழுக்காகச் செயலும், மூச்சும் அளிப்பது- அளிக்க வேண்டுவது ஏன் என்பதையும் விளக்குகிறார்.

நைந்தா யெனில் நைந்துபோகும்
என்வாழ்வு
நன்னிலை உனக்கெனில்
எனக்குந் தானே

தமிழின் வாழ்விலேதான் தமிழரின் வாழ்வும் உள்ளது. தமிழின் உயர்விலேதான் தமிழரின் உயர்வும் உள்ளது. தமிழரின் வாழ்வு பெருமை பெற வேண்டுமெனில் தமிழ்பெருமை பெற வேண்டும். தமிழ் சிறந்து விளங்கினால்தான் தமிழர் சிறக்க இயலும்.

நன்னிலையும் நைந்து போதலும்:

கல்லணையும் பெரிய கோவிலும் தோன்றுவதற்குக் காரணமான அறிவும் ஆற்றலும் தமிழ்மொழியில் சொல்லிக் கொடுக்கப்பட்ட காலத்தில் தமிழைப் பேசிய தமிழனும் சிறந்து விளங்கினான்.

பள்ளியிறுதி வகுப்புக்குரிய (S.S.L.C.) அறிவியல் பாடங்களையும் அன்னைத் தமிழில் சொல்லித் தர இயலாது, ஆங்கிலத்தில்தான் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் நிகழ வேண்டும் என்னும் நிலைக்குத் தமிழ் தாழ்ந்த போது, தமிழனும் சடப்பொருளாய் மானமும் மரியாதையும் அற்றுத் தாழ்ந்தான்.

ஆம்- தமிழ் நைந்து போன போது தமிழரும் நைந்து போயினர்.

இங்கேயும் 'நைந்து போதல்' பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டும்.

துணி, நைந்து போதல் வேறு; கிழிந்து போதல் வேறு. கிழிந்து போவது கண்ணுக்குத் தெரியும்; ஆகவே வேறு துணியைப் பயன்படுத்திக் கொள்வோம். ஆனால் நைந்து போன துணி, கண்ணுக்கு நல்ல துணிபோலத் தோன்றும். கையினால்- விரலினால்- மெல்லக் (இலேசாகக்) கசக்கினாலும் கிழிந்து போகும்.

துணி கிழிவது ஒரே நேரத்தில், தெரிந்து நிகழ்வது; நைந்து போதல் நீண்ட காலத்தில், கண்ணுக்குத் தெரியாமலே நிகழ்வது.

எந்த மொழியையும் ஒரே நாளில்- காலத்தில்- அழிக்க இயலாது. 'காலரா நோய்' வந்து அழிந்து போவதைப் போல ஒரே நேரத்தில் மொழியை அழிக்க முடியாது. மெள்ள, மெள்ளத்தான் மொழியின் பயிற்சியை- பழக்கத்தை- அழிக்க இயலும்!

தமிழின் நைந்துபோன இன்றைய நிலைக்குக் காரணம் பல்லாண்டு காலமாகத் திட்டமிட்டு நடந்த முயற்சியின் விளைவே!

கல்வி, கலை, திருக்கோயில் வழிபாடு, இல்லச் சடங்கு (திருமணம்) என்று, எந்த இடத்திலும் தமிழில்லாத நைந்த நிலை ஒரு குறிப்பிட்ட காலத்திலே ஏற்பட்டிருக்கக் கூடியதா?

ஆகவே தமிழராகிய நாம் உயர, தமிழ் உயர வேண்டும். தமிழராகிய நாம் சிறக்க, தமிழ் சிறக்க வேண்டும்.

தமிழரின் வாழ்வையும் வளர்ச்சியையும் எண்ணிப் பாடிய பாவேந்தரின் உயிர்ப்பாடலை மீண்டும் பாடுவோம்.

செந்தமிழே!உயிரே !நறுந்தேனே
செயலினை மூச்சினை உனக்களித்
தேனே
நைந்தாயெனில் நைந்துபோகு
மென்வாழ்வு
நன்னிலை உனக்கெனில்
எனக்குந்தானே.

பாடலின் பொருளை வாக்குப் பொருளாக நினையாமல், வாழ்வுப் பொருளாகக் கொள்வோம்; வளம் பெறுவோம்.

அதற்கான உறுதியினைப் பாவேந்தரின் நூற்றாண்டுத் தொடக்கவிழா தருமாக!

தமிழரசு

1.6.90

அதன் தொடர்பாக அந்தப் பணி விரைவிலே தொடங்கப் பெற்றது; இன்று இந்த நிகழ்ச்சியிலே தொடக்கவிழா என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, அந்த நிகழ்ச்சியின் காரணமாக ஏறத்தாழ இருபது ஏழை மக்கள் பயன் பெற்றிருக்கின்றார்கள் என்பதைக் கேள்வியுறுகிற நேரத்தில், நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்; பெருமையடைகிறேன்.

"ஏழை-எளியோர்களுக்கு இது போன்ற ஒரு முக்கியமான வசதி தேவை என்று நான் கருதியதற்குக் காரணம், நான் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் எனக்குப் பல பகுதிகளிலிருந்து பரிந்துரைக் கடிதங்கள்-நேரிடையாகவே முறையீடு செய்கின்ற கடிதங்கள் வரத்தலைப்பட்டன. அவற்றில் முக்கியமானவை, 'நாங்கள் இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டியிருக்கிறது. அரசின் சார்பில் நிதி உதவி வழங்கவேண்டும்' என்று வந்த கடிதங்களேயாகும். அத்தகைய கடிதங்களை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக அரசின்சார்பில் முதலமைச்சர் நிதியிலிருந்து அவர்களுக்குத் தொகை அனுப்பி வைக்கப்பட்டு, அவர்களும் ஆங்காங்கு அவர்கள் விரும்பிய மருத்துவர்களிடத்தில் இருதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு, பெரும்பான்மையோர் நலன் பெற்றார்கள் என்ற செய்தியினையும் நான் கேள்விப்பட்டேன்.

"மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இந்தக் குறுகிய கால கட்டத்திலேயே 120க்கு மேற்பட்டவர்களுக்கு - அதுபோல் மாநிலத்திலே பல பகுதிகளிலே உள்ள சாதாரண, சாமானிய மக்களுக்கு நிதி வழங்கப்பட்டவுடன் நான் எண்ணினேன். ஏழை எளியவர்கள், இன்னும்கூட நம்பிக்கையோடு இந்த உதவியைப் பெறவும், இந்தச் சிகிச்சையைப் பெறவும் ஒரு முயற்சி செய்தால் என்ன என்று எண்ணியதின் விளைவுதான் முதலமைச்சர் நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்ட நிகழ்ச்சியாகும். அந்த எண்ணம் வீண் போகவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையில் அரசுத்துறைச் செயலாளர்களும் குறிப்பாக நம்முடைய தலைமைச் செயலாளரும், மக்கள்

"இந்தியாவிலேயே அரசு மருத்துவமனையில் இலவசமாக இருதய அறுவைச் சிகிச்சை செய்திருக்கும் ஒரே மருத்துவமனை, நம்முடைய அரசு பொது மருத்துவமனைதான். மருத்துவத் துறையில் ஏற்பட்டிருக்கின்ற வளர்ச்சி ஏழை எளிய மக்களையும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தோடு, தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் ஒரு கோடி ரூபாயை - இருதய பைபாஸ் அறுவைச் சிகிச்சைக்காகப் பொது மருத்துவமனைக்கு ஒதுக்கினார்கள். அதன் பயனாகத்தான், இப்போது இங்கே 20 இதய நோயாளிகளுக்கு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை நடத்தப்பெற்றுள்ளது."

—டாக்டர் க. பொன்முடி
(மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)
அரசு பொது மருத்துவமனை விழாவில் பேசியதிலிருந்து.

ஆம்பூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட்.,
வடபுதுப்பட்டு-635 812
வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டம்.

தமிழகத்தில் தரமான எஸ்-30 சர்க்கரை உற்பத்தியாளர்கள்.
ஆலை அரைவை தொடங்கியது 25-11-1960.
ஆலையின் அரைவைத் திறன் - 2200 டன்கள்(நாளொன்றுக்கு)
ஆலையின் மூலதனம் - ரூபாய் 110.13 லட்சம்
ஆலை அங்கத்தினர்கள் எண்ணிக்கை - 16,170.
ஆலையில் பணி புரியும் பணியாளர்கள் எண்ணிக்கை- 1,400.

அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்:

1. ஆலை அங்கத்தினர்களுக்குச் சர்க்கரை அபிவிருத்தி நிதிக் கடன் திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன அபிவிருத்திக்காகக் குறைந்த வட்டியில்;
   கிணறு ஆழப்படுத்த ரூபாய் 5,000/- முதல் ரூ. 10,000/-வரையும்,
   மின்சார மோட்டார் வாங்க ரூபாய்5,000/- வரையும்,
   ஆயில் இன்ஜின் வாங்க ரூபாய் 7,000/- வரையும் வழங்கப்படுகிறது.
2. 1981-82 அரைவைப் பருவம் மற்றும் 1982-83 அரைவைப் பருவங்களில் கரும்பு சப்ளை செய்த சுமார் 12,000 அங்கத்தினர்களுக்கு ரூபாய் 25 லட்சத்திற்கு இலவசமாக இடுபொருள் வழங்கப்படுகிறது.
3. தரமான விதைக்கரணை வழங்க மூன்றடுக்கு நாற்றங்கால் திட்டம் அதற்கு மானிய சலுகைகள்.
4. அதிக சர்க்கரைச் சத்துள்ள 8 கரும்பு இரகங்களுக்கு மானியம்.
5. 40 கி.மீ.தூரத்திற்கு மேல் போக்குவரத்து வாடகை மானியம்.
6. மண் பரிசோதனை இலவசமாகச் செய்யப்படுகிறது.
7. விதைநேர்த்தி செய்ய பூஞ்சாண மருந்து இலவசமாக வழங்கப்படுகிறது.
8. களைக்கொல்லி, பூச்சி மருந்து ஆகியவை 50% மானிய விலையில் வழங்கப்படுகிறது.
9. அதிக மகசூல் காணும் விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்.
10. கரும்பு விவசாயிகளுக்குப் பயிற்சி முகாம் மற்றும் கல்விச் சுற்றுலா.

தந்தி: ''சுகர்ஸ்'' தொலைபேசி எண்கள்: 2111 2112 2113 டெலக்ஸ்-0401210 CANE IN
ஆம்பூர்

அளவான குடும்பம் வளமான வாழ்வு

தனி அலுவலர்

எங்களது நல்வாழ்த்துக்கள்:

உயர்க ஓடு, முகட்டோடு, தள செங்கல் தயாரிப்பாளர்கள்

சீனியப்பா டைல் பாக்டரி,
சங்கமங்கலம்
மானாமதுரை.

சீனியப்பா தியேட்டர்
மானாமதுரை
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்.

மாணவர் பக்கம்

நல்ல பண்புகள் நாம் பெறுவோம்!

—புலவர் தமிழ்ப்பித்தன்

ஒன்றும் ஒன்றும் இரண்டாகும்
ஒற்றுமை உணர்வே உயர்வாகும்

இரண்டும் ஒன்றும் மூன்றாகும்
இனிய பேச்சே உரமாகும்

மூன்றும் ஒன்றும் நான்காகும்
முயற்சி ஒன்றே பலன்சேர்க்கும்

நான்கும் ஒன்றும் ஐந்தாகும்
நாளும் கற்பது வளமாகும்

ஐந்தும் ஒன்றும் ஆறாகும்
அறிவை வளர்ப்பது நூலாகும்

ஆறும் ஒன்றும் ஏழாகும்
ஆத்திரம் அடைதல் பாழாகும்

ஏழும் ஒன்றும் எட்டாகும்
ஏழைக் கிரங்குதல் நலமாகும்

எட்டும் ஒன்றும் ஒன்பதென்போம்
எளிமை வாழ்வே இன்பமென்போம்

ஒன்பதும் ஒன்றும் பத்தாகும்
உண்மை உரைத்தல் சொத்தாகும்

பத்தும் ஒன்றும் பதினொன்றே
பகைவருக் கருளுதல் மிகநன்றே!

அறிவுச்சுடர்

ஆர். மணிவண்ணன்

1. இந்திய நாட்டின் முப்படைத் தலைவர் யார்?
2. 1989-ஆம் ஆண்டு நோபெல் பரிசு பெற்ற புத்த மதத் தலைவர் யார்?
3. சுமார் இருபது வயதிற்கு உட்பட்ட ஒருவர், விம்பிள்டன் டென்னிஸ் பந்தயத்தில் வெற்றி பெற்றார். அவர் யார்?
4. குப்தர்களின் காலம் எந்த நூற்றாண்டில் ஆரம்பித்தது..?
5. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காலம் யாது?
6. நமது நாட்டின் மலர் யாது?
7. நமது நாட்டில் உள்ள மிகப் பெரிய குகை எது? அது எங்கே உள்ளது?
8. உலகிலேயே பூமியில் அதிக அளவு வியாபித்திருக்கும் நாடு யாது?
9. சாக்ரடீசின் கிரேக்க மாணவரின் பெயர் என்ன?
10. ஜவகர்லால் நேரு விருது பெற்ற தென் ஆப்பிரிக்கத் தலைவர் யார்?
11. அல்பேனிய நாட்டில் பிறந்து, நமது இந்திய நாட்டில் பொதுத் தொண்டு புரிந்து வரும் பெண் மணி யார்?
12. தொலைக்காட்சியைக் கண்டு பிடித்தவர் யார்?
13. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள தாராபூர் எதற்குப் பெயர் பெற்றது?
14. அடுத்த ஒலிம்பிக் விளையாட்டு எங்கே, எப்போது நடைபெறும்?
15. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?
16. ஐ.நா. சபை அமைந்துள்ள இடம் யாது?

விடைகள்: அடுத்த பக்கம் பார்க்க

அவர்கள் சொன்னார்கள்

மற்றவர்களிடம் காணப்படும் குறையைக் குற்றம் என்று சொல்லிவிடுகிறோம்; அதுவே நமக்கு ஏற்பட்டால், சோதனை என்று கூறுகிறோம். இந்த நிலை கூடாது!

—எமர்சன்

அதிகாரம் செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்; ஆனால், அதற்கு முன்னால் அடங்கவும் தெரிந்து கொள்ளுங்கள்!

—லோலன்

வாழ்வது முக்கியம், அதைவிட முக்கியம் சிறப்பாக வாழ்வது!

—சாக்ரடீஸ்

கற்றவற்றையும் கற்க வேண்டியவற்றையும் கருத்தில் வைப்பவனே கல்வியில் விருப்பமுள்ளவன்!

—கன்ஃபூசியஸ்

நண்பர்களின் சண்டை, எதிரிகளின் வாய்ப்பு!

—ஈசாப்



அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை அடிக்கல் நாட்டு விழா

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் கோபாலபுரத்தில் ரூ.30 கோடி செலவில் அமைக்கப்பட உள்ள அரூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அடிக்கல் நாட்டு விழா 13.5.90 அன்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீர பாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரை முருகன் அவர்கள் முன்னிலை வகித்தார். விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு அரூர் சர்க்கரை ஆலைக்கு அடிக்கல் நாட்டினார். மேலும் அன்னை சத்யா போக்குவரத்துக்கழகம் சார்பில் நான்கு புதிய பேருந்து வழித்தடங்களையும் குடிநீர்த் திட்டப் பணிகளையும் துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார்.

விழாவிற்கு வருகை தந்தவர்களைத் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கா. அலாவுதீன் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றார். அரசு தொழில் துறைச் செயலாளர் திரு பி.வி. வெங்கடகிருஷ்ணன் இ.ஆ.ப. அவர்கள் தமது உரையில், "சர்க்கரை உற்பத்தியில் மற்ற மாநிலங்களைவிட தமிழகம் முன்னிலையில் உள்ளது; தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ஆண்டுதோறும் சுமார் 10 கோடி வரை கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கவிலை தருகின்றன; கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஆண்டுதோறும் ரூ.15 கோடி வரை கரும்பு விவசாயிகளுக்குப் பகிர்ந்து தரப்படுகிறது. மேலும் கரும்புச் சர்க்கரையைக் கச்சாப் பொருளாகப் பயன்படுத்தித் தமிழகத்தில் இன்னொரு காகித ஆலையும் துவக்கப்பட உள்ளது" என்று குறிப்பிட்டார். சர்க்கரைத்துறை ஆணையர் திரு மு.அ.கு. தப்பப் இ.ஆ.ப. அவர்கள் தமது திட்ட விளக்க உரையில் 'இவ்வாலை மூன்று ஆண்டுகளில் தமது உற்பத்தியைத் துவக்கும்' என்றார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஆர். சின்னசாமி, திரு எம். அண்ணாமலை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பேசியதாவது:-

இங்கு அமைய இருக்கிற கூட்டுறவு சர்க்கரை ஆலை நாள் ஒன்றுக்கு 2,500 டன் கரும்பு பிழியும் திறன் உள்ளது ஆகும். 101 ஏக்கர் நிலத்தில் அது அமைய இருக்கிறது. ரூ.30 கோடி செலவில் இந்த கூட்டுறவு சர்க்கரை ஆலை விரைவிலேயே உருவாகும். இந்த ஆலை தனியார் ஆலையாக அமைய இருந்தது. நல்லவேளை அது மாற்றப்பட்டு, கூட்டுறவு சர்க்கரை ஆலையாக மாறிவிட்டது என்று இங்கு கூறினார்கள். இந்த ஆலை மட்டும் இல்லை; இனிமேல் வரஇருக்கிற ஆலைகளும் கூட்டுறவு ஆலையாகவோ அல்லது பொதுத்துறை ஆலையாகவோ தான் இருக்கும் என்பதைத் திட்டவட்டமாக- தெளிவாக- தெரிவித்துக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்கு நல்ல விலையும், லாபத்தில் பங்கீடும் தரமுடியும். எனவேதான் கூட்டுறவு ஆலை பொதுத் துறையில் வரவேண்டும் என்று நானும், இந்த அரசும் வேண்டுகிறோம்.

இந்த ஆலையின் மூலம் 360-க்கும் மேற்பட்ட கிராமத்தினர் பயன் அடைவார்கள். நேரிடையாக 550 பேரும், மறைமுகமாக துணைத்தொழில்கள் செய்ய வாய்ப்பு கிடைப்பதின் மூலமாக 5 அல்லது 6 ஆயிரம் பேரும் பயன் அடைவார்கள். இந்த ஆலைக்கு 10 ஆயிரம் விவசாயிகள் ரூ.15 கோடி மதிப்புள்ள கரும்பை விலைக்கு வழங்கக்கூடிய வாய்ப்பைப் பெறுவார்கள்.

தமிழ்நாட்டில் 29 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மேலும் 3 அல்லது 4 சர்க்கரை ஆலைகள் விரைவில் தொடங்கப்படும். இந்தியாவிலேயே மொத்தம் உற்பத்தியாகும் சர்க்கரையில், தமிழ் நாட்டில் 10 சதவீதம் உற்பத்தியாகிறது என்ற அளவில் நாம் முன்னேறி இருக்கிறோம். கரும்புக்கு நியாயமான விலையைத் தர அரசு தவறியது இல்லை. இனியும் வழங்கப்படும்.

அதிக விலை கொடுக்கும்போது நெல் ஆனாலும், கரும்பு ஆனாலும், நுகர்வோருக்கு இன்னல் இல்லாதவகையில் தனிகவனம் செலுத்த வேண்டும். தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் பேசும் போது திருமண நிதவித் திட்டத்தின் கீழ் 7,500 ஏழை பெண்களுக்கு தலா ரூ. 5 ஆயிரம் வீதம் வழங்கப்பட்டதாகச் சொன்னார். இந்த வருடம் அரசிடம் இருந்து பணம் வரவில்லை என்றார். அரசிடமிருந்து பணம் வர, தாமதம் ஆனாலும் கூட திருமணம் தாமதம் ஆகக்கூடாது. எனவே இதுபோன்ற நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமைச் செயலகத்துக்கு உடனே தகவல் கொடுக்க வேண்டும்.

இந்த விழாவின் மூலமாக எல்லா மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளும் செய்தி 'தலைமை செயலகத்துக்குத் தகவல் கொடுக்கும் போது அதில் ஒரு பிரதியை முதலமைச்சர் அலுவலகத்துக்கு என் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.' காரணம், காரியங்கள் விரைவாக நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்த ஆலை உங்கள் ஒத்துழைப்போடு வளர்ந்து லாபம் பெற வாழ்த்துகிறேன். அத்துடன், இந்த ஆலைக்குப் பெயர் சூட்ட விரும்புகிறேன். கடந்த சில தினங்களுக்கு முன்பு மறைந்த எனது நண்பர் நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினராகப் பதவி வகித்த செ. கந்தப்பன் நினைவாக, "செ.கந்தப்பன் கூட்டுறவு சர்க்கரை ஆலை" என்ற பெயரைச் சூட்டி, உரையை நிறைவு செய்கிறேன்" இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் திரு. முகமது சகி எம்.பி. சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. முல்லை வேந்தன், திருமதி காஞ்சனா கமலநாதன், திரு. வி.சி. கோவிந்தசாமி, திரு. குணசேகரன் (தலைவாசல்), எஸ்.ஆர். சிவலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழா இறுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்திட்டம், மகளிர் மற்றும் சமூக நலம், கூட்டுறவு மற்றும் வேளாண்மைத்துறை, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், வேளாண்மைப்பெருக்குத்திட்டம் உட்பட பல்வேறு திட்டத்தின் கீழ் 4 கோடியே 29 லட்சத்து 8 ஆயிரத்து 255 ரூபாய் மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு வழங்கினார்.

தகவல்: கிருஷ்ணன்.
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்
தச்சுக் கொல்லுப் பணி நிலையம்

ஆலங்குடி

புதுக்கோட்டை மாவட்டம்

தரமான பொருட்களால் சாண எரிவாயுக் கலன்கள், ஸ்டீல் கட்டில், கட்டடங்களுக்குத் தேவையான டிரஸ்கள், பார்லின்ஸ்கள், கிரில்கள், தழை மிதிக்கும் கருவி, இரும்புக் கலப்பை, விவசாயக் கருவிகள் மற்றும் கேட் வகையறாக்களும், தரமான மரங்களினால் அலமாரி, மேஜை, நாற்காலிகளும் கட்டடங்களுக்குத் தேவையான கதவுகள், ஜன்னல்கள் ஆகியவை களும், திறன் வாய்ந்த தொழிலாளர்களால் தயாரித்து சப்ளை செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் தேவைக்குத் தொடர்பு கொள்ளவும்.

திரு. ஜி. நடராஜன்,
ஆணையர்

திரு. பெ. திருமாறன், எக்ஸ்.எம்.எல்.ஏ.,
ஒன்றியக்குழுத் தலைவர்

Pudukkottai Oxygen (Private) Limited
(Manufacturers of Industrial and Medical Gases)

Regd. Office T.S. No. 3791/92
South 3rd Street
Pudukkottai-622 001
Phone: Office: 2161
M.D. Res: 2095

Factory: S.F. 584/4
Kalamavur-622 502
Keeranur (Via)

Phone: 37

T.N.G.S.T.No: 540150 C.S.T. No. 140482/29-6-84 C.E. Licence No.1/85 Gases

"WITH BEST COMPLIMENTS"

Manufacturers of Oxygen Gas
Pudukkottai Oxygen Private Limited.

புதுக்கோட்டை விற்பனைக் குழு
புதுக்கோட்டை

ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் விளைபொருள்கள் விற்பனை செய்வதில் ஏற்படும் நன்மைகள்

★ சரியான எடை
★ உடனடிப் பணம்
★ கிடங்கு வசதி
★ கடன் வசதி
★ போட்டி விலை
★ இலவச சேவை
★ தரம் பிரிக்கும் வசதி
★ மார்க்கெட் நிலவரம் அறிதல்

நாடுவீர் !

நற்பயன் பெறுவீர் !!

நா.கு. பெரியசாமி பி.எஸ்.சி(விவ)
தனி அலுவலர் (பொறுப்பு)
புதுக்கோட்டை விற்பனைக் குழு
புதுக்கோட்டை

பொன். திருப்பதி, பி.எஸ்.சி.,
செயலாளர்,
புதுக்கோட்டை, விற்பனைக் குழு,
புதுக்கோட்டை

பிளாஸ்டிக்ஸ் பிறந்த கதை!

காய்கறிகள், மிருகங்களின் கொழுப்பு போன்ற பொருள்களிலிருந்து இயற்கை வகை ''பிளாஸ்டிக்ஸ்'' தயாரிக்கும் முறை அமெரிக்காவில் 1845-இல் தொடங்கியது.

1869-இல் நியூயார்க் மாநில அச்சக அதிபர் ஜான் ஹயாட் 'செல்லுலாய்டு' வகையைக் கண்டு பிடித்தார். செயற்கை 'பிளாஸ்டிக்ஸ்' தயாரிப்பில் அது ஒரு முன்னோடி.

சீப்புகள், கடிகாரக் கூண்டுகள், செயற்கைப் பல்கள் முதல் புகைப் படப் பிலிம்கள் வரை பல பொருள்களைத் தயாரிக்க செல்லுலாய்டு பயன்பட்டாலும், அதன் மூலம் பொருள்களை வடிவமைப்பது சிரமமாக இருந்தது. அது எளிதில் தீப் பிடிக்கக் கூடியதால் ஆபத்தானதாகவும் கருதப்பட்டது.

அடுத்த சில ஆண்டுகளில் கார்பாலிக் அமிலமும், ஃபார்மால்டிஹைடு என்ற திரவமும் கலந்த 'ரெசின்' என்ற இரசாயனக் கலவையை ஆங்கிலேய அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டாகத் தயாரித்தனர். பிளாஸ்டிக்ஸ் வரலாற்றில் இது ஒரு திருப்பு முனை.

1909-இல் 'ரெசின்' தயாரிப்பை ஆபத்தில்லாததாக மாற்றினார் அமெரிக்க விஞ்ஞானி லியோ பேக்லண்டு, அதுவே 'பேக்லைட்' என்று பெயர் பெற்ற செயற்கைப் 'பிளாஸ்டிக்ஸ்' மூலப் பொருள்.

1920-30 ஆண்டுகளில்பிளாஸ்டிக்ஸ் ஒரு இரசாயனத் தொழிலாகவே வளர்ந்து வந்தது. இரண்டாம் உலகப் போரில் சில உலோக மூலப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் 'பிளாஸ்டிக்ஸ்' தொழில்துறையின் பிற களங்களில் அறிமுகமாகியது.

'பிளாஸ்டிக்ஸ்' பரவலாகப் பல துறைகளில் புழக்கத்துக்கு வந்தது 1950-60களில்தான். உயர் அழுத்த வகை 'பிளாஸ்டிக்ஸ்' 1960க்குப் பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பிறகே 'பிளாஸ்டிக்ஸ்' தொழிலகங்களில் இடம் பெறலாயிற்று.

—நன்றி: 'தினமணி'

நோபெல் பரிசுத் தொகை உயர்வு

பொருளாதாரம், இலக்கியம், இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி ஆகிய பிரிவுகளில் சாதனை படைத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது நோபெல் பரிசு. ஆல்பிரட் நோபெல் என்னும் பெருமகனாரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பரிசுத் தொகை அண்மைக்காலத்தில் 3 மில்லியன் கிரவுன் ஸ்வீடன் நாணயம் கொண்டதாக இருந்தது. அந்தத் தொகை 1990 முதல், 4 மில்லியன் கிரவுன் ஸ்வீடன் நாணயமாக உயர்த்தப்பட்டுள்ளது.

புதுவகை கறுப்புக் கண்ணாடி

வெயிலின் கொடுமையைத் தவிர்ப்பதற்காகக் குளுமை நிறைந்த கறுப்புக் கண்ணாடியை (கூலிங் கிளாஸ்) மக்கள் அணிவது பல்லாண்டுகளாக வழக்கத்தில் உள்ளது.

தற்போது அமெரிக்க நாட்டில் பாட்டரியால் இயங்கும் புதுவகை கறுப்புக் கண்ணாடி உருவாக்கப்பட்டுள்ளது.

கதிரவனின் கதிர்கள் கண்களைப் பாதிக்காத வகையில் இந்தக் கண்ணாடி செயல்புரிகிறது. கதிரவனின் வெளிச்சத்தை 44 சதவிகிதம் முதல் 88 சதவிகிதம் வரை சில வினாடிகளுக்குள் வடிகட்டி விடுகிறது. இக்கண்ணாடிக்குள் ஒருவித திரவம் உள்ளது. கண்ணாடியின் பிரேமில் மிக நுண்ணிய பாட்டரிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவைதான் மின் ஆற்றலை உருவாக்கி, குளுமையை ஏற்படுத்தி, வெயிலின் கொடுமையைத் தவிர்க்க உதவுகின்றன.

அறிவுச்சுடர்

விடைகள்:

1. இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. ஆர். வெங்கட்ராமன்
2. தலாய் லாமா
3. ஸ்டெபி கிராப்
4. நான்காம் நூற்றாண்டு
5. 1951-1956
6. தாமரை
7. எல்லோரா - அவுரங்காபாத்
8. ரஷ்யா
9. பிளாட்டோ
10. நெல்சன் மண்டேலா
11. அன்னை தெரசா
12. ஜே.எல். போர்டு
13. அணுமின்சக்திக்கு
14. 1992-இல் ஸ்பெயின் நாட்டில்
15. நார்வே
16. நியூயார்க்

இலட்சம் மதிப்பீட்டில் பூலத்தூர் ஊராட்சி மன்றக் கட்டிட அடிக்கல் நாட்டுதல், எழுவனூர் ஊராட்சி- கடம்பனூர் கிராமத்தில் ரூ.2.84 இலட்சம் மதிப்பீட்டில் 20 ஆதிதிராவிட வீடுகள் திறப்பு, கோம்பைப்பட்டி ஊராட்சி மேல கோயில்பட்டி கிராமத்தில் ரூ.2.84 இலட்சம் செலவில் 20 வீடுகள் திறப்பு, பண்ணைக்காடு ஊராட்சி மன்றம் ஒரு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டிடத் திறப்பு, இவ்வாறு ஏறத்தாழ 3 கோடி ரூபாய்க்கான நலிந்தோர் நல்வாழ்வுத் திட்டங்களும் வளர்ச்சிக்கான திட்டங்களும் இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே இடம் பெற்றுள்ளன.

இதை- திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு என்று யாரும் எண்ணிவிடத் தேவையில்லை. கொடைக்கானல் மலையிலும் அதைச் சார்ந்துள்ள வத்தலக்குண்டு ஊராட்சி ஒன்றியத்தையும் சார்ந்துள்ள இந்தப் பகுதிகளுக்கு 3 கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்கான விழா தான் இங்கே நடைபெறுகின்றது.

திருமதி பொன்னம்மாள் எம்.எல்.ஏ. அவர்கள் பேசும் போது சுற்றுலாப் பயணிகள் கொடைக்கானலுக்கு வரவேண்டும் என்று விரும்புகிறவர்கள் கொடை ரோட்டில் வந்து இறங்கினால், தங்குவதற்கு இடமில்லை. அங்கு 'மோட்டல்' கட்ட வேண்டும் என்று சொன்னார். நான் அம்மையாருக்குச் சொல்லிக் கொள்வேன்- அது பற்றிய குறிப்பு ஏற்கனவே அரசுக்கு அனுப்பப்பட்டு அது பரிசீலனையில் இருக்கிறது; விரைவிலே அந்த வசதி வாய்ப்புகள் உருவாகும்.

ஏழை எளியோருக்குத் தங்கும் இடவசதி

அதைப் போலவே இன்னொரு கோரிக்கை வைத்தார்கள். உதகை, கொடைக்கானல் போன்ற இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகளாக வரும் ஏழை, எளிய மக்கள் தங்க வசதி இல்லை. வாடகை அதிகம் தரவேண்டியிருக்கிறது. அதற்காக விடுதிகள் கட்டப்பட வேண்டும் என்று சொன்னார்கள்; அதையும் நான் கருத்திலே கொண்டு, மிக விரைவில் அந்த விடுதிகள் கட்டப்பட்டு அடுத்த மலர்க் கண்காட்சித் திறப்பு விழாவோடு அந்தத் திறப்பு விழாவும் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏழை, எளியவர்களுக்குப் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று நண்பர் பழனிவேல் எம்.எல்.ஏ., அவர்கள் குறிப்பிட்டார். நிச்சயமாக இந்த அரசு தகுதிக்கேற்ப யார் யார் அத்தகைய பட்டாக்களைப் பெறத் தகுதியுடையவர்களோ அவர்களுக்கெல்லாம்- குறிப்பாக இந்த மலையிலே வாழ்கின்ற ஏழை, எளியவர்களுக்கெல்லாம் பட்டா வழங்க ஆவன செய்யப்படும்.

'மலைகளின் இளவரசி' என்று இந்தக் கொடைக்கானலை இங்கு பேசும் பொழுது பெயர் சொல்லி அழைத்தார்கள். 'மலைகளின் ராணி' 'உதகமண்டலம்', 'மலைகளின் இளவரசி', 'கொடைக்கானல்' என்று சொன்னார்கள். அப்படி என்றால் 'ஏற்காடு' மலைகளின் குழந்தை' என்று இனிமேல் அவர்கள் பெயரிட்டு அழைக்கலாம். அந்த வகையிலே இங்கு மலைகளின் இளவரசி எல்லா வகையிலும் ஒய்யாரமாக விளங்க, சிங்காரமாக விளங்க, செழிப்போடு விளங்க சட்டமன்ற உறுப்பினர் நண்பர் மூக்கையா கேட்ட சாலைகள் எல்லாம் விரைவிலே வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எளியோருக்கும் வாய்ப்பான இடம்

கொடைக்கானல் நல்ல சுற்றுலா இடமாக மாத்திரம் அல்லாமல், வசதி வாய்ப்பு உள்ளவர்களுக்கு மாத்திரம் தான் ஏற்ற இடம் என்று இல்லாமல், சாதாரண ஏழை, எளிய மக்களுக்கும் இது வாய்ப்பான இடம், வருவதற்கேற்ற இடம், ஏழை எளியோருக்கு அமையும் விதத்திலே மாற்றி அமைக்கப்படும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 21.5.90 அன்று, கொடைக்கானலில் மலர்க் கண்காட்சியைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து.

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

தொகுதி 2 மற்றும் 3-க்கான
முதல் நிலைத் தேர்வுகள்

28.4.90 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தொகுதிகள் 2 மற்றும் 3-க்கான முதல் நிலைத் தேர்வுகள் 9.6.90 மற்றும் 10.6.90 அன்று நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப்பதிலாக 23.6.90 சனிக்கிழமையன்று தொகுதி 2-க்கும் மற்றும் 24.6.90 ஞாயிற்றுக்கிழமையன்று தொகுதி 3-க்குமான முதல் நிலைத் தேர்வுகள் முற்பகல் 10 மணி முதல் 12 வரை நடைபெறும் என அறிவிக்கப் படுகிறது.

கு. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.,
செயலாளர்.

டிஐபிஆர்/1162/எம்.எஸ்/90.

சிறு சேமிப்புத் துறை



இந்த வரைபடம்
உங்கள் வரிப் படம்...

குறைந்துவிட்டதே!

தேசிய
சேமிப்புத் திட்டத்தின்
மூலம்
ரூ.30,000/- வரை
100% வரி விலக்கு
பெறுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டம்

வரிவிலக்கு

வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ்
ரூ. 10,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ்
ரூ. 20,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA பிரிவின் கீழ்
ரூ. 30,000/- வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80CCA மற்றும் 80C பிரிவின் கீழ்
ரூ. 40,000 - வரை வரிவிலக்கு பெற
வருமான வரிச்சட்டம் 80 CCA மற்றும் 80 C பிரிவின்
கீழ் அதிகபட்சமாக ரூ. 50,200/- வரை வருமான
வரிவிலக்கு பெற

உங்கள் முதலீடு

தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.10,000/-
முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.20,000/-
முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/-
முதலீடு செய்யுங்கள்
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல் ரூ.30,000/-
தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/15
ஆண்டு PPFல் ரூ. 14,500/- வரை முதலீடு செய்யுங்கள்.
தேசிய சேமிப்புத் திட்டக்கணக்கு -87ல ரூ.30,000/-
மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீடு/
15 ஆண்டு PPFல் ரூ.40,000/- முதலீடு செய்யுங்கள்.

தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு-1987-ல் முதலீடு செய்வதன் மூலம் வரிச்சுமை குறைய வழி வகுக்கலாம்.

சிறந்த பயன்கள். அதிக வரி விலக்கு. நிறைய லாபம். அனைத்தும் உங்களுக்கு!

தேசிய சேமிப்புத் திட்டம் மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரம் 8வது வெளியீட்டில் ரூ.1000/- அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்கப்படும்.

ஒவ்வொரு முதலீட்டிற்கும் ஒரு பரிசுக் கூப்பனை பெற்றிடுங்கள்.

பரிசுப் பொருட்களின் விவரம்:

1 சூப்பர் பம்பர் பரிசு	— காண்டஸா கார்
1 முதல் பரிசு	— மாருதி கார்
5 இரண்டாவது பரிசுகள்	— ஹீரோ ஹோண்டா மோட்டார் சைக்கிள்
10 மூன்றாவது பரிசுகள்	— கலர் டி.வி.
20 நான்காவது பரிசுகள்	— 165 லிட்டர் ரெப்ரிஜிரேட்டர்
100 ஐந்தாவது பரிசுகள்	— குக்கர்
500 ஆறுதல் பரிசுகள்	— குவார்ட்ஸ் சுவர் கடிகாரம்

மேலும் விபரங்களுக்கு:

அனைத்து அஞ்சலகங்கள்

மாவட்ட ஆட்சித் தலைவர்
(அல்லது)
மாவட்ட சேமிப்பு அலுவலர்

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209

சிறந்த சுற்றுலாத்தலம் கொடைக்கானல் எளியோருக்கும் ஏற்ற இடமாக மாற்றி அமைக்கப்படும்

-முதல்வர் கலைஞர்

"தமிழகம் முழுவதுமே இன்றைக்கு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள். காரணம் குறித்த நேரத்திலே நமக்கு மழை கிடைத்திருப்பதுதான். கிடைக்க வேண்டிய காவிரித் தண்ணீர் தமிழ்நாட்டு விவசாயிகளுக்குக் கிடைக்கத் தாமதமானாலும் கூட, வானம் உங்களைக் கைவிடமாட்டோம் என்று கூறுகிற அளவிற்குக் கருமுகில்கள் இணைந்து சேர்ந்து மழையினை நமக்குத் தருகின்ற அந்த நல்ல வாய்ப்பைக் கண்டு நாம் வியந்து போகிறோம்; பூரிப்புக் கொள்கிறோம். அந்நிலை ஒரு இனிய சூழ்நிலையில் இங்கே உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கின்றேன்.

30 ஆண்டுக்காலமாக இங்கே கொடைக்கானலில் மலர்க் கண்காட்சி நடைபெற்றாலும்கூட, கோடை விழா நடைபெற்றாலும் கூட முதல்தடவையாக ஒரு முதலமைச்சர் கலந்து கொள்கின்ற விழா இதுதான் என்று நண்பர்கள் எடுத்துக்காட்டினார்கள். மலர்க் கண்காட்சிக்கு ஒரு முதலமைச்சர் வருகின்ற விழாவாக- இது முதல் விழாவாக இருந்தாலும் கூட- கோடை விழா- பல விழாவிற்கு ஏற்கெனவே நான் முதலமைச்சராக இருந்தபோது வந்திருக்கிறேன் என்பதை மறந்து விட்டவர்களுக்கு ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிஞ்சிப் பூ

குறிஞ்சிப் பூவைப் பற்றி நாம் எவ்வளவோ பேசுகிறோம், எழுதுகிறோம்; என்றாலும், அந்தப் பூ சொல்லுகின்ற அளவிற்கு அவ்வளவு அழகானதல்ல; குறிஞ்சி மலரைப் பார்த்தால் இவ்வளவு தானா என்று எண்ணத் தோன்றும். ஆனால் பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்கின்ற காரணத்தால் தான் அதற்குப் பெருமை.

எனவே இந்த ஆட்சி அழகில்லாத ஆட்சி. ஆனால் அறிவுள்ள ஆட்சி என்பதை நீங்கள் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கின்றீர்கள். இந்த ஆட்சி அறிவுள்ள ஆட்சி என்று நான் சொல்வதற்குக் காரணம் இந்த ஆட்சியிலுள்ள எங்களுக்குள்ள அறிவைப் பற்றி அல்ல. தற்பெருமையில் அல்ல. உங்களையெல்லாம், உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் அறிந்து கொள்கின்ற ஆட்சி என்ற காரணத்தினால் தான்- நிறைவேற்றத் துடிக்கின்ற ஆட்சி என்ற காரணத்தினாலே தான்- அறிவுள்ள ஆட்சி என்று இதைக் குறிப்பிட்டேன்.

வளம் பொருந்திய கொடைக்கானலில்

இங்கே இயற்கை வளம் சூழ்ந்த இந்த மலை முகட்டில் நான் நின்று கொண்டு பேசினாலும்- இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றித்தான் நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அவ்வளவு தூரம் செல்லத் தேவையில்லை. கொடைக்கானல் மலையை விட்டு இறங்கினால், வறண்ட பகுதிகளை இந்த மாவட்டத்திலேயே நாம் காண முடியும். இன்னும் சொல்லப்போனால் வளம் பொருந்திய கொடைக்கானலிலே வளமில்லாத மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"இன்றைய தினம் 500 பேர் வீட்டுமனைப் பட்டாக்களை இந்த நிகழ்ச்சியிலே பெறவிருக்கிறார்கள். முதியோர் உதவித் தொகையினை 100 பேர் பெற இருக்கின்றார்கள். பிற்படுத்தப் பட்டோர், ஆதி திராவிடர் நலத்துறையின் சார்பில் சலவைக் கருவிகளை 51 பேர் பெற இருக்கிறார்கள். சமூகநலத் துறையின் சார்பில் மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 20 பெண்கள் உதவித் தொகை பெறுகிறார்கள். டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் 200 கர்ப்பிணிகள் பயன் பெறுகிறார்கள். ஆதரவற்ற ஐந்து பெண்கள் தையல் எந்திரங்களைப் பெறுகிறார்கள்.

அது தவிர கொடைக்கானல்-நாயுடுபுரம், கொடைக்கானல்-மூஞ்சிக்கல், கொடைக்கானல்-பேரிஜம், திண்டுக்கல்-பூலத்தூர் வழி வத்தலக்குண்டு, வடகவுஞ்சிக்கு- பழனி தாண்டிக்குடி பேருந்தை நீட்டித்து இயக்குதல் ஆகிய இந்த பேருந்து வழித் தடங்களும் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மூன்று கோடி ரூபாய் செலவில் வளர்ச்சித் திட்டங்கள்

அது தவிர, கொடைக்கானல் நீர்த்தேக்க அணைதிறப்பு ரூ.2.15 கோடி செலவிலே இன்றைக்கு நடைபெறுகின்றது. ரூ.33.41 இலட்சம் செலவில் கொடைக்கானல் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டிட அடிக்கல் நாட்டு விழா, கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் ஐந்து இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கண்ணாடி மாளிகை, ரூ.3.64 இலட்சம் மதிப்பீட்டில் தோட்டக் கலைத் துறையினருக்கான குடியிருப்புகள், ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 20 இலட்ச ரூபாய் செலவில் பூம்பாறை குடிநீர்த் திட்டம் தொடங்கிவைத்தல், கொடைக் கானல் ஒன்றியத்தில் பூண்டி ஊராட்சி போளூர் கிராமத்தில் ரூ.3.10 இலட்சம் செலவில் 21 வீடுகள், அடுக்கம் பாலமலை கிராமத்தில் ரூ.2.96 இலட்சம் செலவில் 20 ஆதிதிராவிடர் தொகுப்பு வீடுகள், வடகவுஞ்சி ஊராட்சி சவுரிக்காடு கிராமத்தில் ரூ.2.96 இலட்சம் செலவில் 20 வீடுகள், ரூ.1.15



படமும் செய்தியும்

சென்னை, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் 'பியுட்டின்' உற்பத்திப் பிரிவினை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. பழனிசாமி, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையின் நிர்வாக இயக்குநர் திரு. வி. ஆர். தீனதயாளு ஆகியோர் உடன் உள்ளனர். (18.5.90)

தமிழகம் வருகை தந்துள்ள மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க தேசியப் பேரவையினருக்குச் சென்னையில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் எழுத்தாளர்களுக்கு நினைவுப்பரிசு வழங்கினார். மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் உடன் உள்ளார். (18.5.90)





சென்னையில், அண்ணா பல்கலைக்கழகத்திற்கான நிர்வாகக் கட்டிடத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார். (8.5.90)

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி அவர்களும், மாண்புமிகு சைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. தங்கவேலு அவர்களும் தமிழ்நாட்டின் குடிநீர் மற்றும் சுகாதார அமைப்புகள் பற்றியும், உலக வங்கி உதவியுடன் அவற்றை மேம்படுத்துவது பற்றியும் உலக வங்கிப் பிரதிநிதியுடன் பேசினர். (19.5.90)

திருமயம் 622 507 புதுக்கோட்டை மாவட்டம்

திருமயம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் லிட். PA No.63

திருமயம் கிராமிய மின்சாரக் கூட்டுறவுச் சங்கம் தமிழ்நாட்டிலுள்ள மூன்று சங்கங்களில் ஒன்றாகும்.

இது 30.4.1983-இல் தொடங்கப்பட்டது. இச்சங்கம் திருமயம், பொன்னமராவதி, அரிமளம் ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 128 வருவாய்க்கிராமங்களில் மின் விநியோகம் செய்து வருகிறது.

இதன் கிளைகள்:

1. உதவி செயற்பொறியாளர் அலுவலகம், பொன்னமராவதி
2. உதவி செயற்பொறியாளர் அலுவலகம், திருமயம்
3. உதவிப் பொறியாளர் அலுவலகம், பொன்னமராவதி நகரம்

இளமின் பொறியாளர் அலுவலகம்

1. பொன்னமராவதி கிராமியம்
2. குழிபிறை
3. காரையூர்
4. திருமயம்
5. இராமச்சந்திரபுரம்
6. நச்சாந்துபட்டி
7. தேனிப்பட்டி

1983-1984 முதல் 1987-1988 வரையிலான முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ரூ.171 இலட்சம் செலவில் இச்சங்கம் மின் விரிவாக்கப் பணிகளை நிறைவேற்றியுள்ளது.

1988-1989 முதல் 1992-1993 வரையிலான ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் 150 இலட்சம் செலவில் மின்விரிவாக்கப் பணிகளை நிறைவேற்றத்திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. இச்சங்கத்தின் மூலம் இதுவரை சுமார் 2000 வேளாண்மைப்பம்பு செட்டுகளுக்கும், 5,800 வீடுகளுக்கும், 210 தொழிற்கூடங்களுக்கும் மின் இணைப்பு வழங்கப் பட்டுள்ளது. மேலும், ஒரு விளக்குத் திட்டத்தின்கீழ் 1,700 இல்லங்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

'கூட்டுறவே நாட்டுயர்வு' எனும் குறிக்கோளுக்கு ஏற்ப செயலாற்றிவரும் இச்சங்கத்தின் வளர்ச்சிக்கு அனைவரும் ஒத்துழைக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

கா.கா.மு. கமால்பாஷா பி.இ.,
மேலாண்மை இயக்குநர்
திருமயம் கிராமிய மின்சாரக்கூட்டுறவுச்சங்கம் லிட்.,
திருமயம்

குற்றாலிங்கம், இ.ஆ.ப.
தனி அலுவலர்
மாவட்ட ஆட்சித் தலைவர்
புதுக்கோட்டை

8-ஆம் பக்கத் தொடர்ச்சி

களுக்குப் பள்ளிக் கூடங்களில் புத்தகம், உடை, உணவு முதலிய வற்றை இலவசமாய் அளிக்க வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்கின்றது.

(தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்குத் தொழிற் கல்லூரிகளிலும் கூட இலவசக் கல்வி அளிக்க கலைஞர் அரசு ஆணை பிறப்பித்துள்ளதை இங்கு இணைத்துப் பார்த்துக் கொள்ளலாம்.)

பள்ளிக்கூட உபாத்தியாயர்கள் வேலையில் பெண்களே அதிகமாக நியமிக்கப்படுவதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், ஆரம்பக் கல்வி கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயர் வேலைக்குப் பெண்களையே நியமிக்க வேண்டுமென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(ஆரம்பப் பள்ளிகளில் பெண்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள் என்று தமிழகச் சட்டப் பேரவையிலேயே அறிவிக்கப்பட்டதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்).

10.5.1930 அன்று எம்.ஆர். ஜெயகர் அவர்களின் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்ற இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இதோ!

'இளைஞர்கள் கல்யாணம் செய்து கொள்வதாக இருந்தால் நம் நாட்டிலுள்ள கல்யாணம் செய்து கொள்ள அபிப்ராயம் உள்ள விதவைகளையே முக்கியமாய் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.'

(டாக்டர் தருமாம்பாள் பெயரால், விதவைப் பெண்களின் திருமணத்திற்கு ஊக்கம் கொடுக்கும் திட்டத்தை முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்திருப்பதை இங்கே நினைவுபடுத்துகிறோம்).

1931 ஆகஸ்டில் சர்.ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்கள் தலைமையில் விருதுநகரில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

'பெண்களின் கல்வியை 11 வயதிலேயே நிறுத்திவிடாமல் பெண்களை 30 வயது வரை படிக்க வைக்க வேண்டும்.' (அன்னை நாகம்மையார் பெயரால் அறிவிக்கப்பட்டுள்ள மகளிர் இலவசப் பட்டப் படிப்புத் திட்டத்தை இங்கு சீர்தூக்கிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்).

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

பெண்களை வைத்தியத் தொழிலுக்கும் உபாத்தியமைத் தொழிலுக்கும் மாத்திரம் தற்போது எடுப்பது போதாது. அவர்களைப் போலீஸ் இலாகாவிலும், இராணுவத்திலும் சேர்க்க வேண்டும் என்றும் மாநாட்டில் இன்னொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(முதன் முறை கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த காலகட்டத்திலேயே பெண்கள் காவல் துறைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதை இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது).

1931-ல் விருதுநகரில் நடைபெற்ற 3-வது சுயமரியாதை வாலிபர் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு முக்கிய தீர்மானம்:

பெண்கள் விடுதலைக்கும் அறிவுப் பயிற்சிக்கும் பிள்ளைப்பேறு தடையாக இருப்பதாலும் எதிர்காலத்தில் நாகரீக வளர்ச்சிக்குப் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப் போகும் குழந்தைகளைப் போதிய போஷாக்குடனும், கல்வியுடனும் வளர்க்க வேண்டியது அவசியமானதாலும், பிள்ளைப் பேற்றை அவரவர்கள் தங்கள் தேக நிலை, பொருள்நிலை, அறிவு நிலைமைகளுக்குத் தக்கவாறு அடக்கி ஆளவேண்டுமென்று இம்மாநாடு கருதுவதோடு, கர்ப்ப ஆட்சிக்கு வேண்டிய சாதனங்களையும் முறைகளையும் பற்றிய அறிவைப் போதிக்கத் தக்க ஸ்தாபனங்களை அரசாங்கத்தாரும், பொதுநல சேவைக்காரரும் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

(டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பெயரால் ஏற்படுத்தப்பட்டுள்ள மகப்பேறு உதவித் திட்டம் என்பது இந்த அடிப்படையில் தான் என்பது கவனிக்கத்தக்கதாகும்).

இவ்வாறு கலைஞர் ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களையும் திட்டங்களையும் அடுக்கிக் கூறிக் கொண்டே போகலாம்.

முதல்வர் கலைஞர் அவர்களே, ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கான சொத்துரிமைச் சட்டத்தைத் தமிழகச் சட்டப் பேரவையிலே அறிமுகப்படுத்திய நேரத்தில் (6.5.1989) செங்கற்பட்டு மாநாட்டைப் பற்றியும் விரிவாக எடுத்துக் கூறி, தன் உரையை முடிக்கும் தருணத்தில் தந்தை பெரியார் வாழ்க! பேரறிஞர் அண்ணா வாழ்க! மாநாட்டில் தீர்மானத்தை முன்மொழிந்த சபாபதி முதலியார் வாழ்க! என்று முழங்கினார்களே! சட்டப்பேரவை உறுப்பினர்கள் எல்லாம் முழங்கினார்களே. அந்த முழக்கம் கால எல்லைகளையெல்லாம் கடந்து கால அலைகளாக வரலாற்றில் முழங்கிக் கொண்டிருக்கும் அல்லவா? ஒரு சாதாரண அரசியல் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்து சாதிக்கும் சாதனைகள் அல்ல இவை!

சமுதாய நோக்கத்தையே அடித்தளமாகக் கொண்ட ஒரு அரசியல் கட்சியால் மட்டுமே நிறைவேற்றப் படக் கூடிய திட்டங்களும்தான் கலைஞர் அவர்களால் உருவாக்கப் பட்டுள்ளன.

தன்மான இயக்கத்தின் இந்த அடித்தளத்தை இன்றைய இளைய தலைமுறை புரிந்து கொள்ள வேண்டும். புரிய வைப்பதற்கான முயற்சிகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும். கலைஞர் அவர்கள் கூறிய 'திருப்புமுனை' என்பது இந்த அடிப்படையில் தான்!

பெண்கள் விடுதலைக்கு வித்திட்ட வெண்தாடி வீரர் தந்தை பெரியார் சகாப்தத்தில், ஆட்சிப் பொறுப்பில் இருந்து அரிய சாதனைகளை நிகழ்த்தி வரும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு "மகளிர் உரிமை ஆட்சி மாண்பாளர்" எனும் பட்டத்தைத் திராவிடர் கழகம் அளித்தது எத்தகைய பொருத்தம் என்பதை அரசியல் காழ்ப்புணர்வுகளுக்கு அப்பால் நின்று சிந்தித்தால் தெளிவாகும். வாழ்க பெரியார்! வாழ்க கலைஞர்!

நூறாண்டும் வாழ்க!

கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம்

அறுபத்தே மூகவையினில் அடிபதித்தே
ஆணழகாய் நடைபயிலும் தமிழ்த்தலைவர்,
உருவத்தில் குறுமுனிபோல் இருந்திட்டாலும்
உலகத்தார் பார்வையிலே இமயம் ஆனார்!

அருந்தமிழின் நாடகத்தில் திரைப்படத்தில்
ஆற்றலினால் ஏற்றமிகும் கலைஞரானார்!
அரசியலின் போராட்டச் சிறைபு குந்தும்
அண்ணாவே பாராட்டும் தம்பியானார்!

சுறுக்கெனவே நகைச்சுவையாய் எதிர்க்கட்சிக்குச்
சொல்வீசி விளையாடும் அமைச்சரானார்!
பொறுக்காத பகைவர்களின் பொய்வழக்கால்
புலிபோலும் கிளிக்கூண்டில் கைதியானார்!

உறவினரே கண்ணெதிரில் வதைபட்டாலும்
உள்ளத்தின் உறுதியினால் பொறுத்திருந்தார்!
அருகிருந்த தோழர்பலர் விலைபோனாலும்
அஞ்சாத நெஞ்சுடனே நிமிர்ந்து நின்றார்!

வள்ளுவரின் கோட்டத்தை அமைத்த சிற்பி
வரலாற்றுக் குறளோ வியமும்தீட்டி,
நல்ல சங்கத்தமிழ்ப்பாடல் இனிமை காட்டி,
நாட்டியத்தால் மக்கள் மனம் கவர்ந்து கொண்டார்!

துயருற்ற பெண்குலத்தார், உழவர், தாழ்ந்தோர்,
தொழிலாளர் நலம்பெறவும் திட்டமிட்டார்!
பயனற்ற பினாமி நிலம் பறித்தெடுத்தே
பஞ்சையர்க்குப் பகிர்ந்திடவும் சட்டம் செய்தார்!

அன்புடனே கோடைமழை தரும் கலைஞர்
அறுபத்தே மூகவையினைப் போற்றுகின்றோம்!
நுண்மதியின் சாதனையால் முதல்வராக
நூறாண்டும் நாடாள வாழ்த்துகின்றோம்!

எங்கள் ஊர் திருக்குவளை

மாண்புமிகு முதல்வர் கலைஞர்

நினைக்கிறேன்; இனிக்கிறது—

நெஞ்சமெலாம் மணக்கிறது!

பிஞ்சாக அரும்பிக் கொஞ்சித் தவழ்ந்தேனே! அந்த என் பிறந்த மண்ணை திருக்குவளையை-

நினைக்கிறேன்; இனிக்கிறது!

நெஞ்சமெலாம் மணக்கிறது!

பஞ்சத்தின் பரம வைரியே தஞ்சை மாவட்டம்.

வஞ்சிக்கொடி போல வளைந்தோடும் பொன்னியால், 'வளம்' என்னும் சொல்லுக்கே வளமான பொருள் வழங்கும் களமாகத் திகழ்வதே தஞ்சைத் தரணி.

நஞ்செய் கொழிக்கும் அது, 'நெற்களஞ்சியம்' மட்டுமல்ல; இலக்கியப் புலவர் பலரைப் பெற்றெடுத்த 'சொற்களஞ்சியம்' மட்டுமல்ல; ஆயகலைகள் அறுபத்து நான்கினுக்கும் தாயகமாய்த் திகழும் 'கலைக் களஞ்சியமும்' ஆகும்.

சோழரின் வீரம் மணக்கும் அந்தச் சுந்தர பூமியில் திருவாரூருக்குத் தென் கிழக்கே பதினைந்து கல் தொலைவில் உள்ளது எங்கள் ஊர்.

அந்த நாளில் திருவாரூரிலிருந்து திருத்துறைப்பூண்டி செல்லும் நெடுஞ்சாலையில் ச்சணம் என்னும் ஊரில் பேருந்தை விட்டு இறங்கி நாலைந்து மைல்கள் நடந்தால் எங்கள் ஊரை எட்டிப்பிடிக்கலாம்.

இப்போது திருவாரூரிலிருந்து எட்டுக்குடி செல்லும் வழியிலேயே எங்கள் ஊர் இருக்கிறது; எளிதாகப் போய் இறங்கலாம்.

முப்பது ஆண்டுகளுக்குள்ளேதான் எத்தனை எத்தனை மாற்றங்கள்-திருப்பங்கள்-முன்னேற்றங்கள்!

'அழகு சிரிக்கிறது!' என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

எங்கள் திருக்குவளையில் சிரிக்கும் அழகு முழுதும் இப்பொழுது என் விழி முன்னே படமாக விரிகிறது.

பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேல் என மரகதக் கம்பளத்தைப் பரப்பியிருக்கும் நன்செய்க் கழனிகள்—

அவற்றைத் தழுவிச் சல சலக்கும் சின்னஞ்சிறு வாய்க்கால்கள் - குரல் தளர்ந்துவிட்ட கிழவன் கூழ் குடிப்பதுபோல் 'களக்கு... களக்கு...! என்று அவை எழுப்பும் இனிய ஓசைகள்.

அந்தச் சங்கீத நிரவலைக் கேட்டுச் சதிராட வெளியே வந்து, பட்டிக்காட்டுப் பாமரத்தனத்தோடு ஓடிஓடுங்கும் வயல் நண்டுகள்—

அவற்றைப் பார்த்து இனக்காரமாக, இள நங்கையர்களின் விழிகளெல்லாம் இறங்கி வந்து எகிறிக் குதிக்கின்றனவோ என்று எண்ணும்படி வாய்க்கால் நீருக்குள் எதிர் நீச்சலடித்துப் பாயும் கெண்டைக் குஞ்சுகள்—

வயல்களை ஒட்டி ஆங்காங்கே, 'குத்தல்' வேலையைத் தவிர வேறு குறிக்கோள் இல்லாத மனிதர்களைப் போன்ற முட்கள் செறிந்த கருவேல மரங்கள்—

ஒரு மைல் தொலைவில் உள்ள காருகுடிக்குப் போகும் வழியில், 'பட்டாணி' என்னும் துஷ்ட தேவதையின் அரண்மனையாய்ச் சூழ்ந்து அச்சுறுத்தும் அடர்ந்த மரக்காடு—

அதே சமயம், நன்றியுணர்வை நன்றாக விளக்க, அவ்வைக்குக் கிட்டிய அருமையான உவமையாம் தென்னை மரங்கள்—

தேன்கனிச் சோலைகள்—

இப்படியாக, எங்கள் ஊரின் வெளியே சிரிக்கும் புற அழகையெல்லாம்-நினைக்கிறேன்; இனிக்கிறது!

நெஞ்சமெல்லாம் மணக்கிறது!

'திரு' — என்னும் சொல்லுக்கு அழகு - பொருள் - புகழ் - பூமகள் - என்று ஆயிரமாயிரம் விளக்கங்களை அள்ளிப் பொழிவார்கள் தமிழ்க் கடலில் முத்தெடுக்கும் சான்றோர்கள்.

'குவளை'—என்பது தோகையரின் விழிகளை வம்புக்கு இழுக்கும் ஒரு மலர் என்பர்.

இந்த இரண்டு இனிய சொற்களே -எங்கள் ஊரின் எழிலை இப்போது பறைசாற்றினாலும், தேவாரம் பாடிய சுந்தரமூர்த்தி நாயனார் தம் பாடலிலே எங்கள் ஊரைச் சம்பந்தப்படுத்தி வைத்திருப்பது 'திருக்கோளிலி' என்னும் பெயரால்தான்.

ஆன்மீகவாதிகளின் கூற்றுப்படி எங்கள் ஊர் 'பாடல் பெற்ற தலம்.'

என்னைப் பொறுத்தவரை, என் அருமைத் தந்தையாரின் 'பாடல் பெற்ற' தலமும் ஆகும் அது!

ஆம்; என் தந்தையார் கவிதைகள் எழுதுவார். சுவையொழுகும் சொல்லடுக்குகளால் ஏழைகளின் இதயம் அழும் காட்சிகளையெல்லாம் என் தந்தை கவிதை வடிவில் ஆக்கி எல்லோரையும் களிப்பித்திருக்கிறார்.

''இந்தக் கொடுமை செய்தால்
ஏழைகள் என்ன செய்வோம்?
இனிப் பொறுக்க மாட்டோம்
ஈட்டியாய் வேலாய் மாறிடுவோம்!''

என்பது அவரது பாட்டுத் திறனுக்கோர் 'பதச் சோறு'

அவர் தூண்டில் போட்டு மீன்கள் பிடிக்கும் சோலை சூழ்ந்த திருக்குளம்-

அந்தத் திருக்குளத்தை யொட்டிய கம்பீரமான சிவன் கோவில்-

அங்கிருந்து இழைந்துவரும் மங்கல மணியோசை-

தெற்கெல்லையில் புரவிகள் புடை சூழ்ந்த ஐயனார் கோவில்-

மேற்கு எல்லையிலே முனியன் கோவில்-

உலகை அறிந்த மனிதரான பின்னும் தரையிலே புரண்டு களித்தாராமே பாரதி, அவரைப்போல்-ஆனால் அறியாப் பருவத்திலேயே நான் புரண்டு தவழ்ந்த புழுதி மெத்தையான எங்கள் தெரு-

அதன் கோடியிலேயே, என் அப்பாவுக்குக் கோழிக் கறியின் மீது மோகம் பிறக்கும்போதெல்லாம் 'படையல்' வாங்கிக் கொள்வதோடு, என் தலைமுடியையும் அடிக்கடி கருணையோடு காணிக்கையாக வாங்கிக் கொள்ளும் அங்காளம்மன் கோவில்-

அந்தக் கோவிலையடுத்துள்ள நான் வணங்கும் உண்மையான அறிவாலயமான-நான் 'அகர முதல எழுத்தெல்லாம்' முதன் முதல் பயில முயன்ற அந்தத் தொடக்கப் பள்ளி-

கலைஞரின் பொன்மொழிகள்

ஏழை எளிய நடுத்தர மக்களுக்கு என்னென்ன நன்மைகள் கிடைத்திட வேண்டும் என்று எப்போதும் முனைப்பாக இருப்பது தான் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமை.

சுடு நெருப்பில் புடம் போடப் போடத்தான் நல்ல தங்கம் கிடைக்கும். அதுபோல், பொது வாழ்க்கையில் இடையூறுகளுக்கு ஈடுகொடுத்தால்தான் நாட்டிற்கும் மொழிக்கும் இனத்திற்கும் நல்ல பணிகளை ஆற்றிட முடியும்.

இதயம் என்பது ஒரு தசைத் கோளமல்ல! இயல்புகள் - நினைவாற்றல் - சிந்திக்கும் திறன் அனைத்தும் அடங்கிய ஒரு தனிமைதான் அது! அந்தத் தன்மையைத் தான் அண்ணனிடம் நான் யாசித்தேன்.

சிறுவனாய்ப் படிக்கும் பொழுதே, அர்ச்சுனன், கிருஷ்ணன் என்று வேடங்கள் தரித்துக் கொண்டு, நான் நாடகங்களை அரங்கேற்றி மகிழ்ந்த எங்கள் வீட்டு மாட்டுத் தொழுவம்-

இன்னும் என்னென்னவெல்லாமோ எங்கள் ஊரைப் பற்றிய காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும்-

நினைக்கிறேன்; இனிக்கிறது!

நெஞ்சமெலாம் மணக்கிறது!

பிறந்த மண்-

கறந்த பாலின் புதுச் சுவையை விட மேலான ஓர் இனிமையை இதயத்திலே மிதக்க விடும் ஒரு பேராற்றல் அதற்கு இருக்கத்தான் இருக்கிறது!

நான் குடியிருந்த கோவிலாம் என் அன்னையை எப்படி என்னால் மறக்க முடியாதோ அப்படித்தான் மழலைக் குழந்தையாக இந்த மண்ணகத்திலே முதன்முதல் நான் அடி வைத்த கோவிலையும் என்னால் மறக்க முடியாது.

எப்படி முடியும்? எவரால் முடியும்?

அழகு சிரிக்கின்ற-என் இளமைக்கனவுகளுக்கெல்லாம் அரங்கமாய் அமைந்திருந்த-அந்த என் பிறந்த மண்-திருக்குவளை-என்றென்றும் என் நெஞ்சில் இனித்துக் கொண்டே இருக்கும்!

தன்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்கும் எப்படி ஒவ்வொருவனும் கடமைப் பட்டிருக்கிறானோ அப்படித்தான் தன்னைப் பெற்ற மண்ணுக்கும் ஒவ்வொருவனும் கடமைப் பட்டிருக்கிறான்.

அந்த அரிய நன்றியுணர்வோடு தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டில் தாயகத்தின் வறுமையை ஒழித்து, வளமையைப் பெருக்க, மானத்தைக் காத்து, மாட்சியைப் பரப்ப எங்கள் திராவிட முன்னேற்றக் கழகம் அயராது பாடுபட்டு வருகிறது.

இதே தாயகப் பற்றோடு, என் பிறந்த மண்ணுக்குத் தனிப்பட்ட முறையில் நானும் ஏதாவது செய்ய வேண்டாமா?

என் தாய்க்கு அடுத்தபடியாக என்னைத் தாங்கிக் களைந்த எங்கள் பழைய வீடு முழுகிப் போன நிலையில் தருமபுரம் ஆதீனத்தாரிடம் பணங் கொடுத்து அந்த இல்லத்தை மீட்டுள்ளேன்.

ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பே 'அஞ்சுகம்-முத்துவேலர்' தாய் சேய்நல விடுதி ஒன்றினை என் சொந்தச் செலவில் கட்டிக் கொடுத்துள்ளேன்.

அடுத்து, ஓர் உயர்நிலைப் பள்ளி அங்கே விரைவில் அமைவதற்கு எல்லா ஏற்பாடுகளும் உருவாகிவிட்டன.

அந்தச் சின்னஞ்சிறு ஊருக்கு இன்னும் என்னென்னவோ செய்ய வேண்டும் என்றும் ஆசை பீறிடுகின்றது ஊற்றுப் போல.

ஆனால் ... கடமையின் வலிய கரங்களுக்கிடையே...

சிந்திக்க ஓய்வு கிட்டும் சிறு சிறு விநாடிகளில் எல்லாம் என் பிறந்த மண்ணைப் பற்றி எண்ணுகிறேன்; அடிக்கடி அங்கே போக முடியவில்லையே என ஏங்குகிறேன்; தொழுகிறேன்!

ஆம்; அழகு கொழிக்கும் அந்த வளமான என் பிறந்த மண்ணை - திருக்குவளையை - மீண்டும், மீண்டும்,

நினைக்கிறேன்; இனிக்கிறது!

நெஞ்சமெலாம் மணக்கிறது!

(நன்றி: ஆனந்தவிகடன் 1969)

/ அதி / நவீன / பருத்தி / வகைகள் /



எங்கள் ஆடை அணிகள் பொலிவுடன்
விளங்குவதில் உங்களுக்கு அதிக
விருப்பம். ஆகவேதான் உயிரோட்டமான
வண்ணங்களின் உன்னத்தை உங்களுக்குக்
கோ-ஆப்டெக்ஸ் பருத்தி வகைகளில்
அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ் பங்கு பெறட்டும் —
உங்கள் இனிய நேரங்களில்!

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

இந்தியாவின் உயர் விற்பனை கைத்தறி வகைகள்.

• புடவைகள் — பருத்தி, பாலியெஸ்டர், பட்டு • ஷர்ட்டிங் • சூட்டிங் • ஃபர்னிஷிங்
• பெட்ஷீட்கள் • டவல்கள் • வேட்டிகள் • லுங்கிகள். இணையிலா புதுமைகள். எண்ணிலா வகைகள்.

DIPR/1768/MS88/HTA

திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களுடன்

திரு. பாபு ஜெகஜீவன்ராம் அவர்களுடன்

இந்தியப் பிரதமர் [illegible]

தலைவர்களுடன் முதல்வர் கலைஞர்

தந்தை பெரியார் அவர்களுடன்

தமிழகத்தின் புதிய ஆளுநராக திரு. சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் பதவி ஏற்றார். அவருக்குச் சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. ஆனந்த் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (24.5.1990)

சென்னையில் நடைபெற்ற 36-ஆவது கைத்தறி விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் கைத்தறி அரங்குகளைப் பார்வையிட்டார். மாண்புமிகு கைத்தறி - நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் உடன் உள்ளார். (17.5.'90)

இந்த இதழில்...

முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர்!

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா உரை ... 2

முதல்வர் கலைஞர் பிறந்த நாள் செய்தி ... 7

மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு ... 9

ஏழை எளியோருக்கு நில உதவி ... 15

கவியோகி சுத்தானந்த பாரதியார் ... 17

நெஞ்சினிக்கும் மெய்க் கவிஞர் ... 23

நெசவுத்தொழில் வளர்ப்போம் ... 24

நிலம், நீர்வளம் காப்போம்! ... 29

முதல்வர் கலைஞர் பிறந்தநாள் நிகழ்ச்சிகள் ... 33

வளரும் வேளாண்மை ... 39

மாணவர் பக்கம் ... 40

பெரியார் மாவட்ட விவசாயிகளுக்கு அரசு மானியம் ... 45

மானாமதுரையில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சி ... 47

தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆனித் திங்கள் - 2

மலர்:20 இதழ்:24

16-6-1990

வாழ்க பல்லாண்டு!

மாண்புமிகு மத்திய நிதியமைச்சர்
டாக்டர் மதுதண்டவதே

1975-ஆம் ஆண்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டது. எங்களில் பலர் சிறைச் சாலைகளில் அடைக்கப்பட்டோம். விடுதலைப் போராட்ட வீரர்கள் பலர், தலை மறைவு வாழ்க்கை நடத்தினார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயணனும் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடந்தார். நாடெங்கும் பாலைவனமாக இருந்த நேரத்தில் மனதுக்கு இதம் தருகின்ற பசுஞ்சோலையாக இங்கே கலைஞருடைய ஆட்சி காணப்பட்டது. நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டபோது தமிழகத்தில் கலைஞர் முதலமைச்சராக இருந்தார்.

அப்போது பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைக் கேட்டார். எதிர்ப்பைக் கைவிட்டு, மத்திய அரசுக்கு ஒத்துழைப்புத் தருமாறு கோரினார்

அப்பொழுது கலைஞர் ஒருவர்தான்-'நெருக்கடி நிலையை ரத்து செய்து விட்டு, தேசத் தலைவர்களை விடுதலை செய்தால்தான் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைத் தரமுடியும்'என்று துணிச்சலோடு சொன்னவர்.

நெருக்கடி நிலையை எதிர்த்த அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், ஆட்சி அதிகாரத்தைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், அவரைச் சிறைக்குள், சிறைக் கம்பிகளுக்குள் அந்த ஆட்சியால் அடைத்திருக்கமுடியும். ஒரு மதுதண்டவதேயைத்தான் அவர்களால் நெருங்க முடிந்ததே தவிர, கலைஞரைத் தொடமுடியவில்லை. கலைஞரும் சுதந்திரமாகவே உலவினார்.

1977 ஆம் ஆண்டு ஜனதா ஆட்சி அமைந்தபோது, அந்த ஆட்சியை அமைப்பதற்கு அடித்தளமாக இருந்த நிலம்தான் தமிழ்நாடு என்பதைக் கூறுவதில் பெருமையடைகிறேன்.

நண்பர்களே! நான் ஒன்றை உங்களுக்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். கலைஞர் அவர்கள் தி.மு.கழகத்தின் தலைவர் மட்டுமல்ல; தமிழ் நாட்டின் தலைவர் மட்டுமல்ல; அவர் தேசிய முன்னணியின் தலைவர். காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஆட்சி நடத்துகின்ற தேசிய முன்னணியின் தலைவர்.

நண்பர்களே! நான் ஜனதாதளத்தின் சார்பில், தேசிய முன்னணியின் சார்பில், இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் தேசிய முன்னணியின் சார்பில் கலைஞர் அவர்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன். குன்றைந்தபட்சம் நூறாண்டுகள்-அதிகப்பட்சம் எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் சரி; வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

(கலைவாணர் அரங்கத்தில் 2.6.90 அன்று பேசியதிலிருந்து.)

முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர்

டாக்டர் சங்கர் தயாள் சர்மா புகழாரம்

பாசம் பொழியும் உள்ளமும் விருந்தோம்பற் பண்பும்மிக்க தமிழ்நாட்டு மக்களிடையே இருப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். அற்புதமான இம்மாநிலத்தில், வரலாற்றுப் பெருமைமிக்க இந்நகருக்கு வருகைதந்து இந்த முக்கியமான விழாவில் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளித்த தமிழ்நாட்டுக் கல்வி அமைச்சருக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியாவின் இருபதாம் நூற்றாண்டின் இணையிலா இரு பெரும் தலைவர்களான, திரு. காமராஜ், திரு. அண்ணாதுரை ஆகியோரை இம்மாநிலம் முதலமைச்சர்களாகப் பெறுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றிருந்தது. மிக எளிய குடும்பத்தைச் சேர்ந்த இவ்விரு பெருந்தலைவர்களும் தொண்டிலும் தியாகத்திலும் உன்னதமானவர்களாய் மிக உயர்ந்து விளங்கினர். அவர்கள் தமக்கெனச் சொத்து அல்லது தந்தை வழி உடைமை ஏதுமின்றி இவ்வுலகத்தில் பிறந்தனர். அதே போன்று அவர்கள் இவ்வுலகை விட்டுச் செல்லும் போதும் எந்தவிதமான சொத்துக்களையோ உடைமைகளையோ தங்களுக்கெனச்சேர்த்துக்கொண்டோரல்லர்.

இந்த நூற்றாண்டில், நம்முடைய இந்நாள் முதலமைச்சரின் அரசியல் ஆசான் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் நோக்கும் செயலும் தன்னிகரற்றவை; என்னுடைய கருத்துப்படி, திரு. அண்ணாதுரையின் மிக முக்கியமான சாதனை, ஒவ்வொரு சாதாரண மனிதனும் எளிதில் பின்பற்றக்கூடியதும் இந்நாட்டின் ஒவ்வொரு குடிமகனின் முப்பெரும் பொறுப்புமான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கிற "ஒழுக்கநெறியைத்" தம்முடைய வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தியதாகும், அவருடைய "சுய மரியாதைக்கும், சமூக சீர்திருத்தத்திற்கும்" "கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்கிற மூன்று சொற்களும் தாரக மந்திரங்களாகும்!

இரண்டாவதாக, திரு. அண்ணாதுரை அவர்களும், அவரைப் பின்பற்றியவர்களும், மக்களுடன் தொடர்பு கொள்ளவும் அவர்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சியை உருவாக்கவும்- மக்கள் தொடர்புச் சாதனங்களான, திரைப்படங்களையும், செய்தித்தாள்களையும் பயன்படுத்தி இன்றைய நாளில் அரிய சாதனைகளைப் படைத்தவர்கள் ஆவர்.

—மூன்றாவதாக, திரு. அண்ணாதுரை அவர்கள் செய்த சமூக சீர்திருத்தம், நம்நாட்டின் சீர்மிகு சான்றோர்களான சுவாமி விவேகானந்தர், சுவாமி தயானந்த சரஸ்வதி ஆகியோரின் கனவுகளை நனவாக்கியுள்ளது. குறிப்பாகப் பெண் விடுதலை, சமுதாயத்தில் மிக நலிந்த நிலையிலுள்ளோர்- அதிலும் குறிப்பாக ஆதி-திராவிடர், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோர்களின் முன்னேற்றம் பற்றிய அப்பெரியோர்கள் கண்ட கனவுகளை நனவாக்கிய பெருமை பேரறிஞர் அண்ணாவையே சாரும். அண்ணாவின் அரும் பணிகளில் குறிப்பிடத்தக்கது- "சுயமரியாதைத் திருமணத்தைச்" சட்டப்படி செயல் திறனுடையதாகச் செய்து, திருமணமான ஒவ்வொரு பெண்ணுக்கும் பாதுகாப்புத் தந்து, கணவன் மனைவிக்கு ஆற்ற வேண்டிய சமுதாயக் கடமைகளை உணர்த்தியதை நான் இங்கு சுட்டிக் காட்ட விழைகிறேன்.

இந்தியா விடுதலையடைந்த கடந்த 40 ஆண்டுக் காலத்தில், ஏனைய பல மாநிலங்களை விட, தமிழ்நாட்டில் ஏழை எளிய மக்களிடையே நிகழ்ந்த விவாகரத்து கணவனால் கைவிடப்பட்ட மனைவி, மணமுறிவினால் சிதறுண்டு போன குடும்பங்கள் போன்றவை கணிசமான அளவு குறைந்துள்ளன. இதுகுறித்து ஆய்வு ஒன்று நடத்துவது மிகவும் அவசியமாகும். இது சமூக சீர்திருத்த இயக்கத்தின் மகத்தான சாதனைகளில் ஒன்றாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த சமூக சீர்திருத்த உணர்வு தமிழகத்திலுள்ள தலைவர் இதயத்திலும் குடி கொண்டிருப்பதால் தான், இத்தகைய மாற்றங்கள் நடைபெறுவதற்கான சூழல்கள் உருவாயின. உலகத்தில் இரண்டே சாதிகள் "கொடுப்போர்", "கொள்வோர்" என்று மட்டும் இருப்பதாக ஒரு பண்டைத் தமிழ்ப் பழமொழி கூறுகின்றது. தமிழகத்தின் மாபெரும் தலைவர்களான காமராஜர், அண்ணா ஆகியோர் எப்போதுமே இத்தகைய கொடுப்போர் வரிசையிலேயே இருந்திருக்கின்றனர். தமிழக மக்கள் நலனிற்காக அவர்கள் அனைத்தையும் நல்கினர். அவர்கள் தங்களுடைய வாழ்நாட்களையும் உழைப்பையும் சமுதாய மேம்பாட்டிற்காக அர்ப்பணித்தனர்.

தம் வாழ்நாள் முழுவதற்கும் பயன்தரத்தக்க மகத்தான பாடத்தையும் தமிழ்நாடு எனக்குக் கற்றுத் தந்திருக்கின்றது. உலகத்தில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உயர்ந்தவராக அல்லது வல்லவராக, மாபெரும் வீரனாக அல்லது தீரனாக அல்லது சிறந்த இலக்கியவாதியாக அல்லது மிகச் சிறந்த மேதையாக இருக்க வேண்டுமென்று கட்டாயமில்லை. ஆனால், ஒவ்வொருவரும் நல்லவராகவும், அன்பு செலுத்துபவராகவும், பாசம் காட்டுபவராகவும் இருக்க முடியும்.

இவ்வகையில் தமிழக மகளிரே சமய பேதங்கள் அற்றவராக, பரந்த மனப்பான்மையுடையவராக, பெருந்தன்மை கொண்டவராக, விருந்தோம்பும் பண்பு மிக்கவராக விளங்குகின்றனர் என்பதே என் கருத்தாகும். உலகத்தில் 'ஆண்', 'பெண்' என்று இரண்டே சாதிகள் உள்ளதாக மற்றொரு தமிழ்ப் பழமொழி கூறுகின்றது. தமிழக மகளிர் இப்பழமொழியினை, அவர்களுடைய வாழ்க்கையில் மெய்ப்பித்துக் காட்டியுள்ளனர். தமிழக மகளிரிடையே இவ்வாறு திகழ்ந்த தலைவியரைப் பட்டியலிடுவோமேயானால், அது தில்லையாடி வள்ளியம்மை, இசையரசி எம்.எஸ். சுப்புலட்சுமி, நாட்டிய வகைகளின் முன்னோடியான பாலசரஸ்வதி, இந்திய தேசிய இராணுவத்தில் நேதாஜி அவர்களுடன் சேர்ந்த கேப்டன் இலட்சுமி என முடிவில்லாமல் நீண்டு கொண்டே போகும். மண வாழ்க்கையில் ஈடுபட்டு சமூகத் தொண்டையும் மேற்கொண்டதிலிருந்து அவர்களுடைய சமயச் சார்பற்ற தன்மை தெற்றெனப் புலனாகும்.

தமிழ்நாட்டிற்கு, குறிப்பாகத் தஞ்சாவூருக்கு—நோபல் பரிசு பெற்ற சர்.சி.வி. ராமன், டாக்டர் சந்திரசேகர் ஆகிய இரு மேதைகளை உலகிற்கு அளித்த பெருமையுண்டு. உலகின் தலைசிறந்த கணித மேதைகளில் ஒருவரும், மேனாட்டு அறிவியலாளரால் இன்னும் ஆய்வு செய்யப்பட்டு வரும் படைப்புகளின் தந்தையும், மிகவும் எளிய நிலையிலிருந்து உயர்ந்தவரும், மெட்ரிகுலேஷன் தகுதி மட்டுமே பெற்றவரும், இந்நூற்றாண்டின் ஒப்புயர்வற்ற "அதிசய ஆற்றல்" கொண்டவர் எனப்பேராசிரியர் ஹார்டி அவர்களால் பாராட்டப்பட்டவருமான திரு. சீனிவாசராமானுசம் பிறந்ததும் இந்தத் தஞ்சைத் தரணியில்தான். நமது பெருமதிப்பிற்குரிய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் அவர்களும் தஞ்சை நமக்குத் தந்த பெருஞ் செல்வமே.

இத்தஞ்சை மண் தமிழ்நாட்டிற்கு, ஏன்- இந்தியாவிற்கே திரு. மு. கருணாநிதி அவர்களைத் தந்துள்ள பெருமைக்கு இப்பெருந்திரளான மக்கள் வெள்ளமே சாட்சியாகும். தமிழ்நாட்டின் உயர்தனிச் செம்மொழியான தமிழ்மொழி எப்பொழுதுமே எனது மனதை ஈர்த்து வந்துள்ளது. அதே போன்றுதான் இப்பெருமண்ணின் தமிழ்ப்பண்பாடும் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

உலகில், இன்றும் வழங்கி வரும் மொழிகளில் தமிழ் மிகவும் தொன்மையான மொழியாகும். தமிழ் இலக்கியம் பொறுமை, மனிதநேயம், சகோதரத்துவம்ஆகிய உணர்வுகளை எல்லாக் காலங்களிலும் உலகமக்களுக்கு உரைத்து வந்துள்ளது. சங்க இலக்கியங்களிலேயே மிகவும் சிறப்பிற்குரியவை-சங்க இலக்கிய நூல்களில் மிகவும் தலை சிறந்தவைகளான 'அகநானூறும்' 'புறநானூறும்' ஆகிய நூல்களாகும். வீரத்தையும் காதலையும் விரிவாக விளம்புகின்றன அவை. தமிழ்த்தெய்வங்களுள் "கார்த்திகேயன்" அல்லது 'சுப்பிரமணியர்' அல்லது 'முருகன்' மிகவும் விரும்பி வழிபடுகின்ற தெய்வமாகும். இக்கடவுளின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் கதை, தமிழர்களின் உளவியலோடு இரண்டறக் கலந்துவிட்டது. வீரம், காதல் ஆகிய உணர்வுகளுக்குச் சான்றாக விளங்கும் இவ்விறைவனுக்கு ஆறு முக்கியமான வழிபாட்டுத் திருத்தலங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அத்தலங்கள் தமிழில் "ஆறுபடை வீடுகள்" என்று வழங்கப்படுகின்றன. என் இச்சுற்றுப் பயணத்தின் போது, மேற்சொன்ன திருத்தலங்களுள் ஒன்றிற்குச் சென்று வழிபடவிருக்கிறேன்.

தமிழ்நாட்டிற்கே உரிய பண்புகளான சகிப்புத்தன்மை, மதச் சார்பின்மை ஆகியவற்றிற்கு எடுத்துக்காட்டாக, தமிழ் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பாடுபட்டவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், எந்த வகுப்பைச் சேர்ந்தவராயிருந்தாலும், அவர்களை நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம் என்ற பின்னணியை நான் ஈண்டுக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

சிதம்பரத்தில் வாழ்ந்தவரும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்தவருமான நாட்டுப்புறப் பாடல்களில் போற்றப்படும் நந்தனார் என்னும் பெருமகனாரைப் பற்றிக் கேள்விப்படாதவர் யாரேனும் உண்டோ? கோயிலுக்கு வெளியில் நின்று வழிபடும்பொழுது, இறைவனை மறைத்துக் கொண்டிருந்த ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருந்த நந்தி, வியக்கத்தக்க வகையில் ஒதுங்கி வழிவிட்டதாகக் கூறப்படுகின்றது. இந்திய வரலாற்றிலேயே தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் ஆலயத்திற்குள் நுழைந்த "ஆலயப்பிரவேச" முதல் நிகழ்ச்சி இதுவேயாகும்!

இந்தியாவிலேயே வழிபாடு செய்த தமிழ்நாட்டில், வைணவத் தொண்டர்களாகிய ஆழ்வார்கள், சைவசமயத் தொண்டர்களாகிய நாயன்மார்கள் ஆகியோரிடையே பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பகுதியைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பின்னணியை உடையவர்கள், உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள், செல்வந்தவர்கள், வறியவர்கள் ஆகிய அனைத்துத் தரப்பினரும் இருந்தனர்.

(25.5.1990-ல் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.)

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்த நாள் விழாவில் - தமிழக அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறையினர் சார்பில் ரூ.27,027/- முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமையில், செய்தி-சுற்றுலாத்துறைச் செயலாளர் திருமதி ஜெயந்தி இ.ஆ.ப., செய்தித்துறை இயக்குநர் திரு கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப., மற்றும் செய்தி-மக்கள் தொடர்புத் துறை அதிகாரிகள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மாலையணிவித்து இந்தப் பெருநிதியினை அளித்தார்கள்.

முன்னர் நிலவி வந்த பரம்பரை முறையை ஒழித்து, அதற்குப் பதிலாக, அரசு சாராத, தண்ணார்வக்குழு, தான் உருவாக்கிய தேர்தல் முறை ஒன்றைக் கொண்டு வந்தது என்பதை அறிகிறோம்.

ஆங்கிலேயர் கையாண்ட "பிரித்தாளும்" (Divide and Rule) கொள்கை, இந்த நூற்றாண்டில், பொய்யான-கற்பனையான மைய அரசு ஒன்றிருப்பது போலவும், அங்கிருந்து போடப்படும் ஆணை நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் பின்பற்றப்படுவதைப் போலவும் ஒரு மாயத்தோற்றத்தை உண்டாக்கியிருக்கக்கூடும். ஆனால், காலத்தால் அழியாத தமிழ் வரலாறு நமக்கு உணர்த்தும் பாடம் இதற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் விளங்கிய தமிழ் மொழி, மரபு, பண்பாடு ஆகியவை நமது ஒருமைப்பாட்டுணர்ச்சிக்கு என்றென்றும் சான்றாக விளங்குகின்றன.

தேசிய அளவிலும், உலக அளவிலும் கிடைத்துள்ள இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், தொல்பொருள் ஆய்வு, நாணயங்கள், ஆகிய வகையிலான சான்றுகள் அனைத்தும், தமிழ்மொழியின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் தொன்மைப் பழஞ்சிறப்பை எடுத்தியம்புகின்றன.

தமிழ் நாட்டிற்கும், பண்டைய ரோம் நாட்டிற்கும் இடையே பன்னாட்டு வாணிகம் நடைபெற்று வந்ததை, புதுச்சேரிக்கு அருகில் அரிக்கமேடு என்ற இடத்தில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வாதிகள்தான் ஒரு நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய ஒப்பற்ற செல்வங்கள். ஏனெனில் பணம் வெறும் இரும்புப் பெட்டியில்தான் தூங்கும். ஆனால், இந்தச் செல்வங்களோ மக்களின் இதயப் பெட்டியில் வாழ்வர்.

—பேரறிஞர் அண்ணா

சோழர் ஆட்சிக் காலத்தில், இந்து மகாசமுத்திரம் 'சோழர் ஏரி' என்றே இயல்பாக அழைக்கப்பட்டது. தொலைதூர கிழக்கு நாடுகள்- குறிப்பாக, பாலினேசியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகள் தமிழ்ப் பண்பாட்டின் செல்வாக்கிற்கு ஆட்பட்டிருந்தன. தொலை தூரக் கிழக்கு நாடுகளில் 'மதுரா' என்ற பெயரில் இருந்த ஒரு தமிழர் குடியிருப்பு இலங்கையில் இன்றும் 'மதாரா' என்று அழைக்கப்படுகிறது. தமிழரசர்களின் கப்பல் கட்டும் திறன் மற்றும் கடற்படை வலிமை பற்றிய புகழ் கிறிஸ்துவ சகாப்தத்திற்கு முன்பே ஆசியக்கண்டம் முழுவதிலும் மற்ற உலக நாடுகளிலும் பரவியிருந்தது.

லோனியன் கிரேக்கர்கள் என்றழைக்கப்படும் யவனர்கள், காவிரியின் முகத்துவாரத்தில் அமைந்திருந்த 'மலர்களின் நகரம்' என்று அழைக்கப்படும் காவிரிப்பூம்பட்டினம் எனும் தொன்மை வாய்ந்த நகரத்தில் வாழ்ந்ததற்குச் சான்றுகள் உள்ளன. புத்த, ஜைன மத வழிபாட்டுத் தலங்கள் எவ்விதத் தடையுமின்றி உருவாக்க இராசராச சோழன் நல்கிய தாராள உதவியின் மூலம் அவரது மனிதப் பண்பும் சமயப் பொது நோக்கமும் தெளிவாகிறது. சோழர் காலத்துப் பண்பாடும், நாகரீகமும், கடல் கடந்து தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கும், இலங்கைக்கும் பரவியது. விசயாலய சோழன் காலத்திலும் அதற்குப் பிந்திய விஜய நகரப் பேரரசுக் காலத்திலும் மட்டுமல்லாது மராட்டிய ஆட்சிக் காலத்திலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகத் தஞ்சாவூர் நமது நாட்டின் பண்பாட்டுத் தலைநகராக விளங்கி வருகிறது. தஞ்சையில் உள்ள சரபோஜி மகாராஜாவின் "சரஸ்வதி மஹால் நூலகம்" நம்முடைய பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு நின்று நிலவும் சின்னமாகத் திகழ்கிறது.

தொடக்க காலந்தொட்டு இன்று வரை, இந்நூற்றாண்டைச் சேர்ந்த பெரும் புகழ்வாய்ந்த கவிஞர்கள், சுப்பிரமணிய பாரதி, பாரதிதாசன் மற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்த பல கவிஞர்கள், துறவிகள் உட்பட புகழ்பெற்ற அறிஞர்கள் பலரும், தங்களை பாரதப் புதல்வர்கள் என்றே பெருமையுடன் அழைத்துக் கொண்டனர். இசை, நாடகம், ஓவியம், சிற்பக்கலை மற்றும் கட்டடக் கலை போன்ற நுண்கலைகளிலும் தமிழகம் இந்தியாவின் பண்டையக் கலை வடிவங்களை- அவற்றின் புராதன தூய்மை கெடாமல் போற்றி வருகிறது.

எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் மட்டுமே பரத நாட்டியம், அதாவது பாரதத்தின் நாட்டியம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில், ஏனைய நடனங்கள் யாவும், அந்தந்த உள்ளூர்ப் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன. கிராமிய கைத்திறத் தொழில், கிராமியக் கலை, நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புற இசை ஆகியவற்றிலும் தமிழ்நாடு, கலைப் பெட்டகமாகத் திகழ்கிறது.

இசையை இந்தியப் பண்பாட்டு ஒருமைப்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

சாஸ்த்ரீய கருநாடக சங்கீதத்தின் மும்மூர்த்திகளான தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீட்சிதர் ஆகியோர் வெவ்வேறு மொழிகளில் பாடியிருந்தாலும், அவர்கள் வெவ்வேறு இடங்களைச்சேர்ந்தவர்களாக இருந்தாலும், தஞ்சாவூரைச் சேர்ந்த மிகச் சிறந்த இசைப் பாவாணர்களாகப் பாராட்டப்படுகின்றனர்..

எல்லா ஊரும் எனது ஊரே, உலக மக்கள் அனைவரும் எனது உறவினர்களே என்று தனது பரந்த மனப்பான்மையைப் பண்டைத்தமிழன் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பறைசாற்றியுள்ளான்.

தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவை பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து தழைத்து வந்திருக்கின்றன. தெய்வத்தன்மை பொருந்திய இதன் சீரிளமைத் திறம், தனிப்பண்பமைதி, இந்திய தேசிய உணர்வுகளில் ஒன்றிக் கலந்துள்ளன. தமிழ்நாட்டின் ஆற்றல்மிக்க ஆக்கப் பூர்வமான இந்தத் தாக்கம் இந்தியர் நவீனமயமாகவும் வளம்பெறவும் பெருந்துணை புரிந்ததோடு முன்னேற்றப்பாதை நோக்கிச் செல்ல உறுதுணையாக அமையும் என்பது உறுதி.

ஆகவே, நான் தஞ்சையில் நடைபெறும் இவ்விழாவில் கலந்து கொள்வதிலும், கலைஞர். திரு. மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிவருகிற அரும் பெரும் இலக்கியப் பணிக்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பெருமை வாய்ந்த இந்த இராசராசன் விருதினை அவருக்கு அளிப்பதிலும் பெருமகிழ்ச்சி அடைகிறேன். கலைஞர் திரு. மு. கருணாநிதி அவர்கள், ஆளுமைமிக்க சோழர் மரபில் தனிச்சிறப்பு வாய்ந்த ஓர் இடம் வகிக்கிறார் என்று கூட நான் கூறுவேன். அவர் மிகச் சிறந்த ஆட்சியாளராகவும், தலைமைசான்ற இலக்கியப் புலமை பெற்றவராகவும் விளங்குகிறார்.

இவ்விருதினை, தகுதிவாய்ந்த அவருக்கு வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், மக்கள் தொண்டாற்றி மேலும் மேலும் வெற்றி பலகுவித்துப் புகழ் பெற நான் உளமார்ந்த என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

மாண்புமிகு முதல்வர்
பிறந்தநாள் செய்தி-வேண்டுகோள்

பிறந்த நாள் வாழ்த்துக் கூறும் பெருமக்களின் நல்லிதயங்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகளைக் குவிக்கின்றேன். அறுபத்தி ஏழாவது ஆண்டில் நுழைகிறேன். ஐம்பத்திரெண்டு ஆண்டுக் கால பொது வாழ்க்கைக்கும், நாற்பது ஆண்டுக்கு மேற்பட்ட கலையுலக வாழ்க்கைக்கும் சொந்தம் கொண்டாடும் உரிமை பெற்றவன் என்ற முறையில் இரு துறையிலும் என்னைத் தாக்கியோர், தாங்கியோர் எனப்படும் இரு பிரிவினரும் தந்த ஊக்கத்தை உரமாகவும், விழுதாகவும் கொண்டு வளர்ந்துள்ளதை எண்ணி மகிழ்கிறேன். இரு சாரார்க்கும் நன்றி கூறுவதே பண்பாடு என உணருகிறேன். என் நன்றி வணக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். அண்ணன் விட்டுச் சென்ற ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும், 1971-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போதும் இப்போது 1989-ல் மூன்றாவது முறையாக ஆட்சித் தலைமையை ஏற்றுள்ள நிலையிலும்; என் கால்கள் கடைக்கோடியில் நிற்கும் மக்களைச் சுற்றியே உலா வருகின்றன! என் கரங்கள் அவர்களைக் கரையேற்றிடவே நீளுகின்றன! என் கண்கள் அவர்களுக்காகவே ஒளி உமிழ்கின்றன! அவர்களுக்காகவே கலங்குகின்றன! ஏழை, எளிய, சாதாரண, சாமானிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, நடுத்தர மக்களின் வாழ்வோடு தன்னைப் பிணைத்துக் கொண்ட கழகத்தின் தலைவன் கழக ஆட்சியின் தலைவன் எனினும் மக்களின் தொண்டன் என்பதில் தான் நான் பெருமை அடைகிறேன். பெரியாரும் பேரறிஞரும் அப்படித்தான் என்னை வளர்த்திருக்கிறார்கள்.

கடைக்கோடியில் நிற்கும்
மக்களைச் சுற்றியே-
என் கால்கள்
உலா வருகின்றன-அவர்களைக்
கரையேற்றிடவே
என் கரங்கள் நீளுகின்றன!
என் கண்கள் அவர்களுக்காகவே
ஒளி உமிழ்கின்றன!
அவர்களுக்காகவே கலங்குகின்றன!

கிராமப்புறத்து ஏழைகள் கண்ணொளி பெறுவது கண்டு பூரித்துப் போகிறேன்!

தொழுநோய் இரவலர் இல்லங்களை நான் தொழுவதற்குரிய இல்லங்களாக அமைத்ததை எண்ணிப் புளகாங்கிதமடைகிறேன்!

பல்லாயிரக்கணக்கான ஏழை மகளிர் திருமண உதவித் திட்டம் அவர்தம் இல்லங்களில் விளக்கேற்றி வைப்பது கண்டு மெய்சிலிர்த்துப் போகிறேன்!

பின்தள்ளப்பட்ட சமுதாயத்தின் சகல பிரிவினரும் கல்வி வாய்ப்பும் வேலை வாய்ப்பும்

பாவேந்தர் நூற்றாண்டு:

இந்த உலகினில் யாரும்- நல்
இன்ப மெனும்கரை ஏறல்
சந்ததமும் தொழி லாளர் - புயம்
தரும் துணையன்றி வேறே
எந்த விதத்திலும் இல்லை!

தமிழர்களின் சகிப்புத்தன்மைக்கும் பரந்தமனப்பான்மைக்கும் இது மிகச் சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

இவர்களைத் தவிர, பெண் துறவி ஒருவரும் இருந்தார். தெய்வமாக்கப்பட்டு, பல ஆலயங்களில் சிலையாக வைக்கப்பட்டுள்ள பெண்மணி அநேகமாக வரலாற்றில் இவர் மட்டுமே ஆவார். தமிழகம் மகளிருக்குச் சிறப்பிடம் அளித்திருந்தது என்பதற்கு இது மேலும் ஒரு சான்றாகும். ''ஆண்டாள்'' அல்லது ''கோதை நாயகி''என்பவரைப் பற்றித்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

தமிழ் இலக்கியத்தில்- குறிப்பாக, சங்க இலக்கியத்திற்குப் புத்தமதம் , சமண மதம் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் ஆற்றிய பணி அளப்பரியதாகும். கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களும் இராபர்ட் டி நொபிலி முதல், கால்டுவெல் வரையிலான கிறிஸ்துவ மதகுருமார்கள் அரிய பல நூல்களைத் தமிழில் படைத்துள்ளனர். மொழி பெயர்ப்புப் பணியின் மூலமும் தமிழ் மொழிக்குத் தொண்டுபுரிந்துள்ளனர். தூய தோமையர் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைக்கு வந்தார். ''வீரமாமுனிவர்''என்று தம்பெயரை மாற்றியமைத்துக் கொண்ட ''பெஸ்கி'', ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை ''தேம்பாவணி'' என்ற பெயரில் தமிழில் காவியமாக இயற்றியுள்ளார்.

பெரும் புகழ்வாய்ந்த அறநூலாக இலக்கியங்களுக்கு மணிமகுடமாக விளங்கும் திருக்குறள், உலகில் இதுகாறும் இயற்றப்பட்டுள்ள மிகச்சிறிய இனிய வரிப் பாக்களில் மகத்தானதாக-இயன்றவரை மிகவும் குறைவான சொற்களில், காலத்தை வென்றதாக, நாடு, சமய வரையறைகளுக்கு அப்பாற்பட்டதாக , மனிதகுலத்திற்கு இறவாப் புகழ்வாய்ந்த அறநெறி கூறுவதாக அமைந்துள்ளது.

தமிழ் மொழியின் வளர்ச்சியிலும் அதனை உலகம் முழுவதும் பரவச் செய்யும் முயற்சியிலும் இத்தமிழ்ப் பல்கலைக் கழகம் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளது பெரிதும் வரவேற்கத்தக்கதாக- நெஞ்சை நெகிழ வைப்பதாக இருக்கிறது. மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குறிப்பிட்டுள்ளதுபோல்,

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்''.

தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றைப் பரவச் செய்ய, மொழிபெயர்ப்புகளே மிகவும் வலிமை வாய்ந்த கருவிகளாகும். வெளிநாடுகளில் குடியேறியுள்ளவர்களிலும், கடல்கடந்து சென்றுள்ள இந்தியர்களிலும் தமிழர்களே அதிக எண்ணிக்கையுள்ளராவார்கள். இந்நிலை இந்நூற்றாண்டில் மட்டுமின்றி மிகப் பழங்காலத்தொட்டே தொடர்ந்து வந்திருக்கிறது.

கடல்கடந்த நாடுகளில் வாழ்ந்து வரும் தமிழர்கள், தமிழ்மொழி , இலக்கியம் ஆகியவற்றின் சிறப்புகளை வெளிப்படுத்தி, எடுத்துரைத்துப் பரப்பிடும் பணியில் ஈடுபடுவோராக விளங்கலாம். வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களிடையே தமிழ்மொழி, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றைப் பரப்பிட வேண்டும் என்ற பொறுப்புணர்வைத் தூண்டும் வகையில் அஞ்சல் வழிக்கல்வி, கானொலி சாதனங்கள், பத்திரிகைத்துறை ஆகியவற்றை முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும், நம் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ள வேண்டும்.

பண்டைய இந்தியாவின் 18-வது கல்வி முறைகளில் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும் ஆயுர்வேத மருத்துவத் துறையில்- சித்த, ஆயுர்வேத மருத்துவ முறைகள் பற்றிய எண்ணற்ற சுவடிகளையும், ஆவணங்களையும் தமிழ்நாடு பாதுகாத்து வைத்திருக்கிறது. இந்த மருத்துவத்துறைகளில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் தமிழ்நாட்டில் இன்றும் உள்ளன. ஒன்றோடொன்று இணைத்துப் பார்க்கும் முழுமையான மருத்துவக் கோட்பாடு தமிழ்நாட்டு மண்ணிற்கு நெருங்கிய உறவுடையதாக விளங்குகிறது.

'இயல்' (Literature) 'இசை' (Music) 'நாடகம்' (Drama) ஆகிய முப்பெரும் துறைகளைத் தன்னகத்தே கொண்டு ''முத்தமிழாக'' முப்பரிமாண வீச்சுடன் பரிணாம வளர்ச்சிபெற்றுள்ளதே தமிழ்மொழியின் பெருமைக்குச் சான்று பகரும்.

மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் இலக்கிய மேதை; பல் கலை வித்தகர்; அவர் கவிதைகள் பல புனைந்துள்ளார். நாடகங்கள் பல தீட்டியுள்ளார். அவருடைய உரை நடையும், சொல்லாட்சியும் நாட்டு மக்களுக்குச் சீரிய கருத்துக்களை எடுத்தியம்பும் மிகச் சிறந்த முறைகளாக விளங்குகின்றன.

மிகவும் புகழ்மிக்க திரைக்கதை - உரையாடல் எழுதுபவராகவும் நாடக ஆசிரியராகவும் பெரும்புகழ் பெற்றிருக்கின்ற டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள், வரலாற்றுப் புதினங்களை எழுதியிருக்கிறார். அவை தமிழ் இலக்கியத்தில் அழியாப் புகழ்வாய்ந்த கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தமிழ் இலக்கியத்திற்கு டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் அளித்துள்ள– என்றும் அழியாத பங்கு, ''குறளோவியம்'', ''சங்கத் தமிழ்'' ஆகிய வியத்தகு படைப்புகளாகும். என்றும் நிலைத்து ஒளிவிடும் இத்தகைய இலக்கியப் பணிக்காகத் தமிழர்களின் வழித் தோன்றல் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை என்றும் நினைவுகூர்வர்.

டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய ''தென்பாண்டி சிங்கம்'' என்ற நூலுக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்நூல் தமிழ்நாட்டின் தென் பகுதியிலுள்ள தமிழர்கள் போற்றி வளர்த்து வரும் வீரம், மானம், கற்பு, நாணம் ஆகிய சீரிய பண்புகளை விளக்குகிறது. டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் ''ரோமாபுரி பாண்டியன்'' என்ற வரலாற்றுப் புதினத்தையும் எழுதியுள்ளார். அது, ரோமாபுரிக்கும் தமிழ்நாட்டிற்குமிடையேயான பண்பாடு, வணிக, வரலாற்றுத் தொடர்புகளை வெளிப்படுத்துகிறது. அவர் எழுதிய இன்னொரு வரலாற்றுப் புதினமான ''பொன்னர் சங்கர்'', தமிழ்நாட்டின் சேலம், பெரியார் மாவட்டங்களிலும்- அவற்றைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் பின்பற்றப்பட்டு வந்த பழக்க வழக்கங்கள், மரபு ஆகியவற்றை, தெள்ளத் தெளிவாக விளக்குகிறது. டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய ''சங்கத் தமிழ்'' என்ற நூலிலிருந்து இரண்டு தொடர்களைக் குறிப்பிட நான் விரும்புகிறேன்.

போர்க்களத்தில் மகனை இழந்த ஒருதாய், பின்வரும் இரங்கற்பாடலைப் பாடுகிறார்.

''மானம் என் மகன் கேட்ட தாலாட்டு,
மரணம் அவன் ஆடிய விளையாட்டு''

—புகழ், தன்மானம் ஆகிய சீரிய பண்புகள் தொட்டிலில் என் மகன் கேட்ட தாலாட்டாகும் ; மரணம் என்ற விளையாட்டை அவன் ஆடி முடித்து, கடந்து சென்றான் என்பது இதற்குப் பொருளாகும்.

உரைநடை, கவிதை, நாடகம் ஆகிய மூன்றிலும் நல்ல புலமை பெற்றுள்ள டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, ''முத்தமிழ் அறிஞர் - தமிழ் மொழியின் மூன்று வடிவங்களின் அறிஞர்'' என்று அழைக்கலாம்.

தமிழ் இலக்கிய உலகில் முதன்மை பெற்று விளங்கும் சிறந்த எழுத்தாளரான டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்குச் சிறந்ததொரு ஆட்சியாளரும், நடுநிலையாளரும், ஒருமைப்பாட்டாளரும், மனிதப் பண்பாளருமான இராசராச சோழன் விருது வழங்குவது உண்மையிலேயே பொருத்தமானதாகும்.

இந்தியாவில் கிறிஸ்துவுக்குப் பின்னுள்ள இரண்டாயிரம் ஆண்டின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால், பண்டைய இந்தியாவின் சிறந்த அரசர்களில் ஒருவராக இராசராச சோழன், தென்னிந்தியாவில் ஒப்புயர்வற்ற முறையில் ஆட்சிசெய்ததை நாம் அறியமுடியும். தஞ்சாவூர் பெரிய கோயில், ஒரே சீர்மையுடன் காணப்படும் மாபெரும் கட்டடமாகவும், பொறியியல் திறனின் வியத்தகு சாதனையாகவும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் சான்றாக நின்றுநிலவும் சின்னமாகவும் இன்றும் விளங்கி வருகிறது. அக்காலத்தில் சோழர்கள் படையெடுத்து, தங்களது நாட்டு எல்லைகளைக் கங்கை நதிக் கரை வரையிலும் விரிவாக்கிக் கொண்டனர். சோழர்களின் ''பெரிய கடவுளும்''- ஐசுவரியத்தை அளிப்பவரும்- உலகம் முழுவதற்கும் மகிழ்ச்சியையும், வளத்தையும் அளிப்பவர் என்று கருதப்படுபவருமாகிய பிரகதீசுவரரின் படிமத்தை நீராட்டி அழகுபடுத்துவதற்காகக் கங்கைப் புனித நீரைத் தஞ்சாவூர் கோயில் நகரத்திற்குக் கொண்டு வந்தவர் இராசராச சோழன் ஆவார்.

வரலாற்றுக் காலங்களிலும், கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்கள் முழுவதிலும் தமிழ் அரசர் குலங்கள்- குறிப்பாக சோழர்கள், ஆதிச் சோழர்களாக அல்லது முற்காலச் சோழர்களாக அல்லது பிற்காலச் சோழர்களாகத் தொடர்ந்து வளம் பெற்று வாழ்ந்துவந்துள்ளனர். பிற்காலச் சோழர்கள் விஜயாலய சோழர்கள் என்று அழைக்கப்பட்டனர். இராசராச சோழன் இந்தச் சோழ அரசர் குலத்தைச் சேர்ந்தவர்.

பண்டைய தமிழ் இலக்கண நூல்களில் ஒன்றான ''தொல்காப்பியம்'' இக்காலங்களில் தமிழ்நாட்டின் எல்லைகளைப பின்வருமாறு விவரிக்கிறது: ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்''.

ஸ்ரீ வேங்கடேஸ்வரா, தன்பெயரை எவ்வாறு பெற்றார் என்பது ஒரு சுவையான கதையாகும். வேங்கைகள் நிறைந்த நாட்டிற்குக் கடவுள் என்பது தமிழில் அவரது பெயருக்கு உரிய நேரடியான பொருளாகும். புலிகளைக் குறிப்பிடுவதற்கு வடமொழியில் 'வியாக்ர' என்றும், இந்தியில் 'பாக்' (உதாரணம் - பாகல்கண்ட்) என்றும், தமிழில் 'வேங்கை' என்றும் இந்திய மொழிகளில் பல் வேறு சொற்கள் உள்ளன. சோழர்களின் சின்னம் அல்லது கொடி 'புலி' ஆகும்.

எல்லா மதத்தலைவர்களும் தெற்கிலிருந்து வந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. வரலாற்று அடிப்படையில் சொல்ல வேண்டுமென்றால், ஆதிசங்கராச்சாரியார், இராமானுச ஆச்சாரியார், மத்துவாச்சாரியார், வல்லபாச்சாரியார் ஆகியோரும்- நூற்றுக்கணக்கான புலவர்கள், தத்துவ ஞானிகள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியோரும், வரலாற்றின் பல்வேறு காலங்களில் தென்னாட்டிலிருந்து வடநாட்டிற்கு வந்தவர்களே!

மிகச் சிறந்த பெண்பாற் தமிழ்ப் புலவரான ஔவையார் கூட, அவருடைய இறுதிக் காலத்தில் கைலாசத்தை அடைந்தார் என்று கூறப்படுகிறது. இராமானுச ஆச்சாரியார் தென் கோடியிலிருந்து திருப்பதி மலைக்குச் சென்று சுமார் கி.பி.1000-ல் ஒரு கோயிலை எழுப்பினார். இராசராசசோழன் புகழ்பெற்ற பெரிய கோயிலை மட்டும் கட்டவில்லை; தென்னிந்தியாவின் பல பகுதிகளையும் இணைத்து உறுதியான அரசியல் முறையையும், ஆட்சியையும் அமைத்துக் கொள்ளும் வகையில் நிர்வாகம், பண்பாடு, சமுதாயம் ஆகிய துறைகளில் ஒருமைப்பாட்டையும் கூட ஏற்படுத்தினார். விசயநகரப் பேரரசு பற்றி, சீவல் (SEWELL) என்ற வரலாற்றுப் பேராசிரியர் 'மறந்து போன பேரரசு' என்ற தனது நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். விசயாலயன் தோற்றுவித்து, இராசராச சோழன் நிறுவிய சோழப் பேரரசு எனும் உறுதியான அடிப்படையின் மீது எழுந்ததுதான் அந்த விசயநகரப் பேரரசு.

இராசராசசோழன் ஒருமைப்பாட்டையும் ஒருங்கிணைப்பையும் உருவாக்கியவராக என்றென்றும் நினைவில் இருக்கின்றார்.

இராசராசனின் ஆட்சித் திறனில் மிகவும் குறிப்பிடத்தக்கது- ஆட்சி அதிகாரத்தைப் பரவலாக்கும் ஜனநாயக முறை பற்றி இன்று நாம் கூறுகின்ற முறையை அன்றே அவர் கொண்டு வந்தார் என்பதாகும். வாக்குப் பதிவு முறை கிராமங்களிலும்கூட ஏற்கெனவே நடைமுறையில் இருந்தது. ஐம்பெருங்காப்பியங்களில் காலத்தாற் முற்பட்டு விளங்கும் 'சிலப்பதிகாரம்' என்னும் பெருங்காப்பியத்தில் (கிறிஸ்துவின் தோற்றத்தை ஒட்டி எழுந்த நூல்) ஐம்பெருங்குழு பற்றிய குறிப்பு உள்ளது. ''ஐம்பெருங்குழு'' என்பது ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குழு என்று பொருள்படும். சோழர்கள் காலத்தில் இவர்கள், குடவோலை முறை எனும் இரகசிய வாக்குப் பதிவு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். குடம் என்பது வாக்குப் பெட்டியையும், ஒலை என்பது வாக்குச் சீட்டையும் குறிப்பதாகும்.

கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் 95-வது பிறந்த நாளையொட்டி (5.6.90) மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் திருவல்லிக்கேணி பெரிய மசூதியிலுள்ள காயிதே மில்லத் அவர்களின் நினைவிடத்தில் மலர்ப் படுகை வைத்து மரியாதை செலுத்தினார்.

"இன்னும் ஏராளம் எழுதிப் புகழ்பெற வேண்டும்!"

மாமன்னன் ராசராசன் விருது வழங்கிய மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு சங்கர்தயாள்சர்மாஅவர்கள், தனது நீண்டபாராட்டுரையின் முடிவில், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்குப் பேனா ஒன்றைத் தனது அன்பளிப்பாக வழங்கினார். அழகிய பெட்டியினுள்ளிருந்து அதை எடுத்து உயர்த்திப் பிடித்துக் கூட்டத்தாருக்குக் காட்டிய மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள்- "முத்தமிழ் அறிஞர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு நான் என்னுடைய அன்பளிப்பாக இந்தப் பேனாவைத் தருகிறேன். தமிழக முதல்வர் அவர்கள், இன்னும் ஏராளமாக எழுதிப் புகழ்பெற வேண்டும் என்று வாழ்த்திக் கேட்டுக்கொள்கிறேன்" என்று, மக்களின் பலத்த மகிழ்ச்சி ஆரவாரத்தினிடையே கூறிவிட்டு அதை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.

ஏற்புரை வழங்குகையில் அதுகுறித்து மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாவது:

"என்னால் எழுதாமல் இருக்க முடியாது!"

"நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், இங்கே எனக்கு அன்போடு ஒரு பேனாவை வழங்கினார்கள். இனியும் ஏராளமாக எழுதவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுக்கு இங்கே நான் ஒன்றைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நீங்கள் இன்று அளித்த பேனாவை- அறிஞர் அண்ணா அவர்கள் அளித்த கணையாழியை எப்படி நான் என்னுடைய விரல்களிலே அணிந்து எப்போதும் பார்த்துப்பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேனோ, அதைப்போல- தாங்கள் வழங்கிய இந்தப் பேனாவைத் தொடர்ந்து நானே வைத்திருப்பேன். நீங்கள் இந்தப் பேனாவுடன் ஓர் அன்புக் கட்டளையும் பிறப்பித்திருக்கிறீர்கள்- தொடர்ந்து எழுத வேண்டும் என்று. தங்களுக்கு இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன் - என்னால் எழுதாமல் இருக்க முடியாது!"

கழக அறிவியல் கட்டடத்தை மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களும் திறந்து வைத்தார்கள்.

அழகப்பா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திருமதி ராதா தியாகராசன் தமது வாழ்த்துரையில்- "நம் தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் முதல்வர் கலைஞர் அவர்களின் எழுத்தாற்றல் மேலும் பொலிவொடு மிளிர்க" என்று குறிப்பிட்டார்.

இதையடுத்து- ராசராசன் விருது வழங்கும் நிகழ்ச்சி இடம் பெற்றது.

"ராஜராஜன் கலைஞர் வாழ்க"

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்; மாமன்னன் ராஜராஜன் படைப்பிலக்கியப் பரிசுத் தொகையான ஒரு லட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலையைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களிடம் அளித்தார்.

அப்போது, விழா அரங்கில் கூடியிருந்த வெள்ளம் போன்ற தமிழர் கூட்டம், "ராஜராஜன் கலைஞர் வாழ்க" என்று மகிழ்ந்து முழங்கியது.

குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள், ராஜராஜன் பரிசு வழங்கி வாழ்த்துரை வழங்கினார்தஞ்சைத்தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ராஜஸ்தான் பெண்ணின் ஓவியம் ஒன்றை அவர் அன்புடன் வழங்கினார். இதனையடுத்து, மேதகு தமிழக ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா அவர்கள் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது: நான் தமிழக ஆளுநரானபின் நடைபெறும் முதல் நிகழ்ச்சி, தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு ராஜராஜன் பரிசு வழங்கும் இந்த நிகழ்ச்சியாக அமைந்திருப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்னும் ஒரு சில மாதங்களிலேயே தமிழை நான் எளிதாகப் புரிந்து கொள்ளும் நிலையைப் பெறுவேன். போராட்டங்கள் மிகுந்த அரசியலில் மட்டுமன்றி, இலக்கியத் துறையிலும் தமிழக முதல்வர் அரிய ஆற்றல் பெற்றிருப்பது எப்படி முடிகிறது என்று எனக்கு வியப்பாயிருக்கிறது. தொன்மையும், மேன்மையும் வாய்ந்த மொழியாக விளங்கும் தமிழ் மொழியில் உள்ள திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற சில இலக்கியங்களைப் பற்றி நான் கேட்டறிந்திருக்கிறேன். வேற்றுமையில் ஒற்றுமையை வளர்ப்பதில் நாம் முன்னேறி வருகிறோம். இந்திய மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசாவிட்டாலும் - ஒரே சமயத்தைச் சார்ந்திருக்காவிட்டாலும் மனித நேயத்தில், பண்பாட்டு நெறிமுறையில், உன்னத ஒருமைப்பாட்டு எண்ணம் நமக்கு இருக்க வேண்டும். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் மாமன்னன் ராஜராஜன் விருது பெறும் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களை, தமிழக ஆளுநர் என்ற வகையிலே மட்டுமல்ல; இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தர் என்ற முறையிலும் நான் இதய பூர்வமாக வாழ்த்துகிறேன்".

— மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் உரையை திரு. வை. கோபால்சாமி, எம்.பி.யும், மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் உரையைத் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. அவ்வை நடராசனும் தமிழில் மொழி பெயர்த்தார்கள்.

இந்திராகாந்தி திறந்த வெளிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்

கூறுகின்ற துணிவு பெற்றவருமான நம்முடைய இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் உங்கள் முன்னிலையிலே இந்த விருதினை எனக்கு வழங்கியிருக்கிறார். இந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்நாளில் மறக்க முடியாத நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

"அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே அன்றைய தினம் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தியாவின் வரலாற்றைக் கங்கைக் கரையிலிருந்து எழுதிப் பயனில்லை; காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட வேண்டும் எனக் கனவு கண்டார்கள். அந்தக் கனவு இன்றைக்கு நிறைவேறியதாக நான் உணர்கிறேன். இந்தியாவின் வரலாற்றைக் காவிரிக் கரையிலிருந்து எழுத, நம்முடைய குடியரசுத் துணைத்தலைவர் சர்மா அவர்கள் இன்றைக்குத் தமது வரலாற்றுச்

எழுதுகின்ற அந்தப் பணியை நான் என்றைக்கும் நிறுத்தப்போவதில்லை.

"அந்தப் பணியின் ஒரு கட்டமாகத்தான் 'தென்பாண்டிச் சிங்கம்' உதயமாயிற்று. தென்பாண்டிச் சிங்கத்தைப் பற்றி - அந்த நூலுக்கு விருது வழங்குவதைப் பற்றி எண்ணி மகிழ்கின்ற நேரத்தில்- 'இப்படி ஒரு வரலாற்றுக் கதை இருக்கின்றது. அதை நீங்கள் பெருங்கதையாக எழுதவேண்டும்' என்று சொன்ன சிறுகதை மன்னன் தென்னரசை மறந்துவிட்டால் நன்றி கொன்ற குற்றத்திற்கு நான் ஆளாவேன்.

அந்தக் கதைக்கு மற்றொரு கருவாக - சரித்திரக் குறிப்புகளைத் தருகின்ற கருவாக எனக்கு அமைந்தது, வேங்கடசாமி நாட்டார் அய்யா எழுதிய 'கள்ளர் வரலாறு' என்ற நூலாகும்.

திரு. வா.செ. குழந்தைசாமி அவர்கள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்தி உரையாற்றினார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்கள் நன்றி கூறி, சிறப்புரை ஆற்றினார்.

ராஜராஜன் விருது பெற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள், தமது ஏற்புரையில் குறிப்பிட்டதாவது:

"நம்முடைய அன்புக்குரியவரும், ஆற்றல் வாய்ந்தவரும், அரசியலில் நேர்மையைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருபவரும், சரியென்று பட்டதை யார் எதிர்த்தபோதிலும் தயங்காமல் எடுத்துக்

சார்பான நீண்ட உரையின் மூலம் தொடக்க விழா நடத்தியிருக்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

"நம்முடைய ஆளுநர் பர்னாலா அவர்கள் இங்கே பேசும்போது இவ்வளவு அரசியல் நெருக்கடிகளுக்கிடையே எப்படி இவரால் எழுத முடிகிறது என்று கேட்டார்கள். எழுதினால்தான் அரசியல் நெருக்கடியை என்னால் சமாளிக்க முடியும். வேலை செய்துவிட்டு, களைப் பாறுவதற்கு டானிக் சாப்பிடுவதைப் போல் நான் எழுதுவதை வாடிக்கையாகக் கொண்டு இருக்கின்றேன். இன்று நேற்றல்ல, ஏறத்தாழ ஐம்பதாண்டுக் காலமாக எழுதிக் கொண்டு இருக்கின்றேன்.

"தமிழ்நாட்டிலே இருக்கின்ற - பெரிய சமுதாயமாக இருக்கின்ற முக்குலத்தோர் சமுதாயத்திற்காகத் 'தென்பாண்டிச் சிங்கம்', கொங்கு வேளாளர் சமுதாயத்திற்காகப் 'பொன்னர் சங்கர்', வன்னியர் சமுதாயத்திற்காகப் 'பாயும் புலி பண்டாரக வன்னியன்' - ஆகியவற்றை எழுதி முடித்திருக்கிறேன்.

"நம்முடைய புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டதைப் போல்-

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்றுடலினால்
பலராய்க் காண்பர்



பெறுவதற்கு மேலும் மேலும் புதிய ஏற்பாடுகளையும் வசதிகளையும் பெருக்குவதில் தொய்வில்லாத் தொடர் பயணம் நடத்துகிறோம் என எண்ணிப் பெருமிதம் கொள்கிறேன்!

அண்மையில் நிறைவேறிய இரு நிகழ்ச்சிகள் என்னை எத்துணை மகிழ்ச்சியில் ஆழ்த்துகின்றன!

வெளிச்சந்தையில் ஏக்கர் ஒன்று இருபதாயிர ரூபாய் மதிப்புள்ள நிலங்களை - முக்கால் ஏக்கர் நன்செய் இரண்டாயிரம் ரூபாய் எனவும், ஒன்றரை ஏக்கர் புன்செய் எழுநூறு ரூபாய் எனவும் ஐயாயிரம் ஏழை விவசாயத் தொழிலாளர்க்கு வடபாதி மங்கலத்தில் சில நாட்களுக்கு முன்பு வழங்கப்பட்டது என் நெஞ்சுக்கு எவ்வளவு இதமளிக்கிறது!

எத்தர்களால் ஏமாற்றப்பட்ட தமிழ்நாட்டுச் சகோதரிகள் ''பம்பாய் பசாரில்'' வாடகைப் பொருள்களாக ஆக்கப்பட்ட கொடுமை தவிர்க்க இந்தியாவிலேயே முதல் முயற்சியாக எண்ணூறுக்கு மேற்பட்ட சகோதரிகளை நமது காவல் துறையினர் தமிழகத்துக்கு மீட்டு வந்துள்ள நிகழ்ச்சி; ஒரு மகத்தான சமுதாயத் திருப்பமன்றோ!

வழங்கி வரும் நிதி சென்ற ஆண்டு செலவிடப்பட்ட விபரத்தைக் கூற விழைகிறேன்.

முதலமைச்சரின் நிவாரண நிதியிலிருந்து: ஏழைகளின் சிறுநீரக சிகிச்சைக்காக அளித்தது 89,000 ரூபாய்! சிறுநீரக சிகிச்சைக் கருவி சென்னை பொது மருத்துவ மனைக்கு வாங்கிட 2 கோடி ரூபாய்! இருதய அறுவை சிகிச்சைக்காக வழங்கியது 3,76,000 ரூபாய்!

ஏழை எளியோர்க்கு இலவசமாக இருதய அறுவை சிகிச்சைக்கென சென்னைப் பொது மருத்துவ மனைக்கு சிகிச்சைக் கருவி வாங்கி வழங்கியதற்கு ஒரு கோடி ரூபாய்!

விபத்தில் இறந்த தொழிலாளர், மற்றும் மீனவர் குடும்பங்களின் பாதுகாப்பு நிதியாக ஏழு லட்சத்து ஐம்பதாயிர ரூபாய்!

ஆந்திரப் புயல் நிவாரண நிதியாக இருபத்தி ஐந்து லட்ச ரூபாய்!

மற்றும் வகுப்புக் கலவரங்கள், வன்முறைச் சம்பவங்களில் உயிரிழந்தோர், உடமையிழந்தோர்க்கான உதவித் தொகையாக அறுபத்தெட்டு லட்சம் ரூபாய்!

தமிழகத்தில் தொழில் வளர்ச்சி—நல்வாழ்வு
கல்விச் செல்வம் பெருகிட—நிலைத்திட
அனைவரும் உறுதி ஏற்றிடுவோம்!

இத்தகைய அபலைகள், ஆதரவற்றோர், ஏழை எளியோர் இடுக்கண் நீக்கிட அரசின் நிதியாதாரம் பயன்படுத்தப்படுகிற அதே நேரத்தில் இந்த சமுதாயத் தொண்டனின் பிறந்த நாள் விழாவும் அவர்களுக்கெனப் பயன்பட வேண்டுமென எண்ணியே தொடர்ந்து செயல்பட்டு வருகிறேன்.

என் பிறந்த நாள் நிதியாக முதலமைச்சர் நிவாரண நிதிக்கு, பரந்த மனமுடன் பெருமக்கள்

இப்படி சுமார் நாலு கோடி ரூபாய் அளவுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட ஏழைகள், பாட்டாளித் தொழிலாளர்களுக்கென, கடந்த ஆண்டில் தரப்பட்டுள்ளது.

இந்தப் பணி தொடர்ந்து நடைபெற— தடங்கல் ஏதுமின்றி நிறைவேற்றப்பட — ''முதலமைச்சர் நிவாரண நிதி'' என்ற தலைப்பில் அரசின் கருவூலத்தை நிரப்பிட வேண்டுமென நிதி மிகுந்தோரையும் நிதி குறைந்தோரையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தின் வளம், தொழில் வளர்ச்சி, நல்வாழ்வு, கல்விச் செல்வம், அனைத்துக்கும் மேலாக அமைதியான வாழ்வு பெருகிடவும், நிலைத்திடவும் அனைவரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதே இந்தப் பிறந்த நாளின் பொழுது அனைவரது காலடிகளிலும் நான் வைக்கும் கோரிக்கையாகும்.

அன்புள்ள

மு. கருணாநிதி.
ஜூன் 1, 1990.

மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு
மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு

'மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு' மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு வழங்கும் விழா, தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 25.5.90 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர்தயாள் சர்மா அவர்கள் இந்தப் பரிசை வழங்கிய இவ்விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு மு. தமிழ்க் குடிமகன், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் மற்றும் தமிழ்நாடு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு புதுவை மாநில அமைச்சர் பெருமக்களும், ஏராளமான தமிழ்ப் பேரறிஞர்களும், தமிழ்நாடு அரசு உயர் அதிகாரிகளும் இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

'மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசு' வழங்கும் விழாவை முன்னிட்டு, தஞ்சை மாநகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. வீதிகள் தோறும் வரவேற்பு வளைவுகளும், கொடித் தோரணங்களும் வரவேற்புப் பதாகைகளும் வண்ண விளக்குச் சரங்களும் கண்ணைக் கவர்ந்தன.

நகரிலிருந்த தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாமன்னன் ராசராசன் திருவுருவச் சிலைகளெல்லாம் மாலைகளணிவித்துச் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டிருந்தன.

இரண்டு மூன்று நாட்களாகப் பெய்த மழையினால் தஞ்சை மண் குளிர்ந்திருந்தது. விழா நாளன்று மாலை, சரியாக 4.50 மணிக்கு, தஞ்சாவூர் விமான நிலையத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர். சங்கர் தயாள் சர்மா அவர்கள் ஹெலிகாப்டரில் வந்திறங்கினார். மேதகு தமிழக ஆளுநர் திரு. சுர்ஜித் சிங் பர்னாலா, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு விவேக் அரிநாராயண், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர். சி. பாலசுப்பிரமணியம், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மலர்ந்த முகத்தோடு வருகை தந்த இந்தியக் குடியரசுத் துணைத் தலைவருக்கு மாலைகள், சால்வைகள் அணிவித்து வரவேற்புத் தெரிவித்தார்கள்.

நன்னாள் - பொன்னாள்

தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில், அன்று மாலையிலிருந்தே தஞ்சை டி.எம். கோதண்டபாணி குழுவினரின் நாதசுர இசை நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்தது.

சரியாக மாலை 6 மணிக்குப் பரிசு வழங்கு விழா நிகழ்ச்சிகள் தொடங்கின.

''தமிழ்ப் பல்கலைக் கழக வரலாற்றில் இந்நாள் ஒரு நன்னாள். பொன்னாள். தமிழினக் காவலரும், ஐம்பதாண்டுக் காலமாக எழுத்துப் பணி ஆற்றி வருபவரும், தமிழகத்தின் முதல்வருமாகிய தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்களின் 'தென்பாண்டிச் சிங்கம்' என்னும் சிறந்த வரலாற்றுப் புதினப் படைப்பிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம், மாமன்னன் இராசராசன் விருதினை வழங்கிப் பெருமை கொள்கிறது. டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பரிசு வழங்குவதால் இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகமே பெருமை பெறுகின்றது'' என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார். பின்னர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பில் வருகை தந்திருந்த பிரமுகர்களுக்கெல்லாம் ஜரிகை மாலைகள் சூட்டி, பொன்னாடைகள் அணிவித்து, நினைவுப் பரிசுகள் வழங்கினார்.

கட்டடத் திறப்புகள்

தமிழ்ப் பல்கலைக் கழக அலுவலகக் கட்டடத்தை மேதகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக் கழக ஆசிரியர் குடியிருப்புகளை மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக் கழகத் தத்துவ மையக் கட்டடத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், தமிழ்ப் பல்கலைக்



–என்ற அந்த நிலையை எய்திட வேண்டுமென்பதுதான் நாம் அனைவரும் காணுகின்ற கனவு.

"அந்தக் கனவு பலித்திட, கடைசி மூச்சு என்னுடைய உடலிலிருந்து அகலுகின்ற வரை நான் உழைப்பேன் - உழைப்பேன்- உழைத்துக் கொண்டே இருப்பேன் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இங்கே வழங்கப்பட்ட விருதுடன் பரிசாக ஒரு இலட்சத்து ஒரு ரூபாய்க் கான காசோலை ஒன்று என்னிடத்திலே தரப்பட்டிருக்கின்றது. அந்தக் காசோலை தமிழுக்கே பயன்பட வேண்டுமென்று நான் கருதுகின்றேன்.

"என்னைப் பெரியாரின் கைகளிலே ஒப்படைத்து, பேரறிஞர் அண்ணாவின் நிழலிலே வளரச் செய்து, உங்களையெல் லாம் என்னுடைய உடன்பிறப்புகளாக ஆக்கிய பெருமைக்குரியவர்கள் என்னு டைய தாய் அஞ்சுகம் அம்மையாரும், தந்தை முத்து வேலரும் ஆவர். எனவே அவர்கள் நினைவாக இந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'அன்னை அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளை' என்ற பெயரில் ஒன்றைத் தொடங்க வேண்டும் என்று துணை வேந்தரையும் இணை வேந்தரையும், வேந்தரையும் கேட்டுக் கொண்டு, இந்த ஒரு இலட்சத்து ஒரு ரூபாயையும் தமிழ்ப்பல்கலைக் கழகத் திற்கே அளிக்கிறேன்.

"இந்தத் தொகையைக் கொண்டு - அதன் மூலம் கிடைக்கின்ற வட்டியைக் கொண்டு - அரிய இலக்கியங்களைப் படைத்துப் புகழ் பெற்ற டாக்டர் கால்டுவெல், மறைமலையடிகளார்,

எந்நாளும் முதல்வர்!

டாக்டர் வா.செ.குழந்தைசாமி

இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி அவர்கள், 'ராசராசன் பரிசு' பெற்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை வாழ்த்திப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"முன்பு நான் கலைஞர் அவர்களின் 'பொன்னர் சங்கர்' நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டேன்; அப்போது அவர் முன்னாள் முதல்வர். 'தென்பாண்டிச் சிங்கம்' வரலாற்றுப் புதினத்திற்குத் தஞ்சைப் பல்கலைக்கழகம் ராசராசன் விருது வழங்கும் இன்று, அவர் இந்நாள் முதல்வர்!

"முன்னாள் முதல்வர் என்பதும் இந்நாள் முதல்வர் என்பதும் வரும்-போகும். எந்நாளும் அவர் முதல்வராக இருக்கும் உலகு ஒன்று உண்டு. அதுதான் இலக்கிய உலகு. அந்த இலக்கிய உலகு தரும் சிம்மாசனமும், கிரீடமும் எந்தக் காலத்திலும் அவருடையது ஆகும்!

"வாழையடி வாழை எனவரும் தமிழ் இலக்கிய மரபில் செங்கோலும் எழுதுகோலும் சேர்ந்தே இருப்பது ஒரு தொடர்கதை. அதன் ஒளிமயமான ஓர் அத்தியாயம் கலைஞர். இது உண்மை - வெறும் புகழ்ச்சியில்லை. டாக்டர் கலைஞர் ஒரு பகுத்தறிவுவாதி; சமுதாய சீர்திருத்தவாதி; கவிஞர்; கட்டுரையாளர்; நாவலாசிரியர்; நாடகாசிரியர்; சிறுகதை ஆசிரியர்; பத்திரிகையாசிரியர்; தலைசிறந்த பேச்சாளர்; ஓர் அரசியல் தலைவர்.

"இறைவன் பத்து அவதாரங்கள் எடுக்க, அவருக்கும் பத்துப் பிறவி தேவைப்பட்டது; கலைஞர், ஒரு பிறவியில் பல அவதாரங்களைக் கண்டவர். ஒவ்வொன்றிலும் சிறந்து நின்றவர். அவரது அரசியலில் வேறுபாடு இருக்கலாம்; ஆனால் இலக்கியத் தலைவர் கலைஞரைத் தமிழினம் முழுவதும் கட்சி கடந்து - கருத்து வேறுபாடின்றி ஏன் பாராட்டக் கூடாது? அந்தப் பண்பாடு ஏன் உருவாகவில்லை? இந்தக் கேள்வி என் மனத்தில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகத்தில் இல்லையே என்ற எண்ணம் என் நெஞ்சை அழுத்துகிறது!

"பொன்னர் சங்கரும், தென்பாண்டிச் சிங்கமும் இன்னும் தங்களது எண்ணற்ற இலக்கிய நூல்களும் பேசும் - போற்றும் தமிழின உணர்வு வளர ஓர் இணைப்புப் பாலம் தேவை. கலைஞர் அவர்களே! அதைத் தாங்கள்தான் உருவாக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில், தங்களால்தான் அது இயலும்!

சங்கத் தமிழ்போல் வாழ்க!

மாண்புமிகு கல்வி அமைச்சர்

பேராசிரியர் க. அன்பழகன்

"இந்த விழாவில் ராசராச சோழன் விருது கலைஞருக்கு வழங்கப்பட்டதில் பல்வேறு பொருத்தம் இருக்கிறது.

"1981-ஆம் ஆண்டிலே இந்தப் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டு ஒன்பதாவது ஆண்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்- முதல் மூன்று ஆண்டுகளின் விருதுகள் வேறுசில பெருமக்களுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டு கலைஞருக்கு வழங்கப்படுவதன் மூலமாக, ராசராசசோழன் விருது எப்படிப்பட்ட விருது என்பதை நாடு புரிந்து கொள்ளுகிறது; உணருகிறது.

"கலைஞருக்கு இந்த விருதினைப் பெறுவதற்கான தகுதி இருபதாண்டுகளுக்கு முன்பே உண்டு.

"தந்தை பெரியார் அவர்கள் ஒருமுறை பேசும்பொழுது, 'பேரறிஞர் அண்ணாவிற்குப் பின்னர், தமிழ் நாட்டிற்குக் கிடைத்த பெரிய சொத்தாக நான் கலைஞரை மதிக்கிறேன்' என்று சொன்னார்.

"அறிஞர் அண்ணா ஒருமுறை கலைஞரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'தமிழக வரலாற்றின் முற்பகுதியை நான் தீட்டுகிறேன், அதன் பிற்பகுதியை என்னுடைய தம்பி கருணாநிதி நிச்சயமாகத் தீட்டுவான்' என்று கூறினார்.

"கலைஞர் அவர்கள் மாணவராக இருந்தபொழுதே 'புண்பட்ட இளைஞராக அவர் இருக்கமாட்டார்; இளைஞர்களிடையே வீரராக விளங்குவார்' என்று அன்றைக்கே பாவேந்தர் பாரதிதாசன் கலைஞரை வாழ்த்தி எழுதிய கவிதையில் கூறியுள்ளார்.

"கலைஞர் அவர்களுடைய எழுத்தாற்றலை வைத்து எண்ணுகிறவர்களெல்லாம் பாராட்டுவது, இருபது நூற்றாண்டுகளுக்குமுன் வழங்கிய சங்கத் தமிழ் இன்றைக்கு மறுபிறவி எடுப்பதற்குக் காரணமாக இருக்கிற ஆற்றல் மிக்கவர் என்று பாராட்டுகிறார்கள். அவரையே சங்கத் தமிழாகக் கருதுகிறார்கள்; மதிக்கிறார்கள்.

"எனவே- அப்படிப்பட்ட கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டோடு இரண்டறக் கலந்து விட்ட கலைஞர் அவர்கள்- தமிழ்நாட்டினுடைய வரலாற்றை உருவாக்குவதற்கான மிகப்பெரிய பேராற்றலைத் தன்னுடைய தூரிகையினாலே பெற்றிருக்கின்ற கலைஞர் அவர்கள் எழுத்துலகப் போட்டி என்று எந்தவகைப் போட்டி வந்தாலும் ஈடுகொடுக்கக் கூடிய தூரிகையைத் தன் கையிலே கொண்டிருக்கின்றார். சங்கத் தமிழ்போல் கலைஞர் வாழ்க! குறளோவியம் போல் கலைஞருடைய புகழ் ஓங்குக!"

—25.5.90 அன்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'ராசராசன் பரிசு' வழங்கு விழா உரையிலிருந்து.

ந.மு.வேங்கடசாமி நாட்டார், கா.சு. பிள்ளை, தமிழ்த் தென்றல் திரு. வி.க. ஆகியோரின் படைப்புகள் தொடர்பாக ஆய்வுரைகள் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்தப்பட வேண்டுமென்றும் - அந்த ஆய்வுரைகள் ஆண்டுதோறும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் நூல் வடிவில் வெளியிடப்பட வேண்டும் என்றும், இதுபோன்ற பரிசுகள், நான் இன்னும் எழுதுகின்ற நூல்களுக்கு எதிர் காலத்தில் வெளியிடுவதால் கிடைக்குமானால் அந்தத் தொகையிலும் ஒரு பகுதியை இந்த அறக்கட்டளைக்கு அவ்வப்போது வழங்கு வேன் என்றும் உறுதியைத் தந்து ஒரு இலட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலை யைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பாலசுப்பிரமணியம் அவர் களிடத்திலே அளித்து, விடைபெறுகிறேன்".

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து பல்கலைக் கழகத் துணை வேந்தர் காசோலையைப் பெற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
- பி.எல்.ஆர்

TNPSC

விளம்பர எண்.16/90

கீழ்க்காணும் பதவிகளுக்கு 26.6.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. **இரண்டு, அரசு கவனிப்பு இல்லங்களின் கண்காணிப்பாளர்கள்** (தமிழ்நாடு சீர்திருத்தப் பள்ளிகள் சார்நிலைப் பணி). ரூ. 1,820-3,200/- (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது)

   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

   கலை அல்லது அறிவியல் அல்லது வணிகவியலில் ஒரு பட்டம் அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பி.ஓ.எல். அல்லது மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தின் பி.பி.ஏ. அல்லது சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி.லிட். அல்லது பாரதியார் பல்கலைக் கழகத்தின் பி.பி.எம். அல்லது பி.லிட். பட்டம்.

2. **இரண்டு, உதவி பயிற்சி அலுவலர்கள்** (சுருக்கெழுத்து - ஆங்கிலம்) (தமிழ்நாடு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி சார்நிலைப் பணி) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை பயிற்சிப் பிரிவைச் சார்ந்தது. ரூ.1,600- ரூ.2,660/-

   ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் ...1 (முன் தெரிவில் நிரப்ப இயலாத, ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட காலியிடம்); பகிரங்கப் போட்டி ...1

   1.7.1990 அன்று 35-க்குக் குறைவாக.

   (அ) பழைய 11 ஆண்டு பள்ளிக் கல்விப் படிப்பிற்குப் பிறகு கல்லூரிக் கல்விப் படிப்பில் சேர தகுதி **அல்லது** தற்போதைய 10 ஆண்டு பள்ளிக் கல்விப் படிப்பிற்குப் பிறகு மேல்நிலைப் பள்ளிக் கல்விப் படிப்பில் சேர தகுதி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (ஆ) ஆங்கிலத்தில் தட்டெழுத்து மேல்நிலை மற்றும் ஆங்கிலத்தில் சுருக்கெழுத்து மேல்நிலை ஆகியவற்றில் அரசு தொழில்நுட்பத் தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (இ) தமிழில் தட்டெழுத்து கீழ்நிலை மற்றும் தமிழில் சுருக்கெழுத்து கீழ்நிலை ஆகியவற்றில் அரசு தொழில்நுட்பத் தேர்வு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்; **மற்றும்**

   (ஈ) ஆங்கிலச் சுருக்கெழுத்தராக இரண்டு வருடங்களுக்குக் குறைவில்லாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில்குறிப்பிட வேண்டும்.

இரு பதவிகளுக்கும் உரியன:

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும்பெறும், இப்பதவிக்குரிய கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விளக்கம்: ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர், விளம்பர எண், மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 1.5.1990 அன்றோ அதற்குப்பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒருகிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 1.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை (Account Payee Demand Draft) யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிற மொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா,

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் (ரூ.10/-) செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

டிஐபிஆர்/1207/எம்எஸ்/90/அக்கார்ட்



ஏழை எளியோர்க்கு நில உதவி

இந்த ஆட்சியிலே நாம் செய்து முடித்தவைகள் ஏராளமாக இருந்தாலும்கூட, இன்னும் செய்ய வேண்டியவைகள் ஏராளமாக இருக்கின்றன என்பதை உணராதவன் அல்ல நான். சட்டமன்ற உறுப்பினர் தம்புசாமி அவர்கள் இங்கே பேசும்போது- ''நீங்கள் நிலங்களை மட்டும் கொடுத்தால் போதாது, அதைப் பண்படுத்த வருங்காலத்திலே உதவி செய்ய வேண்டும்'' என்று சொன்னார்.

அவர் இதனை இப்போது கேட்பதற்கு முன்பே - நான் ஏற்கெனவே இது குறித்து, சிந்தித்துத் திட்டமிட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். இந்த நிலங்களைப் பண்படுத்துவதற்காக உதவித் தொகையாக ஏக்கர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் தரப்படும் என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்!

அதைப்போல ஆழ்குழாய்க் கிணறுகள்; கூட்டு முயற்சியாக நான்கைந்து பேர் சேர்ந்து ஒரு ஆழ்துளைக் கிணறு அமைத்து, தங்கள் நிலங்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல முயற்சிப்பார்களேயானால், அதற்கும் அரசு உரிய கடன் தொகையை வழங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலிலே சொன்ன நிலத்தைப் பண்படுத்துவதற்காகத் தரப்படும் ஆயிரம் ரூபாய் மானியமாகத் தரப்படுவதாகும். ஆழ்துளைக் கிணறு வைத்துக் கொள்ள நான்கைந்து பேர் ஒன்று சேர்ந்து ஒற்றுமையோடு செய்ய முன்வருவீர்களேயானால், அந்த ஆழ்துளைக் கிணறு அமைக்கின்ற அந்தத் தொகையை அரசாங்கம் கடனாக வழங்கும்.

இப்போது ஏக்கர் ஒன்றுக்கு 3,600 ரூபாய் என்று நிர்ணயித்து, முக்கால் ஏக்கர் பெறுகின்ற ஒரு விவசாயி, ரூபாய் 2,700 தர வேண்டுமென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இப்போது நான் எடுத்துள்ள முடிவினை அறிவிக்கிறேன். இந்த 2,700 ரூபாய்க்குப் பதிலாக இரண்டாயிரம் ரூபாய் மட்டும் தந்தால் போதும்; அவர்கள் 2,700 ரூபாய் தர வேண்டியதில்லை. 700 ரூபாய் குறைக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலப் புஞ்சைக்கு ஏக்கர் ஒன்றுக்கு 569 ரூபாய் என்று இப்போது விலை நிர்ணயிக்கப்பட்டு ஒரு நபருக்கு ஒன்றரை ஏக்கரா கொடுக்கப்படுகின்றது. அதனுடைய விலை 854 ரூபாய் ஆகின்றது. இந்தத் தொகையை புஞ்செய் நிலத்தைப் பெறுகின்றவர்கள் தர வேண்டும். இப்போது அறிவிக்கின்றேன்- இந்த 854 ரூபாய் என்பதற்குப் பதிலாக அந்தப் புஞ்செய் நிலத்திற்கு - அதாவது ஒன்றரை ஏக்கருக்கு 700 ரூபாய் கொடுத்தால் போதுமானது என்பதையும் மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியிலே அறிவித்து - இந்த நிலத்தைப் பெற்றவர்கள் உரிய தொகையை இருபது தவணையிலே செலுத்தி - ஒழுங்காகச் செலுத்தி, அரசு எப்படி நேர்மையாக நடந்து கொள்கிறதோ, அந்த நேர்மைக்குக் குந்தகம் வராமல் விவசாயப் பெருங்குடி மக்களும் நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

— மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், 27.5.90 அன்று, தஞ்சை மாவட்டம் வடபாதிமங்கலத்தில், நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்தளிக்கும் விழாவில் பேசியதிலிருந்து.

TNPSC

விளம்பர எண். 17/90

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் உள்ள ஆராய்ச்சி மற்றும் புள்ளியியல் பிரிவில் ஆராய்ச்சி உதவியாளர் பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 3.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (நியமன ஒதுக்கீட்டு விதி இத்தெரிவுக்குப் பொருந்தாது).

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூ.1,600-50-2,300-60-2,660

வயது: 1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.

தகுதி: (அ) 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாது பெறப்பட்ட புள்ளியியலில் ஒரு முதுநிலைப் பட்டம்

அல்லது

(ஆ) புள்ளியியலை ஒரு பாடமாகக் கொண்டு 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறப்பட்ட கணிதத்தில் ஒரு முதுநிலைப் பட்டம்.

அல்லது

(இ) கணிதம் **அல்லது** பொருளாதாரத்தில் 50 சதவிகித மதிப்பெண்களுக்கு குறையாமல் பெறப்பட்ட ஒரு முதுநிலைப் பட்டத்துடன் புள்ளியியலில் ஒரு பட்டயம், (Diploma)

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விளக்கம்: "ஆதரவற்ற விதவை" என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாது, பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாத விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர் மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 18.5.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 18.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான "கேட்புக் காசோலை" (Demand Draft)யுடனும், சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1287/MS/90/ACCORD

தமிழ் வளர்த்த பெரியார்:

கவியோகி சுத்தானந்த பாரதியார்

இன்றைய பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தின் தலை நகரான சிவகங்கையில் ஜடாதர ஐயர், காமாட்சி அம்மாள் தம்பதியருக்கு 1897-ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் தேதி சிவகங்கையில் பிறந்தவர் சுத்தானந்த பாரதி. பெற்றோர்களால் முதலில் இட்ட பெயர் வேங்கட சுப்பிரமணியன்; ஆனால் குடும்பத்தார் இவரை 'செல்லம்' என்றும் 'வெங்கட்' என்றும் அழைப்பர். இவருடன் இரண்டு சகோதரிகள், ஒரு சகோதரியும் உடன் பிறந்தனர். எல்லோரையும் விட இவர்தான் 'கடைக்' குட்டி!

சுத்தானந்தரின் தந்தைக்கு ஐதராபாத் பூர்வீகம். அலுவல் காரணமாக தென்னாட்டிற்கு வந்தவர், சிவகங்கையில் தங்கி வசிக்கலானார். இளமையில் சுத்தானந்தர் சிவகங்கையில் திண்ணைப்பள்ளியில் கல்வி பயின்றார். பின்பு சிவகங்கை அரசர் உயர்நிலைப்பள்ளியில், பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தார். இவருக்கு 9-ஆம் வயதில் உபநயனமும் நடந்தது. பள்ளிப்படிப்பை முடித்த இவர் பசுமலையில் போதனா ஆசிரியர் பயிற்சிக்காக 'அமெரிக்கன் கல்லூரியில்' பயின்று பட்டமும் பெற்றார். திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் ஜமீன்தார் உயர்நிலைப் பள்ளியில் சுமார் மூன்றாண்டுக்காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். இச்சமயம் இவருடன் பயின்ற ஆப்த நண்பர் ஜி. சுந்தரம் அவர்களுடன்-தேவகோட்டையில் தேசீய கலா சாலையில் பணியாற்றினார். பின்னர் அப்பள்ளி அரசு மான்யம் பெறும் கல்வி நிறுவனமாக மாறியபோது இவர் அப்பள்ளியிலிருந்து விலகினார். இதற்குப்பின் அவர் உத்தியோகத்திற்காக முயற்சிக்கவில்லை.

'செல்லம்' என்ற வேங்கடசுப்பிரமணியன் சுமார் நாலைந்து வயதுச் சிறுவனாக இருந்தபோதே, வீட்டில் பூஜை அறையில் இவர்கள் முன்னோர்களால் பூஜிக்கப்பட்டு வந்த 'சாம்பமூர்த்தி' என்ற விக்கிரகத்திற்கு வீட்டுத்தோட்டத்திலிருந்து 'புஷ்பங்களைப் பறித்து வந்து சூட்டி, தனது பெற்றோர்கள் சொல்லித் தந்த சிவஸ்துதிகளைத் தனது மழலையால் பாடி பூஜிப்பாராம். ஒரு சமயம் இவருடைய ஊருக்கு வந்த ஓர் ஞானசித்தர் என்ற துறவி, இச்

-ரகமி

சிறுவனை அழைத்து, சிறு கற்கண்டை அளித்து, நெற்றியில் விபூதியையும் இட்டுச் சென்றாராம். வேங்கடசுப்பிரமணியனும் அடிக்கடி தன்வீட்டிற்கு அருகாமையிலுள்ள தோப்பில் தங்கியுள்ள அத்துறவியைச் சந்திக்கவே, அவரும் இச்சிறுவனின் பக்தியை மெச்சி 'சுத்தானந்தர்' என்று பெயரையும் சூட்டினார்.

அடுத்து சிருங்கேரி மடம் ஜகத்குரு ஸ்ரீநரசிம்ம பாரதி என்ற சுவாமிகள் சுத்தானந்தரின் தெய்வபக்தி, மற்றும் தானே கவிபாடும் திறமை ஆகியவற்றைப் பாராட்டி 'கவியோகி' என்ற பட்டத்தையும் அளித்தார். இவர் இளமையிலிருந்தே பராசக்தியின்மீது அபார பக்தியும், உபாசகராக இருந்ததால் பின்னர் 'பாரதி' என்ற பட்டத்தையும் பெற்றார். அன்றுமுதல் சாதாரண வேங்கட சுப்பிரமணியன் 'கவியோகி சுத்தானந்த பாரதி' ஆனார்.

இளம் வயதிலேயே இவர் மனம் தெய்வீகம், துறவறம் இரண்டிலும் லயித்திருந்தது. ஒரு சமயம் மதுரையிலுள்ள தாய் வழிப் பாட்டனார்-இல்லத்திற்கு வந்தவர், திடீரென்று தன் தலையை மழுங்க மொட்டை அடித்துக்கொண்டு, அங்குக் கோவிலில் வந்து தங்கியுள்ள துறவிகளிடம் சென்று, துறவறம் பூண்பதற்குரிய

சக்தி சுகர்ஸ் லிமிடெட், சிவகங்கை யூனிட்

வாழ்வு பெருக்கு மதியே சக்தி
மாநிலங் காக்கும் வலியே சக்தி
தாழ்வு தடுக்குஞ் சதிரே சக்தி
சஞ்சல நீக்குந் தவமே சக்தி
வீழ்வு தடுக்கும் விறலே சக்தி
விண்ணை யளக்கும் விரிவே சக்தி
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி.

—மகாகவி பாரதியார்

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவகங்கை தாலுகா கண்ணாரிருப்பு மாத்தூர் கிராமத்தில் அமைந்துள்ள முதல் பெரிய இச் சர்க்கரை ஆலை, 7-வது திட்ட காலத்தில் 2,500 டன் அரவைத்திறனில் உண்டான முதல் ஆலை.
உலகத்திலேயே, தானியங்கி முறையில் இயங்கும் முதல் அரவை இயந்திரம். உற்பத்தி முறைகள் அனைத்தையும் கம்ப்யூட்டர்களே இயக்கும் முதல் ஆலை, பலவேறு எரிபொருளைப் பயன்படுத்தும் முதல் கொதிகலனைக் கொண்ட ஆலை, நவீன தொழில்நுட்ப முறையில் அமைக்கப்பட்டுள்ள இச்சர்க்கரை ஆலை, இப்பகுதியின் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நம்பிக்கைகளை நிறைவு செய்வதுடன் சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இதுவரை சுமார் 4 லட்சம் டன்னுக்கு அதிகமாகக்கரும்பு அரவை செய்யப்பட்டுள்ளது.

சக்தி சுகர்ஸ் லிமிடெட்
180, ரேஸ் கோர்ஸ் ரோடு
கோயமுத்தூர்-641 018

நெறிமுறைகளைத் தனக்கு அருளும் படி வேண்டினார். இதுவிவரம் அறிந்ததும் குடும்பத்தினர் இவரைச் சமாதானம் செய்து, வீட்டிற்கு அழைத்து வந்து விட்டனர். ஆனால் சுத்தானந்தரின் மனம் துறவறத்திலேயே வெகு தீவிரமாகியது. மகனின் இந்த எண்ணத்தை மாற்ற விரும்பிய குடும்பத்தினர், அவருக்கு திருமணம் செய்து வைத்தால், அந்த மகிழ்ச்சியில் துறவறத்தை மறப்பார் என்றெண்ணி, வரன்களைத் தேடலாயினர். மகனைத் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தியபோது, அவர் 'பெண்களை பராசக்திக்குச் சமமாக பாவித்து வணங்கிவருகிறேன். எனவே மாதாவை நான் மனைவியாக ஏற்க மாட்டேன்! இதற்காக முயற்சிக்கவும் வேண்டாம்'' என மறுப்பும் தெரிவித்துவிட்டார்.

சுத்தானந்தர் இளமையிலேயே இராக ஞானத்தோடு பாடல்களைப் பாடும் திறமையும் பெற்றிருந்தார். இவருடைய அத்தையின் கணவரான ஹரிதீர்த்தமய்யர் பெரிய இசைப் புலவர். இவர் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஆஸ்தான வித்துவானாக இருந்ததோடு, தந்தி வாத்தியங்கள் வாசிப்பதில் அபார ஞானமுள்ளவர். இந்த வித்வான் சிவகங்கைக்கு வரும்போதெல்லாம் சிறுவன் சுத்தானந்தரை அழைத்து இராக தாளத்தோடு பிழையின்றிப் பயிற்சியும் அளித்தார்.

பின்னர் சுத்தானந்தர் பிடில் வித்வான் ராமசாமிராஜு, நாயனக்காரர் மாயாண்டி, மதுரை பொன்னுசாமி இவர்களிடம் மேலும் இசை ஞானமும் பெற்றார். அடுத்து 'பகவத் கீதை' புகழ் இலக்குமணாச்சாரியார், மாங்குடி சிதம்பரபாகவதர், உள்ளூர் ராமதாஸ் பாகவதர் ஆகியோரிடம் கதாகாலட்சேபம் நிகழ்த்தும் பயிற்சியை மிக்க ஆர்வத்தோடு பெற்று, சிற்சில சமயங்களில் தனது நண்பர்களிடமும் தனது காலட்சேப நிகழ்ச்சிகளை நிகழ்த்திக்காட்டினார்.

தமது சங்கீதத் திறமையால் பாடிய கீர்த்தனைகளையெல்லாம் தொகுத்து 'சங்கீத ஸாகரம்' என்ற பெயரில், அதனைப் பாதுகாத்து வந்தார். ஊரில் எங்கே சொற்பொழிவு, இசை விருந்து நடந்தாலும் அக்கம் பக்கத்து ஊர்களில் நடந்தாலும், சுத்தானந்தர் அங்கே சென்று, தான் கேட்ட ராகம், தாளம் மற்றும் அபூர்வ கிருதிகளைத் தனியாகக் குறித்துக் கொள்வார். இவருக்கு, நாடகங்கள் பார்ப்பதிலும், அலாதிப் பிரியமுண்டு. தாமும் நாடகத்தில் சேர்ந்து நடிக்கலாமா என்ற எண்ணம் எழுந்தபோது நாடகங்களில் பெண்களும் கூடவே நடிப்பதினால், அது தமது கொள்கைக்கு முரணானதென்று உணர்ந்து, நாடக விருப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

யோகாசன நிலையில்

அந்த நாளில் நாட்டில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துக் கிளம்பிய சுதேசி மக்களின் போராட்டக் கனல், சுத்தானந்தரையும் பற்றிக் கொண்டது. சிவகங்கை மன்னர் ஸ்ரீஉடையன ராஜாவின் மாப்பிள்ளை (மருமகன்) 'டில்லி பாச்சா தேவர்', தேசபக்தர் வ. உ. சிதம்பரனார், மகாகவி பாரதியார், சுப்ரமணிய சிவா, வ.வே.சு. ஐயர் போன்றோரின் போராட்டங்கள் இவரைத் தேச சேவைக்கு இழுத்தன. வ.வே.சு. ஐயரின் சுதந்திரப் போதனைகள் சுத்தானந்த பாரதியாருக்குத் தனி வழியைக் காட்டுவதாகவே இருந்தன. தவிர, புதுவையில் வ.வே.சு.ஐயரின் அந்தரங்கத் தூதுவராக இருந்ததினால், அந்நாளில் லோகமான்ய திலகர், லாலா லஜபதிராய், நேதாஜி, ஜியார்ஜ் ஜோஸப், ராஜா மஹேந்திர பிரதாப் போன்றோரிடம் ரகசியமான விஷயங்களைப் பரப்புவதில் இவர் தீவிரமாகவே உழைத்தார். இவர் 'முழு மறை முகராக' (அண்டர் கிரவுண்டு) துணிந்து செயல்பட்டார்.

'மாவீரன்' செண்பகராமன் பிள்ளையுடன் சுத்தானந்த பாரதிக்கு ரகசியக் கடிதத் தொடர்புகள் இருந்தன. இதனால் சென்னையில் 1974-ஆம் ஆண்டு 'டாக்டர் செண்பகராமன் பிள்ளை நினைவு மன்றம்' தொடங்கிய போது கவியோகி சுத்தானந்த பாரதியார் இம் மன்றத்தின் ஸ்தாபகரும், தலைவருமாக இருந்து தொண்டாற்றினார்.

புதுவையில் வ.வே.சு. ஐயர் 'தமிழ்மறை' எனச் சிறப்பித்துக் கூறும் திருக்குறளைத் தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவருக்கு உதவியாக சுத்தானந்த பாரதியார் இருந்தார். ராஜதுரோக வழக்கில் வ.வே.சு. ஐயரை பிரிட்டிஷ் அரசாங்கம் கைதுசெய்து பெல்லாரி சிறையில் அடைத்தபோது ஐயரவர்கள் எழுதிய திருக்குறள் ஆங்கிலத் தொகுப்புகளைப் பத்திரமாகக் காப்பாற்றிய பெருமைசுத்தானந்த பாரதிக்கு உண்டு.

இராமநாதபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு
மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட்., மதுரை.

வாடிக்கையாளர்களுக்கும், கூட்டுறவாளர்களுக்கும் எனது
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

1988, 1989 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் தமிழ்நாட்டிலேயே
தலைசிறந்த கூட்டுறவு நிறுவனம் எனப் பாராட்டுப் பெற்றுக்
கேடயம் பெற்ற நிறுவனம்.

ஆண்டு விற்பனை ரூ.35 கோடிக்கும் மேல்.

துவக்கம் முதல் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

'ராம்கோ'வின் சிறப்புத் தயாரிப்புகள்.

(1) பள்ளி மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள்.
(2) சுவைமிகு 'ராம்கோ' காபித்தூள்.

ராம்கோவில் நிலையான இட்டுவைப்பு செலுத்தி
13½%வரை வட்டி பெறுவீர்!

இவண்,
கே. கந்தசாமி,
தனி அலுவலர்.

குளித்தெழுந்ததும் குளிர்ச்சி
நாளெல்லாம் மகிழ்ச்சி

'கோவாப்'
சீயக்காய்த்தூள்
உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்கள்:
மதுரை கோட்ஸ் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட்,
ஏ.1449, மதுரை-625 010.

கிடைக்குமிடம்:
அனைத்துக் கூட்டுறவுப் பண்டகசாலைகள்
மற்றும்
மளிகைக்கடைகள்.

வ.வே.சு. ஐயர் சேர்மாதேவியில் குருகுலம் அமைத்தபோது சுத்தானந்தரும் அங்குச் சென்று 'பாலபாரதி' என்ற பத்திரிகைக்கு வ.வே.சு.வுடன் இணை ஆசிரியராகவும் இருந்தார். குருகுலத்து மாணவர்களுக்கு கல்விகளைப் போதிக்கும் ஆசிரியராகவும் இருந்து, மாணவர்களை உல்லாசப் பயணமாக அழைத்துச் செல்வார். மாணவர்களுக்கு கல்வி அறிவோடு, நீதிநெறிகளையும் நன்கு போதித்தார். இவரது தூய எண்ணம், இதற்கேற்ற வாழ்க்கையைக் கடைப்பிடித்து வருவதை அறிந்த வ.வே.சு. இவருக்கு 'வாழ்வைத் தவத்திற்கே நிலைக்களமாக்கியவர்' என்று- பாராட்டினார். வ.வே.சு. ஐயரும் அவர் மகள் சுபத்திரையும் கல்யாணி அருவியில் துர்மரணம் அடைய நேர்ந்தபோது அந்தத் துக்கம் தாளாமல் சுத்தானந்த பாரதி அவர்கள் ஒரு வார காலம் பட்டினி கிடந்ததோடு, ஐயரவர்களின் நினைவாக 'வீர விளக்கு' என்ற அரிய நூலையும் எழுதினார்.

பின்னர் 'கவியோகி' தஞ்சாவூரில் 'சமரஸ போதினி' என்ற பத்திரிகையையும் நடத்தினார். அப்போது அவரது மனம் துறவறம் பூணுவதையே உறுதியாக்கியது. சாதி-மத வேறுபாடுகளில்லை. மனித சமுதாயம் முழுதுமே ஒரே குலம், உலகமெல்லாம் ஒரே வீடு. அனைத்திற்கும் ஒரே ஆத்மாதான். அன்பும் அருட்பணியுமே இன்ப வழி என்பது அவரது கொள்கைகள். இவர் ஆங்கிலத்தில் எழுதிய 'யோக சித்தி' என்ற நூலை மகாத்மா காந்தியடிகள் படித்து இவரது தத்துவங்களையும் அவரிடம் காணப்பட்ட ஆங்கிலத் திறமையையும் மெச்சினார்.

நாடு சுதந்திரம் அடைய வேண்டி ஆங்காங்கு நடக்கும் காங்கிரஸ் மாநாடுகளில் சுத்தானந்தர் கலந்து கொள்ளத் தவறியதே கிடையாது. தமிழில் 'சுயராஜ்ஜியா' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்த போது 'கவியோகி' அடிக்கடி காங்கிரஸ் பிரமுகர்களான எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, முத்துரங்க முதலியார் மற்றும் பலருடன் நெருங்கிப் பழகி வந்தார். தனது தீவிரமான அரசியல் கருத்துக்களை 'சுயராஜ்ஜியா'வில் வெளியிட்டார்.

இவரது தமிழ்நடை பல இளைஞர்களை ஊக்குவித்தது. விடுதலை இயக்கத்திற்குத் தனது பேராதரவை அளித்ததோடு, தமிழில் பற்பல சிறு நூல்களையும் வெளியிட்டார். ஒரு சமயம் இவர் பாண்டிச்சேரியில் அரவிந்தர் ஆசிரமத்தில் பாரதநாடு சுதந்திரம் அடையும் வரையில் தீவிர மௌனமாக இருக்க சங்கல்பம் செய்து 1927 முதல் 1947 ஆகஸ்டு 15-ந்தேதி வரை அதனை மேற்கொண்டார். அந்த 20 ஆண்டுகள் 'கவியோகி' எவரிடமும் பேசா விரதத்தைக் கடைப்பிடித்து, நாடு சுதந்திரம் அடைந்ததும் தனது விரதத்தை வெற்றியுடன் முடித்தார்.

'கவியோகி' அவர்களின் பாரத சக்தி மகா காவியம்' என்ற நூல் சுமார் 50,000 வரிகள் கொண்ட கவிதை நூல். இது 5 காண்டங்களாக எழுதப்பட்டது. இதன் ஆரம்ப காலத் தொகுப்பைப் படித்த வ.வே.சு. ஐயர் அவர்கள் தமது முன்னுரையில், 'தவத்திற்கே வாழ்வை நிலைக்களமாக்கிய கவியோகி, அவரது தூய வாழ்வும், தவமும் என்னைக் கவர்ந்தன' என்று குறிப்பிட்டுள்ளார். இந்த நூலினைப் பாராட்டி மகாகவி பாரதியாரும், 'பாரத சக்தியைப் பார்த்தோம்; நன்றாய் இருக்கிறது; கம்பீரமாக இருக்கிறது; அது தமிழுக்கு அரிய கலைச் செல்வமாகும். அத்யாத்ம நிதியாகும்' என்றார். தேசாபிமானி வ.உ.சி. 'பாரத சக்தி பார் வியக்கும் பெருங்காப்பியம்' என்றார். மற்றும் பலரின் பாராட்டுகள் இந்நூலுக்குத் தனிச் சிறப்பைக் கூட்டுகின்றன. பல பெரியோர்கள் பேரறிஞர்கள் பெரிதும் பாராட்டிய இந்த 'பாரத சக்தி மகா காவியம்' என்ற நூலுக்குக் கவியோகி சுத்தானந்த பாரதியைப் பாராட்டும் வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் 1983-84 ஆம் ஆண்டிற்கான தமிழ்ப் படைப்பிலக்கியப் பரிசாக 'மாமன்னன் ராஜராஜன்' விருதைக் கவியோகி சுத்தானந்த பாரதிக்கு வழங்கியது. 1984-ஆம் ஆண்டு மார்ச் 24-ல் மேதகு தமிழக ஆளுநர் குரானா அவர்களால் இந்தப் பரிசு வழங்கப் பட்டது.

அடுத்து 'யோக சித்தி' என்ற தலைப்பில் 405 குறள்களை அமைத்து வெளியிட்டார். இதனையே அவர் ஆங்கிலத்தில் "The Gospel of Perfect Life" என்ற தலைப்பில் எழுதியுள்ளார். மேநாட்டு பிரபல நாவ

• சுத்தானந்த பாரதியார் அறிவால், அன்பால், பாட்டால், உரையால், தமிழ்நாட்டைக் கொள்ளை கொண்டவர். இயற்கையில் தோய்ந்து இயற்கையுண்மையில் உறுதிகொண்டவர். ஒருமையில் நிற்கும் பெருமையாளர்.

-தமிழ்த்தென்றல்

• யோகி சுத்தானந்த பாரதியார் தவம் பெற்ற தவம். அவர் ஓர் வற்றாத இனிய தமிழ் ஊற்று. சுவாமிகளின் கவிதா சக்திப்பிரவாகமும், எழுத்துவன்மையும், யோக சித்தியும் உலகிற்குப் பெருநலமளிப்பதாகும். அவரது பாரத சக்தி, பாரதம் போன்றது.

-டாக்டர் உ.வே.சா.

• தமிழகத்தில் வாழும் தமிழ் முனிவர் திரு சுத்தானந்தபாரதியாரை அறியாதோர் அறியாதாரே. தமிழ்கூறும் நல்லுலகம் அன்னார் பாட்டையும் உரையையும் பொன்னே போலப் போற்றுகின்றது.

-டாக்டர் ரா.பி. சேதுப்பிள்ளை

• சுத்தானந்த பாரதியார் நூலை நான் கருத்துடன் படிப்பதுண்டு. அவரைப்போல் அற்புத நூல் யார் செய்யமுடியும்? ஒரு நாளைக்கு ஒரு நூல் எழுதவல்லவர்.

-மூதறிஞர் ராஜாஜி

TAXIS ARE ALWAYS AVAILABLE

K.S. KANDASAMY
SPEEDWAYS TAXI SERVICE
86, WEST PERUMALKOIL STREET,
MADURAI.

PHONE NO: 37551

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட், மதுரை 625 001.

சேமிப்பு தொடர்வது முன்னே!
செல்வங்கள் வளர்வது அதன் பின்னே!
சேமிப்பைத் தொடர்வோர்
செல்வங்கள் சேர்ப்போம்-
சேமிக்க ஏற்ற வங்கி
செல்வம் பெருக்கும் வங்கி
சேவைக்கு சிறந்த வங்கி
அதுவே
உங்கள்

M.D.C.C. வங்கி.

உங்களுக்குச் சேவை செய்ய மதுரை மாவட்டத்தில் 34 கிளைகள்
திண்டுக்கல் காயிதேமில்லத் மாவட்டத்தில் 19 கிளைகள்.

110 கோடி ரூபாய்க்குமேல் டெபாசிட்டுடன் தொடர்ந்து முன்னேறி வரும் உங்கள் M.D.C.C. வங்கியில் முதலீடு செய்து இதர வர்த்தக வணிக வங்கிகளைவிட ½ சதவிகிதக் கூடுதல் வட்டி பெற்றுப்பயனடையுங்கள்.

வங்கியின் நடைமுறை மூலதனம் ரூ.200/-கோடிக்கு மேல், வழங்கப்பட்டுள்ள மொத்தக் கடன் தொகை ரூ.160/ கோடிக்கு மேல். கடந்த ஆண்டு ஈட்டியுள்ள நிகர இலாபம் ரூ.128.25 லட்சம். பங்குதாரருக்கு வழங்கப்பட்டுள்ள டிவிடெண்ட் 12 சதவிகிதம்.

வேளாண்மைப் பெருமக்களுக்குக் குறைந்த வட்டியில் பயிர்க்கடன் மற்றும் விவசாயத்தைச் சேர்ந்த இதரக் காரியங்களுக்கு மத்தியக் காலக்கடன் வழங்கப்படுகிறது.

விவசாயத்திற்குத் தேவையான இடு பொருட்கள் தொடக்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் உரிய காலத்தில் வழங்கப் படுகிறது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம் நெசவாளர்களுக்கு நேசக்கரம் நீட்டுகிறது இவ்வங்கி. நலிந்த பிரிவினருக்கு கடன், இவ்வாறு தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்துகிறது மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி.

இவ்வங்கியினை அணுகுவீர்! பயனடைவீர்!!

தனி அலுவலர்,

பாவேந்தர் நூற்றாண்டு:

தமிழர் தந்தை

தீமைதரும் தமிழ்ப்பகைவர் தம்மைச் சார்ந்து
திருநாட்டின் பெருமையினை, தமிழ்ப்பண் பாட்டை
ஏமமுறும் இலக்கியமாம் செல்வந் தன்னை
இத்தனையும் அழித்தொழித்தோம்; அந்த நாளில்
ஊமைஎன இருந்தானா? இல்லை இல்லை;
உயர்தந்தை கடமைகளை உணர்ந்த மேலோன்
தீமைஎன இடித்துரைத்தான் பகைவர் தம்மைச்
சேராதீர் எனப்புகன்றான் எங்கள் தந்தை

இனிமைமிகு தமிழ்மொழியைப் படித்தல் இன்றி
இங்குவந்த சழக்கரையே கூடி நின்று
கனிவுதரும் அவர்வஞ்சப் பேச்சில் சிக்கிக்
கண்கலங்கி நின்றிருந்தோம்; அந்த நாளில்
நனியன்பு மிக்கநல்லான் "மக்காள் அந்தப்
புல்லுருவி நாடாதீர்? உறிஞ்சித் தீர்ப்பார்
இனிஉங்கள் தமிழ்பயில்வீர்" என்றே எம்மை
இடித்துரைத்துத் திருத்தினன்காண் எங்கள் தந்தை

புதுமைமிகும் இலக்கியமாம் செல்வந் தந்தான்,
புரட்சிசெய வீரரென ஆக்கி விட்டான்,
பதுமைஎன வாழாமல் தமிழ மக்கள்
பகுத்தறிவால் அவைமுன்பில் இருக்கச் செய்தான்
எதுகையுடன் மோனைபெறும் கவிதை யாக்கும்
இளங்கவிஞர் பரம்பரையைத் தோற்று வித்தான்,
அதுவன்றித் தமிழ்நலமே நாடு கின்றான்
அக்கவிபா ரதிதாசன் தந்தை யன்றோ?

கனியரசு முடியரசன்

சட்டமன்றத்திலே எதிர்க் கட்சிகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தபோது திட்டவட்டமாக-தெளிவாக விளக்கினார்கள். 'நான் கைத்தறித் துணிக்கு முன்னுரிமை தருகின்ற காரணத்தால் கதரைக் கைவிடுவேன் என்று யாரும் எண்ணத் தேவையில்லை. கதர்வாரியம் அகற்றப்பட்டு விடும் என்று யாரும் எண்ணத் தேவையில்லை' என்று கூறி, கிராமப்புறத்திலே இன்றுள்ள சூழ்நிலையில் பொருளாதாரம் வளர வேண்டுமேயானால் அந்த பொருளாதார வட்டத்திற்குள்ளே பட்டிக்காட்டுப் பகுதிகளில் குக்கிராமங்களில், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் தங்களுடைய, வாழ்க்கையை நகர்த்த வேண்டுமேயானால் இந்தத் திட்டங்கள் உடனடியாக கைவிடப்படக் கூடியவைகள் அல்ல. வேகமாக வளர்ந்து வருகின்ற விஞ்ஞான உலகம் ஒருபுறம் இருந்தாலும்கூட இன்னொரு புறத்திலே அந்த விஞ்ஞான வேகத்தை அப்படியே இன்றைக்கு ஏற்றுக் கொள்ள முடியாத நிலைமையிலே இருக்கின்றது இந்தியநாடு. அந்த விஞ்ஞானத்தை முழுக்க முழுக்க கடைப்பிடிக்க முடியாத நிலையில் இருக்கின்ற இந்திய நாடு- பல கோடி மக்களை ஏழைகளாகப் பெற்றிருக்கின்ற இந்திய நாடு இதுபோன்ற பொருளாதாரத்திலே தான் கொஞ்ச காலம் வாழ வேண்டியிருக்கிறது என்ற மையக்கருத்தை உள்ளடக்கி கைத்தறி, கதர்த்திட்டங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள்.

ஆனால் அண்ணா அவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவரால் உருவாக்கப்பட்ட ஆட்சியைத் தொடர்ந்து நடத்திய நாங்கள் அண்ணா அவர்களுடைய எண்ணத்தை ஈடேற்றுகின்ற வகையில் நெசவாளர்களுடைய துயரத்தைப் போக்க எத்தனையோ திட்டங்களை அறிவித்தும், நிறைவேற்றியும் வந்தாலும் இன்னமும் முழுமையான மகிழ்ச்சியடையக் கூடிய அளவிற்கு நெசவாளர் வாழ்வுத் தரம் உயர்ந்துவிட்டதாக நான் கருத இயலாது. நீங்களும் கருத மாட்டீர்கள். அதற்குக் காரணம் என்னவென்றால், "கைத்தறியே அணிய வேண்டும் என்று தூளுரை மேற்கொள்க" என்று நான் சொன்னாலும் கூட, நான் இங்கேயே இந்த மேடையிலேயே கண்டேன். கைத்தறி, கூட்டுறவைச் சேர்ந்தவர்கள் என்னிடத்திலே பரிசு பெறவந்தபோது அவர்கள் உடுத்தியிருந்த ஆடைகளைத் தொட்டுப் பார்த்து இது கைத்தறியா என்று கேட்டேன். அவர்கள் புன்னகை புரிந்து நாணிக்கோணிஇல்லை மல் துணி' என்று பதிலளித்தார்கள். எல்லோரும் அல்ல, ஒரு சிலர். ஒரு சிலர் என்று கைத்தறியின் மீதுள்ள அன்பின் காரணமாகச் சொல்கிறேன். மிகச் சிலரல்ல, பெரும்பான்மையோர்; ஒரு சிலர்தான் கைத்தறியோடு காணப் பட்டார்கள். எனவே, பரிசு வாங்குகின்ற அளவிற்குப்புகழும் பெருமையும் பெற்றிருக்கின்றவர்கள்- அந்தத் துறையிலே தங்களை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றவர்கள்- அவர்களே கூட கைத்தறியை அணிய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறதென்றால் - கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வை நாம் அனைவரும் சேர்ந்து ஈடேற்ற வேண்டும் என்கின்ற முயற்சியில் ஒரு ஊனம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

இந்தத் துறை, மீண்டும் இந்த ஆட்சி அமைந்த பிறகு நம்முடைய அமைச்சர்-தம்பி தங்கவேலு அவர்களுடைய பொறுப்பில் மிக நேர்த்தியாகச்செயல்பட்டு வருகிறது என்பதனை எனக்கு முன்னால் இங்கே பேசிய அனைவரும் எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். குறிப்பாக இந்த அரசு பொறுப்பேற்ற கடந்த ஆண்டில் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் சேலம் ஆலை ஒன்றைத் தவிர 18 ஆலைகளில் மற்ற எல்லா ஆலைகளும் நஷ்டத்திலே தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அதுவும் சாதாரணமாக அல்ல, 35 கோடி ரூபாய் நஷ்டத்தில் சேலத்தைத் தவிர 18 ஆலைகளிலே மற்ற ஆலைகள் அனைத்தும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. கடந்த ஒரே ஆண்டில் 7 கோடி ரூபாய் லாபத்திலே இயங்குகின்ற அளவுக்கு முயற்சியிலே ஈடுபட்டு - 35 கோடி ரூபாய் நஷ்டம் என்பதை 28 கோடி ரூபாய் என்கின்ற அளவுக்குக்குறைத்த பெருமை இந்த

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

நெசவுத் தொழில் வளர்ப்போம்! நெசவாளர் துயர் துடைப்போம்!

36-வது கைத்தறி விழாவின் நிறைவு நாள் விழா, 17.5.90 அன்று, சென்னை எழும்பூர் கோ-ஆப்டெக்ஸ் வளாகத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

கைத்தறிக் கண்காட்சியின் இறுதி நாளான அன்று, திரளான மக்கள் அங்கே கூடியிருந்தார்கள்.

மங்கல இசையுடன் விழாத் தொடங்கியது.

கோ-ஆப்டெக்ஸ் மேலாளர்-இயக்குநர் திரு என்.பி. குப்தா இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

விழாக்குழு உறுப்பினர் திரு எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் பேசுகையில், கைத்தறியின் சிறப்பினை எடுத்துக்கூறினார்.

திரு பரிதி இளம்வழுதி எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "கடந்த ஆண்டில் நஷ்டக் கணக்கைக் காட்டி வந்த இந்தத் துறை இப்போது லாபக் கணக்கைக் காட்டி வருகிறது" என்றார்.

விழாக்குழு உறுப்பினர் திரு பரமத்தி சண்முகம் அவர்கள் பேசுகையில், "ஏழை நெசவாளர் குடும்பங்களின் பாதுகாவலர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர் " என்றார்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "விவசாயத்துக்கு அடுத்தபடியாகக் கைத்தறி உள்ளது. விவசாயிகளும், நெசவாளர்களும் முன்னேறினால், நாடு நலமாக இருக்கும். கைத்தறித்துணி தேக்கமில்லாமல், இன்று விற்பனையாகிக் கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது" என்றார்.

திரு கோ. பூவராகன் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "விவசாயத்தையும், கைத்தறியையும் இரு கண்களாகப் பாவித்து, அரசு நல்ல முயற்சி எடுத்து வருகிறது" என்றார்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர திட்சிதர் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "தமிழ்நாட்டில் பல இலட்சம் நெசவாளர் குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு இலவச சேலை, வேட்டி கொடுப்பது கலைஞரின் சாதனை" என்றார்.

திரு எம். அப்துல் லத்தீப் எம்.எல்.ஏ., அவர்கள் பேசுகையில், "கலைஞர் ஆட்சி கைத்தறிக்கு முன்னுரிமையும் முக்கியத்துவமும் அளிக்கிறது. நெசவாளர்களின் ஏக்கங்களைப் போக்கிட- தேக்கங்களை நீக்கிட இந்தக் கண்காட்சி அமைந்திருக்கிறது" என்றார்.

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், "தி.மு.க. அரசு, பொறுப் பேற்ற பிறகு கைத்தறித் துணிகளில் 160 புதிய டிசைன்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 70 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் 117 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகளும் விற்பனை ஆகாமல் தேங்கியிருந்தன. அரசு பொறுப் பேற்ற பிறகு கைத்றித் துணிகளில் தேக்கம் நீக்கப்பட்டுள்ளது" என்றார்.

முன்னதாக, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். தங்கவேலு அவர்கள் பொன்னாடை அணிவித்து, விழாக்குழு சார்பில், வள்ளுவர் கோட்டக் கண்ணாடிப் பேழையை நினைவுப் பரிசாக வழங்கினார். அதேபோல, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார்.

25 ஆண்டுகள், இலாபத்துடன் இயங்கிய சங்கங்களுக்குக் கேடயங்களையும், நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியருக்குக் கல்வி உதவித் தொகையையும் வழங்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியதாவது:-

"இங்கே உரையாற்றிய நம்முடைய அன்புக்குரிய நண்பர்கள் அனைவரும் இந்தியத் திருநாட்டில் வேளாண் தொழிலுக்கு அடுத்த தொழிலாக நெசவுத் தொழில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இடத்திலே அது இரண்டாவது இடத்தை வகித்தாலும், அவசியத்தில் முதலிடம் வகிக்கின்ற தொழில் நெசவுத் தொழிலாகும். நாம் வழக்காற்றலில் உணவு, உடை, உறையுள் என்று குறிப்பிட்டாலும் கூட உடைதான் முதலில். இரண்டாவது தேவைதான் உணவு. மானம் பெரிதா? உயிர் பெரிதா? என்ற கேள்வி எழும் போது உயிர் பெரிது என்று உள்ளபடியே உயிரைப் பெரியதாக எண்ணுபவன் கூட சொல்ல மாட்டான். உலகத்திற்குப் பயந்து, 'மானம்தான் பெரிது' என்று சொல்லுவான்.

எனவே உயிர் வளர, உயிர் இருக்க உணவு தேவை என்றாலும் கூட, உணவு, உடை என்று நாம் சொன்னாலும் கூட உடைதான் முதலில், உணவு அடுத்து; கல்தோன்றி மண் தோன்றாக்காட்டு மிராண்டிக் காலத்தில் உணவு முதலிடத்தை வகித்தது. ஆனால், மனிதன் உலகத்தை உணரத் தலைப்பட்ட போது உடைதான் முதலிடம் வகிக்கத் தொடங்கியது. அன்று தொடங்கியது இன்று வரையில் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. உணவு இல்லாமல் ஒரு நாள், இருநாள்கூட இருந்து விடலாம். உணவு இல்லாமல் நடுத்தெருவிலே பந்தல் போட்டுக் கொண்டு உண்ணாவிரதம் கூட இருக்கலாம். ஆனால், உடையில்லாமல் நடுத்தெருவிலே நிற்பவரைக் கண்டால் ஆயிரம் பேர் கல் எடுத்து எறிவார்கள்.

எனவே மானமா? உயிரா? என்ற கேள்வி எழும்போது மானத்தைக் காப்பாற்ற உடை தேவை. எனவே, மானத்தை முதலிடத்திலே வைத்து எண்ணுகின்ற மனிதனுக்கு, உடை மிக அவசியமானது. வீதியில் ஒரு மத்திய இடத்தில் ஒரு கிண்ணத்திலே சோறு வைத்து-அதற்குக்கொஞ்சம் அப்பால் ஆடைகளையும் வைத்து ஒரு வேட்டியையும் வைத்து ஒரு நிர்வாண மனிதனை ஓட விட்டு - போய்ச்சாப்பிடு என்று சொன்னால், அப்படி நிர்வாணமாக விரட்டி அடிக்கப்பட்ட மனிதன் ஓடிப்போய் முதலில் சாப்பிட்டுவிட்டு, ஆடையை உடுத்துவானா? அல்லது ஆடையை உடுத்திக் கொண்டு சாப்பிடுவானா? என்றால் ஆடையை எடுத்து உடுத்திக் கொண்டுதான் சாப்பிடுவான். எனவே, உடை முக்கியம் முதலாவது, உணவு இரண்டாவது.

இன்று பெரிய தொழிலாக இந்தியா முழுவதும் உழவர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாக உழவுத்தொழில், விவசாயத் தொழில் இருந்தாலும் கூட மானத்தைக்காப்பாற்றுகின்ற நெசவாளப் பெருங்குடி மக்கள் மானத்தைப்பாதுகாக்கின்ற அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற மக்கள், அந்த நெசவாளிகளுடைய வாழ்க்கையை மையமாக வைத்து, எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய அப்துல் லத்தீப் அவர்கள் எடுத்துக்காட்டியது போல, தமிழகத்தைப் பொறுத்தவரையிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தப்பொருளாதார வட்டத்தை உருவாக்கினார்கள். நெசவாளியினுடைய வாழ்க்கை தாழ்ந்து, தாழ்ந்து, தாழ்ந்தே போய்க் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தார். பேரறிஞர் அண்ணா எண்ணிப் பார்ப்பதற்கு உரிய இடத்திலே இருந்த காரணத்தால், இன்னும் சொல்லப்போனால் ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தவர் என்ற காரணத்தால் நெசவாளர்கள் மத்தியிலே காஞ்சியிலே வாழ்ந்தவர், அவர்களோடு இரண்டற கலந்தவர் என்ற காரணத்தால் அவர்களுடைய வாழ்வின் கஷ்ட நஷ்டங்களையெல்லாம் புரிந்தவர் என்ற காரணத்தால் அவர்களுடைய வாழ்வு பட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, தான் எந்த இயக்கத்திற்கு தலைமையேற்றாரோ அந்த இயக்கத்தை-கைத்தறி நெசவாளர்களுக்காகப் பாடுபடுகின்ற- பணியாற்றுகின்ற- இயக்கமாக இருந்திடல் வேண்டும் என்று கருதினார்.

கிராமப்புறத்திலே தொழிலை வளர்க்கவும், கிராமப்புறத்து மக்களுக்கு அவர்களால் இயன்ற தொழிலை அவர்களுக்கு வழங்கவும், அதன்மூலம் அவர்களும் பயன்பெற்று அவர்களைப் போன்ற ஏழை, எளிய நடுத்தர மக்கள் மலிவான விலையிலே உடைகளைப் பெறவும் காந்தியடிகள் கதர்த்திட்டத்தை அறிமுகப் படுத்தினார். கதர்த் திட்டம் எப்படி கிராமப்புறத்தில் ஏழை, எளிய மக்களுக்குத் தேவையான ஒன்றோ அதைப்போல, இன்னும் சொல்லப் போனால் அதைவிட மேலாக ஆண்டாண்டு காலமாக ஒரு தொழிலை நம்பி இருக்கின்ற நெசவாளர்கள்- அந்தத் தொழில் நசிந்தால் தங்களின் வாழ்வு, எதிர்காலம் அனைத்தும் நசிந்து விடும் என்கின்ற ஏக்கப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு அந்தத்தொழில் மேம்பாடு அடையவும் அந்தத்தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளப் பெருங்குடி மக்கள் நல்வாழ்வு எய்திடவும், பல்வேறு திட்டங்களைத்தீட்ட வேண்டும் என்று அண்ணா அவர்கள் விரும்பினார்கள். ஆனால் அவர்கள் விரும்பிய நேரத்திலே ஆட்சிப் பொறுப்பிலே அவர்கள் இல்லை. இல்லாவிட்டாலும் கூட ஆட்சியைப்பற்றி எண்ணிப் பார்க்காத 1952-ஆம் ஆண்டிலேயே – எனக்கு முன்னால் இங்கே பேசியவர்கள் கோடிட்டுக் காட்டியது போல தேங்கிக்கிடக்கின்ற கைத்தறித் துணிகள்- அவை சந்தையிலே விலைபோக வேண்டும் என்கின்ற எண்ணத்தோடு அவற்றைத் தானே தூக்கி, சுமந்து, தன்னைப் போலவே தன்னுடைய இயக்கத்திலே உள்ளவர்கள் எல்லாம் தூக்கி, சுமந்து, வீதி வீதியாக விற்பனை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டு அப்படி 1952-ஆம் ஆண்டு ஒரு நாள் அந்த நிகழ்ச்சி நடைபெற்ற காரணத்தால் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளுக்கு நல்ல சந்தை ஏற்படவும், கைத்தறித் துணியைப்பற்றிப் பொதுமக்கள் எண்ணிப்பார்க்கவுமான ஒரு சூழ்நிலை உருவாயிற்று.

அதன் பின்னர் பதினைந்து, இருபது ஆண்டுகளுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள்

கைத்தறிக் கண்காட்சித் தொடக்க விழாவில்...

அரசைச்சாரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே கோ-ஆப்டெக்ஸ், அதிலேகூட கடந்த 3 ஆண்டுகளில் நஷ்டத்தில் இயங்கி வந்தது. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றபிறகு அந்த நஷ்டத்தைக்கடந்து 3 கோடி ரூபாய் லாபம் ஈட்டுகின்ற அளவுக்கு கோ-ஆப்டெக்ஸ் இன்று நல்ல முறையிலே முன்னேறி இருக்கிறது என்பதையும் நான் எடுத்துக் காட்டக்கடமைப்பட்டிருக்கின்றேன்.

நல்லவைகளைச்செய்யும்போது கூட இடையிலே சில பொல்லாதவர்கள் நுழைந்து விடுகின்ற காரணத்தால் நல்லவைகள் யாரைப் போய்ச்சேர வேண்டுமோ அவர்களைப் போய்ச்சேராத ஒரு இடர்நிலை இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றது.

எந்த ஒரு நல்ல காரியத்தை ஒரு அரசு செய்தாலும் அதைக் கெடுப்பதற்குச் சில பேர் இருக்கிறார்கள். அவர்களுக்குப் பெயர்தான் சமுதாய விரோதிகள் என்பதாகும்.

அந்தச் சமுதாய விரோதிகள் எங்கும் இருக்கிறார்கள். இலவச வேட்டி, சேலை கொடுத்தால் தங்களுக்கு கொடுத்ததாக வைத்துக் கொண்டிருக்கின்ற சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். அது ஏழை, எளியவர்களுக்குக் கொடுத்ததாக எண்ணாமல் இடையிலே உள்ள தரகர்களுக்குத் தந்ததாக எண்ணிக் கொண்டிருக்கின்ற சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். அதைப் போலவே ஏழை, எளிய மக்கள், இல்லாதவர்கள், சாதாரணமான சாமான்ய மக்கள் - அவர்களுக்காகச் செய்யப்படுகின்ற காரியங்களைத் தடுத்து நிறுத்துகின்றவர்கள் - அதைத் தங்களுக்கே உரியதாக ஆக்கிக் கொள்கின்ற தன்னலவாதிகள் இன்னமும் சமுதாயத்தில் இருக்கின்ற காரணத்தினாலேதான் ஒரு அரசின் நற்செயல்கள் அனைத்தும் யாரைப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களைப் போய்ச் சேராமல் தடுக்கப்பட்டு விடுகின்றன. அவைகளுக்குப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை. அப்படிப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க போலீஸ் துறை ஒன்றால் மாத்திரம் முடியாது. ஐந்து கோடி மக்கள் வாழ்கின்ற தமிழகத்தில் ஐம்பதாயிரம், அறுபதாயிரம் போலீசார்தான் இருக்கிறார்கள். அவர்கள் மாத்திரம் இந்த ஐந்து கோடி மக்களிலே இருக்கிற சமுதாய விரோதிகளைக் கண்டு பிடித்து விட முடியாது. ஏனென்றால் அந்த ஐம்பதாயிரம், அறுபதாயிரம் பேரிலே சிலபேர் சமுதாய விரோதிகளாக இருக்கின்ற காரணத்தால் அதிலேகூடக் கஷ்டம் இருக்கிறது. எனவே, அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் சமுதாய விரோதிகள் இருக்கிறார்கள். ஒளிந்து கொண்டு - மறைந்து கொண்டு - பச்சைக்கொடியோடு படர்ந்திருக்கின்ற பச்சைப்பாம்பு போல், பச்சைக் கொடிக்கும் பச்சைப்பாம்புக்கும் வித்தியாசம் தெரியாமல் திகைக்கிற நிலைமைக்கு - நல்லது செய்ய வேண்டும் என்று எண்ணுகிற ஒரு அரசு இருப்பது போல அவர்கள் இன்றைக்கு ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். மறைந்து கொண்டிருக்கிறார்கள் - இன்னும் சொல்லப் போனால், அவர்கள் இருக்கின்ற இடத்திற்குத் தகுந்தாற்போல், நிறத்தை மாற்றிக் கொள்ளும் தந்திரம் கற்றவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த நிலையில் ஒரு அரசோடு ஒத்துழைக்க வேண்டிய பெரும் பொறுப்பு பொதுமக்களுக்கு இருக்கின்றது. அந்தப் பொதுமக்கள்தான் அவர்களையெல்லாம் அடையாளம் காட்ட வேண்டும். அப்பொழுதுதான் நாம் எண்ணுகின்றவை, நாம் செய்கின்ற செயல்பாடுகள் அனைத்தும் தக்கவரை, உரியவரை – போய்ச் சேர இயலும். அந்த வகையிலே நீங்கள் இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வளவு பேர் ஒரு அறிவிப்பு வராதா என்று கேட்டபிறகு ஒரு சின்ன அறிவிப்பையாவது செய்யாவிட்டால் அவர்களுக்கு பெரும் குறை உள்ளத்திலே இருக்கும் என்கின்ற காரணத்தால் ஒரு சிறிய அறிவிப்பை நான் கோ-ஆப்டெக்சிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்காக இங்கே வெளியிட விரும்புகிறேன்.

நீண்ட நாள் அவர்களுடைய கோரிக்கையாக இருந்து வரும் சம்பள உயர்வுகள்- கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களின் கோரிக்கையை ஏற்று மொத்த ஊதிய உயர்வாக எல்லா ஊழியர்களுக்கும் 150 ரூபாய் உயர்த்தித்தரப்படும் என்கின்ற ஒரு இனிய அறிவிப்பை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, இதனால் 2,500 கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் பயனடைவார்கள் என்பதையும் தெரிவித்து, மேலும், நம்முடைய துறை அமைச்சரும் அரசு அதிகாரிகளும் அனைத்துத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் மாநில கைத்தறி உயர்மட்டக்குழு உறுப்பினர்களும் கலந்துபேசி எடுத்த முடிவின்படி அதிக விற்பனை செய்யும் கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களுக்கு அதிக ஊக்குவிப்பு தரக்கூடிய புதிய விகிதாச்சாரத்தில் ஊக்குவிப்பு தரகு முறையையும் மாற்றி அமைத்து 89-ஆம் ஆண்டுக்கு அறிவிக்கப் பட்டிருக்கின்றது. கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்களின் சம்பள உயர்வையும் புதிய ஊக்குவிப்பு தரகு முறையின் பயனையும் அடைந்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனையை மேன்மேலும் அதிகப்படுத்தி அதன் மூலம் ஏழை நெசவாளர் வாழ்வும் வளமும் பெற ஒவ்வொரு ஊழியரும் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த இனிய விழாவிலே நான் கேட்டுக் கொண்டு உங்களையெல்லாம் காணுகின்ற நல்ல வாய்ப்பு கிட்டியமைக்காக நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.»

விழாக் குழு உறுப்பினர் திரு ச.சி. பெருமாள் அவர்கள் நன்றி நவின்றார்.

விழா இறுதியில், வழுவூர் திரு சாம்ராஜ் குழுவினர், கலைஞரின் 'சங்கத்தமிழ்' நாட்டிய நாடகத்தை நடத்தினர்.

—நமது செய்தியாளர்

WITH THE BEST COMPLIMENTS
FROM

A.P. ARUNACHALAM
PROPRIETOR
HOTEL APPOLO
NO.1, T.P.K. ROAD
MADURAI-1.

நிலம், நீர் வளம் காப்போம்

ச. சவடமுத்து
தலைமைப் பொறியாளர்
வேளாண்மைப் பொறியியல் துறை, சென்னை.

பசுமையான காட்சிகள்-இயற்கை வளத்தின் தோற்றங்கள் எங்கு பார்த்தாலும் பச்சைப்பசேலெனக் காணும் புல்தரைகள், புதர்கள், பூத்துக் குலுங்கும் செடிகள், வண்ண வண்ணப் பூக்கள், பல்சுவைக் கனிகள், இவற்றை ஏந்தி நிற்கும் செடிகள், மரங்கள், தோப்புகள், அவற்றை உண்டு வாழும் பறவைகள், வன விலங்குகள், அவை எழுப்பும் இனிய குரல்கள், குயில்களின் சங்கீதம், குரங்குகளின் சேட்டைகள், ஆயிரக் கணக்கான பூச்சிகள், வண்டுகள், புழுக்கள் வாழும் வனங்கள், இவற்றினால் உண்டாகும் நாதங்கள், குளுமையான சூழல், காற்று, சாரல் மழை, கண்ணாடி போன்ற மாசு மருவற்ற நீரோட்டம், நீர்வீழ்ச்சி, நீர்த்தேக்கம், அவற்றில் வாழும் ஆயிரக்கணக்கான உயிரினங்கள் இவையெல்லாம் பசுமையான கண்ணிற்கும் மனதிற்கும் குளுமை மற்றும் வளமையூட்டும் காட்சிகளாக, காடுகளாக, நீர்நிலைகளாக நமது கண்முன் நிற்கின்றன.

இதுபோன்ற பசுமையான சூழல் நீர்நிலைகள், இவற்றில் வாழும் உயிரினங்கள், மாசு மருவற்ற மென்மையான காற்று, இவையெல்லாம் ஒருங்கிணைந்து பறைசாற்றும் நிலை யைத்தானே இயற்கை வளம் என்கிறோம்.

இயற்கையின் படைப்பிலே மனித குலம், மற்றெல்லா உயிரினங்கள், மரம் செடி கொடி, புல்பூண்டு ஆகிய தாவரங்கள், நீர்நிலைகள் இவற்றில் வாழும் உயிரினங்கள் ஆகிய யாவையும் ஒன்றையொன்று அழித்துக்கொள்ளாமல் ஒருங்கிணைந்து இனிய வாழ்வு கண்டு இயற்கை வளம் பேணுதல்தான் நம் இனிய பணி.

எங்கெல்லாம் இந்த நியதிகள் மீறப்படுகின்றனவோ அங்கெல்லாம் இயற்கையின் சீற்றத்தைக் காணலாம். மரங்களை வெட்டி, காடுகளை அழித்து நிலத்தைப் பிளந்து, மழையாலும் காற்றாலும் வளமான மண்ணைப் பறிகொடுத்து, மனிதனின் சதையும் இரத்தமும் போலுள்ள மேல்மண்ணை இழந்து விட்டால் நாளடைவில் நிலம் தரம் குறைந்து, நீர்கொள்ளும் திறனிழந்து, மண்ணிலுள்ள ஊட்டத்தையிழந்து, காசநோயால் வலுவிழந்து, எலும்புக் கூடாக வாழும் பயனற்ற உடலைப் போன்று பாலைவனமாகக் காட்சி அளிக்கும் நிலையுண்டாகிறது. உலகில் பாலைவனமாகியுள்ள பல்வேறு பகுதிகள் ஒருகாலத்தில் வளமான நிலங்களாகயிருந்தவைதான்.

வறட்சியும், வெள்ளமும் மாறி மாறி நமக்குப் பல்வேறு வழிகளில் இன்னல்களைக் கொடுத்து வருகின்றன. வறட்சியின் போது கிணறுகள், குளங்கள், ஆறுகள் போன்ற நீர்நிலைகள் வற்றி விடுகின்றன. பயிர்கள் பாதிக்கப்பட்ட நிலையில், உழவர்கள் அடைந்த இன்னல்களை விளக்கமுடியாது. அரசு அனேக கோடி ரூபாய்களை நிவாரணப் பணிகளுக்காகச் செலவிட்டது. இந்நிலைக்கு மாறாக வெள்ளம் ஏற்படும்போது, மக்கட்கு ஏற்பட்ட அவதிகள் தான் எவ்வளவு? நல்ல விளை நிலங்கள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு விரயமாகின.

பசுமையாகக் காட்சியளித்த குன்றுகள், மலைகள் இன்று வெறிச் சோடி நிற்கின்றன. மானாவாரி நிலங்களில் குறிப்பாக, சரிவான நிலங்களில் தக்க பாதுகாப்பு முறைகள், சரியான உழவு முறைகளின்றிப் பயிர் செய்வதால், அந்நிலங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டு வளமான மேல் மண்ணை எளிதாகவும் விரைவாகவும் இழந்து வருகிறோம். இவ்வாறு ஏற்படும் மண்ணரிப்பினால் ஏற்படும் பல்வேறு பாதிப்பினை மக்கள் நன்கு உணர வேண்டும். இந்த வளமான மண்தான் தாவரங்கள் உண்டாகி, வளர்ந்து பசுமைப் போர்வையையுண்டாக்கும் ஊட்டத்தை, நீர்தங்கும் சக்தியைப்

தந்தி:
"அண்ணாஸ்பின்ஸ்"
தேனி.

தொலைபேசி
தனிஅலுவலர் இல்லம்: 2405
ஆலை அலுவலகம்: 2507 தேனி
ஆலை: 388
ஆண்டிப்பட்டி

அண்ணா கூட்டுறவு நூற்பாலை லிட்.,
ஆண்டிப்பட்டி - 626 512.
மதுரை மாவட்டம்.

கீழ்க்காணும் இரகங்களில் தரமான சிட்டம் மற்றும் கோன் நூல்கள் எங்களது ஆலையில் உற்பத்தியாகின்றன.

சிட்டம் நூல்: 30, 40, 2/40, 2/60, 60 கார்டட், 60 கோம்புடு, 80 கோம்புடு
கோன் நூல்: 30, 34, 40, 44, 50, 60 கார்டட், 60 கோம்புடு

நூல் தேவைகளுக்கு எங்களது ஆலையுடன் தொடர்பு கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

பி. சுப்பிரமணியம்,
தனி அலுவலர்.

நாவின் சுவைக்கு "ஆவின்"...
ஆவின் தரும் நலம் உங்களுக்கே...

பதப்படுத்தி நிலைப்படுத்திய பால், நறுமணப் பால்
பாலாடைக் கட்டி (சீஸ்), மணங்கவர் சுவைகளில்
சுவையூட்டிய தயிர், பனிக்குழைவு (ஐஸ் கிரீம்),
பால்கோவா, பதப்படுத்திய சமையல்,
உப்பிட்ட வெண்ணெய், தரமான நெய்,
பால்பவுடர்... இவையனைத்தும் தங்கு தடையின்றி...
அனைத்து முக்கிய அங்காடிகளிலும் மற்றும்
எங்களது பாலகங்களிலும் கிடைக்கிறது...

A 1301 மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம்,
சாத்தமங்கலம், மதுரை 625 020

தொலைபேசி—42561 தொலை அச்சு-210

பெற்றுள்ளது; விழுந்த மழைநீரைத் தன்னிடத்தே தேக்கி வைத்து, தாவரங்களுக்கு வேண்டிய நீர், உணவுப் பொருட்களைக் கொடுக்க வல்லது. ஆனால் மேல்மண் போய்விட்டால், மண்ணும் மழைநீரும் ' நிலத்தில் தேங்காமல், தங்காமல் ஓடிப்போவதால் திரும்பவும் பெறமுடியாத பெருத்த இழப்புகள், நஷ்டங்கள், கஷ்டங்கள் பல உண்டாகின்றன.

எந்தவித தாவரங்களும் வளரும் சக்தி போய்விடுவதால், நிலங்கள் பசுமையிழந்துவிடுகின்றன. மனித உடலில் காயம் ஏற்பட்டால் எவ்வாறு காட்சி தருமோ அவ்வாறு கோரமான நிலைமையுண்டாகிறது. நீர், நிலத்தில் தங்காமல், தேங்காமல் ஓடிவிடுவதால், ஓடைகள், ஆறுகள் இவற்றில் தொடர்ந்த நீரோட்டம் குறைந்து, நாளடைவில் "பாலாறு" போன்ற வறண்ட நிலையுண்டாகின்றது. நிலத்தில் மண்ணுக்கு நீர் கொள்ளும் சக்தி குறைவதால், மழை சிறிது குறைந்தாலும் வறட்சி நிலைமையுண்டாகி விடுகின்றது. அரிக்கப்பட்ட மண்ணானது, ஆறுகளிலும், நீர்நிலைகளிலும் போய்ச் சேர்வதால், அவற்றின் கொள்ளளவு குறைந்து, நாளடைவில் தூர்ந்து போய்விடுகின்றன.

பெரிய மழை. பெய்யும்போது ஏற்படும் அதிக நீரோட்டம் கரை புரண்டோடுவதாலும், நீர்நிலைகளில் கொள்ளளவு குறைவதால் ஏற்படும் உடைப்புகளாலும் வெள்ளம் ஏற்படுகிறது. மழை நீரை ஆங்காங்கு தக்கவைத்துக் கொள்ளும் சக்தியை நிலம் இழக்க இழக்க வறட்சி நிலையும், வெள்ள அபாயமும் அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஆகவே மண்ணரிப்பைக் குறைத்து, மண்ணின் நீர்கொள்ளும் திறனைப் பெருக்குவது, நில நீர்வளப் பாதுகாப்பின் முக்கிய நோக்கங்கள் ஆகும்.

இந்த மண்ணரிப்பு ஏன் உண்டாகின்றது? அதை எவ்வாறு குறைப்பது என்பதைப் பார்ப்போம்.

நிலத்தின் மேலுள்ள போர்வை போன்ற மேல்மண்ணில்தான் தாவரங்கள் வளர்கின்றன. இந்த மேல்மண்தான் தாவரங்களுக்கு வேண்டிய நீர், உணவுப் பொருட்கள், ஆகியவற்றை தன்னகத்தே கொண்டுள்ளது. மழையினால் கிடைக்கும் நீரை இந்த மண் பிடித்து வைத்துத் தாவரங்களுக்குக் கொடுத்து வருகின்றது.

மனிதன் விவசாயம் செய்ய ஆரம்பித்த நாள் முதல், மண் மேலுள்ள மற்ற தாவரங்களை அகற்றிவிட்டு, தனக்குவேண்டிய பயிர் வகைகளை உண்டாக்கி வாழ்ந்து வருகின்றான். பொதுவாக, பாசன வசதி கிடைக்கும் இடங்களில் மனிதன் அதிகச்செலவில் நிலங்களைச் சமன் செய்து, வரப்புகள் அமைத்து, பாசன நீரும், மழைநீரும் நிலத்தைவிட்டு ஓடாமல் தடுத்துவிட்ட காரணத்தால், பாசன நிலங்களில் மண்ணரிப்பு ஏற்படுவதில்லை. ஆனால் புஞ்சை நிலங்களில், இவ்வாறு சமன்செய்து வரப்புகள் அமைக்காத காரணத்தால், மழை வரும்போதெல்லாம் நீரோட்டம் ஏற்பட்டு மண்ணரிப்பு உண்டாகின்றது. மானாவாரிப் பயிர்களினால் போதிய வருமானம் கிடைக்காததால், நிலத்தைச் சமன் செய்து, வரப்புகள் போட்டு, நீரோட்டத்தைத் தடுப்பதில்லை.

நமது நாட்டிலும் சரி, மாநிலத்திலும் சரி விவசாயம் செய்யும் நிலங்களில் 50 சதத்திற்குமேல் மானாவாரிப்பயிர் செய்யப்பட்டு வருகின்றது. இந்த நிலங்களில் உண்டாகும் மண்ணரிப்பைத் தடுத்து நீரோட்டத்தைக் குறைப்பதற்கு நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும். வேளாண்மைப் பொறியியல் துறையானது - கடந்த 30 ஆண்டுகளாக மலைப்பகுதிகளிலும், சமவெளிப் பகுதிகளிலும், நில, நீர் வளப் பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டங்களினால் மண்ணரிப்பு குறைந்து, நிலத்தடி நீர் கூடுவதோடு, மானாவாரிப் பயிர்விளைச்சலும் அதிகரிக்கின்றது. இம்முறைகளில் முக்கியமாக நிலச்சரிவிற்குக் குறுக்கே மண் வரப்புகள் அமைத்து நீரோட்டத்தைத் தடுத்து, நீரை அதிக நேரம் நிலத்தில் தங்க வைக்கிறோம். நீரோட்டத்தின் வேகம் குறைவதால் மண்ணரிப்பு குறைந்து, அரிபட்ட மண்ணும் ஆங்காங்கே நிலத்தில் தங்கி விடுகின்றது. நாளடைவில் நிலத்தின் தரமும் மதிப்பும் அதிகரிக்கின்றன.



மண்ணரிப்பைத் தடுப்பதோடு, நீர்வளம் பெருகக் கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்படுகின்றன.

மண்ணரிப்பானது, வேகமான காற்றடிக்கும் போதும் உண்டாகிறது. நிலத்தில் தக்க பாதுகாப்பின்றி, வறண்ட நிலையில் நிலத்தின் மேலுள்ள மண்துகள்களை வேகமாக, காற்றும் சூறாவளிக்காற்றும் மற்ற இடங்களுக்கு எடுத்துச்சென்று மணல் மேடுகளை உண்டாக்குகின்றன. ஆகவே, மண்ணரிப்புக்குட்பட்ட

அறிஞர் அண்ணா நினைவிடத்தில்...

முதல்வர் அவர்கள், அங்கிருந்த நோயாளிகளுக்கெல்லாம் தமது திருக்கரத்தினாலேயே உணவு பரிமாறி உவகை கொண்டார்.

விழா முடிவில் சிறைத்துறைத் துணைத் தலைவர் திரு பெருமாள் நன்றி கூறினார்.

இந்த விழாவில்- முதலமைச்சரின் நிவாரண நிதிக்காக ரூ. 33 ஆயிரம் நிதி வழங்கப்பட்டது.

இரத்த தானம்:

அதே நாளில், சென்னை - கலைவாணர் அரங்கில் நடைபெற்ற இரத்ததான முகாமில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளையொட்டி ஏராளமானவர்கள் இரத்ததானம் செய்தார்கள்.

மாலை 5 மணியளவில், முதன் முதலாக மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி, மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு. எ. இராமகிருஷ்ணன், திரு டி.ஆர்.பாலு, எம்.பி., ஆகியோர் இரத்ததானம் கொடுத்து இந்நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார்கள். தொடர்ந்து நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்களும், ஏராளமான இளைஞர்கள்- மற்றும் தாய்மார்களும் இரத்தம் கொடுத்தார்கள்.

இராயப்பேட்டை மருத்துவ மனைக்காக இரத்தம் சேமிக்கப்பட்ட இந்த முகாம், டாக்டர் முத்துவீரப்பன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் மூலம் தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தப்பட்டது.

புத்தக வெளியீடு:

1.6.90 அன்று மாலை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு புதுவை மாநில முதலமைச்சர் திரு டி. இராமச்சந்திரன் அவர்களும் மற்றும் அமைச்சர்களும் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வியமைச்சர் திரு மணிமாறன் முதல்வர் கலைஞர் குறித்து தமிழில் எழுதி-பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட கவிதைநூலை மாண்புமிகு தமிழ்நாடு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். முதல்நூலை புதுவை மாநிலத்தில் உள்ள பிரெஞ்சுத் தூதர் திரு ரொபர்லேயோன் பெற்றுக் கொண்டார். அடுத்தமாதம், பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் 67-வது பிறந்தநாள் விழா கொண்டாடப்படவிருப்பதாக, இவ்விழாவில் பேசுகையில் மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வியமைச்சர் திரு மணிமாறன் அவர்கள் குறிப்பிட்டார்.

செங்கை மருத்துவக்கல்லூரி கலை நிகழ்ச்சி...

பாரதி பதிப்பகத்தார் தயாரித்துள்ள 'கலைஞர் களஞ்சியம்' என்ற நூலும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு மு. தமிழ்க்குடிமகன் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு மற்றும் புதுவை மாநில அமைச்சர் பெருமக்களும், மற்றும் சட்டமன்ற-நாடாளுமன்ற முன்னாள்-இந்நாள் உறுப்பினர்களும் மற்றும் ஏராளமான தமிழறிஞர்களும், தாய்மார்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் குடும்பத்தாரும் இந்த இனிய விழாவிற்கு வருகை தந்திருந்தார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளையொட்டி சென்னை மாநகரமே விழா நகரமாகக் காட்சியளித்தது. "சங்கத் தமிழே! எங்கள் உயிரே! வாழிய பல்லாண்டு!" போன்ற பல வாசகங்களைக் கொண்ட வண்ணச் சுவரொட்டிகள், வரவேற்பு வளைவுகள், தோரணங்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, மாண்புமிகு முதல்வர் கலைஞர் ஆகியோரின் முழு உருவ கட்-அவுட்டுகள் நகரின்முக்கிய வீதிகளிலெல்லாம் காட்சியளித்தன.

ஏடுகள் பல, பிறந்தநாள் சிறப்பிதழ் வெளியிட்டிருந்தன.

கருத்தரங்கம்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்தநாள் கருத்தரங்கு 1.6.90 அன்று மாலை 8 மணியளவில் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்றது.

'கலைஞர்களின் பார்வையில் கலைஞர்' என்ற தலைப்பில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கிற்குப் பட அதிபர் திரு ஏ.வி.எம். சரவணன் அவர்கள் தலைமை தாங்கினார்.

திரைத்துறையில் புகழ்பெற்றவர்களான திரு பாரதிராஜா, திரு கே. பாலச்சந்தர், நடிகை திருமதி லட்சுமி, திரு முக்தா சீனிவாசன், திரு கே.ஏ. தங்கவேலு, திரு விஜயகாந்த், திரு ராதாரவி, திரு பாண்டியன், திரு பாண்டியராஜன், திரு செந்தாமரை, திரு ரவிச்சந்திரன், திரு சந்திரசேகர், திரு ராஜராஜன், திருமதி சரோஜா தங்கவேலு, திரு கே.எஸ். கோபாலகிருஷ்ணன், திரு ஆர்.சி. சக்தி, திரு மணிவண்ணன், திரு பஞ்சு அருணாசலம் ஆகிய பலரும் பேசினார்கள்.

கருத்தரங்க நிகழ்ச்சிகளைத் திரு எஸ்.எஸ். சந்திரன் தொகுத்து வழங்கினார்.

கலைஞர் கருவூலம்:

கலைவாணர் அரங்கின் பின்புறம் அமைந்திருந்த பிரம்மாண்டமான பந்தலில் 'கலைஞர் கருவூலம்' என்ற பெயரில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் புகைப்படக் கண்காட்சியை- மாண்புமிகு அசாம் மாநில முதலமைச்சர் திரு மகந்தா அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன் அவர்கள் இவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், முன்னாள் அமைச்சர்கள் திரு மன்னை நாராயணசாமி, திரு அன்பில் தர்மலிங்கம் ஆகியோரும் திரு என்.வி. என். சோமு, திரு டி.ஆர். பாலு, எம்.பி.யும் கலந்து கொண்ட விழா முடிவில் ஆயிரம் விளக்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மு.க. ஸ்டாலின் நன்றி கூறினார்.

'கலைஞர் கருவூலத்'தில்- மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 66 ஆண்டுக்கால வரலாற்றுப் புகைப்படங்கள் - சரித்திரச் செய்திகள் தியாகச் சம்பவங்கள்- அவர் எழுதிய நூல்கள்- அவரைப் பற்றிய நூல்கள்- திரைத் துறைத் தொடர்பு விவரங்கள்- பெற்ற விருதுகள்- பரிசுகள் யாவும் பாங்குறப் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

தந்தை பெரியார் போக்குவரத்து பயணவழி உணவக வளாகம்!

1.6.90 அன்று இரவு 8 மணியளவில், செங்கை - அண்ணா மாவட்டம் மாமண்டூரில் ரூ.69 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் பயணவழி உணவக வளாகத்'தை மாண்புமிகு முதல்வர் கலைஞர் தன் 67-வது பிறந்தநாளையொட்டித் திறந்து வைத்தார்.



விழாவிற்கு முன்னதாகத் 'தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக இசைக் குழுவினரின்' இசை நிகழ்ச்சி நடந்தது.

ஐந்து ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த வளாகத் திறப்பு விழாத் தொடக்கத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு எஸ். ரங்கநாதன் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் அவர்கள் தலைமையுரையின்போது குறிப்பிட்டதாவது:

"தமிழ்நாட்டில் உள்ள 'மோட்டல்'கள் அனைத்திற்கும் சிகரம் வைத்தது போலத் திகழக் கூடியது இது. பேருந்து வழியில் இப்போதுள்ள சில உணவகங்களில்- அவர்கள் குறிப்பிட்டதுதான் விலை; கொடுப்பதுதான் சாப்பாடு என்ற நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களிலெல்லாம் இனி பேருந்துகளை நிறுத்தக் கூடாது; இங்கே மாமண்டூரில் தான் நிறுத்தவேண்டும் என விரைவில் ஆணை பிறப்பிக்கப்படும். பயணிகளுக்கு இங்கே தரமான உணவு நியாயமான விலையில் அளிக்கப்படும் விரைவில்; சிறிது நேரம் இங்கே பயணிகள் தங்கி ஓய்வெடுத்துக் கொள்ளவும் வசதி செய்யப்படும். தமிழ்நாட்டில் உள்ள சாதாரண கிராம மக்களுக்கும் பஸ் வசதி செய்து தரவேண்டும் என்ற அடிப்படையில் நமது அரசு செயல்பட்டு வருகிறது. இனி, ஆயிரம் பேருக்குமேல் மக்கள் உள்ள கிராமங்களுக்கும்கூட பஸ் வசதி செய்து தரப்படும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன."

—இதைத் தொடர்ந்து, திரு மதுராந்தகம் ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு தமிழ்மணி, திரு உகம்சந்த், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எ. இராமகிருஷ்ணன் ஆகியோர் உரையாற்றினர், மாண்புமிகு அமைச்சர்கள் திரு எஸ். துரைமுருகன், திரு பொன்முடி, சட்டமன்றத் துணைத் தலைவர் திரு துரைசாமி ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்த விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள்- தந்தை பெரியார் போக்குவரத்துப் பயணவழி உணவக வளாகம் கட்டும் நேரத்தில் விபத்தில் இறந்துபோன திரு கன்னியப்பன், திரு குருமணி, திரு குணசேகரன் ஆகியோர் குடும்பத்தாருக்குத் தலா 25 ஆயிரம் ரூபாயும், விபத்தில் கால்இழந்த தொழிலாளி இரத்தினத்திற்கு 12 ஆயிரம் ரூபாயும் நிதியுதவி வழங்கப்படுகிறது என்றார்.

தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத் தொழிற் கூடத்தில் சிற்றுண்டி மற்றும் தொழிலாளர் ஓய்வு விடுதி, தொழிலாளர் குடியிருப்பு, மேனிலை குடிநீர்த் தொட்டி, சமுதாயக் கூடம் ஆகியவற்றுக்கு அடிக்கல் நாட்டினார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், உணவக வளாகத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த உணவு வளாகத்தைக் குத்தகைக்கு எடுப்பவர்கள், இலாப நோக்கத்தோடு உணவின் தரத்தைக் குறைத்து விடக்கூடாது; பயணிகளிடமிருந்து அப்படிப்பட்ட புகார் வருமானால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் கடந்த ஆண்டு இந்தியாவிலேயே இரண்டாவது சிறந்த போக்குவரத்துக் கழகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. எனவே,

பாவேந்தர் நூற்றாண்டு:

பாவேந்தரும் திருச்சி நகரும்

திருச்சி நகரத்திற்கும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுக்கும் மிகுந்த தொடர்பு. இருந்து வந்தது.

பாவேந்தரின் முதல் கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை வழங்கியவர் திருச்சியைச் சேர்ந்த முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆவார்.

பாவேந்தரின் மணி விழா 1951-ல் திருச்சி நகரில் நடைபெற்றது.

பாவேந்தரின் கவிதைகளைப் புகழ்ந்து பாராட்டி அவற்றைத் தமது குடியரசு இதழில் வெளியிட்டு வந்த தந்தை பெரியாரின் தலைமை அகம் திருச்சியில் தான் இருந்தது.

'தாயின் மேல் ஆணை-தந்தை மேல் ஆணை' என்ற பாடலை 1944-ல் பாவேந்தர் இயற்றி அவரே மேடையில் பாடியது திருச்சி நகரில் தான்!

பாவேந்தர் பெயரால் பாரதிதாசன் பல்கலைக் கழகம் உருவாக்கப்பட்டுள்ளது திருச்சியில்தான்!

பாவேந்தரின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சி கொண்டாடப்பட்டதும் திருச்சியில்தான் (6.5.90, 7.5.90)

(பாவேந்தர் நூற்றாண்டுத் தொடக்க விழா உரைகளிலிருந்து)

தகவல்: த.பி.

நிலங்களும், மண்மேடு உண்டான நிலங்களும் பாதிப்படைகின்றன. சாலைகளில் மண்படிந்து போக்குவரத்துகள் பாதிப்படைவதை நாம் பல இடங்களில் காண்கிறோம். ஆடிக்காற்றினால் வீடுகளில் மண் படிவதையும் அதனால் மனிதர்களுக்கு உண்டாகும் பாதிப்புகளையும் காண்கிறோம். இந்த நிலையை நீடிக்க விட்டால், மணல் மேடுகள் உண்டாகி, பாலைவனமாக மாறும் நிலை உண்டாகி விடுகிறது.

இவ்வாறு காற்றினால் மண்ணரிப்பு ஏற்படும் நிலங்களில், காற்றடிக்கும் திசைக்கு எதிராக, தாவர அரண்களை அமைத்து, காற்றின் மண்ணரிப்புத் திறனையும், வேகத்தினையும் குறைக்கலாம். பலவகையான மரங்களை நான்கு, ஐந்து வரிசைகளில் நட்டு தாவர (அரண்களை) வேலிகளை அமைப்பதால், காற்றரிப்பினைத் தடுக்கலாம். இவ்வாறு காற்றினால் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ள இடங்களில் தாவர வேலிகள் அமைத்து, குறிப்பாக மதுரைமாவட்டத்தில் போடிநாயக்கனூர் பகுதிகளிலும், சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூர் பகுதிகளிலும் காற்றுக்கு வேலியமைத்து, காற்றரிப்பின் கொடுமைகளைத் தவிர்த்து நல்ல பலன் கண்டுள்ளோம்.

மேலும், மிகவும் அரிபட்டு ஓடையாக மாறிய இடங்களில் தடுப்பணைகள் போட்டும், தரம் குறைந்த நிலங்களில் மரங்களை உண்டாக்கியும் நிலவளத்தையும், நீர்வளத்தையும் பெருக்கி வருகின்றோம். ஆங்காங்கு கசிவுநீர்க் குட்டைகளைக் கட்டி, நீர் நிலைகள் ஏற்படுத்துவதால், மண்ணரிப்பு குறைவதோடு, நீர்வளம் பெருகி, கிணறுகளில் நீர் பெருக்கம் உண்டாகிறது. ஆகவே, நிலவளம் காத்து, நீர் வளம் பெருக்கி, நாம் இயற்கை வளத்தைப் பேணி பாதுகாக்க வேண்டும். இயற்கை வளம் பெருக, மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுவது மிகவும் அவசியமாகும். நமது பிற்கால சந்ததிகளுக்கு நாம் செய்யும் பெரிய பணியும் கடமையும் ஆகும். இதற்கான சில முறைகளை விவசாயப் பெருமக்கள் கையாளுவதால், சிறந்த பலன் கிடைக்கும். மண்ணரிப்பைத் தடுக்க ஏற்படுத்தியுள்ள மண்வரப்புகளைப் (அணைகளை) பாதுகாக்க வேண்டும். அவற்றில் புல் வளர்த்தால், வரப்புகள் பல்லாண்டு காலம் பலனளிக்கும். உழவு செய்யும்போது சரிவிற்குக் குறுக்கே உழுது பயிர் செய்வதால், நீர்ப் பிடிப்பு கூடுவதோடு, ஓரளவு மண்ணரிப்பும் குறையும். கூடியமட்டும் அவரவர்கள் நிலத்தில் விழும் மழைநீர், இடும்எரு, உரங்கள் அங்கேயே தங்க வழி வகைகள் செய்யவேண்டும்.

விவசாயம் செய்யாத நிலங்களிலும், வேலிகளிலும், வீட்டைச்சுற்றிலும் மரங்களை வளர்க்க வேண்டும். மழை குறைந்த இடங்களிலும், வேப்ப மரங்கள், வேல மரங்கள் நன்கு வளரும். அவை வறட்சியைத் தாங்கும் சக்தியுள்ளவை. ஆகவே, மிகப் பெரிய அளவில் இம்மரங்களை உண்டாக்கலாம். குறிப்பாக வேலிகளில் அதிக வேப்ப மரங்களை உண்டாக்கலாம். மலைகளிலுள்ள மரங்களையும், புதர்களையும் அழித்து, சரிவான நிலங்களில் வேளாண்மைப் பயிர்கள் செய்வதைத் தவிர்க்க வேண்டும். இப்படிப்பட்ட நிலங்களில் வேளாண்மைப் பயிர்கள் செய்தால் அதிக மண்ணரிப்பு ஏற்படும். மலைகளில் கூடியமட்டும் மரங்கள் வளர்ப்போம். மரங்களும் இப்போது நல்ல வருமானத்தைக் கொடுக்கின்றன. மலைப்பகுதிகளிலிருந்து தான் பெரிய நீரோட்டங்களும், ஆறுகளும் உற்பத்தியாகின்றன. இந்த ஆறுகளின் குறுக்கே பெரிய அணைகள் கட்டி, மின்சாரம் உண்டாக்குகின்றோம். அதிகப்பாசன வசதியும் உண்டாக்குகின்றோம். இந்நீர்நிலைகள், அணைகள், பாதிக்கப்படாமல் இருப்பதற்கு மலைகளிலுள்ள மரங்கள், வனங்கள் இவற்றைப் பாதுகாக்க வேண்டும். மலைப்பகுதிகளில் உண்டாக்கும் மண்ணரிப்பைத் தடுப்பதனால், மலை வளம் காப்பதோடு, அணைகளில் மண்சேர்ந்து கொள்ளளவு குறைவதையும் தடுக்கலாம்.

ஆகவே, நில, நீர்வளம் காப்போம். மரங்கள் வளர்ப்போம். வனங்கள் பெருகி வளங்கள் பெருகட்டும். இயற்கைவளம் பொங்கட்டும். இதுவே இயற்கையைப் பேணும் பெரும் பணி.

மாண்புமிகு முதல்வர் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் 67-வது பிறந்த நாள் ஜூன் 3-ஆம் தேதி எனினும்- அது குறித்த சிறப்பு நிகழ்ச்சிகள் 1.6.90 முதலே தொடங்கின.

அன்று மாலை, செங்கை - அண்ணா மாவட்டத்திலுள்ள பரனூர் தொழுநோயாளர் மறுவாழ்வு இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாலை 4 மணியளவில் சென்னையிலிருந்து புறப்பட்டார். வழிநெடுகிலும் ஏராளமான வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. வண்ண வண்ண வாழ்த்துச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. ஆங்காங்கே, சாலையின் இருமருங்கிலும் நின்றிருந்த மக்கள்- மாண்புமிகு முதல்வர் அவர்களின் காரை நிறுத்தி அவருக்கு மாலைகள் கைத்தறி ஆடைகள் அணிவித்துப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்கள்.

2.10.1971-ல், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டதுதான் பரனூர் தொழுநோயாளர் இல்லம். 425 பேர் தங்குவதற்கு வசதிகள் உள்ள இல்லமாக அது அமைக்கப்பட்டது. இப்போது அங்கே 202 ஆண்களும், 138 பெண்களும் 37 குழந்தைகளும் இருக்கிறார்கள்.

இந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுடன்- மாண்புமிகு அமைச்சர்கள் திரு மு. கண்ணப்பன், திரு எஸ். துரைமுருகன், டாக்டர் க. பொன்முடி, டாக்டர் எ இராமகிருஷ்ணன், சட்டமன்றத் துணைத் தலைவர் திரு துரைசாமி, திரு முரசொலி செல்வம் ஆகியோரும் வருகை தந்தார்கள். எல்லோரையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சமீர் வியாஸ், இ.ஆ.ப. வரவேற்றார்.

பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில், அவர்களோடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதுராந்தகம் எஸ். ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் திருமூர்த்தி, திரு. முருகேசன், திரு. வீ. தமிழ்மணி, திரு. மாசிலாமணி, திரு கோதண்டம், திரு மீ.அ. வைத்திலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.

சிறைத்துறை உயர் அதிகாரி திரு இரா. வைகுந்த் வரவேற்புரையாற்றினார். இல்லத்தைச் சேர்ந்த திரு அம்புரோஸ், மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திப் பாடல்கள் பாடினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள்- பரனூர் தொழுநோயாளர் இல்லவாசிகளுக்கெல்லாம் புத்தாடைகளும், அங்குள்ள மாணவ மாணவிகளுக்கெல்லாம் பாடப் புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் வழங்கினார். சட்டமேதை அம்பேத்கர் படத்தைத் திறந்து வைத்தார்.

அதன்பின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசுகையில்- "ஆண்டுதோறும் எனது பிறந்த நாளுக்கு முதல் நிகழ்ச்சியாக நான் வணங்கும் தெய்வங்களான உங்களை வந்து பார்ப்பதையே வாடிக்கையாகக் கொண்டிருக்கிறேன். நான் ஆலயம் சென்று தெய்வத்தை வழிபட்டதில்லை; நடமாடும் தெய்வங்களாகிய உங்களை வணங்குகிறேன். இங்கே என்னிடத்தில் வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிர்வாகச் சீரமைப்பின் கீழ் படிப்படியாக நிறைவேற்றப்படும்" என்றார்.

அதன்பின், தொழுநோயாளிகள் இல்லத்தினுள் சென்ற மாண்புமிகு

இதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வரும் பணியாளர்களைப் பாராட்டும் வகையில் இதில் பணியாற்றும் சுமார் 6,200 தொழிலாளர்களுக்கும் தலா 50 ரூபாய் பெறுமானமுள்ள பரிசு வழங்கிட உத்தரவிடப்படுகிறது. இந்த வளாகம் நல்ல முறையிலே செயல்பட , போக்குவரத்துக் கழகப் பணியாளர்களோடு பயணிகளும் ஒத்துழைக்க வேண்டுகிறேன்."

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா

செங்கற்பட்டில் உள்ள மருத்துவக் கல்லூரியின் வெள்ளி விழா 1.6.90 அன்று இரவு 8.30 மணியளவில் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களும், சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு துரைசாமி மற்றும் அமைச்சர் பெருமக்களும், முன்னாள்-இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்களும் நகராட்சித் தலைவர் திரு அஸ்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர். மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் லலிதா அனந்த சுப்பிரமணியம் வரவேற்புரையாற்றினார். குத்து விளக்கு ஏற்றி வைக்கப் பட்டது. விழாத் தொடக்கத்திலும், முடிவிலும் மருத்துவக் கல்லூரி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. டாக்டர் வேல்முருகன் அவர்கள் கலைஞரின் 'பராசக்தி' திரைப்பட வசனம் பேசி மகிழ்வித்தார். டாக்டர் வரகுணன் அவர்கள பாவேந்தரின் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' பாடலை இசைநயத்தோடு பாடினார்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் வே.ப. நாராயணன், பொதுச் செயலாளர் டாக்டர் எம்.எத்திராஜன், மாணவர் பேரவைத் தலைவர் திரு எஸ்.டி. இன்பராஜ் ஆகியோர் அறிக்கை படித்தனர்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் பொன்முடி தலைமை உரையாற்றினார். நகராட்சித் தலைவர் திரு அஸ்மத், திரு வீ. தமிழ்மணி எம்.எல்.ஏ., மதுராந்தகம் திரு சி. ஆறுமுகம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு எ. இராமகிருஷ்ணன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்- செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி வெள்ளி விழா நினைவுச் சின்னத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"படித்துப் பட்டம் பெற்ற மருத்துவர்கள் கிராமங்களுக்குச் சென்று பணிபுரியத் தயங்குகிறார்களே என்கிற வேதனை எங்களுக்கு உண்டு. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி, வசதி குறைவானதாக இருந்தாலும், மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தில் கடந்த ஆண்டு முதன்மை பெற்றிருப்பதை அறிந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். படிப்பின் மீதுள்ளது போலவே தமிழின் மீதும் ஆர்வம் கொண்டிருந்த நீங்கள்-நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போதும் என்னை இங்கே அழைத்துப் பெருமைப்படுத்தியதை நான் மறக்கமாட்டேன். இங்கு-தாய்சேய் நல மருத்துவக் கட்டடம் ஒன்று தேவை என்று தெரிவிக்கப்பட்டது; ஏற்கெனவே இருக்கிற கட்டடத்தை இப்போதைக்கு அதற்கெனப் பயன்படுத்தி வந்தால், விரைவில் தாய் சேய்நலத் தனிக் கட்டடத்தைப் படிப்படியாக அரசு கட்டித் தரும்."

— இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், பல லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்படவிருக்கும் பல்வேறு மருத்துவமனைக் கட்டடப் பிரிவுகளுக்கு அடிக்கல் நாட்டினார். பெண் நர்சுகள் குடியிருப்பைச் சுற்றி சுற்றுச்சுவர் எழுப்பிட ஆணையிட்டார்.

விழா முடிவில், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி உதவி முதல்வர் டாக்டர் பெ. பாலுசாமி நன்றி தெரிவித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளின் தொடக்கமாக (2.6.90) காலை 10 மணி அளவில் கலைவாணர் அரங்கில் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆயிரம் விளக்கு எஸ். ஏ. எம். உசேனின் 'சாம் சிங்கர்ஸ்' குழுவினரின் இன்னிசை நடைபெற்றது.

திருமதி எஸ்.பி. சற்குணம், எம்.எல்.ஏ. வரவேற்க , மாண்புமிகு அமைச்சர் சுப்புலட்சுமி ஜெகதீசன் முன்னிலை வகித்தார்.

காலை 11 மணி அளவில் பட்டிமன்றம் துவங்கியது. 'தமிழவேள் கலைஞர் உயர்ந்தோங்கி நிற்பது அவரது தியாகத்தாலா? அவரது திறமையாலா?' என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத்திற்கு டாக்டர் மா. நன்னன் நடுவராகப் பொறுப்பேற்றார். மாண்புமிகு அமைச்சர் திரு கே.பி. கந்தசாமி முன்னிலை வகித்தார்.

'தியாகத்தால்' என்ற அணியில் திரு புலவர் ஆடலரசு, தஞ்சை கூத்தரசன், டாக்டர் ராஜேந்திரன், திருமதி சக்தி கோதண்டம் ஆகியோரும், 'திறமையால்' என்ற அணியில் திரு அ. ரகுமான்கான், எம்.எல்.ஏ., திரு நாஞ்சில் சம்பத், சிங்கார சடையப்பன், கண்மணி தமிழரசன் ஆகியோரும் வாதிட்டனர்.

இறுதியில் நடுவர் திரு மா. நன்னன் தீர்ப்புக் கூறும் போது மன்றத்தில் கூடியிருந்த மக்களின் கருத்தைக் கேட்டு, அவர்கள் அளித்த முடிவைப் பட்டிமன்றத் தீர்ப்பாக அளித்தார். "தமிழவேள் கலைஞர் உயர்ந்தோங்கி நிற்பது அவரது திறமையால்" என்ற தீர்ப்பைத் திரு மா. நன்னன் பலத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்.





மாண்புமிகு முதல்வர் கலைஞர் எழுதிய 'பொன்னர்-சங்கர்' நூல் பேச்சாளர்களுக்கெல்லாம் வழங்கப் பட்டது. முன்னதாகத் திரு து. புருடோத்தமன் வரவேற்றார். திருமதி ராஜம் நடராசன் நன்றி கூறினார்.

அடுத்து வழக்காடு மன்றம் நடைபெற்றது.

'தலைவர் கலைஞர் வழியில் நடக்காத தமிழினம் குறையுடையதே' என்ற பொருளில் நடைபெற்ற வழக்காடு மன்றத்திற்குத் திருச்சி என். செல்வேந்திரன் நடுவராகப் பொறுப்பேற்றார். திரு பெரியார் தாசன் வழக்குத் தொடுக்க, திரு சபாபதி மோகன் மறுத்துப் பேசினார். முடிவில் திரு செ. கண்ணப்பன் நன்றி கூறினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் மற்றும் அமைச்சர் பெருமக்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு மன்னை நாராயணசாமி, திரு அன்பில் தர்மலிங்கம் மற்றும் நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்விழாவில் பங்கேற்றார்கள்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு 67-வது பிறந்தநாள் 2-ஆம் தேதி நள்ளிரவு 12 மணிக்கு பிறந்தது. கலைவாணர் அரங்கில் அப்போது உவமைக்கவிஞர் சுரதா அவர்கள் தலைமையில் கவியரங்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. கவிஞர்கள் திரு புலமைப்பித்தன், திரு வைரமுத்து, திரு பொன்னிவளவன், திரு குடியரசு, திரு அப்துர் ரகுமான், திரு கவிதைப் பித்தன், மாண்புமிகு புதுவை மாநிலக் கல்வி அமைச்சர் திரு மணிமாறன், திருமதி நிர்மலா சுரேஷ், திருமதி அரசுமணிமேகலை ஆகியோர் கவிதை பாடினர். பார்வையாளர்கள் வரிசையில் அமர்ந்திருந்த முதல்வர் கலைஞர் அவர்கள் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஏற்கனவே தயாராக வைக்கப் பட்டிருந்த "அண்ணா அறிவாலய வடிவமைப்பு" கொண்ட மிகப் பெரிய கேக்கை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் வெட்டினார்.

கூடியிருந்த லட்சக் கணக்கான தமிழ்ப்பெருங்குடி மக்கள் "கலைஞர் வாழ்க! தமிழினத் தலைவர் வாழ்க!" என விண்ணதிர முழக்கமிட்டனர்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

3-6-90 அன்று , தனது பிறந்த நாளையொட்டி, மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் புத்தாடை அணிந்து- தன் தாயார் அஞ்சுகத் தம்மையார், தந்தையார் முத்துவேலர் திருவுருவப்படங்களுக்கு மாலையணிவித்து வணங்கினார்.

அதன்பின், அண்ணா நினைவிடத்திற்கு வந்து , மலர் வளையம் வைத்து வணங்கினார். தனது 67-வது பிறந்த நாளை முன்னிட்டு, 67 வெண்புறாக்களைப் பறக்கவிட்டார்.

பிறகு., பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் நினைவிடத்திற்குச் சென்று , மலர் வளையம் வைத்து வணங்கினார்.

பின்பு காலை 7.30 மணியளவில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகமெங்கிலுமிருந்து வந்திருந்த லட்சோபலட்சம் மக்களிடமிருந்து 'பிறந்த நாள் வாழ்த்தைப் பெறுவதற்காகக் கலைவாணர் அரங்கிற்கு வந்துசேர்ந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு ஒரு யானை, மாலை சூட்டி மகிழ்ந்து பிளிறி வரவேற்றது.

கலைவாணர் அரங்க மேடைக்கு வந்து நின்ற மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் அருகே ஒரு பெரிய உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. முதலமைச்சர் நிவாரண நிதிக்காக அதில் தம்மால் இயன்ற தொகையைச் செலுத்திவிட்டு, எண்ணற்றோர் - மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மாலைகள், சால்வைகள், பொன்னாடைகள் அணிவித்து இதயவாழ்த்தைத் தெரிவித்தார்கள்.

மேதகு தமிழக ஆளுநர் திரு சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள் நேரில் வந்திருந்து பிறந்தநாள் வாழ்த்துக் கூறினார். சென்னைக்கு வருகைதந்த மாண்புமிகு செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு உபேந்திரா அவர்களும், சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு ஏ. எஸ். ஆனந்த் அவர்களும் கலைவாணர் அரங்கத்திற்கே வருகை தந்து மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

பொதுக் கூட்டம்

அன்றுமாலை, தியாகராய நகரில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், திரு டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

தேசிய முன்னணித் தலைவர் திரு என்.டி. ராமராவ், மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு உபேந்திரா, மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன், மாண்புமிகு தமிழக சட்ட அமைச்சர் திரு சாதிக்பாட்சா, முன்னாள் அமைச்சர் திரு ப.உ. சண்முகம், திரு கி. வீரமணி (தி.க.), திரு மாணிக்கம் (இந்.கம்.), திரு வரதராசன் (மார்க்.கம்.), திரு அப்துல் லத்தீப் (மு.லீக்.), திரு வெங்கடேச தீட்சிதர் (ஜனதா தளம்) ஆகியோர் , பிறந்த நாள் விழா காணும் மாண்புமிகு முதல்வர் அவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

கூட்ட முடிவில் திரு . கோ . அய்யாவு நன்றி கூறினார்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
-ராஜு

TNPSC — விளம்பர எண்: 19/90

தமிழ்நாடு பொதுச் சார்நிலை பணியில், சென்னை அரசு அருங்காட்சியகத்தில் உள்ள கீழ்க்காணும் பதவிகளுக்கு 10.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாதச் சம்பளம், வயது வரம்பு மற்றும் கல்வித் தகுதி ஆகியன பதவிகளின் பெயர்களுக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. (நியமன ஒதுக்கீட்டு விதி இப்பதவிகளுக்குப் பொருந்தாது)

1. ஒரு காப்பாட்சியர் (புவியியல் பிரிவு)
   ரூ.1,820-3,200/-.
   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக.
   புவியியலில் ஒரு முதுநிலை அல்லது ஹானர்ஸ் பட்டம்.

2. ஒரு காட்சிக்கூட விளக்குநர் (இயற்கை அறிவியல் பிரிவு).
   ரூ. 1,200-2,040/-
   1.7.1990 அன்று 30-க்குக் குறைவாக
   விலங்கியலில் அல்லது தாவரவியலில் அல்லது புவியியலில் பி.ஏ. அல்லது பி.எஸ்சி. பட்டம்.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கோரிக்கைகளிலும் விண்ணப்பத்திலும் பதவியின் பெயரைத் தெளிவாகப் பெரிய எழுத்துக்களில் குறிப்பிட வேண்டும்.

இரு பதவிகளுக்கும் உரியன:

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், இப்பதவிக்குரிய கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விளக்கம்: ''ஆதரவற்ற விதவை'' என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாதவரும் ஆன விதவையைக் குறிப்பதாகும்.

ஆதிதிராவிட வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர், மிகவும் பிற்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர், பிற்பட்ட வகுப்பினர், ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், பிணைத் தொழிலாளர்கள், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணி வேட்பாளர்களுக்கான விதிமுறைகளில்'' தரப்பட்டுள்ளன. (பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்).

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ, பதவியின் பெயர், விளம்பர எண் மற்றும் இனத்தின் எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 31.5.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து) சென்னை அண்ணாசாலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய, 31.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம்விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான ''கேட்புக் காசோலை'' (Account Payee Demand Draft) யுடனும் சுய விலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்பட மாட்டா.

குறிப்பு: ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே விண்ணப்பப் படிவ விலையைச் செலுத்தி, தனித்தனியே கோரிக்கை மனுவைச் சமர்ப்பிக்க வேண்டும்.

DIPR/1347/MS/90/8



கார் நெல்லுக்கு உரமிடல்

தற்சமயம் ஆழியார் பாசனத்தில் ஆனைமலைப் பகுதியில் கார்/குறுவை நெல் சாகுபடி (வைகாசி-ஆவணிப்பட்டம்) தீவிரமாக நடைபெறுகிறது. எக்டேருக்கு 10-11 டன் மகசூல் எடுக்கத் தீவிர முயற்சிகள் செய்து தக்க செயல்முறைகளைக் கையாள வேண்டும்.

இப்பருவத்தில் ஐ.ஆர்.50 ஏடிடி.36, மற்றும் ஏடிடி.37 வித்துக்களில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ளலாம். நாற்றங்கால்களை நன்றாகப் பண்படுத்தி பட்டையான, குட்டையான, பூச்சி நோய் தாக்காத வீரிய நாற்றுக்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

நடவு வயலில் கீழ்க்கண்ட பிரகாரம் உரமிடுவது அவசியம்.

அடியுரமாக எக்டேருக்கு 50-50-50 கிலோ முறையே தழை - மணி - சாம்பல் சத்து இட வேண்டும். இதற்கு 110 கிலோ யூரியா, 310 கிலோ சூப்பர், மற்றும் 85 கிலோ மியூரேட் பொட்டாஷ் தேவைப்படும்.

இத்துடன் எக்டேருக்கு 10-12 டன் இலை-தழை அல்லது தொழுஉரம் இட்டு சேற்று உழவு செய்து மக்க வைத்திருக்க வேண்டும். அதாவது, நடவுக்கு 15 நாட்களுக்கு முன் இவ்வுரத்தை இடவேண்டும்.

நடவு நட்டு 15-வது நாள் 8 கிலோ யூரியாவை 16 கிலோ வேப்பம் புண்ணாக்குடன் கலந்து முதல் மேலுரமாக இடவேண்டும். இதனால் அதிக தூர்கள் கட்ட ஏதுவாகும். நடவு நட்டு 30-வது நாள் இரண்டாவது மேல் உரம் இட வேண்டும். 83 கிலோ யூரியாவுடன் 42 கிலோ பொட்டாஷ் உரத்தையும் சேர்த்து இடவேண்டும். இதனால் கதிரின் எண்ணிக்கையும், எடையும் கூடுதலாகக் கிடைக்கும்.

மூன்றாவது மேலுரமாக, நடவு நட்டு 45-வது நாள் எக்டேருக்கு 55 கிலோ யூரியாவை இடவேண்டும். இதனால் மணிகளின் எடை கூடிக் கிடைக்கும்.

நடவு செய்யும் பொழுது எக்டேருக்கு 25 கிலோ ஜாஸ் சல்பேட்டை இட வேண்டும். இதனால் துத்தநாகப் பற்றாக் குறையைத் தீர்க்க முடியும்.

நடவு செய்யும் பொழுது, சதுர மீட்டருக்கு 70-80 குத்துக்கள் நாற்றுகளை நட்டு (ஒரு குத்துக்கு 2-3 நாற்றுக்கள்) மேற்கண்டபடி உரமிட்டு, ஒருங்கிணைந்த களைக் கட்டுப்பாடும்,பயிர்ப்பாதுகாப்பும் செய்தால் திட்டமிட்ட மகசூல் கிடைக்கும்.

மாம்பழத்து வண்டு

முக்கனிகளுள் ஒன்றான மாம்பழங்களை விரும்புவோர் ஏராளம். மாமரங்களைத் தாக்கும் பூச்சிகளும் ஏராளம். அதனில், மாம்பழங்களை மற்றும் மாங்கொட்டைகளைத் தாக்கும் கூன் வண்டு முக்கியமான ஒன்றாகும். இக்கூன் வண்டுகள் கரும்பழுப்பு நிறமாக 6 மி.மீ. நீளமுள்ளதாக இருக்கும். சித்திரை அல்லது வைகாசி மாதங்களில் அறுவடை செய்யப்பட்ட மாம்பழங்களைச் சாப்பிட்டு தூக்கி எறியப்பட்ட கொட்டைகளினுள் இவ்வண்டுகள் அசைவற்று இருக்கும். மாமரப்பட்டைகளிலும் இவ்வண்டுகளைக் காணலாம். பெண் வண்டுகள் மாம்பிஞ்சு மற்றும் மாங்காய்களின் மீது சுரண்டி தனித்தனியே முட்டைகளை இடும்.

இம்முட்டைகள் மாங்காய்களில் இருந்து வடியும் பால் போன்ற திரவத்தினால் மூடப்பட்டிருப்பதால் நம்மால் முட்டைகளைக்காண முடியாது. சுமார் 7 நாட்களில் இளம் புழுக்கள் வெளிப்பட்டு மாங்காய்களைக் குடைந்து பாதை மூடப்படுவதால் சேதம் புலப்படுவதில்லை. வெண்மையான நிறமும் கருமையான தலையையும் கொண்ட புழுக்கள் மாங்கொட்டைக்குள் விதைப் பருப்பைத் தின்று கூண்டுப்புழுவாகி சுமார் 7-10 நாட்களில் கூன் வண்டுகளாக மாறுகின்றன.

பழுத்த பழத்தினுள் முழு வளர்ச்சியடைந்த கூன் வண்டு காணப்படும். மாம்பழத்தைத் தவிர வேறு எந்தப் பழ வகைகளையும் இவ்வண்டு தாக்குவதில்லை. ஒரு வருடத்தில் ஒரு தலைமுறை காணப்படும். சாதாரணமாக நீலம், பெங்களூரா ரகங்கள் அதிக தாக்குதலுக்குள்ளாகும். மல்கோவா ரகத்தில் தாக்குதல் குறைந்து காணப்படுகிறது.

மாம்பழத்து வண்டுகளைத் தடுக்க மாம்பிஞ்சு தோன்றும் காலங்களில் பயிர் பாதுகாப்பு செய்தல் அவசியம். முட்டைகளையும் இளம் புழுக்களையும் அழிக்க கார்பரில் 50 சதம் நீரில் நனையும் தூளை 1 லிட்டர் நீருக்கு 4 கிராம் என்ற அளவிலோ அல்லது பென்தியான் 0.1.1 சத மருந்துக் கரைசலை மாம்பிஞ்சுகள் தோன்றும் காலங்களில் ஒரு முறையும், அதன் பின்னர் 15 நாட்கள் கழித்து மறுமுறையும் ராக்கர் ஸ்ப்ரேயர் கொண்டு தெளித்துப்பயன்பெறலாம்.

அதன் பின்னர் சுமார் 15-20 நாட்களுக்கு ஒரு முறை மருந்து தெளிப்பதால் இவ்வண்டுகளின் தாக்குதலை மேலும் குறைக்கலாம். நீலம் மற்றும் பெங்களூரா ரகங்கள் அதிக தாக்குதலுக்குள்ளாவதால் அந்த ரகங்களைப் பயிர் செய்பவர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுப்பது நலம்.

வேர்க்கடலைக்கு ஏன் ஜிப்சம் இடவேண்டும்?

எண்ணெய்வித்துப் பயிர்களிலேயே வேர்க்கடலைப் பயிர்தான் முதன்மை வகிக்கின்றது. பயிரிலிருந்து அதிக லாபம் கிடைப்பதிலும், சத்துள்ள உணவு கிடைப்பதிலும் மிகச் சிறந்து விளங்குகிறது.

வேர்க்கடலைப் பயிருக்கு சுண்ணாம்புச் சத்து, கந்தகச்சத்து இவை இரண்டும் மிகவும் முக்கியமானதாகும்.

முதல்களை எடுக்கும் சமயத்தில் ஒரு எக்டருக்கு 200 கிலோ ஜிப்சம் இடுவதால் பின்வரும் நன்மைகள் ஏற்படுகின்றன.

(அ) விழுதுகள் நன்கு மண்ணில் வளர்ந்து பரவப்பயன்படுகிறது. இதனால் திரண்ட காய்கள் கிடைக்கவும், காய்களில் மணிலாப் பயிறு விரைவில் நன்கு வளரவும் பயன்படுகிறது.

(ஆ) கந்தகச் சத்தினால் எண்ணெயின் அளவும் புரதச்சத்தும் கூடுகிறது.

(இ) வேர்க்கடலைத் தோல் நன்கு வளர, சுண்ணாம்புச்சத்து மிகவும் அவசியமாகிறது.

ஆதலால் வேளாண்குடிப்பெருமக்கள் ஒரு எக்டருக்கு 200 கிலோ ஜிப்சத்தை வேர்க்கடலைப் பயிருக்கு அளித்து, அதிகமான மகசூல் பெறுவதோடு ஊட்டச்சத்து மிகுந்த வேர்க்கடலையைத் தயாரித்து மிகுந்த பயனடையலாம்.

வேளாண் தகவல் பணிமையம்,
தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம்,
கோவை-641 003.

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 7.3.90 அன்று தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத்துறை இயக்ககத்தில் புள்ளி விவர ஆராய்வாளர் (Statistical Investigator) பதவிக்கு நடத்தப்பட்ட சுருக்குத்தேர்வு (Short Listing Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத் தேர்வு சென்னை-2 அண்ணாசாலை அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்து விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

22	26	42	44	46	48	64
73	78	92	111	140	169	

DIPR/1302/MS/90/ad.bureau/3548

சுட்டிக் காட்டப்பட்டதைப்போல ஒரு ஐம்பது ஏக்கரா வெற்றிடம் இருக்கிறது. மத்திய அமைச்சர் உபேந்திரா அவர்கள் இங்கே வெளிப்புறக் காட்சிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்காகவும்! அமைப்புக்களை உருவாக்குவதற்கும்தான் அதற்கான அடிக்கல்லை நாட்டியிருக்கிறார். அந்தக் கட்டிடங்கள், விரைவிலே இங்கே எழுந்திடவிருக்கின்றன. மாநில அரசின் சார்பில் அதற்கென உதவிகள் செய்யப்பட்டாலும்கூட மத்திய அரசும் தன்னுடைய கடமையை மறந்துவிடக் கூடாது. அதற்கான செலவின் ஒரு பகுதியை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகின்றேன்.

காவிரி நதிநீர்ப் பிரச்னைக்குத் தீர்வு காண மூன்று நீதிபதிகளைக் கொண்ட நடுவர் மன்றத்தை (டிரிபியூனல்) மத்திய அரசு அமைத்துள்ளது. இது பற்றிய அறிவிப்பு 2.6.90 அன்று வெளியிடப்பட்டது.

நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் செய்தியாளர்கள் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்:

"என் பிறந்த நாளினையொட்டி இது எனக்குக் கிடைத்த மகிழ்ச்சியான செய்தி!"

"ஏனென்றால் தொலைக்காட்சியிலே அரசின் செய்திகளை – மக்களுக்குத் தேவையான அறிவுரைகளை சொல்வதற்கு அந்த அரும்பெரும் சாதனத்திலே இன்றைக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட வேண்டியவர்கள் கலைஞர்கள். அவர்கள் எந்தக் கலைஞர்களாக இருந்தாலும் சரி; நடிப்புக் கலைஞர்களாக இருந்தாலும், எழுத்துக் கலைஞர்களாக இருந்தாலும், இசைக் கலைஞர் அல்லது பாட்டுக் கலைஞர் அல்லது ஒளிப்பதிவு, ஒலிப்பதிவுக் கலைஞர்களாக இருந்தாலும் அவர்களையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு வேகவேகமாக ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் உலகத்திலே இன்றைக்கு அறிவிக்கப்படுகின்ற செய்திகளை நாட்டுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய அந்த அரும் பணியைச் செய்கின்ற, படைக்கலனாக விளங்குகின்ற இந்த அரிய தொழிலுக்கு மாநில அரசினுடைய உதவிகள் மாத்திரம் இருந்தால் போதாது. மத்திய அரசின் உதவியும் தேவை.

"எனவே அந்தத் தேவையை உணர்ந்து அடிக்கல் நாட்டிய அமைச்சர் உபேந்திரா அவர்கள் அடுத்த ஆண்டு வரும்பொழுது எத்தனை கட்டிடங்கள் எழுந்திருக்கின்றன என்று கேட்டால், பணம் இல்லாத காரணத்தால் ஓரளவுதான் முடிந்திருக்கிறது என்று சொல்லுகின்ற அவல நிலை எங்களுக்கு இல்லாமல் அவர் அடிக்கல் நாட்டிய காரணத்தினால் அவருடைய கைராசியை அனைவரும் புகழ வேண்டுமென்ற காரணத்திற்காகவாவது இந்தக் கட்டிடங்கள் உடனடியாக உருவாவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, போதுமான நிதியை அவர்களும் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.



"இங்கே அமைச்சர் நேரு பேசும் பொழுது இதை ஒரு பல்கலைக்கழகமாக மாற்றவேண்டும் என்று சொன்னார்.

"ஒரு திரைப்படக் கல்லூரி பல்கலைக் கழகமாக மாறுவதற்கு என்னென்ன வாய்ப்புக் கூறுகள், எத்தகைய சூழ்நிலைகள் அமைய வேண்டுமென்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். ஏற்கனவே அதனை ஆராய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. அந்தக் குழுவினுடைய ஆலோசனைகளைப் பெற்ற பிறகு அதைப் பற்றிச் சிந்திக்கலாமென்ற கருத்தை மாத்திரம் இங்கே எடுத்து வைத்து, இந்தத் திரைப்படக் கல்லூரியிலிருந்து வெளிவந்து ஒளி தந்து கொண்டிருக்கின்ற கலைஞர்களையெல்லாம் வாழ்த்துகின்றேன்."

இவ்வாறு முதல்வர் கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள். மாணவர் தலைவர் திரு திருமுருகன் நன்றி கூறினார்.

மாண்புமிகு மத்திய நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. முரசொலி மாறன் அவர்கள் - அரசு திரைப்படக் கல்லூரி வெள்ளிவிழா மலரை வெளியிட முதல் மலரை நடிகர் திரு. கமல்ஹாசன் பெற்றுக் கொண்டார்.

மாணவர் பக்கம்

வெற்றி பெற விரும்பு

பூவிதழை வண்டமர்ந்து
படிக்கும் விடியலில்
பூந்தென்றல் தொட்டெழுப்பும்
புலரும் காலையில்

ஆவலுடன் எழுந்துபடி
அதிகாலையில்!
அறிவுக்கண் திறக்கும் அந்த
அமைதி வேளையில்!

நாளும் விரும்பிப் பாடங்களைக்
கேட்க வேண்டும்நீ!
நல்லாசான் அறிவுவழியில்
நடக்க வேண்டும்நீ!

மாலை வீடு திரும்பி ஆடி
மகிழ வேண்டும் நீ!
வகுப்பில் நடந்த பாடம் நினைந்து
படிக்க வேண்டும் நீ!

தொடர்புப் பகுதிக் கற்றவற்றை
நினைக்க வேண்டும்நீ!
தோழரோடு விவாதித்துத்
தெளிய வேண்டும்நீ!

சுடர் விளக்காய் விளங்கி இருளைத்
துரத்த வேண்டும் நீ!
சுறுசுறுப்பால் வெற்றிக் கனியைச்
சுவைக்க வேண்டும் நீ!

—கவிஞர் பல்லவன்



அறிவுச்சுடர்

1. உலகத்திலேயே ஆறுகளே இல்லாத நாடு எது?
2. தண்ணீரே குடிக்காத மிருகம் எது?
3. ஏரிகள் அதிகம் உள்ள நாடு எது?
4. 'இமாமி' என்பது எந்த மொழிச் சொல்? அதன் பொருள் யாது?
5. 'லிஃப்டைக்'க் கண்டுபிடித்தவர் யார்?
6. கிரிக்கெட் டெஸ்ட் பந்தயத்தில் உலகில் இள வயதில் பங்கு கொண்ட ஆட்டக்காரர் யார்?
7. ஒரு தந்தை, அவரது மகன் இருவருமே அமெரிக்கக் குடியரசுத்தலைவர்களாக இருந் திருக்கின்றனர். அவர்கள் யார்?
8. ஹாக்கி விளையாட்டில் உலக அளவில் முதன் முதலில் வெற்றி கண்ட நாடு எது?
9. உயில் எழுதி வைக்கும் வழக்கத்தை முதன்முதலில் எந்த நாட்டினர் ஆரம்பித்து வைத்தார்கள்?
10. Y.M.C.A. நிறுவனத்தை நிறுவியவர் யார்?
11. நவரத்தினங்கள் யாவை?
12. சிறுத்தையின் வேகம் மணிக்கு எத்தனை கிலோமீட்டர்?
13. தமிழறிஞர் திரு.வி.க. எழுத்தராகப் பணி யாற்றிய நிறுவனம் எது?
14. டெல்லி எந்த நதிக் கரையில் உள்ளது?
15. ஐரோப்பாவிலே பிறந்து, ஆசியாவிலே இருந்து, ஆப்பிரிக்காவில் அடக்கம் செய்யப் பட்ட மாமனிதர் யார்?

அறிவுச்சுடர் (விடைகள்)

1. அரேபியா
2. கோலா கரடி
3. பின்லாந்து
4. இத்தாலி மொழிச் சொல். 'என்னை விரும்புங்கள்' என்பது பொருள்.
5. ஈ.ஜீ. ஓட்டிஸ்
6. பாகிஸ்தானைச் சேர்ந்த முஷ்டாக் முகம்மது தம்முடைய 15-வது வயதில்.
7. முறையே ஜான் ஆடம்ஸ், ஜான் குவின்ஸ் ஆடம்ஸ்.
8. இங்கிலாந்து.
9. ரோம் நாட்டவர்கள்
10. ஜார்ஜ் வில்லியம்
11. கோமேதகம், நீலம், பவழம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், வைரம், வைடூரியம், முத்து.
12. மணிக்கு 120 கிலோ மீட்டர்.
13. சென்னையில் உள்ள ஸ்பென்சர் நிறுவனம்.
14. யமுனை நதிக்கரை
15. மாவீரன் அலெக்சாண்டர்.

—நன்றி: 'தமிழ்நாடு பெற்றோர்-ஆசிரியர் கழகச் செய்தி'

வெள்ளி விழாக் காணும் திரைப்படக் கல்லூரி

தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிக் கல்லூரி யின் வெள்ளிவிழா, 4.6.90 அன்று, கல்லூரி வளாகத்திலேயே மிகச்சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா அவர்களும், மாண்புமிகு மத்தியநகர்ப்புறவளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலி மாறன் அவர்களும் பங்கேற்ற இந்த இனிய விழா, மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் நடை பெற்றது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலை மையில் நடைபெற்ற இந்த விழா வில், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன் அவர் களும், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராம லிங்கம் அவர்களும் மற்றும் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு கி. இராஜமாணிக்கம் இ.ஆ.ப., அவர்கள் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய இவ்விழாவில்- திரைப்படக் கல்லூரியின் தலைவர் திரு கே. சொர்ணம் அவர்கள் வரவேற்புரையாற்றினார் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள் தலைமை யுரை நிகழ்த்தினார்.

ஏராளமான கலையுலகினர் வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு அரசு திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிக் கல்லூரி வெள்ளி விழா வில்- திருவாளர்கள் எஸ்.பி. முத்து ராமன், திரு கே.எஸ். கோபால கிருஷ்ணன், திரு பாரதிராஜா, திரு முக்தா சீனிவாசன், திருமதி லட்சுமி, திரு சிவகுமார், திரு கமல் ஹாசன், மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு பொன். முத்துராம லிங்கம், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் திரு க. அன்பழகன், மாண்புமிகு மத்தியநகர்ப்புறவளர்ச்சி மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முரசொலிமாறன் ஆகியோர் வாழ்த் துரை வழங்கினார்கள்.

அரசு திரைப்படக்கூடம் மற்றும் வெளிப்புறப் படப்பிடிப்பு வளாகத் திற்கு அடிக்கல் நாட்டி மாண்புமிகு மத்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு பி. உபேந்திரா அவர் கள் உரையாற்றினார்.

இவ்விழாவில், அரசு திரைப் படக் கல்லூரி சார்பில், அதன் தலைவர் திரு கே. சொர்ணம் அவர்கள் முதலமைச்சர் நிவாரண நிதிக்காக ரூ. 6,800 வழங்கினார். திரு பாரதிராஜா ஐயாயிரம் ரூபாய் வழங்கினார். திரைப்படக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் ரூ. 1001/-ம், திரு சாம்ராஜ் ரூ. 1001/-ம் நிதி வழங்கினார்கள்.

அரசு திரைப்படக் கல்லூரியின் ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கும், இங்கே பயின்று திரைத்துறையில் ஒளிவீசித் திகழ்வோருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறக்கட்டளை விருது களையும் நினைவுப் பரிசுகளையும் வழங்கினார்.

அதன்பின், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் தமது சிறப்புரை யில் குறிப்பிட்டதாவது:

"மாநில அரசு பெரிய மாளிகை களை இங்கே எழுப்பலாம். இங்கே

TNPSC

விளம்பர எண்: 18/90

தமிழ்நாடு பொறியியல் சார்நிலைப் பணியில், பொதுப்பணித்துறை நிலத்தடி நீர்ப்பிரிவில் உதவி புவிவேதியியலர் பதவியில் ஒரு காலியிடத்திற்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த விண்ணப்ப தாரர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 10.7.1990 அன்று மாலை 5.45 மணி வரையில் வரவேற்கப்படுகின்றன. (இந்த காலியிடம் முன் தெரிவில் நிரப்பப்பட இயலாத ஆதிதிராவிடர்/பழங்குடி வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட காலியிடமாகும்).

சம்பளம்: மாதம் ஒன்றுக்கு ரூ. 1,640-60-2,600-75-2,900

வயது: வயது வரம்பு இல்லை.

139144

தகுதி: வேதியியலில் முதுநிலைப் பட்டம்

குறிப்பு: தெரிவுக்குரிய குறைந்தபட்ச மதிப்பெண்களையேனும் பெறும், பதவிக்கான கல்வித் தகுதியைப் பெற்ற ஆதரவற்ற விதவைகளுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

விளக்கம்: "ஆதரவற்ற விதவை" என்பது, வாழ்வதற்குத் தனக்கென்று எந்தவொரு வழியும் இல்லாதவரும் பட்டினியிலிருந்து தன்னைக் காப்பாற்ற எந்தவொரு ஆதரவாளரும் இல்லாத விதவையைக் குறிப்பதாகும்.

தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர் போன்றவர்களுக்கு கல்வி தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் தேர்வாணையத்தின் "பணி வேட்பாளர்களுக் கான விதிமுறைகளில்" தரப்பட்டுள்ளன.

விண்ணப்பப் படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களிடம் எழுத்து மூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத் திலோ, பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவை குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2 அவர்களுக்கு வழங்கக்கூடிய, 28.5.1990 அன்றோ, அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட ரூ.10/-க்கான (ரூபாய் பத்து), சென்னை அண்ணாசலை தலைமை அஞ்சல் நிலையத்தில் செலுத்தத்தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவது ஒரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக்கூடிய 28.5.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பாரத ஸ்டேட் வங்கி, ஆயிரம் விளக்குக் கிளை, சென்னை-6-ல் செலுத்தத்தக்க ரூ.10/-க்கான "கேட்புக் காசோலை" (Demand Draft)-யுடனும் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ.) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கில மொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

DIPR/1347/(A)/MS/90

மானாமதுரையில் மட்பாண்டத் தொழில் வளர்ச்சி

பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் மானாமதுரையில் மட்பாண் டத் தொழிலாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கம் 1946 முதல் செயல் பட்டு வருகிறது.

மானாமதுரை மட்பாண்டங்கள் தமிழ கத்தில் பெயர் பெற்றவைகளாகும். இங்கு செய்யப்படும் மட்பாண்டங்கள் தமிழ் நாட்டில் பரவலாகப் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இம்மட் பாண்டங்கள் இங்கிருந்து கேரள மாநிலத் திற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இம்மட்பாண்டங்கள் உறுதியாகவும், நீடித்த உழைப்பிற்கும் பெயர் பெற்றவை. இதற்கு ஏற்ற மண் இங்கு கிடைக்கின்றது.

மட்பாண்டங்களில் சமைக்கப்படும் உணவு ருசியாகவும், உடல் நலத்திற்கு ஏற்றதாகவும் உள்ளது. மட்பாண்டங் களை மக்கள் இன்றும் பயன்படுத்தி வரு கின்றனர். மானாமதுரையில் மட்பாண் டங்கள் செய்வதற்கு ஏற்ற மண் பெருமள வில் கிடைக்கின்றது. நான்கு வகையான மண் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இம்மண்ணில் இரும்புத்தாது உள்ளது. 2.2.1946-ல் இதற்கான சங்கம் ஒன்று ஆரம்பித்து அமைக்கப்பட்டுச்செயல்பட்டு வருகிறது. இந்த மட்பாண்டத்தொழிலை ஏறத்தாழ அறுபது குடும்பங்கள் செய்து வருகின்றன.

குடும்பம் ஒன்றிற்கு ரூ.350 முதல் 400 வரை மாத வருமானம் கிடைக்கிறது. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பொரு ளாதாரத் துறையில் பிற்பட்டோர்களா கவே உள்ளார்கள்.

இந்த மட்பாண்டத்தொழிலாளர் கூட்டுறவு குடிசைத்தொழில் சங்கம் பல சீரிய நோக்கங்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இச்சங்கம், மட்பாண்டத்தொழிலாளர் களால் உற்பத்தி செய்யப்படும் மட் பாண்டங்களைத் தகுந்த விலை கொடுத்து வாங்கி, அவற்றைத் தேவைப்படும் இடத் திற்கு அனுப்புகிறது. கேரளத்திற்கும் ஏற்றுமதி செய்கின்றது. இத்தொழிலாளர் களுக்கு முன்பணமும் கடனாகக் கொடுத்து உதவுகிறது. மாதம் ரூ.10,000/-க்குச் சராசரியாக மட்பாண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. நவம்பர், டிசம்பர், ஜனவரி போன்ற மழைக்காலங்களில் உற்பத்தித்திறன் குறைந்து ரூ.6,000/- அளவிற்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. நூறு வகையான மட்பாண்டங்கள் செய்யப் படுவதை இங்கு காணலாம். வேளாண் துறை, தோட்டக்கலைத்துறை போன்ற அரசுத் துறைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் இம்மட்பாண்டங்களைப் பெரிதும் வாங்கிப் பயன்படுத்துகின்றன. புகைப்போக்கி (CHIMNEY), புகைத்தட்டு (SMOKING OVEN) தண்ணீர்ப்பானை, பூந்தொட்டிகள் போன்றவை சிறப் பானவை. மின்குளிர்சாதனப்பெட்டியை (FRIDGE)யொத்த காய்கறி வைக்கப்பயன் படும் சட்டி இங்கு தயாரிக்கப்படுவது

மிகவும் சிறப்பான இயல்பைக் கொண்ட தாக உள்ளது. அதாவது இப்பானையில் வைக்கப்படும் காய்கறிகள் அதனுடைய பசுமைநிறம் மாறாமல், குன்றாமல் ஒரு வாரம் வரை அப்படியே இருக்கும். இதனை அனைவரும் விரும்பி வாங்கு கின்றனர்.

மான், குதிரை, சிங்கம், வாத்து போன்ற பிராணிகளின் தலை உரு வங்கள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங் களும் இங்கு செய்யப்படுகின்றன. மட் பாண்டக் கூட்டுறவுச் சங்கம், சக்கரம், உபகரணங்கள் போன்ற தொழிற்கருவி களைத் தொழிலாளர்களுக்கு வாங்கிக் கொடுக்கின்ற 1/8 குதிரை சக்தி கொண்ட சகிலாசக்கரம் (SAHILA WHEEL) எனும் தொழிற்கருவிகளை இருபது பேர்களுக்கு இச்சங்கம் வாங்கிக் கொடுத் துள்ளது. மின்சாரத்தில் இயங்கும் இச் சக்கரத்தின் உதவி கொண்டு வேகமாக உற்பத்தியைப் பெருக்கிட முடிகிறது. கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் முப்பது நபர்களுக்குத் தலா 9,500 ரூபாய் வீதம் இத்தொழிலுக்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மானியம் ரூபாய் 3,500/- ஆகும்.

மேலும் கதர் மற்றும் கிராமத்தொழில் வாரியத்தின் மூலம் ரூபாய் ஒரு லட்சம் இத்தொழில் வளர்ச்சிக்குக் கடன் வழங் கிட சங்கத்தின் வாயிலாகக் கேட்கப் பட்டுள்ளது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள திரு எம். ராமமூர்த்தி வயது 40 என்பவரை நேரில் பார்த்தபோது சுமார் 20 வருட மாக இத்தொழிலைச் செய்து வருவதாகத் தெரிவித்தார். மாதம் ஒன்றுக்குத் தாம் செய்யும் உற்பத்தியைப் பொறுத்து சுமார் ரூ.400/- முதல் 500/-வரை வருமானம் கிடைப்பதாகவும் சொன்னார். பரம்பரை, பரம்பரையாக இத்தொழிலைத் தான் செய்வதாகவும், வேறு தொழில் தெரி யாது எனவும் அவர் குறிப்பிட்டார். காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை தொடர்ந்து வேலை செய்கின் றனர்.

20 ஆண்டுகளாக இத்தொழிலில் ஈடுபட்டுள்ள இவருக்கு இரண்டுமுறை கனத்த மழையின் காரணமாக ரூபாய் 2,000/- வரை தாம் உற்பத்தி செய்த மட்பாண்டங்கள் பாதிப்பிற்கு உள்ளா யின எனக்குறிப்பிட்டார். ஆனால் தற் போது மட்பாண்டங்களைப் பாதுகாக்கப் போதிய கொட்டகை போடப்பட்டுள்ளது என்றார். மட்பாண்டத்திற்குத் தேவை யான மண், சேகரம் செய்யப்பட்டு, மாட்டு வண்டி மூலம் கொண்டுவரப்படுகின்றது. ஒரு வண்டி மண் ரூ.15/-க்கு விற்கப் படுகின்றது.

இவர்கள் உற்பத்தி செய்யும் தொகை யில் ரூபாய் ஒன்றுக்கு 6 பைசா வீதம் சங்கம் பிடித்தம் செய்து, அவற்றைச் சேமித்து அவசரத் தேவைகளின்போது இவர்களுக்குச் சங்கம் வழங்குகிறது.

மேலும் லாபத்தில் 25 சதவிகிதம் போனசாகவும் வழங்கப்படுகிறது.

த. பாலையா,
உதவிமக்கள் தொடர்பு அலுவலர்
பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்,

TNPSC

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.

தேர்வாணையத்தால் 28.1.90 அன்று தமிழ்நாடு பிற்பட்டோர் நல சார்நிலைப் பணியில் இடைநிலைப்பள்ளிகளில் ஆசிரியர் (Teachers in Secondary Schools in the Tamil Nadu Backward Classes Welfare Subordinate Service) பதவிகளுக்கு நடத்தப்பட்ட சுருக்குத்தேர்வு (Short Listing Examination) முடிவின் அடிப்படையில் தற்காலிகமாக நேர்முகத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களின் பதிவெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. நேர்முகத்தேர்வு சென்னை-2, அண்ணாசாலை, அரசினர் தோட்டத்திலுள்ள அரசுப்பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத்தேர்விற்கான நாள் மற்றும் நேரம் ஆகியவை குறித்து விவர அறிவிப்பு தனித்தனியே விண்ணப்பதாரர்களுக்கு உரிய நேரத்தில் அனுப்பப்படும். இப்பட்டியலில் இடம்பெறாத பதிவு எண்களை உடைய விண்ணப்பதாரர்கள் நேர்முகத்தேர்வுக்கு அனுமதிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறார்கள்.

3	15	16	55	56	61	64
71	116	117	126	127	129	132
148	162	168	178	180	183	185
190	191	193	197	205	214	217
223	229	235	238	239	242	319
337	346	352	355	366	378	383
390	407	435	454	455	463	

டிஐபீஆர்/1300/எம்எஸ்/90/அக்கார்ட்

பெரியார் மாவட்டத்தில்

விவசாயிகளுக்கு அரசு மானியம்

பெரியார் மாவட்டத்தில் விவசாயப் பெருங்குடி மக்களின் நலனுக்காகவும், வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும், பல்வேறு சலுகைகளையும் மானிய உதவிகளையும் மத்திய அரசும், மாநில அரசும் வழங்கியுள்ளன. வேளாண்மை வளர்ச்சியையும், உற்பத்தியையும் கருத்திற்கொண்டு தமிழ்நாடு வேளாண்மைத் துறையும், எண்ணெய் வித்துத் துறையும் தற்போது பல்வேறு மானியங்களை வழங்கி வருகின்றன.

குறைந்த விலையில் விதை விநியோகம், மானாவாரியில் தொழில் நுட்பத் திடல்கள் அமைக்க மானியம், கரும்பு விதைக் கரணை உற்பத்திக்கு மானியம், களைக்கொல்லி உபயோகத்தை ஊக்குவிக்க மானியம், நெற்பயிரைத் தாக்கும் பூச்சி நோய்களைக் கட்டுப்படுத்த 50 சத மானியம், எலி ஒழிப்பு மானியம், சோளப் பயிரைத் தாக்கும் புழுவைக் கட்டுப்படுத்த மானியம், ஆதிவாசிகள் பழங்குடியினர் மக்காச்சோளம் சாகுபடி செய்ய ஊக்குவிப்பு உதவி, ஆதிதிராவிடர் சிறப்பு நலத்திட்டம், பண்ணைக்காடுகள் வளர்ப்புக்கு மரக்கன்றுகள் இலவசம், வீட்டுக்கு ஒரு முருங்கை, பப்பாளிக் கன்றுகள் இலவசம் மற்றும் வறட்சி நிவாரணத் திட்டம் போன்ற மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

உயர் விளைச்சல் தரும் புதிய ரக விதைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த தலா 2 கிலோ எடையுள்ள நெல் மினிகிட் விதைப் பைகள் சிறு, குறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மிகக் குறைந்த விலையாக பை ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் 2,100 விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

அதே போல ரூ. ஒன்றுக்கு ராகி, சோளம், கம்பு ஆகிய சிறு தானியங்கள் 5,690 விவசாயிகளுக்கும், மிகக் குறைந்த விலையாக ரூ.5/-க்குத் தலா 4 கிலோ எடையுள்ள பயறு வகை விதைப் பைகள் 4,400 விவசாயிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

மானாவாரியில் மகசூலைப் பெருக்கப் பயன்படும் தொழில் நுட்பங்களைப் பிரபலப்படுத்த ஏக்கருக்கு ரூ.40/- வீதம் மானிய உதவிகள் வழங்கிச் செயல் விளக்கத்திடல்கள் அமைக்கப்படுகின்றன. மொத்தம் 1,150 ஏக்கரில் இத்திடல்கள் ரூ.46,000/- செலவில் அமைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு திடலும் 5 ஏக்கர் பரப்பில் இருக்கும். இதன்மூலம் 230 விவசாயிகளுக்கு மானிய உதவி கிடைக்கும்.

சிறுகமணியில் உள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையம் வழங்கும் கோ.க.671, கோ.க.85061, கோ.க.86071, கோ.க. 86062, கோ.க.6304 ஆகிய ரகங்களை உபயோகித்து , விதைக் கரணைகளை உற்பத்தி செய்து,நாற்றங்கால் அமைக்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.600/- வீதம் மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 100 ஏக்கரில் தரமான விதைக்கரணைகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்படும்.

நெற்பயிரைத் தாக்கும் இலை சுருட்டுப் புழு, புகையான் மற்றும் குலைநோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து வழங்கப்படுகிறது. இந்தப் பூச்சி நோய்களின் தாக்குதலைக் கணக்கிட்டுப் பொருளாதார சேத அளவைத் தாண்டியதாக முதல் அறிவிப்பு வெளியானவுடன் இந்தச் சலுகை விவசாயிகளுக்குக் கிடைக்கும். ஏக்கருக்கு ரூ.18/- மானியம் வீதம் சுமார் 5,000 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 90,000/- செலவில் இலை சுருட்டுப் புழுவைக் கட்டுப்படுத்தவும், சுமார் 10,000 ஏக்கருக்கான மருந்துகள், ரூ.1,80,000/- செலவில் புகையானைக் கட்டுப்படுத்தவும், ஏக்கருக்கு ரூ.30/- மானியம் வீதம் சுமார் 5,000 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 1,15,000/- செலவில் குலைநோயைக் கட்டுப்படுத்தவும் வழங்கப்படுகிறது. ஏக்கருக்கு ரூ.38/- வீதம் சுமார் 9,625 ஏக்கருக்கான மருந்துகள் ரூ. 3,69,250/-மானியத்தொகையின் உதவியுடன் பச்சைத் த்த்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வழங்கப்படுகிறது.

25 சத மானியமாக, ஏக்கருக்கு ரூ.1.40 வீதம் சுமார் 30,625 ஏக்கருக்குத் தேவைப்படும் எலி ஒழிப்புக்கான விஷ மருந்துகள் ரூ. 43,750/- மானிய உதவியுடன் அரசு வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இளம் சோளப் பயிரை ஒரு வகை குருத்துப் புழு தாக்கி சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த 50 சத மானிய விலையில் ஏக்கருக்கு ரூ. 4/- வீதம் சுமார் 1,937 ஏக்கருக்கான மருந்துகள் ரூ.7,750/- செலவில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

பவானி மற்றும் கோபி கோட்டங்களில் வாழும் ஆதிவாசிகளும், பழங்குடியினரும் தமது நிலத்தில் மக்காச் சோளத்தைச் சாகுபடி செய்து நல்ல வருமானம் பெற ஊக்குவிக்க இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஏக்கருக்கு ரூ. 326/- மதிப்புள்ள விதை உரங்கள் இவர்களுக்கு ஊக்குவிப்பு மானியமாக வழங்கப்படும். 15 ஏக்கர் பரப்பிற்கான மானிய உதவி இந்த ஆண்டு வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒரு இலட்சம் ரூபாய் செலவில் சுமார் 1,000 ஆதிதிராவிட விவசாயிகளுக்கு 50 சத விகித மானிய விலையில் - வேளாண் கருவிகள்வழங்கப்படுகின்றனஅதே போல 50 சதவிகித மானிய விலையில் 8,700 விவசாயிகளுக்கு ரூ.2,90,000/- மதிப்புள்ள நெல் மற்றும் சிறுதானிய விதைகளும், 4,400 விவசாயிகளுக்கு ரூ.80,000 மதிப்புள்ள பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளும் வழங்கப்படுகின்றன.

தற்போது ரூ.1,66,900/- செலவில் 2,72,143 மரக் கன்றுகளும், 5,900 பழக்கன்றுகளும், சிறு , குறு விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடக் குடியிருப்புப் பகுதியில் வீட்டு விவசாயத்தை ஊக்குவிக்க, ரூ.3,234/- செலவில், 5,700 குடும்பங்களுக்கு மொத்தம் 11,400 கன்றுகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன.

1988-89-ல் தாராபுரம், பெருந்துறை, காங்கயம் பகுதிகளில் கடும் வறட்சியினால் பாதிக்கப்பட்ட சிறு குறு விவசாயிகளுக்கு, ஒவ்வொரு விவ்சாயிக்கும் தலா ரூ.200/- வீதம், ரூ.15,43,800/- மதிப்புள்ள உரம் இலவசமாக வழங்கப்பட்டது.

இவ்வாறாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க இப்பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

—எஸ். நாகராசன்
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்,

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

பரனூர் தொழுநோயாளர் இல்ல நிகழ்ச்சியில்...
(1.6.'90)

TNPSC

விளம்பர எண்: 20/90

மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிபதி

28.4.90 அன்று வெளியிடப்பட்ட தேர்வாணைய விளம்பர எண்.13/90-ல், தமிழ்நாடு நீதிப்பணியில் உள்ள 41 மாவட்ட முன்சீப் மற்றும் குற்றவியல் நீதிபதி பதவிகள் நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. தமிழ்நாடு வழக்குரைஞர் கழகத்தின் விருப்பத்திற்கிணங்க நேரடி நியமனம் மற்றும் மாறுதல் மூலம் நியமனங்களுக்கு திருத்திய விகிதம் விதிக்க அரசு பரிசீலிப்பதால் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்ட அறிவிக்கைதிரும்பப் பெற்றுக் கொள்ளப்படுகிறது.

டிஐபிஆர்/1376/எம்எஸ்/90/அக்கார்ட்

போன்: கடை : 33213
இல்லம்: 31922

தந்தி: பெரியார்

தரம் நாடுவோர்
தவறாமல் நாடுவது

தமிழக
என்ணெய்ப்பலகாரம்

92, திருப்பரங்குன்றம் சாலை,
மதுரை-1.

உரிமையாளர்: பே. தேவசகாயம்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

DIPR 1766 MS88 HTA